


# மண்ணில் தெரியுது வானம்

பாலகுமாரன்

**விசா பப்ளிகேஷன்ஸ்**
சுகான்ஸ் அபார்ட்மெண்ட்ஸ்
பழைய எண்:28, புதிய எண்:13,
சிவப்பிரகாசம் தெரு,
தி.நகர், சென்னை- 600 017.
M: 24342899, 24327696
Fax: 91 - 44 - 24341559
email: enquiry@thirumagalnilayam.com
website: www.thirumagalnilayam.com

முதற் பதிப்பு : டிசம்பர், 2011
இரண்டாம் பதிப்பு : ஆகஸ்ட், 2012

உரிமை : ஆசிரியருக்கு ©

**Tittle : MANNIL THERIYUTHU VAANAM**

**By: BALAKUMARAN**

First Edition : December, 2011
Second Edition : August, 2012
No.of Pages : 288
Paper used : 18.6 N.S.

**விலை : ரூ.155/-**

**THIRUMAGAL NILAYAM**
Sucons Appartments,
First Floor, No.13, Sivaprakasam Street,
T.Nagar, Chennai - 600 017.
Phone : 044 - 24342899, 24327696
E-mail : enquiry@thirumagalnilayam.com
website : www.thirumagalnilayam.com

Laser Typeset By : Sivaa Graphics, Chennai - 94. Ph.8939475707
E-mail : karthik.35@gmail.com
Printed at : Novena Offset Printing Co., Chennai - 5 ☎ 28446891, 28446166



**சமர்ப்பணம்**

என் உயிரினும் இனிய மயிலை யோகி ராம்சுரத்குமார் சத்சங்கத்தினருக்கு குதூகலத்துடன் சமர்ப்பணம்.

बैंक ऑफ़ बड़ौदा
**Bank of Baroda**

## எழுத்துச் சித்தர் திரு. பாலகுமாரன்

உலகம் உய்திட ஓயாமல் எழுதிடும் தேனீ!
மாந்தருள் மாப்புகழ் பெற்றுவிட்ட ஞானி!

தான் பெற்ற அறிவால் - மற்றவர் அறிவைச் செதுக்கிய பாலா-நீர்!
சரித்திரக் கதைகளாலும் எமை வியக்க வைத்த
பெருமை உடையார் நீர்!

சின்னஞ்சிறு வயதிலேயே அம்மாவின் ஆசியால் -
முன்னால் இருப்பவரை உற்று நோக்கியதால்-
மூன்று காலமும் உணர்ந்த ஞானியானார்!
என்னே! இவரது கதைகள்!
சொன்னால் ஒரு நாவும் - இந்த ஒரு நாளும் போதாது -

கதைகள்
பின்னிப் பிழிந்தெடுத்துவிடும் மனதை -
அந்நியமாய் நெருடாத வார்த்தைகள் -
அந்நியோன்யமாய் வருடும் உத்திகள் - சலனமின்றிச்
சன்னமாய்ச் சிறை செய்யும் நெஞ்சினை -
என்னமாய்த் துடிதுடிக்க வைக்கும் -
இதற்குத்தானே-இதற்குத்தானே ஆசைப்பட்டாய்! பாலகுமாரா,
பாலகுமாரா -

என்று ஓசையின்றி ஓலமிடவைக்கும்!
கன்னங்களில் இன்று தாடி!
எண்ணங்களால் இவர் இன்று யோகி!

முன்னொரு காலத்தில் ஆணும் பெண்ணும் -
பிணக்கின்றி வாழ கணக்கு ஒன்றைச் சொன்னார் -
இன்றைய நாளிலோ - இறைவனுடன் இணைந்திருக்க - அது
இனித்தும் இருக்க -



கணக்கு ஒன்றைக் காட்டுகின்றார் -
கூட்டிக் கழித்துப் பார்த்தால் - எல்லாம் ஒரே கணக்குத்தான்!
அந்த அண்ணாமலையாரின் - யோகி ராம் சூரத் குமாரின் -
வாழ்க்கைக் கணக்கு!

பேச்சுகளைவிட மௌனமே பெரிய மொழி! - அம்மொழியால்
ஆழியெனப் பெருகும் எங்கள் அன்பை
இந்த நாழியின் ஒரு நொடியை - உங்கள் கூர்விழிகள் முன்பு
உங்கள் சாதனைகளுக்காக -
மௌனமாய் உங்கள் காலடியில் சமர்ப்பிக்கின்றோம்.

மௌனம் மட்டுமே பேசட்டும்!
உங்கள் அருள் பெருகி வீசட்டும்!

எழுத்துச் சித்தர் **திரு. பாலகுமாரன்** அவர்களை இந்த 104-வது நிறுவன நாள் விழாவில் பாராட்டிப் போற்றிக் கௌரவிப்பதில் **பாங்க் ஆப் பரோடா** மிகவும் பெருமை கொள்கின்றது.

**-இந்திரா ராமனாதன்**
**பாங்க் ஆப் பரோடா,**
**சென்னை - 600 018.**

யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத் குமார்
யோகி ராம்சுரத் குமார்
ஜெயகுருராயா

## அட! மண்ணில் தெரியுது வானம்
## முன்னுரை:

தினகரனில் தொடராக இந்த கட்டுரைத் தொகுப்பு வெளிவந்தது. நான் எதிர்பார்த்ததை விட மிக அதிகமாக இதைப் பற்றி எனக்கு விசாரிப்புகள் வந்தன. நான் படித்தேன் மிக நன்றாக இருக்கிறது. என்று பல்வேறு திசையிலிருந்து வாசகர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்கள். தினகரனுடைய வீச்சு மிகப் பெரிதாக இருக்கிறது என்பதை இது உறுதி செய்தது.

வாரப்பத்திரிகைகளை விட இந்தச் செய்தி பத்திரிகை நடத்துகின்ற ஆன்மீக வார இதழ் மிக பலமாக வாசகர் மனதில் இடம் பெற்றிருக்கிறது.

இந்தக் கட்டுரை தொகுப்பில் எனக்கு நெருக்கமாய் இருக்கின்ற சில இளைஞர்களுக்கு நான் என்ன சொல்வேனோ அதையே முக்கியமான விஷயமாக தொகுத்து அளித்திருக்கிறேன். திருமணம் செய்து கொண்டு அதில் உணர்ச்சி தடுமாற்றங்கள் கொண்டு தவிப்பவர்கள் என்னிடம் வந்து பேசுவதுண்டு. அவர்களுக்கு சில அடிப்படையான விஷயங்களை நான் நிதானமாகச் சொல்லித் தருவேன். அவர்கள் புரிந்து கொண்டு முகமலர்ச்சியோடு தங்கள் வாழ்க்கையை செப்பனிட்டுக் கொள்வார்கள். பிரிந்துவிடலாம் என்று இருக்கிறோம் என்று என்னிடம் வந்து பேசிய தம்பதிகள் அரை மணி நேரம் பேச்சில் மனம் மாறினார்கள். இன்னும் ஒரு வாரம் கழித்து வந்து பிரிந்துவிடலாமா என்று யோசனை செய்யுங்களேன் என்று நான் கேட்டுக் கொண்டேன். அடுத்த வாரம் வந்து பிரியவே போவதில்லை என்ற சந்தோஷமாக உறுதி சொன்னார்கள்.



இது நான் ஒன்றும் கடினமான முயற்சிகள் எடுத்து அவர்களுக்கு புத்திமதி சொல்லவில்லை. என்ன இடத்தில் விட்டுக் கொடுக்க வேண்டும். ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும், எவ்வளவு விட்டுக் கொடுக்க வேண்டும் என்று விசாரித்தேன். எது தம்பதிகளுக்கு நடுவே முக்கியம். நான், நீ, யார் பெரியவர் என்பதா? அல்லது அடுத்த தலைமுறையை பேணிக்காப்பதா? என்று கேள்வி கேட்டேன். அப்படி பேணிகாப்பாது போனால் என்ன ஆகும் என்றும் விவரித்தேன். அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

இம்மாதிரி இளைஞர்களோடும், யுவதிகளோடும் சற்று மத்திய வயது நண்பர்களோடும் நான் பேசியதின் எழுத்து உருவாக்கமே இந்த கட்டுரைத் தொகுப்பு.

ஏனெனில் இந்த விதமான குழப்பங்களில், சிக்கல்களில் நானும் இருந்திருக்கிறேன். முட்டாளாய், முரடனாய் காட்சியளித் திருக்கிறேன். என்னுடைய சற்குருநாதன் திருவண்ணாமலை மகான் யோகி ராம்சுரத்குமார் அவர்களை சந்தித்த பிறகு உள்ளே பல்வேறு கர்வக் கொம்புகள் ஒடிந்தன. நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்ற தெளிவு எனக்கு அதிகம் ஏற்பட்டது.

எழுதுவதால் உண்டான தெளிவை விட ஒரு சற்குரு இன்னும் தீர்க்கமாக நமக்கு நம்முடைய லட்சணத்தை காட்டி விடுகிறார். நான் நல்லவனா? கெட்டவனா என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. பதில் கிடைக்கவில்லை. மிக எளிதாக என் குருநாதர் எனக்கு பதில் சொன்னார். நீ எப்போதும் நல்லவன் உன்னிலிருந்து பார்க்கும்போது. ஆனால் அடுத்தவருக்கு நீ நல்லவனா, கெட்டவனா என்று பார்க்க என்ன செய்ய வேண்டும் கேள்வி கேட்டார். நான் விழித்தேன். அடுத்தவராய் நின்று பார்க்க வேண்டும். நீயாய் நின்று பார்க்காமல் உன் மனைவியாய், உன் தாயாராய், உன் சகோதரியாய், உன்னுடைய நண்பர்களாய் நின்று உன்னை நீ பார்க்க வேண்டும். உன் நண்பனாய், உன் சகோதரியாய், உன் தாயாய் நீ எப்பொழுது இருக்க முடியும்? உன் மனைவியாய் உன் மனம் மாறுவது எப்போது? நீ முக்கியம் இல்லை என்பதை தூக்கி எறிய, நான் பெரிய ஆள் இல்லை என்று

நீ தூக்கி எறிய நான் என்கிற பார்வை முக்கியமில்லை என்று புரிந்து கொள்ள, உன் பார்வை உன்னிலிருந்து வராமல் உன்னுடைய சகோதரியிடமிருந்து, உன் தாயிடமிருந்து வரும்.

உன் தாய் உன்னை எப்படி பார்ப்பாள் உன்னிடம் என்ன கேட்பாள் நீ எப்படி நடந்து கொள்கிறாய் என்று உன் தாயின் வழியாக பார். என்று சொல்ல எனக்குள் மிகப்பெரிய மனமாற்றம் ஏற்பட்டது. அந்த மனமாற்றத்தின் விளைவாக என் குடும்பம் நல்லபடியாக வளர்கிறது. செழிப்பாக இருக்கிறது.

என்னுடைய கர்வத்தை விட்டால் போதுமா, இனி வேறு என்னசெய்ய வேண்டும் அவரைக் கேட்டேன் உன் கர்வத்தை விடுவது எளிதா என்று என் குருநாதர் கேட்டார் உன் கர்வத்தை விடுவதற்கு என்னென்ன பயிற்சி வேண்டும் என்று யோசித்துப் பார் என்று சொல்லி அந்த பயிற்சிகளை எனக்கு மெல்ல மெல்ல நாள்பட நாள்பட சொல்லிக் கொடுத்தார்.

என்னுள் நெல்முளை அளவும். எது பற்றியும் எனக்கு கர்வம் இல்லை. அதற்காக எல்லாவற்றிற்கும் தலை ஆட்டிக் கொண்டிருக்கின்ற ஆளும் அல்ல. மறுக்க வேண்டிய விஷயத்தை கோபம் இல்லாமல் மிக மென்மையாக தகுந்த காரணங்கள் கூறி மறுத்துவிடுவேன். கொடுக்க வேண்டிய விஷயத்தை கொஞ்சம் கூட கர்வம் காட்டாமல் இது கொடுக்கிறேன் என்ற எண்ணம் கூட இல்லாமல் இது உனக்கு உண்டானது என்ற நினைப்போடுதான் கொடுக்கிறேன்.

வாழ்க்கையின் பல்வேறு சிக்கல்கள் என்னிடமிருந்து நகர்ந்து விட்டன. ஆக இந்த கட்டுரை தொகுப்பின் அடி நாதம் என் குருநாதர் திருவண்ணாமலை மகான் கடவுளின் குழந்தை அடியார்க்கு நல்லான் யோகி ராம்சுரத்குமார் அவர்களுடைய பேச்சுதான். அவருடைய உபதேசம்தான் இருக்கிறது.

நல்ல குரு எனக்கு சொல்லி கொடுத்ததை நண்பர்களுக்கு சொல்லி இருக்கிறேன். இப்போது உங்களுக்கு புத்தக வடிவில் இதை மாற்றி இருக்கிறேன்.

''பாலகுமாரன் ஏன் நீ தாடி வைத்துக் கொண்டிருக்கிறாய். அவர் கேட்டார் தாடி என் முகத்துக்கு அழகாக இருக்கிறது. அதனால் வைத்துக் கொண்டிருக்கிறேன். ஆமாம் பகவான் நீங்கள் எதற்கு தாடி வைத்திருக்கிறீர்கள்'' என்று அவரைக் கேட்டேன். என்னமோ தெரியவில்லை தாடி வைத்திருக்கிறேன் என்றார் பளிச் சென்று எனக்கு ஒரு உண்மை புரிந்தது. அவருடைய தோற்றத்திற்கு எந்தக் காரணமும் இல்லை. எந்தக் காரியமும் இல்லை. அவர் தலைப்பாகை கட்டி கொண்டிருப்பதற்கு, ஜிப்பா போட்டுக் கொண்டிருப்பதற்கு, கையில் விசிறி வைத்துக் கொண்டிருப்பதற்கு எதற்கும் எந்த காரணமும் இல்லை.



பலன் எதிர்பார்த்து, எதிராளியின் பாராட்டை எதிர்பார்த்து அவர் எதுவும் செய்வது இல்லை. தாடியை எடுத்து விடலாமா என்று நினைத்தேன். அதுவும் தவறு அதுவும் யார் சொன்னதற்கோ செய்வதாக முடியும். அப்போது என்ன செய்வது? தாடி இருந்து விட்டு போகட்டுமே. என் மனம் மாறியது. இது மிகப் பெரிய விஷயமா இல்லை மிகச் சூட்சுமமான விஷயம்.

இதுபோல் பல்வேறு விஷயங்கள் வெறுமே என்னிடம் இருக்கின்றன. இந்த கட்டுரை தொகுப்பு உங்கள் வாழ்க்கைக்கு உதவும் என்று திடமாக நம்புகிறேன்.

இந்த கட்டுரையை என்னுடைய ஒலி நாடாவிலிருந்து எழுதிக் கொடுத்த என்னுடைய நண்பர் கிருஷ்ணா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

நல்ல நண்பர்கள் குடும்பத்தில் ஒருவராகவும் மாறி விடுகிறார். எல்லா நேரமும் துணை இருக்கிறார்கள். நல்ல நட்பை கொண்டாடி, சகலரிடமும் பகிர்ந்து கொள்வதுதான் வாழ்க்கை இதற்கு ஒன்றும் பெரிய கடினமான முயற்சிகள் தேவையில்லை. சிறு சிறு மனமாற்றங்கள் போதும். எங்கு இருக்கிறது வானம். வெகு தொலைவிலா, எட்டாத உயரத்திலா அல்ல. அட, மண்ணில் தெரியுது வானம். கையலக ஜலத்தில் எட்டிப் பார்த்தால் அந்த ஜலத்தில் வானம் தெரிகிறது. மிக அருகே வானம் இருக்கிறது.

இது, நான் சொல்கிற விஷயமல்ல. புராண விஷயம் ராமர் சிறுகுழந்தையாக இருந்தபோது நிலா வேண்டும். அதை பிடித்துத் தா இப்பொழுதே கொண்டு வா, என்று அடம் பிடித்தார். எத்தனை சொல்லியும் எவ்வளவு சமாதானப்படுத்தியும் குழந்தையின் அழுகையை அடக்க முடியவில்லை. சட்டென்று ஒரு தாதி பெரிய தங்கத் தாம்பாளத்தில் தண்ணீர் கொண்டு வந்து வைத்து இதோ பார் நிலா என்று சொல்ல எவ்வளவு கிட்டத்தில் வந்திருக்கிறது. உன்னை பார்க்க வந்திருக்கிறது. என்று சொல்ல

அந்த நிலாவை வா, வா என்று கூப்பிட மேலே இருக்கின்ற நிலாவை விட்டு விட்டு குழந்தை ராமன் அந்த நிலவை வா வா என்று கூப்பிட்டான். குனிந்து குனிந்து அதை சந்தோஷமாக பார்த்தான். நிலவும் ராமரை பார்த்தது. நிலவு கைக்கு எட்டி விட்டது.

எல்லா விஷயங்களும் சற்று இடம் மாறினால் மிக அருகாக, மிக அழகாக தென்படும். இதைத்தான் சொல்ல முற்பட்டிருக்கிறேன். வாழ்க வளமுடன்.

என்றென்றும் அன்புடன்

**பாலகுமாரன்**



# மண்ணில் தெரியுது வானம்

## 1

உலகம் என்பது மக்கள். மக்களின் இயக்கம்தான் உலகம். ஆனால், இந்த உலகம் சந்தடி நிறைந்தது. இரைச்சல் மிகுந்தது. எந்நேரமும், எல்லா காலத்திலும் ஏதாவது கூச்சலும் குழப்பமுமாகவே இருப்பது. அழுகை சத்தமும், அலறல் சத்தமும் ஆங்கார கொந்தளிப்பும், அவசரமும், அதட்டலும் மிகுந்தது. இரவு வேளையில் மட்டும் மிருகங்கள் இரைக்காக கூச்சலிடும். ஆனால், எல்லா காலகட்டத்திலும் மனிதர்கள் கூச்சல் உலகத்தை இடையறாது அசைத்துக் கொண்டே இருக்கிறது.

இந்தக் கூச்சலுக்கு நடுவே, இந்த சந்தடிக்கு நடுவே மௌனமாக இருத்தல் என்பது முடியுமா? இந்தக் கூச்சலையெல்லாம் விலக்கி இன்றைக்கு என்னிடமிருந்து எந்தவித எகிறலும் வராது என்று மௌனமாக இருத்தல் இயலுமா?

இப்படி ஒரு கேள்வியைக் கேட்டுக் கொள்ளுங்கள். இந்தக் கேள்வியைக் கேட்கும்போதே, எதற்கு மௌனமாக இருக்க வேண்டும் என்ற கேள்வியும் வரும்.

சிறிது நேரம் மௌனமாக இருந்தாலும் போதும். சுற்றியுள்ள மனிதர்களிடமிருந்து எழும்புகின்ற கூச்சல்கள் ஆச்சரியத்தைத் தரும். அட, இந்த அலட்டல் அலட்டுகிறானே. இப்படி ஆரவாரமாய் பேசுகிறானே. எந்த யோக்கியதையுமின்றி இப்படி கொக்கரிக்கிறானே என்று அவனைப் பற்றிய ஒரு இழி நினைப்பு ஏற்படும். சற்று உள் திரும்பிப் பார்த்தால் இப்படித்தானே நானும் அலட்டியிருக்கிறேன் என்று உங்களைப் பார்க்கின்ற எண்ணம் ஏற்படும். உங்களை, உங்களுடைய செய்கைகளின் அபத்தத்தை

உற்றுப் பார்க்கும்போது, ஒரு தெளிவு ஏற்படும். அந்தத் தெளிவுதான் தீர்வுக்கு முதல் படி.

என்ன தெளிவு.

நீங்கள் யார். உங்கள் யோக்கியதை என்ன என்கிற தெளிவு.

என்ன தீர்வு.

அடுத்தபடி நீங்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும், யாரிடம் என்ன பேச வேண்டும், எதை எப்படி ஏற்க வேண்டும், எதை எப்படி விலக்க வேண்டும் என்ற தீர்வு.

இதற்கு மௌனமாக இருப்பது உதவி செய்யுமா?

நிச்சயம் செய்யும்.

அடப்போய்யா... ஏகப்பட்ட வேலை இருக்கு. மௌனமாக இருப்பதாம் என்று உங்களில் பாதிபேர் அன்பு அலுப்போடு இந்தக் கட்டுரையை விட்டு நகரலாம்.

அது உங்கள் தலையெழுத்து. நல்ல விஷயங்களை நாம் அறிந்தே கை நழுவவிடும் பரிதாபம். இது என்ன என்று சிறிது யோசித்தாலும் போதும். இதை பின்தொடர முடியும். ஆனால், மௌனமாக இருக்க முடியுமா என்ற கேள்வி வரின் இதுவே உற்சாகமானது. இந்தக் கேள்விதான் உங்களை நல்ல நிலைக்கு அழைத்துச் செல்லும்.

மௌனமாக இருப்பது எளிதா?

இல்லை. எளிதில்லை. கூவிக்கூவி பழக்கப்பட்டு கூச்சலுக்கு நடுவே வாழ்ந்து கத்தினால்தான் கம்பீரம். உரத்த குரலில் பேசினால்தான் ஆரோக்கியம். உன்னை வெட்டுவேன், குத்துவேன் என்று முழங்கினால்தான் வீரம். உடல் மண்ணுக்கு.... உயிர் அதற்கு... இதற்கு என்று சினந்து எழுந்தால்தான் சிறப்பு என்கிற மயக்க நியதிகள் மாறி மௌனமாக இருப்பதாமே அப்படியெனில் என்று யோசித்தால் முயற்சி ஆரம்பிக்கும்.

மௌனமாக இருப்பது எளிதல்ல. எப்பொழுது மௌனத்தை ஆரம்பிக்கிறோமோ அப்பொழுதுதான் இதைப் பேச வேண்டும். இதை சொல்லாமல் இருந்துவிட்டோம். இந்த ஒரு தொலைபேசி தொடர்பு மட்டும் முடித்துவிட்டு பிறகு மௌனம் என்று பல சறுக்குகள் ஏற்படும்.



மௌனமாக மூன்று நிமிடம் இருக்கும்போது நான்காவது நிமிடம் மௌனம் மறந்து போய்விடும். யாரோ வந்து எப்படிப்பா என்று நலம் விசாரித்தால் போதும். உடனே பல்தெரிய சிரித்து எழுந்து நின்று கைகுலுக்கி தொடர்ந்து பேச ஆரம்பித்து விடுவோம். அந்தப் பேச்சில் என்ன பலன் என்று வந்து கவனித்தால் ஒன்றுமில்லை. வெறும் பேச்சுதான் மிஞ்சும். மௌனமாய் இருக்கத் துவங்குகிறபோது திமிறுகின்ற மனதை அடக்குவதற்கு லகான் அவசியம்.

மௌனமாக இருக்கப்போகிறேன். என் மௌனத்தை எதுவும், எவரும் கலைக்க முடியாது என்ற உறுதி மிக முக்கியம்.

எத்தனை நேரம் மௌனமாக இருக்க வேண்டும்.

இதற்கு ஒன்றும் கணக்கில்லை. நாள் முழுவதும்கூட இருக்கலாம். ஆனால், ஆரம்பத்தில் சில மணித்துளிகள் முயற்சிக்கலாம். ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் என்று விஸ்தரித்துக்கொண்டு போகலாம்.

"ஒரு காதல் படம் பார்த்தேங்க. நம்ம கமலா தியேட்டர்ல. ரெண்டரை மணி நேரம் நான் பேசவேயில்லை. படம் முடிஞ்ச பிறகும் பேசலை. மூன்று மணி நேரம் மௌனமாக இருந்தேன்" என்று சொல்வீர்கள் என்றால் இதில் மிகப் பெரிய தவறு இருக்கிறது.

காதல் படம் பார்க்கும்போது உங்கள் மனம் பெரும் கூச்சல் போட்டிருக்கும். அழுதிருக்கும். தலையில் அடித்துக்கொண்டு விம்மியிருக்கும். எகிறி வசனங்கள் பேசியிருக்கும். வெட்டி வீழ்த்த வேண்டுமென்ற வேகம் வந்திருக்கும். இவையெல்லாம் மௌனத்தின் அறிகுறிகள் அல்ல. உரத்த குரல். ஆனால், உள்ளுக்குள்ளேயே கேட்டிருந்த குரல். ஒரு நாகரீகம் கருதி வெளிப்படாத குரல். இதுதான் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்பு உட்காருபவருக்கும்.

இருபது வயதுப் பெண்ணும், இருபத்தைந்து வயது ஆணும் குறைந்த ஆடைகளோடு பின்னிப் பிணைந்து ஆடுகிறபோது மனம் மௌனமாக இருக்குமா? வாய் மூடியிருப்பது மட்டுமே மௌனமாகுமா?

நான் சொல்கிற மௌனம் பேசாதிருப்பது மட்டுமல்ல. தன்னைச் சுற்றி இயங்கும் உலகத்தை துடிப்போடு கவனித்

திருப்பது. வெறுமே பார்த்துக் கொண்டிருப்பது. இந்த உலகத்து நல்லது கெட்டதுகளை கூர்மையாக வேடிக்கை பார்ப்பது. அப்பொழுது உலகத்தின் எல்லாவித நடவடிக்கைகளின் உள்நோக்கம் பற்றி மிகத் தெளிவாக தெரியும். ஒழிக... என்று கூச்சலிட்டு ஊர்வலம் போகிறவருக்கும், வாழ்க.... என்று எகிறி எகிறி வாழ்த்துபவருக்கும் உள்ள உண்மையான நடவடிக்கை களின் அர்த்தம் தெரியும். இந்தக் கவனிப்பில் ஒரு ருசி வந்து விட்டால், இதை எப்படிப் பார்ப்பது என்று தெரிந்துவிட்டால் திரும்பத் திரும்ப மௌனமாய் இருப்பதும், இப்படிக் கவனித்துப் பார்ப்பதும் நமக்குப் பிடித்துப்போய் பழக்கமாகிவிடும். மிக ஆவேசமான ஒரு கூட்டத்தில் ஒவ்வொரு முகமாக உற்றுப்பார்த்து வரலாம்.

இது மனிதர்கள் பற்றிய புரிதலை அதிகமாக்கும். மனிதர்களை புரிந்துகொண்டாலொழிய வாழ்க்கை வளமாக, நலமாக இருக்காது.

இப்படி மௌனமாக இருக்க முடியாத படி எது தடுக்கும்.

பழக்கமின்மைதான். கூச்சலிட்டு கூச்சலிட்டு எப்போதுமே உரத்துப்பேசி, எல்லாவற்றையுமே அதட்டலாக, அலட்டலாக பகிர்ந்துகொண்டு அதுவே இயல்பாகிவிட்டதல்லவா. அதிலிருந்து மௌனத்திற்கு வருவது கொஞ்சம் கடினம்தான். திமிறுகின்ற குதிரைக்கு லகான் போடுவது போல மனதை இழுத்துப்பிடித்து சற்று நேரம் அமைதியாக இரு என்று உத்தரவிட வேண்டும். இது எளிதில் கைவராது. தடுமாறினாலும் திரும்பத் திரும்ப மனதை மௌனத்திற்கு பழக்கப்படுத்த வேண்டும். ஒரு சரியான இடத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். வெளியிலிருந்து தொந்தரவு வராது போகும். அதைத் தடுத்துவிடவும் முடியும். உள்ளுக்குள்ளே உங்கள் மனம் போடும் கூச்சலை எப்படி நிறுத்துவது நீங்கள் மௌனமாக இருப்பதற்கு ஆரம்பித்தவுடனேயே மனம் கூச்சல் போடத் துவங்கும். 'அவனை நாலு வார்த்தை கேட்காத விட்டுட்டேன்' என்று ஏதோ ஒரு பழைய விஷயத்தை ஞாபகம் வைத்துக்கொண்டு சீறத் துவங்கும். ''இந்த தடவை கேலி பண்ணா விடக்கூடாது. பதிலுக்கு தீய்ச்சுடணும்'' என்று இன்னொரு வன்முறை வரும். ''இன்னொரு தடவை பேசிப் பார்த்து நிஜமாகவே அந்த லேடி ரெண்டாங்கெட்டானான்னு தெரிஞ்சுக்கணும்'' என்று அபத்தமான ஆவல் ஒன்று அதிகரிக்கும்.



போதும் யோசித்தது என்று மனதை தட்டிக்கொடுத்து மெல்ல திசை திருப்ப வேண்டும். அதற்கொரு முனைப்பு. ஒரு முயற்சி வேண்டும்.

இப்படி மௌனமாக எவ்வளவு நேரம் இருக்க வேண்டும்.

இதற்கு வரைமுறை ஏதும் கிடையாது. உங்களுடைய சௌகரியம்தான். மூன்று நிமிடம் இருந்தால் அது எந்தவித பலனையும் தராது. பத்து நிமிடங்கள் இருப்பது மெல்லிய தாக்கத்தை ஏற்படுத்தும். மறுபடியும் மௌனமாக இருக்க வேண்டுமென்ற ஆவலை ஒருவேளை அது கொண்டுவந்து கொடுக்கக் கூடும். அரை மணி நேரம் எவரோடும் எந்தத் தொடர்புமில்லாமல், உள்ளுக்குள்ளேயும் குதிக்காமல் ஏதேனும் ஒரு இடத்தில் தனியாக உட்கார்ந்து கொண்டு சுற்றுச்சூழலோடு மனதை லயிக்கவிடுவது என்பதை செய்தால், அதில் ஒரு தனித்த ருசி ஏற்பட்டுவிடும். மறுநாள் திட்டமிட்டு இன்னும் சௌகரியமான இடத்தில் எந்தத் தொந்தரவும் வராத விதத்தில் நீங்கள் உட்கார்ந்து கொள்வீர்கள்.

மௌனமாக இருக்கும்போது ஏற்படுகின்ற உடனடி மாற்றமென்ன?

சுவாசம். அது மிகச் சீராவதை நீங்கள் உடனடியாக உணர்வீர்கள். மார்புப்படம் விரிந்து நிறைய மூச்சு இழுத்து நிதானமாக வெளியிடுவது என்பது மிக இயல்பாக எந்த முயற்சியுமின்றி நடக்கும். திடீரென்று ஆழ்ந்து மூச்சுவிடுகிறோம் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

இதனுடைய பலன் என்ன?

உடனடியாக கண்ணில் ஒரு பிரகாசம் இருக்கும். கன்னங்களில் ஒரு பூரிப்பு எழும். உதட்டில் ஒரு மெல்லிய நிம்மதியான புன்னகை வந்து ஒட்டிக்கொள்ளும். இந்த உலகத்தில் தலை போகிற விஷயம், அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டிய செய்தி எதுவுமில்லை என்பது மெல்லப் புரிய வரும். ஆனால், உறுதியானது இந்த அமைதி எனக்குப் பிடித்திருக்கிறது என்கிற எண்ணம் எழும்.

இதற்கு அடுத்தபடி யாரிடம் தொடர்ந்து பேச வேண்டு மென்றாலும் அளவோடு பேசுவீர்கள். பல கேள்விகளுக்குப் பதிலே சொல்ல மாட்டீர்கள். சில கேள்விகள் எழுந்தாலும் கேட்க

மாட்டீர்கள். எதிரே இருப்பவரைவிட கொஞ்சம் உயரம் அதிகம் என்ற எண்ணம் நிச்சயம் ஏற்படும். அரை மணி நேர மௌனமே இந்த நம்பிக்கையைக் கொடுக்குமென்றால் வாழ்வின் பெரும் பகுதியை மௌனமாகக் கழித்தால் என்ன நம்பிக்கையெல்லாம் ஏற்படும் என்று தீவிரமாக மௌனமாக இருத்தலை கைக்கொள்ளத் தோன்றும்.

இனிய ஸ்நேகிதமே... இம்மாதிரி விஷயங்களை நான் எங்கேனும் புத்தகத்தில் படித்துவிட்டு உங்களிடம் பரிமாறிக் கொள்ளவில்லை. அந்த மதகுரு, இந்த ஞானி இப்படிச் சொல்லியிருக்கிறார் என்று புரிந்துகொண்டு, என் வாக்கியமாக எழுதவில்லை. நான் அனுபவித்ததை, நான் அறிந்துகொண்டதை, நான் தேடித் தேடி தெளிவானதை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

ஸ்நேகிதர்களை விட்டு விட்டு என்னால் மௌனமாக இருக்க முடியாது என்று நினைக்கிறீர்களா?

இதுவும் தவறில்லை. ஆனால், ஏதோவொரு காலகட்டத்தில் நீங்கள் ஸ்நேகிதர்களை உதறிவிட்டு இந்த மௌனத்திற்கு தள்ளப்படுவீர்கள். ஏதோவொரு துக்கத்தில், திகைப்பில் திசைமாறுவீர்கள். அப்போதாவது மௌனத்தை இறுக்கப் பிடித்துக் கொண்டால் நல்லது.

இந்தக் கட்டுரையைப் படிப்பதற்கும் படித்ததை செயலாக்குவதிற்கும் மிகச் சிறிய இடைவெளி இருக்கிறது. மௌனமாக இருந்து பார்த்தால் என்ன என்கிற எண்ணம் ஏற்படும்போது, அதற்கான இடத்தையும் நேரத்தையும் விரைவாக தேர்ந்தெடுத்து விடுங்கள். செயலில் இறங்கி விடுங்கள். ஒரு நாள்... இரண்டு நாள்... மூன்று நாள்... ஒரு வாரம்... பத்து நாளைக்குப் பிறகு உடம்புக்கு இப்படித் தனியே அமர்ந்திருப்பது பழக்கமாகிவிடும்.

''அதெல்லாம் நமக்கு என்னாத்துக்கு. சாப்பிட்டோமா, வேலைக்குப் போனோமா, தூங்கினோமா, சினிமா பார்த்தோமா'' என்று வாழ்வை சோம்பலோடு அணுகினால் ஞானத்தின் நிழல்கூட மேலே படியாது.

ஏதோ புதிதாக சொல்கிறார்கள். இது என்னாலும் முடியும் என்று இறங்க வேண்டும். என்ன என்று தெரிந்துகொள்ள



வேண்டும் என்ற ஆவல் மிக உத்தமம். முடியாது என்று நினைப்பது, உங்களைப் பற்றி உங்கள் மதிப்பீடே மரியாதை இல்லாது இருக்கிறது என்று அர்த்தம். நிச்சயம் முடியும். அட... மண்ணில் தெரியுது வானம். இது நம் வசப்படலாகாதோ. வானம் எங்கோ இல்லை. மிக அருகிலே இருக்கிறது. வானத்தை நான் ஜெயிக்க முடியாதா? நிச்சயம் முடியும். முயற்சித்தால் முடியாதது எதுவும் இல்லை. முயற்சி செய்யுங்கள்.

## 2

மனிதர்கள் பேசுவதில் விருப்பமுடையவர்கள். பேசுவது எளிது. ஆனால், சரியான நேரத்தில், சரியான விஷயத்தை பேசுவது என்பது வெகு சிலருக்கே கைவரும். இடம், பொருள், ஏவல் தெரிந்து யாரிடம் பேசுகிறோம், சிலர் இந்தப் பேச்சைக் கேட்பாரா என்று புரிந்துகொண்டு பேசுவதுதான் கெட்டிக்காரத்தனம்.

இரண்டு பேர் சாலையில் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த சண்டையை இடுப்பில் கைவைத்து வேடிக்கை பார்த்தவரிடம் சட்டென்று திரும்பி, ''எவ்ளோ பெரிய அநியாயம் பண்றான் பாருங்க சார்'' என்று ஆத்திரத்தோடு புகார் சொல்ல, வேடிக்கை பார்த்தவர் வாய்மூடி இருந்திருக்கலாம்.

''இல்லீங்க... நான் அப்போ பிடிச்சு கேட்டுக்கிட்டுதான் இருக்கேன். தப்பு உங்க பேர்ல இருக்கு போலிருக்கே'' என்று மெல்ல ஆரம்பிக்க, அங்கிருந்து சாட்சிக்கு அழைத்தவர் சட்டென்று நகர்ந்து ஓங்கி ஒரு அறைவிட்டார்.

''என்னமோ மனசு தாங்காத உங்கிட்ட சொன்னா. நீ உடனே நியாயம் சொல்றியே. பெரிய ஜட்ஜா நீ'' என்று சொல்ல, கன்னம் பொத்திக்கொண்டு அடிபட்டவர் கலங்கினார்.

''என்னை அடிச்சதுக்காக அவரு தப்புன்னு சொல்லிடுவேன்னு பார்க்கறியா, அவரு பண்றது அநியாயம்னு சொல்லிடுவேன்னு பார்க்கறியா?'' என்று மறுபடியும் அடிபட்டவர் தொடர, ''சொல்லிடுவியா... என்னை தப்புன்னு சொல்லிடுவியா. அநியாயம்னு சொல்றதுக்கு உனக்கு வாய் இருக்கா?'' என்று எதிர்ப்பக்கம் சண்டையிட்டோரும் வந்து அவரும் தலைமீது தட்ட,

சண்டை முக்கோணமாகியது. சாட்சி சொன்னவரை மெல்ல விலக்கிக் கொண்டு போக, சண்டை தொடர்ந்தது.

இது தேவையற்ற பேச்சு. பேச வேண்டிய இடத்தில் பேச வேண்டாத பேச்சு.

மனிதர்கள் பரஸ்பரம் அபிப்பிராயம் சொல்வதில்தான் முரண்படுகிறார்கள்.

"அடடா... எவ்வளவு அழகு" என்று ஒருவர் ஒரு பெண்ணை வியந்து சொல்ல, "சிகப்பு நிறம், வாளிப்பான உடம்பு. அதுக்காக அழகுன்னு சொல்லாதீங்க" என்று இன்னொருவர் ஆரம்பிக்க, "அப்போ யாருங்க அழகு" என்று கேட்க அவர் இன்னொரு பெண்ணின் பெயர் சொல்ல, "கொமட்டிகிட்டு வருதுய்யா. அந்தப் பொம்பளைய போய் அழகுன்னு சொல்றியே" என்று முதலாமவர் சொல்ல, மறுபடியும் தொண்டை கிழிய கூச்சல். மிகப் பெரிய அபிப்பிராயபேதம், மனஸ்தாபம் ஏற்படும்.

எல்லா விமர்சனங்களும் தன்னிலிருந்து, தன்னுடைய விருப்பத்திலிருந்து வெளியாகுபவை. நான் ஒருவரை நல்லவர் என்று நினைத்துவிட்டால் அவர் நல்லவர். நான் ஒருவரை அழகு என்று நினைத்துவிட்டால் அவர் அழகு. என்னுடைய நினைப்புதான் உன்னுடைய வெளிப்பாடாக வருகிறதே தவிர, விமர்சனமாக வருகிறதே தவிர உண்மையான நடுநிலையான அழகு பற்றிய அபிப்பிராயம் வருவதில்லை.

நான் உருளைக்கிழங்கு போண்டாவை விரும்புகின்றேன். உலகத்திலேயே மிகச் சுவையான பண்டம் அதுதான் என்று நினைக்கிறேன். இதுபற்றி நான் அபிப்பிராயம் சொன்னால் அதைப் பார்க்கக்கூட மாட்டேன் என்று சொல்லுகிறவர்கள் நிறைய பேர் இருப்பார்கள். மிகக் கெடுதலான உணவு என்ற அபிப்பிராயத்தை நீங்கள் கேட்க நேரும்.

நீங்கள் தவறா, அடுத்தவர் தவறா. இரண்டுமே சரி. இரண்டுமே தவறு. எனவே, சட்டென்று எந்த விமர்சனமும், எந்த அபிப்பிராயமும் சொல்லாமல் இருப்பதே சிறந்தது. சொல்லும்படி நேர்ந்தால் மிகக் கவனமாக வார்த்தைகள் தேர்ந்தெடுத்து சொல்லி விடலாம்

அந்தப் பெண் அழகா... என்று கேட்டால், "என் பார்வையில் அழகாகத்தான் இருக்கிறார். ஏதேனும் சில குறைகள் இருக்கலாம். ஆனாலும், பார்த்த முதல் முறை ஏனோ பிடித்துவிட்டது. அவர் அழகியாகத்தான் தெரிகிறார்" என்று சொன்னால் இதை யாரும் மறுக்க முடியாது.



"உருளைக்கிழங்கு போண்டாவா சாப்பிடுகிறீர். உடம்புக்குக் கெடுதலாயிற்றே" என்று அபிப்பிராயம் வந்தால், "தயிர்சாதம்கூட உடம்புக்கு கெடுதல் செய்து விடலாம். வெறும் குடிதண்ணீர்கூட குமட்டி விடலாம். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு. இரண்டு உருளைக்கிழங்கு போண்டா என்றும் கெடுதல் செய்து விடாது. ஏன் தெரியுமா? நான் விருப்பத்தோடு சாப்பிடுகிறேன். அதனால் தொந்தரவு இருக்காது. விருப்பத்தோடு ஏழெட்டு சாப்பிட்டால் ஒருவேளை தொந்தரவு வரலாம்" என்று பதில் சொல்ல, இதையும் யாரும் எதிர்க்க முடியாது.

பேசத் தெரிந்தவர் இப்படித்தான் பேசுவார். இப்படிப் பேசுவதற்கு உள்ளே ஒரு நிதானம் வேண்டும். படபடப்பே இல்லாத ஒரு தன்மை வேண்டும். நான் சொல்வது சரி. நீ அதைக் கேட்டுத்தான் ஆக வேண்டும் என்ற ஆவேசம் இல்லாதிருக்க வேண்டும்.

படிப்பில் மதிப்பெண்கள் மிகக் குறைவாக இருக்கின்றன. மகன் கொண்டு வந்து பள்ளிக்கூட மதிப்பெண் பட்டியலை காட்டுகிறான்.

*என்ன செய்யலாம்?*

உடனே பிரம்பு உருவி அடிக்கத் துவங்கினோமானால், அடுத்த முறையும் இதைவிட மோசமான மதிப்பெண்களை எடுப்பான். உடனடியாக மதிப்பெண் பட்டியலில் கையெழுத்து போட்டு விடுவது நல்லது. ஏனெனில், அடித்தாலோ, அடிக்காது போனாலோ மதிப்பெண் பட்டியலில் பார்த்துவிட்டேன் என்று கையெழுத்திடுவது என்பது பள்ளிக்கூடத்தின் நடைமுறை. அதை செய்துதான் ஆகவேண்டும். முதலில் அதைச் செய்துவிட்டு, "நான் மிகவும் கடினமாக உழைக்கிறேன். கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறேன். ஒவ்வொரு ரூபாய் காசுக்கும் மிகப் பெரிய அவஸ்தைகளுக்கு ஆளாகிறேன். அதிகம் செலவு செய்யாமல், கெட்ட பழக்கங்களில் ஈடுபடாமல் நீங்களெல்லாம் நன்றாக படிக்க வேண்டுமென்பதற்காக மாலை நேர டிபனையோ, தேநீரையோ புறக்கணித்துவிட்டு வீட்டிற்கு வந்து விடுகிறேன். நான்கு ரூபாய்க்கு

ஒரு தேநீர் என்பது நன்றாகத்தான் இருக்கும். ஆனால், நான்கு ரூபாய் முப்பது நாளைக்கு என்று கணக்கு போடும்போது மிகப் பெரிய தொகையாகத் தெரிகிறது. வேண்டாமென்று வந்து விடுகிறேன்.

ஆனால், நீ கொஞ்சம்கூட பொறுப்பில்லாமல் இப்படியொரு மதிப்பெண் வாங்கி வருகிறாய். அதனால், நான் மறுபடியும் தேநீர் குடிக்கவோ, சிற்றுண்டிக்கோ போய்விடப் போவதில்லை. இன்னும் தொடர்ந்து சிக்கனமாக இருப்பேன். ஏனெனில், நீ பெரிதாக என்றும் சம்பாதித்து எனக்கு உதவப்போவதில்லை. கடைசி காலத்தில் நான்தான் எனக்கு உதவிக் கொள்ள வேண்டும். இப்பொழுதே நிறைய சம்பாதித்து, இப்பொழுதே நிறைய சேமித்து வைத்தால்தான் முடியும். உன்னை நம்பப்போவதில்லை. நீ இதுவே வாங்கிக்கொண்டிரு'' என்று நிதானமாகச் சொல்ல, அந்தப் பிள்ளை அழத் துவங்கிவிடும்.

பள்ளிக்கூடத்திற்குப் போகாமல், திரைப்படத்திற்கு தோழிகளோடு சென்று வந்த பெண்ணை என்ன செய்யலாம். வாசலில் நிற்கவைத்து உரக்கக் கத்தினால் ஊர் முழுக்கத் தெரியும். வேறு ஏதோ அசிங்கமாகிவிட்டது என்று ஊர் நினைத்துக் கொள்ளும். நமது குழந்தையை நாமே வஞ்சிப்பதா... நமது குழந்தையை நாமே அவமானப்படுத்துவதா?

''இன்றைக்கு தோழிகளோடு சினிமாவிற்கு போகத் தோன்றும். நாளைக்கு தோழிகளோடு பெரிய கடைகளுள்ள மாளிகைகளுக்கு போகத் தோன்றும். கடற்கரைக்குப் போகத் தோன்றும். ஆடவும், பாடவும், நீச்சல் அடிக்கவும், இருக்கின்ற விளையாட்டுக் கூடங்களுக்குப் போகத் தோன்றும். முப்பதிலிருந்து நாற்பது கிலோமீட்டர் தள்ளியிருக்கின்ற ஓய்வு இல்லத்திற்கு உன்னை அழைத்துப் போவார்கள். 'சாயங்காலம் ஆறு மணிக்கு வந்துடலாம்' என்று பேசுவார்கள். இரவு பதினோரு மணிக்கு கொண்டு விடுவார்கள். முழுதாகவும் வரலாம். முக்காலாகவும் வரலாம். அல்லது முற்றிலும் குலைந்தும் வரலாம். அப்படி வந்தால் நஷ்டம் யாருக்கு? எனக்கா உன் அம்மாவுக்கா? அவள் என்ன பாவம் செய்தாள். அவள் செய்த தவறு என்ன'' என்று ஆரம்பித்து விளக்கினீர்கள் என்றால் அந்தக் குழந்தை வாழ்வினுடைய தன்மை பற்றி புரிந்துகொண்டு அதிரும்.



பேச்சு என்பதில் மேடைப்பேச்சு பற்றி நான் சொல்லவே யில்லை. அது திட்டமிட்ட வெளிப்பாடு. உள்ளுக்குள்ளே நெய்து நெய்து பழக்கப்பட்டு நிறைய விஷயங்களை மனதில் தேக்கிக் கொண்டு ஒரு அடுக்காக பயிற்சியின்பால் ஏற்பட்ட வெளிப்பாடு. அந்த பேச்சு மிக எளிது. சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம். அந்தப் பேச்சைப் பற்றி இங்கே நான் பேசவில்லை.

மனிதர்களிடம் இனிமையாகவும், நிதானமாகவும், தெளிவாகவும் பேசுவதைத்தான் பேச்சு என்று சொல்கிறேன். பேச்சு என்பது தொடர்பு கொள்ளல். தொடர்பு கொள்ளுதல் என்பது என்னுடைய மனோநிலையை தெள்ளத்தெளிவாக உங்களுக்கு புரியவைத்தல். உங்கள் மனோநிலையைப் புரிந்து கொள்ளுதல்.

என் நண்பர் தன்னைச் சார்ந்த அலுவலக நண்பர்களிடம், ''என்னமோபோல இருக்கு. என்னமோபோல இருக்கு'' என்று திரும்பத் திரும்ப பத்து நிமிடமாக சொல்லிக் கொண்டிருந்தார். என்ன என்று விவரிக்கவில்லை. சற்று உலுக்கி என்ன என்று வேறொரு நண்பர் கேட்டபோது, ''இடது பக்கம் நெஞ்சு வலிக்கிறது. கழுத்தில் வலிக்கிறது. உள்ளங்கையில் வலி பரவுகிறது'' என்று சொன்னதும், அது இதயநோயின் தாக்கம் என்பதை சட்டென்று புரிந்துகொண்டு அள்ளிக்கொண்டுபோய் மருத்துவமனையில் சேர்த்தார்கள். முதலுதவி செய்தார்கள்.

'என்னவோபோல இருக்கு' என்பது பேசத் தெரியாத பேச்சு. தானும் குழம்பி மற்றவர்களையும் குழம்பவைக்கும் செயல்.

ஒரு விஷயத்தை வெளிப்படுத்தும்போது எந்தவித பதற்றமும் இல்லாமல் சற்று தள்ளிவைத்து பதற்றத்தை குறைய வைத்து பேசுவது நல்லது. உணர்ச்சி வேகம் கொப்பளிக்கும்போது பேசாமல் இருத்தல் நலம். உணர்ச்சி வேகத்தை மட்டுப்படுத்திக் கொண்டு, 'போதும். வீணாகக் சுத்தாதே' என்று உள்ளுக்குள் கட்டளையிட்டு ஐந்து நிமிடம்... பத்து நிமிடம்... சில சமயம் பதினைந்து நிமிடத்திற்குப் பிறகு மெல்ல பேசத் துவங்கினால் பிரச்னையின் மையத்தை எளிதாகத் தொடலாம்.

முக்கியமான விஷயம். உணர்ச்சிவசப்பட்டு கொந்தளித்துக் கிடக்கிறபோது பேசவே கூடாது என்பதையும் ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். இதையெல்லாம் ஞாபகம் வைத்துக்கொண்டு வாழ முடியுமா?

முடியும். அட மண்ணில் தெரியுது வானம்... அது நம் வசப்படலாகாதோ...

வசப்படும்.

## 3

அட்டகாசமாய் உண்பதற்கு ஒரு வயதிருக்கிறது. நன்றாக மூக்குப் பிடிக்க உண்டுவிட்டு திணறத் திணற எழுந்து கொள்வதற்கு ஒரு வயதிருக்கிறது. பத்திலிருந்து பதினைந்து இட்லிவரை தேங்காய் சட்னியுடன் சாம்பாருடன் வெங்காயத்துடன், நேற்றைய வத்தக் குழம்புடன் புரட்டி சாப்பிட ஒரு வயதிருக்கிறது. சாப்பிட்டுவிட்டு சாப்பிட்ட களைப்பு தீர கொஞ்ச நேரம் உட்கார்ந்தோ அல்லது வானொலி கேட்டோ அமர்ந்துவிட்டு, பிறகு மெல்ல வெளியே கிளம்பி நடந்து அடுத்த தெருவில் ஸ்நேகிதனை சந்தித்து, அந்த ஸ்நேகிதனோடு நடந்து இன்னொரு தெருவிலுள்ள ஸ்நேகிதனை சந்தித்து மூன்று ஸ்நேகிதர்களோடு நாலாவது ஸ்நேகிதனை அழைத்துக்கொண்டு பள்ளிக்கூடத்து மைதானத்திற்குப் போய் பந்து வீசி, கேட்ச் பிடித்து விளையாடி, பிறகு கால்பந்து விளையாடி ஒரு மணி நேரம் அந்த விளையாட்டிற்குப் பிறகு மரக்கிளையில் தொங்கி வராண்டாவில் ஓடி மாடிப்படியில் ஏறி இறங்கி வீட்டிற்கு வரும்போது வயிற்றுக்குள் அத்தனையும் ஜீரணமாயிருக்கும்.

ஆனால், இந்தியாவில் மனிதர்களின் வாழ்க்கை விசித்திர மானது. இளம்பருவத்தில் பதினைந்து இட்லி சாப்பிடுகின்ற பாக்கியம் வெகு சிலருக்கே கிடைக்கிறது. ஒரேயொரு தூத்பேடாவை வாங்கி வந்து அதை மூன்று குழந்தைகளுக்கு மூன்றாக அரிந்து கொடுத்து, இதுதான் இனிப்பு என்று வாரத்திற்கு ஒருமுறைதான் அந்தத் தகப்பனால் கொடுக்க முடியும். அந்தப் பிள்ளைகளுக்கு அவ்வளவுதான் இனிப்பு கிடைக்கும். ஒரு நாளைக்கு ஐந்து தூத்பேடாவை ஜீரணம் செய்கின்ற வயதில் ஒரு வாரத்திற்கு காலே அரைக்கால் துண்டு தூத்பேடா கிடைக்கும்.

ஆனால், இதற்குமாறாக நாற்பது வயது வந்ததும் சின்ன சின்ன வெற்றிகளைத் தாண்டி சொந்த வீடும், மனைவியும், குழந்தைகளும்



சமூக அந்தஸ்தும் வந்தபோது கையில் கொஞ்சம் காசு இருக்கும். அரை கிலோ ஜிலேபி, அரை கிலோ வெங்காய பக்கோடா என்று வாங்க முடியும். ஆனால், ஐந்து ஜிலேபியை தின்ன முடியுமா? முடியாது. தின்னலாம். தின்ன வசதியிருக்கலாம். ஆனால், தின்னக் கூடாது. ஜிலேபி தவறு. வெங்காய பக்கோடா விஷம். வயிற்றில் சிக்கல் ஏற்பட்டால் மூன்று நாள் மந்த நிலைமை வேதனை ஏற்படுத்தும்.

உட்கார்ந்து உட்கார்ந்து வேலை செய்து உடலுழைப்பு இல்லாமல் வளர்ந்த பிறகு என்ன தின்றாலும் நெஞ்சு கரிக்கிறது. மீறி உண்டால் எங்கேயோ மந்தநிலை உண்டாகிறது. அதையும் மீறி உண்டால் வயிற்றுவலி ஏற்படுகிறது. தலைவலி வருகிறது. மூச்சுத்திணறல் உண்டாகிறது. நெஞ்சில் முள் குத்துவது போன்ற வலி ஏற்படுகிறது. வாரி அடித்துக்கொண்டு மருத்துவரிடம் ஓட, இருதய நோயோ என்று பயப்பட, 'இல்லை. உங்கள் வயிறு சரியில்லை. பானை போல் இருக்கிறதே' என்று தட்டி தனியாக சத்தம் காட்டுவார்.

இந்த வேதனை வராதிருக்க வேண்டுமெனில், ஒரு மனிதர் உண்ணக் கற்றுக்கொள்ள வேண்டும். தட்டு நிறைய மோர் சாதமோ, தொட்டுக்கொள்ள தேங்காய் தொகையலோ, ரச வண்டியோ அமிர்தம். இளம்வயதில் இந்த எளிய உணவு மிகப் பெரிய உற்சாகம். சுத்தமாக ஜீரணமாக வேண்டும். ஆடிக் களைத்ததும் பின்புறம் தேடிப் போக வேண்டும்.

வசதியில்லாதபோதுதான் மோர் சாதம். வசதி வந்துவிட்டது. செட்தோசை, மசால் அயிட்டங்கள் என்று போகும்போது, இவைகளை உண்டுவிட்டு தனியே உட்கார்ந்தபடி வேலை செய்கிறபோது செரிமானம் ஆவதில்லை.

உணவு என்பது ஜீரணமாக வேண்டும். ஜீரணமாகாத எந்த உணவும் மோர் சாதமாக இருந்தாலும் அது விஷம். காலையில் போட்டது மாலையிலும், மாலையில் போட்டது இரவிலும் வெளி வந்தே ஆகவேண்டும். வயிறு இலைபோல ஆகும்படியாக விஸர்ஜனம் இருக்க வேண்டும். இப்படி வயிறு நன்றாக காலியானால் சுகமாகத் தூக்கம் வரும். தன்னுடைய வேலையென்ன, அதற்கேற்ற உணவு எது என்று தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

என் வேலை கட்டடம் கட்டுவது. பல மாடிகள் ஏறி இறங்கி, பல முறை மேலும் கீழும் நடந்து இரவு வரை கால்கடுக்க நிற்கின்ற தொழிலா... கொஞ்சம் மாமிச உணவோடு கூடிய நல்ல சாப்பாடு அவசியம். ஆறு இட்லி வரைக்கும்கூட போகலாம். இரு சக்கர வாகனத்தை பழுது பார்க்கிறவரா. ஒரு வாகனத்திற்கு மூன்று கிலோ மீட்டர் தூரம் ஒரு வாகனம் ஓட்டுகிறவரா, உடம்பு அதிர்ந்து போகிறவரா... உங்களுக்கும் நல்ல உணவு தேவை. தொலைக்காட்சிப் பெட்டி பழுது பார்க்கிறவருக்கு இந்த உணவு தேவைப்படாது. அலுவலகத்தில் கூட்டிக் கழித்து கணக்கு போடுகிறவருக்கு இன்னும் குறைவாகத் தேவை. வெகுதூரம் கார் ஓட்டுகிறவர் உணவில் மற்ற எல்லோரையும்விட மிகக் கவனமாக இருக்க வேண்டும். அரைவயிறு சாப்பிட்டால்தான் கண் அசராது. என்றைக்கு வேலை இல்லையோ அன்றுதான் முழுவயிறு சாப்பிட முடியும்.

உணவு என்பது உங்களுடைய உழைப்பின் நிமித்தம் ஏற்படுவது. அப்படித்தான் ஐம்பது வருடங்களுக்கு முன்பு வாழ்க்கை இருந்தது. பழைய சோறும் இஞ்சி ஊறுகாயும் பிரண்டைத் துவையலும் முருங்கை குழம்பும் கீரை மசியலும் பூண்டு ரசமும் தேங்காய் துவையலும் தயிர்சாதமும் உணவு சுவையாகவும், எளிமையாகவும் இருந்தது. நல்ல உழைப்பு இருந்ததால் அற்புதமாக ஜீரணமாகியது. முடி சீக்கிரம் நரைக்கவில்லை அதிக தள்ளாட்டமில்லை. ஆனால், இன்று உணவு சரியானபடி இல்லாமல்தான் சிக்கலாகிவிட்டது. ஏகப்பட்ட கோதுமை பண்டங்கள். எல்லா கோதுமை பண்டங்களும் எண்ணெயிலோ, நெய்யிலோ பொரித்தவை. வாயுவை உற்பத்தி செய்யும் கிழங்குகள் அதிகம். அந்த கிழங்குகளை ருசி கூட்ட காரங்களும், மசாலாக்களும் அதிகம். பொரித்த எண்ணெயின் கொழுப்பு மட்டுமல்லாது பிஸா போன்றவற்றில் பால் கொழுப்புகள் தடவப்படுகின்றன. கொழும்பு ஜீரணமாக வேண்டுமென்றால் தினமும் எட்டு கிலோ மீட்டர் ஓடவேண்டும். ஆனால், இரண்டு கிலோ மீட்டர் பயணமும் இரு சக்கர வாகனத்தில்தான் அமைகிறது. அந்தக் கொழுப்பு எப்படிக் கரையும்? எங்கேயோ உடம்பில் தங்க, சதைபோட்டு பருமனாகி, மூச்சிரைப்பு கொடுத்து... மூச்சிரைப்பு அதிகமானால் இருதயத்தில் தொந்தரவு வந்துவிடுகிறது.



என்னுடைய உணவு எது என்று நான் தேர்ந்தெடுப்பதில் மிக கவனமாக இருக்க வேண்டும். இதை அடுத்தவரிடம் கேட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்கள் உடம்புக்கு என்ன வேண்டுமென்று உங்கள் மனதிற்கு நன்கு தெரியும்.

எட்டு மாதத்திற்கு முன்பு ஒரு பிளாஸ்டிக் பையில் அடைத்த உருளைக்கிழங்கு சிப்ஸ் விருப்பத்தோடு இப்போது உண்கிறார்கள். திறந்தவுடனேயே சிக்கு நாற்றம் அடிக்கிறது. விஷமாகி விட்டது வாசனையிலேயே தெரிகிறது. ஆனால், மசாலா நெடியில் மறந்துபோய் உண்கிறார்கள். என்ன உண்ண வேண்டும் என்பது உள்ளுக்குள் தெரிந்துவிட்டால், மிதமான உணவு என்பது ஒரு அடிப்படையில் படிந்துவிட்டால் ஜீரணக்கோளாறு ஏற்பட வாய்ப்பில்லை. ஜீரணக் கோளாறுதான் உடல்நலக் கோளாறின் ஆரம்பம். என்ன உண்பது என்பது மட்டுமல்ல, எப்படி உண்பது என்பதும் ஒரு முக்கியமான விஷயம்.

கோபமே இல்லாமல் உண்ண வேண்டும். உணர்ச்சி வசப்படாமல் உண்ண வேண்டும். அதிக நேரம் எடுத்துக் கொள்ளாமல் ஐந்து நிமிடத்திற்குள் உணவு உண்பதை முடித்துவிட வேண்டும். வெளிச்சமான இடத்தில் உண்ணுகின்ற பொருள் களோடு மனம் லயித்து அதை ருசித்து உண்ண வேண்டும். உண்ணும் வரை தண்ணீர் குடிக்கக்கூடாது. உண்டதற்குப் பிறகு ஒரு குவளை நீர் குடிக்க வேண்டும். உண்டபிறகு உறங்கக் கூடாது. உட்கார்ந்திருக்க வேண்டும். இரண்டு வெற்றிலை ஜீரண சக்தியை அதிகப்படுத்தும். வயதானவராக இருந்தால் உண்ட களைப்பில் சற்று நேரம் கண்மூடி உட்கார்ந்திருக்கலாம்.

ஆனால், இன்று வாழ்க்கை தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்த்துக்கொண்டு உண்ணுதல் என்று வந்துவிட்டது. தொலைக் காட்சிப் பெட்டியின் கோபதாபங்களும் ஆத்திர அவசரங்களும் நம் மனதை பாதித்து உண்ணுதலை சிதைக்கின்றன. இல்லை யெனில், ஐந்து நட்சத்திர ஓட்டலில் எதிராளி முகம்கூடத் தெரியாது. இருக்கின்ற இருட்டில், என்ன சாப்பிடுகிறோம் அது வெந்திருக்கிறதா, வேகவில்லையா என்று தெரியாது உணவை எடுத்துக்கொண்டிருக்கிறோம். தெருமுனையில் திரும்பத் திரும்ப சுட்ட எண்ணெயில் தயாராகும் பலகாரத்தை ருசியோடு உண்கிறோம். பசியில்லாமல் உண்கிறோம்.

"ஸ்நேகிதர்கள் வாங்கிக் கொடுக்கறாங்க. சாப்பிடாம இருக்க முடியுமா?" என்று திணித்துக்கொள்கிறோம். உடலுழைப்பு என்பது அறவே இல்லை. கடற்கரையோரம் நடக்கப் போய்விட்டு அரட்டை அடிக்கிற சுகத்தில் நடைப்பழக்கம் மறந்துபோகிறது. நடந்தது போல ஒரு நினைப்பு மட்டுமே ஏற்படுகிறது. அது ஜீரண சக்திக்கு உதவாது. இப்படித் தவறான உணவுகள் முப்பத்தைந்து வயதில், நாற்பது வயதில் கிழத்தனத்தை ஏற்படுத்தி விடுகின்றன. வாரம் தவறாமல் மருத்துவருக்கு எதிரே உட்கார வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மிக முக்கியமான விஷயம் - பசிக்கிறபோது உண்பது. அடுத்தவேளை பசிக்க வேண்டுமே என்று அளவாக உண்பது. பகலில் திணறத் திணற தின்றுவிட்டால் ஆறு மணிக்கு மைசூர் போண்டாவோ, மசால் தோசையோ அதிகபட்சமாகப் போகும். வயிறு அடைத்துக்கொள்ளும்.

நல்ல உணவு என்பது ஆரோக்கியம். ஆரோக்கியம் என்பது சந்தோஷம். சந்தோஷம் என்பது பதற்றம் இல்லாத அமைதி. உணவு சரியில்லை எனில், மனசு சரியில்லையெனில், வெகு நிச்சயமாய் பதற்றம்தான் ஆக்கிரமித்துக்கொள்ளும். தானும் பாழாகி தன் சூழ்நிலையும் பாழாகுவதற்கு உணவில் கவனம் செலுத்தாதே காரணமாக முடியும்.

எனவே, உண்ணக் கற்றுக்கொள்ளுங்கள். "எதுவோ தின்னுட்டு எங்கேயோ ஓடறோம் சார். இதெல்லாம் எப்படிக் கடைப்பிடிக் கிறதுன்னே தெரியலை" என்று மனம் புழுங்கிறீர்களா? இல்லை. கொஞ்சம் யோசித்தால் மாறுதல் நிச்சயம் ஏற்படும்.

அட... மண்ணில் தெரியுது வானம். அது நம் வசப்படலாகாதோ... வசப்படும். முனைப்பு முக்கியம்.

## 4

**ம**னதின் மொழி கண்கள். ஆசையின் மொழி பேச்சு. அன்பின் மொழி சங்கீதம். கர்வத்தின் மொழி உடைகள். உங்களுடைய உடைகள் உங்களுடைய கர்வம் எத்தகையது என்று சொல்லும். நீங்கள் உடுத்துகிற விதம் உங்களுடைய அகங்காரத்தை காட்டிக் கொடுத்துவிடும். சாதாரண மனிதர் அனைவருக்கும் கர்வம்



இருக்கும். கர்வமில்லாது மனிதர்கள் இருந்துவிட முடியாது. கர்வமில்லாத மனிதர்கள் உடையே இல்லாது அல்லது உடை பற்றிய அக்கறையே இல்லாது இருப்பார்கள். அவர்களுக்கு சாதுக்கள் என்றும் சந்நியாசிகள் என்றும், சித்தர்கள் என்றும் பெயர். உடுத்துகிற அத்தனை பேருக்கும் கர்வம் இருக்கிறது என்றுதான் அர்த்தம்.

எப்படிப்பட்ட கர்வம் என்பதை உங்களுடைய உடைகள் உங்களுக்குக் காட்டிக் கொடுக்கும்.

நான் அழகன். அழகி என்று நினைத்தால் பளபளக்கிற உடைகளும், கறுப்பும் வெளுப்பும் கலந்த உடைகளும், மின்னித் தெறிக்கின்ற கண்ணாடி விஷயங்களும் உங்கள் உடைகளில் பதிந்திருக்கும். ஒருவர் வலிமை மிகுந்தவர் என்பதைக் காட்ட விரும்பினால் அவருடைய உடைகள் அதிகம் திறந்திருக்கும் பளிச்சென்ற வண்ணத்தில் மின்னும். கண்ணைப் பிடுங்குகின்ற நிறம் இருக்கும். பணக்காரர் என்று காட்ட விரும்பினால் உடைகளோடு, நகைகளும் சேர்ந்து கொள்ளும். வெள்ளை காலணிகளும், அதன் மிதக்கின்ற நடையும் நிச்சயம் இருக்கும்.

ஒரு முரட்டுத்தனம், பிடிவாதம், தந்திரம் எல்லாவற்றையும் உடைகள் காட்டும்.

உடை மொத்தத்தில் வெள்ளையாய் வந்தால் அப்பொழுது அவர் அமைதியானவர் என்று அர்த்தமா?

இல்லை...

ஒவ்வொரு முறை காரை விட்டு இறங்குகிறபோது வெள்ளைச் சலவை சட்டையோடு இறங்குகின்ற அலங்காரரை நான் அறிவேன். அந்தக் காரின் பின்பக்கம் குறைந்தபட்சம் பத்து சட்டைகள் நான்கு வேட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். எல்லாவற்றிலும் வாசனை தெளித்து வைக்கப்பட்டிருக்கும். வெள்ளையை அமைதி என்று சொல்லிவிட முடியாது. வெள்ளைமனசு உடையவரிடம் இருக்கும் உடைகள், வெறும் உடையாக இருக்குமே தவிர, அதில் எந்தவித முக்கியத்துவம் இருக்காது.

கொஞ்சம் எதிர்மறையாகப் பார்க்கலாம்.

மனம் அமைதியாக இருக்க வேண்டுமென்றால், எளிமையான உடைகளை எடுத்துப் பழகிக்கொள்ளுங்கள். இறுக்கமில்லாத உடைகளை உடுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். மிருதுவான வண்ணங்கள் உங்களை அலங்கரிக்கட்டும். கோடுகளோ, கட்டங்களோ, வர்ணங்களோ இல்லாத அமைதியான உடைகள் உங்களை கம்பீரமாகக் காட்டும். அமைதியான மனிதர்களின் உடைகளைக் கவனித்திருக்கிறீர்களா... வெறும் வேட்டியைச் கழுத்திலிருந்து தலைக்கு சுற்றி கைகளை வீசாமல் முன்பக்கமாக பின்னிக்கொண்டு நடந்தவர் வள்ளலார். கைவீசி நடந்தாலும் கர்வம் வந்துவிடுமோ என்று கைகளைக் கோத்துக்கொண்டு நடந்தேன் என்று சொன்னவர் வள்ளலார்.

புத்தருடைய உடைகளும் மிக எளிமையானவை. ஒற்றைத் துண்டு தோளைத் தழுவி இடுப்பைச் சுற்றியிருக்கும். ஆதி சங்கரர் போன்ற சந்நியாசிகள் அலட்டலை தவிர்க்க விரும்பி கேசத்தை மழித்து அதன்மீது காவி உடையைப் போர்த்தி அமர்ந்திருப்பார்கள். இடுப்பில் பஞ்சகச்சம் மேலேயொரு பழைய ஜிப்பா. குளிர்ந்தால் போர்த்திக்கொள்ள பழைய சால்வை என்று யோகியர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இந்தியாவின் வடக்குப் பக்கம் குளிர். தெற்கே அவ்வளவு குளிரல்ல. எனவே, இடுப்பில் ஒரு துண்டும், மேலே ஒரு துண்டும் போதுமானவை. உடைகளில் கர்வம் நெல்முனையளவும் எட்டிப் பார்க்காது இருக்கும்படி பார்த்துக் கொண்டு மகான்கள் வாழ்ந்து வந்தார்கள்.

அப்படியெல்லாம் இருக்கச் சொல்லி இப்போது வற்புறுத்த முடியாது. உடையிலிருந்து பொங்கி வருகின்ற அகங்காரத்தை குறைத்துக்கொள்ளலாம்.

இறுக்கமான பனியனும், குட்டி ஃப்ராக்கும் அணிந்து கோயிலுக்கு வருகின்ற இளம்பெண் பல இளைஞர்களின் கவனத்தை சிதறடிக்கிறாள். தெரிந்து செய்கிறாளோ, தெரியாது செய்கிறாளோ அந்த உடை அவளைப் பற்றி தவறான அபிப்பிராயத்தைத்தான் பல பேர் மத்தியில் ஏற்படுத்தும். இறுக்கமான ஜீன்ஸ் பேண்ட்டும், மேலே புஜங்கள் பிதுங்கித் தெரிகின்ற இறுக்கமான சட்டையும் அணிந்துகொண்டு வருகிற வாலிபன், தான் வாலிபன் என்பதை பறைசாற்றுகின்றானே தவிர, வல்லவன் என்பதை அந்த உடை சொல்லவில்லை. உன்னை நம்பலாம் என்கிற நம்பிக்கையை அந்த உடை ஏற்படுத்தவில்லை.



அறுபது வயதானால் என்ன, நான் மனதளவில் இளைஞன் என்று சொல்கிற வயசாளிகள் வாலிபப் பருவத்தில் சந்தோஷமாக வாழாதவர்களோ என்கிற அபிப்பிராயம் எனக்குண்டு. பல வர்ணச் சட்டையும், அரைக்கால் டிரவுசரும் இளமை கொடுத்து விடாது.

முதுமையான நேரத்தில் இளமையாக இருக்கவேண்டிய அவசியமில்லை. நரையை மறைக்க கறுப்பு மை தடவிக் கொள்ளலாம். உடலில் வரும் முதுமையை எதைக் கொண்டு மறைத்துக்கொள்வது. இளமையில் யாராவது முதுமை வேடம் போடுவீர்களா? அப்பொழுது முதுமையில் எதற்கு இளமை வேடம். வேடமற்று இருப்பது ஒரு விடுதலையான வாழ்க்கையல்லவா?

தமிழரின் பாரம்பரியமான தட்டு வேட்டியும், மேல்துண்டும் அற்புதமான உடைகள். நம்முடைய தட்பவெப்ப நிலைக்கு ஏற்ற உடைகள். ஒரு சட்டை கூடுதலாய் இருப்பின் அதில் பெரிய சிரமங்கள் ஏதுமில்லை. வேட்டியை மடித்துக் கொண்டால் விரைவாகப் போகலாம். தளர்விட்டுக் கொண்டால் மரியாதையாக நிற்கலாம். காற்றோட்டமுள்ள பேண்ட்டும், நீண்ட சட்டையும் மிகப் பெரிய மரியாதையை கொடுக்கும். ஆழ்ந்த வர்ணமாக இருப்பின், இன்னும் உங்கள் தோற்றம் அழகாக மாறும். உங்கள் மீது நம்பிக்கை வரும். அமைதியான உடைகளை உடுத்திக் கொண்டு கண்ணாடியில் பார்க்கும்போது மனம் திருப்திகரமாக இருக்கும். உடை உடுத்திக்கொண்டு இதற்கு மேல் கூச்சலிட முடியாது என்ற எண்ணம் வரும். கர்வம் குறைய வேண்டும் என்ற ஆசை வரும்.

அதிரடி குணத்திற்கான உடைகள் தனியாக இருக்கின்றன. கறுப்புத் தலைப்பாகையும், கறுப்புச் சட்டையும், இடுப்பில் தளர்ந்து முழங்காலில் இறுகிய கால்சராயும் புகுந்து அடித்துக் தாக்குகின்ற படைகுணம் உடையவை. சாதாரணருக்கு அந்த உடை தேவையில்லை. ஜீன்ஸ் பேண்ட்டோடு வேலைக்குப் போய், ஜீன்ஸ் பேண்ட்டோடு தூங்கி, ஜீன்ஸ் பேண்ட்டோடு வாரக் கணக்கில் வாழுகின்ற மனிதர்கள் வெகு சீக்கிரம் ஆரோக்கியம் இழப்பார்கள். படுக்கும் நேரத்தில் தளர்வான உடைகள் உங்களை நன்கு தூங்க வைக்கும். நன்கு தூங்கினால் சிறப்பாக வேலையில் ஈடுபட முடியும்.

பட்டாம்பூச்சிகளுக்கு வர்ண நிறங்கள் ஒரு தற்காப்பு, இலைகள் மீது அமரும்போது பூக்கள் என்று நினைத்து அதன் எதிரிகள் நகர்ந்து விடும். வெட்டுக் கிளிகளும், சிலவகை புழுக்களும் பச்சைச் செடியின் நிறத்தைக் கொண்டு மறைந்து வாழ உதவி செய்கின்றன. மனிதர்கள் வேறு எதனிடமிருந்தும் மறைந்து வாழ வேண்டிய அவசியமில்லை. மனிதரிடமிருந்துதான் மனிதர் மறைந்து வாழ வேண்டியிருக்கிறது.

ஆரவாரமாய் உடுத்துகிறபோது ஆரவாரமானவர் இன்னொரு ஆரவாரமானவரைத் தேடி வம்புக்கு அழைக்கிறார். மிகவும் கவர்ச்சிகரமாக உடுத்தும் பெண், மிகவும் அலட்டலாக இருக்கும் ஆணை கவர முற்படுகிறாள். அலட்டல் புத்தி ஆரவாரமான பெண்ணை உண்ண விரும்புகிறது. பிறகு வாழ்க்கை மேடு, பள்ளங்களில் விழுந்து, எழுந்து முட்புதர்களில் சிக்கி வேறெங்கோ திசை மாறுகிறது. திசைமாறிய பிறகு உடையில் அமைதி வருகிறது.

வாலிபத்தில் துள்ளலாய் உடுத்திய ஆணும், பெண்ணும் வயதான பிறகு உடுத்துதலில் கவனம் செலுத்துவதில்லையே... ஏன்?

ஈர்ப்பதற்கு எதுவுமில்லை. அவர்களை எதுவும் ஈர்ப்பதில்லை. எல்லாம் கடந்து வந்த அமைதி அவர்கள் உடையில் தெரிகிறது.

நீங்கள் இப்பொழுது எப்படி வேண்டுமானாலும் உடுத்துங்கள். எவ்வளவு உரக்க வேண்டுமானாலும் உங்கள் உடை பேசட்டும். ஒரு காலகட்டத்தில் உங்கள் உடை அமைதிக்கு மாறும் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். அந்த அமைதியை ஆரம்பத்திலேயே கைக்கொண்டுவிட்டால் வாழ்க்கை சுகமாக இருக்காதா, மனம் வளமாக இருக்காதா, புத்தி தெளிவாக இருக்காதா என்பதுதான் என் கேள்வி.

"என் ஸ்நேகிதக்காரங்கெல்லாம் சல்லுனு உடுத்தறாங்க சார்! நான் மட்டும் எப்படி முழுக்கை சட்டையும் தொளதொளா பேண்ட்டும் போட்டுக்கிட்டு போறது... கேவலமா இருக்குமில்ல. கூட்டத்தோட கூட்டமாத்தானே இருக்கணும்?" என்று பேச்சு வருமாயின், உங்கள் வாழ்க்கையை உங்களுடைய ஸ்நேகிதர் களும் அவர்களது உடைகளும்தான் தீர்மானிக்கும் என்கிற பரிதாபம் எனக்குத் தெரிகிறது.



மாறாக, உங்கள் உடையின் கம்பீரம் அவர்களை இழுத்து, அவர்களும் உங்களைப் போல் முழுக்கை சட்டைக்கும் சாதாரண பேண்ட்டுக்கும் மாறினால் உங்களுடைய குழுவின் வலிமை இன்னும் அதிகமாகாதோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. தேவை தானா என்று உங்களுக்குள் இதுபற்றி கேள்வி வரும். தேவைதான் என்பது என் பதில்.

முயற்சி செய்தால், இதுபற்றி ஆழமாக சிந்தித்தால் நிச்சயமாக ஒரு தெளிவான முடிவுக்கும், உடைக்கும் வந்துவிடலாம்.

அட... மண்ணில் தெரியுது வானம். அது நம் வசப்படலாகாதோ. உடை பற்றிய தெளிவு வசப்பட்டால் உங்களைப் பற்றிய தெளிவு நிச்சயம் வெகு நிச்சயம் உங்களுக்கு வரும்.

## 5

தூக்கம் என்பது மனதின் மயக்கம். புத்தியின் அமைதி, உடம்புக்கு உண்டான தற்காலிக விடுதலை. சுவாசம்தான் உடம்பு என்று நிரூபிக்கும் விதம்.

இப்பொழுதுதானே படுத்தோம். அதற்குள்ளாகவா விடிந்து விட்டது என்று எவரேனும் எழுந்தால் அது நல்ல தூக்கம் என்று அர்த்தம். கடும் உழைப்பும், வஞ்சனையற்ற மனமும் நல்ல தூக்கத்திற்கு உதவி செய்யும். கனவுகளற்ற உறக்கம் களைப்பை நிச்சயம் நீக்கும். தன்னுள் தான் மூழ்குதலே தூக்கத்தின் இயல்பு. நான் என்ற எண்ணமற்று இருத்தல் அங்கே எளிதாக நடை பெறுகிறது. கடவுள் அல்லது பிரபஞ்ச சக்தியோடு ஒட்டியிருத்தல் என்பது தூக்கத்தில் ஏற்படுகிறது. கடவுளின் கட்டளைகள் கனவுகளாக வருகின்றன.

நான் என்ற அகம்பாவம் ஒதுங்கி நிற்க உள்ளுக்குள்ளே பல்வேறு விஷயங்கள் உங்களுக்கு உணர்த்தப்படுகின்றன. கனவுகளாக அவை உள்ளுக்குள்ளே உலா வருகின்றன. உங்கள் மனநிலையை உங்களுக்கு எடுத்துரைக்கவும், உங்கள் வருங்காலத்தை கோடிட்டுக் காட்டவும் இந்தக் கனவுகள் உதவுகின்றன. இவைகளை உங்கள் முயற்சியில் நீங்கள் நடத்தவேயில்லை. கனவுகள் அத்தனையும் நீங்கள் இல்லாத இடத்தில்தான் ஏற்படுகின்றன. உங்களிடமிருந்து

எந்தக் கட்டளையும் பெறாது, உங்களிடமிருந்து எந்தத் திட்டமும் தீட்டப்படாது இருக்கும் நிலையில் பல்வேறு விஷயங்கள் உங்களுக்குள் மின்னலெனத் தோன்றி மறைகின்றன. இதற்கு தூக்கம் பேருதவி செய்கிறது.

காலம் என்கிற விஷயங்கள் கனவுகளில் வேறுவிதமாக கையாளப்படுகின்றன. சில கணங்களே இருக்கின்ற கனவில் பல மணி நேரங்கள் வாழ்கிறீர்கள்.

இந்தக் கனவுகளைப் புரிந்துகொள்ள தனி கவனம் வேண்டும். எழுந்தவுடனேயே என்ன கனவு என்று யோசித்தால் கனவு கைநழுவிப் போய்விடும். யோசிக்க யோசிக்க வெகுதூரம் தள்ளி நிற்கும். எழுந்து பல் தேய்த்து ஒரு பதினைந்து நிமிடத்திற்குப் பிறகு என்ன கனவு என்று யோசித்தால் கனவின் ஏதோ ஒரு முனை உங்களுக்கு சிக்கும். அதை இழுக்க மொத்தக் கனவும் நினைவுக்கு வரும். கனவுகள் இல்லாத தூக்கம் உத்தமமானது. அப்படித் தூங்குவதற்கு சுவாசம் நன்றாக இருக்க வேண்டும். சீரான சுவாசம் இருப்பின் நல்ல தூக்கம் ஏற்படும். சுவாசத்தில் சிதைவு ஏற்பட்டால் தூக்கத்தில் மனம் அதிகம் வேலை செய்ய ஆரம்பித்துவிடும்.

சுவாசம் சரியாக இருக்க உணவு வகைகள், உணவினுடைய அளவு இரண்டும் முக்கியம். அளவு குறைவான உணவும், காரமில்லாத உணவும், வாயு சேர்க்காத உணவும் மிக முக்கியம்.

என்னுடைய நண்பர் ஒருவர் தூங்குவதற்கு முன்பு வெதுவெதுப்பான நீரில் நன்றாக குளித்துவிட்டுத்தான் வருவார். உடம்பு துடைத்து சலவை வேட்டி உடுத்தி பவுடர் போன்ற வாசனைகள் போட்டுக் கொண்டு, தலைவாரி திருச்சின்னங்கள் இட்டு மிகக் குறைவாக சாப்பிட்டுவிட்டு படுக்கைக்குப் போய் விடுவார். கொஞ்ச நேரம் அமர்ந்து வடமொழி ஸ்லோகங்கள் சொல்லி பிரார்த்தனைகள் செய்வார். ஒன்பது மணிக்கு முன்பு உறங்கப் போய்விடுவார்.

"குளிர்ச்சிட்டு வாசனை பூசிக்கறது பார்த்தா வேற எதுவோ விஷயத்துக்கு போறாரோன்னு தோன்றது" என்று இன்னொருவர் கேலி பண்ண, அவர் மௌனமாக மறுத்தார்.

"எப்போ இந்த மாதிரி அலங்காரம் செய்வோம். எங்கேயாவது முக்கியமான இடத்துக்குப் போனா இப்படி மலர்ச்சியா



போறதில்லையா. தூங்கறது முக்கியமான விஷயமய்யா. அப்போ சுத்தமாத்தானே போகணும்" என்று பதில் சொன்னார்.

எனக்கு அவர் பேச்சும் செய்கையும் பிடித்திருந்தன.

நான் உணவு முடித்த பிறகு குளிக்காமல் நன்றாக சோப்புப் போட்டு முகம் கழுவிக் கொள்வேன். கை, கால்களை சுத்தம் செய்து கொள்வேன். நன்கு ஈரத்துணியால் மார்பு துடைத்துக் கொள்வேன். தூங்குவதற்கு ஒரு புத்துணர்ச்சி தேவைப்படுகிறது என்பது ஒரு முக்கியமான விஷயம். அனுபவித்தால்தான் அந்த சுகம் தெரியும்.

சாப்பிட்டவுடன் அந்தக் களைப்பில் படுக்கையில் விழுவது சோம்பலையும், கெட்ட கனவுகளையும் கொடுக்கும். எவ்வளவு தூங்கினாலும் தூக்கம் போதாது போலவே இருக்கும். ஜீரணமும் சரியாக ஆகாது. படுக்கைச் சுத்தம் மிக முக்கியம். காற்றோட்டம் அவசியம். கழுத்து வலி, முதுகுவலி இருப்பின் மெல்லிய தலைகாணி தலைக்கும், காலுக்கு சற்று உயரமான தலைகாணியும் இந்தப் பிரச்னையிலிருந்து விடுபட உதவி செய்யும்.

காலையில் சிற்றுண்டி முடிந்த பிறகு ஒரு தூக்கம், பிற்பகலில் உணவு முடித்து ஒரு தூக்கம், மாலையில் தொலைக்காட்சி பார்த்தபடி ஒரு கண்ணயர்வில் இருப்பின் இரவுத் தூக்கம் நாசமாகும். ஊர் முழுக்கத் தூங்க, பகலில் தூங்கியவர் பெருச்சாளியாக இரவில் நடமாட நேரிடும்.

பதினான்கு வருடம் ராமருக்குத் துணையாகப் போன லட்சுமணர் தூங்காது இருந்தார் என்று சொல்வார்கள்.

எப்படி?

கை நீட்டிப் படுத்தோ, அல்லது ஒருக்களித்து தலையணையை கட்டிக்கொண்டோ லட்சுமணன் தூங்கவில்லை. ஆனால், வில்லை தரையில் ஊன்றி அதன் மீது லேசாக பாரம் போட்டு கண்மூடி மனதை அலையவிடாமல் நிறுத்தியிருக்கிறார். மனம் அலையாமல் அமைதியாக இருக்கும்போது உடம்பும், புத்தியும் புத்துணர்வு பெறுகின்றன. மல்லாந்து படுத்திருப்பதைவிட மிக உற்சாகமாக லட்சுமணர் இருந்திருக்க கூடும். இது யோக நித்திரை. ஆக, தூக்கம் என்பது மனம் சலனமில்லாமல் அமைதியாக இருப்பது என்பது தெரிய வருகிறது. அதிகம் சலனப்பட்ட மனம் சோர்வுறுகிறபோது தூக்கம் வருகிறது. இப்படித் தூங்கவில்லையெனில் தொடர்ந்த

மனச்சலனம் புத்தியைப் பாழடித்து விடும். பிறகு பேச்சும் நடவடிக்கையும் முற்றிலும் தவறாக இருக்கும். பித்து என்ற நிலைக்குப் போகும்படியாகி விடும். தூக்கம் என்பது நீங்கள் பைத்தியக்காரராக மாறாமல் இருப்பதற்கு பேருதவி செய்கிறது. இன்னொரு வகையில் சொல்ல வேண்டுமென்றால் உங்கள் மனதை மிகவும் ஆரோக்கியமாக வைப்பதற்கு தூக்கம் உதவி செய்கிறது.

இரவு உணவை ஏழு மணிக்கு முடித்துக்கொண்டு ஒரு மணி நேரம் தொலைக்காட்சி முன் அமர்ந்துவிட்டு அல்லது புத்தகம் படித்துவிட்டு எட்டு மணியிலிருந்து ஒன்பது மணிவரை காலாற நடந்துவிட்டு வந்தால் தூக்கம் மிகச் சுகமாக வரும். விடியற்காலை ஐந்து மணிக்கு துள்ளி எழுந்திருக்கலாம். ஐந்து மணிக்கு எழுந்து பல் தேய்த்து மறுபடியும் நடந்தால் ஓசோன் படலத்தினுடைய கடைசி நிமிடங்களை அனுபவிக்கலாம். சுவாசம் சீராகும். நுரையீரல் சுத்தமாகும். ஒரு தினம் முழுவதும் விழிப்போடும், தெளிவோடும் அமைதியோடும் நகர்த்த முடியும்.

தூக்கம் ஏதேனும் ஒரு காரணத்தால் குறைவாக இருப்பின் மனம் கோபமுறும். தூக்கமில்லையே என்கிற ஏக்கம் உள்ளுக்குள் புகுந்து அவ்வப்போது சீறியெழும். பிரச்னைகளைப் பெரிதுபடுத்தி கூச்சலிடும்படியாகவோ அல்லது குறுக்குத்தனமாவோ யோசிக்க நேரிடும். நல்ல தூக்கம் மனதை ஒரு ஆனந்தமான நிலையில் வைத்திருக்க உதவுகிறது. எங்கேனும் தவறு நடக்கும்போது அதை நிதானமாக கண்டிக்க முடிகிறது.

இரவு இரண்டு மணிக்கு படுத்து காலையில் பத்து மணிக்கு எழுந்திருப்பதும்கூட தூக்கம்தான். ஆனால், உலகம் விழித்துக் கொண்டு உற்சாகமாக செயல்பட இங்கே உறங்கிக் கொண்டிருப்பது என்பது முரண்பாடான செய்கை. சினிமா தியேட்டர், இரவு ஷிஃப்ட், மருத்துவமனை வேலை என்று இருக்கிறவர்களை நான் இந்த இடத்தில் சேர்க்கவில்லை. அது நிர்ப்பந்தம். வாழ்க்கைச் சூழல். அம்மாதிரியானவர்களுக்கு உடம்பும் மனதும் எப்படித் தூங்க வேண்டும் என்பதை மிக எளிதாக அறிவுறுத்தும். அதைப் பின்பற்றினால் போதும்.

பகலை இரவாக்க என்னுடைய தொழிற்சாலை நண்பர் ஒருவர், கண்ணுக்கு கறுப்புத் துணியைப் போர்த்திக்கொள்வார். காதுகளுக்கு பஞ்சு வைத்துக் கொள்வார். இயங்கும் உலகத்தை விட்டு முற்றிலும் விலகிவிடுவார். சத்தம் கேட்காமல் இருப்பதற்கு பஞ்சைக் காதில் வைத்துக்கொள்வது நல்லது என்பது மட்டுமல்ல, இரவு நேரம் தூங்குகிறவர்களும் சிறிதளவு பஞ்சை காதில் வைத்துக் கொள்ளலாம். காதை ஏதோ ஒன்று தொட்டுக்கொண்டிருப்பது, அந்த மடலுக்குள் சிறிய உறுத்தல் இருப்பது மூளைக்கு நல்லது. தினமும் காதில் பஞ்சு வைத்துத் தூங்குவது, அதிலும் குறிப்பாக ஏ.ஸி. அறையில் அப்படித் தூங்குவது நெஞ்சுக் கபம் சேராமல் இருக்க உதவி செய்யும். காது குளிர் தாங்காது.



இரவு நேரம் தூங்குவதற்கு முன்பு நிறைய தண்ணீர் குடிப்பது குடலையும் சுத்தம் செய்யும். விடியலிலும் சீக்கிரம் எழுப்பி விடும். எனக்கு காம எண்ணங்கள் தலைவிரித்தாடுகின்றன என்பவருக்கு இந்த நீர் அருந்துதல் கொஞ்சம் உதவி செய்யும். மட்டுப்படுத்தும்.

தூங்குவதற்கு முன்பு டி.வி. பார்க்க வேண்டாம். படிக்க வேண்டாம் என்று ஒரு தினசரி பத்திரிகை விடாமல் சொல்லி வருகிறது. அது நல்ல வார்த்தை. அப்பொழுது தூங்கும் முன்பு என்ன செய்யலாம்?

அன்றைய தினம் என்ன செய்தோம், எங்கு அலட்டிக் கொண்டோம், எங்கு பொய் சொன்னோம், எங்கு தவறு செய்தோம், எந்த வேலையை சரியாக செய்தோம், யாருக்கு உதவி செய்தோம் என்று யோசித்து வரலாம். அப்படியே அடுத்ததாக நாளை என்ன செய்ய வேண்டும், யாருக்கு என்ன உதவி வேண்டும், எந்த வேலையை எப்போது செய்ய வேண்டும், எது முதல் வேலை, எது இரண்டாம் வேலை, எது மூன்றாம் வேலை என்று மனதுக்குள் வரிசைப்படுத்திக்கொள்ளலாம்.

தூக்கம் கண்களை இழுக்கும் வரை உட்கார்ந்து உங்களுக்கு மட்டும் கேட்கும் குரலில் பாட்டுப் பாடலாம். கடவுள் நம்பிக்கை இருப்பின் ஸ்தோத்திரங்கள் சொல்லலாம். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் மனிதநேயப் பாடல்களைப் பாடலாம். அல்லது உங்களுக்குள் நீங்களே உரையாடலாம்.

காதல் என்பது என்ன என்ற ஒரு கேள்வி எழுப்பி அதற்கொரு விடையைக் கண்டுபிடிக்கலாம். எது நல்ல உணவு என்று கேட்டுக் கொண்டு அதை வகைப்படுத்தலாம். இரவு படுக்கும் முன்பு மிகச் சிறிய அளவு ஆலிவ் ஆயிலோ, தேங்காய் எண்ணெயோ முகத்தில் தடவிக்கொண்டு படுத்தால் நல்ல தூக்கம் தூங்கி எழுந்த

முகத்திற்கு அது கூடுதல் பொலிவைக் கொடுக்கும். விடியலில் கண்ணாடியைப் பார்க்க உங்கள் முகம் உங்களுக்கே பிடித்துப் போகும். என்ன பளீர்னு இருக்கீங்க என்று பார்த்தவர்கள் கேட்பார்கள். அதற்கு தூக்கமும், தேங்காய் எண்ணெயும் காரணம்.

வாழ்க்கையில் முன்னேற எல்லா முயற்சிகளையும் செய்து விட்டு அதன் முடிவை கடவுளிடம் ஒப்படைத்து விடுங்கள். அதற்குப் பெயர்தான் தூக்கம்.

தூங்குவதற்கு இத்தனை விதிமுறைகளா என்று நினைக்கா தீர்கள். என்னால் உட்கார முடியாது என்று மறுக்காதீர்கள். உங்களால் முடியும். அட, மண்ணில் தெரியுது வானம். இது வசப்படலாகாதோ, நிச்சயம் வசப்படும். முயற்சி திருவினை யாக்கும்.

## 6

நேரம் தவறாமை என்பது எவரை நோக்கி நீங்கள் போகிறீர்களோ அவர்களுக்கு நீங்கள் கொடுக்கின்ற மரியாதை. அவர்கள் மீது நீங்கள் வைத்திருக்கின்ற 'மதிப்பு'. 'அவன் கிடக்கான் குப்பை. பத்து நிமிஷம் லேட்டா போனா என்ன ஒண்ணும் குறைஞ்சு போயிட மாட்டான்' என்ற எண்ணம் உங்களுக்கு வருமேயானால் கிட்டத்தட்ட அதே விதமான எண்ணம் அந்த மனிதருக்கும் உங்கள் மீது இருக்கும்.

''அவன் கிடக்கான் குப்பை. எப்போவும் லேட்டாதான் வருவான். அவனுக்காக காத்துக்கிட்டிருக்க முடியாது. டீ தண்ணிய கொடுத்து ஓரமா உட்கார வை. ஒரு மணி நேரம் கழிச்சுப் பார்க்கறேன்'' என்று உங்களுடைய யோக்கியதைக்கேற்ப உங்களுக்கு மரியாதை கிடைக்கும்.

நேரம் தவறுதல் ஏன் ஏற்படுகிறது.

அக்கறையின்மை.

எதன் மீது...



எந்தக் காரியத்திற்காகப் போகிறோமோ அந்தக் காரியத்தின் மீது நமக்கு முழு ஈடுபாடு இல்லை. எட்டு மணி அலுவலகத்திற்கு ஏழேமுக்காலுக்கு நுழைபவர்தான் சரியான மனிதர். ஸ்கூட்டரை அலுவலக வாசலில் நிறுத்திவிட்டு உள்ளிருந்து டிபன்பாக்ஸை எடுத்துவிட்டு, ஸ்கூட்டரை கவனமாகப் பூட்டி மெல்ல நடந்து வருகைப் பதிவேட்டில் கையெழுத்து போட்டு உங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் உட்கார்ந்து சுற்றியிருப்பவர்களுக்கு காலை வணக்கம் என்று முகமன் கூறி சிறிது நேரம் கண்மூடி, இன்றைய பொழுது இந்த அலுவலகத்தில் நல்லபடியாக நகரவேண்டுமே என்ற அக்கறையோடு சில விநாடிகள் கடவுளை தியானித்து சில நிமிடம் மனதை ஒருமுகப்படுத்தி அமைதியாக இருப்பின், வெகு நிச்சயம் அந்த நாள் பலம் பொருந்தியதாக இருக்கும். இந்த ஐந்து நிமிட நேரத்தில் மனம் பதற்றங்கள் நீங்கி அமைதியாகிவிடும். அந்த அமைதி அன்றைய நாள் முழுவதும் தொடருவதற்கு வாய்ப்புண்டு.

மாறாக, எட்டு பதினேழுக்கு அரக்கப் பறக்க நுழைந்து டிபன் பாக்ஸ் எடுக்க மறந்து உள்ளே ஓடிப்போய் யாரையோ கெஞ்சிக் கூத்தாடி கையெழுத்துப் போட்டுவிட்டு வியர்த்து வழிய, நெஞ்சு படபடக்க சுற்றியிருப்பவர்களுக்கு முகமன் சொல்ல மறந்துபோய், மூச்சு வாங்க உட்கார்ந்திருக்கும்போது நீங்கள் கேலிப் பொருளாக மாறிவிடுவீர்கள். சீக்கிரமாக வந்தவர்கள் உங்களை அதிசயமான ஒரு பிராணியாகத்தான் பார்ப்பார்கள்.

''தெருக்கோடியில இருக்கற நாய் ரொம்ப மோசம்ப்பா.''

''ஏன்?''

''எப்படித் துரத்தியிருக்கு பாரேன்'' என்று உங்களைப் பார்த்து கேலி செய்வார்கள். அது கேலிதான். ஆனால், நாய் துரத்தியது போலத்தான் அலுவலகத்திற்கு வந்திருக்கிறீர்கள் என்பது ஒரு கசப்பான உண்மை.

உங்கள் வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கழிக்கின்ற அலுவலகத்தில் நீங்கள் எந்த மரியாதையும் இல்லாமல் தாமதமாக வருவது, அதுவும் ஒரு நாய் துரத்தியது போல வந்து விழுவது உங்கள் வேலை மீது உங்களுக்கு மதிப்பும், மரியாதையும் இல்லை என்பது நிச்சயம். உங்கள் வேலையை நீங்கள் நேசிக்கவில்லை என்பது ஒரு உண்மை.

ஆறு மணிக்கு திறக்க வேண்டிய மளிகைக் கடையை ஏழு மணிக்குத் திறந்தால் இடையில் ஏற்பட்ட ஒரு மணி நேரத்தில் இருபது வாடிக்கையாளர்கள் வந்து போயிருப்பார்கள். ஒரு நாள் தாமதித்து மறுநாள் நீங்கள் ஆறு மணிக்குத் திறந்தாலும், "அட, அவன் எங்க கடையைத் திறந்திருக்கப் போறான். எட்டு மணிக்குத்தான் கடையையே திறக்கறான். ஆடி அசைஞ்சு..." என்று உங்கள் கடையைப்பற்றி, உங்களைப் பற்றி ஒரு தவறான செய்தி பரவும். "ஆமாம்... ஆமாம்" என்று சிலரால் ஆமோதிக்கப்படும். பலராலும் அப்படியே நம்பப்படும். இதைவிட வியாபாரத்திற்கு இடைஞ்சலான விஷயம் எதுவுமில்லை.

குறித்த நேரத்திற்கு ஒரு இடத்திற்கு போகாமல் போவதற்கு எது இடைஞ்சலாக இருக்கும் என்று யோசித்துப் பார்த்தால் உடனடியாக எல்லோராலும் சொல்லப்படும் விஷயம் டிராஃபிக் ஜாம். போக்குவரத்து நெரிசல். அந்தக் காரணம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதால் நிஜமாகவோ, பொய்யாகவோ சொல்லப்படுகிறது. சில சமயம் மணிக்கணக்கில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவது உண்மையாயினும், தினந்தோறும் அப்படித்தான் என்று சொல்லவில்லை. இப்படித் தினந்தோறும் போக்குவரத்து நெரிசல் இருக்கும் ஒரு பகுதியாயின், அந்தப் போக்குவரத்து நெரிசல் நேரத்தையும் கணக்கிலிட்டுக் கொண்டு முன்கூட்டிக் கிளம்ப வேண்டியிருக்கும்.

துபாய் போன்ற நகரங்களில் ஏழு மணிக்குக் கிளம்பினால் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொள்வோம் என்று ஆறு மணிக்கே கிளம்பி ஒரு மணி நேரம் முன்னதாக அலுவலகத்திற்கு வந்துவிடுபவர்கள் உண்டு. ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் நேரம் தவறாமையில் குறியாய் இருக்க, ஆசியாவில் ஜப்பானியர்களும், சிங்கப்பூர்வாசிகளும் அது முக்கியமென்று கருத, இந்தியர்கள் மட்டும் அலட்சியமாக இருக்க என்ன காரணம்?

நேரம் தவறாமையை ஒரு முக்கியமான விஷயமாக கருதுவதில்லை என்று யோசித்துப் பார்த்தால் நம்முடைய மன்னிக்கிற குணம்தான் காரணம் என்று தோன்றுகிறது. வெகு எளிதில் நாம் தவறுகளை மன்னித்துவிடுகிறோம். ஆனால், ஐரோப்பியர்களோ, அமெரிக்கர்களோ ஒரு தவறை அப்படி மன்னிப்பதில்லை. உடனடியாக தண்டனை வழங்குகிறார்கள்.



'எட்டு இருபதுக்கு நீங்கள் வரவில்லை அல்லவா... நீங்கள் எப்பேர்ப்பட்ட உத்தமராயினும் உங்களோடு எனக்கு எந்தப் பேச்சுமில்லை. நீங்கள் போகலாம்' என்று கடுமையாகக் கூறி திருப்பி அனுப்புகின்ற தன்மை அமெரிக்கருக்கு உண்டு. நமக்கு இல்லை.

"பத்து நிமிஷம் லேட்டாயிடுச்சு. என்ன தலையா போயிருச்சு" என்றுதான் நாம் பேசுகிறோம். ஒரு மணி நேரம் தாமதமாக வந்தால்கூட... 'சரி, இதை எப்படிச் சரிசெய்வது' என்றுதான் யோசிக்கின்றோம். பெரிய பாவமில்லை என்று எண்ணுகின்றோம்.

அலுவலகத்தில் நுழையும்போதே பல் தெரிய சிரித்து, "ஸாரி. லேட்டாயிடுச்சு!" பொத்தாம்பொதுவாக தாமதமானதற்கும் தனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்பதுபோல ஒருவர் சொன்னதும், அதை ஏற்றுக்கொள்கிறோம். தாமதத்திற்கு பொறுத்துக்கொள்ளாத தன்மையை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு மணி நேரம் ஒரு சந்திப்பிற்கு ஒருவர் தாமதமாக வந்தார் எனில், அவரோடு எந்தவித சங்காத்தமும் இல்லை என்றுதான் புறக்கணிக்க வேண்டும். அம்மாதிரி உறுதியோடு நீங்கள் இருப்பின், நீங்கள் தாமதமாக எந்த செயலையும் செய்ய மாட்டீர்கள். நீங்கள் நேரம் தவறாமையைக் குறித்து மிகவும் அக்கறை கொள்வீர்கள். இது இரட்டை லாபம். மற்றவர் தாமதத்தை நேர்செய்வது மட்டுமல்லாது, உங்களையும் நேரம் தவறாமையில் பழக்கிக் கொள்கிறீர்கள். 'போனா போகுது... ஒரு மணி நேரம்தானே தாமதம்' என்று நீங்கள் நினைப்பீர்கள் என்றால் நீங்கள் மூன்று மணி நேரம் தாமதமாகப் போகக்கூடிய தகுதியைத்தான் வளர்த்துக் கொள்கிறீர்கள்.

தாமதமின்றிப் போதல் ஒரு தவம். மிக நல்ல பழக்கம். இது உங்களுக்குள் படிந்துவிட்டதென்றால், இன்னும் பல நல்ல வழக்கங்கள் உங்களோடு சேர்ந்து கொள்ளும். திட்டமிடல் என்ற விஷயம் உங்களுக்குள் மிக வேகமாக நுழைந்துவிடும். திட்டமிடுவதற்குண்டான தெளிவோடு இருத்தல் என்ற விஷயமும் மனதிற்குள் படிந்துவிடும்.

நமது திருமணங்களில் நேரம் தவறாமை என்று சொல்லப்பட்டு அந்த நேரம் தவறாமைக்கு முகூர்த்த நேரம் என்று பெயரிடப்பட்டது. இன்ன லக்னத்தில், இந்த நாழிகைக்குள்

திருமணம் நடந்தேயாக வேண்டும் என்று நிச்சயிக்கப்பட்டது. இல்லையெனில், பேசிப் பேசி இதோ அதோ என்று சொல்லி காலையில் நடக்க வேண்டிய கல்யாணம் இரவு நடக்கும்படியாக ஆகிவிடக்கூடாது என்பதற்கு நம்முடைய முன்னோர்கள் மிக எச்சரிக்கையாக இருந்திருக்கிறார்கள். எது நடக்கிறதோ, நடக்கவில்லையோ முகூர்த்த நேரத்தில் தாலி கட்டுவது என்பது நிச்சயமாக நடந்தேறும்.

நேரம் தவறியதற்கு இன்னொரு காரணம், மற்றவர்களுடைய நேரம் தவறியது என்று அடிக்கடி சொல்லப்படும். "நான் கரெக்டா பத்து மணிக்குப் போய் நின்னேன் சார். அந்தாள் பதினொன்றரை மணிக்கு வரான். வந்துட்டு பேப்பர் படிக்கறான். பேப்பர் படிச்சுட்டு டீ குடிக்கப் போயிடறான். பன்னெண்டே முக்காலுக்கு தான்' 'சார்! வாங்க உட்காருங்க'ன்னு சொன்னான். ரெண்டு தடவை அவங்கிட்ட ஏமாந்துட்டேன். மூணாம் தடவை வேணும்னாலும் பன்னெண்டு மணிக்குப் போனேன். இப்போதும் அதேமாதிரிதான் சாப்பிட்டு அப்புறம்தான் சார் கூப்பிடறான்."

அவருடைய நேரம் தவறிய புத்தி இவருக்கும் ஒட்டிக் கொள்கிறது. அவர் நேரம் தவறுதலுக்கு வெட்கப்படுவதே யில்லை. அவர்கள் தாமசம் கொண்டவர்களாக மாறிவிட்டார்கள்.

'என்னாங்க பண்றது. இப்படியே பழகிட்டோம். பத்து மணிக்கு வாங்க அப்படின்னாலே புத்தி பதினோரு மணிக்குன்னு கணக்கு போட்டுக்குது' என்று கூறுபவர்கள் உண்டு. இதற்கு செவிசாய்த்து விடக்கூடாது.

நீ திருடினால் நான் திருடவேண்டுமா... நீ லஞ்சம் வாங்கினால் நான் லஞ்சம் வாங்க வேண்டுமா... நீ பொய் சொன்னால் நான் பொய் சொல்ல வேண்டுமா. நீ பிறன்மனை நோக்கினால் நானும் அதைச் செய்ய வேண்டுமா என்பதுபோல அவர் தாமதம், இவரை தாமதப்பட வைக்கக்கூடாது. நீங்கள் அதை மறுக்க வேண்டும். முன்னிலும் உறுதியாக நேரம் தவறாமையைப் பிடித்துக்கொள்ள வேண்டும். காலத்தின் மதிப்பு தெரிந்தால் நேரம் தவறாமை தானாக வந்துவிடும்.

இன்று முழுவதும் செய்வதற்கு எந்த வேலையும் இல்லை என்ற புலம்பல் உடையவர்களுக்கு நேரம் தவறாமை எளிதில் புரியாது.



"சென்னைக்கு வந்தேன் ஒரு வேலையா. சும்மா உங்களைப் பார்த்துட்டுப் போகலாமேன்னு வந்தேன்."

"என்ன வேலைக்கு சென்னைக்கு?"

"அப்படியொண்ணும் முக்கியமான வேலை இல்லை. சும்மா நாலு பேரை பார்க்கலாமே அப்படிங்கற எண்ணம் வந்தது. அதான் கிளம்பி வந்துட்டேன்."

அவருக்குத் தன்னுடைய நேரம் பற்றிய மதிப்புமில்லை, மற்றவருடைய நேரம் பற்றிய மதிப்புமில்லை. இவர்கள் மிக ஆபத்தானவர்கள். செய்வதற்கு அடுத்தடுத்து வேலை இருந்தால் நேரம் தவறாமை தானாக வந்துவிடும்.

பத்திலிருந்து பதினொன்று வரை விவாதம். பதினொன்றி லிருந்து பன்னிரண்டு வரை எழுத்து பன்னிரண்டிலிருந்து ஒரு மணி வரை படிப்பு. பிறகு உணவு என்று ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை உங்களைப் புடம்போட்டுக் கொள்ளக்கூடிய வேகம் உங்களிடம் இருந்தால் நேரம் தவறாமை தானாக வரும்.

நேரம் தவறாமை என்பது மற்றவருக்குச் செய்யும் மரியாதை மட்டுமல்ல... அதுவொரு சுயமரியாதை. உங்களை நீங்களே மதித்தல். உங்களை எப்பொழுதும் உற்சாகமாகவும் தொடர்ந்து வேலை செய்பவராகவும் வைத்தல். உங்களைச் சோம்பலிலிருந்து அப்புறப்படுத்தி சுறுசுறுப்பானவராக வைத்தல். அந்த சுறுசுறுப்பு தான் கம்பீரம். அந்த கம்பீரம் தனி கவர்ச்சி. கவர்ச்சிதான் உங்களைப் பெரிய மனிதராக, முக்கிய மனிதராகக் காட்டும். நேரம் தவறுதலையே இயல்பாகக் கொண்டவர்களின் முகத்தைப் பாருங்கள், அதில் எப்போதும் தூக்கம் இருக்கும். எதையும் ஊன்றிப் பார்க்காத குழப்பம் இருக்கும். அவருக்கு புகழ் பற்றியோ, பணம் பற்றியோ எந்த வேட்கையும் இருக்காது. வெந்ததை தின்றுவிட்டு வெறுமே ஊர்சுற்றிக்கொண்டிருக்கிற பிராணிகள் அவர்கள்.

'தோன்றின் புகழொடு தோன்றுக' என்கிற வார்த்தைக்கு பக்கத்தில் நேரம் தவறாமை நிச்சயம் இருக்கிறது. நேரம் தவறாமையைக் கடைப்பிடிக்க முடியாது என்று எண்ணுகிறீர்களா? அது தவறு. நிச்சயம் முடியும். முயற்சித்தால் முடியாதது எதுவுமில்லை.

அட... மண்ணில் தெரியுது வானம். அது நம் வசப்படலாகாதோ.

# 7

உலகில் அவமானப்படாத மனிதர்களே இல்லை. ஏதேனும் ஒரு கணத்தில், ஏதேனும் ஒரு விஷயத்தில் அறிந்தோ அறியாமலோ, தவறு செய்தோ செய்யாமலோ ஒரு மனிதர் அவமானப்பட நேரிட்டிருக்கும். மிகச் சிறந்த மகான்களும், மிக வலுவான வீரர்களும் இந்த அவமானத்திலிருந்து தப்பித்ததாக தெரியவில்லை.

பகவான் ஸ்ரீரமணர் வெறும் கோவணதாரியாய் திருவண்ணாமலை மலைமீதுள்ள கந்தாஸ்ரமத்தில் நண்பர்கள் தருகின்ற உணவை ஒருவேளை மட்டும் உண்டு பல நேரங்களில் மௌனமாக தன்னில் லயித்துக் கிடந்தவர். அவர்களைத் தேடி பக்தர்கள் வருவதைப் பார்த்து திருடர்கள் சிலர் உள்ளே புகுந்து ஆசிரமத்தில் என்ன இருக்கிறது என்று கதவுகளைத் திறந்து தட்டி கொட்டி பார்த்தார்கள். எதுவும் இல்லையென்றவுடன் பகவான் ரமணரைப் பார்த்து, பக்தர்கள் கொடுக்கும் காசெல்லாம் எங்கே வைத்திருக்கிறாய் சொல் என்று அதட்டினார்கள். பளீர்... பளீர்... என்று பிரம்பால் தொடையில் அடித்தார்கள்.

''நாங்கள் சாதுக்கள். எங்களிடம் காசு இல்லை'' என்று பலமுறை சொல்லியும் ஸ்ரீரமணருக்கும் அவரோடு இருந்தவர்களுக்கும் அடி விழுந்தது. மகாஞானி பதினாறு வயதிலேயே மரணபயம் வென்றவர். எந்நேரமும் இறை நினைப்பிலேயே லயிப்பவர் என்று திருவண்ணாமலை மக்கள் கொண்டாடினாலும் அந்தத் திருடர்களுக்கு அவர் யார் என்று தெரியவில்லை. நிற்க வைத்து தொடையில் அடித்தார்கள். ஏற்றுக்கொள்ளத்தான் முடிந்தது.

தேவர்களை நடுங்க வைத்தவன், கிரகங்களை தன்னுடைய சிம்மாசனத்தின் படிகளாக போட்டுக்கொண்டவன், உலகத்திலுள்ள அத்தனை ஜீவராசிகளும் தன்னைக் கண்டு நடுங்கும்படியாகச் செய்தவன், அறிவுமிக்க மிகப்பெரிய அரக்கர் கூட்டத்திற்கு தலைவன் ராவணன். அவன் போர்புரிய வந்து சாதாரண மானுடரான ஸ்ரீ ராமரிடம் எதிர்த்து நிற்க முடியாமல் தேர் உடைந்து, கிரீடம் சிதறி தரையில் நிற்கும்படி நேரிட்டது. மகாவீரனான ராவணன் அந்த பராக்கிரமசாலி தலைகுனிந்து நின்றான். அவனை 'இன்று போய் நாளை வா' என்று ஸ்ரீராமபிரான் திருப்பி அனுப்புகிறார். அவன் நொந்து நூலாகி தவிக்கிறான். எப்படித் தவிக்கிறான். வான் நகும் மண் எல்லாம் நகும். மணி வயிரத் தோளன் நான் நகு பகைவர் எல்லாம் நகுவர் நாணான் வேல் நகு நெடுங்கண் செவ்விதழ் என்பதற்கு மெல்லியல் மிதிலை வந்த ஜானகி நகுவள்-என்றே நாணத்தால் சாம்புதலானான்.



அவமானத்தில் குன்றிப்போனான் என்பதை கம்பர் மிக அழகாக சொல்கிறார். உலகத்திலுள்ள அத்தனை ஜீவராசிகளும் தான் தோற்றதற்காக சிரிக்குமே என்பதற்காக அவன் வருத்தப்பட வில்லை. தான் சிறையெடுத்து வந்த ஜானகி வாய்விட்டு சிரிப்பாளே, உன் வீரம் என்னாயிற்று என் புருஷன் எதிரில். எப்படி காணாமல் போயிற்று என்று நகைப்பாளே என்று வேதனைப் படுகிறான்.

ஆனால், பகவான் ஸ்ரீரமணர் என்ன செய்கிறார். அடித்த திருடர்களுக்கு எதிராக அங்குள்ள அன்பர்கள் கழியை எடுக்கிறபோது கைகலப்பில் இறங்க முயற்சிக்கிறபோது, கூடாது... நாம் சாதுக்கள். அவர்கள் அடித்தாலும் நிதானமாக வாங்கிக்கொள்ள வேண்டுமே தவிர, பதிலுக்கு சண்டையிடக் கூடாது. பதிலுக்கு நாமும் கட்டையைத் தூக்கி அடிக்கக் கூடாது. உங்களுக்கு மட்டுமா அடி. எனக்கும் பூசை விழுந்தது. மௌனமாக இருப்போம் என்று அமைதியாக இருந்தார். பகவான் ஸ்ரீரமணர் அடியையும், அவமானத்தையும் சாதாரணமாகத் தாங்கினார். மகா பராக்கிரமசாலியான ராவணன் தன்னை முன்னிலைப்படுத்தி, தான் மிகப் பெரிய வீரன் என்பதை நிலைநிறுத்தி அது குலைந்து போய்விட்டதேயென்று நாணத்தால் சாம்புதலானான்.

அவமானத்தை தாங்கியவரும், அவமானத்தை தாங்காது தவித்தவனும் இங்கு காட்டப்பட்டு ஒரு பெண்ணைத் தூக்கி வந்ததால்தானே அவமானம் என்று இருந்தாலும், யாருக்கும் எங்கும் தீங்கும் செய்யா ஸ்ரீ ரமணருக்கும் அடியும், அவமானமும் ஏற்பட்டது.

பேருந்து நிலையத்தில் ஒரு மத்திம வயதுக்காரர் தினசரி பத்திரிகை படித்துக்கொண்டிருக்கிறார். முதுகில் படீரென்று ஒரு அடி விழுந்தது. ''ஏண்டா... நாயே'' என்று கர்ஜனை கேட்டது. வலியில் துடித்து திரும்பிப் பார்க்கிறார். அடித்தவன் சட்டென்று திகைத்து நிற்கிறான்.

''மன்னிச்சுக்கோங்க. நான் வேற யாரோன்னு நினைச்சு உங்களை அடிச்சிட்டேன்'' என்றான்.

அடியின் வலியிலிருந்து மீண்டு என்ன என்று விசாரிப்பதற்குள் அடித்தவன் விரைவாக இடத்தைவிட்டு நகர்ந்து விட்டான். சுற்றியிருக்கிற அத்தனை பேரும் பார்க்க முதுகில் ஒரு அறையும் ஒரு அவமானமும் நேர்ந்ததுதான் மிச்சம். அவர் தவறு என்ற ஒன்றுமே இல்லை. ஆனாலும் அவமானம் வந்து எதிரே நிற்கிறது.

இவர் என்ன செய்ய வேண்டும்?

சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு வலி குறைந்த பிறகு வாய்விட்டுச் சிரிக்க வேண்டும். எங்கே யாரை ஏமாற்றினேனோ, எந்த இடத்தில் எவருக்கு கெடுதல் விளைவித்தேனோ இங்கே எனக்கு அடி கிடைத்துவிட்டது. நல்லவேளை, எப்போதோ எங்கோ செய்த பாவம் இப்போது தீர்ந்துவிட்டது என்று வாய்விட்டுச் சிரிக்கலாம். சுற்றியுள்ளவர்களும் வாய்விட்டுச் சிரிப்பார்கள். மாறாக, இவரும் கெட்ட வார்த்தைகளை உதிர்த்து எகிறி கத்தி எங்கே அவன் என்று தேடினால் அவன் நிச்சயம் கிடைக்க மாட்டான். அவமானம் பெரிதாவதுதான் மிச்சம். இன்னும் நாலு பேருக்கு முதுகில் அறைவாங்கியது தெரிந்ததுதான் மிச்சம்.

அவமானமும் வேதனையும் எப்போது வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும் ஏற்படும் என்ற நிலையைப் புரிந்து கொண்டால் அவமானம் என்பது ஒரு முக்கியமான விஷயமாக இருக்காது.

ஒரு வீட்டில் திருட முயற்சித்தவரை இரவு மடக்கி நிறுத்தினார்கள். கண்டமேனிக்கு அடித்தார்கள். சம்பந்தமேயில்லாதவர்களெல்லாம் தாக்கினார்கள். திருடியவன் தடுமாறி நின்றான். குடிக்க நீர் கேட்டான். ஒரு பாட்டிலில் நீர் வந்ததும் வாய் கொப்பளித்தான். முகம் துடைத்துக்கொண்டான்.



''இந்த தடவை மாட்டிக்கிட்டேன். பிடிச்சிட்டீங்க. அடுத்த தடவை மாட்டாத திருடணும்'' என்று நிதானமாக பதில் சொன்னான். மறுபடியும் அடிக்க கை ஓங்கினார்கள். ''இதுக்கு மேலயா அடிக்கப்போற நீ'' என்று சொல்ல, யாருக்கும் அடிக்கத் தோன்றவில்லை.

அவன் காவலர் வாகனத்தில் சாதாரணமாக பேசியபடி போனது எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. தவறு செய்து... தவறு செய்து... மரத்துப்போன மனமும் அவமானத்திற்கு அஞ்சாது. எந்தத் தவறும் செய்யாத சாதுவான பகவான் ஸ்ரீரமணர் வேறு. தவறு செய்துவிட்டு தண்டனையைத் தாளாமல் துடிக்கின்ற ராவணன் வேறு. திருடி அடிவாங்கி, அதுபற்றி கவலைப்படாமல் பேசியபடி போகிற திருடன் வேறு. விழுந்த அடியை கெட்டிக்காரத்தனமாக சமாளித்து சுற்றுப்புற சூழ்நிலையை எளிதாக்கியவர் வேறு.

'மானாபிமானம் விட்டு தானாகி நின்றவர்க்கு' என்று ஒரு தத்துவப் பாடல் உண்டு.

அவமானம் எப்போது ஏற்படுகிறது?

தான் என்ற நினைப்பு, அகம்பாவம்தான் மிக உயர்வு, முக்கியம் என்ற எண்ணம் உடையவர்களுக்கு அது சிதறடிக்கப்படும்போது அவமானம் அடைகிறார்கள்.

பரீட்சையில் தோல்வி. பன்னிரண்டு பாடத்தில் மறுபடியும் எட்டுப் பாடங்கள் எழுத வேண்டும். ''சோறுதான் தின்றியா... இல்ல... வேறு ஏதாவதா...'' என்று தந்தையார் உரத்த குரலில் கேட்கிறார். தம்பி ஏளனமாகப் பார்க்கிறான். தங்கை தலையில் அடித்துக் கொள்கிறாள். அம்மா, ''இப்படியொரு புள்ள எனக்கு பொறக்கணுமா?'' என்று நொந்து கொள்கிறாள்.

அந்த மாணவன் என்ன செய்ய வேண்டும்?

எதனால் அவமானம் என்று யோசித்தால் அப்பாவின் கேள்வி மிக நியாயமாக இருக்கும். படிக்காமல் பரீட்சை எழுதினோம் என்பது மிகத் தெளிவாகப் புரியும். அன்று முழுவதும் வீட்டில் மௌனமாக உட்கார்ந்திருந்துவிட்டு மறுநாள் காலை மாணவன் படிக்க உட்கார்ந்துவிட வேண்டும். 'சோறுதான் தின்றயா...' என்கிற வார்த்தை காதில் ரீங்கரித்தபடியே இருக்க வேண்டும்.

தகப்பனார் உழைத்துக்கொண்டு வந்து கொடுக்கிற உணவை உண்டுவிட்டு ஊர் சுற்றிக்கொண்டிருந்தால் அது எவ்வளவு கேவலம் என்று உறைக்க வேண்டும்.

அப்பாவின் வார்த்தையை அவமானமாகக் கொள்ளாமல் வழிகாட்டியாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

நமது உழைப்பு குறைவு. முனைப்பு இல்லை. தன்னைத்தானே ஏமாற்றிக்கொண்ட நிலை. அதனால் இவர் அவமானப்பட்டார். வேறு சில அவமானங்களும் இருக்கின்றனவே.

நான், என் புத்தி, என் பணம், என்னுடைய செய்கை என்ற விஷயங்கள்தான் நமக்கு அவமானங்கள் தர வேண்டுமா? இல்லை பிள்ளை தெருச்சண்டையிட்டால், பெண் யாரோடாவது ஓடிப்போனால், மனைவி உரத்த குரலில் புறங்கூறுபவளாக இருந்தால், தாயும் தந்தையும் சண்டையிட்டுப் பிரிந்து போனால் அந்த விஷயம் நம் தலையில் அவமானமாகத்தான் இறங்கும். என்ன செய்வது?

நிச்சயம் ஜெயிக்கும் என்று அவர் சார்ந்த கட்சிக்காக அவர் உழைக்க, அந்தக் கட்சி மிக மோசமாக தோல்வியடைந்தது.

"எனக்கு அப்போவே தெரியும். இந்தக் கட்சி ஊத்திக்கும்னு" என்று அரசியலே தெரியாதவர்கள் எள்ளி நகைப்பார்கள். எங்கு தவறு பிறந்தது தெரியவில்லையே என்று சொந்த சகோதரர்கள் புலம்ப, இந்த தோல்வி அவமானத்தை எப்படி ஏற்பது?

வேறுவழியில்லை. அமைதியாக அந்த நேரம், அந்தத் தோல்வியை முழு மனதாக ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். தாய், தந்தையரை பழித்தால், மகளை துரத்திப்போய் அடித்தால், மகனை வீட்டைவிட்டு துரத்தினால், சொந்தக் கட்சி தோற்றதற்காக பொதுமக்கள் சொத்தை சூறையாடினால் அவமானம் பல்கிப் பெருகும். வேகமாக இந்த விஷயத்தை ஏற்றுக்கொண்டால் மெல்ல மெல்ல அவமானம் மறந்துபோகும். நாள் கணக்கில், மாதக் கணக்கில் வருடக்கணக்கில் காலம் நகர்ந்து கண்முன்னே ஏற்பட்ட குறைகள், ஏற்பட்டவருக்கே மறந்து போகும்.

"அடிச்சிகறது எல்லார் வீட்லயும்தான். நம்ம வீட்ல பெருசாயிப் போயிடுச்சி. பொண்ணு ஒரு வார்த்தை சொல்லியிருந்தா அந்த பையனுக்கே கட்டி வச்சிருப்பேன். வேணாம்மான்னு நல்ல வார்த்தை சொல்லி வேற பையன் பார்த்திருப்பேன். அடங்காத பொண்ணு. ஓடிடுச்சி. ஓடிப்போறது நல்லது. அப்போதான் உலகம் தெரியும். ஆயிரம் ரூபாய்க்கு டி ஷர்ட். ரெண்டாயிரம் ரூபாய்க்கு பேண்ட்டுன்னு வாங்கறான் இல்லையா. இப்போ ஓடிப்போயிட்டான். எப்படி வாங்குவான்? வந்து திரும்பிவந்து நிக்கறபோது பேசிக்கிறேன். அல்லது வராது போனாலும் சந்தோஷம்."

முழுமனதாய் அவமானத்தை ஏற்று மெல்ல விழுங்கி உலகோர் முன்னிலையில் அசரவில்லை என்று காட்டுவதுதான் அழகு. அவமானத்தை முழுமனதாய் ஸ்வீகரித்து எதிர்த்து நிற்கிறபோது தில்லு துரை... என்ற பட்டம் கிடைக்கிறது.

நோய் அவமானம்தான். அறுபது வயதில் பைபாஸ் என்று நெஞ்சு கிழித்து தொப்புள் வரையிலும் எழுபது ஸ்டாப்லர்கள் போட்டு இருக்கும் போது மற்றவர்கள் பார்வைக்கு, ஐயோ பாவம் என்றுதான் தெரியும். தோள்பிடித்து நடக்கும்போது பரிதாபத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

"சார் சிங்கம் போல நடந்து வருவாரு. எப்படி ஆயிட்டாரு பாரேன். மழையில நனைஞ்ச பூனைமாதிரி வராருய்யா" காதுபட பேசுவார்கள். என்ன செய்வது, "மறுபடியும் சிங்கம் வரும் என்று உள்ளுக்குள் உறுதிகொள்ள வேண்டும். பூஞ்சையாய் இருந்த உடம்பு இடைவிடாத உடற்பயிற்சியில் சரியான உணவால் மறுபடியும் தெம்பேற கண்கள் மிளிர, அறிவுத்தீ விழித்து அதே சிங்கம் போல் வரலாம். தாவித் தாவி படியேறிவிட்டு இன்னிக்கு கைப்பிடியை பிடிச்சுக்கிட்டு படியேற வேண்டியிருக்கு. யாராவது கைகொடுத்தாதான் நிக்கமுடியுது. நடக்கும்போது திடீரென்று தள்ளாடி சுவரில் சாய நேரிடுகிறது. என்ன செய்ய... மௌனமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும். நோய் எல்லோருக்கும் வரும் என்று தெளிவாகிவிட வேண்டும். இப்படி முதுமையோடு வாழ்வதுகூட ஆசீர்வாதம் என்று புரிந்துகொள்ள வேண்டும். இளமையிலேயே காணாமல் போகாமல் இன்னும் இருக்கிறோமே. தள்ளாடிக் கொண்டே திமிறுகின்ற உலகத்தைப் பார்க்கிறோமே என்று சிரிக்கத் தெரிய வேண்டும். அடேய் பையா, நானும் உன்னை மாதிரி ஓடியவன்தான் என்று சந்தோஷப்பட வேண்டும். துக்கப்படாமல் அடுத்தவர் உதவியைக் கேட்டுப் பெற வேண்டும்.

அவமானம் என்பது தன்னை மிகப்பெரிய ஆளாக முன்னிலை படுத்திக்கொள்ளும்போது ஏற்படுகின்ற உரசல் முதுமையும், நோயும், தோல்வியும், தலைமீது விழுந்த அவமானமும் நாம் முன்னிலைப்படுத்திக் கொள்ளாதபோது எளிதாகத் தாங்க முடியும்.

''என்ன சார். என்னால அவமானம் தாங்கவே முடியலை. துடிச்சுப் போயிடறேன்'' என்று சொல்வீர்கள் என்றால் உங்களுக்கு வாழத் தெரியவில்லை என்று அர்த்தம். உங்களுக்கு போர் செய்யத் தெரியவில்லை என்று அர்த்தம். வாழ்க்கை இடையறாத போர். போர் என்பது அவமானம், துக்கம் வலி, வேதனை. அதை மேற்கொள்ளத் தெரியவேண்டும். எதிர்த்தால் அவமானம் பெரிதாகும். ஏற்கெனவே முடியாது என்ற வார்த்தையை உதறிவிட்டு அவமானம் பழகுங்கள். எதிர்கொள்ள தயாராகுங்கள்.

அட... மண்ணில் தெரியுது வானம். அது நம் வசப்படலாகாதோ முயன்றால் எதுவும் வசப்படும்.

## 8

''கதை புஸ்தகமெல்லாம் படிக்கக் கூடாது. படிச்சா கெட்டுப் போயிடுவோம்னு எங்க வீட்ல சொல்றாங்க. நிறைய கதை படிக்கறவனோட சேராத. அவன் உன்னைக் கெடுத்துடுவான்னு சொல்றாங்க.''

பதினாறு வயதில் என்னை என் நண்பன் அச்சுறுத்தினான். மிரண்டேன். என் வாழ்க்கை வழிகாட்டியான என் தாயாரிடம் கேட்டேன். தமிழ் பண்டிதையான அவள் வாய்விட்டுச் சிரித்தாள். ''அவன் கிடக்கான். வெறுமனே தின்று தூங்கி தெருவுல உட்கார்ந்து வேடிக்கை பார்க்கறதா வாழ்க்கை. உலகம் ரொம்ப பெரிசு. உலகத்துப் பெருசை புரிஞ்சுக்கணும்னா புஸ்தகம் படிக்கறதுதான் ஒரே வழி. எத்தனை சினிமா வந்தாலும் உலகத்தை காட்டாது. புஸ்தகம் மனிதர்களை அறிமுகப்படுத்தறா மாதிரி சினிமாவோ வேற எதுவோ அறிமுகப்படுத்தாது. படிக்கறபோது மனசுல ஒட்டி காட்சிகள் நூறு சினிமாவுக்குச் சமம். பொன்னியின் செல்வன் படிக்கற. வந்தியத்தேவன் யாரு, சிவாஜியா... எம்.ஜி.ஆரா., ஜெமினி கணேசனா... யாருமில்லை. நம்ம



மனசுக்குள்ள போடற வந்தியத்தேவன் அவன் பேச்சு, அவன் குரல்... யாராலயும் காட்ட முடியாது. புஸ்தகம்தான் காட்டும். படி. நிறைய படி. படிக்கறத மட்டும் விட்டுறாத. என்ன தொழில் வேணா பண்ணு. படிக்கறது கூடவே இருக்கக்கூடும்.'' அம்மாவின் குரல் பசுமரத்தாணி போல் நெஞ்சில் பதிந்தது.

வளரும் பருவத்தில் ஆர்வக்கோளாறால் நான் சில தவறுகள் செய்தேன்.

''நான் சொல்லலை. கதை படிச்சா கெட்டுப் போயிடுவான்னு. இவன் நாசமா போயிட்டான் பார்'' என்று கொக்கரித்தார்கள்.

நான் கெட்டுப்போனதற்கு என்னுடைய அகங்காரம் காரணம். நான் தெளிவுள்ளவனாக, நல்லவனாக மாறியதற்கு புத்தகங்கள் காரணம்.

பகவான் ஸ்ரீரமணரை, விவேகானந்தரை, ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரை, ஸ்ரீ கிருஷ்ணரை, இயேசு கிறிஸ்துவை, முகமது நபி (ஸல்) அவர்களை புத்தகங்கள்தான் எனக்கு அறிமுகப் படுத்தின. நான் சொல்வது மதங்களை அல்ல... ஞானியர்களை. நான் சொல்வது குழுக்களினுடைய கொள்கைகளை அல்ல... தத்துவ விசாரங்களை.

முப்பத்தியிரண்டு வயதில் படிப்பின் சாரம் உள்ளே இறங்க, எழுத வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது. எழுத யோசிக்கிற போது அலசி ஆராயும் புத்தி வந்தது. இரண்டு பக்கமும் பார்க்கின்ற எண்ணம் ஏற்பட்டது. அதனால் என்னை நானே சீர்தூக்கிப் பார்க்கும் குணம் ஏற்பட்டது. எப்பொழுது என்னை நானே சீர்தூக்கிப் பார்த்தேனோ அப்பொழுது என்னுடைய மன ஆர்ப்பாட்டங்கள் அடங்கின. நான் தெளிவானேன். தெளிவினால் திறமை வளர்ந்தது. திறமையினால் வாழ்வின் உயரம் எல்லா வகையிலும் அதிகரித்தது.

கதை படிக்காதவர் என்ன ஆனார்?

பாவமாகத்தான் இருக்கிறது. பின்னங்கை கட்டிக்கொண்டு தெருவோரம் நடந்து போய்க் கொண்டிருக்கிறார்.

''என் பையனுக்கு ஏதாவது வேலை வாங்கிக் கொடேன். சும்மா ஊரை சுத்திக்கிட்டிருக்கான்'' என்று அவர் பேசுகிறபோது, ''நீ என்ன செய்தாய்?'' என்ற கேள்வி வந்தது.

"டூட்டி முடிச்சு வந்தவுடனே நேரா ஃப்ரெண்ட்ஸ் வீட்டுக்கு போயிடுவேன். எல்லாரும் சேர்ந்து பிள்ளையார் கோயில் வாசல்ல போய் உட்காந்துப்போம். ராத்திரி பதினொண்ணு பதினொண்ணே கால் வரைக்கும் பேசுவோம். வீட்டுக்கு வந்து சாப்பிட்டு தூக்கம். தூங்கிட்டு எழுந்து கார்த்தால டூட்டிக்குப் போனோம்னா திரும்பவும் சாயங்காலம் வந்து பிள்ளையார் கோயில்."

'தேடிச்சோறு நிதம் தின்று பல சின்னஞ்சிறு கதைகள் பேசி...' எனக்கு பாரதியின் வார்த்தைகள்தான் ஞாபகம் வந்தன.

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்களால் 'சக்ரவர்த்தி திருமகள்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட ராமாயணமும், பிறகு எழுதப்பட்ட மகாபாரதமும் எனக்கு படிப்பில் பெரும் ருசியை உண்டாக்கின. 'பொன்னியின் செல்வன்' கிறுகிறுக்க வைத்தது. இளம்பிராயத்தில் ஐந்து பாகங்கள் படிக்க முடிந்த திறமையே பிற்பாடு எப்பொழுதும் புத்தகத்தோடு இருக்கின்ற ஒரு சுவையை ஏற்படுத்தியது. புத்தகத்தால் நல்ல நண்பர்கள் அறிமுகமானார்கள். நல்ல நண்பர்களால் நிறைய புத்தகங்கள் அறிமுகமாயின. புத்தகங்களால் உலகம் இன்னும் வெளிச்சமாகியது.

'காதல் என்பது என்ன ஐயன்மீர்' என்ற ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியின் கேள்வி உலுக்கியது. காதல் என்பது விட்டுக் கொடுத்தல். பரஸ்பரம் உடனடியாக எந்த எதிர்ப்பார்ப்புமின்றி... திரும்பத் திரும்ப இந்த வாக்கியத்தை பல நூறு முறை மனதில் படித்து தேக்கிக்கொண்டேன். விரித்து எனக்குள்ளேயே விவாதித்துக் கொண்டேன்.

படிக்கின்ற நேரத்தோடு புத்தகம் முடிந்துவிடுமா?

இல்லை. படிப்புக்குப் பிறகுதான் புத்தகம் விஸ்வரூபமெடுக்கும். பொன்னியின் செல்வனில் அமரர் கல்கி காட்டிய சோழ சாம்ராஜ்ஜியம் மிகச் சிறியது. அருண்மொழி ராஜராஜனாகாமல் முடிந்துபோகின்ற கதை அது. இந்த அருண்மொழி ராஜராஜன் ஆனபிறகு என்ன செய்தான் என்ற ஆர்வம் பீறிட, பொன்னியின் செல்வன் உந்தித் தள்ள, நான் சோழ சாம்ராஜ்ஜியம் முழுவதும் சுற்றினேன். சோழர்கள் என்று எழுதப்பட்ட நீலகண்ட சாஸ்திரியினுடைய புத்தகத்தை கரைத்துக் குடித்தேன். எனக்கு நானூறு வருடத்து சோழர்கள் பரம்பரை புரிந்தது.



ஒரு காசுக்கு இரண்டு எருமை. ஒரு காசுக்கு ஒரு பசு. ஒரு காசுக்கு பத்து ஆடுகள். ஒரு காசுக்கு நூறு ஏலக்காய். ஒரு காசுக்கு ஒரு மரக்கால் உப்பு.

படிக்கும்போது சோழப் பொருளாதாரம் மிகத் தெளிவாகப் புரிந்தது. அவர்கள் வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதை அறிந்து கொண்டேன். படிப்பு எழுத வைத்தது. எழுத, அதிகப் படிக்கத் தூண்டியது. படித்தவர் அத்தனை பேரும் எழுத வேண்டும் என்ற அவசியம் இல்லை. படிப்பு ஒரு சுகம். ஒரு தோழமை. கூச்சலிடாத ஆசான். காதோடு பேசும் குரு. படிக்கின்ற நேரத்தில் ஏற்படுகின்ற அமைதி. அது கொடுக்கின்ற தனிமை உடம்பில் படிந்துபோனால், படிக்காதபோதும் அமைதியாவும் தனிமையாகவும் இருக்கத் தெரியும். இல்லையெனில், பேசிச் சிரித்து கொக்கரித்து ஆரவாரத்தோடு அலட்டல் செய்து, அலட்டலுக்கு எதிர்வினை வர, கோபப்பட்டு கொந்தளித்து பல்வேறு சங்கடங்கள் ஏற்படும்.

ஏகாக்கிரகம் எனப்படுகின்ற மன ஒருமை படிப்பதில் ஏற்படுகிறது. என்ன படிக்கிறோமோ அதிலேயே மனம் லயித்துக் கிடக்கிறது. சுற்றுப்புறச் சூழ்நிலை மறந்து போகிறது. அதுமட்டுமல்ல, படித்தபிறகு படித்ததையே பற்றிக்கொண்டு இன்னும் ஆழ உள்ளே இறங்குகிறது. எனவே, சிந்திப்பதிலும் மன ஒருமையை மிக எளிதில் அடைகிறார்கள். இப்போது என்ன பிரச்னை என்று மிகச் சரியாக அணுகவும் செய்கிறார்கள். படிக்காதவர்களுக்கு பதற்றம்தான் முதலில் ஏற்படும். பதட்டத்தால் பேச்சுகள் அதிகரிக்கும். அடுத்தவரை குறை சொல்வது உடனே துவங்கும். தன்னை மிக பலசாலி என்று அலட்டிக்கொள்ள ஆரம்பிக்கும். அதுவே பிரச்னையை பல மடங்கு பெரிதாக்கிவிடும்.

படிப்பது என்பதை பாடப் புத்தகத்தோடும், தினசரியோடும், வாரப் பத்திரிகையோடும் முடித்துக்கொள்வது அவ்வளவு சிறப்பானதல்ல. அதைத் தாண்டி நூலகத்திற்குப் போய் பல்வேறு விதமான புத்தகங்களுக்குள் நுழைய முயற்சிக்க வேண்டும். சமீபமாய் தமிழில் நல்ல புத்தகங்கள் வந்துவிட்டன. ஆனாலும், ஆங்கில அறிவு இருப்பின் புத்தகப் படிப்புக்கு எல்லையே இல்லை. விண்வெளி என்று எடுத்துக்கொண்டால் லட்சக்கணக்கான புத்தகங்கள் இருக்கின்றன. உலகம் மிகச்சிறியது என்றும், அதில் வசிக்கின்ற நாம் தூசினும் தூசு என்பதும் அந்தப் புத்தகங்கள்

எளிதில் காட்டிக் கொடுத்துவிடுகின்றன. அலட்டும் ஆர்வம் எழ மறுக்கிறது.

இரண்டாம் உலகப்போர் என்று எடுத்துக்கொண்டால் மனிதகுலம் பட்ட சமீபத்திய அவஸ்தைகள் மிகத் தெளிவாகத் தெரிகின்றன. கோடிக்கணக்கான மனித உயிர்கள் குவியல் குவியலாய் இறந்துபோனது அதிர்ச்சியாய் உள்ளே பரவுகிறது. ஒரு தனிமனித கர்வம் உலகை அழித்தது தெரியவருகிறது. சும்மா கிடைக்கவில்லை சுதந்திரம் என்று இந்தியப் போராட்ட வரலாற்றை படிக்கும்போது தெரிகிறது. இப்பொழுது என்ன கடைசி கண்டுபிடிப்பு. இனிமேல் என்ன கண்டுபிடிப்பு வரப்போகிறது என்பதை புத்தகங்கள் பறைசாற்றுகின்றன.

''என்னாங்க, புஸ்தகம். பழங்கால ஆளா இருக்கீங்களே. கணினி வந்துடுச்சீங்க. ஒரே நாள்ல நூறு புக் பார்க்கலாம். கம்ப்யூட்டருக்குள்ளயே லைப்ரரி. பீரோவே தேவையில்லை. புத்தக நெடியே அடிக்காது'' என்று சொல்லலாம்.

''இல்லை. கணினியில் அதிகம் தகவல் சிதறல்கள்தான் இருக்கின்றன. புத்தகத்தினுடைய ஆழம் கணினியில் இல்லை'' என்பது என்னுடைய கருத்து. கணினி கண்களை அறுக்கிறது என்பது இன்னொரு அபிப்பிராயம்.

''எந்த வருஷம் மெட்ராஸ்ல குண்டு போட்டான்?'', ''எம்டன் கப்பல் எப்போ வந்தது?'' என்கிற தகவல் அதில் இருக்கும். ஆனால், இரண்டாம் உலகப்போரை, கதை போல சொல்கின்ற சுகம் அதில் இருக்காது. ஆப்பிரிக்காவிலிருந்து கறுப்பர்களை விலங்கிட்டு கொண்டு வந்து அமெரிக்காவில், ஐரோப்பாவில் வியாபாரம் செய்த விஷயமும், அந்த சமூகம் மெல்ல மெல்ல முன்னேறி தனக்கென்று ஒரு இடத்தை பிடித்துக்கொண்டு இன்று நாடாளும் நிலைமைக்கு உயர்ந்ததும் கணினியில் கிடைக்காது. அது நாவலாக இருக்கும்.

கணினி இளம்பெண்ணோடு அரட்டை அடிப்பதுபோல, புத்தகம் முதியவரோடு பேசுவதுபோல என்பது என் சொந்த அபிப்பிராயம்.

படிப்பு உலகத்தை அறிமுகப்படுத்துகிறது. பயணம் உலகத்தோடு நெருங்க வைக்கிறது. உலகத்தோடு நெருங்கிய தொடர்பு



இல்லையெனில், உலகம் பற்றிய தெளிவு இல்லையெனில் வாழ்வது வீணானது. வெறும் வம்படியானது.

''என்னால படிக்கவே முடியலைங்க. படிச்சா உடனே தூக்கம் வருது'' என்று சொல்வீர்கள் எனில், படிப்பில் நாட்டம் இல்லை என்றே பொருள். அரட்டையில் அதிகம் ஆர்வம் இருக்கிறது என்றே அர்த்தம். முயன்றால் முடியாதது எதுவுமில்லை. அட... மண்ணில் தெரியுது வானம். அது நம் வசப்படலாகாதோ. வசப்படும் நிச்சயம்.

## 9

தலைவி தலைவனைப் பற்றி புலம்புகிறாள். ''அவன் என்னுடைய ஊர்தான். ஆனால், அவன் வீட்டிற்கு வருவதே யில்லை. அப்படியே தப்பித் தவறி என் வீட்டிற்கு வந்தாலும் என்னோடு மனம்விட்டுப் பேசுவதேயில்லை. என்னைப் பார்த்ததும் சட்டென்று முகம் திருப்பிக்கொண்டு போகிறான். அதுவும் அடுத்த ஊர் சுடுகாட்டைப் பார்த்தால் எப்படியொருவர் முகம் திருப்பிக் கொள்கிறாரோ அதே போல முகம் திருப்பிக்கொண்டு போகிறான். இவன் மீது வெட்கத்தைவிட்டு புத்தியைவிட்டு நான் காதல்வயப்பட்டேனே. அது வில்லிலிருந்து இலக்கு தப்பி விழுந்த அம்பு போல எந்த பிரயோஜனமும் இல்லாமல் இருக்கிறது'' என்று சொல்கிறாள்.

ஒரூராயினும் சேரிவாரார்
சேரிவரினும் ஆற முயங்கார்
ஏதிலாலர் சுடலைபோல காணாகழிபமன்னே

என்று இந்தக் கவிதை துவங்குகிறது.

நம்மூர் சுடுகாட்டில்கூட சலனமிருந்தால், ஏதேனும் இருந்தால் யார் என்று பார்ப்போம். அடுத்த ஊர் என்றால் அவசரமாக அந்த இடத்தைவிட்டு நகர்ந்துவிடுவோமல்லவா. அப்படியொரு அருவருப்போடு நகர்கிறான் என்று சொல்கிறாள். என்ன அற்புதமான உவமை. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு எழுதிய கவிதை. இந்தப் பெண்ணுடைய மனோநிலை

இன்றைக்கும் பல பெண்களிடம் இருக்கிறது. மிகப் பெரிய அழகனை சினிமா நடிகனை காதலித்துவிட்டுத் தவிக்கும் பெண்கள் இன்றும் உண்டு. கவிதைக்கு வயதாயிற்றே தவிர, கவிதையின் கருத்துக்கு வயதேயில்லை. இன்றும் இளமையாக இருக்கிறது.

'ஏதிலாளர்... சுடலைபோல' என்கிற அந்தக் கவிதை நயம் அற்புதம்.

பொருள் சம்பாதிப்பதற்காக பிரிந்த தலைவன் திரும்ப வந்துவிட்டான். இன்னும் வீட்டிற்கு வரவில்லை. ஊரின் எல்லையில் அங்குள்ளவர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறான். இன்னும் பலரிடம் பேசிவிட்டுத்தான் வருவான். ஆனால், தலைவிக்குத் தாங்கவில்லை. இந்த செய்தியைக் கொண்டு வந்த தோழியைப் பிடித்து உலுக்குவது போல் கேட்கிறாள்.

'நீ கண்டனையோ கண்டார் வாய் கேட்டனையோ...' நீ பார்த்தாயா அல்லது எவரேனும் பார்த்தேன் என்று சொன்னதை வந்து - சொல்கிறாயா என்று 'நேரடி சாட்சியமா, இல்லையா' என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறாள். தலைவனை நேரே பார்க்கும் வரை அவளுக்கு தவிப்புதான்.

எதிரிகள் எல்லையிலே குவிய ஆரம்பித்து விட்டார்கள். உள்ளுக்குள் புகத் துடிக்கிறார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்த ஊர்ப்படை போயிருக்கிறது. அந்தப் படையினுள் தகப்பன் மரணமடைந்தான். அந்தப் படையினுள் தமையன் மரணமடைந்தான். பிறகு கணவன் மரணமடைந்தான். பிறகு மூத்தபிள்ளை மரணமடைந்தான். இப்பொழுது பால்மனம் மாறா இளம்பிள்ளை இருக்கிறான். அவன் இடுப்பு வேட்டியை இறுக்கக் கட்டி முண்டாசு கட்டி நெற்றியில் திலகமிட்டு கையில் வாள் கொடுத்து 'போ... எதிரியை உள்ளே விடாதே. வெட்டு. இந்தப் போரில் நீ இறந்தாலும் பரவாயில்லை. எதிரியை நம் தேசத்தை மிதிக்க விடக்கூடாது' என்று சூளுரை செய்கிறாள் ஒரு பெண்.

அந்தப் பெண்ணாக உங்களை கற்பனை செய்து பாருங்கள். சகலரையும் இழந்துவிட்டு துணைக்கு இருக்கின்ற சின்னஞ்சிறு பாலகனையும் போருக்கு அனுப்புகின்ற துணிச்சல், அந்தக் கோபம், அந்த ரௌத்ரம் நம் தேசத்தை மண்ணை எவரும் மிதிக்கக்கூடாது என்கிற வெஞ்சினம் எவ்வளவு அழகாக இருக்கிறது. இப்படி



வாழ்ந்திருக்கிறார்கள் நமது முன்னோர்கள் என்று நினைக்க, மனம் திகைப்பில் ஆழ்கிறது.

தேவர்களுக்காக யாகம் வளர்த்து எடுக்கப்பட்ட அவிர் பொருளை ஒரு நாய் முகர்ந்து பார்ப்பது போல இங்கும், அங்கும் அலைந்து மெல்ல உண்பதற்காக முகருவதுபோல ஸ்ரீமந் நாராயணனுக்காக வளர்ந்த என்னுடைய முலைகளை தெருவில் குறுக்கும், நெடுக்கும் நடந்து என்னை முறைத்துப் பார்க்கிறார்கள்.

ஸ்ரீமந் நாராயணனைத் தவிர வேறு எவருக்கும் நான் வாழ்க்கைப்பட மாட்டேன். அப்படி நேரிடின் நான் செத்துத் தொலைவேன் என்று சூளுரை செய்கிறாள் ஆண்டாள்.

தன்னை அவிர் பொருளாகவும், தன்னைச் சுற்றி நோட்டம் விடும் வாலிபர்களை நாயாகவும் இந்தக் கவிதை சொல்கிறது. அந்தக் கவிதையிலுள்ள கோபம் ஆச்சரியமாக இருக்கிறது.

தமிழ் இலக்கியம் மிகத் தொன்மையானது. மிக பிரமாண்டமானது. விதம் விதமான வாழ்க்கையை விளக்கமாகச் சொல்வது. மனிதரின் மனோநிலைகளைத் தெள்ளத் தெளிவாக படம்பிடித்துக் காட்டுவது. இலக்கியத்தின் நோக்கமே மனிதர்களைப் பற்றி சொல்வதுதான். அப்படி மற்ற மனிதர்களின் குணங்களைப் பற்றிச் சொல்ல அதில் நம்மைப் பொருத்திக்கொண்டு பார்க்க முடியும். இந்த மாதிரியான காதல்தானே எனக்குள்ளும்.. இந்த மாதிரியான கோபம்தானே எனக்குள்ளும்... இந்த மாதிரியான துக்கம்தானே நானும் அனுபவித்தேன் என்று ஆயிரம், இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த கவிதையோடு நம் இன்றைய வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்க்க இயலும்.

"உனக்குகொன்று தெரியுமா, நாம் மணல்வீடு கட்டி விளையாடும்போது எட்டி உதைத்துவிட்டுப் போவானே ஒரு பையன். அந்தப் பையன் வீட்டிற்கு வந்திருந்தான். குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்று கேட்டான். என் தாய் கொண்டுபோய் கொடு என்று சொன்னாள். நான் ஒரு குவளையில் நீர் கொண்டுபோய் கொடுத்தேன். குடிக்கும்பொழுது வெடுக்கென்று என் இடுப்பை கிள்ளினான். நான் ஐயோ... என்று சத்தம் போட்டேன். அம்மா ஓடிவந்து என்ன என்று கேட்டாள். நான் தட்டுத் தடுமாறி அவனுக்கு விக்கியது என்று சொன்னேன். அம்மா அவனை இழுத்து தலையைத் தடவி, முதுகு தடவி அவனை

ஆசுவாசப்படுத்தினாள். என் பொய்யைக் கண்டு அவன் கண்சிமிட்டி மெல்லச் சிரிக்கிறான்'' என்று கவிதை சொல்கிறது.

'நகைக்கூட்டம் செய்வான் கள்வன் மகன்' என்று அழகோடு முடிகிறது.

யாருக்கும் தெரியாமல் தான் நேசிக்கின்ற பெண்ணைக் கிள்ளுவது என்பது இப்போதும் இருக்கிறதே. இத்தனை காலமாகியும் இந்த கவிதை எந்தவிதக் குறையுமில்லாமல் இருக்கிறதே என்பது நினைக்க ஆச்சரியமாக இருக்கிறது. இதை எழுதியவர் மீது மிகப் பெரிய மதிப்பு வருகிறது.

கம்பனின் இராமாயணம் படிக்கப் படிக்க பரவசம் தரும் ஒரு அற்புதக் காவியம்.

பழந்தமிழ் கொஞ்சம் கடினம்தான். ஆனால் பழகப் பழக படிக்கப் படிக்க நம்மோடு அந்த மொழி மிக அருகே வந்து உட்கார்ந்து கொள்ளும். தன்னை வெளிப்படுத்தும். மொழியின் சுவைக்காக மட்டுமல்ல... அதன் மேன்மைக்காக மட்டுமல்ல... அந்தக் கவிஞர்களின் மனப்பாங்கு, அந்தக் கால வாழ்க்கை, அப்போதிருந்த மனிதர்களின் குணாதிசயங்கள் என்று பல்வேறு விஷயங்கள் வெளியே தெரியும். நம் முகமும் அந்த குணாதிசயங்களில் தென்படும்.

தமிழ் இலக்கியம் மட்டுமல்ல, மேல்நாட்டு இலக்கியங்களில் கூட அற்புதமானவை இருக்கின்றன. மாகியின் பரிசு என்ற ஒரு சிறுகதை. கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் மிகவும் நேசிக்கிறார்கள். ஆனால், மிகுந்த ஏழ்மையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு திருமண நாள் வருகிறது. ஒருவருக்கொருவர் பரிசு கொடுக்க வேண்டுமென்று ஆசைப்படு கிறார்கள். மாகி தன்னுடைய நீண்ட பொன்னிறமான கூந்தலை சுத்தரித்து அதற்கு ஒரு கடிகாரப் பட்டை வாங்குகிறாள். மாகியின் கணவனோ தன்னுடைய கடிகாரத்தை விற்றுவிட்டு அவளுக்கு தந்தச் சீப்பு வாங்குகிறான். இருவரிடமும் பரிசுப்பொருள் இருக்கிறது. பரஸ்பரம் பரிமாற வேண்டும். இத்தோடு கதை முடிகிறது.

ஆங்கில இலக்கியத்தின் மிகச் சிறந்த கதை இது என்று பாராட்டப்படுகிறது.



ஒரு தேசத்தில் அந்நியரின் படையெடுப்பு நடக்கிறது. அவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள பல பேர் பலவிதமாக முயற்சி செய்கிறார்கள். ஒரு பணக்காரர் எப்படியாவது போக வேண்டுமென்று அவரும் முயற்சி செய்ய அவருக்கு ஒரு கோச் வண்டி கிடைக்கிறது. தன் மனைவியோடு அந்த கோச் வண்டியில் ஏறிக்கொள்கிறார். ஒரு பணக்காரக் கிழவியும் ஏறிக்கொள்கிறார். ஒரு இளம்பெண்ணும் ஏறிக்கொள்கிறார். அவரவர்கள் தனித் தனியாக வாடகை கொடுத்து வண்டிக்காரனிடம் பேசி அந்த குதிரைவண்டி கோச்சில் ஏறிக்கொள்கிறார்கள். அந்த இளம் பெண்ணைப் பார்த்து முதியவள் முகம் சுளிக்கிறாள். அவள் ஒரு வேசி என்று பணக்காரருக்கும் தெரிந்திருக்கிறது. கஷ்டகாலம் இவளோடு பயணம் செய்ய வேண்டியிருக்கிறதே என்று முகம் திருப்பிக் கொள்கிறார்கள். குதிரைவண்டி கிளம்பிப் போகும் போது சின்ன சின்னதாய் அவளை அவமானப்படுத்து கிறார்கள். இழிவாகப் பேசுகிறார்கள். குத்திக் காட்டுகிறார்கள். அவள் சகித்துக்கொண்டு வருகிறாள். ஒரு எல்லையைத் தாண்டும்போது எதிரிப்படை குதிரைவண்டியை வளைத்துக்கொண்டது. குதிரை வண்டியை மேற்கொண்டு விடமாட்டேன் என்று அந்த படைத் தலைவன் முரண்டு செய்ய, வேண்டுமென்றே வம்புக்கு வர, அந்தப் பெண் கீழிறங்கி அவன் தோளைத் தொட்டு மெல்ல தனியே அழைத்துக்கொண்டு போய் அவனோடு சில மணி நேரம் இருந்துவிட்டு குதிரைவண்டிக்கு வருகிறாள்.

கோச் கிளம்புகிறது. படைவீரர்கள் யாரும் தடுக்கவில்லை. எல்லைதாண்டி வேறொரு ஊருக்குள் நுழைகிறது. ஆனாலும், அவர்கள் யாரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவில்லை. அந்த ஒரு மாதிரியான பெண் இல்லாவிட்டால் நிச்சயமாய் அந்த இடத்தை கடந்திருக்க முடியாது. அதே சமயம் நன்றி சொல்லவும் அவர்களுக்கு மனம் வரவில்லை. அவர்களின் மனோநிலையை துல்லியமாய் படம்பிடித்துக் காட்டுகிறது இந்தக் கதை. என்ன செய்தாலும் வேசி வேசிதான் என்பதாகத்தான் வாழ்க்கை இருக்கிறது.

தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து கிடைத்துவிட்டது என்று தமிழர்கள் சந்தோஷப்பட்டால் மட்டும் போதாது. பழந்தமிழ் இலக்கியத்தோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும்.

சிறிதளவாவது தமிழ் இலக்கியத்தின் முக்கியமான பகுதிகளைப் படித்து அனுபவிக்க வேண்டும். மொழியை மதிப்பது என்பது வெறுமே முஷ்டியை மடக்கி கூச்சலிடுவது அல்ல... வேறொரு மொழிக்காரரை இழிவுபடுத்துவது அல்ல... தன் மொழியினுடைய கனத்தை, முப்பரிமாணத்தை முற்றிலும் புரிந்துகொள்ள முயற்சி செய்வதுதான் மொழியை ஆதரிக்கின்ற, வளர்க்கின்ற, நேசிக்கின்ற முயற்சி. மற்றதெல்லாம் வெறும் வறட்டுக்கூச்சல்.

மொழியின் ஆதரவு மட்டுமல்ல... மனிதர்களின் மனதை புரிந்துகொண்டு தன் மனப்பக்குவத்தை விரிவுபடுத்திக்கொள்கின்ற அற்புதமான விஷயமும் இலக்கியம் படிப்பதால் ஏற்படும். பழந்தமிழ் இலக்கியங்கள் படியுங்கள். உலக இயக்கியங்கள் தேடுங்கள். இதைச் செய்யாதவர் நாகரீகமான மனிதர்கள் இல்லை. வெறுமே வாழ்ந்துவிட்டுப் போகிறவர்கள்தான்.

## 10

தன்னைப் பற்றிய தாழ்வுமனப்பான்மை உள்ளவருக்கே புறங்கூறுதல் என்கிற மனோநிலை ஏற்படும். புறங்கூறும் மனிதர்களைவிட அருவருப்பானவர்கள் இந்த உலகத்தில் எவரும் இலர். தன்னைப் பற்றிய கர்வத்திற்கு அகங்காரம் என்று பெயர். தான், தனது, என் சொத்து, என் வேலை, என் உறவு, என் பலம், என் மொழி, என் ஆட்சி, என் தேசம் என்று பல்வேறு விஷயங்களை தன்னுடையதாய் நினைத்துக்கொள்கிறபோது இந்த அகங்காரம் கொம்பு முளைத்து நிற்கும்.

என் மொழியை முக்கியம் என்று நினைத்துவிட்டால் அடுத்த மொழி அபத்தம்தான். அந்த மொழிக்கு செம்மொழி அந்தஸ்து கிடைத்துவிட்டதா, அப்பொழுது என் மொழிக்கும் செம்மொழி அந்தஸ்து கிடைக்க வேண்டுமே என்று எவர் நினைத்தாலும் அது தன் மொழி பற்றிய அக்கறையில்லை. அடுத்தவர் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து கிடைக்கக் கூடாது என்கிற கோபம்தான் முன்னிலையில் நிற்கிறது.

நம்முடைய தராசு எப்போதும் கோணலானது. ஒன்றையொன்று ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய விருப்பு



வெறுப்புகள் அந்தத் தராசின் மீது ஏறுகின்றன. தவறாகக் காட்டுகின்றன.

“அவன் மனைவி அத்தனை அழகா. பிரமிப்பாக இருக்கின்றதே. எப்படிக் கிடைத்தது?” என்று கேள்வி வருகிறது. திரும்ப அருகே இருக்கின்ற தன் மனைவியைப் பார்க்க, அவருடைய முகம் மிகச் சாதாரணமாக இருக்க, உள்ளுக்குள்ளே ஒரு வெதும்பல் எழுகிறது.

“இப்படிச் சாதாரணமாக இருப்பதுதான் நல்லது. அவருடைய மனைவிபோல அழகாக இருந்தால் அது கெடுதல். மற்றவர்களுடைய பார்வைக்கு இலக்காக நேரும். நாம் இப்பொழுது எப்படிப் பார்க்கிறோம். என்ன அழகு, என்ன வளைவு, என்ன கூந்தல் என்று விதம்விதமாக பார்க்கிறோமே... இதுபோல் எத்தனை பேர் பார்ப்பார்கள். பார்த்தவர்கள் சும்மாயிருப்பார்களா அல்லது இத்தனை அழகாக இருக்கின்ற இந்தப் பெண்மணிதான் அமைதியாக இருப்பாளா. நல்லவேளை, எனக்கு அழகான மனைவி கிடைக்கவில்லை. சாதாரணமாகக் கிடைத்ததே மிகவும் உத்தமம். ஆனாலும், அவனுக்குப் போய் இத்தனை அமைதியான மனைவியா. யாரைப் பார்த்தாலும் பெரிதாய் சிரிக்கிறாளே. கொஞ்சம் தவறாக இருப்பாளோ. ஆமாம், அப்படித்தான் தோன்றுகிறது. தொட்டுக்கூட பேசுகிறாள். தொட்டுப் பேசுகிற பெண் நல்லவளாக இருக்க முடியுமா.”

மனம் இன்னும் குரங்காட்டம் போடுகிறது. உயர்ந்த கொதிநிலைக்குப் போகிறது.

“அந்த லேடி பத்தி நல்லா கேள்விப்படலையே” தனக்கு யார் தலையாட்டுவார்கள் என்று நினைத்து அவர்கள் அருகே போய் மெல்ல பேசத் தூண்டுகிறது.

“இல்லீங்க. நான் கேள்விப்படலையே அப்படி” என்று அவர் சொல்ல, “இல்லப்பா. நானும் அதை நம்பலை. அவங்க ரொம்ப நல்லவங்க. ஆனா, யாரோ ஏதோ சொல்லிக்கிட்டிருக்காங்கப்பா” என்று பேச்சு மாற்றுகிறது.

“ஆமாம். நானும் கேள்விப்பட்டேன்” என்று அடுத்த ஆள் சொன்னால் போதும்... சுருள் சுருளாக கதை ஆரம்பித்து விடும்.

பொறாமையில் புறங்கூறுதல் அங்கு நிற்கும். புறங்கூறுதல் எல்லாமுமே பொய்யைச் சார்ந்தவைதான். உண்மையை

சொல்லும்போது அது புறங்கூறுதலாக இருக்காது. கூட்டத்தில்தான் பொறாமை அதிகம் தலைவிரித்தாடும். பத்துப் பேர் கூடி வேலை செய்கின்ற அலுவலகத்தில் பொறாமை அதிகம் இருக்கும்.

நாலு நாட்கள் நாலு விதமாக நல்ல சட்டை போட்டுக்கொண்டு வந்தால் போதும்.

"பாரு மினுக்கறான். எங்கேயாவது மால் வாங்கறானா? தினமும் ஒரு சட்டை போட்டுக்கிட்டு வரான்."

விஷம் என்பது சோம்பலுள்ள மனம். எதிரே வேலை இருப்பினும் அந்த வேலையில் ஈடுபடாது வேறு ஏதேனும் செய்ய வேண்டுமென்று அலைகின்ற புத்தி. சோம்பலோடு சண்டைபோட புறங்கூறுதல் ஒரு உத்தி. பாக்கோ, வெற்றிலையோ கொறித்துக்கொண்டேயிருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிற பற்களைப்போல மனம் இம்மாதிரியான செயல்களுக்கு, இந்த செய்திகளை யோசிப்பதற்கு, பேசுவதற்கு, அசைபோடுவதற்கு ஆசைப்படுகிறது.

"அவரு மச்சினி அமெரிக்கால இருக்காப்போல... வந்திருக்காப்போல... அவரு மச்சினி அடிக்கடி வராங்களே... என்ன சமாசாரம்."

"அதெல்லாம் இல்லைப்பா. எந்த மச்சினி துட்டு கொடுக்கறா. எல்லா மச்சினியும் துட்டு வாங்கறவதான். எத்தினி பணக்காரியா இருந்தாலும் நம்மகிட்ட எப்படி பீறாயறதுன்னுதான் பார்ப்பாளுக. இவரு வேற."

"வேறென்னா... என்ன அர்த்தம்?"

ஆவலோடு தலைகுனிந்து பேசத் துவங்குவார்கள். மூன்றாமவரும் எட்டி எட்டி கேட்டுக் கொள்வார்.

"நம்ம கம்பெனி எதிர் கம்பெனி இருக்கு இல்ல. அதுல நம்ம கம்பெனி மேட்டரெல்லாம் போட்டுக் கொடுக்கறாப்போல. அவங்க துட்டு வெட்றாப்போல."

"உனக்கு எப்படித் தெரியும்?"

"அந்த கம்பெனி ஆளு இவரைப் பத்தி எங்கிட்ட விசாரிக்கறானே."

"அந்த கம்பெனி ஆள் உனக்கு எப்படித் தெரியும்?"



"எதிர் வீடுப்பா."

அவரிடம் பேச, அவர் இவரிடம் பேச, பேசியது பெரிதாக... புறங்கூறுதல் படிப்படியாக நகர்ந்துபோய் சம்பந்தப்பட்டவரின் காதுக்குப் போகும். சம்பந்தப்பட்டவர் வலுவுள்ளவராக இருந்தால் நேரே வந்து சட்டையைப் பிடித்து கேள்வி கேட்பார்.

"அந்த கம்பெனிக்கு நான் என்ன கொடுத்தேன். அப்படி சொல்லக் கூடாத ரகசியம் இந்த கம்பெனியில என்ன இருக்கு. என்ன... கஞ்சா வியாபாரமா... கள்ளச்சாராயமா? வெறும் புண்ணாக்கு வியாபாரம்தானே."

உரத்த குரலில் பேச, புறங்கூறுதல் பெருத்த சண்டையாகிப் போகும்.

"அந்தாள் அப்படித்தாம்ப்பா. அவன் வேலையும் செய்யறதில்லை. அடுத்த ஆளை வேலையும் செய்ய விடறதில்லை. இப்படி ஏதாவது பேடித்தனமா அடுத்த ஆளைப்பத்தி பேசிக்கிட்டேயிருக்கான்."

பிறகு நட்பு வட்டம் சிதறிப்போகும்.

"உங்களுக்குப் பிறந்த நாளாமே. வாழ்த்துகள்."

வந்து பேசினாலும், "சரி. உன் இடத்துக்குப் போய் உட்கார். இந்த சாக்கு வச்சு ஒட்டாத" என்று உதறும்படியாக இருக்கும்.

இது மிகவும் வலிக்கும்.

புறங்கூறுதலுக்கு தனிமைச் சிறைதான் அனேகமாக தண்டனையாய் விதிக்கப்படுகிறது. தள்ளிவைப்பதுதான் முக்கியமாக ஏற்படுகிறது.

அழகா முக்கியம். உள்ளமல்லவா மிகவும் முக்கியம். செய்தொழில் அல்லவா மிகவும் முக்கியம். வாய்மையல்லவா என்று புரிந்துவிட்டால் இந்தப் புறங்கூறுதல் வராது.

"அந்தாள் நல்லவன்ப்பா. வெட்டிப் போட்டாகூட அடுத்தவன் பத்தி தப்பா சொல்ல மாட்டான். தெரியாத பண்ணிட்டேன்னு தான் பேசுவான். அந்தாள் எங்க பேசறாரு. பேசறதே கம்மி. ஒரு நாளைக்கு பத்து வார்த்தை பேசினா அதிகம்."

ஓயாது பேசுபவருக்குத்தான் புறங்கூறுதல் இயல்பாக வருகிறது. பேசாதிருப்பதற்கு கற்றுக்கொண்டால் புறங்கூறுதல் அருகிலே வராது.

பேசாதிருக்க என்ன செய்ய வேண்டும்?

தன்னை உற்றுக் கவனிக்க வேண்டும். மனம் எப்படியெல்லாம் அலட்டுகிறது. என்னவெல்லாம் பொய் வேடம் போடுகிறது என்பதை கவனித்துக்கொண்டேயிருந்தால் மனம் சட்டென்று வெளியே வராது. அரட்டையடிக்க மனம் இருக்காது.

மனதை உற்றுப் பார்த்தல் எப்படி ஏற்படும். மூச்சுப்பயிற்சி மனதை கூர்மையாகப் பார்க்க உதவும்.

மூச்சுப்பயிற்சி எப்போது செய்ய முடியும்?

அமைதியாக இருக்க வேண்டுமென்று இருக்க ஆசைப்பட்டால் தான் முடியும்.

அமைதியாக இருக்க வேண்டுமென்று ஆசை எப்படி வரும்?

எல்லோரிடமும் அன்போடு இருக்கின்ற மனம் முயன்றால் அப்பொழுது அமைதியாக இருக்கின்ற ஆசை வந்துவிடும். அன்புதான் உலக வாழ்க்கையின் இனிமைக்குக் காரணம். அன்பில்லாதவர்கள் எல்லாம் தன்னுடையது, தனக்கு உரியது என்று நினைப்பார்கள்.

அவனுக்கு கிடைச்சாப்போல அழகான பொண்டாட்டி. அவன் போட்டுக்கறாப்போல நல்ல சட்டை. அவனுக்கு கிடைச்சா மாதிரி உத்தியோக உயர்வு. அவன் ஓட்டிக்கிட்டுப் போறா மாதிரி மோட்டார் சைக்கிள்.

தன்னைக் கவனித்தால், தன் வளர்ச்சியில் கவனம் செலுத்தினால், தன் முயற்சியில் முனைப்பு இருந்தால் இவை அனைத்தும் உங்களுக்கும் கிடைக்கும். அடுத்தவரையே நினைத்துக் கொண்டிருந்தால் மனம் வெந்துபோவதைத் தவிர வேறு எந்த விளைவும் இருக்காது. அடுத்தவரையே பார்த்துக் கொண்டிருப்பவருக்கு தன்னைப் பார்க்க நேரம் இருக்காது.

பெரிய பணக்காரனா... பெரும் புகழுடையவரைப் பார்த்தும் பொறாமைப்படுகிறோம். உண்மையில் அவருக்குண்டான பிரச்னை என்ன என்பது தெரியாது. பணம் படைத்தவரின் பயம், புகழ் பெற்றவனின் தடுமாற்றம், அழகிய பெண்ணின் கலவரம் எப்படிப்பட்டதென்று தெரியாது.

எங்கு பிரகாசமோ அதற்குக் கீழே இருளும் ஒளிந்திருக்கும். அந்த இருட்டு கண்ணுக்குத் தெரியாது. பிரகாசம் மட்டுமே கண்ணைப் பிடுங்கும். அதை வைத்துக்கொண்டு அவர்களை எதிரியைப் போல் பேசுகிறோம்.



புறங்கூறுதல் இன்றில்லை எனினும் ஒரு நாள் அசிங்கப்படுத்தும். நாலு பேருக்கு முன்பு அவமானப்படுத்தும்படி வந்துவிடும். நல்ல நட்பு இல்லாது போகும். இந்த உலகத்தில் நல்ல நட்பை, நல்ல உறவை சம்பாதிக்க முடியாதவர் வாழ்ந்து எந்தப் பயனும் இல்லை.

சொல்வது புரிகிறது. ஆனாலும் பொறாமை வருகிறதே. எப்படித் தள்ளுவது? முயன்றால் முடியாதது எதுவுமில்லை. அட, மண்ணில் தெரியுது வானம். முயற்சி செய்தால் நிச்சயம் முடியும்.

## 11

அழகுணர்ச்சிதான் மனித நாகரீகத்தின் வெளிப்பாடு. உடையில்லாமல் மனிதன் திரிந்த காலத்தில் முடியை திருத்திக் கொள்வதும், நகத்தை சீராக்கிக் கொள்வதும் துர்நாற்றமில்லாமல் உடம்பை வைத்துக்கொள்வதும் இருந்திருக்காது. மனித மனம் வளர வளர புத்தியின் சூட்சுமம் பெருக அழகுணர்ச்சி வந்துவிட்டது. ஆடையும், அணிகலன்களும் மட்டுமே மனிதனின் அழகுணர்ச்சியை சொல்லவில்லை. அவனுடைய கட்டடக் கலையும், வாகனங்களும் உண்ணும் உணவும் பருகும் பானமும்கூட அழகுணர்ச்சியை சொல்கின்றன.

வீட்டிற்கு வாசல்படியை வைத்து நீளநெடுக ரேழியை அமைத்து பிறகு முற்றம். பிறகு மறுபடியும் ரேழி, பிறகு மறுபடியும் முற்றம், பிறகு கொல்லைப்புறம் போகும் வழி, பிறகு கொல்லைப்புறம் என்று அங்கும் ஒரு நிலைப்படி வைத்து காற்று உள்ளுக்குள் வேகமாகப் போய் வெளியேற வேண்டும் என்ற சூட்சுமம் வைத்து வீடு என்பது குளுமையாக இருப்பதற்கான சாத்தியங்களை அதிகப்படுத்தி விட்டார்கள். தென்னோலைகளை பாய்போல பின்னி, அடுக்கி, அதன் மீது வைக்கோல் பிரி போட்டு அழுத்தி மெத்மெத்தென்று ஒன்றரை அடி கனத்திற்கு கூரை அமைத்தார்கள். உள்ளே குளுமையாக இருந்தது. அதேபோல தட்டோடும் வளைந்த ஓடும் வைத்து வீடுகளை சீராக அமைத்துக் கொண்டார்கள். வாசல்புறம் திண்ணை கட்டினார்கள்.

திண்ணையில் வட்டமாக கல் திண்டுகள் வைத்தார்கள். தூண்களில் பித்தளை பொருத்தினார்கள். கூடத்தில் ஊஞ்சல் கட்டினார்கள். கொல்லைப்புறத்தில் பயன்தரும் செடிகளை வளர்த்தார்கள். குளிக்கின்ற நீர் அந்த செடிகளுக்குப் போகும் வண்ணம் பாத்தி கட்டினார்கள். வீட்டு சுவர்களுக்கு சுண்ணம் அடித்தார்கள். வெளியே காவி தீட்டினார்கள். நிலைப்படியில் கடவுளர் சிலைகளை வைத்தார்கள்.

வாழுமிடம் குகையாக இல்லாது அற்புதமான கலைச்சின்னமாக விளங்கியது. உடைகளிலும் நகைகளிலும் மாற்றம் வந்தது. வாழ்வில் ஏற்றம் வந்தது. உணவை சமைத்து உண்பது என்பது ஒரு அழகுணர்ச்சிதான். மெல்ல மெல்ல மனித குலம் வளர்ந்த இந்த அழகுணர்ச்சியை நாம் கைக்கொள்ள வேண்டும்.

எட்டுக்கு பத்து என்ற அறை. மூலைக்கு மூலை புத்தகங்கள். மேலே ஒட்டடைகள். அங்கங்கே உடுத்திய துணிகள். திறந்து கிடக்கின்ற பீரோ. மூட்டைப்பூச்சி கட்டில் என்று இருந்தால் மனதில் சந்தோஷம் வராது. செயல்திறனில் ஈடுபாடு குறைந்து பலவீனம் அதிகரிக்கும். ஒருவர் தன் அறைக்குள் நுழையும்போதே அந்த அறையினுடைய சுத்தம் அவரைக் கவர வேண்டும். அட, நிம்மதியான இடத்திற்கு வந்துவிட்டோம் என்ற நினைப்பு எழவேண்டும். ஒரு சாக்கடைக்குள்ளிருந்து இன்னொரு சாக்கடைக்குள் வருகிறோம் என்ற எண்ணம் ஏற்பட்டால் தூக்கமும், உண்பதும் அபத்தமாகப் போகும். உண்பதும், தூங்குவதும் சரியாக இல்லையெனில், வாழ்வில் மற்ற எந்த செயல்களும் சரியாக இருக்காது. சுத்தமாக இருப்பது என்பது உடம்பு ஆரோக்கியத்திற்கு மட்டுமல்ல... அது அழகுணர்ச்சியின் வெளிப்பாடு.

கட்டிலில் மெத்தை இருக்க வேண்டும். மெத்தைமேல் கசங்காமல் துணி இழுத்து சொருகப்பட்டிருக்க வேண்டும். போர்த்திக் கொள்ளும் போர்வை காலடியில் மடித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். இரண்டு தலையணைகள் ஒன்றின் மீது ஒன்றாக சீராக வைக்கப்பட்டிருக்க வேண்டும். வலப்பக்க மேஜையில் கடிகாரமும், குடிதண்ணீரும் கைக்கெட்டும் தூரத்தில் இருக்க வேண்டும். எழுந்து நின்றால் எதிரே கடவுளர் படமோ, குருவின் படமோ அல்லது தாய் தந்தையரின் படமோ, அல்லது மலர்ச் செடிகளோ, குழந்தைகளின் படமோ பார்ப்பதற்கு



வசீகரமாக இருக்க வேண்டும். அறையில் எப்போதும் மெல்லிய நறுமணம் இருக்க வேண்டும். அப்படி நறுமணம் தரக்கூடிய மின் சாதனங்கள் இப்போது கிடைக்கின்றன. ஒரு துளி ஒட்டடைகூட அறையில் இருக்கக் கூடாது.

கதவின் கைப்பிடிகள், ஜன்னல்கள் சுத்தமாக துடைக்கப் பட்டிருக்க வேண்டும். குளிர்சாதனப் பெட்டியிருப்பின் அது சத்தம் போடாது அடிக்கடி சீர்செய்யப்பட்டதாய் இருக்க வேண்டும். குறிப்பாய் மின்விசிறியில்தான் அழுக்கு ஒட்டியிருக்கும். வாரம்தோறும் மின்விசிறியைத் துடைப்பது ஒரு நல்ல செயல். உங்களுடைய அறை சுத்தமாக இருப்பதுபோல மொத்த வீடும் சுத்தமாக இருக்க வேண்டும். உள்ளே நுழைந்ததும் செருப்புகள் வைப்பதற்கு ஒரு தனி இடம். ஹாலின் ஒரு ஓரத்தில் பூஜை மாடம். சமையலறைப் புகை ஹாலில் வந்து தாக்காமல் ஒரு எக்ஸாஸ்ட் ஃபேன். பாத்திரங்கள் வெளியே தெரியாமல் எல்லாமும் உள்ளே வைக்கும்படியான மாடுலர் கிச்சன். சுத்தமான டைனிங் டேபிள். பளிச்சென்ற இரவைப் பகலாக்கும் இரட்டைக் குழல் விளக்குகள். தினந்தோறும் பெருக்கி ஈரத்துணியில் துடைக்கப்பட்ட தரை. சீராக அடுக்கி வைக்கப்பட்ட அலமாரிகள்... இப்படியாக வீடு இருக்கும்போது, வந்தவர்களை வரவேற்பதில் நமக்கொரு பெருமிதம் ஏற்படும். கம்பீரம் வரும். சோஃபாவில் ஜட்டி இருப்பின், ஒருவர் வரும்போது அவசரமாக அதை எடுப்பின் நமக்கும் மரியாதை இருக்காது. வந்தவருக்கும் முகச்சுளிப்பு ஏற்படும்.

ஒரு சோம்பலினால்தான் இந்த மாதிரியான சீர்செய்யும் பழக்கங்கள் ஒரு வீட்டில் இல்லாது போகின்றன. அந்த சோம்பலுக்குக் காரணம், என் வீடு எப்படி வேண்டுமானாலும் இருக்குமென்கிற அலட்சியம். அந்த அலட்சியத்திற்குக் காரணம், அழகுணர்ச்சி அறவே இல்லாது போதல். வீடு மணக்க வேண்டும். என் வீடு சீராக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் எனக்கு உள்ளே ஒரு நிம்மதி பரவும் என்ற அழகுணர்ச்சி இருப்பின், தன்னுடைய சுற்றுப்புறத்தை சுத்தமாக வைக்கின்ற எண்ணம் இருப்பின் சோம்பல் வராது. உடனடியாக அந்த இடத்தை சீர்செய்கின்ற வேகம்தான் ஏற்படும். வந்தவுடன் செருப்புகளை அதனிடத்தில் பத்திரமாக வைத்து மூடிவிடுகின்ற

தன்மை கைவரும். தினம் தினம் தரையை ஈரத்துணியால் துடைக்க வேண்டுமென்ற வேகம் ஏற்படும்.

ஏகப்பட்ட வேலை. இதையெல்லாம் எப்படிச் செய்வது என்ற எண்ணம் கொண்டீர்களென்றால், ஒரு நாள் குப்பையை வளரவிட்டீர்களென்றால் ஒரு வாரக் குப்பை பெருகும். ஒரு வாரக் குப்பையை உங்களால் பொறுத்துக் கொள்ள முடியுமென்றால் நீங்கள் குப்பைத் தொட்டிக்குள்ளேயே வாழலாம்.

உடைகளில் கவனம் செலுத்துவது ஒரு தனி கலை. உங்களுக்கு என்ன உடைகள் சரியாக இருக்கும் என்று தேர்ந்தெடுப்பது ஒரு சூட்சுமமான வித்தை. உங்களை மக்களுக்குச் சொல்வது உங்கள் உடைகள்தான். நீங்கள் ஆரவாரமான ஆளா, கோபமான ஆளா, குதர்க்கமானா ஆளா என்பதையெல்லாம் உங்கள் உடைகளை வைத்துக் கண்டுபிடித்துவிடலாம். உள்ளே ஒரு அமைதியிருப்பின் உடை அதை வெளிப்படுத்தும். அதே சமயம் அரசியல்வாதியின் சீருடை போல வெள்ளை வேட்டி, வெள்ளைச்சட்டை போட்டுக் கொண்டு வேகமாக இருப்பது என்பது வீண்வேலை. உங்கள் உடை சீருடையாக இருக்கக்கூடாது. அதேநேரம் அழகியல் உணர்ச்சியோடு இருக்க வேண்டும்.

நீங்கள் நல்ல நிறமாக இருப்பின் அடர்த்தியான வண்ணங்களும், நீங்கள் நிறம் மட்டாக இருப்பின் மெல்லிய வர்ணங்களும் உங்களுக்கு சரியாக வரும். உடை உடலோடு சம்பந்தப்பட்டது. அப்போது உடலினுடைய சீரும் மிக முக்கியம்.

நகங்கள் இல்லாத விரல்கள். பொடுகு இல்லாத தலை. தோற்றப் பொலிவைக் கூட்டும் முகச் சவரம். அல்லது மெல்லிய தாடி. அதை நீங்களே தீர்மானம் செய்து கொள்வது நல்லது. உங்கள் முகம் உங்களை அறிமுகப்படுத்துகிறது. அதுதான் பேசத் தூண்டுகிறது. அதுதான் அன்பினுடைய ஆரம்பம். அதன்மீது மதிப்பு வைக்க, பிரியம் வைக்க உங்கள் தோற்றம்தான் முதல் புள்ளி. நீங்கள் தோற்றத்தை மிகச் சரியாக வைத்துக் கொண்டால் பேச்சும் மிகச் சரியாக வரும். உங்களுடைய உடல் அசைவும், அந்த மொழியும் அமைதியாக கவிதைபோல இருக்கும். நீங்கள் லுங்கியும் கலர் பனியனுமாக இருப்பின் உங்கள் சிரிப்பு வேகமாகத்தான் இருக்கும். வழித்துக்கொண்டு நிற்கத்தான் தோன்றும்.

இந்த அழகுணர்ச்சியை வளர்த்துக்கொள்வது எப்படி என்கிற கேள்வி உண்டு. உங்களை அழகுபடுத்திக் கொள்ள வேண்டு



மென்றால் இயற்கையைப் பாருங்கள். இயற்கை இயல்பாக அழகாக இருக்கிறது. எந்த முயற்சியுமில்லாமல் அழகாக இருக்கிறது. ஒரு மரத்தினுடைய அழகைப் பாருங்கள். தண்டு நீண்டு நாலாபக்கமும் கிளைகள் படர்ந்து அதில் ஒரு சீர்குணம் இருக்கிறது. இலைகளிலுள்ள நரம்புகள்கூட மிக அழகாக பரவியிருக்கின்றன. பூக்கள் பூத்துக்குலுங்கும் கொடிகள். பச்சைப் பசேலென்று இருக்கும் செடிகள். முட்கள் இருப்பினும் புன்னகை செய்யும் ரோஜா செடி என்று தாவரங்கள் அழகுணர்ச்சியை நமக்கு சொல்லித் தருகின்றன. பருவகாலத்தில் இலைகள் விழுவதுகூட கவிதையாக இருக்கிறது. தரையில் பூக்கள் பரப்பிக் கிடப்பதுகூட கோலம் போல இருக்கிறது.

தாவரங்களுக்குப் பிறகு பறவைகளை கவனித்தீர்களென்றால் இன்னும் சுகமாக இருக்கும். வானத்தில் வில் வளைவாக அவை போதும். அந்த வில் வளைவு மாறி சந்திரபிம்பமாக இருப்பதும் ஆச்சரியமாக இருக்கும். அழுக்கான பறவையென்று ஏதேனும் ஒரு பறவையை நீங்கள் கண்டதுண்டா? புறாவின் பட்டுப்போன்ற மென்மை. கொக்கினுடைய வெண்மை. கறுப்பாக இருந்தாலும் சுத்தமாக இருக்கின்ற காக்கை. பழுப்பாக இருந்தாலும் கம்பீரமாக இருக்கின்ற கருடன். பேச்சிலும், அசைவிலும் நம்மைக் கவரும் கிளிகள். எங்கோ மறைந்து குரல் கொடுத்துக் கூவும் குயில். எல்லாம் அழகு. எல்லாம் சுத்தம். வானத்தைப் பார்த்தீர்களென்றால் அது உதயத்திலும் அந்தியிலும் ஜாலம் காட்டுகிறது. கடற்கரைக்குப்போய் பௌர்ணமியன்று உதயம் பார்த்ததுண்டா? வாழ்வில் ஒருமுறையேனும் பௌர்ணமி உதயத்தைப் பாருங்கள். ஆரஞ்சு நிறம், பிறகு அழுத்தமான மஞ்சள். பிறகு வெளிறிய மஞ்சள். பிறகு வெள்ளை என்று விதம்விதமாக அந்த சந்திரோதயம் கோலம் காட்டும். சூரிய உதயம் அதற்கும் மேற்பட்டு சிறப்பாக இருக்கும்.

மேகங்களெல்லாம் சிவந்து கிடக்க, ஒரு அரசனைப்போல வெளிவரும் சூரியனைக் காண கண்கோடி வேண்டும். பொன் குதியலும், ஆற்றின் அசைவும் தனித்தனியான கவிதை.

இயற்கையை கவனிக்க அந்த அழகுணர்ச்சி நம்முள் ஒட்டிக் கொள்ளும். நாம் அழகாக இருந்தே தீர வேண்டும் என்ற எண்ணம் வலுப்படும். அழகு என்பது நமக்கு நாமே செய்து கொள்கிற மரியாதை. நாம் பிறருக்கு காட்டும் மரியாதை. தோற்றப் பொலிவு

என்பது ஒரு நம்பிக்கை. வாழ்வதிலுள்ள விருப்பம். உலகத்தை நேசிக்கின்ற தன்மை.

## 12

**பே**சுவது ஒரு கலை. இனிமையான வார்த்தைகளால் மட்டுமேயல்ல. நிதானமாகப் பேசுவதும், தெளிவாகப் பேசுவதும் எப்பொழுது பேசவேண்டுமோ அப்பொழுது பேசுவதும், எவ்வளவு பேசவேண்டுமோ அவ்வளவு பேசுவதும் எல்லோருக்கும் கைவராத விஷயம். மூளையில் ஏதோ ஒரு பகுதியில் ஒரு அமைதியும், நிதானமும் இருந்தாலொழிய இந்த பேச்சுத்திறன் வருவதில்லை. மேடையில் நீட்டி முழக்குல் பேசுகின்ற பேச்சை பேச்சுத்திறன் என்று நான் சொல்வதில்லை. அது தந்திரம். நல்ல பயிற்சியின் மூலம் அம்மாதிரி மேடையில் முழங்குவதற்கு கற்றுக் கொள்ளலாம்.

பேச்சுத்திறன் என்பது பிறர் மனம் அறிந்து பேசுதல் மற்றவருக்கு தான் சொல்லும் பொருள் விளங்க வேண்டுமே என்று பேசுவதல். அந்தப் பேச்சின் மூலம் நல்ல பயன் விளைய வேண்டுமே என்று பேசுதல். ஒரு இருட்டான சபைக்கு பொத்தாம் பொதுவாகப் பேசாமல் ஒருவரின் முகத்தைப் பார்த்து அவர் புரிந்துகொள்ள வேண்டுமே என்ற கவலையோடு பேசுதல்.

மனிதர்கள் அதிகம் பேசத் தெரியாதவர்களாக அந்தப் பேச்சில் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற பேராசை உள்ளவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

அதுவொரு துக்க வீடு. வீட்டிற்குள் சடலம் கிடத்தப்பட்டிருக்கிறது. வயதானவர் என்பதால் அதிகம் அழுகை இல்லை... பிலாக்கனம் இல்லை. எல்லோரும் படித்தவர்கள் என்பதால் அவரைப் பற்றி மெல்லிய குரலில் சிலாகித்துக் கொண்டிருந்தார்கள். அல்லது மௌனமாக அவரின் பிரிவை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அங்கு இரண்டு பெண் மணிகள் மட்டும் உரத்தகுரலில் பேசிக்கொண்டிருந்தார்கள். இறந்தவரின் நண்பர் அதே வயது ஒத்தவர் கொஞ்சம் துக்கத்தால் விசும்ப, "ஐயோ... பாவம் அவரு ஃப்ரெண்ட் எப்படித் துக்கப் படறார் பாருங்கோ. நமக்கெல்லாம் துக்கத்தை தாங்கிக்க முடியும்.



வயசானவரோன்னோ, அவர் ரொம்ப ஃப்ரெண்டோன்னோ... அதனால அந்த துக்கத்தை தாங்கிக்க முடியலை. எப்படித் துக்கப்படறார் பாருங்கோ."

எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிற விஷயத்தை தான் ஏதோ கண்டுபிடித்துவிட்டது போல அந்த இரண்டு சகோதரிகளும் மாறி மாறிப் பேசுகிறபோது அந்தச் செய்கை அருவருப்பாக இருந்தது.

அங்கு அவர் துக்கப்படுவதைவிட அவரைத் தாங்கள் பார்த்து அவருடைய துக்கத்தை தாங்கள் பாராட்டுவது போல இந்த முட்டாள் பெண்மணிகள் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தப் பிரிவு துக்கத்தை அனுபவிக்காது, மற்றவரையும் அனுபவிக்க விடாது ஒரு கட்டைத் தொண்டையில் உரத்த குரலில் பிளிறிக் கொண்டிருந்தார். இதுவொரு அசிங்கமான அகம்பாவம். பேசத்தெரியாத முட்டாள்தனம். ஒரு இடத்தின் அமைதியைக் கெடுக்கும்படி ஒரு பேச்சு இருக்குமானால் அந்த பேசுபவருக்கு வாழ்வு பற்றிய தெளிவு இல்லையென்றுதான் அர்த்தம்.

சிலர் உற்சாகமான இடத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள அல்லது பொழுதுபோக்க அல்லது எதிர்பட்டவரை தனக்குத் தெரியுமென்று பறைசாற்றிக் கொள்ள திரும்பத் திரும்ப ஒரே விதமாகப் பேசுவார்கள்.

"என்ன சௌக்கியமா? எப்படி இருக்கீங்க? உடம்பு ஒண்ணுமில்லையே. எல்லாருக்கும் வயசாகிட்டிருக்கு. அதனால யாரைப் பார்த்தாலும் உடம்பு சௌக்கியமா இருக்கான்னு நான் ஒரு வார்த்தை கேட்டுருவேன். சௌக்கியமா இருக்கீங்க இல்ல. உடம்புக்கு ஒன்னுமில்லையே?" திரும்பத் திரும்ப, திரும்பத் திரும்ப இதையே பேசிக்கொண்டிருப்பார்கள்.

பேசுபவர்கள் முகம் திருப்பிப் போனாலொழிய இந்தப் பேச்சு நிற்காது. இதுவும் தன்னை முன்னிறுத்துதல். மற்றவர்களுடைய அபிப்பிராயம் பற்றி எதுவுமே தெரியாமல் வெறும் தவளையாய் தானே கத்திக்கொண்டிருத்தல். பேசத் தெரியாது விழிக்கிறவர்களில் பலவகை உண்டு.

"உங்களோடு நிறைய பேசணும்னு நினைச்சேன். ஆனா, என்ன பேசணும்னே தெரியலை என்று மௌனமாக நிற்பார்கள். சம்பந்தப்பட்டவர் மெல்ல நகர்ந்தால், "நீங்க ஏதாவது

பேசுங்களேன்'' என்று கட்டளையிடுவார்கள். என்ன பேசுவது என்று தெரியாதபோது ஏன் பேச வேண்டும். எதிர்பட்டவர் என்ன பேசுவார். ரஷ்யப் புரட்சியில் பொதுமக்கள் பங்கு என்பது பற்றி பேசட்டுமா என்று பதில் சொன்னால் கேள்வி கேட்டவருக்கு முகம் வெளிறிப் போகும். ஏனெனில், அவருக்கு ரஷ்யப் புரட்சி பற்றியோ, பொதுமக்கள் பற்றியோ எதுவும் தெரிய வேண்டாம்.

நான் பார்த்த மனிதர்களில் சினிமாவைப் பற்றி பேசுகிற மனிதர்கள்தான் அதிகம். இந்த உலகத்தில் தமிழ்நாட்டில் எல்லோருக்கும் பொதுவான ஒரு பேச்சு இருக்கிறதென்றால் அது சினிமாவைப் பற்றித்தான். ''அந்த படத்தைப் பார்த்துட்டீங் களாமே... சூப்பர் ஹிட்டாமே.'' இல்லை. பார்க்கவில்லை என்று பதில் சொன்னால் என்ன பைத்தியக்காரத்தனம் என்பது போல பார்ப்பார்கள்.

''சூப்பர் ஹிட் சார், அந்தப் படம்!''

''சரி!''

''அதை ஏன் பார்க்கலை?''

''பார்க்கணும்னு தோணலை சார். பார்ப்பேனான்னு தெரியலை சார்.''

''அப்படிச் சொல்லாதீங்க சார். தயவுசெய்து அந்தப் படத்தை பாருங்க. படம் சூப்பர் ஹிட்.''

''நீங்க பார்த்துட்டீங்களா?''

''இல்லை. இனிமேதான் பார்க்கணும்.''

இப்போது இந்தப் பேச்சுக்கு என்ன அர்த்தம். எவ்வளவு பெரிய அசடுவழிதல்.

அவர் பார்க்காத படத்தை சூப்பர் ஹிட் என்று சொல்லி. எதிர்பட்டவரைப் பார்த்துப் பேசுவது என்றால், அவருக்கு எதுபற்றியும் எந்த ஞானமும் இல்லை என்றுதானே அர்த்தம்.

''சார்! பேப்பரில் என்ன நியூஸ்?''

பக்கத்தில் ஒருவர் உட்காருவார். எந்த அறிமுகமும் இல்லாதவராக இருப்பார். அதனாலென்ன... அவருக்கு பொதுவாழ்க்கை பற்றி மிகுந்த அக்கறை இருக்கிறது. அதனால்



பத்திரிகையில் என்ன செய்தி என்று விசாரித்து அதன்மீது தொடர்ந்து பேசுவார்.

''என்ன சார்! ஊரு அநியாயமா கெட்டுப் போயிடுச்சு பார்த்தீங்களா. மூணு கொலை, அஞ்சு கொள்ளை. நடுப்பக்கம் பாருங்க சார்.''

''பேப்பர் படிச்சுட்டு வரீங்களா?''

''படிச்சுட்டுதானே வரேன்.''

அப்போது என்னைப் படிக்கவிடுங்களேன் என்பதுபோல பேப்பர் படிப்பவர் உற்றுப் பார்ப்பார். ஆனால், அவருக்கு அதுபற்றிய சுரணை இருக்காது.

''ஆளில்லாத வீட்டுக்குள்ள புகுந்து, பூட்டை அறுத்து பீரோவை அடிச்சு உடைச்சு அம்பத்தோரு சவரன், இருவத்தி மூணாயிரம் ரூபா கேஷ் எடுத்துக்கிட்டு போயிருக்கறான் சார். அக்கம்பக்கத்துல சத்தம் கேட்காதயா இருந்திருக்கும். கேட்டிருக்கும். போனா உதை விழுமேன்னு வாயை மூடிக்கிட்டு வீட்டுத் தாழ்ப்பாளை இறுக்க பூட்டிக்கிட்டு உட்கார்ந்திருப்பானுங்க. ஒரு போலீஸுக்கு போன் பண்ணலாமில்லையா. பண்ணமாட்டானுங்க. போலீஸ் கேஸ் அது இதுன்னு நீதானே புகார் கொடுத்த. வா, ஸ்டேஷனுக்குன்னு சொல்லிடுவான். அந்த பயம். பக்கத்து வீட்டுக்காரன் பார்த்துப் பழகறவன். அவன் துட்டு கொள்ளை போகுதுன்னு கூச்சல் கொடுக்கக் கூடாதா? குரல் எழுப்பக்கூடாதா? பண்ண மாட்டானுங்க சார். ஊர் கெட்டுப்போச்சு சார். என்ன சொல்றது. அடுத்த வீட்டுக்காரன் பேர்ல அன்பே இல்லை சார்'' என்று தொடர்ந்து பேசிக்கொண்டே போவார்.

இவருக்கும் அடுத்தவரிடம் அன்பே இல்லையென்பது அவர் பேச்சில் தெரியும். நிற்கவைத்து கரகரவென்று கழுத்தை அறுக்கிற இந்தத் தொந்தரவு மிகக் கொடுமையானது.

கோபமில்லாத நிலையே சக்தி. எத்தனை வேகமாக எதிராளி பேசினாலும், எவ்வளவு இடக்கலாக அருகிலிருப்பவர் பேசினாலும் அதைப் பொறுத்துக்கொண்டு நிதானமாக மறுதளிப்பதும், பதில் சொல்வதும் வெகு சிலராலே முடியும்.

பேச்சுக்கு கொதித்துப்போவது என்பது ஒரு நோய். தன்வசம் தன் மனது இல்லை என்பதனுடைய நிலை. வெறும்

உணர்ச்சிகளால் உண்டான ஒரு உருளைப்பந்து என்பதுதான் அந்த மனிதனின் உருவகம். உணர்ச்சி எந்தப் பக்கம் இழுக்கிறதோ அந்த பக்கமெல்லாம் அந்தப் பந்து ஓடும். சந்தோஷமென்றால், கூவித் திரியும். கோபமென்றால், எகிறி ஆடும். துக்கமென்றால், போய் சொருகிக் கொள்ளும். தெளிவிருப்பின், உள்ளே அமைதி யிருப்பின், உள்ளுக்குள்ளே கேள்வி கேட்டு தான் யார் என்ற விபரம் இருப்பின் அந்த மனிதருக்கு பேசத் தெரிந்துவிடும். பேச்சுக்கு பதில் சொல்லத் தெரிந்துவிடும். அம்மாதிரி மனிதர்களை பார்ப்பது அரிது. ஆனால், இதுவொன்றும் கைவராத விஷயமல்ல. தினந்தோறும் சிறிதுநேரம் மௌனமாக இருந்தால், தியானம் பழகியிருந்தால் பேச்சு மிகத் தெளிவாக வரும். அமைதியின், தியானத்தின் வெளிப்பாடே தெளிவான பேச்சு.

பேச்சு தெளிவாக இருந்தால் மற்ற மனிதர்களோடு வாதாட சுமுகமாக இருக்கும். மற்ற மனிதர்களோடு தொடர்பு சுமுகமாக இருக்கும். மற்ற மனிதர்களோடு தொடர்பு சமுகமாக இருந்தால், வாழ்க்கை அமைதியாக இருக்கும். வாழ்க்கை அமைதியாக இருந்தால், தியானம் செய்வது எளிதாக இருக்கும். மௌனமாக இருப்பது ரம்மியமாக இருக்கும். அப்போது பேச்சு தெளிவாக இருக்கும். இதுவொரு சுழல் வட்டம். ஒன்றின் தொடர்பால் ஒன்று ஏற்படுவது. ஏதேனும் ஒரு இடத்தில் உளறிப்பேசுவதை, வித்துப்பேசுவதை எந்தவித உபயோகமுமில்லாமல் பேசுவதை சட்டென்று நிறுத்தி, உள்ளுக்குள் மௌனத்தை ஏற்படுத்தி இன்று முழுவதும் பேசமாட்டேன் என்ற மௌன விரதத்தை கடைப்பிடிப்பின் பேச்சு எத்தனை முக்கியம், அது எவ்வளவு சுகம், அது எவ்வளவு லாபம் என்று தெரிந்து விடும்.

மனக்குழப்பம் உள்ளவரே அதிகமாகவும், ஆத்திரமாகவும் பேசுகிறார். பேசக் கற்றுக்கொள்ளவில்லை எனில் வாழ்க்கை சிக்கலாகிவிட்டதென்று அர்த்தம். வாழ்க்கை சிக்கலாகிவிட்டால் பிறகு நீங்கள் பேசத் தொடங்குவீர்கள், தன்னந்தனியாக சுவர் பார்த்து. அப்பொழுது உங்களுக்கு உலகம் வேறு பட்டம் சூட்டும். எனவே, தயவுசெய்து பேசக் கற்றுக்கொள்ளுங்கள். என்னால் முடியாது என்று சொல்கிறீர்களா. இல்லை. முடிந்தால் எதுவும் செய்ய முடியும். அட.... மண்ணில் தெரியுது வானம். இது நம் வசப்படலாகாதோ...



## 13

**பூ**மி இடையறாது சுழல்வது. கோள்கள் இடையறாது நகர்கின்றன. பிரபஞ்ச வெளியும் நகர்கிறது என்று சொல்கிறார்கள். இடம்விட்டு இடம்மாறிப் போக வேண்டாமா? எல்லா இடமும் என் இடம் என்ற ஆனந்தத்தோடு பயணப்பட வேண்டாமா? பயணம் மனிதர்களை மலர்ச்சியாக்குகிறது. பயணம் மனிதர்களை எளிமையானவர்களாக்குகிறது. பயணம் மனிதர்களின் கர்வத்தை குறைக்கிறது.

இது என்னுடைய ஊர். இது என்னுடைய நகரம். இவர்கள் என்னுடைய மக்கள் என்கிற சிறிய வட்டம் உடைந்து சிதறி இந்த உலகம் பிரமாண்டமானது. இதில் கோடிக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். விதம்விதமான தாவரங்கள் இருக்கின்றன. மிக உயரமான மலைகளும், பொங்குகின்ற ஆறுகளும் இந்த பூமியைச் சுற்றிவருகின்றன என்று தெரியவரும்.

இடம் விட்டு இடம் மாறுவது இறுக்கத்தை குறைப்பது மட்டுமல்ல. என்னுடைய இடம் என்கிற இறுமாப்பையும் குறைக்கிறது. இடம் விட்டு இடம் பெயருகிறபோது வேறு ஒரு உலகம் தன்னுள்ளே விரிகிறது. என்னுடைய ஊரிலுள்ள பறவைகள் போல இங்கு பறவைகள் இல்லை. ஆனால், வேறு பறவைகள் இருக்கின்றன. கங்கை நதிக்கரை மீன்கள் இன்னும் பெரியவை. காவிரியின் மீன்கள் இன்னும் சிறியவை. நீளமான மூக்குடைய கொக்கு இமயமலை அடிவாரத்தில் நிறைய இருக்கிறது. அன்னபட்சி என்கிற விஷயம் மானசரோவர் ஏரியிலே கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. தெற்கிலே வாத்துக் கூட்டங்கள் அதிகம் இருக்கின்றன. சரளைக் கற்களும் கருமையான மணல் உடைய கரிசல் காடுகள் உள்ள தெற்குப் பக்கத்திலிருந்து வடக்கே போகப்போக சேறு நிறைந்த வயல்களும், உயர்ந்த திண்மையான மரங்களும், அடர்ந்த வனங்களும் தென்படுகின்றன.

மனிதன் நாகரீகம் அடைய அடைய பயணம்தான் அவனுக்கு லட்சியமாக இருக்கிறது. பயணப்படுவதுதான் மிகச் சிறந்த வாழ்க்கையாக இருக்கிறது. பயணப்படுவதற்குத்தான் மரியாதை

அதிகமாக இருக்கிறது. கடல் பயணத்தை மேற்கொண்டு ஐரோப்பாவிலிருந்தும், தெற்கு ஆசியாவிலிருந்தும் அரேபியாவிலிருந்தும் வணிகர்கள் வர, இந்தியா எங்கே இருக்கிறது என்று தேட, அது வீரதீர செயலாகவே அது பேசப்பட்டது. அரசர்களும், அரசிகளும் அம்மாதிரி வீரதீரத்தோடு கடல்கடந்து பல துன்பங்கள் தாங்கி வேறு தேசங்களுக்குப் போய் திரும்பி வருவதை பார்த்து சந்தோஷித்தும், சம்பாஷித்தும் தங்களுடைய செல்வத்தை அதிகரிப்பதற்கு வழிதேடியும் அம்மாதிரி ஆட்களை ஊக்கப்படுத்தினார்கள்.

போர்த்துகீசியத்தைச் சேர்ந்த மக்களுக்கு கடற்பயணம் மிக முக்கியமான, வாழ்க்கையின் அங்கமாக இருந்தது. கடற்பயணம் மேற்கொண்டு திரும்பினால்தான் அவனுக்கு ஊரில் மரியாதை இருந்தது. அதேபோல தென்னிந்தியாவில் இருப்பவருக்கும் பயணப்பட்டு திரும்பி வந்தால் மிகப் பெரிய மரியாதை இருந்தது. தென்னிந்தியாவிலுள்ள மக்கள் எங்கே பயணப்பட்டார்கள். மெல்ல நடந்து கடற்கரையோரமாகவே போய் பிறகு அடர்ந்த கானகங்களுக்குள் புகுந்து கங்கை நதிக்கரையை தொட்டு, அந்த கங்கை நதிக்கரையிலிருந்து நேரே போய் காசி தேசத்திற்கும், அங்கிருந்து இன்னும் சற்று மேலேறி இமயமலைத் தொடருக்கும் பயணப்பட்டார்கள்.

இமயமலைத் தொடரை பார்த்துவிட்டு வந்த அந்தணர்களும், அரசர்களும் அதிகம் கௌரவிக்கப்பட்டார்கள். வடக்கேயுள்ள மன்னர்களோ தெற்கேயுள்ள அடர்ந்த கானகங்களில் தங்களுடைய வீரத்தை நிலைநாட்டுகின்ற களமாக எடுத்துக் கொண்டார்கள். ராமேஸ்வரம் வருவது ஒரு முக்கியமான விஷயமாக தங்கள் வாழ்நாளின் சாதனையாக நினைத்துக் கொண்டார்கள். அரசர்களும் வீரர்களும் மட்டுமல்ல, ஞானிகளும், ஆசார்ய புருஷர்களும் தங்கள் அறிவை விருத்தி செய்து கொள்ளவும், வேறு தேசங்களில் கிடைக்கின்ற முக்கியமான தத்துவங்களை அறிந்து கொள்ளவும், புத்தகங்களை படிக்கவும் பயணப்பட்டார்கள். இந்தியா என்கிற நாடு செழிப்பாக இருப்பது கண்டு அரேபிய பாலைவனத்திலிருந்து துருக்கியர்கள் நல்ல குதிரைகளோடு இங்கு வியாபாரம் செய்ய வந்து இந்த வியாபாரத்தில் ஈடுபட்டு இந்திய தேசத்தின் செழுமையைக் கண்டு, பிறகு கணவாய்களை தாண்டி உள்ளுக்குள்ளே



பெரும்படையோடு நுழைந்து மெல்ல மெல்ல இந்த தேசத்தின் பல பகுதிகளை ஆக்கிரமித்துக்கொண்டார்கள். அதற்குப்பிறகு வந்த போர்த்துக்கீசியர்களும் பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் போட்டி போட்டுக்கொண்டு தெற்குப் பக்கம் வந்து இறங்கி கடல் மார்க்கமாக இந்தியாவை வளைத்து முன்னேறி தங்களுடைய ராஜ்ஜியத்தை ஸ்தாபித்தார்கள். மிகப் பெரிய கலாசாரங்கள் ஒன்றுக்கொன்று புகுந்து தேசத்தினுடைய உருவை மாற்றியது.

இப்போது செல்வம் தேடவோ, நாடு பிடிக்கவோ, புத்தகம் படிக்கவோ பயணப்படவேண்டிய அவசியமில்லை. மாறாக, வேறு இடத்தினுடைய மக்களின் வாழ்க்கை முறை, மொழியின் வளம், உடுப்பு, உணவு, பல்வேறு ரசனைப் பரிமாற்றங்களுக்காக பயணப்படுதல் முக்கியமாக நடைபெறுகிறது. நம்முடைய லட்சியமே பயணப்படுதல்தான் என்று இருக்கிறபோது அந்தப் பயணப்படுவதற்குண்டான வசதிகளும் வெகுவிரைவாக முன்னேறி விட்டன. பயணப்படுதல் என்கிற விஷயம் இல்லையெனில் புகைவண்டித் தொடரோ, பேருந்தோ, மகிழ்வூந்தோ அல்லது ஆகாய விமானமோ கண்டுபிடிக்கப் பட்டிருக்காது. இன்று அவை கண்டுபிடிக்கப்பட்டது மட்டுமல்லாமல், 'வாருங்கள்... பயணப்படுங்கள்... போய் இருந்து அனுபவித்து அந்த வாழ்க்கை முறையைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் மனமகிழ்ச்சிக்காக குதூகலத்திற்காக, உங்களுடைய மன இறுக்கம் தளர்வதற்காக தயவுசெய்து பயணப்படுங்கள்' என்று விளம்பரப்படுத்தி தங்களையும் வளப்படுத்திக்கொள்கின்றன. இப்போது பயணம் மிக சுகமானதாகவும், மிக எளிதாகவும் மாறிவிட்டது. திட்டமிட்டு பயணம் செய்தால் இன்னும் சிறப்பாக பயணம் செய்ய முடிகிறது. பல்வேறு இடங்களில் தங்குமிடங்களும், ஊருக்குள்ளே வருகின்ற பயணிகளுக்காக பிரத்தியேக கவனிப்பும் நடைபெறுகின்றன.

அரசாங்கம் பயணப்பட உற்சாகப்படுத்தி தனியே ஒரு துறையையே வைத்திருக்கிறது. இது வருவாய் ஈட்டுவதற்காக மட்டுமல்ல... கலாசார பரிவர்த்தனைக்காகவும் இருக்கிறது. இல்லையெனில், பஞ்சாபியரை ஒரு எதிரியாகவே தமிழன் நினைத்துக்கொண்டிருப்பான். வங்காளக்காரனுக்கு ஆந்திராவும், தமிழ்நாடும் ஒரு கேலிக்குரிய பொருளாக இருக்கும். கேரளியரைப் பார்த்தால் உத்தரப்பிரதேசியருக்கு ஒன்றுமே புரியாது. இவை

அனைத்தும் உடைந்து எல்லா பிரமிப்புகளும் நீங்கி இவர்கள் எல்லோரும் நம்மைப் போன்ற மனிதர்கள்... ஆனால், வேறு கலாசாரமும் மொழியையும் உடையவர்கள். நமக்கு இருப்பது போலவே சுகமும் துக்கமும், அன்பும் பாசமும், காதலும் காமமும் உள்ள மக்கள் என்று புரிந்துகொண்டு இணைந்து, இயைந்து வாழ்வதற்கு முயற்சிக்கின்ற தன்மை ஏற்படும்.

வெவ்வேறு மொழியும், மதமும், நிறமும் உடையும் கொண்டிருப்பினும் நாம் எல்லோரும் ஒரு குடையின்கீழ் இருக்கிறோம் என்ற எண்ணத்தை தோற்றுவிக்கும்.

பயணப்படுதல் என்பதை தனியாகவா செய்வது இல்லை. ஒரு குடும்பமாக செய்ய வேண்டும். அப்போது குடும்பத்தில் ஒற்றுமை ஓங்கும். குடும்பத்தை அரவணைத்துப் போகின்ற, அனுசரித்துப் போகின்ற ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கின்ற ஒரு தன்மை ஏற்படும். குடும்பத்தோடு அல்லாது ஒரு குழுவாக நூறு பேராக, இருநூறு பேராக பல்வேறு பேருந்துகளில், ஏறி ரயில் வண்டித்தொடரில் பயணப்பட... இந்த விட்டுக் கொடுக்கின்ற, அனுசரித்துப் போகின்ற தன்மை இன்னும் அதிகமாகும்.

வாழ்க்கைக்கு இன்றியமையாத விஷயம் இந்த அனுசரித்துப் போவதும், மற்றவறை பற்றிய அக்கறை கொள்வதுமேயாகும். இது பயணப்படுவதால் அதிகரிக்கிறது.

பேருந்தில் வெகு நேரம் காலை தொங்கப் போட்டுக்கொண்டு வந்தேன். கால் கடுக்கிறது. வலி தாங்கமுடியவில்லை. யாரோ தெரியவில்லை. ஒரு இளைஞன் ஓடிவந்து தாத்தா... நான் கால் அழுத்திவிடுகிறேன் என்று சொல்லி தொடையிலிருந்து கணுக்கால் வரை நிதானமாகப் பிடித்துவிட்டு விரல் சொடுக்கெடுத்து விட்டான். அந்த சுகத்தில் தூங்கியே போய்விட்டேன். அவன் பெயர்கூட கேட்டுக்கொள்ளவில்லை. அவர் நன்றாக இருக்க வேண்டும் என்று ஆசீர்வதிக்கிறார்.

தாத்தாவுக்கு மனம் கரைந்து, குழைந்து யாரோ ஒரு பிள்ளைமீது ஆசீர்வாதம் வருகிறது. ஒரு தாத்தாவிற்கு உதவி செய்ததால் அந்தப் பிள்ளைக்கு மனம் கரைந்து குழைந்து மிகப் பெரிய சந்துஷ்டி ஏற்படுகிறது. மனதை விஸ்தரிக்க, மனதை லகுவாக்க இதைவிட ஒரு நல்ல விஷயம் என்ன இருக்க முடியும். பயணப்படுகிறபோது



ஏற்படுகின்ற தோழமை, மனிதர்களுடைய நேயத்தை அதிகம் வளர்கிறது.

இதுதான் சிவாஜியினுடைய தலைமைக் கோட்டை. இதோ இங்கிருந்து அதோ தெரிகிறதே ஒரு மலை... அந்த மலைக்கு அடிவாரத்தில் இன்னொரு கோட்டை இருக்கிறது. மலையின் மறுபக்கம் இன்னொரு கோட்டை இருக்கிறது. அத்தனை கோட்டையையும் சிவாஜி கைப்பற்றியது, சிவாஜியின் ஆளுமைக்கு உட்பட்டது என்று சொல்ல வரும்போது ஒரு தேசத்தின் சரித்திரம் தெரிகிறது.

இது ஸ்ரீரங்கம். இது எப்போது கட்டப்பட்டதென்ற கணக்கே தெரியவில்லை. ஆனாலும், இது புதுப்பிக்கப்பட்ட காலம் தெரிய வருகிறது. பல்வேறு மன்னர்களால், பல்வேறு காலகட்டங்களில் திருப்பணிகள் செய்யப்பட்டு ஏழு மதில்களை, ஏழு கோபுரங்களை உடைய அழகான ஒரு நகரத்தோடு கோயில்தான் இது என்று சொல்லும்போது புராண காலத்திற்கே நாம் போய்விடுகிறோம்.

(இது மகாபலிபுரம். ஆயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு முன்பு பல்லவர்கள் ஆட்சி செய்த இடம். கடற்கரையோரம் துறைமுகமாக இருந்த இடத்தில் பயணப்படுவதற்காக வணிகப் பெருமக்கள் காத்திருந்தார்கள். அவர்களோடு கடல் கடந்துபோய் அங்கு கோயில்கள் கட்டுவதற்கும், மாளிகைகள் கட்டுவதற்கும்)

மின் தூக்கிகள் இல்லாத காலத்தில், இரும்புக் கம்பிகள் இல்லாத காலத்தில் தாம்புக் கயிறால் மனிதனுடைய புஜ வலிமையினாலேயே இந்தப் பாறைகள் தூக்கப்பட்டிருக்கின்றன என்று தெரியவரும்போது ஆயிரம் வருடத்திற்கு முன்பு வாழ்ந்த அந்த சோழ சிற்பிகளின் கணிதத் திறன், சோழ இளைஞர்களின் உழைப்புத் திறன், அதை நிர்வாகம் செய்த அரசரின் திறன் மிகத் தெளிவாக நம் கண்முன்னே நிற்கிறது. அங்கேயுள்ள பெண்மணிகளின் படங்களைப் பார்க்கிறபோது அற்புதமான அணிகலன்களும் மிக உயர்ந்த ஆடைகளும் அவர்கள் அணிந்திருந்தார்கள் என்று தெரியவரும்போது மிகச் சிறந்த ஒரு வாழ்க்கை முறை கண்ணில் மிளிர்கிறது. அவர்கள் பற்றிய செய்திகளை கல்வெட்டாய் படிக்கிறபோது ஒரு நாகரீகம் தெளிவாகத் தெரிகிறது.

இந்த அறிவு நமக்குள் ஒரு பிரமிப்பை ஏற்படுத்தி இதேபோன்று நம்முடைய தலைமுறையைப் பற்றி அடுத்தவர் தெரிந்து கொள்கின்ற மகோன்னதமான காரியங்களை நாம் செய்ய வேண்டும் என்று அவா எழுகிறது. என்னுடைய தமிழர் பரம்பரை சாதாரணமல்ல. அது கணிதத்திலும் கற்பனையிலும் கவித் திறனிலும் கல்லில் செதுக்குவதிலும் மிகப் பெரிய ஒரு நாகரீகத்தை கொண்டது என்று என் இனத்தைப் பற்றிய ஒரு இறுமாப்பும், ஒரு பெருமையும் ஏற்படுகின்றன.

இவ்வளவு உயர்வானவர்களா தமிழர்கள், இத்தனை சிறப்பான அம்சமா தென்னிந்தியாவில் என்று வட இந்தியர்களும், மேலை தேசத்து அறிஞர்களும் வந்து பார்த்து வியந்து போகும்போது நமக்குள் பெருமை பூரிக்கிறது. இதெல்லாம் பயணப்படுவதால் வருவது.

தனியே பயணப்படுவது இன்னும் சிறப்பானது என்று சொல்லப்படுகிறது. அப்படித் தனியே பயணப்படுகிறபோது கிடைத்த இடத்தில் உண்டு, கிடைத்த இடத்தில் தூங்கி, வெறும் தேசாந்திரியாகப் போகிறபோது தான் யார், தன்னுடைய மனம் என்ன செய்கிறது, தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம், உண்மையில் தன்னுடைய ரூபம் எத்தகையது, எது உண்மையில் நான் என்ற விஷயங்கள் மிக அழகாக வெளிப்பட்டு ஒரு ஜொலிப்பான முகமும், புத்தியும் ஏற்பட்டுவிடுகின்றன. ஒரு ஞானியாக மலர்வதற்கு பயணப்படுதல் மிக முக்கியம். ஒரு குடும்பியாக இருப்பதற்கு பயணப்படுதல் மிக முக்கியம். ஒரு நல்ல மனிதனாக வாழ்வதற்கு பயணப்படுதல் மிக முக்கியம். அதனால் பயணப்படுங்கள்.

## 14

**க**ண் இருக்கிறது பார்க்கிறோம். இதில் கற்றுக்கொள்ள என்ன இருக்கிறது என்று பல பேருக்குத் தோன்றும். நிச்சயமாக பார்ப்பதற்கு கற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாய் ஒரு ஓவியத்தைப் பார்க்க கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஓவிய விமர்சகர்கள் சொல்லுகிறார்கள். குறிப்பாய் இடது பக்கத்திலிருந்து



வலது பக்கமாய்.... மேலிருந்து கீழாய்... வரிவரியாய்... அடுக்கடுக்காய் ஒரு ஓவியத்தைப் பார்க்க வேண்டும். பிறகு ஒட்டுமொத்தமாய் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஒருவர் சொல்லிக் கொடுத்திருக்கிறார். அதேசமயம் சிலைகளை பாதாதி கேசம் பார்க்க வேண்டுமென்கிறார். கால் விரலிலிருந்து ஆரம்பித்து மெல்ல மெல்ல மேலேறி கவனிக்க வேண்டும். பிறகு ஒட்டுமொத்தமாக பார்வையை தள்ளி நின்று அந்தச் சிலை என்ன சொல்கிறது, அந்த ஓவியம் என்ன சொல்கிறது என்று பார்க்க வேண்டும்.

பார்க்கக் கற்றுக்கொள்ளுதல் என்பது ஓவியத்திலும் சிலையை பார்ப்பதிலும் மட்டுமா...

இல்லை. இயற்கை காட்சிகளை காண்பதும்கூட. வேப்பமர அசைவைக்கூட, காக்கை தத்தி நடப்பதைக்கூட, முன் காலால் மூக்கை துடைத்துக்கொள்கிற நாயைக்கூட, உப்பி உப்பி குரல்வளையிலிருந்து விதம்விதமான ஓசைகளை அனுப்புகின்ற தவளைகளை பார்ப்பதுகூட ஒரு தனி சுகம். கூர்மையாக கவனித்தால் வியப்பு அதிகம் வரும். பட்டாம்பூச்சிகளை பார்த்திருக்கிறீர்களா? ஓ... என்று குரல் கொடுக்காதீர்கள். பட்டாம்பூச்சி நெடுந்தூரம் போவதைப் பார்த்திருக்கிறீர்களா? பட்டாம்பூச்சியோடு பயணப்பட்டிருக்கிறீர்களா? ஒன்றிரண்டாய் பல நூறாய்... ஆயிரமாய் பட்டாம்பூச்சிகள் ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்து அந்தப் பாதையில் பல மைல்கள், பல மணி நேரங்கள் பறந்து போகும். எங்கும் நிற்காமல்... எதற்கும் அசராமல்... பட்டாம்பூச்சிகள் எதற்குப் போகின்றன என்று தெரிய வில்லை. ஆனால், அப்படி வரிசை வரிசையாக பட்டாம்பூச்சிகள் போகும்போது அதன் பின்னே சைக்கிளிலோ... ஸ்கூட்டரிலோ போய் வாருங்கள். அந்தப் பூச்சிகளின் உலகம் நமக்குள் ஆச்சரியத்தை ஏற்படுத்தும்.

நமது சுண்டுவிரலில் பாதிகூட இல்லாத இந்த ஜென்மம், காகிதத்தைவிட மெல்லிய சிறகைக் கொண்ட இந்த ஜென்மம் இவ்வளவு தூரம் இத்தனை கரிசனமாய் எங்கு பயணப்படுகிறது என்று ஆச்சரியத்தை ஏற்படுத்தும். ஆக, உலகம் என்பது நீங்களும் நானும் மட்டுமல்ல, பட்டாம்பூச்சியையும் சேர்ந்தது.

அடித்தொண்டைக்குள் ஒரு குமிழி. காற்றுக்குமிழி. அந்த காற்றுக்குமிழியை அசைக்க கரகர என்று ஒரு சப்தம். அது ஏதோ

ஒரு மொழி. ஏதோ ஒரு சைகை. யாருக்கோ தகவல். எதுவோ ஒரு தந்தி. இடதுபக்க வீட்டிலிருந்து வலதுபக்க வீட்டை நோக்கி "என்னாங்க... சாப்பாடு ஆச்சா..." என்று கேட்கிற பெண்பிள்ளை போல இந்தத் தவளை எங்கோ சற்று தூரத்திலிருக்கிற இன்னொரு தவளைக்கு, சாப்பாடு ஆச்சா என்று கேட்டுக் கொண்டிருப்பது போல தோன்றும்.

காக்கைகள் சிறகை கோதிக்கொள்ளும் அழகு, கிளிகள் அலகை தீட்டிக் கொள்ளும் அழகு, மைனா பின்பக்கத்தை ஆட்டிக் கொண்டு நடப்பது, மரங்கொத்தி மரத்தின் தோல் உரிப்பது, கழுகின் வட்டம், மீன்குத்தி குறிபார்த்து நீரில் குதிக்கும் செயல், யானையின் அலையல், சிங்கத்தின் நிதானம்... பிடரியின் அலையல் என்று பார்த்துப் பார்த்து வியப்பதற்கு நிறைய இருக்கிறது.

பார்ப்பதற்கு ஒரு அமைதி அவசியம். சிங்கத்தைப் பார்த்ததும் ஐயோ... என்று பயப்படுவதும், தவளையைப் பார்த்து அருவருப்படைவதும் சிறுத்தையைக் கண்டு முகம் சுளிப்பதும், கிளியைப் பார்த்து பல் இளிப்பதும் நம்முடைய குணங்களை அதன்மீது ஏற்றிவைக்கிறோம். வெறுமே பார்ப்பது என்பது மிகமிக முக்கியமான விஷயம். எந்த அபிப்பிராயமும் இல்லாமல் பார்ப்பது என்பது மிக முக்கியமான விஷயம். எந்த அபிப்பிராயமும் இல்லாமல் பார்க்கும்போது அந்தந்த ஜந்துக்களின் அழகு மிகத் தெளிவாக வந்து சேரும்.

... என்று இப்பொழுதெல்லாம் சொல்கிறார்களே... அது கிளி பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பே தன்னிடம் கொண்டுவந்து விட்டது. பச்சைப்பசேல் என்ற உடம்புக்கு சிகப்பு நிற அலகு. உடம்பின் வளைவுகளை காண்பிக்கின்ற வர்ணங்களை மரங்கொத்தி வைத்திருக்கிறது. வர்ணமும் நீலநிறம். நீரும் நீலநிறம். மீன்கொத்தியும் நீலநிறம். நீலத்தை விட்டு நீளமாய் நீலத்தில் பாய்கிறது. பசு ஆடி ஆடி நடப்பதில் ஒரு பெண்மையின் நளினம் உண்டு. சிங்கத்தின் பிடரியின் அலையலில் மிகப் பெரிய கம்பீரம் உண்டு. குதிரை ராஜவிலங்கு. அழகன். சுமுகன் என்று தோன்றுகின்ற வர்க்கமுடையது. கட்டுப்பட்ட யானை குழந்தை, கட்டுப்படாத யானை பூதம். எல்லா அசைவுகளுமே வியப்புக் குரியவை. இப்படி உயிரினங்களை உற்றுப் பார்க்கிறபோது பிடித்தது, பிடிக்காதது என்று இல்லாமல், வெறுமே பார்க்கிறபோது அந்த உயிரினத்தின் குணங்கள் நம்மை மெல்லத் தொடும்.



உள்ளுக்குள் பதியும். உலகத்தில் எல்லாமே அழகுதான் என்கிற அமைதி மனதிற்குள் உண்டாகும். இந்தவொரு எண்ணத் தோடேயே, இந்தவொரு பார்வையோடேயே நாம் மனிதர் களையும் பார்க்கக் கற்றுக் கொள்ளலாம்.

பாடி லேங்வேஜ் என்று சொல்கிறார்கள். மனிதனுடைய உடல் ஒரு மொழியைப் பேசுகிறது. மனிதருடைய அசைவு ஒரு செய்தியை தெரிவிக்கிறது. அந்தச் செய்தியைப் புரிந்துகொள்ள சரியாகப் பார்த்தல் அவசியம்.

சில நண்பர்கள் இருக்கிறார்கள். அதில் இரண்டு பேர் லுங்கியை வழித்துக்கொண்டு கெக்கெக்கே... என்று சிரித்தால் அநேகமாக ஒரு கெட்ட ஜோக் பரிமாறலாகத்தான் இருக்கும். அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த இளைஞர்கள் மெல்ல அமைதியாய், நிதானமாய் மேற்கே யதேச்சையாய் பார்ப்பது போல் பார்க்கிறார்கள் என்றால் யாரோ ஒரு அழகான பெண் கடந்து போகிறாள் என்று அர்த்தம். வயதானவர் பத்திரிகையை விரித்து பக்கத்தை புரட்டாமல் வெகுநேரம் படித்துக் கொண்டிருந்தால் அநேகமாக தூக்கத்திற்கு மிக அருகே இருக்கிறார் என்று அர்த்தம். நேரே உட்கார்ந்திருந்த பெண்மணியை இன்னொரு பெண்மணி ஊடுருவிப் பார்க்கிறாள் என்றால் அவருடைய நகைகளை, செல்வத்தை, அழகை எடைபோடுகிறாள் என்று அர்த்தம். உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கின்ற பெண்மணிக்கு எதிரே இருக்கின்ற பெண்மணி மெல்லச் சிரித்தால் ஸ்நேகமாகப் போகிறார் என்று அர்த்தம். வேறுபக்கம் முகத்தை திருப்பிக்கொண்டால் 'சரிதான் போடி' என்று அர்த்தம்.

ஐஸ்வர்யாராய் இடுப்பை ஒடித்து நடந்தால் ஆஹா... என்று வியக்க முடியும். அதேவிதமாக நம் வீட்டுப்பெண் நடந்தால் 'என்னாடி ஆச்சு உனக்கு?' என்று கேட்கத் தோன்றும். ஐஸ்வர்யாராயை வாயைப் பிளந்து பார்க்கின்ற மனம், வீட்டுப் பெண்ணை சட்டென்று வேறுவிதமாக சிந்திப்பது ஏன்? அங்கே பார்வை மாறுபடுகிறது. இடம், பொருள், ஏவல் வைத்து வேறுவிதமாக பொருள் கொள்ள நேரிடுகிறது.

விளையாட்டு பொம்மையைப் பார்த்துக்கொண்டே போகிற சிறுவன், நகைக்கடையை ஏக்கமாக பார்க்கும் பெண்மணி, அழகான பெண்களை ஆணியடித்தாற்போல் நின்று பார்க்கின்ற

பையன் என்று பலரையும் பார்க்க ஒரே செய்தி வெளியாவது தெரியவரும். பேராவல் என்பதுதான் அங்கே முக்கியம். இலையுதிர் காலத்தில் இலைகள் விழுவது, வெயில் காலத்தில் நீலநிற வானம். மழைக் காலத்தில் திரண்டுவரும் மேகங்கள், முழு நிலவு, அந்திவானம், குதிரையின் ஓட்டம், கொக்கின் நடை என்று பல்வேறு விஷயங்கள் பார்ப்பதற்கு பரவசமானவை. எந்த அபிப்பிராயமுமின்றி பார்க்கும்போது பார்ப்பவற்றை மனம் முற்றிலுமாய் ஸ்வீகரித்துக் கொள்கிறது. அவர் வீட்டுப் பசு என்றோ, கொக்கை சமைச்சு சாப்பிட்டா நல்லாயிருக்குமென்றோ, அந்திவானம் பார்த்து இந்தக் கலரில் ஒரு புடவை எடுக்க வேண்டுமென்றோ, குதிரை ஓடுதலைப் பார்த்து இதுல ஏறி இடுப்புல வாளோடு உட்கார்ந்து போகணும் என்றோ நினைக்காது வெறுமே வெறுமே அதை ஸ்வீகரிக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

நிலவு பெண்ணின் முகம் என்று சொல்வார்கள். எந்தப் பெண்ணின் முகம் நிலவைப் போல் இருக்கிறது. அது அதீத கற்பனை. நிலவு எப்பொழுதும் நிலவுதான். கண்ணுக்கு குளுமை யான ஒரு பிரகாசம். அது நகர்வதை பார்த்துக்கொண்டிருக்கிற பொழுது பார்வை உள்ளுக்குள் திரும்பும். எங்கிருந்து பார்க் கிறோம் என்கிற உணர்வு ஏற்படும். கண்ணின் வழியாகப் பார்க்காமல், புத்தி வழியாகப் பார்க்காமல் உவமானம், உபமேயம் இல்லாமல் வெறுமே அடிமனதிலிருந்து பார்வை வரும். எந்தவித கல்மிஷமுமின்றி பார்வை சுத்தமாக இருக்கும். அப்போது அனுபவிப்பு மிக ஜோராக இருக்கும். அப்படி சுத்தமாக பார்க்கிறபோது எங்கிருந்து பார்க்கிறோமோ அந்த இடத்தில் மனம் குவியும்.

எந்த இடத்திலிருந்து பார்வை வருகிறது. எந்த இடத்திலிருந்து பேச்சு வருகிறது, எந்த இடத்திலிருந்து மூச்சு வருகிறது, எந்த இடத்திலிருந்து நான் என்கிற எண்ணம் வருகிறது என்று உற்றுப் பார்த்தால் பார்வை துவங்குகின்ற இடம், பேச்சு துவங்குகின்ற இடம். மூச்சு கிளம்புகின்ற இடம், நான் என்ற அகங்காரம் எல்லாம் ஒன்றே என்று தெரியும். நான் என்ற இடத்தை உற்றுக் கவனிக்க வெறுமே பார்ப்பது என்பது நல்லது. அதுவொரு பயிற்சி.

புத்தமத துறவிகளுக்குப் பார்ப்பதற்கு சொல்லித் தருவார்கள். நதிக்கரையில் அமர்ந்து ஒரு மலையைக் கவனிக்கச் சொல்வார்கள். பனிபடர்ந்த அந்த மலையின் உச்சியும் பெரிய அகலமும்



இடையறாது பல வருடங்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள். தினமும் காலை எட்டு மணியிலிருந்து பதினோரு மணிவரை மலையைப் பார்ப்பதே ஒரு செய்கையாக, ஒரு பயிற்சியாக, ஒரு தவமாக மேற்கொள்ளப்படும். அப்படி மலையைப் பார்க்கிற போது அந்த மலை உள்ளுக்குள் எங்கு பார்வை துவங்குகிறதோ அந்த இடத்தைத் தொடும். அதுதான் நான். அதுதான் ஆத்மா. அதுதான் உயிர். அதுதான் ஜீவன்.

புத்தமத துறவிகளை மலையைப் பார்க்கச் சொல்வது போல, இந்து மதத்தில் தீபத்தை பார்க்கும்படி சொல்வார்கள். அல்லது கடவுளர் உருவத்தை பார்க்கும்படி சொல்வார்கள். கடவுளர் உருவத்தில் ஒன்றுமில்லை. அது கற்சிலைதான். தீபம் எண்ணெயும் திரியும் கொண்ட விஷயம்தான். ஆனால், அந்த வெளிச்சம் உள்ளுக்குள் புகுந்து எங்கு பார்வை துவங்குகிறதோ, எந்த இடத்தில் பார்வை ஆரம்பிக்கிறதோ அந்த இடத்தை தரிசிக்க ஆரம்பித்துவிடும். கற்சிலையைப் பார்க்கிறபோது, கற்சிலையை நேசித்துப் பார்க்கிறபோது, திரும்பத் திரும்ப கவனிக்கிறபோது நமக்குள் நாம், நம்மை நம்மைப் பார்க்கத் துவங்குகின்றோம். இதுவே பார்க்கக் கற்றுக்கொள்ளுதல்.

பார்க்கக் கற்றுக்கொள்ளுதலுக்கு என்ன வேண்டும்?

மௌனம் வேண்டும். தனிமை வேண்டும். எவரோடாவது போய் கடற்கரை ஓரத்தில் நின்றால் கடற்கரையைப் பார்க்க முடியாது. கடற்கரைக்கு வந்திருப்பவர்களையும் பார்க்க முடியாது. கடற்கரையில் வருகின்ற பொருட்களையும் பார்க்க முடியாது. தன்னையும் பார்க்க முடியாது. காலடி மணலையும் பார்க்க முடியாது. அங்கங்கே முட்டி முட்டி மோதி அயற்சியாகி 'வீட்டுக்கு போனவுடனே தூங்கணும்' என்கிற எண்ணத்தோடு திரும்புவோம்.

பார்வையிலுள்ள கோளாறு தூக்கத்தைதான் கொடுக்கும். முட்டி முட்டி நின்ற பார்வை மயக்கத்தைதான் ஏற்படுத்தும். ஒரேயொரு மலையை, தீபத்தை, கடலை, நிலவை பார்க்கிறபோது அது உள்ளுக்குள் எங்கு பார்வை வருகிறதோ அந்த இடத்திற்கு அழைத்துப்போகும். பார்வை உள்ள இடத்திற்கு தொடுகிறபோது, நான் என்பதை அறியும்போது மிகப் பெரிய விழிப்புணர்ச்சி ஏற்படும். இது சொல்லில் வராதது. எழுதி மாளாதது. விளக்க முடியாதது. எனவே, தனிமையில் மௌனமாய் பார்க்கக்

கற்றுக்கொள்ளுங்கள். கும்பலோடு இருப்பதை தவிர்த்தால்தான் பார்ப்பது என்பது எளிதாக முடியும். கும்பலோடு இருக்கிறபோது உங்கள் பார்வை எதுவின் மீதும் படாது. சும்மா நானும் பீச்சுக்குப் போய்வந்தேன் என்கிற பெருமைதான் நிற்கும். என்ன பார்த்தாய் என்றால் சொல்லக்கூடத் தெரியாது. கடல் சொன்ன செய்தி தெரியாது. நிலா சொன்ன அன்பு தெரியாது.

இதெல்லாம் வராதுங்க என்று சொல்வீர்கள் என்றால், உங்களுக்கு வலிமை இல்லை என்று அர்த்தம். பார்க்கக் கற்றுக்கொள்ளுங்க. அட, மண்ணில் தெரியுது வானம்! அது நம் வசப்படலாகாதோ! சரியாகப் பார்த்தால் மனம் வசப்படும். மனம் வசப்பட பார்க்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

## 15

நடனம்தான் மனிதனின் முதல் நாகரீகம் என்பது என் அபிப்பிராயம். கடுமையாக வெயில் அடித்து ஒரு மிடறு தண்ணீருக்கு ஏங்கி, எங்கும் காணாமல் தவித்து, சட்டென்று மேகங்கள் திரள குளிர்காற்று அடிக்க மழை பலமாய் பெய்தபோது ஆதிமனிதன் நடனம்தான் ஆடியிருப்பான். அந்த மழையில் கை கால்கள் வீசி குதியல் போட்டிருப்பான். மழை வேண்டும் என்கிற பாட்டு கவிதை பிரார்த்தனை பின்னால்தான் வந்தது. நடனம்தான் முதல். இடையறாது மழைபெய்து எங்கும் வெள்ளக்காடாக மாறி எந்த இடத்திற்கும் நகரமுடியாத ஒரு சூழ்நிலை வந்தபோது மெல்ல வானம் வெளிறத்துவங்கி மழை நின்று சூரியன் உதித்து, பட்சிகள் கூக்குரலிட்டு பறக்கையில் அந்த மனிதனும் பறவைகளைப்போல தானும் கைகள் விரித்து 'கூகூ...' என்று கூவி மழைநீரில் நடனமாக ஆட்டம் போட்டிருப்பான்.

அன்று மனிதன் ஆரம்பித்த நடனம் இன்றுவரை ஓயவேயில்லை. நாகரீகம் வளர வளர ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு விதமாக நடனம் வளர்ந்தது.

இந்தியாவில் பரதநாட்டியம், குச்சுப்புடி. ஸ்பெயினில் ஃப்ளமிங்கோ என்ற நடனமாகவும், ஐரோப்பாவில் பெண்களின் இடுப்பைக் கோத்து, கைகளை கோத்துக் கொண்டு சுழன்றாடும் நடனமாகவும், ரஷ்யாவில் எகிறி எகிறி தனித்து குதித்து ஆடுகிற நடனமாகவும், பர்மாவில், சைனாவில், இன்னும் கிழக்கு ஆசிய நாடுகளில் இடுப்பு ஒடித்து நிதானமாக மணிகளின் மெல்லிய ஓசை முழங்க ஆடும் நடனமாகவும் இருந்தது. ஆதிமனிதன் ஆடுகின்ற நடனத்தை இன்றும் ஆப்பிரிக்க மக்கள் கைவிடாது ஆடி வருகிறார்கள். நடனம் என்பதற்கு மிகுந்த சந்தோஷம் என்று பெயர் சொல்லலாம்.



துக்கத்தின் வெளிப்பாடாக நடனம் வந்திருக்குமா என்பது சந்தேகமே. மகிழ்ச்சியின் விளைவாக, மிகப் பெரிய ஆனந்தத்தின் விளைவாக நடனம் வெளிவந்திருக்கிறது. ஆனாலும், பரத கண்டத்தில் துக்கத்தின்போதும் நடனத்தை விடவில்லை. இறந்தவர் வீட்டிலும் ஒப்பாரி என்கிற இசையைக் கொண்டுவந்த நாகரீகமல்லவா. அதே நாகரீகம் சவ ஊர்வலம் போகும்போது நடனமாக மாறுகிறது... நாதத்திற்கேற்ப தன்னுடைய துக்கம் மறந்து எல்லோரும் ஒரு நாள் இப்படித்தான், இதுதான் உண்மை என்று சொல்லும் விதமாக அப்படி இறப்பதற்கு முன்பு இதோ நான் ஆடி முடித்து விடுகிறேன் என்கிற விதமாக நூற்றுக்கணக்கானோர். நடனமாடி போவதுண்டு. அது துக்கம் கலந்த மகிழ்ச்சியின் வெளிப்பாடு. அழுகை முடிந்து விட்டது. இனி அடுத்தபடி என்ன... தொடர்ந்து ஆட்டம்தான் என்று சொல்லாமல் இந்த நடனம் சொல்கிறது. இதன் காரணமாகவும் நடனம் என்பது பொதுமக்களின் சொத்தாக இல்லாமல் ஒரு தனிப்பட்ட வகுப்பினரின் வேலையாகவே பரத கண்டத்தில் இருந்து வந்திருக்கிறது. இந்த நடனங்கள் கோயிலிலும் நடைபெற்று வந்திருக்கின்றன. அந்த வகை நடனங்கள் இறை வழிபாட்டை சொல்லுகிற விதமாய், இறைவனை புகழ்கிற விதமாய் உள்ள பாடல்களுக்கு அபிநயம் பிடிப்பதாக அமைந்திருந்தன. அம்மாதிரி ஆடுகின்ற பெண்களுக்கு தேவரடியார்கள். அதாவது, தேவர்களின் அடியார்கள் என்று பெயர் சூட்டப்பட்டு அவர்களுக்கு கடவுள் பணியாக நடனம் கொடுக்கப்பட்டது. சமூகம் அவர்களை நித்திய சுமங்கலிகள் என்றும் அழைத்தது.

அந்த தேவரடியார்கள் மிக நெறியோடு வாழ்ந்து தலைசிறந்த விதமாக இறைபணியைச் செய்து கோயில்களை நிர்வகித்து மக்களின் மனதில் இறைவழிபாட்டைத் தூண்டி ஆசுவாசப் படுத்தினார்கள். பிற்பாடு அந்நியரின் வருகையால் அந்த முறை

கெட்டுப்போயிற்று. அந்த இனம் வேறுவிதமாக திருப்பப்பட்டது. ஆனால், பொதுமக்களிடையே தோய்ந்து போயிருந்த இந்த வழக்கம் இப்போது மறுபடியும் தலைதூக்க ஆரம்பித்திருக்கிறது. ஊடகங்களின் உதவியால், வெள்ளித் திரையின் தூண்டுதலால் இளைஞர்களும், யுவதிகளும் இப்பொழுதெல்லாம் நடனமாடத் துவங்கியிருக்கிறார்கள். ஹோட்டல்களில் அதற்கென்று பெரிய கூட்டம் இருக்க... ஆண்களும், பெண்களுமாய் நடனம் ஆடுகின்ற கலாசாரம் அதிகரித்து வருகிறது. இது சரியென்றும் தவறென்றும் வாக்குவாதம் எழுந்திருப்பினும் நடனம் ஆடுவது என்பது மிக சந்தோஷமான விஷயம் என்பதில் ஐயமில்லை.

எனக்குத் தெரிந்த ஒரு நண்பர், பெரிய உத்தியோகத்தில் இருப்பவர். மத்திம வயதைக் கடந்து முதுமையை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பவர். மிகக் கம்பீரமான வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவர். தெருவிலே பறையொலி கேட்டால் வீட்டில் எழுந்து நடனம் ஆட ஆரம்பித்து விடுவார். அந்த தாளக்கட்டை உள்வாங்கிக் கொண்டால் வெறுமே உட்கார்ந்திருக்க முடியாது. குறைந்தபட்சம் மெல்லியதாக கையையோ, காலையோ அசைத்து, இந்தத் தாலக்கட்டோடு மனம் ஒத்துப்போகும்படிதான் ஆகும்.

''நாகரீகம் கருதி வெறுமே கை காலை அசைக்காமல் நான் எழுந்து என் மனம் போனபடி ஆடுகிறேன். இது சந்தோஷமாக இருக்கிறது. என்னுள் எந்தப் பிரச்னை இருந்தாலும் இப்படி ஆடுவது உடனடியாக மனப் பளுவை குறைக்கிறது'' என்று அவர் சொல்வதுண்டு. ஆனாலும், வெட்கத்தின் காரணமாக, வீட்டு சூழ்நிலை காரணமாக அவர் வெளியே ஆடுவதில்லை. ஆனால், அவர் சொன்னதுபோல இந்த நடனம் சட்டென்று ஒரு மனதின் அழுத்தத்தை நீக்கி குதூகலமடைய வைக்கிறது. பிரச்னை எதுவாயினும் ஒதுக்கி வைத்துவிட்டு அந்த லயத்தோடு மனம் ஒன்றிப்போய் கை, கால்களை வேகமாக அசைக்க, அது மிகப் பெரிய சந்தோஷத்தை தருகிறது.

நடனம் உடற்பயிற்சி மட்டுமல்ல, ஒரு உளப்பயிற்சியும்கூட. நரம்புகளும் தசைகளும் வலுப்பெறுவது மட்டுமல்ல, மனம் நடனத்தில் மிகவும் லேசாகிறது. பரதநாட்டியம் ஆடும் கலைஞர்களில் ஆண்களை நான் உற்று கவனித்திருக்கிறேன். அவர்களோடு பேசியிருக்கிறேன்.



''பெண்ணோடு இணைந்து சிவன் பார்வதியாக, கிருஷ்ண ராதையாக ஆடுகிறபோது எனக்குச் சூழ்நிலையே மறந்து போகிறது. நான் சிவனாக, கிருஷ்ணராக மாறிவிடுகிறேன். அதேபோல என்னோடு ஆடுகிற பெண்ணும் எல்லாம் மறந்துவிட்டு ராதையாக பார்வதியாக மாறிவிடுகிறாள். தன்னிலை மறப்பது என்பது கவிதையில் வருமா, பாட்டில் வருமா? எனக்குத் தெரியவில்லை. வெகுநிச்சயம் நடனத்தில் வரும். மனம், கூட ஆடுகிறவரோடு மிக இணக்கமாக இருக்கும். அவர் அசைவு களோடு ஒட்டி என் அசைவுகள் இருப்பது மனதிற்கு மிகப் பெரிய சந்துஷ்டியைத் தரும். ஆனால், மற்றவரை அனுசரித்துப்போவது என்கிற பழக்கம் எனக்கு இயல்பாகவே அதிகமாகிக் கொண்டிருக்கிறது!

''தனியாக ஆடும்போது எப்படியிருக்கும்?'' என்று கேள்வி வந்தபோது, அவர் அதற்கும் உற்சாகமாக பதில் தந்தார்.

''தனியாக ஆடும்போது நான் ஆண்டாளாக, ராதையாக மாறிவிடுகிறேன். அதேபோல கபீர்தாசராகவோ, பெரியாழ் வாராகவோ மாறுகிறேன். உடம்பு நடுங்கி மெல்ல நடக்கிறேன். வைகுந்தப் பதவியை இப்படித்தான் நிதானமாக நடந்து அடைந்திருப்பார்கள் என்று மனமொன்றி செய்கிறேன். மனம் எப்போதும் நடனம் ஆடிக்கொண்டிருக்கிறது. அதனால் எந்தப் பிரச்னையும் எனக்குப் பெரிதாக தெரிவதில்லை. எல்லாப் பிரச்னைகளும் தீரக்கூடியது என்பதுதான் என் அபிப்பிராயம்'' என்று குதூகலமாகப் பேசினார்.

நடனம் ஒரு மொழி. உயர்ந்த மொழி. உடம்பையும் மனதையும் ஒருசேர உற்சாகமூட்டும் வழி. இறைவழிபாட்டில் இன்னொரு கட்டம். மனிதநேயத்தின் இன்னொரு பக்கம்.

நடனம் தவறு. நடனம் ஆடுவது தவறு என்று சொல்கிறவர்களுக்கு மனித குலத்தின் மீது அக்கறையில்லை. மனவளர்ச்சியின் மீது நம்பிக்கையில்லை. எனவே, நம்பிக்கை இருக்கிறவர்கள் அத்தனை பேரும் நடனம் ஆடவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். என்னால் நடனமாட முடியாது என்று சொல்கிறீர்களா... இல்லை. அட, மண்ணில் தெரியுது வானம். அது நம் வசப்படலாகாதோ! விரும்பினால், முழுமையாக நேசித்தால் எந்த விஷயத்தையும் நன்றாக தெளிவாக உடனடியாக செய்ய முடியும். அதனால் ஆரோக்கியம் பெற முடியும்.

## 16

மனிதனின் நாகரீகம் மொழி. மொழியின் நாகரீகம் கவிதை. கவிதைக்கு வைத்த கிரீடம். கவிதையை இசையோடு பாடுகிறபோது மனதில் மிக வேகமாக ஒட்டுகிறது. மனதின் உணர்ச்சிகளை பீறிடச் செய்கிற விதம்தான் இசையின் வெளிப்பாடு. சந்தோஷமோ, துக்கமோ விரக்தியோ, அமைதியோ இசை அதை நன்கு வெளிப்படுத்தும். இசை ஒரு தனிமொழி. உலகப் பொதுமொழி. மொழி என்கிறபோதும் அது மனிதர்கள் மட்டுமே கற்றுக்கொள்ளும் இசை அரங்கமில்லை. குயிலின் கூவலும், கன்றின் குரலும், இலைகளின் சலசலப்பும், அருவியின் தாளமும் இசையாக வெளிப்படுகின்றன.

இசைக்கு பறவைகள் மயங்குகின்றன. மிக வலிமையுடைய யானை அமைதியாகிறது. தம்பூரின் அதிர்வில் பிரபஞ்சம் விழிக்கிறது. பூமியிலுள்ள தாவரங்கள் வளர்ந்து நிமிர்ந்து வளர்கின்றன. இசை மனிதன் உருவாக்கியதல்ல. பூமி தோன்றிய காலத்திலிருந்தே இருப்பது. மொழி மனிதனுடைய கண்டுபிடிப்பு. இசை கடவுளின் படைப்பு.

எதற்காக இசையை கற்க வேண்டும்? எதற்காக இசையை ஒரு மனிதர் தன்னிலிருந்து வெளிப்படுத்த வேண்டும்?

அசையாமல் இந்த பூமியில் ஒரு உயிரினமும் இல்லை. அந்த அசைவுகள் சீரான லயத்தில் இருக்கின்றன. சுவாசிப்பது, நடப்பது, ஓடுவது, பேசுவது எல்லாம் ஒரு தாளக்கட்டில் இருக்கின்றன. அந்தத் தாளக்கட்டு, அந்த லயம், அந்த சீர்மை இன்னும் அழகாக இருப்பது அதிசயம். எனவேதான் எல்லா உயிரினங்களுக்கும் அந்த சீர்மை, அந்த லயம் பிடித்திருக்கிறது.

யார் பாட வேண்டும்?

யார் வேண்டுமானாலும் பாடலாம். யாருக்கெல்லாம் பேசத் தெரிகிறதோ பேசத் தெரிந்தவரெல்லாம் பாடலாம். நன்றாகப் பாடுவதென்பது தனி விஷயம். ஒருவர் நன்றாகத்தான் பாடியாக வேண்டுமென்ற அவசியமும் இல்லை. மேடையேறி கச்சேரி செய்வதற்கு நன்றாகப் பாட வேண்டும். ஆனால், தன்னிலிருக்கின்ற உணர்வுகளை வெளிப்படுத்த எந்த சபையும் ஏறவேண்டியதில்லை. இறுக்கமாக இருக்கவேண்டியதுமில்லை. அப்போது, தன்னை வெளிப்படுத்த ஒரு மனிதர் பாடலாம். பாடும்போது உள்ளுக்குள் இருக்கும் உணர்ச்சிகள் வெளியே வந்து விழுகின்றன. மனம் லேசாகிறது. பாத்திரத்திலிருந்த நீர் வெளியேறி பாத்திரம் காலியாவதுபோல, லேசாவதுபோல, கனம் குறைவதுபோல மனதில் அலைமோதிக் கொண்டிருந்த உணர்வுகள் இசையாக வெளிப்பட்டு மனம் காணாமல் போகிறது. மிகப் பெரிய அமைதி ஏற்படுகிறது. ஏதோ ஒருவிதமான நிம்மதி சூழ்கிறது. இதனாலேயே மனிதருக்கு பாடும் ஆசை வந்திருக்கிறது. அப்படி பாடும் ஆசை இருக்கின்ற மனிதர்கள் எல்லோரும் நன்கு பாட வேண்டும் என்கிற எண்ணத்தைக் கொண்டால் நிறைய பாடல்கள் கேட்க வேண்டும். பாட முயற்சிக்க வேண்டும். சபையில் பாட வெட்கமாக இருந்தால், தனியே பாட வேண்டும். நான்கு பேருக்கு நடுவே பாட வேண்டும். நண்பர்களிடையே மட்டும் பாட வேண்டும்.



பெரிய கச்சேரிகள் செய்யாமல், ஒலிபெருக்கியின் முன்பு நின்று சுருதி சேர்த்து இசைக் கருவிகளுக்கு நடுவே பாடாமல் ஒரு ஆறேழு நண்பர்களுக்கு நடுவே பயணப்படுகிறபோது கொஞ்சம் பாடத் தெரிந்தவர் ஒரு சினிமாப் பாட்டோ, தேவார திருவாசகங்களோ, கடவுள் துதியோ பாடினால் அந்தப் பயணம் மிக இனிப்பாக மாறுகிறது. பாடியவருக்கு மிகப் பெரிய மரியாதை கிடைக்கிறது. "நல்லா பாடறீங்களே. இன்னும் பாடுங்கள்" என்று பாராட்டுகள் கிடைக்கின்றன. அந்தப் பாராட்டுகளின் விளைவாக மேலும் நாலைந்து பாடல்கள் பாடுகிறபோது அந்த நண்பர்களுக்கிடையே நட்பு இறுகுகிறது.

சுமாராகப் பாடியவர் பாராட்டப்பட்டதும் நன்கு பாடுபவர் தான் பாட ஆரம்பிக்கிறார். அந்த ஏமாந்தப் பயணமும், அந்த ஆறேழு நண்பர்களின் தலையசைப்பில் கரம் தட்டலில், மனம் லயித்துக் கிடப்பதில் குதூகலமடைகிறது. நிம்மதி பெருகுகிறது.

கவிதை சொல்லல் என்பது ஒரு அழகு. மகாகவி பாரதியாரின் மழைப்பாட்டு என்றொன்று உண்டு. அது சொல்வதற்கும் சுகமாக இருக்கும். பாடினால் இன்னும் அற்புதமாக இருக்கும்.

'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம். ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்' என்று பேசுவதுபோல சொல்லும்போதும் அதில் நல்ல லயம் இருக்கிறது. இதையே இழுத்து குழந்தைகளோடு குழந்தையாய் பாடுகிறபோது... ராகம், தாளம், பல்லவி இல்லாமல் வெறுமே இழுத்துப்பாடுகிறபோது இன்னும் சுகமாக இருக்கிறது. அந்த வரிகள் துல்லியமாக மனதில் பதிகின்றன.

'மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்' என்ற வரிகள் மரணபரியந்தமும் மறக்க முடியாமல் போகின்றன. சொற்களில் லயம் மட்டுமல்ல, சொற்களுக்கு அப்பால் அதைச் சூழ்ந்திருக்கிற இசையின் நயமும் நம்மை அதோடு ஒன்றவைத்து விடுகிறது. நல்ல சந்தங்களுடைய திருப்புகழ் சொல்கிறபோது சுவையாக இருக்கும். பாடுகிறபோது பரவசமூட்டும்.

சொற்கள் நிறைந்த, சந்தங்கள் மிகுந்த பாடல் தெரியவில்லை. மறந்து போயிற்று.

அதனாலென்ன, வெறுமே ஹூங்காரமாய் ஓங்காரமாய் அதை இழுத்துப் பாடினால் போதும். அதுவே சுகமாக இருக்கும். கொஞ்சம் உற்று வாழ்க்கையை கவனித்தீர்கள் என்றால் இப்பொழுதெல்லாம் கடைகளில் சினிமா பாடல்களைப் பாடுவதில்லை. வயலினிலோ, புல்லாங்குழலிலோ அல்லது கீபோர்டிலோ வாசிக்கிறார்கள். வாசிக்கும்படியான விஷயத்தை ஒலிபரப்புகிறார்கள். வேலையை அது கெடுப்பதில்லை. அதே நேரத்தில் காதுக்கு இனிமையான சப்தம் உள்ளுக்குள் புகுந்து மனதை, சூழ்நிலையை லேசாக்குகிறது.

'நீ இல்லாமல் தெய்வமில்லை... எனது நெஞ்சே நீ வாழும் எல்லை' என்று தெரிந்த ஒரு பாட்டு வயலினில் வாசிக்கிறபோது இன்னும் நெருக்கமாக வந்து உட்கார்ந்து கொள்கிறது.

தமிழே தெரியாத ஒரு தெலுங்குப் பெண்மணி இதை உற்றுக் கவனித்துவிட்டு, "நல்லாயிருக்கே. இந்தப் பாட்டு என்ன சொல்லுது?" என்று கேட்டார். பாடல் வரிகளை தமிழில் சொல்லி தெலுங்கில் விளக்கிய பொழுது இன்னும் பரவசமானார். பிறகு அந்த ராகத்தையே மனசுக்குள் ஹம்மிங் செய்து கொண்டிருந்தார். மொழி தெரியவில்லை... அர்த்தம் புரியவில்லை. பாட்டு நெஞ்சோடு ஒட்டிக்கொண்டு விட்டது.



பாட்டால் தீபம் எரிந்தது, நீர் பொங்கியது என்றெல்லாம் கதைகள் உண்டு. தான்சேன் ராக ஆலாபனை செய்து இந்த அற்புதங்களை நிகழ்த்தினார் என்று சொல்லப்பட்டதுண்டு. இசையை வெளிப்படுத்த இசைக்கருவிகளுக்கும் மிகப் பெரிய பங்கு உண்டு. இருபது பறைகள் வரிசையாக நின்று விதம்விதமான லயத்தில் முழங்குகின்றபோது நரம்புகள் முறுக்கேறி நடனமாடத் தவிக்கின்றன. கேட்பவர்கள் அந்த லயத்தைக் கேட்டு ஆடாமல் இருக்க முடியவில்லை. கொஞ்சம் இளகிய மனமாக இருப்பவர் எழுந்து ஆடவே ஆரம்பித்து விடுகிறார். அதுதான் இசையின் பெருமை. இசை தரும் மயக்கம்.

வெறும் இசையாக இல்லாது, ராக ஆலாபனையாக இல்லாது, நல்ல ஒரு விஷயம் சரியான பொருள் தரும் சொல் அடுக்கு இசையாக இருக்கிறபோது அது ஊடுருவிப் பாய்கிறது. அதனுடைய உள்அர்த்தம் மனதிற்குள் கனன்று கொதித்து மிக ஆழமாகப் பதிந்து உண்மையான நிலை என்ன என்பதை கண்டுபிடிக்க இந்த இசை உதவி செய்கிறது. 'உள்ளுயிரின் உள்ளே உறைந்த பரஞ்ஜோதி வரின் கள்ளமனம் துள்ளாது... கண்ணே ரகுமானே...' என்கிற குணங்குடி மஸ்தானின் பாடல்களைப் பாடும்போது இந்த வரிகளின் அர்த்தம் மிக ஆழமாக ஊடுருவி மனதை ஸ்தம்பிக்க வைக்கிறது.

இசை நின்றுபோய் அர்த்தம் பெரிதாகி, மனம் மௌனத்தில் கரைந்து போகிறது.

*சீரான இசை எங்கு அழைத்துப்போகும்?*

*ஆழ்ந்த மௌனத்திற்கு அழைத்துப்போகும்.*

*நல்ல பாடலினுடைய விளைவு என்ன?*

கோபமில்லாத நிலை. அமைதியுடன் முகம். எந்தத் தேவையுமில்லாத ஒரு நிச்சலனம் நிச்சயம் ஏற்படும். அதனால்தான் இந்த அமைதியில்தான் நம்முடைய இயல்பான இந்த சந்தோஷத்தை இசை தருவதால்தான் இசை மிகப் பெரிய விஷயமாக உலகமே அதற்கு அடிமையாகும்படியான ஒரு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. உலகத்தின் எல்லா பகுதிகளிலும், எல்லாவித மக்களுக்கும், எல்லா இடங்களுக்கும் இசைதான் முக்கியமான கருத்துப் பரிமாற்றமாக, கலாசார முகமாக இருக்கிறது. எல்லா

ஊர்களிலும் இசைக்கலைஞர்கள்தான் கொண்டாடப்படு கிறார்கள். பிரபலமாக இருக்கிறார்கள்.

கவிஞர்களைவிட, சிற்பிகளைவிட, ஏன் விளையாட்டு வீரர்களைவிட இசைக்கலைஞர்களுக்கு மிகப் பெரிய மரியாதை இருக்கிறது. நல்ல இசை என்பது சுத்தமான இலக்கணங்களை கொண்டது. இந்த இலக்கணங்களைப் புரிந்துகொண்டு இசையின் அடிப்படையான ஸ்வரம், லயம், ராகம், பாவம் போன்றவைகளை கற்றுக்கொண்டுவிட்டால் அது தனி சுகம். அது உங்கள் தோளில் அமர்ந்திருக்கின்ற கிளிப்பிள்ளை. நண்பர்களோடு இருந்தாலும், சரி, தனியாக இருந்தாலும் அந்தக் கிளியோடு நீங்கள் கொஞ்சிக் கொண்டிருக்கலாம். நீங்கள் சிறப்பான பாடகராக இருக்க வேண்டிய அவசியமே இல்லை. சிறப்பாக பாடுவது என்பது இறையருள். குரல்வளம் என்பது பூர்வ ஜென்மத்து பலன். கலை ஞானம் என்பது சொல்லிக்கொடுத்ததற்கு அப்பால் உடம்பில் ஊறிக்கொண்டிருக்கிற, ததும்பிக்கொண்டிருக்கிற ஒரு சுகம். இதெல்லாம் சிறிதளவு இருந்து அடிக்கடி கேட்கின்ற சினிமாப் பாடல்களை முணுமுணுத்துக் கொண்டிருந்தால்கூட வாழ்வின் வெம்மைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும்.

'கண்ணும் கண்ணும் பேசியது உன்னாலன்றோ
இன்பக் காதல் இசை பாடியது நீயேயன்றோ...'

என்று யாருமே எதிரே இல்லாமல், யாரோ எதிரே இருப்பது போல பாடிக்கொண்டிருக்கலாம்.

காதல் என்பது காற்றினில் தவழ்ந்து வருகின்ற மல்லிகை மணமாய் உங்களைச் சுற்று வந்து கொண்டிருக்கும். மனிதன் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொள்ள தூக்கம் ஒரு நல்ல விஷயம். அதைவிட நல்ல விஷயம் இசை. தானே தனிமையில் அமர்ந்து பாடுவது. அப்படிப் பாடுவது என்பது தூக்கத்தைக் காட்டிலும் சந்துஷ்டியான விஷயம்.

எனக்குப் பாட வராது, நான் பாடுவதேயில்லை என்று சொல்லாதீர்கள். பாட முயற்சி செய்யுங்கள். முயற்சி செய்தால் அடைய முடியாதது எதுவுமில்லை. அட... மண்ணில் தெரியுது வானம். அது நம் வசப்படலாகாதோ. வசப்படும்.



## 17

கடவுள் பக்தி என்பது மனித வாழ்க்கையில் மிக முக்கியமான விஷயம். பக்தி என்பதற்கு அர்த்தம். பணிவு. பணிவு என்பதினுடைய அடிவேர் பயம். பயம் என்பதன் அஸ்திவாரம் வியப்பு. எதைக் கண்டு வியப்பு.

இந்தப் பிரபஞ்சம் எவ்வளவு பெரியது. எத்தனை ஒழுங்காக இங்கு செயல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஒன்றின் மீது ஒன்று மோதாது இத்தனை கிரகங்கள் எப்படி விண்ணில் வலம் வருகின்றன. இது என்ன கணக்கு, இதை யார் படைத்தது, இந்த பூமியில் நான் பிறந்து வளர்ந்து குழந்தைகள் பெற்று அவைகளும் வளர்ந்து என்ற எண்ணம் ஏற்படுகிறபோது ஏற்படுகின்ற வியப்புதான் இந்த உலகத்தைப் பற்றி, இந்தப் பிரபஞ்சத்தைப்பற்றி எதுவுமே தெரியவில்லையே என்கிற பயத்தைக் கொடுக்கிறது. அந்த பயம் இதையெல்லாம் யாரோ ஒருவர் மிகச் சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிறார் என்ற எண்ணம் வர, அந்த யாரோ ஒருவர்மீது பணிவு வருகிறது. அந்தப் பணிவுக்குப் பெயர்தான் பக்தி.

பக்தி என்பது ஏதோ கொடுக்கல் வாங்கல் அல்ல. தினமும் கைகூப்பி வேண்டிக் கொண்டால் பணம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டும். உடம்பின் வலுவு முறுக்கேறும். எல்லா திசைகளும் நமக்கு வசப்படும் என்கிற எண்ணம்தான் பக்தி என்று கொள்வது அறியாமை. தன்னைப் பற்றிய வியப்பும், தன் உடம்பிலுள்ள செயல்கள் குறித்த வியப்பும் ஏற்படுமானால் அதுவே வியப்பிற்குப் போதுமானது.

இருதயத்தை எத்தனை கவனமாக வைத்திருக்கிறார்கள். நுரையீரல் எத்தனை பாதுகாப்பாக ஒரு கூண்டுக்குள் இருக்கிறது. ஆனால், இந்த குழல் இவ்வளவு நீளமாக இருக்கிறதே, இதில் செரிமானம் எப்படி ஆகிறது? இந்தவிதமான அமிலங்களெல்லாம் இந்த உணவில் கலக்கின்றனவாமே... இவற்றையெல்லாம் யார் உற்பத்தி செய்தது? எப்படி உற்பத்தி ஆகிறது என்று வியப்பு வர எலும்புகளுடைய திண்மை, தசையினுடைய முறுக்கு.

நரம்புகளுடைய நீளம் ரத்த ஓட்டத்தின் வேகம் என்றெல்லாம் ஒவ்வொன்றாகப் பார்த்தால், மூளையின் மடிப்புகளை கவனத்தில் கொண்டால், ஞாபகசக்தியைப் பற்றி எண்ணினால் ஏற்படுகின்ற வியப்பு சொல்லி மாளாது. இந்த வியப்பு இப்படிப்பட்ட ஒரு உடலை உருவாக்கிய அந்த மனிதர் யார், அவருக்கு என்ன பெயர் என்ற கேள்விகள்தான் வேண்டியிருக்கும்.

கடவுள் உருவமில்லாதவர் என்று சில மதங்கள் சொல்கின்றன. அது உண்மைதான். ஆனால், கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார். என்கிற எண்ணம் வரின், அப்படிப்பட்ட ஒரு கொள்கை உண்டெனில், அப்போது ஒரு கேள்வி வருகிறது. கடவுள் எல்லா இடத்திலும் உண்டு என்ற எண்ணத்தை எந்த மதத்தினரும் மறுக்கவில்லை. அப்படியானால் கடவுள் உருவமில்லாதவராகவும் இருக்கலாம்... உருவமுள்ளவராகவும் இருக்கலாம். அவர் படத்திலும் இருக்கலாம்... வெறும் குறியீடுகளிலும் இருக்கலாம். அல்லது மனிதரைப்போல செய்த பொம்மையில் இருக்கலாம். இன்ன வடிவம்தான் கடவுள் என்று சொல்ல முடியாவிட்டால் இந்த வடிவம் கடவுள் என்பதை ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும்.

கடவுள் இப்படியும் இருப்பார், அப்படியும் இருப்பார், எப்படியும் இருப்பார் என்கிற எண்ணத்தினுடைய விளைவுதான் கடவுளை உருவமாகக் கொண்டது. தன்னை வணங்குதலின் பொருட்டே, தன்னைப் போன்ற தன்னைவிட வலுமிக்க ஒரு உருவத்தை படைப்பது என்று எண்ணி நான்கு கரங்களுடன் சங்கு, சக்கரத்துடன் ஒரு உருவம் வரைந்தார்கள். இன்னும் அதிகமான கற்பனை வர ஆறுமுகமும், பன்னிரண்டு கைகளும் கொண்ட இன்னொரு சிலையைச் செய்தார். இவை உபமானமாக செய்யப் பட்டவை. பலம்மிக்க மனிதர்களின் சக்தியை உள்ளடக்கிய ஒரு சக்தி என்று ஒரு உருவத்தை உயர்த்திக் கூறுகின்ற முயற்சி.

எல்லா பக்கமும் தன்னுடைய பார்வையைச் சுழலவிட்டுக் கொண்டிருக்கிற மிகப் பெரிய சக்தியை ஆறுமுகமாகப் படைப்பது என்பது ஒரு சாதாரணமான கற்பனை. மழை என்பதற்கு வருணன் என்று பெயர். மின்னல் என்பதற்கு இந்திரன் என்று பெயர். நெருப்பு என்பதற்கு அக்னி என்று பெயர். காற்றுக்கு வாயு என்று பெயர். இவர்கள் எல்லோரும் தேவதைகள் என்று சொல்ல, இந்த தேவதைகளை பூமியில் இருக்கின்ற கொடுமையானவர்களை



தண்டிக்க அல்லது பயமுறுத்த விதம்விதமான ஆயுதங்களுடன் கடவுளர் படைக்கப்பட்டார்கள். எங்களை இயற்கையின் சீற்றத்திலிருந்தும், கொடுமையான மனிதர்களிடமிருந்தும் காப் பாற்றுவாயாக என்பதன் வேண்டுகோளாகத்தான் பன்னிரண்டு கைகளில் ஆயுதமும், எல்லா திக்கும் பார்க்கின்ற ஆறுமுகமும் தோன்றின. ஒரு இடத்திலும் என்னைக் கைவிடாது, ஒரு கொடுமையும் என்னைத் தாக்காது நீங்கள் காப்பாற்ற வேண்டும் என்ற இறைஞ்சுதல்தான் இந்த உருவம்.

என்னைக் காப்பாற்ற வேண்டும் என்கிற இறைஞ்சல் ஒரு நாளும் தவறில்லை. இது தவறில்லை எனில், இந்த இறைஞ்சலாக வெளிப்பட்ட இந்த உருவகமும் தவறில்லை என்றுதான் கொள்ள வேண்டும். ஆனால், உண்மையில் கடவுளுடைய உருவம் வேறு. அதற்கு உருவமில்லை. மிகப் பெரிய சக்திக்கு எந்த உருவம் கொடுத்தாலும் அது உருவமாகாது. ஆனால், என்னை நான் உருவமாகக் கொண்டுள்ள வரையில் உருவமற்றதை வழிபட முடியாது. நான் என்று சொன்னவுடன் என் முகம், என் கை, கால்கள், என் சட்டை, என்னுடைய நடை உடை பாவனை ஞாபகம் வருகிறது. உண்மையாயின் என்னை நான் ஒரு உருவமாகத்தான் கொண்டிருக்கிறேன் எனில், உருவமற்ற விஷயத்தை எப்படிக் கற்பனை செய்வது. எனவே, உருவமற்றதை கற்பனை செய்ய முடியாது. ஆயின், அதற்கு உருவம் கொடுத்து, வழிபாடு நடத்தலாம் அல்லது இந்த இடத்தில் கடவுள் இறங்கினார். இந்த இடத்தில் கடவுள் வந்திருந்தார் என்று சொல்லி அந்த இடத்தில் ஒரு கட்டடம் கட்டி அந்த கட்டடத்தை அடையாளமாக வணங்கலாம். அல்லது கடவுளின் தூதர் இந்த விதமாக தண்டிக்கப்பட்டார் என்று சொல்லி அவர் தண்டிக்கப்பட்ட சிலுவையையே கடவுளின் குறியீடாகக் கொள்ளலாம். அந்தக் கடவுளின் தூதரையே கடவுளாக வழிபடலாம்.

யாரை வழிபடுகிறோம் என்பது முக்கியமல்ல... எப்படி வழிபடுகிறோம் என்பது முக்கியமல்ல... வழிபாடு என்பது நல்லது என்பதுதான் முக்கியம். உருவமுள்ளதோ, உருவமற்றதோ, அடையாளமோ இங்கு விவாதத்திற்கான விஷயமல்ல. எதை நோக்கியோ ஒரு வழிபாடு நடந்து கொண்டிருக்கிறது. கைகூப்பி என்னைக் காப்பாற்று என்ற இறைஞ்சல் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதே முக்கியம். இந்த இறைஞ்சலுக்கு எது

வசதியோ அதை அந்தந்த தேசத்தினர், அந்தந்த இனத்தினர் எடுத்துக் கொண்டார்கள் அவ்வளவே.

இந்த இறைஞ்சலால் என்ன லாபம்? வாழ்வினுடைய எதிர்பார்ப்புகள் அதிகமாகிறபோது அது நிறைவேற வேண்டுமே என்கிற மிகப் பெரிய ஆவல் வந்து நிற்கும். அந்த ஆவல் நிறைவேறாது போனால் என்ன ஆகும் என்கிற கலவரத்தையும் கொடுக்கும். அந்தக் கலவரம்தான் கைகூப்பி, 'தயவுசெய்து என்னுடைய இந்த ஆவலை நிறைவேற்றிவிடு. என் மனைவி, மக்களை சௌக்கியமாக இருக்கச் செய். எனக்கு பொருளாதாரக் குறைகள் ஏதும் வரவேண்டாம். எனக்கு நோய்நொடியில்லாத வாழ்வைக் கொடு' என்கிற கைகூப்பல் வந்துவிடும். தன்னைச் சுற்றி நோய்நொடிகள் இருப்பதும், பொருளாதார அவஸ்தைகள் இருப்பதும், மனைவி மக்களோடு சண்டையும், குழந்தைகள் பிரிந்துபோவதும், தான் மிகக் கேவலமாக நடத்தப்படுவதும் பார்த்த எதிரிகளுடைய படையெடுப்பு, இயற்கையினுடைய சீற்றம், கொள்ளை நோயின் பயங்கரம் என்றெல்லாம் கவனித்து, இவைகளிலிருந்து நான் தப்பித்துப் பிழைத்து நெடுநாள் வாழ வேண்டுமே என்கிற எண்ணம்தான் பக்தியினுடைய அடிப்படை. இன்னும் அதிகமாகச் சொல்லப்போனால் நலமாகவும் வாழவேண்டும், நெடுநாளும் வாழ வேண்டும். இந்த நெடுநாள் வாழ வேண்டுமென்ற எண்ணம் மனிதனுக்கு பிறந்ததிலிருந்தே தோன்றிவிடுகிறது. மரணிக்க மனிதனுக்கு விருப்பமில்லை. வாழ்தல் வேண்டும். சிரமம் இருப்பினும், நோய் இருப்பினும், பொருளாதாரக் கஷ்டங்கள் இருப்பினும், தனிமையில் இருப்பினும் வாழ்தல் என்பதை விட்டுவிட, மனித மனம் தயாராக இல்லை.

வாழ்தல் என்பது மிக முக்கியமாக இருக்கும்போது, எப்பொழுது வேண்டுமானாலும் மரணம் நேரும் என்கிற எண்ணம் வரும்போது, மிக இயல்பாக பயமும், பயத்தைத் தொடர்ந்து பக்தியும் கடவுள் வழிபாடும் நடக்கின்றன. இந்தக் கடவுள் வழிபாடு ஒரு வெற்று நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. ஆனால், நாளை என்னவென்று தெரியாத மனிதருக்கு இந்த வெற்று நம்பிக்கைதான் மிகப் பெரிய ஊன்றுகோல். இந்தக் கடவுள் வழிபாடு அன்றைய நேரத்தை, அன்றைய வேதனையை ஆசுவாசப்படுத்தி அமைதியாக்குகிறது. அமைதியாகிறபோது அடுத்தது என்ன செய்ய வேண்டும் என்ற



எண்ணத்தை அந்த அமைதி ஏற்படுத்துகிறது. 'கடவுளிடம் நான் வேண்டிக்கொண்டேன். கடவுள் என்னை கைவிட மாட்டார். அவர் இன்னவிதமாக எனக்கு உதவி செய்வார்' என்று சொல்லி நிம்மதியாகத் தூங்கினால், மறுநாள் காலை விடியல் நேரத்தில் என்ன செய்யவேண்டுமென்று தெரிந்துவிடுகிறது. அதை விரைவாகவும், தெளிவாகவும், திட்டமிட்டும் செய்கிறபொழுது அதற்குண்டான நல்ல பலன் கிடைக்கிறது. தான் திட்டமிட்டு தெளிவாகச் செய்ததால் பலன் கிடைத்தது என்று எண்ணுவதை விட, தான் அமைதியானதால் ஏற்பட்ட விளைவு இது என்று தெரிகிறது. தான் அமைதியானதற்கு என்ன காரணம் என்கிறபோது கடவுள் பக்தி, கடவுளிடம் வேண்டிக்கொண்டது என்பது ஞாபகம் வருகிறது. எனவே, கடவுளிடம் வேண்டிக் கொண்டால் வாழ்வினுடைய துயரங்கள் நீங்கி வெற்றி எளிதாகக் கிடைக்கிறது என்கிற எண்ணம் ஏற்படுகிறது.

இந்த அமைதியை நோக்கித்தான் கடவுள் பக்தி, கடவுள் வழிபாடு என்று புரிந்துகொண்டால், இந்த கடவுள் வழிபாட்டை மிக அழகாகச் செய்யலாம். மனம் குவித்து கடவுளின் நாமத்தை சொல்லலாம். பாடலாம். ஒரு குழுவாகப் போய் கடவுளுக்கு விழாக்கள் எடுத்து நடத்தலாம். அப்பொழுது நிறைய அறிமுகங்கள், நிறைய அனுசரித்துப்போதல் ஏற்படும். ஒரு குழு மனப்பான்மை வரும். அப்பொழுது அது தான் தனியாக இல்லை, ஒரு குழுவோடு இருக்கிறோம் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்தும். அது மிகப் பெரிய உற்சாகத்தை கொடுக்கும்.

"இந்த வருஷம் தேர் இழுத்தேன். கபாலி... அடுத்த வருஷமும் தேர் இழுக்கணும்" என்று வேண்டிக்கொண்டு வரும்போது நடை துள்ளலாக அடுத்த வருஷமும் வருவோம் என்கிற மிகப் பெரிய நம்பிக்கையாக சந்தோஷத்தைத் தருகிறது. அந்த சந்தோஷம்தான் மிக முக்கியம். அடுத்த வருஷம் இருக்கப் போகிறாரா இல்லையா என்பது அவருக்கும் தெரியாது, வேறு எவருக்கும் தெரியாது. ஆனால், அந்த நேரம் அடுத்த வருஷமும் நான் தேர் இழுப்பேன் என்கிற சந்தோஷம் இருக்கிறதே... அது ஒருவேளை அடுத்த வருஷம்வரை அவரை அழைத்துப் போகலாம். அப்படி அழைத்துப் போனால் அதற்குக் காரணம் கபாலிதான் என்று அவர் நம்பலாம்.

இது உள்ளுக்குள்ளே நம்பிக்கையின்பாற் பொருட்டு ஏற்பட்ட சந்தோஷத்தைத் தருவதால் கடவுள் வழிபாடு என்பது மிகச் சிறப்பான விஷயமாக எல்லா மதத்தினமும் கொண்டாடுகின்றனர். யாருக்கு கடவுள் தேவையில்லை? எப்பொழுது வேண்டு மானாலும் இறக்கத் தயாராக இருக்கிறேன், எப்பொழுது வேண்டு மானாலும் எந்தத் துயரத்திற்கும் தயாராக இருக்கிறேன் என்று எவரால் சொல்ல முடியுமோ அவருக்கு கடவுள் தேவையில்லை. மரணம் பற்றிய பயமும், வாழ்வு குறித்த பயமும் எவருக்கு இல்லையோ அவருக்கு கடவுள் தேவையில்லை. அல்லது என்னுடைய முயற்சியில்தான், என்னுடைய திடத்தால்தான் என்னுடைய அறிவின்பாற்பட்டு என் வாழ்க்கை நடக்கிறது. அதில் நல்லதும் நடக்கும். கெட்டதும் நடக்கும். கெட்டது வரின் ஏற்றுக்கொள்கிறேன். நல்லது வரின் அதற்கு நானே காரணம் என்று எவர் ஒருவர் தன்னுடைய புத்தியின் மீது, தன்னுடைய அறிவின்மீது மிகப் பெரிய நம்பிக்கை வைத்திருக்கிறாரோ அவருக்கு உருவ வழியிலோ, உருவமில்லாத வழியாலோ தேவையே இல்லை. அவருடைய நம்பிக்கை வேறொரு இடத்தில் இல்லாமல் அவரிடத்தில் இருக்கிறது. ஆக, அவர் வாழ்க்கையும் நம்பிக்கையின்பாற்பட்டுதான் நகர்கிறது.

நிறைய உடற்பயிற்சி செய்திருக்கிறேன். அளவான உணவு எடுத்துக்கொண்டிருக்கிறேன். ஆரோக்கியத்திற்காக சில மருந்துகள் உட்கொள்கிறேன். நாளை நான் திடமாக இருப்பேன் என்று நம்புகிறார். நாளை அவர் திடமாக இருப்பின் இந்த மருந்தும், இந்த உணவும், இந்த உடற்பயிற்சியும் காரணம் என்று நினைப்பார். ஒருவேளை, ஏதேனும் சிக்கல் வந்தால்... அந்த சிக்கலை எப்படித் தடுப்பது என்று யோசிப்பார். ஆக, அவருடைய வாழ்க்கையில் எப்பொழுது வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் ஏற்படும். ஆனால், தன்னுடைய நடவடிக்கைகளினால் அதை சீர்செய்ய முடியும் என்று திடமாக நம்புகிறார். இது வேறுவிதமான ஒரு நம்பிக்கை. இதைவிட கடவுள் நம்பிக்கை என்பது எளிதாக இருப்பதால் அதிகமான மக்கள் தங்களை மிருதுவாக்கிக் கொண்டு, தங்களுக்கு எதிரே இருக்கின்ற இந்த பிரபஞ்ச சக்தியை நோக்கி கைகூப்புகிறார்கள். என்னை வழிநடத்து என்று கெஞ்சுகிறார்கள். அது பிரபஞ்ச சக்தியை நோக்கிப் பேசுவது மட்டுமல்ல... தன்னை நோக்கிப் பேசுவதுமாகும். அப்படிப் பேசுகிறபோது அவருக்கு



வாழ்க்கை குறித்த நம்பிக்கை அதிகமாகிறது. எனவே, கடவுள் பக்தி என்பது ஒரு சுகமான விஷயம். ஒரு இதமான விஷயம். இதைக் கொள்ளுதலில் எந்தத் தவறும் நேர்ந்துவிடாது. எந்த இழிவும் வந்துவிடாது. தன்னை இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ள கடவுள் என்ற விஷயம் உதவக்கூடும். மதங்கள் கடவுள் என்ற விஷயத்தை அவ்விதமாக பயன்படுத்ததான் சொல்கின்றன.

## 18

எழுத எல்லோராலும் முடியுமா?

இல்லை. வெகுசிலரால்தான் முடியும். படித்தவர்களால் எழுத முடியுமென்பது அவ்வளவு சரியான வாதமல்ல. நன்கு படித்தவர்கள்கூட ஒரு விஷயத்தை எழுத்தில் விளக்க முற்படுகிற போது பழக்கமின்மையின் காரணமாக தடுமாறுகிறார்கள். தொடர்ச்சி இல்லாது தவிர்க்கிறார்கள். எழுதுவது என்பது ஒரு கலை. பாடுவது போன்று, நடிப்பது போன்று வாத்தியங்கள் வாசிப்பது போன்று எழுத்தும் ஒரு மிகச் சிறந்த கலை.

எழுதுவதற்கு மிகுந்த முயற்சி தேவை. அமைதியாய் ஒரு இடத்தில் உட்காரவேண்டிய பக்குவம் தேவை. என்ன எழுதப்போகிறோம் என்று எழுதுவதற்கு முன்பு தெளிவாகச் சிந்திக்கின்ற திறன் தேவை. எழுதுவதற்கு உட்கார்ந்த பிறகு யோசிக்காமல், நன்கு யோசித்த பிறகே எழுதுவதற்கு உட்கார வேண்டும். எழுதுவதற்கு என்று முயற்சிக்கிறபோது யோசிப்பு கூர்மையடைகிறது. பல்வேறு விதமாக வாக்கியங்களை மாற்றிப் போட்டு, எது சிறந்த வாக்கியம் என்று தேர்ந்தெடுக்கின்ற ஒரு கவலை ஏற்படுகிறது. இந்த முனைப்புதான் என்ன எழுதப் போகிறோமோ அதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வைக்கிறது.

உதாரணமாக, காதல் என்பது பற்றி ஒருவர் எழுதத் துவங்கினால், காதல் என்பது என்ன என்ற கேள்வியைக் கேட்டுக் கொள்ளத்தான் வேண்டும். எவருமே ஆண், பெண்ணைப் பார்த்து, பெண் ஆணைப் பார்த்து உருகுவதுதான் காதலா, பரஸ்பர உடல் ஈர்ப்புதான் காதலா என்ற கேள்வியெல்லாம் கிடைத்து விடும். இது

இல்லை, அது இல்லை என்று ஒவ்வொன்றாகத் தள்ளி... எது காதல் என்று யோசிக்க வருவதற்கு நீண்ட நேரம் பிடிக்கும். இதற்கு வெறும் யோசனை மட்டும் போதாது. அந்த யோசனைக்கு ஒருவர் உண்மையானவராக இருக்க வேண்டும். பொய்யற்று இதுதான் காதல் என்ற விரைவான முடிவுக்கு வராமல், எங்கேயோ பார்த்தது கேட்டது, பேசியது, படித்தது என்பதை மேற்கோளாகக் காட்டாது, என்னது என்று தானாக விசாரித்தால், உண்மையாக அந்த விசாரணைக்குள்ளாக இறங்கினால், எழுதுவது என்பது மிக எளிமையாக, இனிமையாக புலப்பட்டு விடும்.

நாலஞ்சு புஸ்தகத்துல ஒண்ணா கலந்து, புஸ்தகத்துல திரட்டி ஒரு கட்டுரையை எழுதிடலாம் என்று முயற்சி செய்தால், படிப்பு காப்பியடிப்பதில் போகுமே தவிர, காதல் என்பது என்ன என்று யோசிக்க வராது. ஒரு விஷயத்தை யோசிக்காமல் எழுதுகிறபோது எழுத்து பக்குவமாக இருக்காது. சொல்ல வந்த விஷயம் சரியாய் சொல்லப்படாது படிப்பவருக்கு அந்தக் கட்டுரை அயற்சியை தரக்கூடும். பாதியிலேயே தூக்கி எறியக்கூடும். உண்மை ஒருபோதும் கசப்பதில்லை. எனவே, உண்மையாக எழுத, உண்மையாக யோசிக்க வேண்டும். யோசிப்பதினுடைய விஷயம் கூர்மையாக இருந்தால்தான் புரிந்துகொள்ள வேண்டும் என்ற அக்கறையோடு இருந்தால் தனக்கு இந்த விஷயம் பற்றி தெளிவு வரவேண்டும் என்ற யோசனையில் மூழ்கினால், கட்டுரை அற்புதமாக வெளிவந்துவிடும். எழுத்து மிகச் சரியான லயத்தில் வந்து உட்காரும். அப்போது எழுதுவது என்பது மற்றவருக்கு சொல்வது என்பதைவிட, தனக்கு தன்னைப் பற்றி, தன் எண்ணங்களைப் பற்றி புரிந்துகொள்ள வேண்டும் என்கிற திறமையைக் கொண்டு வந்து முன்னிறுத்தும்.

எவரொருவர் தன்னுடைய எண்ணங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்கிறாரோ அவரால் எழுதுவது என்பது எளிதாக முடியும். எழுதுவது என்பது என்ன? பிறருக்கு சொல்வதுதானே. ஒருவகைப் பேச்சுதானே. அந்தப் பேச்சு கம்பீரமாகவும், ஒன்றன்பின் என்று தொடர்ச்சியாகவும் வெளிவரும்.

எதற்கு எழுதுவது... பேசிவிட்டுப் போகலாமே?

இல்லை. பேச்சில் அடித்தல் திருத்தல் செய்ய இயலாது. சொல்லி விட்டு மறுபடியும் இருக்க முடியாது. சொல்லிக்கொண்டே



போகவேண்டியதுதான். சில சமயம் பொய்கலப்போ, தவறான செய்தியோ கலந்துவிட பேசுவதில் வாய்ப்பிருக்கிறது. ஆனால், எழுதுவதை மறுபடியும் படிக்கிறபோது, மீண்டும் செப்பனிடுகிற போது எழுத்து இன்னும் இறுக்கமாகும். அப்போது சொல்லப்படு கின்ற விஷயத்தைவிட ஆழமும் நேர்த்தியும் நன்றாக புலப்படும். எனவே, எழுதக் கற்றுக்கொள்வதன் முதல் நோக்கமே சிந்திக்கக் கற்றுக்கொள்வதுதான்.

சிந்திக்க கற்றுக் கொள்வதற்கு வேண்டாம் என்று மறுப்பவர் உண்டா? உங்கள் சிந்தனை சரியாக இருந்தால், பேச்சு சரியாக இருக்கும். பேச்சு சரியாக இருந்தால், புரிதல் சரியாக இருக்கும். புரிதல் சரியாக இருந்தால், வாழ்க்கை சரியாக இருக்கும். எதிராளியைப் பேசவிட்டு முழுவதுமாக கவனித்து என்ன பதில் பேசுவது என்பதை தீர்மானிக்கின்ற பக்குவம் வந்துவிடும். இல்லையெனில், எதிராளி பேசும்போதே தானும் பேசி அவர் பேச்சையும் கேட்காமல், தான் சொன்னதும் தெளிவாகாது ஒரு குழப்பமான நிலையே உண்டாகும். மக்களில் நூற்றுக்கு எண்பது சதவீதம் இப்படிக் குழப்பமாகவே பேசித் திரிகிறார்கள். ஏனெனில், குழப்பமாகவே சிந்திக்கிறார்கள்.

எழுதுகின்ற மனிதருக்கு சிந்தனையில் கோவை இருக்கும். தடுமாற்றங்கள் இருக்காது. காதல் பற்றி மட்டுமல்ல... கடவுள் உண்டா என்ற கேள்வியிலும்... கேட்டுக்கொள்ளக்கூடிய தன்மை ஏற்பட்டுவிடும். கடவுள் இருக்கிறார். இல்லை என்கிற முழு நம்பிக்கைக்கு ஒருவர் ஆளாக முடியும். தான் சிந்தித்து தெளி வானதை முழுதும் நம்பியவருக்கு எந்தக் குழப்பமும் வாழ்க்கையில் இல்லை. கடவுள் இல்லை என்று சொல்லி இருக்கிறார் என்று அடிமனதில் பயத்தோடு நம்புகிறவர்களுக்குத்தான் மிகப் பெரிய குழப்பம் இருக்கும். கடவுள் இருக்கிறார் என்று சொல்லி, இல்லையோ என்று சந்தோஷப்படுகிறபோது அது மிகக் கேவலமானதாக மாறிவிடும்.

'எனக்கு எழுதியே பழக்கமில்லையே... எழுத எப்படிக் கற்றுக்கொள்வது?' உங்களில் சிலருக்கு சந்தேகம் வரலாம். எழுத வேண்டும் என்று ஆசை இருந்தால் போதும்... நீங்கள் டைரி எழுதத் துவங்கலாம் அல்லது நண்பனுக்கு கடிதம் எழுதத் துவங்கலாம். இந்த செல்போன் உலகில் கடிதம் எழுதுவது என்பது கொஞ்சம்

சிரிப்பான விஷயமாகத்தான் இருக்கும். ஆனால், கடிதம் எழுதுவதும், எழுதிய கடிதத்தை படிப்பதும் தனி ஆனந்தம்.

அங்கு அந்த இலக்கிய கூட்டம் எப்படி நடந்தது. கிரிக்கெட் மேட்ச் என்னவாயிற்று... நேற்று அந்தக் காதலியோடு சந்தித்துப் பேசியது எப்படி இருந்தது... அந்த கவிதைத் தொகுப்பு எத்தனை சுகம் என்று நண்பனுக்குக் கடிதம் எழுத, அந்த நட்பு நிச்சயம் பலப்படும். ஒரு அன்புப் பரிமாற்றம், அக்கறை ஏற்படுத்தும். ஒருமுகப்பட்ட அக்கறையும், அன்பும் இணைபிரியாதவை. அக்கறையோடு எழுதப்படுகின்ற கடிதங்களில் கிடைக்கும் ஆறுதல் நேரில் பேசினால்கூட கிடைக்காது. உதாரணத்திற்கு ஒரு நண்பர் காதலில் தோல்வியுற்றிருக்கிறார் அல்லது தாயை இழந்து வாடிக் கொண்டிருக்கிறார் என்றால், நீங்கள் செல்போனில் பேசினால் என்ன சொல்ல முடியும். அல்லது நேரே போய் முதுகைத் தடவிக்கொடுத்தால் என்ன ஆறுதல் ஏற்படும். இதையே ஒரு கடிதமாக உங்களால் மாற்ற முடியுமெனில், அந்தக் கடிதம் எத்தனை வருடங்களானாலும் அந்த நண்பருக்கு மறக்காது. உங்கள் அன்பு சோடை போகாது. உங்கள் நட்பு புறந்தள்ளப்பட மாட்டாது.

வெறுமே அரட்டையடிக்கிற மனிதருக்கு எழுதவும் வராது. சிந்திக்கவும் வராது. அந்த நேரத்தில் வழித்துக்கொண்டு சிரிப்பதற்கு என்ன பேச வேண்டும் என்று மனம் பரபரக்குமே தவிர ஒரு செய்தியின் ஆழத்தை ஒரு நாளும் அம்மாதிரியான மனிதர்கள் தொடமாட்டார்கள். எழுத ஆரம்பித்தால் அரட்டையடிப்ப திலிருந்து மனம் விலகி நிற்கும். அரட்டைக்கான நண்பர்களிட மிருந்து அப்பால் போகும்.

தேடிச் சோறு நிதம் தின்று பல சின்னஞ்சிறு கதைகள் பேசும், நண்பர்களால் என்ன பயன். அதனால் யாருக்கு லாபம். நேரம் கொள்ளிகளாய் இருப்பதற்கு ஒருவர் வெட்கப்பட வேண்டும். எழுதத் துவங்கி விட்டீர்கள் என்றால் படிப்பதற்கு ஆவல் வந்துவிடும். உங்களுக்கு எழுதும் கடிதங்கள் மட்டுமல்ல... கதைப் புத்தகங்களை, கட்டுரைகளை, கவிதைகளை நீங்கள் படிக்கத் துவங்கி விடுவீர்கள்.

எந்நேரமும் சினிமா என்ற ஆட்டம் பாட்டங்களிலிருந்து விடுபட்டு அல்லது இந்த ஆட்டபாட்டங்களையே திரும்பத் திரும்ப எழுதிக் கொண்டிருக்கும் செய்திகளிடமிருந்து விடுபட்டு, என்ன தெரிந்துகொள்ள வேண்டுமோ அதை ஆவலாக தெரிந்து கொள்கின்ற மனோபாவம் ஏற்படும்.



தங்கத்தின் விலை ஏன் ஏறுகிறது என்கிற அலசல்களையும், சனி கிரகத்தின் நீள அகலம் என்ன என்கிற தகவல்களையும், மூச்சு, மனம், பிராணன் என்கிற மிக முக்கியமான அறிதல்களையும் புத்தகங்கள் உங்களுக்கு சொல்லித் தரும். இது தினசரி வாழ்க்கைக்கு மிக முக்கியமாய் உதவி செய்யும். தினசரி வாழ்க்கை திடமாய், ஒழுங்காய் ஒரு வரையறைக்குள் வந்துவிட்டால் அத்துமீறல், அகம்பாவத்தோடு அலைதல், ஆர்ப்பாட்டமாக வாழ்தல் என்பது தவிர்க்கப்பட்டுவிடும். அவை தவிர்க்கப்பட்டு விட்டால் வாழ்க்கை இனிமையாக இருக்கும். உங்களைச் சுற்றியுள்ளோர்களையும் இனிமையாக நடத்திக்கொள்ள உங்களுக்குத் தெரிந்து போகும். உங்களைச் சுற்றி பல நண்பர்கள் நகர்ந்து வருவார்கள். உங்களிடம் பேசுவதில் அமைதி காண்பார்கள். நீங்கள் சொல்லும் வார்த்தைகளில் ஆறுதல் அடைவார்கள். இதைவிட சிறப்பான வாழ்க்கை வேறு எது இருக்க முடியும். எழுத்து படிப்பிற்கும், படிப்பு எழுத்திற்கும் உதவி செய்யும். இந்த இரண்டுமே நிதானமான தெளிவான வாழ்க்கைக்கு வழி வகுக்கும். எனவே, எழுதக் கற்றுக் கொள்ளுங்கள்.

## 19

**த**ஞ்சாவூரின் கோயிலுக்குள்ளே வெளிப் பிராகாரத்தில் வடக்கு பார்த்தபடி ஒரு கருங்கல் நந்தி இருக்கும். ஆளுயர நந்தி அது. நாலு டன் எடை. அந்த நந்தியை இருநூற்று முப்பத்தாறு அடி உயரம் எடுத்துப்போய், மேலேயுள்ள கருங்கல் தளத்தில் மூலையில் கோபுரம் அசையாது இருப்பதற்காக ஒரு குறிப்பிட்ட கோணத்தில் வைக்கப்படுகிறது. ஒன்றல்ல, இரண்டல்ல... எட்டு நந்திகள் அப்படி வைக்கப்பட்டிருக்கின்றன. அதைத் தாண்டி நடுவே பெரிய உருளைக் கல் துண்டு துண்டாக இருப்பினும் ஒன்றாக சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது.

எப்போது வைத்தார்கள் தெரியுமா?

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு. மின்சாரம் இல்லாத மின் தூக்கி இல்லாத காலத்தில் எப்படிக் கொண்டு போய் எட்டு நந்திகளை வைத்தார்கள் என்று நினைக்க ஆச்சரியமாக இருக்கிறது. இன்றைக்கு அந்த நந்தியை எல்லாவித உபகரணங்களுடன் ஏற்றிச் செல்லுங்கள். உயிர் போய் உயிர் வரும். ஆனால், அவர்கள் எப்படிச் செய்தார்கள் என்று நினைக்க அந்தக் கணித அறிவு, தொழில்நுட்ப யுக்தி, மனிதர்களுடைய உழைப்பு, அவர்களுக்கு ஏற்ற தலைமை எல்லாம் கவனிக்க மிகப் பெரிய வியப்பு வரும்.

நம்முடைய முன்னோர்கள், நம் தமிழகத்தில் வாழ்ந்தவர்கள், மிக உச்சகட்டமான நாகரீகத்தில் கணித அறிவும், சிற்பக் கலையும், ஓவியமும் இன்ன பிற கலைகளும் தெரிந்து தெளிந்து வாழ்வாங்கு வாழ்ந்தார்கள் என்று தெரிய, உள்ளத்தில் பெரிய உவகை பெருகும். தமிழும், தமிழர்களும் சாதாரணமானவர்கள் அல்ல என்ற பெருமை எழும். கரைபுரண்டு ஓடிவந்து நெற்பயிரை நாசம் செய்யும் காவிரியைத் தடுத்து நிறுத்த இன்னும் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு கரிகால் சோழன் என்பவன் கல்லணை கட்டினான் என்று தெரியவர, வியப்பின் உச்சிக்கே போவோம்.

அதுமட்டுமா, தினசரி வாழ்க்கை எப்படி இருந்தது. என்ன விலையில் என்ன பொருட்கள் விற்றன. ஒரு காசுக்கு இரண்டு எருமைகள். ஒரு காசுக்கு ஒரு பசு. ஒரு காசுக்கு நூற்றி அறுபது வாழைப்பழம். ஒரு காசுக்கு நூறு ஏலக்காய். ஒரு காசுக்கு ஆறு மரக்கால் அரிசி. எருமையைவிட ஏலக்காய் மிகவும் விலை உயர்ந்தது. காரணம் என்ன? சோழ தேசத்தில் ஏலக்காய் இல்லை. அது சேர தேசத்திலிருந்து மலைகள், ஆறுகள் எல்லாம் தாண்டி வரவேண்டும். ஆகவே, அது விலை அதிகம். சோழ தேசத்தில் பசுக்களும், எருமைகளும் மிகுந்திருந்தன. பால்வளம் மிக்க நாடாக, அரிசி சோறு மிகுந்த நாடாக சோழ தேசம் இருந்திருக்கிறது.

வேறென்ன செய்தி. உடன்கட்டை ஏறுதல் என்று படித்திருக் கிறோம். ஆடும் கூத்தன் அவர்கள் இறந்துவிட்டமையால் அவரோடு பள்ளிகொள்ள முன்வந்த அவர் மனைவியரில் இருவர் என்று ஒரு கல்வெட்டு இருக்கிறது. அதற்கு அருகே ஒரு சமாதியும் இருக்கிறது. தோண்டிப் பார்க்க ஒரு ஆடவரை இரண்டு பெண்கள்



தழுவிக்கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி இறந்துபட்ட புருஷனோடு தானும் குழியில் படுத்து சாவதற்கு உடன் பள்ளி கொள்ளுதல் என்று பெயர். அப்படியான விஷயம் சோழ தேசத்தில் இருந்திருக்கிறது. மூன்று காசுக்கு தன்னையும், தன் மனைவியையும், தன் இரண்டு குழந்தைகளையும் அடிமையாக விற்றான் என்ற செய்தி இருக்கிறது.

ராஜராஜன் பார்க்க நடந்த விற்போர் இருக்கிறது. அந்த விற்போரில் ஒருவன் பொய் செய்ததால், அதாவது தவறாக ஆடியதால் இரண்டு பேரும் இறந்துபோனார்கள். அப்படி தவறாக ஆடியவனின் குடும்பத்தினரை அழைத்து, அவர்கள்தான் இந்த சண்டைக்குக் காரணம் என்று தெரிந்து இறந்தவர்களின் மனக் கேதம் தீர்க்கும் பொருட்டு, தவறாக ஆடியவரின் குடும்பத்திற்கு ராஜராஜன் அபராதம் விதித்திருக்கிறார்.

மதுரை மண்ணில் சங்கத் தமிழ் வளர்த்திருக்கிறார்கள். வாழ்வியல் பற்றி பல பாடல்களை பாடியிருக்கிறார்கள். உண்ணும் உணவு, உடுத்தும் உடை, நகை, காதல், காமம், போர் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். சகடப் பெருவழி என்று பாதை இருந்திருக்கிறது. பாதையில் மைல்கல்கள் இருந்திருக்கின்றன. இந்த ஊருக்குப் போக இங்கே திரும்பு என்று கல்வெட்டு சொல்கிறது. மாடுகளை மடக்கி திருடிப்போன கள்வர் கூட்டத்தை தொடர்ந்து போய் போராடி மாடுகளை மீட்டுவந்து, மீட்டு வரும்போது அவர்களால் இத்துப்பட்டு செத்த ஒரு வீரனுக்கு நடுகல் இட்டு, அவன் மனைவிக்கு ஐந்து வேலி ஆற்றுப்படுகை நிலம் கொடுத்திருக்கிறார்கள்.

வடக்கே முகலாயர்கள் வந்த விதம், தெற்கே மன்னர்களை தாக்கிய விதம், கோயில்களை சூறையாடியது, நடுவே நிகழ்ந்த அரசியல், பரஸ்பர துரோகம் எல்லாம் நாட்குறிப்பு போல எழுதப்பட்டிருக்கிறது. தோல் உரித்து தொங்க விட்டிருக்கிறார்கள். மரக் கூண்டில் அடைத்து கடலில் வீசியிருக்கிறார்கள். பூமியில் புதைத்து யானையின் காலால் தலையில் மிதிக்க வைத்திருக் கிறார்கள். கோட்டையை முட்ட வரும் யானையின் மீது கொதிக் கின்ற எண்ணெயை ஊற்றியிருக்கிறார்கள். சலவைக் கல்லில் காதல் சின்னம் நிறுவியிருக்கிறார்கள். அற்புதமான கவிஞர்களும், பாடகர்களும் வாழ்ந்திருக்கிறார்கள். அடிமையாய் இருந்த ஒருவன்

அரசனாகியிருக்கிறான். அரசனாய் இருந்தவன் அடிமையாகி இருக்கிறான்.

தமிழகத்தின் முக்கிய நகரான மதுரையிலிருந்து முப்பது யானைகளில் பொருள்கள் கொண்டு போகப்பட்டிருக்கின்றன. தம்பியை அண்ணன் காட்டிக் கொடுத்திருக்கிறான். காட்டிக் கொடுப்பதற்காக அந்நியரை வரவழைத்திருக்கிறான். தம்பியோடு சேர்த்து அண்ணனையும் கொன்றுவிட்டு, வந்த அந்நியர் கொள்ளையடித்துக் கொண்டு போயிருக்கிறார்கள். தமிழகத்தின் பெருஞ்சொத்து... டெல்லியிலிருந்த ஆங்கிலேயர்களால் இங்கிலாந்துக்கு கொண்டு போகப்பட்டது. படிக்கப் படிக்க மகிழ்ச்சியும், வருத்தமும், வியப்பும் மாறி மாறித் தோன்றும்.

மனித இனம் செய்திருக்கின்ற முயற்சியும், பட்டிருக்கின்ற வேதனையும் நமக்குள் மிகப் பெரிய மாறுதலை ஏற்படுத்தும். இப்பொழுது இருக்கிற சினிமாவும், செல்போனும் மட்டுமே வாழ்க்கை அல்ல. மனித வாழ்க்கை மிக நீண்டது. அளப்பரிய சாகசங்கள் நிறைந்தது. அப்படி சாகசம் செய்த மனிதர்கள் இன்றளவும் பேசப்படுகிறார்கள்.

'தோன்றின் புகழொடு தோன்றுக' என்று சரித்திரம் சொல்லாமல் சொல்லும். படிக்கிறவரையும் சாகசம் செய்ய வேண்டும், ஏதேனும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். வரலாற்றில் நிற்க என்ன செய்வது என்ற துடிப்பை ஏற்படுத்தும். அப்படித் துடிக்கிறவர்தான் உண்மையான மனிதர். வாழ்பவர்கள்.

சரித்திரம் இது மட்டும் சொல்லித் தரவில்லை. மனித வாழ்க்கையின் நிலையாமையை, செல்வ சுகங்கள் சறுக்கி விடுவதை, உண்மை உயர்த்திக் காட்டுவதை, தர்மம் தலைதூக்கி நிற்பதை பல்வேறு விதமாய் நமக்கு சொல்லிக் காட்டுகிறது. எனவே, உண்டும் உடுத்தியும், பாடியும், ஆடியும் திரிந்த களப்பிரர்கள் காலம் பற்றி நமக்கு எதுவுமே தெரியவில்லை. இருண்ட காலம் என்று அழைக்கப்பட்டு விட்டது. காரணம், எந்த சாகசமும் நடைபெறவில்லை. எனவே தின்று, தூங்கி பொழுதை கழித்திருக்கிறார்கள்.

சரித்திரம் அறிவதற்கு நாவல்கள் உறுதுணையாக இருக்கும். ஒருவாறு அறிமுகப்படுத்தும். ஆனால், தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு சரித்திரம் சார்ந்த கட்டுரைகளை, ஆராய்ச்சி புத்தகங்களைப் படிக்க வேண்டும். கல்வெட்டுச் செய்திகளை கொடுத்திருப்பார்கள். அதை வைத்து நாம் சரித்திரத்தை புரிந்து கொள்ள வேண்டும். சரித்திரம் சார்ந்த இடங்களைப் பயணம் செய்து நேரடியாக அந்த இடத்தை அனுபவிக்க வேண்டும். நூற்றுக்கணக்கான மன்னர்களும், புலவர்களும், அறிஞர்களும் ஏறிய படி இது என்று தடவி நெற்றியில் பூசிக்கொள்ள வேண்டும். நான் வாழும் இந்த வாழ்க்கை என்னுடையதல்ல... பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நன்கு வாழ்ந்த மனிதர்களுடைய சாயல் என்னிடம் இருக்கிறது. அந்த மொழி என்னிடம் இருக்கிறது. அந்த நாகரீகம் என்னிடம் இருக்கிறது. அந்த நாகரீகத்தை, அந்த மொழியை, அந்தக் கலாசாரத்தை நான் விடாது காப்பாற்றுவேன் என்கிற வேட்கை மேலே எழும்.



அந்நியரின் மொழியை அரைகுறையாய் படித்துவிட்டு, எல்லாம் தெரிந்ததான பம்மாத்து நமது வாழ்க்கையை வீணடிக்கும். பிழைப்புக்கு வேறு எந்த மொழியைக் கற்றாலும், என் மொழியை நான் சீர்தூக்கி நிறுத்துவது என் தலையாய செயல், என் வாழ்நாளின் கடமை என்று ஒவ்வொருவரும் தத்தம் மொழியை உயர்த்திப் பிடிக்க வேண்டும். அந்தக் கலாசாரத்தை நன்கு ஊன்றி கவனிக்க வேண்டும்.

பிற்கால சோழர்கள் என்று நீலகண்ட சாஸ்திரிகள் எழுதிய புத்தகம் இரண்டு பாகங்கள் உள்ளன. ஒவ்வொரு பாகமும் தொள்ளாயிரம் பக்கம். படிக்க ஆரம்பித்தால் இரவு தூக்கம் வராது. எவரோடும் பேசத் தோன்றாது. எப்படி இருந்தான் ராஜராஜன்... எங்கே இருந்தான் ராஜேந்திரன்... எங்கேயிருந்தான் குலோத் துங்கன் என்று தேடி ஓட மனம் தவிக்கும். தன் கலாசாரத்தை, தன் மொழியைக் காப்பாற்றுவது என்பது தன் தாயை வணங்கி அவருக்கு போஷாக்கான வாழ்க்கையைக் கொடுப்பது போல. தாயிடம்கூட நன்றியில்லாதவர்கள், தாய்மொழியிடம்கூட பிரியமில்லாதவர்கள் வாழ்ந்தென்ன... அவர்களால் யாருக்கு என்ன லாபம்? அவர்கள் எப்படி செயற்கரிய காரியங்கள் செய்ய முடியும்? எப்படி வரலாற்றில் தன் தடத்தை பதியவைக்க முடியும்? அப்படி வாழாதவரை, தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று என்றுதான் சொல்லத் தோன்றும்.

# 20

அன்னம் என்பது உயிர். அந்த உயிர் தாவரங்களிலிருந்து கிடைக்கிறது. அந்தத் தாவரங்கள் பூமியில் ஊன்றி உயிர்ச்சத்தை உறிஞ்சிக் கொள்கின்றன. அந்தத் தாவரங்கள் இலைகளின் மூலம் சூரிய ஒளியை உறிஞ்சி அதையும் உள்ளே இறக்கிக்கொள்கின்றன. அந்தத் தாவரம் மழைநீரில் நனைந்து வேர்களை உள்ளேயும், வெளியேயும் பரப்பி அந்த நீர்ச்சத்தை உறிஞ்சி தளதளப்பாகவும், மிருதுவாகவும் மாறுகின்றன. தாவரங்கள் தங்கள் இலைகளால் சுவாசிக்கும் தன்மையை உடையவை. அந்த சுவாசிப்பால் பூமி சுத்தமடைவதோடு அன்னம் என்கிற அந்த பயிர் வகைகளோடு மிக உன்னதமான நிலையை அடைகின்றன.

எல்லாம் கடந்த வெளி இடையறாது தாவரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்தத் தாவரத்தின் உயிர்ச்சத்துக்குள்ளும் அந்த வெளி அமைந்திருக்கிறது. இப்பொழுது பூமியினுடைய பஞ்ச பூதங்களும் இந்தத் தாவரத்திற்குள் அடக்கமாகி எல்லா உயிர்களுக்கும் உணவாக மாறுகின்றன. தாவர உணவை புசிக்காத மிருகங்கள்கூட தாவரங்கள் உண்ணுகின்ற மிருகங்களையே வேட்டையாடி உண்டு மகிழ்கின்றன. தாவரம்தான் அன்னம். அன்னம்தான் உயிர்.

அன்னம் உன்னால் உற்பத்தி செய்யப்பட்டதன்று. மனிதன் இந்த தாவரங்களை கொண்டு வரவில்லை. மனிதன் இந்தத் தாவரங்களை பிறப்பிக்கவில்லை. இந்தத் தாவரங்கள் மனிதன் பிறப்பதற்கு முன்பே மனிதனுக்காக காத்துக் கிடந்தன. இந்தத் தாவரங்கள், உயிர்களை வளர்ப்பதற்குத் தவிர வேறு எதற்காகவும் பிறக்கவில்லை. கனிகளும், காய்களும், தானியங்களும் அவைகளின் இன உற்பத்தி மட்டுமே இருப்பின், இத்தனை பழங்களும் இத்தனை பயிர்களும் சொரிந்திருக்க வேண்டும். ஆனால், தான் உண்டது தனக்கு கிடைப்பது பார்க்க மிச்ச மெல்லாம் இங்கு வாழும் உயிர்களுக்கு உணவாகப் போகட்டும் என்ற நிலையிலேயே இந்தத் தாவரங்கள் வள்ளல்களாய் நம்மைச் சுற்றி வாழ்ந்தும், வளர்ந்தும் வருகின்றன. "எனவே, உன்னால்



உற்பத்தி செய்ய முடியாத இந்த உணவை, நீ எங்கிருந்தும் கொண்டுவராத இந்த தாவரத்தை முற்றிலுமாய் உபயோகித்து உன் பசியைத் தீர்த்துக் கொள். உன்னால் விளைந்ததன்று உணவு. எனவே, உயிர்கள் அத்தனைக்கும் கொடுக்க வேண்டிய கடமை இங்குள்ள மனிதருக்கு உண்டு. உயிர்கள் அத்தனைக்கு உணவு தரவேண்டிய விஷயம்தான் அன்னதானம். இங்கு அன்னம் இருக்கிறது. இந்த இடத்தில் பஞ்சபூதங்களால் சேமித்து வைக்கப்பட்ட தாவரத்தின் மூலம் உணவு இருக்கிறது. அந்த உணவை தானும் உண்டு, மற்றவருக்கும் பகிர்ந்தளித்தல் என்கிற விஷயத்தை மனிதன் நிச்சயம் செய்தாக வேண்டும். இதைச் செய்யாதவன் மனிதன் அல்ல.

இன்னொருவருக்கு உணவு தரமாட்டேன் என்று சொல்வதைப் பார்த்து தாவரங்கள் நகைக்கின்றன. உங்களில் யாருக்கேனும் எப்போதேனும் நான் உணவு தரமாட்டேன் என்று சொல்லியிருக்கிறேனா என்று கேள்வி கேட்கின்றன. அந்தக் கேள்வி மனிதர்கள் காதில் விழுவதில்லை. அந்த மொழி மனிதர்களுக்கு புரிவதில்லை. புரிந்த மனிதர்கள் பாக்கியவான்கள்.

'நெற்கதிரை நான்தானே உற்பத்தி செய்கிறேன்' என்று எந்த மனிதரேனும் தொடை தட்டினாலும், அவனைப் பார்த்து சிரிப்பது தவிர வேறு என்ன சொல்ல முடியும். நெற்கதிர் மனிதன் வரும் முன் இப்பூமியில் இருந்தது. கோதுமையும், துவரம் பருப்பும், கடலைப் பருப்பும், பாசிப்பருப்பும் மற்றைய விதைகளும் இந்த பூமியில் செழித்து வளர்ந்திருந்தன. இவைகளை உண்ணலாம் என்று மனிதன் இனம் கண்டுகொண்டான். உண்பதை பக்குவப்படுத்தவும் தெரிந்துகொண்டான். அவ்வளவே தவிர, இவை இவனால் கண்டுபிடிக்கப்பட்டவை அல்ல. இவனால் ஏற்படுத்தப்பட்டவை அல்ல.

பூமியினுடைய மிகப் பெரிய கொடை தாவரம். பஞ்ச பூதங்களினுடைய மிகப் பெரிய ஆசீர்வாதம் தாவரம். இந்தத் தாவரத்திலிருந்து வெளிவரும் தானியங்கள்தான் மனிதனை வலிமையாக்கி, கூர்மையாக்கி, தெளிவாக்கி, நிதானமாக்கி, பல்வேறு விதவான உணர்வுகளை ஏற்படுத்தி தொடர்ந்து வம்சத்தை தக்க வைக்கக்கூடிய சக்தியைக் கொடுத்து, அவனை அற்புதமான ஒரு உயிரினமாக மாற்றியிருக்கின்றன. 'எனக்கு இன்னது செய்' என்று எந்தத் தாவரமும் இதுவரையிலும்

கேட்டதில்லை. எனவே, தனக்குக் கிடைத்ததை பகிர்ந்துண்ணும் பொறுப்பு மனிதனுக்கு இருக்கிறது. அந்தப் பொறுப்புக்குப் பெயர்தான் அன்னதானம்.

பசித்தவருக்கு உணவு வழங்க வேண்டிய குணம் நிச்சயம் இருக்க வேண்டும். உலகத்தில் மிகப் பெரிய ஒன்று பசி என்று சான்றோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

'இந்த நோய் எப்படிப்பட்ட நோய்?'

பத்து மணி நேரத்திற்கு மேல் ஒரு மனிதனால் உணவு உண்ணாமல் இருக்க முடியாது. எனவே, ஒரு மனிதன் பத்து மணி நேரத்திற்குள்ளாகவே நோய்ப்பட்டு விடுவான். பத்துமணி நேரம் தாண்டினால் சுருண்டு விடுவான். பதினைந்து மணி நேரம் இருப்பின் தலைதூக்க முடியாமல் கிடப்பான். இருபது மணி நேரம் இருப்பின் மூளை செயல் இழக்கும். இருபத்துநான்கு மணி நேரம் எனில், அவன் அயர்ந்து விடுவான். இரண்டு நாள் கழிந்தால் இறந்துவிடுவான். எனவே, இந்த நோயின் தாக்கம் வீர்யம் மற்ற நோய்களைவிட மிகமிக அதிகமானது. அதனால்தான் பசிப்பிணி பெரும்பிணி என்று ஆன்றோர்கள் சொல்கிறார்கள்.

எனவே, வெறும் பசியால் மரணமடையலாகாது என்ற துடிப்பு மனிதருக்கு இருந்துவிட வேண்டும். எவர் பசியென்று வாசலில் நின்றாலும் கொடுக்கக்கூடிய தன்மையும் பண்பும் மனிதருக்குள் இருக்க வேண்டும். இன்னொரு உணவை நாசம் செய்வதென்பது உலகத்திலேயே மிகப் பெரிய பாவம்.

கோபத்தால் தன் மாடுகளை அடுத்தவர் வயலில் மேயவிட்டவருக்கு கழுவிலேற்றுகின்ற தண்டனை கொடுத்த மன்னர்கள் உண்டு. உணவை அழித்தல் பாபகரமானது. இது மனித குலத்தை அழிப்பதற்குச் சமம் என்று உலகம் நினைக்கிறது. எனவே, உணவு என்பதை மிகமிக கவனமாகக் கையாள வேண்டும். தான் உண்ணுகின்ற உணவை மிகச் சிறப்பாக வைத்துக் கொள்வது மட்டுமல்லாமல், கொடுக்கப்படுகின்ற உணவு மிகச் சிறப்பானதாக வைத்துக்கொள்வது மட்டுமல்லாமல், கொடுக்கப்படுகின்ற உணவு மிகச் சிறப்பானதாக இருக்க வேண்டும். ஏனோதானோ என்று உணவு உண்ணக் கொடுக்கக் கூடாது. கெட்டுப்போன உணவை கொடுக்கக்கூடாது. சரியாக வேகாத உணவுகளைக் கொடுத்து விடக்கூடாது. அப்படி கொடுக்கப்பட்ட உணவு ருசிகரமாகவும்,



வயிற்றுக்கு கெடுதல் பண்ணாதவாறும், சாத்வீகத் தன்மையை ஏற்றுக் கொடுக்குமாறும் இருக்க வேண்டும். இதில் மிகப் பெரிய ஆசீர்வாதம் எது தெரியுமா? ஏப்பம்தான்.

ஒரு பந்தி முழுவதும் பசித்த மனிதர்கள் உட்கார்ந்து நீங்கள் போடுகின்ற உணவை சாப்பிட்டு வயிற்றிலிருந்து காற்று வெளியே வந்து மிகவும் திருப்தி என்று சொன்னால், அதைவிட மிகப் பெரிய ஆசீர்வாதம் ஒரு மனிதருக்கு எதுவுமில்லை.

என்னவிதமாக ஆசீர்வாதம் செய்வார்கள்?

'அன்னதாதா சுகி பவ'

யார் எனக்கு அன்னம் கொடுத்தானோ அவன் சுகமாக வாழட்டும்.

எது சுகம்?

நீங்கள் எதையெல்லாம் சுகம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களோ அது அத்தனையும் உங்களுக்குக் கிடைக்கட்டும். நாலு பிடி சோறு. தயிர். கூட ஒரு வெஞ்சனம். அல்லது ஊறுகாய். இதைச் சாப்பிட்டுவிட்டு, எழுந்து அன்னதாதா சுகிபவ என்று சொன்னால் மிகப் பெரிய சுகம் நிச்சயம் கிடைக்கும்.

அப்படியெல்லாம் இல்லை. சோம்பேறிகள், வேண்டுமென்று வீட்டில் சாப்பிட்டுவிட்டு இங்கும் சாப்பிடுகிறார்கள் என்று சில பேர் அன்னதானம் செய்வதை குறை சொல்கிறார்கள். எதற்கு இலவசம். காசு கொடுத்து வாங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள்.

ஆயிரம் பேருக்கு உணவு தருகிறீர்கள். அதில் ஐந்து பேர்தான் பசித்து அடுத்தவேளை உணவு இல்லாத நிலைமையில் இருப்பார்கள். மற்றவர்கள் அத்தனை பேரும் வீட்டில் சாப்பிட்டுவிட்டு இங்கு சாப்பிடுவார்கள். அல்லது வீட்டில் சாப்பிட வசதியிருந்தும் இங்கு சாப்பிடுவார்கள்.

அது பற்றிக் கவலையில்லாது அந்த ஆயிரம் பேரிலுள்ள ஐந்து பேருக்காக உணவு தரப்படவேண்டும்.

பிச்சையெடுப்பது தவறு. அவர்களை கைதுசெய்து சிறையில் அடை என்று ஒரு முறை இந்திய அரசாங்கம் சொன்னது.

இது சிரிப்பான விஷயம். எல்லோரும் பிச்சைக்காரர்கள்தான். விதம்விதமாக மற்றவர்களிடம் ஏதாவது யாசித்துக் கொண்டிருப்போம். எனக்கு வேலை கொடு. என் பிள்ளைக்கு பள்ளிக்கூடத்தில் இடம் கொடு. என் மகள் திருமணத்திற்கு காசு கொடு. எங்கள் கோயிலுக்கு இடம் கொடு. என் வீடுகள் தீப்பற்றி எரிந்து விட்டன. எனவே, நல்ல கல்வீடு கொடு. என் ஊரில் திருவிழா. இலவச மின்சாரம் கொடு என்று கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனால், இவையெல்லாம் பிச்சையாகத் தெரியவில்லை. எவரேனும் வாசலில் நின்று, 'அம்மா! தாயே! பசிக்கிறது. கொஞ்சம் உணவு கொடுங்கள்' என்று கேட்டால் அப்போது மட்டும் பிச்சையாகத் தெரிந்து முகம் கோணலாக மாறி ஒரு கூச்சல், விரட்டல் உடனே ஏற்படுகிறது.

பிச்சை எடுக்காமல் எவராலும் வாழ முடியாது. பிச்சை தராமல் இருக்கவும் கூடாது. உலகில் மகோன்னதமான ஞானிகள் பிச்சைக்காரர்களாக, கோமணதாரிகளாக, இடுப்பில் அழுக்கு வேட்டியைச் சுழற்றியவர்களாக இருந்திருக்கிறார்கள். எனவே, வீட்டு வாசலில், தாயே... பசிக்கிறது என்று சொல்பவர் பிச்சைக்காரர்களாகவும் இருக்கலாம். மகானாகவும் இருக்கலாம். மறுதலிப்பால் நமக்குத்தான் நஷ்டம் வரும்.

நஷ்டம் பற்றியே பேசுவானேன்... லாபம் பற்றிப் பேசுவோம்.

அன்னதானம் செய்திருக்கிறீர்களா... பாத்திரம் நிறைய புளியோதரை. இன்னொரு பாத்திரம் நிறைய தயிர்சாதம். பிளாஸ்டிக் டம்ளரில் குடிநீர், தொட்டுக் கொள்ள ஊறுகாய். அப்பளம் என்று திருவிழாக்களில் அன்னதானம் செய்வோர் உண்டு. அன்னதானம் செய்கிறவர்களுடைய பரபரப்பை, சந்தோஷத்தை கவனித்திருக்கிறீர்களா அல்லது இறங்கி வேலை செய்திருக்கிறீர்களா. அது மிகமிக சந்தோஷமானது.

''இரு... இரு. தரேன். அவசரப்படாத. எல்லாருக்கும் தரேன். லைன்ல வா. உனக்கு இல்லைன்னு சொல்லாத யாருக்கு சொல்லப்போறேன் என்றும் கிண்டல் அடித்தபடி உணவு பரிமாறி, உணவு வாங்கியவரின் முகத்தின் பிரகாசம் பார்த்து சந்தோஷப்படுவது நல்லவர்களின் குணம்.

''ஆயிரம் பேருக்கு சாப்பாடு போட்டோம். நூறு பேருக்கு துணி கொடுத்தோம். அம்பது பசங்களுக்கு புஸ்தகங்களும், பென்சிலும் கொடுத்தோம். சின்ன குழந்தைகளுக்கு டம்ளர் டம்ளரா பால் கொடுத்தோம்'' என்று சொல்பவரின் குதூகலத்தை கவனித்திருக்கிறீர்களா?



பிரபஞ்சத்தை படைத்தவருடைய சந்தோஷம் போலும் அது அவரிடமிருந்து பீறிட்டுக் கிளம்பும். எனக்கு ஆறு வீடுகள் இருக்கின்றன என்று சொல்வது போன்ற கம்பீரம் அந்த அன்னதானத்தில் ஏற்படும். அல்லது அந்த அன்னதானத்தின் அடிப்படை வேறு எவராகவோ இருப்பார். இவர் கொடுத்தவராக மட்டுமே இருப்பார். அள்ளி அள்ளி போட்டவராகவே இருப்பார். அள்ளிப் போட்டவருக்கே ஆனந்தம் தலைகால் தெரியாது. வழங்கிவிட்டு ஓரமாக நின்றவருக்கு உள்ளுக்குள்ளே பெரும் நிம்மதி பொங்கும்.

நல்லோர்களுடைய சந்தோஷத்தின் உச்சகட்டம் அன்னதானம். அடுத்தவர் உணவு உண்ணும்போது பார்க்கின்ற சந்தோஷம். எனவே, வாழ்நாளில் தினந்தோறும் அன்னதானம் செய்கின்ற முயற்சியை மேற்கொள்ளுங்கள். தினமும் முடியாவிட்டால் வாரம் ஒருமுறை, மாதம் ஒரு முறையாவது அன்னதானம் செய்யுங்கள். வியாழக்கிழமைகளில் ஏதேனும் உணவு கொடுக்க முயற்சி செய்யுங்கள். அல்லது மாதம் ஒரு முறை வீட்டில் சமைக்கச் சொல்லி பொட்டலமிட்டு, அந்தப் பொட்டலத்தை வறியவர்களுக்குக் கொடுங்கள். அல்லது வருஷம் இரண்டு முறை தாய், தந்தையர்களுடைய திதிக்காக, அல்லது மூத்தோர்களுடைய மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு உணவிடுங்கள். சிறுகுழந்தை களுக்கு மிட்டாய் கொடுங்கள். முதியோர் இல்லத்திற்குப் போய் சுவையான உணவு அல்லது புதுவிதமான உணவு அல்லது சத்தான உணவு கொடுங்கள். உங்களுக்குள் பொங்கும் சந்தோஷம் உங்களை ஆரோக்கியமாக, தெளிவானவராக, இதமானவராக மலரவைக்கும். இந்தத் தெளிவு, இந்த சுகம், இந்த ஆரோக்கியம் உங்களுக்கு சிறப்பான வாழ்க்கையை தானாக கொண்டு வந்து தரும்.

நான் என்ன சொன்னாலும் புரியாது. ஒரு முறை உங்கள் காசில் உணவு தயாரித்து கொடுத்துப் பாருங்கள். பிறகு கொடுக்காமல் இருக்க முடியாது.

## 21

ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் சூடிகையாக ஒரு குழந்தை இருந்தது. அந்தக் குழந்தை தமிழை தாய்மொழியாகக் கொண்ட குழந்தை. அந்தக் குழந்தைக்கு எதிர்வீட்டில் தெலுங்கு பேசுபவர் களும் வலதுபக்க குடியிருப்பில் கன்னடம் பேசுபவர்களும், அந்தக் குடியிருப்பில் இரண்டு மூன்று மலையாளிகளும், ஹிந்தி பேசுகின்ற ஒரு வட இந்தியக் குடும்பமும் இருந்தன. குடியிருப்பில் ஏகப்பட்ட குழந்தைகள். ஒவ்வொரு குழந்தையின் வீட்டிற்கும் தமிழ்பேசும் குழந்தை நன்றாகப் பழகி அந்தந்த வீட்டிற்குப் போய் நாள், கிழமைகளில் விருந்துண்டு சந்தோஷமாய் வலம் வந்தது.

ஒரு மூன்று வருட கால நெருங்கிய பழக்கத்தில் அந்தக் குழந்தை எந்தப் பெரிய முயற்சியும் இல்லாமல் தமிழும், மலையாளமும், தெலுங்கும், கன்னடமும் ஹிந்தி மொழியும் கற்றுக்கொண்டு விட்டது. சாதாரண பேச்சுவழக்கு மிக எளிதாக அந்தக் குழந்தைக்கு கைவந்து விட்டது. இங்கு வா... அங்கு போ... உணவு உண்டாயா... உன் பெயர் என்ன... உடல்நலம் எப்படி இருக்கிறது... எங்கே படிக்கிறாய்... எப்படிப் படிக்கிறாய்... போன்ற கேள்விகள் ஐந்து மொழிகளிலும் அந்தக் குழந்தை பேசக் கற்றுக்கொண்டது.

ஒரு மொழியை அறிந்துகொள்ள மெல்லிய ஆர்வமும், பரிச்சயமும் இருந்தால் போதும். அதைத் தவிர இன்னொரு முக்கியமான விஷயம் வேண்டும். ஒரு மொழியை எதன் பொருட்டும் வெறுக்காத உணர்வு வேண்டும். அது சூட்டிகையான நல்ல குழந்தை என்பதால் எந்த மொழிமீதும் அதற்கு வெறுப் பில்லை.. வெறுப்பு இல்லாததாலேயே அந்த மொழியை நேசிக்கவும், அதை கற்றுக்கொள்ளவும் அந்தக் குழந்தை துவங்கி விட்டது.

எனக்கு மலையாளிகளை கண்டாலே பிடிக்காது என்பவருக்கு மலையாளம் கற்றுக்கொள்ளும் ஆர்வம் இருக்காது. ஹிந்தி ஒழிக என்று கூக்குரலிட்டு அந்த மொழி மீது ஒரு வெறுப்பு ஏற்படினும், அந்த மொழி மீது ஒரு பரிச்சயம் ஏற்படினும், அந்த மொழியைக் கற்கின்ற அவசியம் ஏற்படினும் நம்மால் கற்க முடியாது போகும்.



அதற்கான சூழ்நிலை ஏற்படினும் கற்பது என்பது தாமதமாகும். தவறில்லாது பேச வேண்டும் என்கிற எண்ணம் எழாது இருப்பதால், அந்த மொழியில் பேசுவது தடுமாறும். இலக்கண பிழைகளால் எதிரே இருப்பவருக்கு குழப்பமும், கேலியும் ஏற்படும். அது இன்னமும் மொழி அறிந்துகொள்வதை சம்பந்தப்பட்டவருக்கு தாமதப்படுத்தும் அல்லது மொழியறிவை தராதே போகும்.

ஒரு மொழியின் வளர்ச்சிக்கு படையெடுப்பு, வியாபாரம், மதமாற்றம் என்று பல விஷயங்கள் சரித்திரத்தில் சொல்லப்படு கின்றன. எல்லாவற்றையும்விட முக்கியமானது அந்த மொழி பேசுவோர் மீது வெறுப்பு இல்லாதிருத்தல் வேண்டும். அந்த மொழி பேசுவதற்குண்டான நல்ல வாய்ப்பும் மிக முக்கியம். அதே நேரம் வெறும் வியாபாரத்திற்காக மட்டுமல்லாது, அந்த மொழி பேசுவோர் மீது மற்றமொழி பேசுவோருக்குண்டான ஈடுபாடும் காரணமாக இருந்தது. அதனால் ஆங்கிலமும் நன்கு வளர்ந்தது. இதே போல் ஒரு மொழி மெல்ல கரைந்து காணாமல் போக, அந்த மொழி பேசுபவருடைய அக்கறையும், ஆளுமையும், அனுசரிப்பும் காரணம். சம்ஸ்கிருதம் வழக்கொழிந்து போனது அதில் சம்பந்தப் பட்ட மனிதர்களுடைய அனுசரணை இல்லாதது காரணமாக இருக்குமோ என்கிற கேள்வி ஆராயப்பட வேண்டிய ஒன்று.

ஒரு மொழியை அறிவதால் என்ன பயன்? புத்திக்கூர்மை முதலில் அதிகமாகிறது. பிறகு, நாகரீக பரிமாற்றங்கள் புரிபடுகின்றன. தான், தன் குரு என்பது போய் மனம் விசாலப்படுகிறது. எல்லா மனிதர்களுக்குள்ளும் அன்பும், அழுகையும், ஆற்றாமையும், ஆதரவு தேடுதலும் ஒன்றேதான் என்பது புரிகிறது. பிறப்பு கண்டு வியத்தலும், மரணம் கண்டு அஞ்சுவதும் எந்த மொழி பேசினாலும், உள்ளுக்குள்ளே இருப்பவை என்று பேசுகிறது. அப்பொழுது எல்லா உயிர்கள் மீதும் பாசம் நேசம் ஏற்படுகிறது. அதையும் தவிர பேசுவதற்கு அந்த மொழி எளிமையாக இருத்தல் வேண்டும். எழுதிப் படிப்பதற்கு இலக்கணங்கள் மென்மையானதாக இருத்தல் வேண்டும். ஆங்கிலம் வியாபாரமாக உள்ளே நுழைந்து, படையெடுப்பு நடத்தி, அரசாட்சி அமைத்து பழகுவதற்குண்டான ஆதரவை வெளிப்படுத்தியது மட்டுமல்லாது, அந்த மொழியினுடைய எளிமையும், அது சிறந்து பரவக் காரணமாக

இருந்தது. இதன் விளைவாய் அந்த மொழி பலம் பெற்றது. ஒரு மொழியின் பலம் என்பது அந்த மொழியிலுள்ள புத்தகங்கள் காட்டும் பல்வேறு விதமான விஷயங்களை சரித்திர, விஞ்ஞான, இலக்கியங்களை, கூறுகளை புத்தக எண்ணிக்கையில் அதிகரிக்க அதிகரிக்க அந்த மொழியின் பலம் கூடுகிறது. ஆங்கிலத்திலுள்ள புத்தகத்தின் எண்ணிக்கை உலகிலேயே மிகமிக அதிகம் என்பது எவராலும் மறுக்கப்பட முடியாத விஷயம். எனவே, விஷய ஞானம் வேண்டும் என்ற தவிப்பிலே, அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலிலே இருப்பவர்கள், ஆங்கிலம் பயிலவேண்டியது அவசியம்.

ஆங்கிலத்தில் நல்ல அறிவு வர, உலக இலக்கியத்தின் அண்மை அதிகமாகிறது. மற்ற கலாசாரங்கள் தெளிவாகப் புரிகின்றன. வியாபாரம் செய்வதற்குண்டான விஷயமாக மட்டும் ஆங்கிலமல்லாது உலகத்தின் இன்னொரு பகுதியை முற்றிலும் புரிந்து கொள்வதற்குண்டான சௌகரியமாகவும் இருக்கிறது.

நான் ஏன் மற்ற நாகரீகத்தை புரிந்துகொள்ள வேண்டும். நான், எனது பூமி, எனது மொழி, எனது மக்கள் என்று சிறிய வட்டத்தில் இறுகிக் கொண்டு இருக்கலாகாதா?

ஆஹா... இருக்கலாம். ஆனால், அது உங்களை வளர்க்கவோ, உங்கள் மொழியை வளர்க்கவோ பயன்படாது. அந்நியரும் உங்கள் மொழியை நோக்கி வர, அவர்களும் அறியத் துடிக்க உங்கள் மொழியின் மீது உங்களுக்கு காதல் அதிகரிக்கும். உங்கள் மொழியின் மீது உங்களுக்கு காதல் இருப்பது அவசியம். உங்கள் மொழிமீது உங்களுக்கு ஆளுமை இருப்பது நல்லது. உங்கள் மொழியினுடைய எல்லா பகுதிகளுக்குள்ளும் நீங்கள் போய் அந்த மொழியின் இலக்கணத்தை சிறப்பாக கட்டித் தேறுவதில் நிச்சயம் லாபம் உண்டு. ஆனால், நீங்கள் இன்னொரு மொழியையும் அறிந்துகொள்ள, உங்கள் மொழியின் சிறப்பு இன்னும் தெள்ளத் தெளிவாக புரியும். ஒரு மொழியின் சிறப்பை இன்னொரு மொழியின் சிறப்பு நிச்சயம் உதவும். அப்படிப் பார்க்க உலகத்தில் எல்லோரிடமும் எளிதாகத் தொடர்பு கொள்ளுகின்ற விஷயமாக ஆங்கிலம் இருக்கிறது. தமிழை வளர்க்க ஆங்கிலம் பழக்கலாம், தவறில்லை.



தாய்மொழியை நன்கு கற்று தேர்ச்சிபெற்றவர்கள் மற்ற மொழியைப் படிக்கும்போது தன் மொழியின் சிறப்பையும், தன் மொழிச்சிறப்பை மற்ற மொழிக்கு அனுப்பவும் மிக வேகமாக விரும்புவார்கள். தமிழின் மேன்மை - தமிழர்கள் அதை நன்கு பேசுவதால் மட்டுமல்ல... தமிழின் மேன்மையை மற்ற மொழிக்காரர்களுக்கு வெளிப்படுத்துவதும்தான்.

தமிழ் படித்தோருக்கு ஆங்கிலத்து வருகையால் தமிழில் நாட்டம் குறைய வாய்ப்பு இருக்கிறதா?

இருக்கிறது. இல்லையென்று சொல்வதற்கில்லை. ஆனால், வெகுகாலத்திற்கு இது நீடிக்காது.

தொன்மையான மொழிகளில் தங்களை வேகமாக புதுப்பித்துக் கொள்ளுங்கள். அதற்கான நல்லோர்களும், வல்லோர்களும் தோன்றுவார்கள். தன் மொழி அழிந்துவிடும் என்பதற்காகவே அடுத்த மொழியை அறியாமல் இருப்பது ஆரோக்கியமானதல்ல.

ஆங்கிலம் படிக்கப் படிக்க அந்த மொழியிலுள்ள பல விஷயங்களை தமிழுக்குக் கொண்டு வரவேண்டுமென்ற ஆவல் நிச்சயம் ஏற்படும். அட.... ஏன் இதுபோல் தமிழில் இல்லை என்ற எண்ணம் வரும். தமிழில் மொழியாக்கம் செய்ய வேண்டுமென்ற விருப்பமும் (மொழியின் மீது பெரிய ஆளுமை இல்லாதவர்களுக்கும் ஏற்படும்) மொழியில் ஆளுமை உள்ளவர்கள் ஆங்கிலத்திலிருந்து நல்ல விஷயங்களை தமிழுக்கு கொண்டு வருவார்கள். அப்பொழுது தமிழ் என்கிற தாய்மொழி இன்னமும் பலப்பட்டு நிற்கும். ரசாயனமோ, பௌதீகமோ, கணினியோ, தாய்மொழியில் வந்து உட்காரும்போது மொழி வளமும் விஞ்ஞான அறிவும் ஒருசேர அமைகின்றன. அதுவொரு குறிப்பிட்ட சமூகத்தை மிகுந்த நாகரீகமுள்ளவர்களாகவும், வன்மையுள்ளவர்களாகவும் மாற்றுகிறது.

கடவுள் பற்றி, பிரபஞ்சம் பற்றி, வாழ்வு பற்றி இலக்கியங்கள் சொல்வதை தமிழில் மொழிபெயர்த்து படிக்கும்போது, அடடே.... இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த பிரபஞ்ச சக்தியைப் பற்றி பேசியிருக்கிறார்களே... வாழ்வு குறித்து கவலைப்பட்டிருக்கிறார்களே என்று தமிழின் தொன்மையை உணரவும் ஏதுவாகிறது. இதைச் சொல்வதற்கு இத்தனை வரிகளா தேவைப்படுகின்றன.

இரண்டே வரிகளில் திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறதே என்ற பெரும் வியப்பு ஏற்படுகிறது. மொழியின் ஆளுமையும், அந்தக் கலாசாரத்து மனிதர்களின் புத்திக்கூர்மையும், அனுபவமும் நம்மை அதிரவைக்கின்றன. வடமொழியின் தாக்கம் இல்லாத சங்ககால தமிழ் நூல்களில்கூட கடவுளர் பற்றிய, பிரபஞ்ச ரகசியம் பற்றிய கேள்வி எழுப்புதல் இருப்பது தெரிய வருகிறது.

ஆங்கிலம் வெறும் வியாபார மொழியல்ல. உலக இலக்கியங்களை, வாழ்வியல் ஆதாரங்களை நாகரீக வளர்ச்சியை வரலாற்று மோதலை தெரிந்துகொள்வதற்குண்டான ஒரு நல்ல முயற்சி! அந்த சரித்திர மோதல்கள் நிச்சயம் தமிழில் வந்தாக வேண்டும். இரண்டாம் உலகப்போரின் அத்தனையும் ஆவணப் படங்களாக, வரலாற்றுப் புத்தகங்களாக தமிழில் வெளியிடப்பட வேண்டும். மனிதகுலம் தவித்ததை சொல்லும்போது தமிழ்மக்களின் வாழ்வியல் ஞானம் மேம்படும். இந்த உலகத்திற்கு தங்கள் கொடை என்ன என்று யோசிக்கத் தோன்றும். முன் சொன்னது போல வியாபாரத்தில் படையெடுப்பால், மதமாற்றத்தால் ஆங்கிலம் உலகத்தின் பல பகுதிகளில் வேரூன்றி பல நாகரீக தரங்களைத் தன்னுள்ளே புத்தகங்களாக கொண்டிருக்கிறது. ஆங்கிலம் அறிவது உலகியல் அறிவை வளர்க்கும். உலகியல் அறிவு வளர்வது ஒரு தாய்மொழியை தழைக்க வைக்கும். தாய்மொழியின் வளர்ப்பு, அந்த சமூகத்தை பலமுள்ளதாக புத்தியைக் கூர்மையுள்ளதாக, செயல்திறன் மிக்கதாகச் செய்யும்.

## 22

உலக உயிர்களின் ஆதாரமாக விளங்குவது காற்று. பிறகு நீர். அதற்குப் பிறகு வெளிச்சம். இந்த மூன்றும் மிகச் சரியான அளவில் ஒன்றாகக் கலந்து நமக்குக் கிடைக்கின்ற விஷயத்திற்குப் பெயர் தாவரம். உலகத்தில் எல்லா உயிர்களுக்கும் உணவு தாவரம். மாமிசம் உண்ணும் மிருகங்கள்கூட தாவரம் உண்ணும் விலங்குகளைத்தான் விரும்பி உண்கின்றன. மனிதர்களில் மாமிச



உணவு உண்போரும் புலி, சிங்கம் போன்றவைகளை கொன்று தின்பதில்லை. மாறாய் ஆடும், மாடும் மானும், முயலும் அவர்களுக்கு விருப்பமான உணவாக இருக்கின்றன. தாவரங்கள் தான் மாமிசமானாலும் அடிப்படை உணவாக இருக்கின்றன.

எனவே, உலக உயிர்களுக்கு உணவாக இருக்கின்ற தாவரத்தை நாம் நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். தாவரங்களின் வளர்ச்சி நடமாடும் எல்லா உயிரினங்களையும்விட மிகப் பெரியது. ஒரு விரல் நுனியில் இருக்கின்ற விதை வளர்ந்து செடியாகி மரமாகி, பெருத்த கிளைகள் விட்டு பிரமாண்டமாக டினோசர் போன்ற மிருகங்களைவிட வலிவுள்ளதாக வாழ்கிறது. அந்த மிருகங்கள் அழிந்துவிட்டன. ஆனால், தாவரங்கள் அழியவில்லை. எவ்வளவு இடையூறு மனிதர் செய்யினும் பெருத்த மரங்கள் வளர்வது நிற்கவில்லை. மரங்களின் இந்த உன்னதமான வளர்ச்சிதான் மனித குலத்தை இன்னும் உயிரோடு வைத்திருக்கிறது.

தாவரங்கள்தான் மனித குலத்தின் சரிவை இன்னும் தாலாட்டிக் கொண்டிருக்கிறது. நம்மை வளர்க்கின்ற, நம் அறிவை தாலாட்டுகின்றன. அந்தத் தாவரங்களுக்கு நாம் எவ்விதம் நன்றி சொல்கிறோம் என்பது மிகப் பெரிய கேள்விக்குறி.

மனிதர்களில் பெரும்பாலோர் தாவரங்களை குறித்த எந்த அக்கறையும் செய்வதேயில்லை. அரிசியும் கோதுமையும் கடைகளில் கிடைக்கின்றன. பருப்பு வகைகள் பாக்கெட்டுகளில் விற்கப்படுகின்றன என்றுதான் குழந்தைகளுக்குத் தெரிகிறதே தவிர, எங்கிருந்து வந்தது என்று சொல்லித் தருவதும் இல்லை. அவர்கள் கேட்பதும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் அரிசி பருப்போடுகூட தொடர்பு இல்லாது குழந்தைகள் வெறும் உணவோடு மட்டுமே தொடர்பு உள்ளவர்களாய் இருக்கிறார்கள். நெல்லி காய்ச்சு மரம் என்றால் நம்புவார்கள். பருப்பு வகைகள் கடற்கரையோரம் கிடைக்கின்றன என்றால் தேடுவார்கள். உளுத்தம் பருப்பை சிப்பிக்குள் தேடுவார்கள். தாவரம் பற்றி பட்டணத்துக் குழந்தைகளுக்கு தெரிவதில்லை. வயல்வெளியை ரயில்வண்டி ஓரம் இருக்கிற ஜன்னல் வழியே பார்ப்பதோடு வாழ்க்கையின் பெரும்பகுதி முடிந்து விடுகிறது. வெயிலிலிருந்து தப்பித்து அடைக்கலம் ஆவதற்கு மட்டுமே பெருமரங்கள்

விரும்பப்படுகின்றன. அப்பொழுதும் வெயிலிலிருந்து காப்பாற்றிய தற்குண்டான நன்றியை அந்த மரங்கள் பெறுவதுமில்லை. யாரும் சொல்வதுமில்லை.

வீட்டிற்குள் நுழைந்ததும் கிடைக்கின்ற ஏ.ஸி-யின் குளுமை மரத்தின் நிழலை காணாமல் அடித்துவிடுகிறது. குழந்தைகளுக்கு மரங்கள் பற்றி, தாவரங்கள் பற்றி சொல்லித் தர வேண்டும். அப்படிச் சொல்வதற்கு முன்பு நன்கு வளர்ந்தவர்கள், படித்தவர்கள் தாவரங்களோடு ஸ்நேகிதம் கொள்ள வேண்டும். பிரமாண்டமான மரங்களைப் பார்க்கும்போது கையெடுத்துக் கும்பிட வேண்டும். சிக்கித் தழுவி படர்கின்ற கொடிகளைப் பார்த்து அருகே போய் குசலம் விசாரிக்க வேண்டும். செடிகளோடு பேச வேண்டும். அவைகளுக்கு தலை வருட வேண்டும். புற்களின் ஓரம் நடந்து நலமா என்று கேட்க வேண்டும்.

தாவரங்களோடு பேசுவது என்பது மனிதர்கள் செய்வதே யில்லை. பட்டணத்து மனிதர்கள் பரபரப்பாக இருப்பதால் பேசுவதேயில்லை. கிராமத்து மனிதர்கள் 'இத்தோட ஏன் பேசறது...' என்ற புறக்கணிப்பில் பேசுவதில்லை. பழங்குடி மக்கள் தாவரங்களோடு பேசுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆப்பிரிக்காவில் பழங்குடி மக்கள் வேகமாக ஓடிக்கொண்டு போய் சட்டென்று ஒரு மரத்தினடியில் அதில் முதுகைச் சாய்த்து சிறிதுநேரம் அதோடு உரக்கப் பேசிவிட்டுப் போவார்களாம்.

'என் அப்பாவுக்கு அப்பா இளைப்பாறிய மரம். உனக்கும் உன் பிள்ளைக்கும் இளைப்பாறல் தரும்' என்று மகனிடம் சொல்வார் களாம். மரம் சந்தோஷப்படுமாம்.

மனிதர்களுடைய ஆயுட்காலத்தைவிட மூன்று மடங்கு நான்கு மடங்கு அதிகமானது மரத்தின் ஆயுட்காலம்.

மரங்கள் பதிலுக்குப் பேசுமா?

பேசும். இலைகளை உதிர்க்கும். பூவாய் மலரும். இன்னும் அதிகம் கிளை பரப்பி நிழல் தரும். காற்றில் சலசலக்கும். வீடாகவும், விறகாகவும் மாறும். மரங்களை மனிதர்கள் நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். தொடர்ந்து காபந்து செய்ய வேண்டும் மரங்கள்தான் மழையை வரவைக்கும். யாக சாலைகள் பிரார்த் தனைகள்தான் பூமிக்கு நீரைக் கொண்டுவந்து கொடுக்கின்றன. தேவதைகள் மேகங்களை மயக்கி தன் வசம் இழுக்கின்ற சக்தி மரங்களுக்கு மட்டுமே உண்டு. தங்களுக்கென்றுதான் மேகங்களை நோக்கி தண்ணீரைக் கேட்கின்றன. ஆனால், உலகமே குடித்து மகிழ்கின்றது.



நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை... என்று குறள் கூறுகிறது. இந்த பூமியில் நல்லார் என்பவர் மனிதரல்லர். தாவரங்கள் மட்டுமே. மரங்களைக் கும்பிடுவது மட்டும் போதுமா?

இல்லை. தாவரங்களோடு நெருங்கிய ஸ்நேகிதம் கொள்ள வேண்டும். வீட்டிற்கு வீடு தாவரம் வளர்க்க வேண்டும். அடுக்குமாடி வீடு இருந்தாலும் ஒரேயொரு தொட்டி வைத்து ஒரு செடியாவது வளர்க்க வேண்டும் அல்லது மேல்மாடியில் வரிசையாக தொட்டி வைத்து விதம்விதமான வண்ணமலர்கள் வளர்க்க வேண்டும். அல்லது வீட்டில் தோட்டமிருப்பின் அதை பாழாய் விடாது பக்குவமாய் திருத்தி நீர்பாய்ச்சி காய்கறிகளும் கனிவகைகளும், பூச்செடிகளும் வளர்க்க வேண்டும். வீடு சுற்றிலும் தோட்டம், நிழல் தரும் மரங்கள், நீர் கொடுக்கும் தென்னைகள் பூங்கொடுக்கும் செடிகள் இருப்பின் வாழ்வு ரம்மியமாக இருக்கும். கோபத்தை தாவரங்கள் வெகுவாக குறைக்கும். வெறுமே தாவரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும். மௌனமாக இருப்பது எப்படியென்று தாவரங்கள் சொல்லித் தரும்.

வெறும் பூக்களாய் புன்னகை செய்கின்ற தாவரங்களை உற்றுப்பார்க்க நம்முள் வேறு மொழி தோன்றும். அது சலசலக்காது. வம்பு சொல்லாது. புறம் கூறாது. நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கும். கண்ணுக்கு குளுமையானது மணல்வெளியா, கடல்நீலமா, ஆகாயத்தின் கருமையா, மேகங்களின் அணி வகுப்பா, மலைகளின் செம்மையா எதுவுமில்லை. தாவரங்கள் அணிவகுத்திருப்பின், தாவரங்கள் கைகோத்து நிற்பின் அவை களை இடையறாது... இடையறாது பார்த்துக் கொண்டிருக்கலாம்.

சந்தையில் நமக்குக் கிடைப்பவை நான்கு நாட்களுக்கு முன்பு பறித்த காய்கள். பத்து நாட்களுக்கு முன்பு பறித்த பழம். இரண்டு நாட்களுக்கு முன்பு பறித்த பூ. ஆனால், வீட்டில் தோட்டம்

இருப்பின்... அன்று பறித்த கத்திரிக்காயும், கொத்தவரங்காயும், பாகற்காயும் தனி ருசியில் இருப்பதை கண்டுகொள்ள முடியும். காலையில் பறித்த மலர்களை பூஜைக்கு வைக்கும்போது அத்தனை வாசனை. அத்தனை சௌந்தர்யம் மிளிர்வதை காணமுடியும்.

செங்காயாக பறித்து ரசாயனத்தால் பழுக்க வைக்காது மரத்திலேயே கனிந்து சாப்பிடுகின்ற கனியின் ருசியே தனி. சொட்டு நீர் பாசனம். குறைந்த அளவு உழைப்பு. ஒரு கூடை உரம் போதும்... தாவரங்கள் செம்மாந்து நிற்கும்.

''என்ன பூவே காணோம். நாளைக்காவது கொஞ்சம் நாலஞ்சு பூ கொடுங்களேன்'' என்று செடிகளிடம் பேசுங்கள். செடிகள் நிச்சயம் பூ விடும்.

''என்ன பத்து மாம்பழம் தர்றீர். உம்ம வளர்ச்சிக்கு நூறு நூத்தம்பது தரவேண்டாமா?'' என்று மரத்திடம் பேசுங்கள். கொத்துக் கொத்தாய் காய்க்கும்.

தாவரங்கள் அத்தனை உணர்வு மிக்கவை. உடம்பு முழுவதும் செவியாய் நாம் பேசுவதை கேட்பவை. நாம் நேசிக்கிறோமோ இல்லையோ, தாவரங்கள் மனிதர்களை நேசிக்கின்றன. அதனால்தான் இன்னும் இடைவிடாது காலம்காலமாய் தங்களை எல்லா வேதனைகளிலிருந்தும் மீட்டெடுத்து வளர்த்துக் கொண்டு வருகின்றன. இனியாவது தாவரங்களை நேசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். தாவரங்களோடு பேசக் கற்றுக் கொள்ளுங்கள். ஒரு செடியாவது வீட்டில் வளர்த்து, தாயே துளசியம்மா! உன்னை வணங்குகின்றேன் என்று சொல்லுங்கள்.

கொடியைக் கிள்ளி தொட்டியில் விட்டு தண்ணீர் விடுங்கள். மணிபிளாண்ட் என்பது ஆறு மாதத்தில் வீடு முழுவதும் படர்ந்துவிடும். மேல்மாடியில் இடமிருப்பின் இரண்டு நந்தியாவட்டை, இரண்டு அரளிச்செடி, ஒரு மல்லிகைக் கொத்து. செம்பருத்தி என்று வளர்க்க... அவைகளைக் கொண்டாடுவது மிகச் சந்தோஷமாகப் போய்விடும். மனிதர்களுக்கு வாசனையுள்ள மலர்களாய் அவைகளும் நம்மைக் கொண்டாடும்.

பெரிய தோட்டம் வேண்டாம். பத்து தொட்டி போதும். அவைகளைப் பார்த்துக்கொண்டிருப்பதே பல தொலைக்காட்சி நிகழ்வுகளுக்கு சமானம்.



# 23

ஒரு மனிதனுடைய கம்பீரம் எங்கிருக்கிறது. காசா, அசையும் அசையா சொத்துகளா. படிப்பா... பகட்டான உடைகளா... நல்ல கூட்டமா... நல்ல வழித்தோன்றல்களா? எது அவனை கம்பீர மாக்குகிறது. இவை அனைத்தையும் அனுபவிக்க வேண்டு மென்றால் ஒரு மனிதனுக்கு திடமான, உறுதியான உடல் வேண்டும். திடமான, உறுதியான உடல் என்பது என்ன? பிருஷ்டத்தின் கொழுப்பு. இடுப்பின் வலிவு. தோளின் அகலம். புஜங்களின் தினவு. முகத்தின் மலர்ச்சி. கண்களின் ஒளி. கைகளின் உறுதி. கால்களின் வீச்சு. உணவின் செரிமானம். புணர்ச்சிக் குண்டான திமிர். இதுதான் கம்பீரமானவை. இவையல்லாது முன்சொன்ன காசோ, சொத்துகளோ, வழித்தோன்றல்களோ, பெருங்கூட்டமோ எந்தப் புண்ணியமும் இல்லை.

உறுதியான உடம்பு இல்லாவிட்டால் பெருங்கூட்டம் கவிழ்த்துவிடும். கம்பீரத்தை உடம்பிலிருந்துதான் கவனிக்க வேண்டும். ஆனால், ஒரு மனிதன் எவ்வளவு நாள் கம்பீரமாக இருக்க முடியும். எந்த வயதுவரை கம்பீரமாக இருக்க முடியும்? பத்து வயதின் ஓட்டம் இருபது வயதில் இல்லை. இருபது வயதின் வலிவு முப்பதில் தளரும். முப்பதின் தளர்வு நாற்பதில் அதிகரிக்கும். நாற்பதில் அதிகரித்த தளர்வு ஐம்பதில் மிகப் பெரிதாய் ஆட்டங்காணும். ஐம்பதில் ஆட்டங்காட்டிய உடம்பு அறுபதில் ஒடுங்கத் தொடங்கும். அறுபதில் ஒடுங்கியது எழுபதில் இன்னும் சுருங்கத் துவங்கும். எண்பது என்பது வெறுமே இருத்தல். எண்பதுக்கு மேல் வாழ்தல் இறைவனால் கொடுக்கப்பட்ட மெல்லிய தண்டனை. எழுபதிலிருந்து எண்பது வயது வரை மனிதர்களுடைய வேதனையை முப்பது வயது மனிதர் நிச்சயம் புரிந்துகொள்ள வேண்டும்.

மரணத்தைக் கண்டு நமது பெரியோர்கள் பயந்ததில்லை. மாறாக, கிழப்பருவம் குறித்து பெரிதும் கவலைப்படுகிறார்கள்.

தொந்தி சரிய மயிரே வெளிற
தந்தம் அசைய முதுகே வளைய இதழ்
தொங்க வொருகை தடிமேல் வரமகளிர் நகையாடி

என்று கிழவர் நடந்து வருகிறார். இளமையான மகளிருக்கு வேடிக்கையாகப் போகிறது. சிரிப்பாக இருக்கிறது. எதற்கு கிழவன் இந்த நேரத்தில் என்று முகம் சுருக்குகிறார்கள். அந்த கிழவன் இரும ஆரம்பித்துவிடுகிறான். யார் அந்தக் கிழவன் என்று அலுத்துக் கொள்கிறார்கள். 'இப்படியொரு மோசமான நிலைக்கு நான் ஆளாவதற்கு முன்பு இப்படி ஆளாகி எமதூதர்களுக்காக தவித்துக்கொண்டு கிடக்கிறபோது தயவுசெய்து முருகா! நீ வந்துவிட வேண்டும்' என்று அருணகிரிநாதர் பாடுகிறார்.

மரணத்தைவிட கொடுமையானது முதுமை. தோழமையை தொலைத்த நிலை முதுமை. முதுமையில் தோழமை இருக்காது. இருந்தாலும் பிடிக்காது. தனிமைதான் முதுமையின் நேசம்.

ஏன் முதுமையில் தனிமை வருகிறது.

இளமை எதிர்காலத்தில் இருக்கிறது. முதுமையோ கடந்த காலத்தில் இருக்கிறது. நிகழ்காலத்தில் இருப்பதற்கு வெகு சில மனிதர்களுக்கே தெரியும். அப்படி இருப்பவர்கள் பாக்கிய வான்கள். எதிர்காலத்தில் இருப்பவர்களுக்கு அதிகம் பேச்சும், ஆவலும், பரபரப்பும் இருக்கும். கடந்த காலத்தில் இருப்பவர் களுக்கு பேச்சு குறைந்து கடந்த காலத்தின் நிகழ்வுகள் விரிந்து இப்படி இருந்திருக்கலாம்... இப்படி வாழ்ந்திருக்கலாம்... இப்படிப் பேசியிருக்கலாம்... இப்படிச் செய்திருக்கலாம்... குற்ற உணர்வு அதிகரித்து பட்ட வேதனையும், படுத்திய பாடுகளும் மெல்ல மெல்ல புத்தியில் வட்டமிடும். அது மனதை தளர்விக்கும். மனதின் தளர்ச்சியால் உடம்பும் தளரும். ஒழுகுகின்ற எச்சிலை உறிஞ்சிக் கொள்ள மறந்துவிடும். கால் அலம்பும் கவனம் இருக்காது. சளி ஒழுகும். கண்பீளை அதிகரிக்கும். காது கேட்காது. மனம் எங்கோ லயித்துக்கிடக்கும். குடும்பத்தினர் பெயர் ஞாபகம் இருக்காது. உறவு பற்றி தெளிவிருக்காது. சிலருக்கே தன் பெயரே மறந்து போகும்.

எனக்குத் தெரிந்து ஒரு எண்பது வயதுப் பாட்டி, தன் பெயரை குரங்கு குசலா என்று சொல்வார். என்ன... என்ன... என்று கேட்டால், என்னை என் கணவர் அப்படித்தான் அழைப்பார். எனக்கு அதுதான் ஞாபகமிருக்கிறது. என் பெயர் மறந்துவிட்டது என்று சொல்லி அழுவார். நல்லன மறந்துவிடும். துக்கம் ததும்பி நிற்கும். இருப்பவை தெரியாது. இழந்தவையே நினைவில் ஓடும்.



"அவ என்னை எட்டு படி உளுந்து அரைக்கச் சொன்னாடி... என்னை எட்டு படி உளுந்து அரைக்கச் சொன்னாடி..." என்று மரணத்தின் கடைசி நேரம் வரை புலம்பிக்கொண்டிருந்த மூதாட்டியையும் நான் அறிவேன்.

தென்னை மரத்திற்கு எதிரே நின்று, "மை டியர் பிரைம் மினிஸ்டர். ஐயம் ஃப்ரம் டமிள்நாடு" என்று தனக்குத்தானே பேசிக்கொள்கிற கிழவர்களும் உண்டு. அவர் கடைசிவரை பிரதம மந்திரியை சந்திக்கவே இல்லை. சந்திக்கும்படியான யோக்கியதை வரவேயில்லை. நிறைவேறாத அந்த ஏக்கத்தை, நினைவில் தங்கிவிட்ட ஆசையை அவர் வெறுமே தென்னை மரம் பார்த்து தீர்த்துக்கொள்கிறார்.

அந்த சோகம் உங்களுக்குப் புரிகிறதா? உங்களுக்கு இந்த சோகம் வந்தால்தான் புரியுமா? அப்படி நேர வேண்டாம். அப்படி நேராதிருக்க இப்பொழுது உறுதிகொள்ள வேண்டும்.

என்ன உறுதி?

முதியோரை மதித்தல். வலியபோய் உதவி செய்தல். தாங்குதல். ஆறுதலாக பல வார்த்தை பேசுதல். சிறியதாய் பெரியதாய் உதவிகள் செய்தல்.

"உங்களுக்கு எண்பது வயதா? பார்த்தால் அப்படித் தெரியவில்லையே. உற்சாகமாக இருக்கிறீர்களே. எல்லோருக்கும் இந்த வயதில் கை நடுங்கும். நாற்பது வயது நபர்களுக்கு நடுங்குகிறது. நீங்கள் அதோடு ஒப்பிட்டுப் பார்த்தால் வெகு ஆரோக்கியமாக இருக்கிறீர்கள்" என்று அணைத்துக் கொள்ளுங்கள்.

தொடுதல் முதியோர்களுக்கு மிகப் பெரிய நெகிழ்ச்சியைத் தரும். அணைத்துக்கொண்டால் உள்ளே ஆடிவிடும். கை கோத்து அமர்ந்தால் மிகமிக சந்தோஷமாக இருக்கும். அன்பு செய்வதற்கு காசா... பணமா. சொத்தையா எழுதிக் கேட்கிறார். இல்லையே... இம்மாதிரி சிறிய செய்கைகள்தானே.

வயதான என் தாயிடம் அடிக்கடி நான் பேசுவேன். எதையாவது விவாதிப்பேன். அந்த விவாதத்தில் தோல்வியுறுவேன். அப்படியா... என்று அவர் பேச்சுக்கு வியப்பேன். குறுந்தொகை பாடல் கேட்பேன். ஆசிரியையாக வாழ்ந்தவர் அல்லவா... எப்போதும் ஆசிரியையாகவே இருக்க வேண்டுமென்று ஆசைப்படுபவர்.

மாணாக்கர் இல்லை. அதனால் என்ன. நான்தான் அவருக்கு மாணாக்கன். எனக்கு மாலைகள் வரும். சால்வைகள் விழும். மறக்காமல் எடுத்து வைத்துக்கொண்டு வருவேன். வீட்டிற்கு வந்து அம்மாவிடம் மாலை போட்டு சால்வை அணிவிப்பேன். அப்படியொரு சிரிப்பு... பொக்கைவாய் சிரிப்பு.

''நான் எதுக்கெல்லாம் ஆசைப்பட்டேனோ அதெல்லாம் உனக்கு கிடைச்சுருக்குடா'' என்று கண்பனிக்கப் பேசுவாள்.

''இது எனக்குக் கிடைத்ததல்ல. உனக்குக் கிடைத்தது. இது நீ எனக்குக் கொடுத்தது'' என்று சொல்ல, கண்கள் பிரகாசமாகும்.

முதியோர்களுக்கு அவர்களுடைய குழந்தைகள்தான் பலம். உங்கள் தாய், தந்தையரை கொண்டாட முடியவில்லையெனில் வேறு யாரைக் கொண்டாடியும் எந்தப் பயனும் இல்லை. உங்கள் பொருட்டு பல வலிகளைத் தாங்கிக்கொண்டு ஈன்று வளர்த்த உங்கள் தாயைக் கொண்டாடவில்லையெனில் வேறு எந்தத் தெய்வத்தைத் தொழவும் உங்களுக்கு அருகதை இல்லை. தெய்வம் மனுஷ்ய ரூபேண... தெய்வம் மனித வடிவில் இருக்கிறது. அதுவும் தாய் வடிவில் இருக்கிறது. எழுபது வயது தாய்க்கு தீபாவளிக்கு பட்டுப்புடவை வாங்கிக் கொடுங்கள். உங்களுக்குப் பருத்தி ஆடைகள் போதும். அன்று கட்டிக்கொண்ட பட்டுப்புடவை உங்கள் நெஞ்சில் ஒட்டிக்கொள்ளும். அவர் சந்தோஷம் உங்கள் புத்தியில் தைத்து நிற்கும்.

தாய் தந்தையர் இறந்துபோனார்களா. முதியோர் இல்லத்திற்கு போங்கள். அங்கிருக்கும் தாய் தந்தையர்களை கொண்டாடுங்கள். ஆயிரம் ஆயிரம் தாய் தந்தையர்களை அங்கே நீங்கள் காணலாம். இன்னொரு மிகப் பெரிய ரகசியமும் இருக்கிறது.

உங்களுக்கும் வயசாகும். உங்களுக்கும் முதுகு வளையும். உங்களுக்கும் இதழ் தொங்கும். உங்களுக்கும் ஜொள்ளு ஒழுகும். உங்களுக்கும் கண்பார்வை மங்கும். கை நடுங்கும். இன்று இருக்கின்ற சதைத் திமிர் முதுமையில் இருக்காது. எனவே, உங்கள் மனது ரகசியமாய் உங்களுடைய முதுமைக்கு தன்னைத் தயார் படுத்திக் கொள்ளும். கை கால்கள் நடுங்காமல் இருக்க இப்போதே நல்ல பழக்கங்கள் என்ன என்று தெரிந்து கொள்ளும். ஏதேனும் ஒரு முதியோர் இல்லத்தில் விலாசம் இருப்பதற்குப் பதிலாக



இப்பொழுதே மிகச் சரியான விலாசத்தில் மிகத் தெளிவான வாழ்க்கையில் உங்களை நிலைநிறுத்திக்கொள்ள பாடுபடுவீர்கள்.

முதுமையும், மரணமும் நிச்சயம் உண்டு. எப்படி காபந்து செய்துகொள்ள வேண்டும், துன்பப்படாமல் எப்படிக் காத்துக் கொள்ள வேண்டும் என்று நீங்களே வேகமாக தயாராகி விடுவீர்கள். அடிக்கடி முதியோர் இல்லம் போக, அடிக்கடி கிழவர்களை உற்றுப்பார்க்க, அடிக்கடி அவர்களோடு ஸ்நேகம் கொள்ள, உங்களுக்கு அந்த விஷயங்கள் புரிந்து, உங்களுக்கேற்ற படியான வாழ்க்கையை வெகு அழகாக நீங்கள் தீர்மானிப்பீர்கள். உங்கள் முதுமைக் காலம் துக்கமில்லாது சந்தோஷமாக எப்போது வேண்டுமானாலும் வா என்று மரணத்திற்கு சவால் விடுகின்ற ஒரு வாழ்க்கையாக இருக்கும். மரணத்தை ஜெயிப்பது என்பது மரணம் வராமல் தடுப்பதல்ல. மரண பயத்தை ஜெயிப்பது. ''அப்போ நான் வரேங்க'' என்று கைகூப்பி விடைபெறுவது.

அன்புதான் இதற்குண்டான ஒரே மருந்து. இந்த அன்பை முதியோர்களுக்கு கொடுக்கக் கொடுக்க உங்களுக்குள் அதிகம் வளர்வதைக் காண்பீர்கள். தோண்டத் தோண்ட ஊருணி... செய்யச் செய்ய அன்பு.

அன்பு செய்தலை முதியோரிடம் ஆரம்பிப்போம். வாழ்வின் மற்ற எல்லா இடத்திற்கும் அது பரவும்.

## 24

பற்களில்லாத சின்னஞ்சிறிய சிரிப்பு. பட்டுப்போன்ற கன்னம். விரிந்த விழிகள். குழைந்த வயிறு. மெத்மெத்தென்ற பிருஷ்டம். சின்ன அதிர்வு கேட்டாலும் அழத் துவங்குகின்ற சுபாவம். மணி ஒலித்தால் வியப்போடு சிரிக்கின்ற குணம். அள்ளி அணைத்துக் கொண்டால் ஆனந்தம் பொங்கிப் பரவுகிறது. அடுத்தவர் வீட்டுக் குழந்தையாக இருந்தாலும், அடி... என் தங்கமே என்று கொஞ்சத் தோன்றுகிறது.

தளர்நடையும் கைக்கொட்டலும் வியப்போடு வானம் பார்த்தலும் சந்திரனைக் கண்டு 'ஹா... ஹா...' என்று ஆனந்தப்

படுவதும்... 'சாஞ்சாடம்மா... சாஞ்சாடு....' என்கிற தலையாட்டாலும் பல மொழிகளில் கவிதையாக இருக்கின்றன. பெண்களை வர்ணித்து எழுதிய கவிதைகளுக்கு இணையாக குழந்தைகளைக் கொண்டாடிய கவிதைகளும் இருக்கும் என்பது என் அபிப்பிராயம்.

ஏன் நமக்கு குழந்தைகளை பிடிக்கிறது. நாமெல்லாம் குழந்தைகளாக இருந்தோம் என்பதாலா...

இருக்கலாம்.

நமக்கெல்லாம் இருக்கிற பொறுப்புகள் குழந்தைகளுக்கு இல்லை. நிம்மதியாக இருக்கின்றன என்கிற பொறாமையாலா...

இருக்கலாம்.

ஆனால், குழந்தைகள் உலகம் அப்படிப்பட்டதா. நிம்மதியானதா?

இல்லை என்கிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள். குழந்தைகளுக்குப் பரிமாறத் தெரியவில்லை. அவைகளுக்கு மொழியில்லை. அவைகளுடைய ஒரே மொழி அழுகையும், சிரிப்பும்தான். பசிக்கிறது என்றால், அழத்தான் தெரியும். எவ்வளவு வலிக்கிறது என்று கேட்டால், சொல்லத் தெரியாது. எங்கே வலிக்கிறது என்று கேட்டால், சுட்டிக்காட்டத் தெரியாது. பயந்து மிரட்சியில் குழந்தை அலறும். என்ன பயம், எது குறித்த அச்சம் என்று சொல்லத் தெரியாது.

நமக்கும் குழந்தையின் மொழி தெரியவில்லை. பார்த்துப் புரிந்து கொள்ளும் பக்குவமில்லை. குழந்தை சிரிக்கும்போது ஏதோ சிரிக்கிறது என்றுதான் தெரியுமே தவிர, எதைக்கண்டு ஆனந்தப்படுகிறது என்பதை லேசாகத்தான் ஊகிக்க முடியும். எனவே, இயல்பாகவே நமக்கும் குழந்தைக்கும் ஒரு இடைவெளி இருக்கிறது. குழந்தையைப் பற்றி பெற்ற தாய்க்குத் தெரியாதா என்று வசனம் பேசுவார்கள். குழந்தையின் அழுகையைப் பற்றி தெரியாமல் பேய்முழி முழிக்கின்ற தாய்மார்களை பார்த்திருக்கிறேன் வயதானவர்கள் இதில் வல்லுனர்கள் என்றும் சொல்வார்கள். பெரும்பாலனவர்களுக்கு குழந்தைகளினுடைய விஷயங்கள் கேள்விக்குறி. அந்தக் குழந்தை அவர்கள் இருக்கும் உலகம்விட்டு மெல்ல மெல்ல நம் உலகத்திற்கு வரும். நாம் பேசுகின்ற மொழி, நம்முடைய செய்கைகள், நம் குரலின் ஏற்ற இறக்கங்கள்



புரிந்துகொண்டு நம்மை உற்றுப்பார்த்து மனதில் பதியவைத்துக் கொண்டு அவைகளும் அப்படிப் பேசத் துவங்கும்.

கிட்டத்தட்ட ஒரு வயதுக்கு மேல்தான் நம் உலகிற்கு வருகிறது. நாம் ஏதோ சாப்பிட்டுக் கொண்டிருந்தால் அருகே வந்து வாயை உற்றுக் கவனித்து வாய்க்குள் விரலைவிட்டு என்ன சாப்பிடுகிறாய் என்று தேடுகிறது. தா என்று கேட்கிறது. தரமாட்டேன் என்று ஒளித்துக்கொள்கிறது. காணோமே... என்று கண்ணைப் பொத்திக் கொள்கிறது. கண்டுபிடி... என்று ஓடி ஒளிந்துகொள்கிறது. மெல்ல மெல்ல நம்முடைய உலகத்திற்கு அடியெடுத்து வைக்கும்போது தான்... இங்கே வலிக்கிறது, வயிறு பசிக்கிறது, எனக்கு சாக்லெட் கொடு, என்னை வெளியே அழைத்துப் போ, நிலா காட்டு என்றெல்லாம் அதனிடமிருந்து கோரிக்கைகள் வருகின்றன. வயதாக வயதாக குறும்புத்தனங்கள் அதிகமாகின்றன. நம்முடைய குணங்கள் அந்தக் குழந்தைகள் மீது ஏறிவிடுகின்றன.

என்னுடைய நண்பர் ஒருவரின் குழந்தைக்கு கத்திரிக்கோல் என்றால் உயிர். எங்கு கத்திரிக்கோல் பார்த்தாலும் அந்தக் குழந்தை எடுத்து ஒளித்து வைத்து விடுவான். கத்திரிக்கோலினுடைய அசைவும், அவனால் நறுக்கப்படும் காகிதங்களும் அவனுக்கு பெரும் சந்தோஷத்தை கொடுக்கின்றன. ஒரு முறை விரல்நுனியை வெட்டிக்கொண்டபோதும் கத்திரிக்கோல் மீது அவனுக்கிருந்த காதலை நகர்த்த முடியவில்லை. போன ஜென்மத்தில் இவன் என்னவாக பிறந்திருப்பான் என்ற விவாதம்கூட அந்த வீட்டில் நடைபெற்றது. ஆனால், அதுபற்றியெல்லாம் அவன் கவலைப் படாது எங்கே போனாலும், யார் வீட்டிற்குச் சென்றாலும் அவன் கத்திரிக்கோலை கவர்ந்து எடுப்பதிலேயே குறியாக இருந்தான்.

இன்னொரு குழந்தை இருக்கிறாள். அவளுக்கு குப்பைத் தொட்டியில் ஏதாவது கொண்டுபோய் போடுவது என்றால் மிகவும் பிடிக்கும். நடுவீட்டில் எது இருந்தாலும் கொண்டுபோய் குப்பைத் தொட்டியில் போட்டுவிடுவாள். அதைத் தடுக்க முடியாது என்று தெரிந்தும் வீட்டிலேயே பெரிதாய் ஒரு பிளாஸ்டிக் குப்பைத் தொட்டி வாங்கினார்கள். 'போடணும்னு தோணிச்சுன்னா இதுல போடு' என்றார்கள்.

என் பேரன் ஆகாஷுக்கு கத்திச்சண்டை என்றால் கொள்ளை விருப்பம். எந்த சினிமாவில் எங்கே பார்த்தானோ, எந்த

ஜென்மத்து வாசனையோ தெரியவில்லை. மெல்லிய பிரம்பை இடுப்பில் நிக்கரில் சொருகிக்கொள்வான். அப்படி நிக்கர் இல்லாவிட்டால் அரணாகயிறில் சொருகிக்கொள்வான். குத்திக்கொண்டுவிடப் போகிறானே என்று என் மகள் அவனுக்கு ஜட்டி போட்டு விடுவாள். சட்டையும், ஜட்டியும், இடுப்பில் கத்தியுமாய் தொடைதட்டி நடுக்கூடத்தில் உர்ரென்று... அவன் நிற்கும்போது எங்கள் சோழ தேசத்து தளபதி என்றுதான் தோன்றும். ராஜராஜ சோழனின் மெய்க்காவல் படையோ என்றுதான் தோன்றும். அவன் கத்தியை உருவினால் எதிரே இருப்பவர் காலில் பட்டைபட்டையாக விளாசி விடுவான். பதிலுக்கு நாம் அவனை அடிக்கக் கூடாது. சில சமயம் அவன் அடிப்பது பலமாகவே இருக்கும். என்ன செய்வது, பேரப்பிள்ளை யாயிற்றே... வாங்கிக் கொண்டுதான் தீரவேண்டும்.

ஆனால், பின்னால் வந்து பேரப்பிள்ளை லொட்டென்று அடித்ததற்காக சூடுபோட்ட தாத்தாவெல்லாம் உண்டு. 'அப்போதான் இன்னொரு தடவை பண்ணமாட்டான். பயமிருக்கும்' என்று அந்த குரூரத்திற்கு அவர் விளக்கம் சொன்னார்.

குழந்தைகளோடு உறவு கொள்வதற்கு அடிப்படையான தேவை பொறுமை. அடுத்தபடியான தேவை. குழந்தைகளாக மாற வேண்டுமென ஆசை. குழந்தை தவழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதற்காக அவன் முகத்திற்கு நேரே தன் முகம் இருக்க வேண்டு மென்பதற்காக, தானும் தவழ்ந்து நடக்கின்ற பெரியவர்களை நான் அறிவேன். பார்ப்பதற்கு வினோதமாக இருந்தாலும் அது ஒரு கருணையின் வெளிப்பாடு. குழந்தைகள் உலகத்தை புரிந்து கொள்ளும் முயற்சி. அம்... என்று தான் ஒரு வாய் சாப்பிட்டு குழந்தைகளுக்கு ஐந்து வாய் கொடுக்கின்ற தாய்மார்களும் இம்மாதிரி அன்பை பொழிகிறவர்களே.

'இன்னும் அஞ்சு நிமிஷத்துல கிண்ணம் காலியா இருக்கணும். இல்லைன்னா திருகிடுவேன்... திருகி' என்று அதட்டுவதில் நஷ்டம் குழந்தைக்கு அல்ல... அவர்களுக்கு. குழந்தை வளர்த்தலைத் தவிர தனக்கு மிகப் பெரிய வேலைகள் இருக்கின்றன என்கிற அலட்டல் தான் இதற்குக் காரணம். எந்த உலகம் போனாலும், அடுத்த வருக்காக உழைத்தாலும் குழந்தைகளை அதனுடைய போக்கிலேயே கவனித்து சீராட்டியபடியே வளர்க்க வேண்டும்



என்பது ஒரு கலை. தெரியவில்லை எனில், உங்கள் அடுத்த தலைமுறை கேள்விக்குறியாகத்தான் இருக்கும்.

ஆறு மாதத்திலிருந்து ஆறு வயது வரை உங்கள் குழந்தைக்கு என்ன சொல்லித் தருகிறீர்களோ, எவ்விதமாக வளர்க்கிறீர்களோ, எந்த வழிக்கு கொண்டு போகிறீர்களோ அதை ஒட்டித்தான் அவன் வாழ்வின் மற்ற பகுதிகளும் இருக்கும் என்பது ஒரு உண்மை. "ஒரு வயதுக் குழந்தை மூக்கை அறுத்துடுவேன், சப்புனு அறைஞ் சுடுவேன், கன்னத்தை கிள்ளுவேன்" என்று முரட்டுத்தனம் காட்டினால் அது வானத்திலிருந்து வந்த விஷயமாக இருக்காது. அம்மாவோ, அப்பாவோ சொல்லிக்கொடுத்ததாகத்தான் இருக்கும். அண்ணன் தங்கைகூட இவ்விதம் பேசக்கூடாது என்பது அவர்களுக்கும் பாடம், குழந்தைக்கும் நல்லது.

"சோழ சாம்ராஜ்ஜியத்தின் நடுவே நின்றுகொண்டிருக்கிறேன். நான் எழுதும் கதைக்கு இடைஞ்சலாக இருக்காதே" என்று சொல்லி குழந்தையின் காதை தூக்கிக்கொண்டு போய் தெருவிலே விட்டாராம், ஒரு எழுத்தாளர். எழுதும் திறமையிருப்பின் குழந்தையை மடியில் வைத்துக்கொண்டே சோழ சாம்ராஜ்ஜியத்தை எளிதாக எழுதிவிடலாம். குழந்தையைக் கொஞ்சியபடியே டென்னிஸ் மேட்ச் பார்க்கலாம். அழும் குழந்தையை வராண்டாவிற்கு வெளியே சமாதானப்படுத்தியபடி கல்யாணியையோ... காம்போதியையோ... கேட்கலாம்.

எனக்குத் தெரிந்த ஒரு தாயார் குழந்தைக்கு இடைஞ்சலாக இருக்கின்ற கச்சேரியோ, கால்பந்தோ, சினிமாவோ, டி.வி-யோ முக்கியமில்லாமல் அத்தனை பொழுதுபோக்குகளையும் உதறி தன் வேலையும், பொழுதுபோக்கும் குழந்தையே என்று இருந்தார்கள். இன்றுவரை அந்தக் குழந்தையும் அம்மாவின் மீது உயிராகத்தான் வளர்ந்து வருகிறாள். போன தலைமுறையைவிட இந்தத் தலைமுறை தாய்மார்கள் குழந்தைகள் மீது மிகுந்த அக்கறையோடு இருப்பதை கவனிக்க முடியும். கிரிக்கெட் மட்டையோடோ... கீபோர்டு வாத்தியத்தோடோ... அபாகஸ் புஸ்தகத்தோடோ தாய்மார்கள் அவர்களை அழைத்துக்கொண்டு போவதை நான் பார்த்திருக்கிறேன். அதே நேரம் விவாகரத்து செய்ய இருக்க, அந்த விவாகரத்தில் ஈடுபட்ட பெற்றோர்களுக்கு பிறந்த குழந்தைகள் திகைத்துப்போய், துவண்டுபோய் நிற்கின்றன. சுற்றுச்சூழலை என்ன துக்கம் இருந்தாலும் அதை வெளிக்காட்டாது குழந்தை

களிடம் பரிமாறாது அல்லது குழந்தைகளுக்கு முன்னே குமுறாது சாதாரணமாய், எளிமையாய், இனிமையாய் அவர்களோடு இருப்பின் வளர்ந்தபிறகு நீங்கள் பட்ட வேதனை அவர்களுக்குத் தெள்ளத் தெளிவாகப் புரியும். உங்களுக்கு மிக நெருக்கமாக அவர்கள் இருக்கக் கூடும்.

குழந்தை வளர்ப்பு என்கிறபோது இன்னொரு விஷயமும் ஞாபகம் வருகிறது. ஆறு மாதக் குழந்தை, எது குதிரை... எது கழுதை... எது யானை... எது பூனை என்று அடையாளம் காட்டுமாம். எழுத்து அட்டையைக் காட்டினால் ஏ, பி, சி... என்று உரத்த குரலில் சொல்லுமாம். மூணு வயதுக் குழந்தை ஐ லவ் யூ... என்றே படிக்கிறது. அந்த தாயார் குதூகலமடைகிறாள். நம் ஊரிலும் கெட்டிக்கார குழந்தைகள் உண்டு. நான்கு வயது நிரம்பும் முன்னே 'போடா... போடா... புண்ணாக்கு' என்று பாடக்கூடிய குழந்தைகள் அநேகம் இருக்கிறார்கள். முகத்திற்கு நேரே குழந்தை கையை நீட்டிப் பாடினாலும் அது சந்தோஷம்தான். கொஞ்ச நேரம் புண்ணாக்காக இருப்பது ஆனந்தம்தான். குதிரை... கழுதை.. யானை... பூனை என்று ஆறு மாதத்திற்குள்ளேயே அவை படித்தாக வேண்டுமா? தேவையில்லை என்பது என் கருத்து. ஐந்து வயதுக்குள் வெகுநிச்சயம் யானை, பூனையெல்லாம் அவன் கற்றுக்கொள்ளத்தான் போகிறான். எல்லாப் பறவைகளுக்கும் பெயர் தெரியத்தான் போகிறது. எதற்காக அவன் உலகத்திலிருந்து அவனைப் பிடுங்கி இழுத்து எதற்கு எடுத்துவர வேண்டும். ஆறு மாதத்தில் குதிரை... யானை... கழுதை... பூனை கற்றுக்கொள்ளா விட்டால் என்ன? ஆறு வயதிலேயே அவன் விஞ்ஞானியாக வேண்டுமென்பது ஆத்திரம். இது குழந்தைக்கு மிகப் பெரிய தண்டனை.

நம்மூரிலும் ஆறு வயதில் பரதநாட்டியம் ஆடச்சொல்லி வற்புறுத்தி, ஏழு வயதில் அரங்கேற்றம் செய்ய வைத்து வயதுக்கொப்பாத விஷயங்களைப் பாட்டுப் பாடி, ஆட்டம் ஆடி ஆடிய களைப்பில் தூங்கப் போய்விடும். ஆடும்போது இருந்ததை விட தூங்கும்போது அந்தப் பெண்குழந்தை அழகாகத்தான் இருக்கும்.

குழந்தையை வளர்க்க பொறுமையும், குழந்தைகள் மீது வற்றாத காதலும், சூட்சும புத்தியும், தன்னை குழந்தையாக பாவித்தலுமே மிக முக்கியம். குழந்தையாக தான் இருந்து பார்க்கும்போது



குழந்தையை எப்படி வளர்க்க வேண்டுமென்று எல்லோருக்கும் தெரிந்துவிடும். குழந்தை வளர்ப்பு தாயின் பொறுப்பு மட்டுமல்ல... சுற்றியிருக்கிற அத்தனை பேருடைய பொறுப்பும்.

இன்றைய குழந்தை நாளை மிகப் பெரிய விஞ்ஞானி, தேசத் தலைவன், போர்வீரன், சகலகலாவல்லவனாக மாறக்கூடும். மாறுவதற்குண்டான உத்வேகத்தை நாம்தான் கொடுத்தாக வேண்டும். குழந்தையை வளர்க்க கற்றுக்கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உங்களுக்கு குழந்தை வளர்ப்பு தெரியுமென்று தானாகவே நினைத்துக்கொள்ளாதீர்கள்.

## 25

**சொ**ந்த வீடாக இருந்தாலும் கதவுத் தட்டிவிட்டு உள்ளே போவது என்பது ஒரு நாகரீகம். நம்மில் பலர் அதை செய்வதேயில்லை. அறைக்குள் அல்லது வீட்டிற்குள் இருப்பவர் சுதாரித்து எழுந்து வருவதற்கு ஒரு சில கணங்கள் நாம் நிச்சயம் அவகாசம் தரவேண்டும். திடுமென்று திறந்துகொண்டு உள்ளே வரும்போது, உள்ளே இருப்பவருக்கு நிச்சயம் தூக்கி வாரிப்போடும். காட்டுமிராண்டியாக வாழ்ந்த மனிதன் மெல்ல மெல்ல காடு திருத்தி நாடாக்கி, நாட்டிற்குள் வீடுகள் அமைத்து, வீட்டைச் சுற்றி கோட்டை கட்டி, அகழ் அமைத்து மரங்கள் நட்டு, தோட்டங்கள் அமைத்து, மிக நறுவிசாக வாழத் துவங்கினான்.

நாகரீகம் வளர வளர இம்மாதிரியான பல சௌகரியங்கள் அதிகமாயிற்று. சுகசௌகரியம் என்பது வெறும் பொருள்களில் இல்லை. அந்த பொருள்களை உபயோகப்படுத்துவதிலும், அந்த மனிதரின் நடவடிக்கையிலும் இருக்கிறது. காலையில் எழுந்ததும், மனைவியாயினும் முகமன் கூறுவது என்பது ஒரு நல்ல நாகரீகம். மனைவிக்கு எதற்கு குட்மார்னிங் என்று கேட்பதில் ஒரு காட்டுமிராண்டித்தனம் இருக்கிறது. மனைவிக்கு மட்டுமல்ல, பள்ளிக்குப் போகும் சிறு குழந்தைகளுக்கும் எதிரே நின்று குட்மார்னிங் என்று சொல்லி, கட்டிக்கொண்டோ, கைகுலுக்கியோ, கன்னம் வருடியோ அன்பு செலுத்துவது என்பது ஒரு அழகு.

வீட்டுத் தலைவன் என்றால் இஞ்சி தின்ற குரங்கு போல இருக்க வேண்டுமென்ற அவசியம் ஏதுமில்லை. அமைதியாக இருப்பதும், மென்மையாக இருப்பதும் நாகரீகம். அதை காலையிலேயே துவங்கிவிட வேண்டும். எனக்குத் தெரிந்து மாடி ஜன்னல் திறந்ததும், தென்னை மரங்களுக்கும், காக்கைகளுக்கும் குட்மார்னிங் சொல்கிறவர் உண்டு. இது அதிகமாக படலாம். ஆனால், இது தன்னுடைய அன்பை, தனக்குள் பொங்குகின்ற சந்தோஷத்தை மற்றவருக்கு பகிர்ந்துகொள்கின்ற முயற்சி.

காலையில் எழுந்ததும் சுப்ரபாதம் கேட்பது சந்தோஷம்தான். ஆனால், அது யாருக்காவது தொந்தரவாக இருக்கிறதா என்று பார்த்து செய்வது நல்லது. மிக மெல்லிய ஓசையோடு அதை பயன்படுத்துவது சாலச்சிறந்தது. அந்த பகுதியில் உள்ள எல்லா வீட்டிற்கும் சுப்ரபாதம் கேட்க வேண்டும் என்று ஆவலோடு அலற வைக்கிறவர் நாகரீகம் குறைந்தவர். நான் நல்லதுதானே செய்கிறேன் என்று சொன்னாலும், மற்றவர்களுடைய விருப்பம் எது என்று அறியாதவாறு தன்னைத் துருத்திக்கொள்கின்ற மிருக முயற்சி.

தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி இவற்றை நம் வீடு மட்டும் கேட்டால் போதும் என்று மெல்லியதாக ஒலிபரப்புவது ஒரு நாகரீகம். வீட்டில் சந்தோஷமோ, சச்சரவோ எது இருப்பினும் இரைந்து பேசாதிருப்பது இன்னொரு வகை நாகரீகம். நாம் இருக்கின்ற இடத்தில் மனிதர்கள் இருக்கிறார்களா என்ற சந்தேகம் அடுத்த வீட்டிற்கு வரவேண்டும். அதுதான் அடுத்த வீட்டிற்கு செய்யும் மிகப் பெரிய மரியாதை. தேவையில்லாமல் அடுத்த வீடு சென்று பேசுவது தவறான விஷயம். 'இன்னிக்கு என்ன சமையல், என்கிட்ட எத்தனை பட்டு புடவை இருக்கு, இன்னிக்கு இன்டுல என்ன சார் நியூஸ்?' என்று கையில் தினசரி வைத்துக்கொண்டு பேசுவது தவிர்க்கப்பட வேண்டிய விஷயம். பேச்சு மட்டுமல்ல, பொருள்கள் கையாள்வதில்கூட நிதானமும், பொறுமையும், அடுத்தவர் பற்றிய அக்கறையும் வேண்டும்.

தரதர என்று நாற்காலியை இழுப்பது, தடரென்று கதவை சாத்துவது, அடுத்த வீட்டுக் குழந்தை அயர்ந்து தூங்குகிறது என்பதாலேயே தடேரென்று தாம்பாளத்தைப் போடுவது, பூஜை செய்கிறேன் என்று காண்டாமணியை அடிப்பது இவை அனைத்தும் ஒண்டுகுடித்தனத்தில் தவிர்க்கப்பட வேண்டும்.



அடுக்குமாடி வீடுகளில் சிறிய சப்தம்கூட நாலு வீட்டிற்குள் எதிரொலிக்கும். அடுத்தவரின் நலனை உத்தேசித்து, அவர்கள் வீட்டுக் குழந்தையின் படிப்பை உத்தேசித்து சப்தம் இல்லாமல் வாழ்வது மிகச் சிறப்பானது.

இங்கே பலரும் செய்கின்ற இன்னொரு கொடுமை - தெருவில் கைதட்டி கூப்பிடுவது. இதைவிட அநாகரீகமான விஷயம் வேறு ஏதுமில்லை. நூறு பேர் நடந்து போகின்ற சாலையில், உங்களுக்கு வேண்டிய ஒருவரின் கவனத்தை திருப்ப வேண்டுமென்பதற்காக கைதட்டி கூப்பிடுகிறீர்கள். உங்களுக்கு வேண்டியவர் திரும்பிப் பார்க்கிறார். அவர் மட்டுமா, மீதியுள்ள தொண்ணூற்று ஒன்பது பேரும் அவர்களுடைய கவனத்தைச் சிதறவிட்டு உங்கள் சப்தத்திற்கு திரும்பிப் பார்க்கிறார்கள். இது மிகப் பெரிய கொடுமை. சொல்லத் தரவில்லாத அசிங்கம். அநாகரீகத்தின் உச்சகட்டம். அவர் தாண்டிப் போனால், ஓடிப்போய் அவர் தோள் தொட்டு திரும்ப வேண்டுமே தவிர, கைதட்டி கூப்பிடுவது என்பது மிகத் தவறு.

சாப்பிடுவது எப்படி என்று யோசித்திருக்கிறீர்களா? பளீச்சென்று வெளிச்சமான இடத்தில், என்ன சாப்பிடுகிறோம் என்று தெரிந்து சாப்பிடுவதுதான் அழகு. பல உணவுவிடுதிகளில் முகம் தெரியாத இருட்டில் சாப்பாடு பரிமாறுகிறார்கள். ஒரு ஓட்டலில் இதற்கு காரணம் கேட்டேன். பெரிய மனிதர்கள், பிரபலமானவர்கள் வருவார்கள். அவர்கள் சாப்பிடுவதை மற்றவர்கள் வேடிக்கை பார்க்கக்கூடாது. அவருடைய தனிமையில் எவரும் நுழைந்துவிடக்கூடாது என்று அப்படி இருட்டு அடித்திருக்கிறார்களாம். யாரோ ஒருவருக்காக என் உணவை இருட்டு அடிப்பது என்பது நியாயமில்லையே என்றுதான் எனக்கு தோன்றுகிறது.

பந்தியில் உறிஞ்சி உண்ணுதல்... 'பாயசம் கொண்டா, பாயசம் கொண்டா' என்று கத்துதல் 'என்ன சார்! சாம்பார்ல உப்பே இல்லை' என்று குறை கூறுதல்... 'ரசம் விடுங்கோ, சூப்பரா இருக்கு' என்று சத்தம் போட்டு பாராட்டுதல்... அனைத்துமே தவறானவை. உங்களுக்குப் பிடித்தது மற்றவருக்குப் பிடிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. நீங்கள், உங்கள் உணவு, நீங்கள் உண்ணுதல் இதுவே முக்கியம். அடுத்தவரின் உண்ணுதலில் ஒருபோதும் தலையிடக்கூடாது. உங்கள் அபிப்பிராயத்தை

கேட்டாலும் சொல்லக்கூடாது. பந்தி முடித்துவிட்டு சிறிது வெற்றிலை பாக்கு போடலாம். ஜீரணத்தை அதிகரிக்கும். ஆனால், பான்பராக் போன்ற போதை வஸ்துகள் மரணத்திற்கு உங்களை அழைத்துச் செல்லும் பாதை.

நோய்க்காக பான்பராக் கதவுகள் திறந்திருக்கின்றன. நாளைக்கு மூன்று பான்பராக் போட்டாலும் போதும், நீங்கள் புற்றுநோய் தோளில் கை போட்டுக் கொண்டு நடக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம். எப்போது வேண்டுமானாலும் புற்றுநோய் உங்களை பற்றிக்கொள்ளக் கூடும். உங்களின் கன்னக் கதுப்பும், ஈறுகளும், உடம்பின் பாகங்களிலே மிக மிக மிருதுவானவை. உணர்வு மிக்கவை. இவைகளை சிதைத்து, விஷம் வைத்து சாகடிப்பது என்ன நியாயம். பான்பராக் சுகத்தில் மாட்டிக்கொண்டால் மீளுவது மிக மிக கடினம். எனவே, அதன் அருகே போகாமலிருப்பது உத்தமம். பான்பராக் போடுவதோடு முடிந்துவிடுகிறதா, எங்கு சுவர் மூலை தெரிந்தாலும் அங்கு துப்பிவிடுவது பான்பராக் காரர்களின் வழக்கமாகிறது.

இந்த பாவிகள் ஒரு ஊரையே பாழ்படுத்துகிறார்கள். எனவே, பான்பராக் என்ற விஷயத்தை கனவிலும் கருதாமல் இருங்கள். பற்கள் எல்லாம் கறை படிந்து, உங்கள் வெள்ளை சிரிப்பு வில்லன் சிரிப்பாக இருக்கும். முகம் கொடூரமாகிவிடும். கண்ணில் மயக்கம், முகத்தில் சுருக்கம், நடையில் தளர்வு, பசியின்மை, சோர்வு எல்லாம் பற்றிக்கொள்ளும். தினம் தினம் விஷம் சாப்பிடுகிறீர்கள் என்றுதான் இதற்கு அர்த்தம். இதற்கு பதிலாக தூக்கிட்டு ஒரேடியாய் சாகலாம்.

மனிதர்களுடைய கல்யாணக் குணங்களில் இன்னொன்று ஒலிப்பெருக்கி! அவர்கள் வீட்டில் விசேஷம் என்றால் தெருமுழுக்க காது பொத்திக்கொள்ளும்படி, ஏழு எட்டு கூம்பு ஒலிபெருக்கி களை அல்லது ஆளுயர மரப்பெட்டிகளை அடிக்கி வைத்து, படிக்கின்ற பிள்ளைகளின் சாபத்தை கொட்டிக் கொள்கிறார்கள். நோயாளிகளின் பாவத்தை சேர்த்துக் கொள்கிறார்கள். திருமணம் என்கிற பெயரில் அடுத்தவர்களின் அமைதியான வாழ்க்கையைப் பங்கப்படுத்துகிறார்கள். ஊரின் சாபத்தை வாங்கிய அந்த திருமணம் எப்படி விளங்கும்.



ஒலிபெருக்கி வைத்து மற்றவரின் நிம்மதியைக் கெடுத்தவரின் வாழ்க்கை எப்படி வளமாக இருக்கும். வலிய போய் சாபத்தை வாங்கிக்கொள்கிற வேதனை இது. மிக மிக அநாகரீகமான செய்கை இது. ‘எங்க வீட்டுக் கல்யாணத்துல, மூன்று நாள் ரேடியோ பெட்டி போட்டோம்' - இதுல பெருமை வேறு பேசுகிறார்கள். கூச்சல் இல்லாத வாழ்க்கையை என்றைக்கு இவர்கள் தெரிந்து கொள்ளப் போகிறார்கள் என்று வேதனை எழுகிறது.

ஒலிபெருக்கியைப் போல இன்னொரு அசிங்கம், ஓசையுள்ள மோட்டார் சைக்கிள், நீண்ட ஹாரன் அடித்துக்கொண்டு ஓடும் கார்கள், மிகுந்த சத்தம் எழுப்பும் தகர வண்டிகள், அவர் நேசிக்கும் பெண்ணின் மனம் கவர, அந்த வாலிபர் மோட்டார் சைக்கிளில் சைலன்ஸரை கழட்டிவிட்டு, முன்னும் பின்னும் மிகப் பெரிய சத்தத்தோடு அலைகிறார். உலகத்தில் அவரும், அவரைக் காதலிக்கின்ற பெண்ணும் மட்டும்தான் இருக்கிறார்கள் என்று தீர்மானமாக நம்புகிறார். மற்ற மனிதர்கள் யாரும் உயிரினங்களாகவே அவருக்குத் தெரியவில்லை. அவர் காதல் ஜெயிக்குமா அல்லது அடிபட்டு சிதறுமா, மற்றவரின் நலன் பற்றி தெரியாதவர், எப்படிக் காதலித்துக் கல்யாணம் செய்து குடித்தனம் செய்ய முடியும்?

இந்த சின்ன சின்ன விஷயங்களை உள்வாங்கிக் கொண்டு அமைதியாக, ஆனந்தமாக வாழ்க்கை நடத்த தயவுசெய்து கற்றுக் கொள்ளுங்கள். இளம்வயதில் இது உள்ளே படிந்து விட்டால், பிறகு தொண்டு கிழமாகிறபோதும் மறக்காது. தவறு செய்ய தோன்றாது. வீடு விட்டு போகும்போது, கடவுள் படத்துக்கு முன்னால் கும்பிட்டுவிட்டுப் போவது என்பதை அவர் ஐந்து வயதில் கற்றுக்கொண்டார். தொண்ணூற்று ஒரு வயதில் அவர் நெஞ்சு வலிக்கிறது என்று மருத்துவமனைக்குப் போகும் முன்னரும் அப்படித்தான் கும்பிட்டுவிட்டுப் போனார். உறவினர்கள் அத்தனை பேரும் சூழ, போய் வருகிறேன் என்று விடைப்பெற்று நிம்மதியாக மரணமடைந்தார்.

நல்ல பழக்கங்கள் வாழ்க்கையின் எல்லா காலத்திலும் ஆனந்தத்தை தரும். அமைதியைத் தரும். மரணம்கூட புன்னகையோடு இருக்கும்.

# 26

உணவு உண்ணுவது பற்றி உலகில் பல பேருக்கு பலவிதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. ரொட்டியையும், மாமிச உணவும் விதம்விதமாக உண்ணுகிறபோது நிதானமாக மென்று சுவைத்து உணவு உண்ணும் நேரத்தை ஒரு மணி நேரமாக வைத்துக்கொள்வது என்பது மேலைநாட்டினர் வழக்கமாக இருக்கிறது. உணவுக்கு நடுவே வயிறு வாயு அதிகமாகி அபானவாயு வெளியேற வேண்டுமென்றால், அதை உணவு மேஜைக்கு நடுவே செய்யாது மெல்ல எழுந்து வெளியே போய் விடுவதற்குண்டான வராண்டாக்களும் அந்த உணவுக்கூடத்தில் இருந்தன. அப்படி அபானவாயுவைத் தனியே போய் வெளியேற்றுவது என்பது நாகரீகம். எப்படியும் உணவு மேஜைக்கு வந்து பிரித்த உணவுகளை எடுத்துக்கொண்டு திரும்பவும் உண்பதென்பது அவர்கள் வழக்கம்.

தென்னிந்திய உணவு வகைகள் வேறுவிதம். மாமிச உணவு இருந்தாலும் பன்றியின் முழு தொடை, எருதின் நெஞ்சுக்கூடு, மாட்டினுடைய முன்னங்கால்கள் என்று பெரிதாக உண்ணாமல் அரிசி சோறும் அதில் கலந்தபடி மாமிசத் துண்டங்களுமாக சாப்பிடுவதுதான் வழக்கமாக இருந்தது.

வீட்டில் உணவு உண்ணும்போது அதிகம் பேசுவதில்லை. மாறாக விரைவாக சாப்பிட்டுவிட்டு கை அலம்பி, நன்கு வாய் கொப்பளித்து திண்ணைப்பக்கமாக வந்து உட்கார்ந்து கொள்வார்கள். உணவு உண்டுவிட்டு உடனே தூங்கினால் தொப்பை போடும். உணவு செரிமானமும் தாமதமாக இருக்கும். மலச்சிக்கல் ஏற்படும். எனவே, திண்ணையில் மெல்ல சாய்ந்தபடி, கண்மூடி அமர்ந்தபடி, வேடிக்கை பார்த்தபடி இருப்பார்கள்.

உணவு உண்ணலின் தொடர்பாக யோசிக்கவேண்டிய இன்னொன்று, பற்களின் பாதுகாப்பு. நவீன உலகில் நல்ல பற்பசைகள் கறைகளை நீக்கும். நல்ல பிரஷ்கள் வந்துவிட்டன, அந்த டூத் பிரஷ்களை சரியானபடி பயன்படுத்த வேண்டும். வெறுமே இடது வலமாகத் தேய்க்காமல் கீழிருந்து மேலாக,



பற்களுக்கு இடையே இருக்கின்ற உணவுத்துகள்களை அகற்றும் வண்ணமாக நாம் பல் தேய்க்க வேண்டும். அப்படித் தேய்ப்பது சுலபமாக இராது. ஆனாலும் பற்களுக்கிடையேயுள்ள துணுக்குகள் நீங்குவதற்கு இதுவொன்றே வழி. வேப்பங்குச்சியோ, ஆலங்குச்சியோ மென்று மென்று பல் தேய்க்கிறபோது அப்படி மெல்லுவதால் ஈறுகள் பலமாகின்றன. செடியினுடைய சத்து வாய் முழுவதும் பரவுகின்றது. இதுவொரு வகை வழி என்றாலும் இப்பொழுது உபயோகப்படுத்துகின்ற டூத் பிரஷ்கள் தவறானவை அல்ல. பல் தேய்ப்பது அல்லாமல், பல முறை வாய் கொப்பளிப்பது என்பதையும் பழக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும். சில சமயம் மௌத்வாஷ் என்கின்ற அந்த மருந்தையும் நீரில் கலந்து வாயில் கொப்பளிக்க, பற்களுக்கிடையே உள்ள பாக்டீரியாக்கள் முற்றிலும் அழியும். இதனால் வாய் துர்நாற்றம் இருக்காது. பல் சம்பந்தமான நோய்கள் இருப்பினும் வாயிலிருந்து துர்நாற்றம் வரும். வாய்துர்நாற்றம் உங்களுக்கு மிகப் பெரிய அவஸ்தையை தரும். அடுத்தவர் உங்களை அண்டி பேசமுடியாதபடி செய்து விடும். குழந்தையைக்கூட கொஞ்சமுடியாதபடி நிலை ஏற்படும். எனவே, துர்நாற்றமில்லாத வாய் மிக் முக்கியம்.

ஈறுகளில் பற்களுக்கிடையே உணவுப் பொருட்கள் தங்கி, அந்த உணவுப் பொருட்களில் அமிலம் சுரந்து, அந்த அமிலம் பற்களை அரித்து சொத்தை ஏற்படுவதுதான் பல் நோயின் மோசமான நிலை. இதைத் தவிர்க்க இரண்டு வேளை அல்லது மூன்று வேளை பல் துலக்குவது நல்லது. பலமுறை வாய் கொப்பளிப்பது நல்லது. வாயிலிருந்து வரும் துர்நாற்றம்போல இன்னொரு மோசமான விஷயம், உடலிலிருந்து வருகின்ற வியர்வை நாற்றம்.

தென்னிந்தியா சூடான தேசம். சின்ன அசைவுகளில்கூட வியர்வை கொப்பளித்து விடும். எனவே, காலை, மாலை இரண்டு வேளை குளிப்பதும் அக்குள் பக்கம் நன்றாக அலம்புவதும் நிறைய வாசனை விஷயங்களை உபயோகப்படுத்துவதும் நல்லது. அடுத்தபடியாக ஒரு சபையில் உங்களைச் சந்தேகிக்க வைக்கும் இன்னொரு விஷயம் - அபானவாயு. மலக்குடலிலிருந்து வெளியேறும் வாயு மிகப் பெரிய நாற்றத்தைக் கொடுக்கும். மலச்சிக்கல் உள்ளோர்களுக்கு பல முறை இந்த வாயு வெளி யேறும். எனவே, மலச்சிக்கல் இல்லாமல் இருக்க நிச்சயம் முயற்சிக்க வேண்டும். ஆங்கில மருந்துகளும், நாட்டு மருந்துகளும்

இருக்கின்றன. இதனால் இது எளிதில் தீரும். அதைவிட உன்னதமான விஷயம், காலாற கைவீசி நடப்பது. அப்பொழுது அடிவயிறு அசைந்து அசைந்து வயிற்றில் இருக்கும் உணவுப் பொருட்களை மலமாக்கி வெளியே தள்ளத் தயாராக இருக்கும். நடந்து வந்ததுமே கழிவுகள் வெளியேறிவிடும். வயிறு சுத்தமாக உடம்பிலிருந்து மலம் வெளியேறினால் அது மிகப் பெரிய நிம்மதி. விடுதலையான உணர்வு. அப்போது சிந்திப்பதும், வேலை செய்வதும் மிக நேர்த்தியாக இருக்கும். மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு சிந்தனையில் குழப்பம் ஏற்படும்.

பிறகு நீங்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பாதங்கள். முகத்துக்கு சோப்பு போட்டு அலம்பி பவுடரிட்டு, திருச்சின்னங்கள் தரித்து மலர்ச்சியாக வந்திருப்பார். ஆனால், கால்களைப் பார்த்தால் மிக மோசமாக இருக்கும். நகங்களில் கறைகள் இருக்கும். சரியாக வெட்டப்படாதிருக்கும். கால் இடுக்குகளில் அழுக்குகள் தேங்கி நிற்கும். உள்ளங்காலில் எங்கெங்கோ எதை எதையோ மிதித்த கறைகள் இருக்கும். கால்களை தண்ணீரில் முக்கி ஊறவைத்து அழுக்குகள் நீக்கி கால்களின் வெடிப்பு போக நன்றாகத் தேய்த்து எண்ணெயோ, க்ரீமோ தடவி விட வேண்டும். சுத்தமான கால்கள் இல்லாதவர் நாகரீகம் இல்லாதவர் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

கால்களின் சுத்தம் போல் காலணிகளின் சுத்தமும் மிக முக்கியம். துடைத்து வைத்த செருப்புகளும் ஷூக்களும் ஆரோக்கியம். அடுத்தபடி போஷாக்காக வைத்துக்கொள்ள வேண்டியது கேசங்கள்.

நமது ஊர்ப் பெண்களுக்கு நீண்ட தலைமுடி என்பது ஒரு வரப்பிரசாதம். அதைப் பராமரித்தல் என்பது எளிதல்ல. ஆனாலும், பொடுகோ, புண்களோ தலையைச் சீராக காப்பாற்ற வாரம் இரு முறை அலசிக் குளிப்பது நல்லது. நமது வாழ்க்கை விரைவாகி விட்டது. வண்டிகளில் பயணம் செய்வது என்பது தவிர்க்க முடியாததாகி விட்டது. அப்படி விரைவாக பயணம் செய்யும் போது முதலில் பாதிக்கப்படுவது கேசங்கள். ஊரிலுள்ள அத்தனை தூசுகளும் தலையில் வந்து மண்டுகின்றன. எனவே, வாரம் இரண்டு முறை தலைக்கு குளிப்பது என்பது தவிர்க்க முடியாத விஷயமாகிறது. குறைந்தபட்சம் வாரம் ஒருமுறையாவது தலையைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். கண்ட கண்ட



ஷாம்பூகளைப் போடாது கடலை மாவை மட்டும் உபயோகியுங்கள் என்று சில குறிப்புகள் சொல்கின்றன. நல்ல ஷாம்பூகள் இப்போது வந்திருக்கின்றன. கூந்தலுக்கு எந்தவித பாதிப்புகள் இல்லாமல், அதேசமயம் நறுமணமாக வைத்துக்கொள்ளக்கூடிய ஷாம்பூகள் பலதும் இருக்கின்றன. கடலைமாவைத் தடவி ஊறவைத்து அலசுவதற்கு அருவிபோல தண்ணீர் வேண்டும். தலைமுடி சுத்தமாக இருக்க வேண்டுமென்பதுதான் முக்கியம். எதனால் என்பதல்ல.

வெயில் தேசமாக இருப்பதால் நம்முடைய தோல்கள் சீக்கிரமாக வறண்டு விடுகின்றன. எண்ணெய்ப் பசையை இழந்து விடுகின்றன. நான் பார்க்கின்ற பல மனிதர்களுக்கு வறண்ட சருமமே இயல்பாக இருக்கிறது. குளித்த பிறகு உடம்பு முழுவதும் லேசாக தேங்காய் எண்ணெய் தடவிக்கொள்வதோ, அல்லது Moisture எனப்படுகின்ற க்ரீமை உபயோகப்படுத்துவதோ மிகவும் அவசியம்.

ரயிலிலோ, பேருந்திலோ வயதானவர்களுக்கு இடம் கொடுப்பதென்பது ஒரு அற்புதமான பழக்கம். வயதாக வயதாக உடம்பின் எல்லா பகுதிகளும் தளர்வடைகின்றன. குறிப்பாக கால்கள் அதனுடைய திறனை இழக்கின்றன. சற்று தூரம் நடந்தவுடன் உட்கார வேண்டுமென்று எல்லா வயதாளிகளுக்கும் தோன்றும். அசைகின்ற புகைவண்டியிலும், பேருந்திலும் அவர்களால் அதிக நேரம் நிற்க முடியாது. அப்படி அருகே யாரேனும் வயதாளிகள் இருந்தால் சட்டென்று எழுந்து அவர்கள் உட்கார இடம் கொடுப்பது மனிதர்களை நீங்கள் மதிக்கிறீர்கள் என்று அர்த்தம். சக மனிதர்களின் வாழ்க்கையை மதிக்காதவர் சிறப்பாக வாழ முடியாது. ஏனெனில், ஒரு நாள் உங்களுக்கும் வயதாகும் என்பதை நீங்கள் நினைவு கொள்ள வேண்டும்.

சாப்பிடுகின்ற இடத்தில் தலை சீவாதீர்கள் என்று ஹோட்டலில் எழுதி வைத்திருப்பார்கள். அதைப் படித்தவுடன்தான் தலைசீவ வேண்டுமென்ற எண்ணம் வரும். தலை கலைந்திருக்கிறதோ என்று தோன்றும். உடனே போய் பாக்கெட்டிலிருந்து சீப்பு எடுத்து தலைசீவி தன்னை அழகு பார்த்துக் கொள்வார்கள். இது தவறு. தலைசீவும்போது நிச்சயம் தலைமுடி உதிர வாய்ப்பிருக்கிறது. உணவு இருக்கும் இடத்தில் உதிர்ந்த முடிக்கு என்ன வேலை... அது தவறாகப் போகுமல்லவா? உங்கள் வீட்டை சுத்தமாக வைத்துக்

கொள்ளுதல் என்பது உங்கள் வீட்டிற்கு வருபவருக்கு மட்டுமல்ல... உங்களுக்கேகூட ஒரு ஆரோக்கியமான எண்ணம் உதிக்கும். ஒட்டடைகள் தொங்கக் கூடாது. உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். வாரம் ஒரு முறையாவது மூலை முடுக்குகளை சுத்தம் செய்ய வேண்டும். தினசரி பெருக்கி தரை மெழுகுதல் என்பதை சிலர் வீட்டில் தினமும் செய்வார்கள். சில பேர் வீட்டில் இரண்டு வேளையும் செய்வார்கள். புத்தகங்களை அடுக்கியும், மேஜைகளை சுத்தம் செய்தும், படுக்கை விரிப்புகள் இழுத்து சொருகப்பட்டும் அந்தந்த பொருள், அதனதன் இடத்தில் அமைதியாக இருப்பதும் மிக முக்கியம். வாழ்தலைப் பற்றிய ஒரு கம்பீரத்தை உங்களுக்கு இது கொடுக்கும். வந்தவருக்கு உங்களை நிச்சயம் பிடிக்கும். தரை குப்பையாய், ஒட்டடை தொங்கிய வீடு உங்களைப் பற்றிய நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தாது. ஒட்டடைகூட அகற்ற முடியாத அத்தனை சோம்பலா என்ற எண்ணத்தைதான் தரும்.

வீட்டு வாசலில் கோலம் போடுவது என்பது மதம் சார்ந்ததல்ல. அழகியல் சார்ந்தது என்பது என் கருத்து.

வீட்டிலுள்ள பெண்கள் குளித்துக் கொண்டிருந்தால் அவர்கள் குளிக்கிறார்கள் என்று ஒருபோதும் மற்றவரிடம் சொல்லக்கூடாது. பெரியவர்கள் உறங்கிக்கொண்டிருந்தால், தூங்குவதாய் கூறக்கூடாது.

போக்குவரத்து நாகரீகங்கள் தனியானவை. அதுபற்றி அடுத்து விவரிக்கிறேன்.

## 27

சென்னை நகரில் சிலரை நடுரோட்டில் பொதுமக்கள் பார்க்க நிற்க வைத்து கொஞ்சம் குனிய வைத்து, சுவர் பிடித்து நிற்கச் சொல்லி பிருஷ்டத்தில் பிரம்பால் சுளீர் சுளீரென்று பல முறை அடிக்க வேண்டும். யாரை?

யாரெல்லாம் இடது பக்கம் ஒரு வாகனத்தை முந்துகிறார்களோ, யாரெல்லாம் இடது பக்கம் திருப்பத்தில் ஒரு வாகனத்தை திடீரென்று முந்துகிறார்களோ அவர்களையெல்லாம் அடித்துதான் திருத்த வேண்டும். இடதுபக்கம் முந்துவதென்பது கொலை



பாதகம். கேவலமான விஷயம். எப்பொழுது வேண்டுமானாலும் முந்துபவருக்கும், யாரை முந்துகிறோமோ அவருக்கும் மரணம் போன்ற ஒரு விபத்து சம்பவிக்கலாம். திடீரென்று இடதுபக்கம் ஒரு வாகனம் முந்தும்போது வலதுபக்கம் தன்னுடைய கவனத்தை வைத்திருந்த ஒரு வண்டியோட்டி கவனம் சிதறி எதிர்ப்பக்கம் எங்கேயாவது மோதிவிடலாம். இடதுபக்கம் முந்துபவர் அவர் மோதியதுகூட தெரியாமல் மிக வேகமாக தன்னுடைய இலக்கு நோக்கிப் பறந்து கொண்டிருப்பார். யார் முந்தப்பட்டார்களோ அவர்கள் வம்பிலும், வேதனையிலும் மாட்டிக்கொண்டு விழிப்பார்கள்.

எந்த நாய் இடது பக்கம் முந்தியது என்றுகூட தெரியாமல் வெறுமே சபித்துக்கொண்டிருப்பார்கள்.

என்னுடைய வார்த்தைகள் கடுமையாய் இருக்கின்றன.

ஆமாம். அப்படித்தான் இருக்கும். இடதுபக்கம் முந்துவது மிக ஆபத்தான, மிக ஆபாசமான ஒரு செயல் என்பது என் அபிப்பிராயம்.

நானும் ஒரு வண்டி ஓட்டிதான். எத்தனை அவசரமானாலும் தெரு திருப்பத்தில் இடதுபக்கம் ஒரு நாளும் முந்தமாட்டேன். ஒரு வழிப்பாதையாக இருந்து வலதுபக்கம் ஒரு வண்டி தன்னுடைய இலக்கு நோக்கிப் பயணிக்க, இடது பக்கம் முந்தலாம். தவறில்லை. ஆனால், இருவழிப்பாதையாக இருந்து இடதுபக்கம் இருக்கின்ற மெல்லிய சந்துக்குள் புகுந்து ஒரு கார், லாரி அல்லது பேருந்தை ஒரு இரண்டு சக்கர மோட்டார் சைக்கிளோ ஸ்கூட்டரோ முந்துவது மிக மிக ஆபத்தான விஷயம். ஒருபோதும் இதைச் செய்யாதீர்கள். செய்ய மாட்டேன் என்று உள்ளுக்குள் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளுங்கள் அந்த ஒழுக்கம் வந்துவிட்டால் மற்ற எல்லா ஒழுக்கமும் உள்ளே வந்துவிடும்.

அவருக்குக் கடுந் தலைவலியாம். மருந்துக் கடைக்குப் போக வேண்டுமாம். மிகவும் அவசரமாம். அதற்காக தன்னுடைய மோட்டார் சைக்கிளை கடைக்கு நேர்வாக்கில் காலே அரைக்கால் தெருவை அடைத்தபடி நிறுத்தி வைத்திருக்கிறார். எதிரும், புதிருமாய் இரண்டு பெரிய வாகனங்கள் வந்தபோது இவர் பக்கம் வாகனம் முன்னேற முடியாமல் தவிக்கிறது. அந்த வாகனம் நிற்க பின்னால் ஐந்தாறு வாகனங்கள் நிற்கின்றன. ஏழாவது வாகனம் கொஞ்சம் வலப்பக்கம் சாய்ந்து எல்லா வாகனத்தையும் முந்திப்

போய்விட முடியும் என்று முயன்றபோது இடப்பக்க வாகனம் முட்டுகிற மாதிரி வந்து நின்றது. இப்பொழுது இடப்பக்க வாகனத்திற்கு பின்னே பதினைந்து வாகனங்கள். வலப்பக்க வாகனத்திற்கு பின்னே பதினைந்து வாகனங்கள். காரணம், குறுக்கே நிற்கின்ற அந்த ஒற்றை மோட்டார் சைக்கிள்.

இந்த வாகன நெரிசல் பற்றி சிறிதும் கவலையின்றி அவர் மாத்திரை வாங்கி, கடையிலேயே தண்ணீர் வாங்கி மாத்திரை போட்டு குடித்துவிட்டு முகம் துடைத்துக்கொண்டு மெல்ல கீழிறங்கி மோட்டார் சைக்கிள் அருகே எதுவும் தெரியாதவர் போல நிற்கிறார். இந்த சொரணை கெட்டதனத்திற்கு என்ன தண்டனை கொடுப்பது... ஒழுக்கமில்லாத மனிதர் என்று பட்டம் கொடுக்கலாம். ஒழுக்கம் என்பது அந்தரங்க வாழ்க்கையைப் பற்றியது என்று எல்லோரும் நினைத்துக் கொள்கிறார்கள். அடுத்தவருக்கு நெல்முனையளவும் தொந்தரவு கொடுக்காத வாழ்க்கையே ஒழுக்கமான வாழ்க்கை.

ஆயிரம் பேர் நடமாடுகின்ற தெருவில் தன்னுடைய வாகனமும், தானும் எப்படியிருக்க வேண்டும் என்று தெரிந்து தெளிவாக இருப்பவர்தான் ஒழுக்கமானவர். ஆயிரம் பேரைப் பற்றிய அக்கறையில்லாமல் அவரவர் இஷ்டப்படி தான்தோன்றித் தனமாக இருப்பவர் ஒழுக்கங்கெட்டவர். தெருமுனைகளில் வாகனங்கள் நிற்கக்கூடாது என்பது எழுதப்படாத ஒரு விதி. எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டிய ஒரு வழிமுறை. ஆனால், மூன்று தெரு, நான்கு தெரு கூடுமிடங்களில்தான் ஆட்டோ ரிக்ஷாக்கள் அணிவகுத்து நிற்கும். அப்படி நிற்க வைக்கும்போது திரும்புகின்ற வாகனங்கள் தெருவின் மத்தியைத் தாண்டி வலதுபக்கமாக இன்னும் நகர வேண்டியிருக்கும். அப்படி நகரும்போது எதிரே வருகின்ற வாகனம் சற்று வேகமாக இருந்தால் நிச்சயம் விபத்து நடக்கும். விபத்திற்கு வேகமாக வந்த வாகனமோ இடதுபக்கம் திரும்பிய வாகனமோ காரணமல்ல. இரண்டு ஓரங்களில் நிற்க வைத்திருக்கின்ற வாகனங்கள்தான் காரணம் என்று சொன்னால் யாருக்கும் புரிவதேயில்லை.

''அவன் ஸ்பீடா வந்தான். முட்டிக்கினான். நான் என்னா பண்றது... நான்பாட்டுக்கு நின்னுகுனுதானே இருந்தேன்'' என்று முட்டாள்தனமாக நியாயம் பேசுவார்கள்.



இடது பக்கமாக கார் நிற்கும்போது வலதுபக்கக் கதவை மிகக் கவனமாக திறக்க வேண்டுமென்று பல பெண்மணிகளுக்குத் தெரிவதில்லை. எங்க காரு... எங்க கதவு... நான் திறக்கறேன் என்று வலது பக்கக் கதவை விரியத் திறந்து கீழே இறங்குவார்கள்.

நமது தெருக்கள் அகலம் குறைவானவை. அப்படித் திறக்கப்படுகிற கதவு கிட்டத்தட்ட பாதித் தெருவுக்கு வந்துவிடும். மோட்டார் பைக்கோ, ஸ்கூட்டர் ஓட்டியோ, ஆட்டோ ரிக்ஷாவோ அந்தக் கதவுக்குப் பிறகு பதறி நிற்க வேண்டும்.

''எப்படி முட்டாள்தனமா, முட்டறா மாதிரி வண்டி ஓட்டினான் பாரு'' என்று அந்தப் பெண்மணி அலட்டிக் கொள்வாள். அவள் தவறு அவளுக்குத் தெரிவதேயில்லை. அவளுக்கு இது தவறு என்று யாரும் சொல்லிக் கொடுப்பதேயில்லை. இடதுபக்கமாகவே இறங்கி, இடதுபக்கமாகவே ஏறவேண்டுமென்று இன்னொரு எழுதப்படாத விதி இருக்கிறது. அதைப் பின்பற்றியே ஆக வேண்டும். நான்கு சக்கரமோ, இரண்டு சக்கரமோ வண்டி ஓட்டிகள் பதற்றப்படாது வண்டி ஓட்ட வேண்டும். எல்லா தெருமுனைகளிலும் ஹாரன் அடித்துத்தான் திரும்ப வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. முடிந்தவரை ஹாரன் அடிக்காமல் இருப்பதுதான் அழகு. அதுதான் நல்ல வண்டி ஓட்டியின் லட்சணம். இடப்பக்கம் நடைபாதையில் நடந்து கொண்டிருந்தவர் ஒரு அடி தெருவில் இறங்கினாலும் நீண்டதாய் ஹாரன் ஒலி எழுப்பினாலும், மற்றவர்களை எரிச்சல் அடையச் செய்யும்.

இப்போதெல்லாம் மோட்டார் சைக்கிளில் மூன்று பேர் போவது மிகச் சாதாரண காட்சியாக இருக்கிறது. சில சமயம் நான்கு பேர் கூட எப்படியாவது சமாளித்துப் போய்விடுகிறார்கள். நமது சாலைகள் இருக்கும் லட்சணத்திற்கு கரணம் தப்பினால் மரணம்தான். ஆனால், தனக்கு மரணமே வராது என்கிற நினைப்பில்தான் அந்த நால்வரும் பயணம் செய்கிறார்கள்.

ஒரு ஆட்டோவில் ஏழு பேர் போய் எங்கோ மோதி ஏழு பேரும் செத்துப்போன கதை அப்படியே இருக்கிறது. ஆனால், அது நடந்த ஒரு வாரத்திலேயே மறந்துவிட்டது. ஆட்டோ ரிக்ஷாவில் வலப்பக்க கம்பியில் உட்கார்ந்து பாதி உடம்பு வெளியே தெரிய,

உள்ளே ஏகப்பட்ட பேர் திணித்துக் கிடக்க, ஆட்டோ ரிக்ஷாவின் டிரைவருக்கு இடப்பக்கமும், வலப்பக்கமும் இரண்டு பேர் தொற்றிக்கொண்டு உட்கார, 'ஒரே மோட்டார் சைக்கிளில் ஒன்பது பேர்' என்று போலீஸ் படையின் விழாக்களில் வித்தை காட்டுவார்களே... அது தினந்தோறும் தெருவில் நடக்கிறது.

பேருந்தில் தொற்றிக்கொண்டு போகின்ற எல்லோரையும் நான் குறை சொல்ல மாட்டேன். காலை நேரத்து அவசரத்தில் அலுவலகத்திற்கு சரியான நேரத்திற்கு போகவேண்டிய கட்டாயத்தில் கிடைத்த இடத்தில் தொற்றிக்கொண்டு போகிறார்கள். ஆனால், உள்ளே இடமிருந்தும் வெளியே தொற்றிக்கொண்டுதான் போவேன் என்கிற மனிதர்களை எதிர்க்கத்தான் வேண்டியிருக்கிறது. அவர்கள் மனித குலத்தின் முன்னோர்களின் மிச்சம். குரங்கினத்தின் கடைசி எச்சம். தசைநாரில் வலுவிருக்கிறது. உடம்பில் திமிர் இருக்கிறது. நரம்புகளில் ரத்த ஓட்டம் கூடுதலாக இருக்கிறது என்பதால்தான் அப்படி நடந்து கொள்கிறார்கள். ஆனால், விதி வலியது. எப்பொழுது வேண்டுமானாலும், எவருக்கு வேண்டுமானாலும் மரணம் நேரலாம் என்கிற இயல்பு கொண்டது.

ஒரு பள்ளத்தில் குலுங்கி பஸ் நகர... இவர் எங்கோ, எவளையோ பார்த்து பல் இளிக்க, பல் இளிக்கும் நேரம் கையில் வலுவு குறைய, வலுவு குறைந்த நேரம் பஸ் குலுங்க, பலமுறை தலையைக் கோதிய எண்ணெய் கையில் வியர்வை கசிய, வழுவழுப்பில் பிடி நழுவ டொம்மென்று பக்கவாட்டில் உடம்பு எகிறி மோத, பிடிதளர விழுந்து தடுமாறி இடது வலது சாய்ந்து சட்டென்று கால்மீது கால்பட்டு குப்புற விழுந்து, குப்புற விழுந்த உடம்பின் மீது பேருந்தின் பின் சக்கரம் ஏறி இறங்கும்.

அந்த பச்சை சிரிப்பெங்கே... கண்ணின் பளபளப்பு எங்கே. தோள்பட்டையின் தினவு எங்கே... புஜத்தின் வலுவு எங்கே. நரம்பின் துடிப்பு எங்கே... ஓடி எகிறி கால்களின் வீரமெங்கே. எல்லாம் ரத்தச் சேறாய் தெருவில் குழப்பிக் கிடக்கிறது.

உலகம் அற்புதமானது. வாழ்க்கையில் அனுபவிக்கவேண்டிய விஷயங்கள் ஆயிரம் ஆயிரம் இருக்கின்றன. இப்படி தெருமண்ணில் குழைந்து நசுங்கி சேறாகி இன்னார் என்று



அடையாளம் சொல்ல முடியாத அளவுக்கு உடல் கிடக்கிறது. இது தானே தன்னை தொலைத்த தன்மை. ஆனால், இதுபோல் எத்தனை விபத்துகள் நடந்தாலும் எத்தனை முறை இந்த காட்சியைக் கண்டாலும் அல்லது சொல்லப்பட்டாலும் தொற்றிக்கொண்டு பல் இளிக்க பஸ்ஸில் பயணம் செய்பவருக்குப் புரிவதேயில்லை. அவனுக்கு நேர்ந்தது தனக்கு நேராது என்ற அசட்டு நம்பிக்கைதான் அந்த பஸ்ஸில் தொற்றிக்கொண்டு போகிறது.

குடிபோதையில் வண்டியை ஓட்டுகிறான் என்று குற்றம் சொல்கிறார்கள்.

இது மிகத் தவறானது என்று ஒரு நண்பர், கடும் குடிகாரர் உரத்த குரலில் வாக்குவாதம் செய்தார்.

"குடித்துவிட்டு எங்கே போவது... தெருவிலே படுப்பதா. அப்படிப் படுப்பதற்கு அரசாங்கம் அனுமதிக்குமா? டாஸ்மாக் வாசலிலேயே தரமான விடுதிகள் இலவசமாக அமைக்க அரசாங்கம் உத்தரவு போடுமா... மின்விசிறி, கொசு விரட்டி, நீர் குடுவை, பல் குச்சி என்று வசதிகள் செய்து தருமா... வீட்டிற்கு போய்த்தானே ஆகவேண்டும். குடித்துவிட்டு வண்டி ஓட்டுகிறான் என்று குறை சொன்னால் எப்படி? தமிழக அரசே... ஒன்று குடிப்பவனுக்கு தூங்குவதற்கு வசதி செய் அல்லது குடித்துவிட்டு வண்டி ஓட்டலாம்... தவறில்லை என்று சட்டம் இயற்று. அதை விட்டு விட்டு ஊது ஊதுன்னு வழியில மடக்கி துட்டு புடுங்கறானுங்களே... குடிக்கறவன் கிட்ட எப்படிய்யா காசு இருக்கும்! அப்படி காசு இருந்தா அதுக்கும் குடிச்சுட்டு வரமாட்டானா? இல்லாததனாலதானே பாதியில கிளம்பி வீட்டுக்குப் போறான்" என்று நண்பர் கோபமாக சாமி ஆடினார். கொஞ்சம் குடித்திருந்தார் என்பது உண்மை.

அரசாங்கம், குடி குடியைக் கெடுக்கும் என்று சொல்கிறதே... அது கண்ணிலே படுவதில்லையே... காதிலே விழுவதில்லையே என்று கேட்டதற்கு, அவர் பதில் சொல்லவில்லை.

மது அருந்திவிட்டு வண்டி ஓட்டி, அப்படி வண்டி ஓட்டியவனுக்கு காயம் ஏற்பட்டால் அவருக்கு சிகிச்சை தருவதில் சிக்கல் ஏற்படுகிறது. ரத்தம் வெளியேறுவதை தடுப்பதற்கு சிரமமாகிறது. பேச்சும், செய்கையும் நிதானமில்லாமல் இருப்பதால்

அவரை காயம் பட்டவர் என்று கருணையோடு பார்ப்பதைவிட குடித்துவிட்டு அட்டகாசம் செய்கிறவர் என்று குமுறத்தான் மற்றவருக்கு ஏற்படுகிறது.

''தண்ணி போட்டு பெனாத்தறான் பாரு. இழுத்து குப்பைத்தொட்டி பக்கம் படுக்க விட்டு... போகட்டும்'' என்று மரியாதை இல்லாமல் புறக்கணிக்கிறார்கள். குடியினால் ரத்தக் கொதிப்பு அதிகமாகி, பயத்தினால் அந்த ரத்தக் கொதிப்பு உச்சத்தைத் தொட, ரத்தக் கொதிப்பை கீழே இறக்குவதே பெரும்பாடாகப் போகிறது. அந்த ரத்தக் கொதிப்பு மருத்துவச் சிக்கல்களையும், மரணத்தையும் எளிதில் கொண்டுவந்து சேர்க்கிறது.

மதுவின் வேகம் முதலில் கண்களைத்தான் தாக்குகின்றது. பார்வையை மங்கலாக்குகிறது அல்லது இரட்டையாக்குகிறது. அதனால் இருட்டில் மேடுபள்ளங்கள் தெரிவதில்லை. வினாடிக்கும் குறைவான இடத்தில் முடிவெடுக்கவேண்டிய விஷயங்கள் தடுமாறுகின்றன. தமிழகத்தில் நடக்கும் விபத்துகளில் நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதம் குடிபோதையில் ஏற்பட்டவைதான்.

பிரேக் போட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு செயல்படுத்த அநேகமாய் மூன்றிலிருந்து ஐந்து வினாடிக்களுக்கு தீர்மானம் செய்ய வேண்டியிருக்கிறது... செயல்படுத்த வேண்டியிருக்கிறது. அதில் பிசகு ஏற்பட்டால் வண்டி மோதல் நிச்சயம் ஏற்படுகிறது. இப்படிச் செய்யும் திறன் மது அருந்தியவனுக்கு அறவே இல்லை. இதுதான் விபத்திற்குக் காரணம்.

முதுகில் ஒட்டிக்கொண்டு உரசுகின்ற பெண்ணை அனுபவித்தபடி வண்டி ஓட்டுவதிலும் தவறு இருக்கிறது. விபத்து நடக்க வாய்ப்பு இருக்கிறது. அப்படி அனுபவித்தபடி வண்டி ஓட்டுகின்ற மோட்டார் சைக்கிள் ஓட்டி விபத்து நடந்தால் முதலில் தொலைப்பது அந்தப் பெண்ணைத்தான். வண்டியில் முட்டியவுடன் பிடிமானம் இல்லாத அந்தப் பெண் எகிறி, காற்றில் பறந்து தலைகுப்புற தரையில் விழுவாள். கபாலம் சிதறி காணாமல் போவாள். கட்டியணைத்து முத்தமிட்ட பெண்ணுக்கு நானே விறகிட்டு தீ மூட்டுவேன் என்று புலம்ப வேண்டியதுதான்.



## 28

கார்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. இளம் வயதிலேயே கடனுக்கு கார் வாங்குகின்ற சம்பாத்தியம் அதிகரித்துவிட்டது. இடது கையில் பெண்ணை அணைத்தபடியே வலது கையால் வண்டி ஓட்டிப் போகின்ற சௌகரியம் வந்துவிட்டது.

''நான் கார் ஓட்டக் கத்துக்கட்டுமா?'' அவள் ஆர்வமாகக் கேட்கிறாள்.

''முதல்ல கியர் போட கத்துக்க.''

அவளுக்கு கியர் போட வண்டி ஓட்டுபவரே சொல்லித் தருகிறார்.

அவர் வண்டி ஓட்ட, அந்தப் பெண்மணி கியர் போடுகிறாள். இரண்டு முறை தடுமாறி மூன்றாம் முறை, நான்காம் முறை சரியாக கியர் மாற்றியதும் கார் ஓட்டுகின்ற சாகசம் தனக்கு வந்து விட்டதாக அந்தப் பெண்மணி நினைக்கிறார். கற்றுக்கொடுத்த இளைஞருக்கும் அந்த சந்தோஷம் பரவுகிறது. இதை சாக்கை வைத்து அந்தப் பெண்ணிடம் எல்லாம் பெற முடியும் என்ற நம்பிக்கை வருகிறது. எனவே, தொடர்ந்து இவ்விதமாகவே அவர்கள் ஊர்வலம் போகிறார்கள். எதிரே வண்டி வராதவரை எல்லாம் சௌகர்யம்தான். சட்டென்று எதிர்வண்டி வலது பக்கம் திரும்பினால், நான்காம் கியரிலிருந்து மூன்றாம் கியருக்கு வரமுடியாமல் அல்லது நடுவே சிக்கி க்ளட்சில் கால் அழுத்தி நிற்க... கட்டிக் கொண்டிருக்கின்ற பெண்மணியை நகர்த்தி இடப்பக்கம் திரும்ப முடியாமல் அவஸ்தைப்பட, வண்டி நடைபாதையில் ஏறி இறங்கி ஒரு வீட்டு சுவரை முட்டி நிற்கிறது. கூட்டம் கூடுகிறது.

''அப்பவே பார்த்தேன்... என்னடா பிணைஞ்சிகினே போறானேன்னு. இடிச்சிட்டான் பாருங்க!'' உரத்த குரலில் பேசி சிரிப்பார்கள்.

கட்டித் தழுவுவதிலும் சுகம் இல்லாது, கார் ஓட்டுதலிலும் நாட்டம் இல்லாது இரண்டும்கெட்டானாய் நடந்து கெட்ட பேர்

வாங்கியதே மிச்சமாகும். கார் ஓட்டக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்ற கரிசனம் நாசமாகப் போகும். ஒரு வளர்ச்சியை அந்த சிறிய விபத்து தடுத்து விடும். அந்த விபத்திற்குக் காரணம் போக்குவரத்தில் உள்ள ஒழுக்கக் குறைவு.

இதை விளக்கிச் சொன்னால் பொறாமை என்பார்கள். இரண்டு சின்னஞ்சிறிசுகள் சந்தோஷமாய் போகின்றன. இதில் என்ன தவறு என்பார்கள். நிதானமாய் யோசித்தால் தவறு சகலருக்கும் புரிபடும்.

இந்தியா வல்லரசு நாடுகளில் ஒன்றாக வெகுவிரைவில் வந்துவிடும். அதற்கு முன்னோடியாக வாகனங்களில் அதிகளவு உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது. அந்த உற்பத்தியும் மிகச் சிறந்த வாகனங்களை தயார் செய்வதில் கவனம் கூடியிருக்கிறது.

மூன்று வினாடிகளில் எண்பது கிலோமீட்டர் வேகத்தை தொடலாம் என்று ஒரு மோட்டார் சைக்கிள் விளம்பரம் கட்டியம் கூறுகிறது.

எதற்குத் தொட வேண்டும்... ஏன் அந்த வேகம் என்ற கேள்வி ஏனோ எவருக்கும் எழுவதில்லை. வேகம் என்பது மனிதர்களுக்கு மிகப் பெரிய சந்தோஷம். ஒரு மனிதர் மணிக்கு பத்து கிலோ மீட்டர் வேகத்தில் நடக்க முடியும். ஆனால், மனிதர்களுக்கு இதில் திருப்தியில்லை. ஒலியைவிட வேகமாக செல்லக்கூடிய விமானங்களை, வாகனங்களை கண்டுபிடித்துவிட்டார்கள். அமெரிக்கச் சாலைகளில் நூற்றி அறுபது கிலோ மீட்டர் வேகத்தில்தான் பயணம் செய்ய வேண்டும். அதற்குக் குறைவாக பயணம் செய்தால் மடக்கி வைத்து எச்சரிப்பார்கள். அபராதம் போடுவார்கள். அந்தச் சாலைகள் அந்த தரத்தில் தயாரிக்கப்பட்டு விடுகின்றன. அதேவித தயாரிப்பு இந்தியாவிலும் வந்துவிட்டது. இந்தியாவில் தயாரிக்கும் வாகனங்களுக்கும் அந்த வேகம், அந்தத் துடிப்பு இருக்கிறது. ஆனால், அமெரிக்க தேசத்திலுள்ள அளவுக்கு சாலைப் பராமரிப்பும், மக்களுக்கு இருக்கும் போக்குவரத்து ஒழுக்கமும் நம்மிடையே இல்லை.

அமெரிக்காவில் ஒரு பெரிய நகரில் டாக்டர் வீட்டில் விருந்தாளியாக தங்கியிருந்தேன். ஒரு விருந்து முடித்துவிட்டு இரவு பன்னிரண்டு மணிக்கு திரும்பிக் கொண்டிருந்தோம். சாலைகள் வெறிச்சோடி இருந்தன. ஆனால், நான்கு சாலைகள் கடக்குமிடத்தில் சிக்னல்கள் இயங்கிக் கொண்டிருந்தன. அந்த



இடம் வந்ததும் வாகனங்களே இல்லாத அந்த நேரத்திலும், அந்த நிலையிலும் டாக்டர் வண்டியை நிறுத்தி தனக்கு ஒளிவிளக்கு வழி விட்டவுடன்தான் நகர்ந்தார்.

''யாரும் இல்லையே... நாம் போகலாமே?'' என்று நான் கேட்டதற்கு மறுத்தார்.

இங்கு அப்படிச் செய்கின்ற பழக்கம் இல்லை. நண்பகலோ, நடுநிசியோ வாகனங்கள் இருக்கின்றனவோ இல்லையோ. போக்குவரத்து விதியை எந்த நேரமும் மீறக்கூடாது. கடைப்பிடிப்பதுதான் மரியாதை. அதுதான் ஒழுக்கம் என்று திட்டவட்டமாகச் சொன்னார்.

இரவு ஒன்பது மணிக்கு மேல் 'ஒன் வே' என்று போடப் பட்டிருக்கின்ற சாலையில் போகலாம் என்பது சில வாகன ஓட்டிகளின் கருத்து. காவல்துறை இதை பல முறை சுட்டிக் காட்டியும் பல பேருக்குத் தெரியவில்லை. கூட்டமே இல்லாத நேரத்திலும் சிக்னல்கள் இயங்கினால் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதும் பலருக்குத் தெரியவில்லை. யாரும் இல்லையே என்று குறுக்கப் பாய்வது இவர்கள் வழக்கமாக இருக்கிறது.

புகை கக்குகிற ஆட்டோ ரிக்ஷாக்களையும், பேருந்துகளையும் கண்டிக்கிற வழக்கம் நம் எவருக்கும் இல்லை. அரசாங்கப் பேருந்துகள் முன்விளக்குகள், பின்விளக்குகள் இல்லாமல் ஓட்டலாம், யாரும் தடை சொல்ல முடியாது. புகை கக்கிப் போகலாம், யாரும் குறை சொல்ல முடியாது. இந்த ஒழுங்கீனம் நமது நாட்டில்தான் நடக்கும். ஆனால், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழகம் பரவாயில்லை என்று கொண்டாடிக் கொள்ள வேண்டியதுதான். அது என் மனைவி கொஞ்சம் பத்தினி என்று சொல்வதுபோல விஷயம்.

போக்குவரத்து விதிகளை எந்த நேரத்திலும் சிறிதளவு மீறினாலும் அது கேவலமான விஷயம் என்பதை மக்கள் உணர வேண்டும்.

சில தெருக்களில் வாடகைக் கார்கள் நடத்துகின்ற குழுமம் இருக்கும். நாற்பது, ஐம்பது கார்கள் அந்தக் குழுமத்தில் ஓடிக்கொண்டிருக்கும். அந்த நாற்பது கார்களும் அந்தத் தெருவில்தான் வரிசைகட்டி நிற்கும். அவர்கள் மிகக் கரிசனமாக தங்கள் வாகனங்களை சுவர் ஒட்டி, நடைபாதையில் ஏற்றி நிறுத்தி

விடுவார்கள். நடைபாதையில் நடக்கவேண்டிய மனிதர்கள் தெருவில் இறங்கி நடப்பார்கள். இடதுபுறமும், வலதுபுறமும் வாகனங்கள் அணிவகுத்து நிற்க, ஜனங்கள் தெருவில் நடமாட, அந்தத் தெருவில் போகும் வாகனங்கள் ஊர்ந்துதான் போக வேண்டும்.

பதின்மூன்று லட்ச ரூபாய்க்கு புதிய வாகனம் வாங்கி அதை ஒரு பிணவண்டியைப் போல ஓட்டிக்கொண்டு போவதில் எரிச்சல்தான் ஏற்படும். மெல்ல இடைவெளி கிடைத்ததும் வேகம் எடுக்கின்ற ஒரு உணர்வு வரும். அந்த உணர்வு விபத்துக்கு வழிவகுக்கும். இந்த விபத்துக்குக் காரணம், அந்த வண்டி ஓட்டியா... இல்லை ஓரத்தில் நிற்க வைக்கப்பட்ட வாகன வரிசையா அல்லது அந்த வரிசையான வாகனங்களை வைத்துக் கொண்டு வயிறு பிழைக்கின்ற அந்தக் குழுமத்தின் குணக்கேடா... ஆராய்ந்து பார்த்தால் அந்தக் குழுமத்தின் குணக்கேடுதான் என்பது தெளிவாகப் புரியும். அவர்கள் பொதுமக்களைக் கண்டு அஞ்சமாட்டார்கள் போலீஸ்காரர்களை சரிக்கட்டி விடுவார்கள்.

ஒரு சதுரஅடி பன்னிரண்டாயிரம் ரூபாய் என்று விற்கப்படுகின்ற ஒரு நகரத்தின் மத்தியில் நாற்பது வண்டிகளை எந்த வாடகையுமின்றி நிறுத்தி வைத்திருப்பார்கள்.

ஒழுக்கம் கழுத்தை நெரித்து சொல்லப்பட வேண்டிய விஷயமல்ல, உணரப்பட வேண்டிய விஷயம். சுயகட்டுப்பாடும் அடுத்தவர் நலன் பற்றிய அக்கறையும் சொல்லித் தரப்படாமல் தனக்கே வரவேண்டும். வாழ்க்கை ஒழுக்கம் வேறு, போக்குவரத்து ஒழுக்கம் வேறு என்று நினைப்பீர்கள் என்றால் நீங்கள் சரியாக யோசிக்கவில்லை. யோசிக்கின்ற அனுபவம் உங்களுக்கு இல்லை என்று அர்த்தம். மற்றவரின் சுகதுக்கங்களை நினைவில் கொண்டு உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அனுசரணையாக உறுதுணையாக வாழ்வதுதான் ஒழுக்கம். அந்த நல்லொழுக்கம் போக்குவரத்திலும் நிச்சயம் வெளிப்படும். அந்த போக்குவரத்து ஒழுக்கம் உங்கள் வாழ்க்கையிலும் நல்லொழுக்கத்தை கொண்டு வந்து தரும்.

தெருவிலுள்ள குழாய் திறந்திருந்தால் மூடுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். போக்குவரத்து நெரிசலாக இருப்பின், இறங்கி சரிசெய்வதற்கு முன்வர வேண்டும். சிங்கப்பூர்... சிங்கப்பூர்தான் என்று யாரோ கட்டுரை எழுத, அதைப் படித்துவிட்டு



சிங்கப்பூருக்கு போக வேண்டுமென்ற ஆசை வருகிறது. நம்முடைய ஊரை சிங்கப்பூராக்க வேண்டும் என்று ஏனோ எவருக்கும் தோன்றுவதில்லை.

எங்கோ இருக்கின்ற சிங்கப்பூர் சிங்காரமாய் இருக்கின்றது. மலேசியா வளம்மிக்க நாடாக இருக்கிறது. ஆனால், நம்மூர் மட்டும் குப்பைத்தொட்டியாக இருப்பதற்குக் காரணம் நாம்தான். நாமேதான். நாம் மட்டும்தான். நம்முடைய ஒழுக்கக்குறைவுதான். போக்குவரத்தில் ஒருபொழுதும் மற்றவருக்கு இடைஞ்சலாக இருக்க மாட்டேன் என்று உள்ளுக்குள்ளே உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். அது போன தலைமுறையிடம் இல்லை. இந்தத் தலைமுறையிடம் குறைவு. வரும் தலைமுறையாவது முற்றிலும் உணர்ந்த தலைமுறையாக இருத்தல் நல்லது. அதை விட்டு அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையும் குறை சொல்வதில் லாபமில்லை. ஒவ்வொரு தனிமனிதனும் தன் ஒழுக்கத்தை மேம்படுத்திக் கொண்டால், மக்களின் மனமறிந்து அதிகாரிகள் மாறுவார்கள். அரசியல்வாதிகள் அடிபணிவார்கள்.

போக்குவரத்து விதிகளை மதித்து நடந்துகொள்கின்ற மனிதருக்கு வீட்டுக்குள்ளும் விதிமுறைகளை மதிக்கத் தோன்றும். ஒரு வீட்டில் விதிமுறைகளை மதித்தால் போதும். அதைப் பார்த்து மற்றவரும் பின்தொடர்வார்கள். வீட்டில் விதிமுறைகளை மதிக்கின்ற அந்தத் தொடர்பாளர்கள் வெளியேயும் விதிகளை மதிப்பார்கள். நல்ல பழக்கங்களும் கெட்ட வழக்கங்களும் ஒட்டுவாரொட்டிகள். யாரோ ஒருவர் முன்னோடியாக இருந்தால் போதும். எளிதில் பரவும்.

இடது பக்கம் முந்த மாட்டேன் என்கிற விதமாய் நல்லொழுக்கத்தை ஆரம்பிக்கலாம். உங்களை நாடே போற்றும்.

## 29

**ம**னிதனாகப் பிறந்த எல்லோருக்கும் சிறுவயது முதலே தான் ஏதேனும் ஒரு விதத்தில் சாதனையாளராக இருக்க வேண்டும் என்கிற பெரும் ஆசை வந்துவிடுகிறது. தொலைக்காட்சியில் கண்ணாடி போட்டுக்கொண்டு கேரளத்திலிருந்து வந்த ஒரு பையன் தமிழ்ப் பாட்டுகளை ஏற்ற இறக்கங்களோடு அற்புதமாகப்

பாடுகிறான் என்று பார்த்தவுடன் தமிழ்நாட்டிலுள்ள பல பள்ளிக்கூட மாணவர்களுக்கு தானும் பாட வேண்டும் என்ற பேராவல் வந்துவிட்டது. சில பையன்களின் பெற்றோர்களும் அதை ஊக்குவித்தார்கள்.

"சினிமா பாட்டு கேளு. அது மாதிரி பாடு" என்று அவனை பல இடங்களில், பல நேரங்களில் பாடச் சொன்னார்கள். சினிமா பாட்டுப் பாட கர்னாடக சங்கீதம் முக்கியம் என்பது பலருக்குத் தெரியவில்லை. தெரிந்தவர்கள் அந்த முயற்சியும் செய்தார்கள்.

பத்து வயதுப் பையன் மைக் பிடித்து, காதலின் தீபம் ஒன்று... ஏற்றினாளே..." என்று குழையக் குழைய பாடுகிறான். உடம்பு ஒட்டிய ஜிகினாத் துணியுடன் பதினோரு வயதுப் பெண் கவர்ச்சிகரமான பாடல்களைப் பாடுகிறாள்.

காதல் தீபம் ஏற்றுவது பற்றியோ... கவர்ச்சி பற்றியோ அந்தக் குழந்தைகளுக்குத் தெரியாது. அந்த உடம்பின் அசைவுகள் என்ன சொல்கின்றன என்றும் அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனாலும், தொலைக்காட்சிப் பெட்டியில் பல பேருக்கு முன்னால் பாராட்டப்படுவதற்கும், பரிசு பெறுவதற்கும் அந்தக் குழந்தைகள் தவிக்கிறார்கள். நான்கு குழந்தைகள் பாராட்டப்பட்டால் போதும்... நாற்பதாயிரம் குழந்தைகள் தாங்களும் அவ்விதம் வரவேண்டுமென்று ஆசைப்படுவார்கள்.

முன்னிலை வகிக்க வேண்டும் என்ற ஆசையில் தவறேயில்லை. ஆனால், ஞாயிற்றுக்கிழமை முழுவதும் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்பு உட்கார்ந்து, அன்று மாலை முழுவதும் அதேவிதமான பாட்டில் மனம் செலுத்தி மனதுக்குள் எப்போதும்... எப்போதும் பாட்டு ஓடிக்கொண்டிருக்கின்ற ஒரு மனோநிலையை அந்தக் குழந்தைகள் அடைகிறார்கள். நாற்பதாயிரம் பேரில் இன்னும் ஒரு நாலுபேர் தொலைக்காட்சிப் பெட்டியை நோக்கி சாமர்த்தியமாக முன்னேறி விடுவார்கள். மீதமுள்ளவர்களுக்கு அவ்விதம் வெற்றிபெற முடியாது. அப்படி வெற்றிபெற முடியாதவர்கள் கொஞ்சம் ஆரவாரமாகப் போய்விடுவார்கள். படிப்பில் கவனம் சிதறியதால் அந்த இடத்தில் தன்னை நிலை நிறுத்திக்கொள்ள முடியாது. பாட்டிலேயே மறுபடியும் மனம் செலுத்தி, பாட்டிலும் நிலைநிறுத்திக்கொள்ள முடியாது வேறு ஏதாவது செய்து தன்னை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும் என்ற வேகத்திற்கு வருவார்கள்.



பாட்டு மட்டுமல்ல... நடிப்போ, படிப்போ பேச்சோ, விஞ்ஞானத்தில் வல்லமையோ, கவிதை எழுதும் ஆற்றலோ கதை எழுதும் பக்குவமோ எதுவும் கைகூடப் பெறாதவர்கள் தங்களை எப்படியாவது வெளிப்படுத்திக்கொள்ள ஆசைப்படுவார்கள். "டே" என்ற கொண்டாட்டத்தில் குதிக்கின்ற அத்தனை இளைஞர்களையும் பார்க்கும்போது இவர்கள் சக்தி ஏதோவொரு இலக்கு நோக்கிப் போகாமல் வெளியே வந்து முட்டிமோதி சிதறி தெருவில் வழிகிறது என்றுதான் எனக்கு நினைக்கத் தோன்றும். தான் வெற்றிபெற முடியாததை, தன்னால் வெற்றிபெற முடியாது என்ற நினைப்பினால் இப்படி ஆரவாரம் செய்கிறார்களோ என்று தோன்றுகிறது. வெற்றி பெற்றவர்களுக்கு அடுத்த வெற்றிதான் இலக்காகும். வெற்றி பெற்றவர்கள் ஆரவாரம் செய்தாலும் அதில் அர்த்தமிருக்கும். வெற்றி பெறாது, வெற்றி பெற முடியவில்லையே என்ற நினைப்பில் ஆரவாரம் செய்கிறபோது அது கொஞ்சம் ஆபாசமாகப் போகிறது.

ஆரவாரம் செய்தால்தான் தன் இருப்பு புரியும் என்று உயிர்வாழ்தலுக்கு ஒரு அர்த்தம் கிடைக்குமென்று பல பேர் செய்கிறார்கள்.

குடிகாரர்களுக்கு இந்த ஆரவாரம் மூடியை உடைத்துக் கொண்டு வெளியே வரும். ஆனால், வெகு நிச்சயமாக நாலு பேரை அடித்து வீழ்த்த முடியாது என்று தெரிந்தும் தெருவில் தள்ளாடி... போகிற, வருவோர்களையெல்லாம் 'வெட்டி வீழ்த்தி விடுவேன், குத்திக் கொன்றுவிடுவேன்' என்று சொல்வது அடக்கி வைத்த ஆரவாரத்தின் அசிங்கமான பகுதி. நாற்றமெடுக்கும் கழுநீர்ப் பானையை தெருவில் கொட்டுகின்ற முயற்சி.

இந்த குடிகாரனுடைய ஆட்டம் அங்கீகரிக்கப்படாத ஆட்டம். ஆனால், ஒரு கிரிக்கெட் ஆட்டத்தில் நம்முடைய ஆள் ஒரு சிக்ஸர் அடித்துவிட்டால் உடனே எழுந்து ஆறு வயதிலிருந்து அறுபது வயது வரை 'டண்டணக்கா... டண்...' என்று ஆடுகிறதே. அதற்கு என்ன சொல்வது. அது அனுமதிக்கப்பட்ட ஆரவாரம். அந்த ஆட்டமும் தொலைக்காட்சிப் பெட்டியில் வந்துவிட்டால் போதும்... "நான் வந்தேனே, பார்த்தீங்களா... நான் வந்தேனே பார்த்தீங்களா?" என்று தெருத்தெருவாக விசாரித்துக்கொண்டு முழு பூரிப்பில், உற்சாகத்தில் மறுபடியும் எங்கு ஆட்டம் நடந்தாலும் அங்கு போய் அந்த 'டண்டணக்கா' தொடரும்.

வயது ஆறாக இருந்தாலும் அறுபதாக இருந்தாலும் அதுபற்றிக் கவலையே இல்லை. சரியா... அல்லது தவறா... என்னுடைய அளவில் இதுவொரு சக்தி விரயம். தன்னுடைய சக்தியை என்ன செய்வது என்று தெரியாமல் இன்னொருவருடைய கடும் முயற்சிக்கு... இன்னொருவருடைய வெற்றிக்கு ஆதரவு தெரிவித்து, தானே அந்த வெற்றி பெற்றதாய், தானே அந்த களத்தில் நின்றதாய், தானே அங்கு ஆடியதாய் தீர்மானித்து குதூகலிக்கின்ற ஒரு கொண்டாட்டம். வாழ்க்கையில் ஒரு நாளும் மட்டைபிடித்து அந்தக் களத்திற்கு அவர்கள் போகப் போவதேயில்லை. ஒருவேளை, இப்படி ஆரவாரிக்காமல் இருந்தால் அந்தக் களம் நோக்கி சில அடிகளாவது முன்னேறலாமோ, இப்படி முன்னேற வேண்டும் என்ற எண்ணம் அப்பொழுது வலுப்பெறுமோ என்றும் எனக்குத் தோன்றுகிறது. ஆரவாரத்தில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் முற்றிலும் மறந்துபோய் விடுகிறது. ஏனென்றால், அந்த சிக்ஸர் அடித்ததும், நூறு ரன் குவித்ததும் அவர்தானே... யார் ஆடினாரோ அந்த மனிதர்தானே... அப்படியானால் மறுபடியும் களம் நோக்கிப் போகவேண்டிய அவசியமென்ன? எனவே, அந்த ஆரவாரத்தோடு அவர் வெற்றிக்கதை முடிந்துவிடுகிறது. கடைசிவரை அவர் ஜெயிப்பதேயில்லை... எந்தப் போட்டியிலும் ஈடுபடுவதேயில்லை.

இன்னும் உற்றுநோக்கினால் யார் ஆரவாரம் இல்லாது இருக்கிறார்களோ, அவர்களுக்கு வெற்றி பெறுவதற்கான நோக்கமும், திண்மையும் முயற்சிகளும் அதிகம் இருக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ளலாம். வேறு மொழியில் சொல்லப் போனால் ஆரவாரம் குறைத்தோரால்தான் வெற்றிபெற முடியும்.

சங்கீத கச்சேரி பற்றி நிறைய பேசுபவர்களைக் கவனித்திருக் கிறீர்களா? அவரைவிட இவர் உயர்த்தி, இவரைவிட அவர் நன்றாகப் பாடினார் என்றும், மோகனத்தை இப்படி ஒரு பிடிபிடித்தார் என்றும், இந்த இடத்தில் சுருதி பிசகியது என்றும் வேகமாக விவரிப்பார். எத்தனை சொன்னாலும் சங்கீதத்தை பேச்சால் வெளிப்படுத்த முடியாது. சங்கீதம் கேட்பதற்குண்டான விஷயம். கேட்பதைப் பற்றி பேசுவதில் எந்த லாபமும் இல்லை. நான் கேட்டிருக்கிறேன் என்று வெளியே சொல்லிக்கொள்ளவும், அப்படிக் கேட்டதைப் பற்றி பெருமையாக பேசிக்கொள்ளவும், தனக்கு சங்கீதம் நன்கு தெரியும் என்றும், ஆனால் பாடியோரைப்



போல பாடுவதற்கு தன்னால் இயலாது என்றும் சொல்கின்ற தன்மைதான் இருக்கிறது. பாட முடியாதபோது பேச்சு வருகிறது.

ஒரு நல்ல மோகன ராகம் பாடினால் அது மனதுக்குள் தங்கும். தங்கியபிறகு தனிமை எங்கேனும் கிடைக்க, தனக்குள்ளிருந்து மோகன ராகம் பீறிடும். இதுவே ஒரு நல்ல சங்கீதம் கேட்பதன் விளைவு.

நடிகர்களின் கட் அவுட்டுக்கு பாலபிஷேகம். இது நடிகர்கள் மீது அன்பு. மிகப் பெரிய மரியாதை, அந்த நடிகர் முதல்வராக வரவேண்டுமென்ற தணியாத ஆசை என்றா நினைக்கிறீர்கள்? இல்லை. அந்த கட் அவுட் மீது கால் வைத்து ஏறுகையில் எல்லோருக்கும் மத்தியில் தான் உயர்ந்து நிற்கின்ற ஒரு தன்மைதான் முதலில் வெளிப்படுகிறது. அந்த கட் அவுட் அதற்கொரு காரணமாக அமைகிறது. தன்னை வெளிப்படுத்திக் கொள்ள, தன் பெருமையை நிலைநாட்ட 'நம்ம லோகுதான் மேல ஏறி இருகாப்ல' என்று மற்றவர் சொல்வதை காது குளிர கேட்பதற்காக உயிரைப் பணயம் வைத்து மேலே ஏறுகிறார். மேலே ஏறி பால் ஊற்றிய பிறகு ஊற்றிய பால் கட் அவுட் முழுக்க வழிகிறது. வழிகிற இடத்தில் கால்வைத்து, கைவைத்து இறங்க கைப்பிடியும் நழுவி, பாலும் வழுக்கி தரையில் நெட்டுக்குத்தாய் விழுந்து அந்த இடத்திலேயே உயிர் பிரிகிறது.

எந்த ஜென்மத்திலாவது அவர் நடிகராக வருவாரா... அவர் கட் அவுட்டுக்கு பாலபிஷேகம் நடக்குமா?

தெரியவில்லை. ஆனால், இந்த வாழ்வில் இப்படி ஆரவாரித்தால் அவர் வாழ்க்கையை தொலைத்ததுதான் மிச்சம்.

'அரசியல்வாதிகள் ஆரவாரமாய் இருக்கிறார்களே?' என்று கேட்கலாம்.

அது இயல்பு, அது இயற்கை. ஒரு அரசியல்வாதி ஆரவாரமாகத்தான் இருந்தாக வேண்டும். அமைதியாக எந்த அரசியல்வாதியும் இருக்க முடியாது. இருந்தால் இன்னும் அமைதியாக்கி விடுவார்கள். எனக்கு அமைதி தேவையில்லை என்று உதறியவர்கள்தான் அரசியல்வாதியாக முடியும். அரசியல்வாதி ஆனதாலேயே அமைதியை முற்றிலும் இழந்தவராக அவர் மாறிவிடுவார். பிறகு அமைதி அவருக்குப் பிடிக்காமல் போய்விடும். ஒரு நாள் மாலை கூட்டம் இல்லையென்றால்கூட

உடம்பு நடுங்க ஆரம்பித்துவிடும். நிலைக்கண்ணாடியை நோக்கி மிகப் பெரிய கூட்டத்தின் முன்பு பேசுவதுபோல பேசிக் கொண்டிருப்பார். அரசியலிலிருந்து ஓரம் கட்டப்பட்டவர்களின் நிலை இதைவிட மிக மோசமானது.

பேசிப் பேசி தன்னைத் தானே சிலாகித்துக் கொண்டிருப்பார். 'எம்.ஜி.ஆர். உயிரோட இருந்தபோது நான்தான் மாவட்ட செயலாளர்' என்று முடிந்துபோன கதையை மறுபடியும் பிதற்றிக் கொண்டிருப்பார். அவருக்கு செயலூக்கமும் போயிருக்கும். இந்த அமைதியின்மை உடல் நலத்தை பாதிக்கும். உடல்நலம் பாதித்த பிறகு உத்வேகத்துடன் ஊர்சுற்ற முடியாது. ஊர் சுற்ற முடியாதவர் அரசியல்வாதியாக முடியாது. இரவு பகல் எந்நேரமும் விழித்திருந்து ஒரு கூட்டத்துக்கு நடுவே இருக்க முடியாத ஒரு நபரால் அரசியல்வாதியாக ஜொலிக்க முடியாது. தோற்றுப்போன அரசியல்வாதி என்பது மிகப் பெரிய வேதனை.

ஆரவாரம் இல்லாமல் இருந்தால் என்ன நடக்கும்?

மனம் அமைதியாகும். மனம் அமைதியானால் செயல்திறன் அதிகரிக்கும். எதை நோக்கிப் போக வேண்டும் என்ற எண்ணம் வலுவாக இருக்கும். எண்ணம்தான் வாழ்வு. வலுவான எண்ணம் தான் வெற்றிக்கு வழி. ஆரவாரம் வெற்றியை குலைத்துவிடுமோ என்கிற எண்ணம் வந்தால் ஆரவாரிக்க முடியாது.

"பத்து பேர் சேர்ந்து கிரிக்கெட் மேட்ச்ல கூச்சல் போடறது எவ்ளோ ஜோரா இருக்கும் தெரியுங்களா?" என்று எனக்கு பதில் சொல்வீர்கள் என்றால், நீங்கள் கூட்டத்தில் காணாமல் போனவர்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

## 30

சந்தோஷமாக இருந்தால் ஆரவாரமாக இருப்பது என்று அர்த்தமா? கிரிக்கெட் மேட்ச்சில் சந்தோஷம் என்பது ஆரவாரம் தானே. ஆடுபவரைவிட, அந்த ஆட்டத்தை நிர்வகிப்பவரைவிட அந்த ஆட்டத்தை ரசிப்பவர்தானே மிகப் பெரிய சந்தோஷத்தை அனுபவிக்கிறார் என்று கேள்வி எழலாம்.



உங்கள் அணி ஜெயிக்கிறபொழுது ஆரவாரம் வருகிறது. உற்சாகம் பீறிடுகிறது. மேளங்கள் முழங்குகின்றன. எக்காளம் ஊதப்படுகிறது. ஆனால், உங்கள் அணி தோல்வியைத் தழுவுகின்ற நேரத்தில் யாரோ நெருங்கியவர் செத்துப்போனது போல் உட்கார்ந்திருக்கிறீர்கள். தோற்றுப்போனது உறுதியாகிவிட்டால் திரும்ப வரும்போது எவரோடும் பேசாமல் வெட்கத்தோடும், துக்கத்தோடும் 'இனிமே இந்த கருமம் புடிச்ச கிரிக்கெட் பக்கமே போக வேண்டாம்' என்று கோபத்தோடல்லவா வருகிறீர்கள். ஒரு கிரிக்கெட் மேட்ச் உங்கள் மனோநிலையை மேலும் கீழுமாக மாறி மாறி தாழ்த்துகிறது. என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், மிகவும் உற்றுப் பார்த்தால் இந்த ஆட்டத்தில் உங்களுக்கு பங்கு என்று எதுவுமே இல்லை. ஒரு முயற்சி என்று எதுவுமே இல்லை.

உங்கள் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர். ஏதோ ஒரு காரணத்திற்காக உங்கள் தெருக்களில் ஊர்வலம் வருகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது அவர் வருகின்ற காருக்கு முன்பு கதவில் தொற்றியபடி பம்பரில் நின்றபடி சில இளைஞர்கள் ஆரவாரித்து வருவார்கள். இந்தப் படை போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா என்று குதிப்பார்கள். கடைவாசலில் நின்று வசூலிப்பார்கள். உங்கள் வீட்டு வாசலில் போஸ்டர் கிழிக்கப்பட்டிருந்தால் அதைப் பார்த்து, இன்னொரு தடவை போஸ்டர் கிழிந்திருந்ததை பார்த்தேன் பட்டா நீ காலி என்று பேசுவார்கள். அவர்களுடைய ஆரவாரத்தைக் கண்டு நீங்கள் முகம் சுளிப்பீர்கள். உண்மையில் உங்கள் ஆரவாரத்திற்கும் அவருக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. உங்கள் ஆரவாரம் நாகரீகமானது என்று நினைத்துக் கொண்டிருந்தால் அது தவறு.

கிரிக்கெட்டை கட்டிக் கொண்டாடுகின்ற இளைஞர்கள் எத்தனை பேர் ஜல்லிக்கட்டை வரவேற்பார்கள், சொல்லுங்கள் பார்க்கலாம். கிரிக்கெட்டைவிட ஜல்லிக்கட்டு இன்னும் சுவாரசியமானது. இன்னும் பயங்கரமான வேகமுடையது. கிரிக்கெட்டில் மரண பயமில்லை. இங்கோ எந்த நேரத்திலும் எவரும் செத்துப்போகலாம். குடல் சரிந்து ரத்தம் வழிய கீழே சாயலாம் என்ற நிலை இருக்கிறது. எனவே, கிரிக்கெட்டைவிட ஜல்லிக்கட்டு உயர்வானது என்று உங்களால் சொல்ல முடியாது.

ஜல்லிக்கட்டுக்கு கிராமங்களுக்கு நடுவேயே எதிர்ப்புகள் வந்துவிட்டன. 'என்னாத்துக்கு இது' என்று விலகுகிறார்கள்.

கிரிக்கெட்டை விட ஜல்லிக்கட்டில் இன்னும் ஆரவாரம் அதிக மிருப்பதை கவனித்திருக்கிறேன். ஆனால், இந்த ஆரவாரமான இயல்பு நம்முடைய சிந்தனையை மாறுபாடு அடையச் செய்கிறது. இந்த ஆரவாரம் பிடித்துவிட்டால், இந்த ஆரவாரம் பழகிவிட்டால் நம்முடைய சிந்தனையின் ஓட்டங்கள் வேறுவிதமாகப் போகின்றன. சாதாரண சண்டை பெரிய சண்டையாக மாறுவதற்கு இந்த ஆரவாரம் உள்ளே தங்கியிருப்பதுதான் காரணம். இரண்டு பேர் அடித்துக் கொண்டது இரண்டு ஊர் அடித்துக்கொள்கின்ற வேதனையாக வளர்வதற்கு உள்ளுக்குள்ளே பொங்குகின்ற அந்த வேக உணர்ச்சிதான் காரணம்.

'அந்த ஜாதிக்காரங்க இந்தப் பக்கம் வரக்கூடாதுங்க. அதான் வழியை மறிச்சு செவுரு கட்டிட்டோம்' என்று திகைக்க வைக்கும்படி கூடாது. ஒரு குரூரத்தை வெளியே சொல்கிறார்கள். 'அது நியாயந்தான்' என்பதாக அழுத்தம் திருத்தமாக ஆண்களும் பெண்களுமாக பேசுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட ஜாதியினர் ஒன்று கூடி அரிவாள் உயர்த்தி சிலம்பம் சுழற்றி ஆரவாரித்ததனுடைய வெளிப்பாடு இந்த குரூரம். 'வெறுமன கத்திக்கிட்டேயிருந்தா போதாது. எதுனா செய்யணும். என்ன செய்யறது?' என்று கேள்வி கேட்டு, 'குறுக்க செவுரு எழுப்பிடுங்க. அவங்க யாரும் இந்தப் பக்கம் வரவே கூடாது' என்று ஆண்கள் கோரமான முகத்தை வெளியிட்டிருக்கும் அவலம். அமைதியாக இருந்தால் அவர்களும் மனிதர்கள்தானே என்று அவர்களுக்குத் தோன்றியிருக்கும். தோன்றவே தோன்றாதபடிக்கு உள்ளுக்குள்ளே ஆரவாரம் கெடுத்துவிட்டது. அப்படி ஆரவாரிப்பது நியாயம் என்று தோன்றிவிட்டது. அந்த ஆரவாரத்தின் விளைவுதான் இந்தப் பிரிவினையின் குரூரம் என்று சொன்னால் அவர்களுக்குப் புரிவதில்லை. அடித்தவருக்கு வெற்றிக் களிப்பு. தடுக்கப் பட்டவருக்கோ மனக் கொந்தளிப்பு.

'என் உசிரே போனாலும் சரி... இந்த செவுத்தை இடிக்காம போக மாட்டேன்' என்று சூளுரைத்து சுவர் இடிக்க வைத்திருப்பார்கள். அப்போது ஆரவாரித்திருப்பார்கள். 'செவுரா கட்டறீங்க செவுரு. செவுரு இடிச்சிட்டோம். வாங்க, ஊர்கோலமா போகலாம்.' தாரை தப்பட்டை முழங்க மிக முரட்டுத்தனமான ஒரு குத்தாட்டத்தனத்தோடு அவர்கள் அந்த தெருவழியே போவார்கள். குத்தாட்டம் எதிர்அணித் தலைவர் வீட்டு வாசலில்



நிற்கும். உச்சஸ்தாயியில் ஆடப்படும். அவருக்கு முன்புபோய் இடுப்பை முன்னும் பின்னும் ஆட்டுகின்ற விஷயம் நடக்கும். ஆயிரம் கெட்டவார்த்தைகளை ஒன்றாக அடக்கிய செயல் அது. அவர்கள் வீட்டுப் பெண்களின் முன்னாலும் அதே விதமான அபிநயம் காட்டப்படும்.

'பொம்பளைங்களும் தானே கூட சேர்ந்து ஆடினாங்க' என்று நியாயம் கற்பிக்கப்படும். 'எங்க வீட்டுப் பொம்பளை முன்னாடி இப்படி ஆடிட்ட இல்லைடா. நான் மறுபடியும் அந்த செவுர கட்டறேன் பார்.' வன்மம் மறுபடியும் தலையெடுக்கும். சுவர் கட்ட முயற்சிகள் நடக்கும்.

'கல்லு அடுக்கறான். கல்லு அடுக்கறான்!' தடுக்கப்பட்டவர்கள் மறுபடியும் ஒன்றுதிரளுவார்கள். தடுத்தவர்கள் வீறுகொண்டு எழுவார்கள். இரண்டு பக்கமும் மூன்று நாளைக்கு கல்லெறிதலும், கட்டை வீச்சும், அரிவாள் வெட்டும் சகஜமாக நடக்கும். இவர் மகளை அவரும், அவர் மகளை இவரும் கண்டமேனிக்கு வசைமாறி பொழிவார்கள். நன்றாக யோசித்துப் பாருங்கள். இது ஆரவாரத்தின் விளைவு. இதை அமைதியாக தீர்க்க வேண்டுமென்ற எண்ணம் இல்லாததனுடைய முடிவு.

இதை உட்கார்ந்து பேசித் தீர்க்க முடியாதா? நிச்சயம் தீர்க்க முடியும். முதலில் உள்ளுக்குள்ளே பொங்குகின்ற ஆரவாரத்தை அறவே ஒழிக்க வேண்டும்.

ஏன் இப்படி நடக்கிறது? மனிதர்களில் உயர்வென்ன... தாழ்வென்ன. உயர்ந்த ஜாதிக்காரருக்கு மரணம் இரண்டு நாள் தள்ளி வருமா? இல்லை, தாழ்ந்த ஜாதிக்காரனுக்கு ஆயுசு அதிகமா? எங்கே பிரிவினை... எதனால் பிரிவினை... யார் பிரித்தார்கள்... தொழில்வழியில் பிரித்ததுதானே இழிவென்று மாறிவிட்டது. இழிவென்று நினைத்ததுதானே, எங்க தெருபக்கம் வராதே என்று கத்த வைத்தது.

'எங்க ஏரியா! உள்ள வராதே' என்று பஸ் டே கொண்டாடும் மாணவர்கள் போலீஸ்காரர்களை நோக்கி கூச்சலிட்டார்களாம். போலீஸ்காரர்கள் நுழைய முடியாத இடம் ஒன்று இந்த தேசத்தில் உண்டா... அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் இது ஜனநாயகம்தானா... இது மாணவர் சர்வாதிகாரம் என்ற இடத்தை அடையவில்லையா... சர்வாதிகாரம் எந்த ரூபத்தில் வந்தாலும்

அதற்கெதிராக கடுமையான விளைவுகளும் ஏற்படும். உலகம் முழுவதும் சர்வாதிகாரத்திற்கு எதிராக நடக்கின்ற விஷயங்களை உற்றுப் பார்த்தால் தெரிந்துகொள்ள முடியும்.

'அப்போ என்ன சொல்றீங்க... பஸ் டே கொண்டாடவே கூடாதா?'

அற்புதமாகக் கொண்டாடலாம். அன்றைக்கு ஒரு நாள் பஸ்ஸின் கூரையில்கூட உட்கார்ந்து ஊர்வலம் வரலாம். அந்தப் பகுதியில் வருகிற பஸ்களைத் தேர்ந்தெடுத்து, வண்ணக் காகிதங்களை கொண்டு அலங்கரிக்கலாம். பாட்டு பாடிக்கொண்டும் கைதட்டிக் கொண்டும் அந்த மூன்று பஸ்களில் ஊர்வலம் வரலாம். மற்ற பேருந்துகள் வழக்கம்போல மற்ற பயணிகளோடு போவது மிகமிக முக்கியம். அதற்கு இடைஞ்சல் வரவே கூடாது என்பது அவசியம். மற்ற பயணிகளுக்கு பஸ் கிடைத்து அவர்கள் அலுவலகத்திற்கு போகும்போது உங்கள் கொண்டாட்டத்தையும் நன்றாக ரசித்து விட்டுப் போவார்கள். நீங்கள் கொடுக்கிற பாதி லட்டுவை வாய்நிறைய அதக்கிக்கொண்டு வாழ்த்து சொல்வார்கள். உங்களுடைய ஆட்டம் அத்துமீறுகிறபோது, போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறபோது, ஒரு அநாகரீகமான வெளிப்பாடாக மாறுகிறபோது போலீஸ்காரர்கள் அந்த வேகத்தை குறைக்க முயற்சிக்கிறார்கள். அதை மாணவர்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள். 'ஏய்... ஏய்...' என்று அதட்டுகிறார்கள்.

இது குழு மனப்பான்மையால் ஏற்படுகின்ற மனப்பித்து. பயணிக்கு இதனால் நிச்சயம் கோபம் வரும். 'இந்த ஆரவாரத்தை என்னால் சகிக்க முடியவில்லை. ஏன் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டேன் என்கிறது?' என்று எல்லா தமிழ், ஆங்கில தினசரிகளுக்கு கடிதங்கள் உட்கார்ந்து எழுதுவார்கள். கூச்சலைவிட உட்கார்ந்து எழுதப்பட்ட அந்தக் கடிதங்கள் பெரும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

மாணவர்களால் போக்குவரத்து எப்படிச் சீரழிந்தது என்று தனி நிருபர் போட்டு செய்தி வெளியாகிறது. அது அதிகாரிகள் கவனத்திற்கும், அரசியல்வாதிகள் கவனத்திற்கும் போக, மாணவர்களை எப்படித் தந்திரமாக அடக்குவது என்று யோசிக்கிறார்கள். கொப்பளிக்கின்ற சக்தியை நம் தேசத்து இளைஞர்கள் விரயம் செய்கிறார்கள் என்பது என் அபிப்பிராயம். அதனால்தான் ஒலிம்பிக்கில் ஜெயிக்கக்கூடிய அளவுக்கு



ஓட்டப்பந்தய வீரரோ, உயரம் தாண்டும் வீரரோ, நீளம் தாண்டுகின்ற வீரரோ, குத்துச் சண்டைக்காரரோ, வெகுதூரம் ஓடுகின்ற மாரத்தான் வீரரோ வருவதேயில்லை. உணவுக்குக் கையேந்தும் பஞ்ச நாடான ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து கூட ஒலிம்பிக் பதக்கம் தட்டிப்போகின்ற வீரர்கள் உண்டு. நம்மிடையே ஜெயிப்பவர் இல்லை. நாம் ஆரவாரக்காரர்கள். ஜெயிப்பவர்களல்ல.

இந்த நாட்டில் படித்த கெட்டிக்கார இளைஞர்கள் வேறு தேசத்தில் விஞ்ஞானிகளாக விலை போய்விடுகிறார்கள். மருத்துவர்களாகப் போய் சிறப்பாகிறார்கள்.

"டென்த் வரைக்கும் சென்னையில படிச்சேன். அதுக்குப் பிறகு பாம்பே. பாம்பேலேர்ந்து எம்.பி.ஏ. முடிச்சுட்டு லண்டன். லண்டன்லேர்ந்து ஜெர்மனி. ஜெர்மனிலேர்ந்து யு.எஸ்ல போய் செட்டில் ஆகிட்டேன். தமிழ் கொஞ்சம் கொஞ்சம் பேசுவேன். என்று சொல்கிறார்கள். அவர்கள் போய்விட்டார்களா... நாம் உதறிவிட்டோமா என்ற கவலை வருகிறது.

அமெரிக்காவில் ஆரவாரம் இல்லையா... ஐரோப்பாவில் ஆரவாரம் இல்லையா...

இருக்கிறது. ஆனால், ஒருவரையறைக்குள் இருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவில் கிரிக்கெட் விளையாட்டின்போது மைதானத்தைச் சுற்றிலும் புல்மேடு அமைத்திருக்கிறார்கள். அந்த புல்மேட்டில் அமர்ந்தபடி ஆண்களும், பெண்களும் வேடிக்கை பார்க்கிறார்கள். இரும்புக் கம்பிகளால் ஆன வளைத்தடுப்பு இல்லை. க்யூ இல்லை. ஏன் இல்லை... அவர்கள் எவரும் எந்தக் காரணம் கொண்டும் அந்த தடுப்பு தாண்டி மைதானத்திற்குள் நுழையவே மாட்டார்கள். ஏனெனில், அவர்கள் ஆரவாரம் அளவானது. ஆக்ஸ்ஃபோர்டு யூனிவர்சிட்டியில் பஸ் டே கொண்டாட்டம் உண்டா... போக்குவரத்தை வழிமறித்து இருநூறு மாணவர்கள் ஒரு வண்டியில் பயணம் செய்வதுண்டா... கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும். எவற்றிலும் கேள்வி இல்லாத போதுதான் ஆரவாரம் அதிகமாகிறது. தான் செய்வதுதான் சரி என்றாகிறது. வேறு என்ன செய்தால் மற்றவர் கவனத்தை கவரலாம் என்கிற எண்ணம் உண்டாகிறது. இவ்வளவு சொன்ன பிறகும், ஆரவாரிப்பது எங்கள் பிறப்புரிமை என்று கோஷம் வரலாம். அவர்களை மாற்ற முடியாது. ஆனால், இரண்டு தலைமுறைகளுக்கு

அப்பால் இந்த ஆரவாரம் பற்றி நிச்சயம் யோசிப்பார்கள். எதனால் நம்முடைய முன்னோர்கள் ஆடியிருக்கிறார்கள் என்று வியப்பார்கள். கேலி பேசுவார்கள். இரண்டு தலைமுறைகளுக்கு முன்னால் பதினாறு வயதானால் போதும், வெற்றிலைப்பாக்கு போடலாம் என்கிற விஷயம் இருந்தது. இன்று பதினாறு வயது இளைஞன் வெற்றிலைப்பாக்கு போடுவானா? பதினெட்டு வயதிற்குள் ஆணுக்கோ, பெண்ணுக்கோ திருமணம் முடித்துவிட வேண்டும். ஏன், பதினான்கு வயது பெண்ணுக்குக்கூட திருமணம் நடந்துவிட வேண்டும் என்பது கட்டாயமாக இருந்தது. இப்போது செய்வது முடியுமா? செய்வதை நாகரீகம் என்று நாம் நினைப்போமா?

ஆரவாரம் மாறாது என்று நினைக்காதீர்கள். உலகில் சகலமும் மாறும். மாறுவதே உலகம்.

ஆரவாரம் இல்லாமல் இருப்பது எப்படி? உள்ளுக்குள்ளே ஒரு குதூகலம் பரவுகிறதே... ஒரு நல்ல விஷயம் கேள்விப்பட்டவுடன் எழுந்து ஆடவேண்டுமென்று தோன்றுகிறதே.

''நான் பரீட்சையில் தேர்வு பெற்றுவிட்டேன். நல்ல மதிப்பெண்கள் எடுத்துவிட்டேன். பேப்பரில் தாய், தந்தையருடன் போட்டோ வந்தது. ஒரே கொண்டாட்டம். வீடு முழுவதும் மகிழ்ச்சி. இதை எப்படிக் குறைத்துக்கொள்வது.''

எதையும் குறைக்கச் சொல்லவில்லை. ஒரு வரைமுறைக்குள் இருக்கச் சொல்கிறேன்.

''என் புள்ள நல்ல மார்க் வாங்கியிருக்கான். இனி முழுக்க நான் தண்ணி போடப்போறேன். யாரும் தடுக்கக் கூடாது'' என்று ஒரு தகப்பனார் சொல்வாரென்றால் அது எல்லை தாண்டிய விஷயம்.

''என் பிள்ளை நல்ல மதிப்பெண்கள் வாங்கியிருக்கிறான். பாயசம் வை. இனிப்புகள் வாங்கி எல்லோருக்கும் கொடு. பட்டுப்புடவை எடுத்துக்கொள். பையனுக்கு சட்டையும், பேண்ட்டும் வாங்கிக்கொடு. பையன் மட்டும் வாங்கினால் போதுமா... அவன் தங்கைக்கும் வாங்கு'' என்று சொன்னால் இது வரைமுறைக்கு உட்பட்டது.

உலகிலுள்ள எல்லா மதங்களும் இந்த வரைமுறைக்குட்பட்ட ஆரவாரத்தைத்தான் அங்கீகரிக்கின்றன.



# 31

'அன்புள்ள ஐயா, உணவு உண்ணும்போது இடது கையை எங்கே வைத்துக்கொள்வது?' ஒரு வாசகர் ஒரு பத்திரிகையில் கேள்வி கேட்கிறார்.

அதற்கு அந்த அன்பு ஐயா, 'இடது கை இருக்கிற இடத்திலேயே இருக்கட்டும். வேறெங்கேயும் அதை வைக்க வேண்டாம்' என்று பதில் சொல்கிறார்.

அபத்தமான கேள்வி. அலட்டலான பதில். வாரப் பத்திரிகையில் எல்லாம் தெரிந்ததான பதில்களைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது.

'நான் விளக்கேற்றி அதைத்தான் தினமும் வழிபடுகிறேன். அந்த விளக்கை வெறுமே தட்டில் வைக்கக்கூடாது. குங்குமம் கலந்த தட்டில்தான் வைக்க வேண்டும் என்று சொல்கிறார்களே... இது உண்மையா?'

'குங்குமம் கலந்த ஜலம். சந்தனம் கலந்த ஜலம். மஞ்சள் கலந்த ஜலம். வெறும் ஜலம். வெறும் தரை. வெறும் தட்டு என்று ஆளாளுக்கு எல்லாம் தெரிந்தது போல சொல்லிக் கொண்டிருங்கள்' என்கிற விடேத்தியான பதில் ஒரு குழப்பமான நிலைக்கு வாசகரை தள்ளுகிறது.

ஆசார, அனுஷ்டானங்களைப் பற்றி ஜனங்கள் அதிகம் தெரிந்து கொள்ளவேண்டிய ஆர்வம் உண்டானது போல ஒரு தோற்றம் கிடைக்கிறது. எல்லா ஆசாரங்களும் அகந்தையைக் கொண்டு அகந்தையை வளர்க்க வழிவகுப்பவை. 'மேல படாத. நான் மடி' என்று ஆரம்பித்து என் பூஜையை யாரும் பார்க்கக் கூடாது. அது ரகசியமானது என்று கதவு சார்த்திக்கொள்வது வரை அகந்தையின் விஸ்வரூபம் என்று மறுப்பதற்கில்லை. எல்லாம் அறிந்த ஞானிகள் இப்படி வாழ்ந்ததேயில்லை. சுத்தம்... தனிமை... மௌனம்... என்ற பக்திக்கான விஷயத்தை உரக்க முழங்கும் கூச்சலாக மாற்றிவிட்டார்கள். பக்தி காணாமல் போய் ஆசார அலட்டல் மட்டுமே நிற்கிறது. அகந்தை மட்டுமே தலைவிரித்தாடுகிறது.

குடுமியில் கொய்த மலர், வாயில் அபிஷேக நீர், கையிலே புத்தம் புதிய மாமிசம், உடம்பெல்லாம் புழுதி, வியர்வை, திண்ணன் என்கிற வேடன் மலையேறி வந்து வாய்நீரை உமிழ்ந்து மாமிசத்தை படைத்து, தலையில் சூடியுள்ள பூக்களை எடுத்து சிவலிங்கத்தின் மீது சுற்றி 'உண்ணுக ஐயனே, உண்ணுக. பசியாகவும், தனியாகவும் இருந்து களைத்திருக்கிறீர்கள். நானிருக்கிறேன் உண்ணுக' என்று வேண்டுகிறார்.

இறைவன் உண்ணவில்லை. மாறாக கண்ணிலிருந்து ரத்தம் வருகிறது. இந்தப் புல், அந்த இலை என்று ஏதேதோ பிழிந்து வைத்தியம் செய்து பார்க்கிறான். நிற்கவில்லை. என்னமோ உள்ளே தோன்றுகிறது. கண் சரியாக கண்ணை அப்பினால் ரத்தம் நிற்குமென்று தோன்றுகிறது. தோன்றியவுடனேயே கூரிய அம்பை எடுத்துக் கண்ணில் பதித்து கண்ணைத் தோண்டி வைத்து விடுகிறான். கண் ரத்தம் நின்றுவிடுகிறது. ஆனால், அடுத்த கண்ணில் வருகிறது. அதனாலென்ன... எனக்கு இன்னொரு கண் இருக்கிறது என்று மறுபடியும் அம்பை எடுத்து அடுத்த கண்ணில் அடையாளம் தெரிவதற்காக செருப்பணிந்த காலை அந்த இடத்தில் வைத்துக்கொண்டு இன்னொரு கண்ணையும் நோண்ட முயற்சிக்க, சிவலிங்கத்திலிருந்து ஒரு கை வெளிப்பட்டு 'நில்லு கண்ணப்ப' என்று கைபிடித்துத் தடுக்கிறது.

வேடர் திண்ணனை இறைவன் தொட்டு தடுத்து 'கண்ணப்ப' என்று பெயர் சூட்டி மகிழ்கிறார்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் கண்ணப்பர் ஓர் அற்புதம். அந்த கண்ணப்பருக்கு எந்த ஆசாரமும் தெரியாது. அந்த வேடரின் பக்திக்கு முன்பு ஆசார அனுஷ்டானம் திகைத்துப்போய் நிற்கிறது. என்னால் தன் கண்ணை குத்தி இப்படித் தன்னால் அப்ப முடியுமா என்று பயந்துபோய் நிற்கிறது. பக்தி என்கிற இடத்திற்கு அழைத்துப்போகத்தான் ஆசார அனுஷ்டானங்கள் உதவி செய்ய வேண்டும். மாறாய் அது தனக்கும் பக்தியில்லாமல் அடுத்தவர் மீதும் அன்பில்லாமல் ஒரு குரூரமான தோற்றமாக மாறிவிடுகிறது.

வேடன் படைத்த மாமிசத்தை அருவருப்போடு அப்புறப்படுத்திவிட்டு வில்வத்தால் அந்தணர் பூஜிக்கிறார். அந்தணர் பூஜை செய்த வில்வத்தையெல்லாம், 'இதென்ன குப்பை. யார் போட்டது' என்று கடிந்துகொண்டு அப்புறப்படுத்திவிட்டு திண்ணன் மறுபடியும் மாமிசம் படைக்கிறான். இப்படி மாறி மாறி பல நாள் கூத்து நடக்கிறது. எது சரி. இறைவனே தீர்ப்பு வழங்குகிறான். அவனே கைநீட்டி திண்ணன் என்ற வேடனை தடுத்து, கண்ணப்ப என்று கூப்பிடுகிறான். பக்தியே முழு முதல் விஷயம். பக்தியால்தான் தன் கண்ணை தானே குத்தி தானம் செய்ய முடியும். பக்தியால்தான் 'தன்னைப்' பிடுங்கி எடுத்து இறைவன் முன்பு நிவேதனம் செய்ய முடியும். தான் என்ற அகங்காரத்தை ஆசாரங்கள் வளர்க்க, பக்தி தன்னை அழிக்கின்ற விஷயத்தை சொல்லித் தருகிறது. பக்தி என்பது ஒரு பயிற்சி அல்ல. செய்முறைகளின் குவியல் அல்ல. இடது, வலது, மேல், கீழ் என்ற வாழ்க்கை முறை அல்ல. அதுவொரு மனோநிலை. தானற்ற இடம். நானே அது என்று ஒன்றான சுகம். இறைவனுடைய கண்... தன்னுடைய கண், தன்னுடைய கண்... இறைவனுடைய கண் என்று தானும் இறைவனும் ஒன்றான இடம். அந்த மனோ நிலையை யோசிக்க யோசிக்க உடம்பு நடுங்குகிறது. அந்த மனோ நிலைக்கு வருவதற்கு ஆசார அகந்தை தடுக்கிறது.



'அன்புள்ள ஐயா, குளிர்சாதனப் பெட்டியில் வைத்த முந்தா நாள் பூவை இறைவன் வழிபாட்டுக்குப் பயன்படுத்தலாமா!'

'கூடாது. சாத்திரம் அதைத் தடுக்கிறது. அன்றைக்கு பறித்த பூவை இறைவனுக்கு படைப்பதுதான் விசேஷம். உங்களுக்கு சௌகரியம் இருக்கிறது என்று விஞ்ஞான கண்டுபிடிப்புகளை வைத்துக்கொண்டு பூஜை செய்வது சரியில்லை. வீட்டில் எங்கேனும் இரண்டு தொட்டிகளாவது வைத்து பூச்செடி வளர்த்து அதில் பூக்கும் பூக்களை, இலைகளை இறைவனுக்குப் போடலாம். குளிர்சாதனப் பெட்டி பூ பழம்பூ! பழம்பூ இறைவனுக்கு ஆகாது.'

இந்த பதில் திகைப்பாய் இருந்தது. பரத கண்டத்துக் கோயில்களில் முதன்மையான இடம் திருப்பதி திருமலையில் இருக்கின்ற வெங்கடாசலபதிக் கோயில்.

சென்னையிலுள்ள ஒரு செல்வந்தர் வீட்டில் தினந்தோறும் பூக்கள் வாங்கி, தொடுத்து மாலையாக்கி அதை உடனடியாக திருப்பதிக்கு காரில் அனுப்பி கோயிலுக்குக் கொண்டுபோய் சேர்க்கிறார்கள். இதை நான் கண்ணாரக் கண்டிருக்கிறேன். அது முந்தாநாளுக்கும் முதல் நாள் பூ. குளிர்சாதனப் பெட்டிப் பூ. பரதகண்டத்தின் முதன்மையான கோயில் அதை ஏற்றுக் கொள்கிறது. இது பக்தியா... ஆசாரமா... எனக்குத் தெரியவில்லை.

பூஜை சம்பிரதாயங்களைப் பற்றி ஜனங்கள் கேள்வி கேட்பதும் அதற்கு பலர் பல பத்திரிகையில் பலவிதமான பதில் சொல்வதும், இறுதியில் குழப்பம்தான் ஏற்படுகிறது. 'கடவுளே... கடவுளே! பக்தியை யார் சொல்லித் தருவார்கள்?' என்று ஏக்கம் எழுகிறது. 'மேலப் படாத. நான் மடி' என்று சொல்வது பக்திக்குத்தான் அழைத்துப்போகிறது என்று சொல்வாராயின், அதுபற்றி மிகப் பெரிய கேள்வி எழுகிறது.

பக்தி என்பது சத்தியத்தின் வாசல். பக்தி என்பது குழைந்து, கனிந்து, பரமானந்தமாக நிற்கின்ற நிலை. அப்படிப்பட்ட நிலையில்தான் இறை தரிசனம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. வாடிய மலர்களை, வாயில் தேக்கி வைத்த நீரை கடவுளுக்கென்று அந்த வேடன் கொடுத்ததை படிக்கும் போது குளிர்சாதனப் பெட்டி பூகூட அல்ல, வெறும் குப்பைகளை பூ என்று நினைத்துப் போட்டாலும் இறைவன் ஏற்றுக்கொள்வான் என்றுதான் தோன்றுகிறது. கொடுக்கின்ற பொருள் முக்கியமல்ல... கொடுக்கின்ற மனோநிலை முக்கியம். பூ முக்கியமல்ல, அந்த மனம் முக்கியம். ஏதேனும் ஒரு பத்திரிகையை சுக்கலாகக் கிழித்து ஒவ்வொரு கிழிந்த காகிதத்தையும் 'ஓம் விகடாய நமஹ... ஓம் விக்னராஜாய நமஹ...' என்று அர்ச்சித்தால் தவறா... ஆசாரமின்மையா... கேள்வி வருகிறது.

ஆசாரங்கள் காலத்திற்குக் காலம் மாறுபடுபவை. குடுமி வைத்துக்கொண்டவருக்குத்தான் முதல் பந்தி என்று சொன்ன காலம் இல்லை. குடுமியைவிட க்ராப்பு சௌகரியம். வேட்டியை விட பேண்ட் சௌகரியம். ஆந்திராவுக்கு அந்தப்பக்கம் போனால் குளிர்காலத்தில் யார் பூசகரோ, அவர் அரைக்கால் சட்டை, ஸ்வெட்டர் மேலே சால்வை, தலையில் குல்லா போட்டுக் கொண்டு கருவறையில் உட்கார்ந்துகொண்டிருப்பதை காணலாம். வந்து சிவலிங்கத்தை கட்டிக்கொள் என்று கூப்பிட்டு தட்சணை கேட்பார்கள். நெற்றியில் குங்குமம் வைப்பார்கள். தென்னிந்தியாவில் இவை அனைத்தும் தவறு. காரணம், இது வெயில் தேசம். மார்கழியிலும் இங்கு இடுப்பு வேட்டியும், மேல் துண்டுமாகவும் நிற்க முடியும். இமயமலை அடிவாரத்தில் ஒரு பூசகரை இப்படி நிற்கச் சொன்னால் செத்துப்போவார். உடனே சிவலோகப் பதவி அடைவார். எனவே, இங்கு ஆசாரம் மாறுகிறது.



'சாஸ்திரம் என்ன சொல்றதுன்னு கேள்வி கேட்கற, சாஸ்திரம் இதைத்தான் சொல்றது... மத்தபடிக்கு நீ என்னமோ பண்ணித் தொலை' என்று பதில் சொல்வதற்கு பதிலே சொல்லாதிருக்கலாம். பக்திக்குப் பதில் அகங்காரத்தை சொல்லாது இருக்கலாம். உண்மையை விளக்காது இருந்துவிட்டு இருப்பதற்குப் பதில் பொய்யை பேசாதிருக்கலாம்.

ஆசார, அனுஷ்டானங்களைத் தெரிந்துகொள்வதே தவறா. அனுஷ்டிப்பது குற்றமா?

இல்லை. ஒரு பொழுதும் இல்லை. என்ன செய்கிறோம் என்று உணர்ந்து செய்யுங்கள். எந்த பூஜை செய்தாலும், எப்படிச் செய்தாலும் மனம் ஒன்றிச் செய்யுங்கள்.

'ஒரு அமாவாசை தர்ப்பணம் விடறதுல்ல... எங்க இருந்தாலும் செய்துடறது' என்பது வெறும் கர்வம். இது அடுத்தவருக்கு சொல்லிக்கொள்வதற்காக செய்வதல்ல. நம் முன்னோர்களை நினைத்து உருகி உருகி செய்வது. நான் இன்று வளர்ந்து நிற்பதற்கு நீதானே காரணம் என்று நன்றியில் நனைவது. சிரார்த்தம் என்பது சிரத்தையாகச் செய்வது. தர்ப்பைப் புல்லைப் போட்டு 'இதமாசனம்' என்று சொல்கிறபோது அங்கே இறந்துபோன முன்னோர்கள் அமர்வதை மனக்கண்ணில் காண வேண்டும்.

எந்தை வருக ரகுநாயக வருக
மைந்த வருக மகனே இனி வருக...

என்று பாடுகிறபோது முருகன் வருகின்ற அடியோசை, சிலம்பொலி காதில் கேட்க வேண்டும்.

நான் நாற்பது தொட்டிகளில் பூச்செடிகள் வளர்க்கிறேன். கடையிலும் பூக்கள் வாங்குகிறேன். எவை எந்தப் பூ என்று பார்ப்பதில்லை. மனம் ஒருமைப்படுத்தவே பூக்களை உபயோகிக்கிறேன்.

பூர்வஜென்ம புண்ணியமிது. உன்னைக் கண்டது இது. போன ஜென்ம வாசனையில் அருகில் வந்தது...

என்று பாடுகிறபோது என் குருவின் நினைப்பில் கண்ணில் நீர் கட்டுகிறது. நல்ல மனைவி. நல்ல தாய் தகப்பன். நல்ல பிள்ளைகளூடே நல்ல குரு எவ்வளவு பெரிய நிம்மதி என்று மனம்

உணருகிறது. நாம் எது செய்தாலும் உண்மையை நோக்கி அடிவைக்க அது உதவி செய்ய வேண்டும். இதுவே முக்கியம்.

## 32

ஆசார அனுஷ்டானங்களைவிட கலி யுகத்தில் பக்திதான் மிகச் சிறந்தது என்று பல பெரியோர்கள் வாதிட்டிருக்கிறார்கள். பக்தி மட்டும் போதாது... ஆசாரமும் வேண்டும் என்று பல பெரியோர்கள் எதிர்குரலும் கொடுத்திருக்கிறார்கள். இந்த விவாதங்கள் பல காற்றோடு போய்விட்டன. எழுதப்படவில்லை. அடுத்த தலைமுறைக்கு சொல்லப்படவில்லை. ஆசார அனுஷ்டானங்கள் கரைந்து காணாமற் போய்விட்டன. அனுஷ்டானங்களின் ஒரு கிளையான மந்திரஜபம் மட்டும் சில பகுதியில் சாக்த கொள்கை உடையவர்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. ஆனால், மந்திரஜபம் செய்வதில் அவர்களிடமும் வலிவு இல்லை. அப்படி வலுவுள்ளவர்கள் சிலர் இருந்தாலும் அவர்கள் தங்களை வெளிக்காட்டுவதில்லை. பக்திக் கூட்டத்திற்கு முன்னால் என் பேச்சு, என் கொள்கை, என் வழிமுறை எடுபடாது என்று மௌனமாக இருக்கிறார்கள்.

உண்மையில் மந்திர ஜபம் மிக வலியது. அது சநாதன தர்மம் என்று அழைக்கப்படும் இந்து மதத்திற்கு மட்டும் சொந்தமானதல்ல. இஸ்லாத்திலும், பௌத்தத்திலும், கிறிஸ்தவத்திலும் இம்மாதிரி மந்திரஜபங்கள் உண்டு. மணிகள் உருட்டி தனக்குள்ளேயே மந்திரத்தை மறுபடி மறுபடி முணுமுணுத்து ஒரு ஏகாக்கிரகம் அடையும் தன்மையைப் பலர் பின்பற்றி வருகிறார்கள். ஆனால், மந்திர ஜபம் எளிதல்ல. அது கத்தியை வாய்க்குள் விட்டு வெளியே எடுக்கின்ற சர்க்கஸ் வித்தை. அது உள்ளே போய் தங்கவும், வெளியே பிரயோகமாக வெளிப்படவும் மிகப் பெரிய பயிற்சி வேண்டும்.

மந்திர ஜபம் செய்து காசு கொடு என்றால் காசு விழ வேண்டும். காணாமற்போன பொருள் எங்கேயிருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும். மந்திர ஜபம் செய்பவரால் எதிரே இருப்பவரின் மனதை அறிய முடியும். எதிர்காலம் தெளிவாகத் தெரியும்.



மெல்லிய தர்ப்பைப் புற்களை பரப்பி அதன்மீது அமர்ந்து சுவாசத்தை நீண்டதாக இழுத்துவிட்டு விநாயகரை நினைத்து வணங்கி, குருவை, தேவதைகளை ஆராதித்து வணங்கி கால்வயிறு பழச்சாறோ, பாலோ அருந்தி கொஞ்சம் சாய்மானமாக அமர்ந்து மனம் என்ன செய்கிறது என்று உற்றுப்பார்த்து உற்றுப் பார்த்தலில் மனம் அடங்கியவுடன் மந்திரஜபம் செய்யத் துவங்கி, மந்திர ஜபத்திலேயே மனம் கரைந்து சிறிதளவு பழங்கள் எடுத்துக் கொண்டு நீர் அருந்தி, இயற்கை உபாதைக்கு மட்டும் எழுந்துபோய் வந்து, குளித்து குளிக்கிறபொழுதும் மந்திர ஜபம் செய்து எவரையும் சந்திக்காமல் எதுவும் பேசாமல், வேறு எந்த சிந்தனையும் இல்லாமல் இரண்டு நாட்கள், நான்கு நாட்கள் மந்திர ஜபம் செய்ய முடியுமா? செய்தால் உடம்புக்குள், மனதிற்குள் ஏகப்பட்ட மாற்றங்கள் நடக்கும். உங்கள் லட்சணம் என்ன என்று உங்களுக்கே தெரியும். அதுதான் மிகப் பெரிய விஷயம். அப்போது பார்ப்பதோ, எழுதுவதோ, பேசுவதோ, பாடுவதோ மிகத் துல்லிய மாக இருக்கும். தன்னை ஆடம்பரமாய் வெளிப்படுத்திக் கொள்ளவே தோன்றாது. இன்னும் ஆழத்தில் ஆழத்தில் மனம் உறைந்து போகவே தவிக்கும். அது மனையாள் சுகம்போல மிக இதமானது. மனைவியின் அருகே மிக நெருக்கமாய் அமர்ந்து அவளை கொஞ்சியபடி உலகத்தைக் கவனிக்கின்ற சுகத்தை ஒத்தது. இதற்குப்பிறகு நின்று ஜபம் செய்யப் பழக வேண்டும். பிறகு உலவி ஜபம் செய்யப் பழக வேண்டும். மறுபடியும் அமர்ந்து ஜபம் செய்ய வேண்டும்.

இது வெறும் அனுஷ்டானம் அல்ல. தவத்தின் ஆரம்பம். தன்னை அறியும் முயற்சியின் முதல் வாசல். உலக விவகாரங்கள் எதிலும் மனம் செல்லாது. மந்திர ஜபம் மனதைப் பற்றிக் கொண்டு நிற்கும். வேறு மந்திரத்திற்குப் போகும். அதிலும் வெற்றி பெறும். உடை கிழிந்திருந்தாலும் தலை கலைந்திருந்தாலும் ஒரு அரசகுமாரனைப் போல வலம் வருவார்கள். முகத்தில் மினுமினுப்பு கூடியிருக்கும். கண்கள் மிகப் பிரகாசமாக இருக்கும். கண்களில் ஒரு கூர்மை இருக்கும். வேலையில் ஒரு பரபரப்பு இருக்கும். எந்தக் காரணமும் இல்லாமல் வேகமாக நடப்பார்கள். ஒரு குறிப்பிட்ட இடம் போய் நிற்பார்கள். சுற்றிமுற்றி பார்ப்பார்கள். சிரிப்பார்கள். மறுபடியும் திரும்பி வருவார்கள். அந்த இடம் அவர்களுக்கு ஏதோ உணர்த்தும்.

சாப்பாடு மற்ற செளகரியங்கள்... எதுவும் எங்கேயும் கேட்க மாட்டார்கள். கிடைக்கும். யாரோ வந்து கவனித்துக் கொள் வார்கள். குறைவான செளகரியங்கள் போதும்.

*ஜபம் செய்தால் இடையூறு வருமா?*

வரும். காது கேட்காது. சட்டென்று காது அடைத்துக்கொண்டு விடும். வைத்தியத்தால் தீராது. தானே விடுதலையாகும்.

*மக்களை அடையாளம் தெரியுமா?*

சில சமயம் அடையாளம் தெரியும். சிலசமயம் மறந்து போகும்.

சிந்தித்து, கணக்கிட்டு முன்பின் விவகாரங்களை அலசி ஆராய்ந்து பேசுவதுதான் மக்களின் வழக்கம். அவர்கள் புத்தி வேறொரு இடத்திலிருந்து செயல்பட்டு வேறுவிதமான வார்த்தைகளை உச்சரிக்க வைக்கும். அவை என்னவென்று ஆரம்பத்தில் புரியாது. சில நாட்களில் அவர் சொன்னது இது என்று புரியும். உங்களுக்குப் புரிந்ததா, புரியவில்லையா என்ற கவலையும் அவருக்கு இருக்காது.

*மந்திர ஜபம் செய்வதால் வேதனை உண்டா?*

உண்டு. உடம்பின் ஏதேனும் ஒரு பகுதி அடிவாங்கும். இடையறாது கால் மடித்து உட்கார்ந்திருப்பதால் தொடையும், முழங்காலும், ஆடுகால் தசையும் உள்ளங்காலும் குடையும். முது கெலும்பு துவளும். இந்த வேதனைகளை ஜபம் செய்பவர் பாராட்டமாட்டார். அப்படி கால் வலிக்கும்போது பிடித்துவிட யாரேனும் வருவார்கள். எல்லோரும் அந்தக் காலை தொட முடியாது. மிகப் பிரியமானவர்கள், உண்மையான நண்பர்கள் அமுத்திவிட்டால் மிகப் பெரிய நிம்மதியை ஜபம் செய்பவர்கள் அடைவார்கள். அவர்கள் மனம் உதவி செய்தவர்களை ஆசீர்வதிக்கும்.

*இப்படி ஜபம் செய்வதால் என்ன பயன்?*

சரியான நேரத்தில் நல்ல மழை பெய்யும். மழைக்குத் தேவையான வெயில் காயும். இயற்கை சீற்றங்கள் வராது தடுக்கப்படும். பூமியில் கொதிக்கின்ற பகுதிக்கு அமைதியை நிலைநாட்ட அவர்களால் முடியும். சீனா ஏன் பதற்றமாக இருக்கிறது. மந்திர ஜபம் செய்பவர்கள் யோசித்தால் சீனாவின் பதற்றம் குறையும். சர்வாதிகாரம் மழுங்கும். பர்மாவின் ராணுவ



ஆட்சி தளரும். இத்தனை சண்டைகளுக்குப் பிறகும் இந்தியா அமைதியாக இருக்க அவர்களே காரணம்.

*ஆனால், ஈழத்தில் ஏன் அமைதியை நிலைநாட்ட முடியவில்லை... ஏன் ரணகளமாயிற்று?*

யாழ்ப்பாணம் ஒரு காலத்தில் சான்றோர்களின் இடமாக இருந்தது. மிக உன்னதமான ஞானிகள் அங்கு பிறந்து மக்களுக்கு உதவிசெய்து வந்திருக்கிறார்கள். பண பலம், படை பலம் மந்திரத்திற்கு எதிரானது. அது உடம்பின் திண்மையை சேர்ந்தது. உடம்புத் திண்மையை மட்டும் நம்பினால் மனதிலிருந்து பயம் நீங்காது. மாறாக அதிகரிக்கும். மனதிலிருந்து பயம் நீக்க ஜபம் முக்கியம். அப்படிப்பட்டவர்களால் மனிதர்களின் பயம் நீக்கவும் முடியும். இன்று யாழ்ப்பாணம் வெறிச்சோடிப் போய்விட்டது. ஆனால், அந்த ரத்தக் களறியிலிருந்து யாரோ சுவர் பற்றி எழுந்து மேலே வருவார்கள். நிறைய மந்திர ஜபம் வகையறாக்களை கடைப்பிடித்து தன்னை உணர்ந்து அந்த இடத்தில் அமைதியைப் பரப்புவார்கள்.

*ராஜபக்ஷே என்ன ஆவார்... வெற்றியில் கொக்கரிக்கிறாரே?*

பட்டயம் எடுத்தவன் பட்டயத்தாலே சாவான்.

மந்திர ஜபம் செய்பவனுக்கு மரணமில்லை. இறந்தபின்னும் உயிர் வாழ்கிறான். கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருகிறான். மந்திர ஜபம் செய்த மனம் உடம்பு உகுத்த பின்னரும் இன்னும் வலிவாகி இன்னும் எந்தவித பாரமுமின்றி, இன்னும் கூர்மையாய் ஜபத்தில் ஈடுபட்டு ஒரு பெரிய ரூபமாய் நின்று வருகிறது. அந்தப் பகுதியை ஆட்சி செய்கிறது.

*மந்திர ஜபம் நீங்கள் செய்ய நான் சொன்ன இந்த விஷயங்கள் போதுமா? இந்தக் கட்டுரை வழிகாட்டுமா?*

இல்லை. இது நீச்சல் பயிற்சியை கரையில் அமர்ந்து சொல்வது போன்றது. தரையில் அமர்ந்து நீச்சல் பற்றிப் பேசுவது அபத்தமல்ல. அதே நேரம் உட்கார்ந்து பேசுவதால் நீச்சல் கற்றுக்கொள்ள முடியாது. இறங்கும்போதுதான் உடம்பு மிதக்காமல் மூழ்குவது தெரியும். எப்போது மிதப்போம் என்று உடம்பு தவிக்கும். மனம் முயற்சி செய்யும். நெஞ்சு ஆழத்தில் நின்று முன்னும், பின்னும் நடக்க கை வீசி நீந்தப் பழக, கரைபிடித்து கால் உதைக்க, காற்றுப்பை பிடித்து மிதந்துபோக ஏதோவொரு கணத்தில்

உடம்புக்கு நீச்சல் தெரிந்துவிடும். எந்தக் கணம் அது? ஞாபகம் இருக்காது. ஏதோவொரு கணத்தில் சைக்கிள் பேலன்ஸ் வந்து விடும். அட..... நீந்துகிறேனே. அட.... சைக்கிள் ஓட்டுகிறேனே என்ற வியப்பு சற்று தாமதமாகத்தான் வரும். நீச்சலுக்கு, சைக்கிளுக்கு உடம்பு பழகியதுபோல உட்கார்ந்து ஜபம் செய்ய மனம் பழக வேண்டும்.

நீச்சல்குளத்தில் தள்ளிவிடப்பட்ட சிறுவர்கள் தத்தளித்து, மற்றவர்கள் தோள்பிடித்து கரையேறி அழுவார்கள். எனக்கு ஒரு எழவும் வேண்டாம் என்று கத்துவார்கள். பயமா இருக்கு என்று அலறுவார்கள். பத்துநாளில் மீன்குஞ்சுபோல நீந்துவார்கள். மற்றவர்களுக்கு சொல்லித் தருவார்கள். இடையறாது இடையறாது மனதை ஜபத்திற்கு பழக வேண்டும்.

என்ன ஜபம் செய்ய வேண்டும்... என்ன வார்த்தை?

'மரா மரா' என்று சொல்லு, போதும்... என்று அலட்சியமாக சொல்லிவிட்டுப் போனார்கள். மரா மரா என்பதுதான் ராம ராம என்று மாறிற்று. அந்த மனிதருக்கு மிகப் பெரிய ஞானம் வந்தது. காவிய வித்தை கைகூடிற்று. என்ன வார்த்தை என்பது முக்கியமில்ல. இதை எவரிடமிருந்தும் கற்றுக்கொள்ளலாம். ஆனால், ஈடுபடுவது நீங்களேதான். உங்களைத் தவிர வேறு யாரும் உங்களை வழிப்படுத்த முடியாது.

என்ன தடைகள் வரும்?

பசிக்கும். அடிக்கடி எழுந்து போகத் தோன்றும். உலக விவகாரங்களில் மனம் ஈடுபடும். இப்போ என்ன ஸ்கோர் என்று கேட்கும். அந்தப் பொம்பள ஏன் கெட்டுப்போனா என்று யோசிக்கும். பல்வேறு காமெடிக்கு மனம் திரும்ப விரும்பும். விவேக் காமெடிகளில் மாட்டிக்கொள்ளும். அப்பா... என்னா கூட்டம். இவர் முதல்வர் ஆயிடுவாரா என்று தொலைக்காட்சிப் பெட்டியை பார்த்து வியக்கும். இந்த உலக விவகாரங்களில் மனம் கலையத் துவங்கும். ஜபத்தில் ஈடுபடாது. இடைவெளி விழும். மனம் ஒருமைப்படாது.

இடைவெளியில்லாது மனம் ஜபத்தை பற்றிக்கொண்டிருந்தால் மனம் உள்ளே திரும்பும். போராட்டமாய், உறுதியாய் நின்று இந்த விஷயங்களிலிருந்து வெளியே வந்து இலைகளை முற்றிலும் விலக்கி சப்தங்கள் எதுவும் இல்லாத இடத்திற்குப் போய் அமர்ந்து



கொள்ள வேண்டும். விரும்பி உண்பதை அறுக்க வேண்டும். விதம்விதமாய் உடுப்பதை விலக்க வேண்டும். நீங்கள் வெறும் தோற்றமல்ல. உள்ளொளி பெருகியிருப்பின் மொட்டை அடித்தாலும், முழுக்க முடி இருந்தாலும் நீங்கள் தேஜஸ்விதான். இது சொல்லித்தர இயலாது. ஓடுகிற குதிரைக்குப் பின்னே சேணத்தைப் பிடித்து அதை அடக்கும் வண்ணம் ஓடுகிறவன் கதிதான். உதறி கொஞ்ச தூரம் தரையோடு இழுத்துக்கொண்டு போகும். எப்படியேனும் உதைத்து எழுந்து குதிரையின் மீது ஏறி பிடரியைப் பிடித்து உங்கள் வசம் கொண்டுவர வேண்டும். முயற்சியில் ஜெயிப்பதும், தோற்பதும் தலையெழுத்து.

## 33

ஆன்மீகத்தில் உண்டான முன்னேற்றம்தான் ஒரு மனிதனின் வாழ்க்கை முன்னேற்றம். வாழ்க்கையில் முன்னேற வேண்டு மென்றால், முதலாவதாக ஒரு மனிதன் தனக்குள் தோன்றும் பொறாமையை முற்றிலுமாக அகற்ற முழு முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில், இந்த ஒரு குணம்தான் உங்களை பல்வேறு மோசமான விஷயங்களுக்கு விரைவாக அழைத்துப் போகிறது. பொறாமையால்தான் கோபம் உண்டாகிறது. பொறாமையால்தான் பொய் கூறுதல் ஏற்படுகிறது. பொறாமையால்தான் பொய், களவு போன்ற எண்ணங்கள் மனிதனுக்குள் ஏற்படுகின்றன.

பொறாமையின் அடிவேர் எது? எதனால் ஒரு மனிதருக்கு பொறாமை ஏற்படுகிறது?

ஒப்பிட்டுப் பார்த்தல்தான் பொறாமையின் ஆரம்பம். தன்னுடைய சுக சௌகர்யங்களோடு மற்றவருடைய சுக சௌகர்யங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது பொறாமை ஏற்படுகிறது. என்னுடைய யோக்கியதைக்கு ஏற்ப எனக்கு கிடைத்திருக்கிறது என்ற எண்ணம் பலருக்கு வருவதில்லை. என்னுடைய யோக்கியதை எது... இதைவிட அதிகம் என்ற நினைப்பு பலருக்கு இருக்கிறது. இது அநேகமாக மிகப் பெரிய பொய்யாகத்தான் இருக்கிறது.

'அவரு கார் வாங்கிட்டாரா... நம்ம கூட சுத்திக்கிட்டிருந்த ஆளுப்பா.'

அந்த கார் வாங்கிய நபருக்கு இருக்கின்ற உழைப்பு. அவர் பட்ட அவஸ்தைகள், இழப்புகள் ஞாபகம் வருவதேயில்லை. கார் மட்டுமே பளபளப்பாய் கண்ணில் தெரிகிறது.

'அந்த நடிகருக்கு வந்த வாழ்வைப் பார்த்தாயா... எங்கள் ஊரில் ஐந்து ரூபாய் காசுக்கு கடன்பட்டு ஓடி ஒளிந்து கொண்டிருந்தான். இன்றைக்கு நூறு பெண்களோடு டான்ஸ் ஆடுகிறான்' என்று பொருமுவதில் எந்த லாபமுமில்லை. கொட்டகையில் உட்கார்ந்து பார்ப்பவருக்குத்தான் அந்த ஆட்டமும், பெண்களும் பரவசமாய் தெரியும். விளக்கு வெளிச்சத்தில் ஜிகினா கழுத்தறுக்க, கிரீடம் தலையழுத்த பாடிக்கொண்டே நடனமாடுவது மிகப் பெரிய வேதனை. அந்தச் சிரிப்பு பொய். ஏமாற்று வேலை. நூறு பெண்களில் எவர் முகமும் மனதில் தங்காது. எவரோடும் மனம் ஈடுபடாது. அருகே எவர் வந்தாலும் வியர்வை நாற்றம்தான் முகத்தை தாக்கும். இதையெல்லாம் பொறுத்துக்கொண்டுதான் அந்த நடிகர்கள் ஆடவும், பாடவும் சிரிக்கவும் செய்கிறார்கள். சினிமா என்ற மாய உலகில் வெற்றி பெற மிகக் கடுமையாக உழைக்கவேண்டியிருக்கிறது. பல சுகங்களை கட்டாயமாக இழக்க வேண்டியிருக்கிறது. சம்பாதித்த காரில் அந்த நடிகர் சுகப்பட்டது மிகவும் குறைவு. ஜெயித்தால் பாராட்டுவார்கள். தோற்றுவிட்டால் மிகக் கேவலமாக பேசுவார்கள். அந்தக் கேவலம் தாங்காமல்தான் அந்த நடிகர் பயந்து பயந்து போராடிக்கொண்டிருக்கிறார்.

விளையாட்டு வீரர்களைப் பற்றியும் இப்படியொரு ஆற்றாமை இருக்கிறது. முப்பது செகண்ட்டுக்கு ஆறு கோடி ரூபா வாங்கியிருக்கிறான். இடுப்புல கைய வச்சுனு நாலு வார்த்தை பேசறான்... அதுக்கு நாலு கோடி ரூபா.

மட்டைப்பந்து முதுகில் பட்ட அடி. அந்த வலி யாருக்குத் தெரியும். பட்டைவரியும் வெயிலில் மட்டை பிடித்து நிற்கின்ற வெப்பம் அப்படிப் புரியும். ஜெயித்தால் கட்டிப் பிடித்துக் கொண்டாடுவார்கள். தோளில் வைத்துக் கூத்தாடுவார்கள். தோற்றுப்போனால், 'பொட்டச்சி பின்னாடி சுத்தறான்யா... இவனால இந்தியாவுக்கே அவமானம்' என்று சொல்வார்கள்.



அப்படிப்பட்ட ஒரு நிலையில் இருக்கும்போது வயிற்றில் ஏற்படும் கலவரம் யாரால் புரிந்துகொள்ள முடியும். இப்படி அணுஅணுவாக அனுபவித்து தாண்டி வெற்றிவாகை சூடியதற்குத்தான் அந்த சம்பளம். அந்தப் புகழ், எல்லா பத்திரிகையிலும் வெளியாகும் அந்த புகைப்படம்.

செல்வந்தர்கள் தூங்குவதில்லை. யாரையும் நம்புவதில்லை. எவர்மீதும் பிரியம் காட்டுவதில்லை. பிரியம் காட்டினால் கையேந்தி தானம் கேட்டுவிடுகிறார்கள். இதமாகப் பேசினால் கடன் கேட்கிறார்கள். ஆதரவாகப் பேசினால் நிறைய எதிர் பார்க்கிறார்கள். எனவே பேச்சைத் தவிர், பிரியம் குறை, தனிமையில் கிட என்றுதான் செல்வந்தர்கள் பல பேர் புழுங்குகிறார்கள்.

எல்லா மக்களும் வரா... என்று வாய் பிளந்து பார்க்கிறார்களே. அது ஒன்றுதான் செல்வந்தர்களின் சந்தோஷம். பொய்யாய் துதி பாடுகிறார்களே... அது பொய் என்று தெரிந்தும் அதை ஏற்பதுதான் ஆனந்தம். இன்னும் கொஞ்சம் பாராட்டு என்று கேட்பதுதான் உற்சாகம். சாதாரண மனிதரின் சந்தோஷம் மிக உண்மையானது.

"என்ன திடீர்னு எனக்குப் புடவை?"

மனைவி, பல் தெரிய சிரிப்பாள்.

"மூன்று புடவை பார்த்தேன். அதுல இது ரொம்ப நல்லாயிருந்தது. இன்னொண்ணும் நல்லாயிருந்தது. ஆனா, ரெண்டு எப்படி வாங்கறதுன்னு விட்டுட்டு வந்துட்டேன்."

"அது என்ன கலர்?"

விட்டுப்போன புடவையை மனைவி கேட்க, "இதான்... இந்த கலர்தான்" என்று இன்னொரு புடவை எடுத்துக் கொடுக்க, "ரெண்டு புடவையா... ரெண்டும் எனக்கா?"

அறுநூறும், அறுநூறும் ஆயிரத்து இருநூறு. அந்த காசுக்கு மனைவி என்ற உலகத்தையே வாங்கலாம். அவர் வழங்கிய அன்பில் உலகத்தையே மறந்து உறங்கலாம்.

புள்ளைக்கு ஏதாவது வாங்கியிருக்கலாமில்லை. "டூர் போறானமே... ஐந்நூறு ரூபாய் கொடுத்துடு. கையில இருநூறு ரூபா கொடுத்தனுப்பு."

"அப்பா ரொம்ப நல்லவருடா. எப்பனா கத்துமே தவிர அதுக்கு ரொம்ப பிரியம் ஜாஸ்தி!"

இந்தச் சான்றிதழ் உண்மையானது.

பத்துக்கு பன்னெண்டு ஹாலில் சாதாரண பிரம்பு நாற்காலியில் சிம்மாசனமிட்டு உட்கார்ந்து கொள்ளலாம். அன்பு என்பது காசு அல்ல. மக்கள் கூட்டமல்ல. உயர்ந்த மேடையல்ல. பளபளப்பான வாகனங்கள் அல்ல. அன்பு என்பது உண்மையாய் வெளிப்படுத்துவது. தென்றல் காற்றுபோல உரசி விட்டுப்போவது. பூவின் மணம் போல மூக்கை நெருடுவது. சந்திரன் உதயம்போல குளுமையானது. அன்பை அனுபவிக்க கொடுத்து வைத்திருக்கிற போது எதற்காக மற்றவரைப் பார்த்து ஒப்பிட்டு பொறாமை படவேண்டும்.

பொறாமை உடனடியாக மனோநிலையை தாக்குகிறது. மனோநிலையை தாக்கியதால் உடம்பு சிதிலப்படுகிறது. உடம்பு சிதிலப்படுவதில் மேலும் மனோநிலை தாழ்வடைகிறது.

பொறாமையைத் தடுக்க என்ன செய்யலாம்?

இதற்கும் மந்திர ஜபம் உதவி செய்கிறது.

சந்திரனுடைய காயத்ரியை சொல்கிறபோது மனம் குளுமை அடையும். புதனுடைய காயத்ரியை சொல்கிறபோது மனம் தெளிவடையும். குரு காயத்ரியை சொல்கிறபோது நல்ல வழி பிறக்கும் என்று விதம்விதமாக காயத்ரி ஜபங்களும், மூல மந்திர ஜபங்களும் இந்து மதம் என்று அழைக்கப்படும் சநாதன தர்மத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

உடம்பினுடைய நாடியின் சப்தத்தை உள்வாங்கி அதை பீஜாட்சரமாக மந்திர வரியில் சொருகி வைக்கப்பட்டிருக்கிறது.

சௌஹ்ரூ என்கிற சப்தம் இருதயத்தோடு சம்பந்தமானது. ஹ்ரூம் என்ற சப்தம் தொண்டைக் குழிக்கு சம்பந்தமானது. ரும் என்ற சப்தம் மூளைக்கு சம்பந்தமானது. ஐம் க்லீம் சௌஹ்ரூ. சௌஹ்ரூ க்லீம் ஐம் ஐம் க்லீம் சௌஹ்ரூ என்று ஒரு மூலமந்திரம் இருக்கிறது. இதற்கு பாலா திரிபுரசுந்தரி என்று பெயர். இதைச் சொல்லும்போது மனம் நிச்சயம் அமைதியை அடையும். படபடப்பு குறையும். ரத்த அழுத்தம் லகுவாகும். நாடி சுத்தமாகும். இது ஆரம்பகால மந்திரம். இதைச் சொல்லிச் சொல்லி மனம் பக்குவப்பட்ட பிறகு பல்வேறு



நாடிகளை தேர்ந்தெடுத்துப் போகலாம். பல்வேறு அவஸ்தைகளை வேரோடு களையலாம்.

மந்திர ஜபத்தால் கூரையைப் பிய்த்துக்கொண்டு காசு கொட்டுமா?

கொட்டும். கொட்ட வேண்டும். கொட்டினால்தான் அது மந்திர ஜபம். கொட்டிய சம்பவங்கள் நிகழ்ந்ததுண்டு.

சங்கரன் என்கின்ற பதின்மூன்று வயதுப் பிள்ளையால் செய்ய முடிந்ததை நீங்கள் செய்ய முடியாதா?

நிச்சயம் முடியும். நீங்கள் மந்திரம் சொன்னால் உங்கள் வீட்டுக் கூரையைப் பிய்த்துக்கொண்டு தங்கக் காசுகள் கொட்டும். ஆனால், அந்த சங்கரன் என்கிற சந்நியாசக் குழந்தை ஏன் தனக்கென்று ஒரு மூட்டை காசுகளை மந்திரம் சொல்லி வாங்கிக் கொள்ளவில்லை.

மந்திர பலம் போதும். மற்ற எவையும் தேவையில்லை என்று அந்தக் குழந்தை தெளிவாக இருந்தது. மந்திர ஜபம் கிடைத்து விட்டால் வேறு எதுவும் தேவையிருக்காது. தேவையில்லாதபோது அடுத்தவை பற்றி ஒப்பீடு பண்ணத் தோன்றாது. ஒப்பீடு இல்லாத போது பொறாமை வராது. பொறாமை இல்லாதபோது, பொய், கோள் சொல்லல், கோபப்படுதல் எதுவுமிருக்காது. மனம் அமைதியாக இருக்கும்.

"எனக்கு இன்னிக்கு லாட்டரியில ஒரு கோடி ரூபா விழுந்தது."

"அப்படியா! வாழ்க... வாழ்க... நல்லா செலவு பண்ணு. நிறைய தானம் பண்ணு. எல்லாருக்கும் கொடு" என்று ஆசீர்வதிக்கத் தோன்றும்.

என் கையிலே வில் இருக்கிறது. அம்புறாத் துணி முழுவதும் அஸ்திரங்கள் இருக்கின்றன. வழியிலே என்ன பயம். மந்திர ஜபங்கள் நிறைய கற்றவருக்கு, அதை எப்படி வளைத்துச் சொல்ல வேண்டும் என்று தெரிந்தவருக்கு வாழ்க்கை என்னும் தனிப்பாதையில் எந்த பயமும் இல்லை. அவர் துள்ளளோடு சந்தோஷமாக பயணப்படுவார். மற்றவருக்கு உதவி செய்வார். உதவி செய்வதிலேயே நிறைவு காண்பார். உதவி செய்தேன் என்று கூட சொல்லிக்கொள்ளாமல் அடுத்தவருக்கு உதவி செய்ய நகர்ந்து

போவார். அவரைப் பார்த்து யாரேனும் பொறாமைப்பட முடியுமோ. முடியாது. மாறாய் வியப்பார்கள்.

"எப்பவுமே சந்தோஷமா இருக்கானே... எதனால. இப்போ எப்படியிருக்க தம்பி. அப்படின்னு கேட்டாலும் ரொம்ப நல்லாயிருக்கேன்னு வாய் நிறைய சொல்றானே. எதனால!" என்று வியப்பார்கள்.

அது ரகசியம். மந்திர ரகசியம்.

## 34

மந்திர ஜபம் நன்கு தெரிந்தவர்கள் மிக எளிமையாக இருப்பார். இடுப்பு வேட்டியும் மேல்துண்டுமாக அலைவார்கள். அவர்களைப் பற்றி நன்கு தெரிந்த நண்பர்களுக்கு நடுவே மட்டும் புழங்குவார்கள். எவர் வீட்டுக்குப் போனாலும் அவருக்கு நல்ல உணவு கிடைக்கும். ஓய்வு எடுத்துக்கொள்ள இடம் கிடைக்கும். அவர்களுக்கென்று விருப்பு வெறுப்புகள் எதுவும் இருக்காது. அவர்கள் நண்பர்கள் வட்டத்தில் ஒரு அரசனைப்போல மதிக்கப்படுவார்கள். வீடு முழுவதும் அவரை விழுந்து வணங்கும். "அடடா.... ஒரு வாரமாயிற்று நீங்கள் வந்து. இன்று வந்தீர்களே. மிகவும் சந்தோஷம்" என்று குடும்பத் தலைவராலும், தலைவியாலும் பாராட்டப்படுவார்கள்.

"என் மகள் அமெரிக்காவுல இருக்கா. அவளுக்கு ஒரேயொரு பையன். கொஞ்சம் சரியா படிக்க மாட்டேங்கறான். ஒரே விளையாட்டா இருக்கானாம். நல்லா ஆடிட்டு தூங்கறானாம். படிக்கணும்கற எண்ணமில்லையாம். ரொம்ப வருத்தப்படறா."

மந்திர ஜபம் மூச்சோடு சம்பந்தப்பட்டது. மூச்சு எண்ணத்தோடு சம்பந்தப்பட்டது. எண்ணங்கள் சிதறாமல் இருப்பின் மூச்சு சீராக இருக்கும். மூச்சு சீராக இருந்தால் எண்ணங்கள் சிதறாமல் இருக்கும். எண்ணங்கள் சிதறாமல் இருந்தால் மந்திரம் சொல்வது இன்னும் கூர்மையாகும்.

எண்ணங்கள் சிதறாமல் இருப்பதற்கு என்ன உபாயங்கள் உண்டு...



குறைவாக உண்பது என்பது முதல் வழி. பகவான் ரமணரை ஒரு அன்பர் கேட்டார். "சாதுக்கள் ஒரு கை உணவு மட்டுமே உண்டுவிட்டு வாழ்கிறார்களே... இது எப்படி? எனக்கு அதிகம் பசிக்கிறதே. ஒரு கவளம் போதவில்லையே?" என்று கேட்டார்.

"பகலில் மூன்று வேளை சாப்பிடுகிற நீங்கள் இரவில் எத்தனை வேளை சாப்பிடுகிறீர்கள்?" என்று கேட்க, "இல்லையே, இரவில் தூங்கப் போய் விடுகிறோம். சாப்பிடுவதில்லை" என்று அவர் பதில் சொன்னார்.

"அதுதான் இங்கும் நடக்கிறது. இரவில் அமைதியாக இருப்பதால் உணவு தேவைப்படுவதில்லை. பகலிலும் இம்மாதிரி அமைதியாக இருப்பின் ஏதேனும் ஓரிடத்தில் சம்மணமிட்டு சாய்ந்த நிலையில் உட்கார்ந்திருப்பின், மனம் அலையாமல் இருப்பின், கோபமோ ஆத்திரமோ ஏற்படாதிருப்பின், சிரிப்போ கேலியோ செய்யாதிருப்பின் உடம்புச் சக்தி வீணாவதில்லை. அப்போது ஒரு கவளம் உணவு போதுமானது. அப்போது மனமோ, உடம்போ அலைபடுவதில்லை. எனவே, அவர்கள் ஒரு கவளத்தோடு திருப்தியடைந்து விடுகிறார்கள். அதிகம் உண்பர்கள் அதிகம் பேசி, அதிகம் சிரித்து, அதிகம் சக்தியை செலவழிக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு உணவும் அதிகம் தேவைப்படுகிறது" என்று சொன்னார்.

ஒரு சாது பிள்ளையார் கோயிலுக்கு அருகே மந்திர ஜபம் செய்து கொண்டிருந்தார். அரசனிடம் கொள்ளையடித்துக் கொண்டிருந்த கள்வர்கள் அந்தப் பக்கமாக ஓடிவந்து கொண்டிருந்தார்கள். அவர்களைத் துரத்திக்கொண்டு காவலர்கள் வந்து கொண்டிருந்தார்கள். காவலர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுதலாக ஒரு மூட்டையிலிருந்து நகையை எடுத்து பிள்ளையார் மீது வீசினார்கள். வீசிய மாலை ஜபம் செய்து கொண்டிருந்த சாதுவின் கழுத்தில் விழுந்தது. கள்வர்கள் தப்பி ஓடிவிட்டார்கள். காவலர்கள் அந்த சாதுவை பிடித்துக்கொண்டு போனார்கள். இவனும் கள்வர்களில் ஒருவன் என்று அரசரிடம் போய் நிறுத்தினார்கள். அரசன் அவரை கழுமரத்தில் ஏற்றும்படி உத்தரவிட்டான். கழுமரத்திற்கு அருகே வந்த சாது தன்னுடைய நிலையை நினைத்து மனம் உருகி கடவுளிடம் வேண்ட, அந்தக் கழுமரம் பற்றி எரிந்தது. அரசன் தன் தவறை உணர்ந்து காலில் விழுந்து மன்னிப்பு கேட்டான்.

சோதனை வந்த நேரத்திலும் மந்திர ஜபம் செய்வார்கள்.

"மந்திர ஜபம் செய்பவர்கள் இப்படி சாதுக்களாக, சந்நியாசிகளாகத்தான் இருக்க வேண்டுமா... இல்லறத்தாராக இருக்கக் கூடாதா?"

"தாராளமாக இருக்கலாம்."

"இல்லறத்தாராக இருப்பின் ஆசைகள் ஏற்படாதா?"

"ஏற்படத்தான் செய்யும்."

"அப்போது மந்திரஜபம் பயன்படாதா?"

"நிச்சயம் பயன்படும். ஏக்கங்கள் இருக்கும்போது, எனக்கு இது வேண்டும் என்று எண்ணுகிறபோது, எனக்கு ஒரு வீடு போதாது... இரண்டு வீடுகள் வேண்டும் என்று கணக்கு போடுகிறபோது மனம் மந்திரஜபத்தை வேகமாகவோ அல்லது பதற்றத்தில் தவறாகவோ சொல்லிவிட வாய்ப்பிருக்கிறது. இன்னும் வீடு கிடைக்க வில்லையே என்று ஏங்கி மந்திர ஜபத்தை புறக்கணிக்கவும் புத்தி போகும். இந்த மந்திரத்துக்கு பதில் இந்த மந்திர ஜபம் செய்து பார்க்கலாமா என்று எகிறி குதிக்கும். அந்த மாதிரியான நிலைக்குப் போகாது அவர்கள் நலமே வாழ இன்னொரு பெரிய வீடு வேண்டும். வரம் அருளுவாய் என்று அமைதியோடு, நிச்சயம் கிடைக்குமென்ற நம்பிக்கையோடு மந்திர ஜபம் செய்யலாம்."

"உலக நலன்களுக்குகாகத்தான் மந்திர ஜபமா?"

"இல்லை. துருவன் என்கிற சிறுவன் சிற்றன்னையால் பிடித்துத் தள்ளப்பட்டு, தந்தையின் மீது நீ உட்காரக்கூடாது உதாசீனப் படுத்தப்பட்டு அழுதபடி தாயிடம் வந்தான். 'ஏனம்மா, என் தந்தையின் மடியில் ஏன் உட்காரக் கூடாது? என் தந்தையிடம் நான் உட்கார வேண்டுமம்மா. இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டபோது, கடவுளை நோக்கி தாய் தவம் செய்ய சொன்னாள். 'தவம் செய்வது என்றால் என்ன?' துருவன் கேட்டான்.

காட்டிற்குப் போய் கண்மூடி உட்கார வேண்டுமென்று தாய் சொன்னாள். அதற்கு மேல் சொல்ல அவளுக்குத் தெரியவில்லை. அந்தக் குழந்தை காட்டிற்குப் போய் கண்மூடி உட்கார்ந்து கொண்டது. என்ன செய்வது என்று தெரியாமல் வெறுமே அமர்ந்திருந்தது. அந்தக் குழந்தையினுடைய மனோநிலையை நன்கு உணர்ந்த நாரதர், கீழிறங்கி அந்தக் குழந்தைக்கு நாராயண மந்திரம் உபதேசித்தார்.



எண்ணெய் கிணறில் குபீரென்று தீப்பிற்றிக்கொண்டது போல அந்த மந்திரத்தை அந்தக் குழந்தை பற்றிக்கொண்டது. இடைவிடாது... இடைவிடாது நாராயண மந்திர ஜபம் செய்தது. ஸ்ரீமந் நாராயணர் கண் முன்னே தோன்றினார். குழந்தை எந்தத் தடங்கலுமின்றி தந்தையை அடைந்து அரசராகவும் மாறியது. அரசனானது மட்டுமல்ல, மந்திர ஜபத்தின் மகிமையைச் சொல்ல, அது துருவ நட்சத்திரமாகவும் வடகோடியில் உயர்ந்திருக்கிறது. மற்றவருக்கு வழிகாட்டியாகவும் இருக்கிறது."

மந்திர ஜபம் செய்தால் எப்படி நல்லது நடக்கும். எப்படி செல்வம் கிடைக்கும்... உண்மையில் அந்த அடிப்படை தாத்பரியம் என்ன என்ற கேள்வி கொஞ்சம் நாத்திகமான எண்ணமுடைய வருக்கு வரலாம்.

இது பெரிய வித்தையல்ல. சாதாரண விஞ்ஞானம். மனம் மிகப் பெரிய சக்தி வாய்ந்தது. மனித மனத்திற்கு எல்லா விஷயங்களையும் இழுத்துவரும் ஆற்றல் உண்டு. அந்த ஆற்றலை மனிதர்கள் உபயோகப்படுத்திக்கொள்வதில்லை. தன் மனதை முழு ஆளுமை செய்து அதை உபயோகப்படுத்துவதில்லை. மாறாக சிதறிவிடுகிறார்கள். சிதறிவிடுவதாலேயே சாமான்யமாக இருக்கிறார்கள். எண்ணத்தை மனதில் ஸ்திரப்படுத்திக் கொண்டு அந்த எண்ணம் நிறைவேற ஒரு குறிப்பிட்ட மந்திர ஒலியை சொல்கிறபோது மனம் அந்த எண்ணத்தை இறுகப் பற்றிக் கொள்கிறது. நிச்சயம் நடக்கும், இது எனக்கு வேண்டும் என்ற வேகத்தைக் கொள்கிறது. அப்போது அந்த எண்ணத்தை நிறை வேற்றக்கூடிய செயல்களையே அந்த நாளில் செய்கிறது. உதாரணத் திற்கு... நல்ல உணவு வேண்டும் என்று ஜபம் செய்கிறபோது, ஜபம் செய்து முடித்த பிறகு அந்த உணவு எங்கு கிடைக்கும் என்ற தெளிவு ஏற்பட்டு விடுகிறது. அதை நோக்கி மனம் போகிறது. அதை அடையக்கூடிய வாய்ப்புகளை ஆராய்கிறது. அடைய முற்படுகிறது.

ஒரு வீடு என்பது அப்படி உணவு போல உடனடியாகக் கிடைக்குமா?

உடனடியாகக் கிடைக்கும் என்று எவரும் சொல்லவில்லை. வீடு வாங்கக்கூடிய யோக்கியதையை மடமடவென்று மனம் ஏற்படுத்திக்கொள்ளும். இடம் பார்க்கும். கடன் கேட்கும். கட்டடம் எழுப்புவது என்ன என்று விசாரிக்கும். ஒரு வருடம் இரண்டு வருடத்தில் அந்த வேலையைச் செவ்வனே செய்துவிட முடியும். அதாவது, மனதை அந்த வேலையில் ஆழப்படுத்துகின்ற வித்தையை இந்த மந்திர ஜபம் செய்கிறது. அதைத் தாண்டி கூரையைப் பிளந்து தங்கக் காசுகள் கொட்டியது போல, உங்கள் முயற்சியைத் தாண்டி வேறு சில உதவிகளும் எதிர்பாராத வண்ணம் கிடைக்கும். கிடைக்கின்ற வழியை மந்திர ஜபம் செய்யும். எப்படிக் கிடைத்தது, ஏன் அவர் வந்து இவ்வளவு பெரிய தொகையை கடனாக கொடுத்து உதவினார் என்று உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். இது உண்மையா என்று கேள்வி வந்தால் நீங்கள் மந்திர ஜபத்தை உக்கிரமாக செய்து பார்க்கத்தான் வேண்டும்.

மந்திர ஜபம் உங்கள் மனதை ஒரு நல்ல இடத்தில் பக்குவப்படுத்தி வைக்கிறது. இன்னொருவர் உடல்நலம் தேற வேண்டுமென்று மந்திர ஜபம் செய்யலாம். ஆனால், அந்த நபரின் உடல்நலம் தேறுவதற்காக மனம் பிரார்த்தனை செய்ய ஆரம்பிக்கும். அவர் மீது மனம் லயிக்கத் துவங்கும். மெல்ல மெல்ல மனம் அவருடைய வலியை ஆற்றி அவரை நோயிலிருந்து மீட்கும். மனித மனத்திற்கு அந்த ஆற்றல் உண்டு. அதனால்தான் நல்ல நேரத்தில் வாழ்க, வளர்க என்று வாயாரச் சொல்வதும் துக்க நேரத்திலும் மௌனமாக இருப்பதும், எல்லா சமயத்தினரும் கடைப்பிடிக்கிறார்கள். நல்ல மனிதர்கள் நல்ல நேரத்தில் வாழ்க என்று சொன்னால் வாழ்ந்துதான் ஆக வேண்டும். வளர்ந்துதான் ஆக வேண்டும்.

இதையெல்லாம்விட மந்திரஜபத்தினுடைய மகத்தான சக்தி உங்களை அமைதிப்படுத்துவது. எந்தப் பிரச்னை வந்தாலும் சரி... சமாளிப்போம் என்று தொடைதட்டி புன்சிரிப்போடு அதை எதிர்கொள்வது. இழப்புகளைப் பற்றி கவலைப்படாமல் இருப்பது. இழந்தால்தானே இன்னும் அதிகம் பெறமுடியும் என்று உத்வேகம் கொள்கின்ற மனோநிலையை மந்திர ஜபம் நிச்சம் தரும். நன்றாக கவனித்துப் பார்த்தீர்களென்றால் மற்ற சடங்குகள் முன்பின்



வித்தியாசப்பட்டாலும் மந்திர ஜபம் என்பது எல்லா சமயங்களிலும் மிக முக்கியமாக கருதப்படுகிறது. மந்திரம் மாறும். அவ்வளவே. மந்திர ஜபம் மாறாது.

புத்தம் சரணம் கச்சாமி

சங்கம் சரணம் கச்சாமி

தம்மம் சரணம் கச்சாமி

என்று பௌத்தர்கள் சொல்வது அருமையான மந்திரம். உள்ளே அமைதி ததும்பும். அமைதியான மனம் ஆற்றலுடைய மனம் என்பதை பௌத்தர்கள் அறிந்திருந்தார்கள். பல கடவுள்களின் பெயர்கள் மந்திர ஜபத்தின் வேகத்தைத்தான் உச்சரிப்பாக கொண்டிருக்கின்றன. மந்திர ஜபத்தைப் பற்றிப் பேசுவதோ, படிப்பதோ பெரிய விஷயமில்லை. நீச்சலை கரையில் அமர்ந்து கற்றுக்கொள்ள முடியாது. நீரில் இறங்க வேண்டும்.

மந்திர ஜபம் என்ன என்று புரிந்துகொள்ள மந்திர ஜபத்தை வைராக்கியத்தோடு தொடர்ந்து... தொடர்ந்து... செய்ய வேண்டும். மந்திர ஜபத்தை பத்திரிகையில் கற்றுக்கொடுக்க முடியாது. அது குரு மூலமாக தெரிந்து கொள்ள வேண்டும்.

யார் குரு... எங்கே கற்றுக்கொடுப்பார்கள்?

எதையும் வாழைப்பழமாக உரித்துத் தர முடியாது. தாகமுள்ளோர் தேடக் கடவர். காதுகளுள்ளோர் கேட்கக் கடவர்.

## 35

**வி**ரதத்தில் எது முக்கியம்... எந்தக் கடவுளுக்காக விரதமிருக்கிறோம் என்பதா?

இல்லை.

எதன் பொருட்டு விரதமிருக்கிறோம் என்பதா...

இல்லை.

இங்கே விரதம்தான் முக்கியம். என்னவிதமாக விரதம் இருக்கிறோம் என்பதுதான் முக்கியம்.

அதிகாலை குளிர் என்பது ஒரு அற்புதமான விஷயம். குளிரோ, மழையோ, வெயிலோ இந்தியாவின் தென்பகுதியில் அதிகாலை குளியல் மிகச் சுகமான விஷயம். ஐப்பசி, கார்த்திகையில் மழை பெய்து மாழ்கழியில் ஆற்று ஜலம் தெளிவாக இருக்கும். ஐந்து மணிக்கு எழுந்து பல் துலக்கி காலைக்கடன்களை முடித்து ஆற்றங்கரைக்குப் போய் இடுப்பளவு ஜலத்தில் நின்று குளிர் தாங்கி மெல்ல நீரை மேலே இறைத்துக்கொண்டு முகம் துடைத்து தலையில் தெளித்து ஆற்று ஜலத்தை வணங்கி சடக்கென்று முங்கி எழ, உடம்பெல்லாம் குளிர் பரவி உடம்பின் சூடு மொத்தமும் கால் வழியே வழிந்து தண்ணீரோடு கலந்து போவதை உணரலாம். முங்கி முங்கி பத்து நிமிடம் குளித்துவிட்டுக் கரையேற... உடம்பு குளுமையாகி மனம், புத்தி இரண்டும் மிக அமைதியாக இருக்கும். தலையைத் துவட்டிக் கொண்டு வேட்டியைப் பிழிந்து மேலே போட்டுக்கொண்டு உலர்ந்த வேட்டியைக் கட்டிக்கொண்டு திருச்சின்னங்களோடு மெல்ல கோயில் நோக்கி நடந்தால் மனம் மிருதுவாக இருக்கும்.

மனம் எந்த ஆசைக்கும் ஆட்படாது, எந்த எதிர்பார்ப்பும் இல்லாது வழிபாடு என்பது வெறும் வழிபாடாக கடவுளை வாழ்த்துவதாக மட்டுமே இருக்கும். மற்றபடி உனக்குத் தெரியும், எனக்கு என்ன தரவேண்டுமென்று. வேண்டிய யாவும் தருவோய் நீ... என்று மனம் அமைதியாக கைகூப்பும்.

ஒரு நாளின் நல்ல துவக்கம் இது. பிறகு பசியை அடங்க வைக்கும் அளவிற்கு உணவு. அதற்குப் பிறகு அன்றைய வேலை. காலையில் ஏற்பட்ட அமைதி மதியம் இருக்கும்? பிறகு வேலையின் பளுவோ பசியின் கிளர்வோ, அடுத்த மனிதர்களின் ஆவேசமோ நம்மைத் தாக்கும். சாதாரண மனிதர்கள்தானே... நமக்கும் கோபம் வரும். மாலையில் போய் இப்படித்தான் திருந்திக் கொண்டிருக்கிறேன். எப்பொழுது விடுதலை என்று மறுபடியும் ஆற்று நீராட, முங்கி முங்கி குளிக்க, அழுக்கெல்லாம் போனதுபோல ஒரு அமைதி. அசூசையெல்லாம் போனதுபோல ஒரு நிம்மதி. அவன் அப்படித்தான் பேசுவான். நாமும் அப்படிப் பேசமுடியுமா... அவனுக்கு கடவுள் தண்டனை தருவார். நாம் மௌனமாக இருப்பது நல்லது என்ற தீர்மானத்தோடு இன்னொரு முழுக்கு. ஆற்றங்கரை ஓரத்திலோ, மண்டபத்திலோ அல்லது



வீட்டு வாசலிலோ மேல் மாடியிலோ அமைதியாக அமர்ந்து ஜபம் செய்யலாம். பாட்டுகள் பாடலாம். பிராணாயாமம் செய்யலாம்.

ஒன்பது மணிக்கு உணவு முடித்துவிட்டு சிறிது நேரம் அமைதியாக உள்ளுக்குள் பார்த்தபடி இருந்துவிட்டு தூங்கப் போகலாம். மனம் என்ன செய்கிறது என்று பார்த்தபடி அமர்ந்திருப்பது ஒரு கெட்டிக்காரத்தனம். நுட்பமான தந்திரம். அங்கு இன்னொரு மனிதர் இல்லை. எவருக்கும் நம்மை பொய்யாகக் காட்டி நடிக்க வேண்டிய அவசியமில்லை.

என்ன லட்சணம், என்ன தெரியும் எனக்கு, எங்கே உளறினேன். எப்போது பொய் சொன்னேன். ஏன் கோபப்பட்டேன் என்றெல்லாம் நன்கு உற்றுப்பார்க்க ஆரம்பிக்கலாம். வாதப்பிரதிவாதங்கள்கூட அல்ல, வெறுமே நடந்தவற்றை திரும்பப் பார்க்கும்போது தெள்ளத் தெளிவாக நம்முடைய தவறுகள் மேலே வந்து மிதந்து நிற்கும். இந்த சூட்சுமம் கற்றவருக்கு தோல்வியே இல்லை.

காலை, மாலை குளியலும், ஜபங்களும், குறைவான உணவும், கடவுள் வழிபாடும் இந்தத் தன்னை யார் என்று அலசுகின்ற, தன்னுடைய செய்கைகளைப் பற்றி உன்னிப்பாய் பார்க்கின்ற மனோநிலையைக் கொடுப்பதற்காகத்தான் இருக்கின்றன. சரணம் சொல்கிறேன் என்று கத்திக் கத்தி கலைவதற்கு அல்ல.

'எங்கே பூஜை நடந்தாலும் சரணம் சொல்றதுக்கு நம்மளதான் கூப்பிடறாங்க. ஏகப்பட்ட டிமாண்டு. எல்லாத்துக்கும் போக முடியுமா சொல்லு' என்கிற பீற்றல் இல்லை.

கோயிலுக்கு குழுவாகப் போகலாம். யாத்திரைக்கு கூட்டமாகப் போகலாம். ஆனால், விரதம் குழுவாகத்தான் இருக்க வேண்டுமா? ஒவ்வொரு நாளும் விரதமிருப்பவர்கள் ஒன்றுகூடத்தான் வேண்டுமா?

அவசியமில்லை என்பது என் அபிப்பிராயம். கூட்டம் சேருகிறபோது புத்தி ஆட்டுமந்தையாகி விடுகிறது. இழுத்த பக்கம் போகிறது. என்ன செய்கிறோம் என்ற தெளிவில்லாது விஷயங்கள் நடக்கின்றன. இந்தக் குளியலும், வழிபாடும், குறைவான உணவும் கோபமாகப் பேசுதலை தடுத்து விடுகின்றன. அதைத் தவிர அப்படிக் கோபமாகப் பேசுகிற பழக்கம் இருந்தாலும் விரதமிருப்பதால் அப்படிப் பேசக்கூடாது என்று கோபம்

வரும்போதே உள்ளுக்குள்ளே தடுப்பு ஏற்பட்டு அமைதி வந்துவிடுகிறது. கோபம் தடுத்து அமைதி வருவதற்கு பதில் கோபமே எழாத ஒரு நிலைதான் உத்தமம். இது குறைவான உணவிலும், குறைவான பேச்சிலும் கிடைக்கும்.

பேச்சு என்பது என்ன... அடுத்த மனிதரோடு பேசுவது மட்டும்தானா... இல்லை. நம்முடைய மனம் இடையறாது பேசிக்கொண்டிருக்கும். எப்பொழுதோ நடந்த சண்டையை மனதுக்குள் திரும்பப் போட்டு எகிறி பதில் சொல்லிக் கொண்டிருக்கும். அடுத்த முறை வரட்டும்... எப்படிப் பேசுகிறேன் பார் என்று ஒத்திகை பார்த்துக்கொண்டிருக்கும். அல்லது அடுத்தவரை குறை கூறி, ‘எவ்ளோ பெரிய முட்டாளுங்களோட நான் வாழ வேண்டியிருக்கு’ என்று அலுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். இவையெல்லாம் எப்போது வேண்டுமானாலும் கால் இடறச் செய்து கோபத்தை வெளியே கொட்டி விடும். மனம் உள்ளே பேசாதிருக்க உள்ளுக்குள்ளே மந்திர ஜபமோ, சரணமோ செய்து கொண்டிருக்கலாம்.

வீசி அலைகின்ற யானையின் துதிக்கையில் சங்கிலியைக் கொடுப்பது போல, சங்கிலியைக் கொடுத்தால் யானையின் துதிக்கை அசையாது ஓரிடத்தில் இருப்பது போல மனம் அசையாமல் இருக்க சரணம் சொல்லுதலும், மந்திர ஜபமும், கடவுள் நாமமும் நல்ல வழி காட்டும். சும்மாயிருக்கும்போதே மனம் ஏகப்பட்டது பேசுகிறதே, காலை செய்தித்தாள் படிக்கிறபோதோ அல்லது செய்தியைக் கேட்கிறபோதோ அதிகமாக பேச்சு உள்ளுக்குள் கிளறாதா?

கிளறத்தான் செய்யும். இதிலிருந்து விலகி நிற்க முடிந்தால் அது உத்தமமான விஷயம். இதைவிட மோசமான மனதை கிளறடிக்கக் கூடிய விஷயம் சினிமா பார்ப்பது.

சினிமா என்பது காதலும், காமமும், வன்முறையும் கொண்டது. பெண்களைக் குறைந்த துணிகளோடும், கவர்ச்சியோடும் இடை அசைப்போடும் குலுக்கலோடும் காட்டுவது. ஆட்களை வெட்டி வீழ்த்துவது, அடித்து நொறுக்குவது, எரியும் நெருப்பு சிதறும் கட்டடங்கள், வெடிக்கும் குண்டு என்று விதம் விதமாக வன்முறையை அடிப்படையாகக் கொண்டது. இவை அத்தனையும்



மனதிற்குள் குடிபுகுந்து பல் கடிக்க வைக்கும். முகம் முறுக்க வைக்கும். இதற்கு விரதம் என்றா பெயர். மனம் கொந்தளித்து கிடப்பதை விரதம் என்றா அழைப்பது?

மனதை நிலைகுலையச் செய்யும் எந்த விஷயங்களிலும் ஈடுபடக் கூடாது என்பதுதான் விரதத்தின் முக்கியமான விஷயம். அதனால்தான் துக்க வீட்டிற்குப் போவதோ, பிணத்திற்கு எதிரே நடப்பதோ கூடாது என்று சொல்கிறார்கள். ஏனெனில், மரணம் மனதை நிலைகுலையச் செய்ய வைக்கின்ற மிகப் பெரிய விஷயம். மது மனதை நிலைகுலையச் செய்ய வைக்கும் விஷயம். அதனால் அதையும் முற்றிலும் தவிர்த்துவிட வேண்டும். அந்த மது அருந்துகின்ற இடத்திற்கு அருகேகூட போகாதிருக்க வேண்டும். மாமிசம் உடம்பில் ரத்த ஓட்டத்தை அதிகரித்து துள்ளலை தூக்குகின்ற விஷயம். எனவே, மாமிசம் உண்ணாமலும் இருக்க வேண்டும். புணர்தல் என்பது சக்தி விரயம். மனதின் பெரிய ஆட்டம். எனவே, அதிலிருந்தும் விலகியிருக்க வேண்டும்.

இவையெல்லாமே உங்களை உள்ளுக்குள் அமைதியாக பேச்சு மூச்சற்று ஆழ்ந்திருப்பதற்காக செய்யும் விஷயங்கள். பேச்சு மூச்சற்று இருப்பது என்பதுதான் இங்கே மிக முக்கியம். பேச்சுக்கு ஏற்ப மூச்சு அலையும். மூச்சுக்கேற்ப பேச்சு அலையும். மூச்சும் பேச்சும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை. பேசப் பேச மூச்சின் கதி அதிகமாகும். மூச்சு தவறாக இருப்பின், விரைவாக இருப்பின் பேச்சு குறைவாகத்தான் இருக்கும். உளறலாகத்தான் இருக்கும். அதிகப்பிரசங்கித்தனமாகத்தான் இருக்கும். ஆவேசமாகத்தான் மாறும்.

அதீதமான பேச்சு, அதீதமான மன அலைகளை உண்டாக்கும். மன அலைகள் அதிகரித்தால் மூச்சின் தாளம் கெடும். மூச்சின் தாளம் கெட்டால் நாடிகளின் துடிப்புகள் மாறும். நாடிகளின் துடிப்புகள் மாறினால் இருதயமும், இருதயத்தால் நுரையீரலும் வெவ்வேறு விதமாக திசை திரும்பும். உணவு செரிமானம் வேகமாகும். பசியெடுக்கும். பசியெடுத்தால் நன்றாக உண்பீர்கள். நன்றாக உண்டால் இன்னும் அதிகமாகப் பேசுவீர்கள். அதிகமாக ஆடுவீர்கள்.

விரதம் என்பது கேலிக்கூத்தாக போகும்.

# 36

**ப**தினான்கு வருடம் ஸ்ரீராமர் காட்டிற்குப் போய் திரும்பவும் அயோத்தியிக்கு வருகையில் பரதாழ்வார் விரதமிருந்ததாக சொல்லப்படுகிறது. ஒருவேளை உணவு உண்டு தர்ப்பைப் புல்லில் படுத்து ஆடை ஆலங்காரங்கள் எதுவும் பூணாது எளிய உடை உடுத்தி ராமருடைய பாதுகைகளுக்கு பூஜை செய்து அன்றாடம் செய்ய வேண்டிய அரசருடைய கடமைகளைப்பற்றி நிதானமாக சிந்தித்து நிறைவேற்றி ஸ்ரீ ராமரே அரசர், நான் ஊழியன் என்ற நினைப்போடு வாழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது.

நல்ல உணவு உண்ணாமல் மெலிந்த உடல். பதினான்கு வருட தாடி. சோபையிழந்த உடம்பு மிருதுவான பேச்சு. தளர்வான நடை என்று இருப்பினும் பரதாழ்வார் ஒளிமிகுந்த கண்களோடு உறுதிமிகுந்த முகத்தோடு கனிந்த புத்தியோடு இருந்திருப்பார் என்று எனக்குத் தோன்றுகிறது. எந்த ஓவியராவது பதினான்கு வருடம் தவமிருந்த பரதரைப்பற்றி ஓவியம் வரைந்திருப்பார்களா. ஏன் வரையவில்லை என்ற கேள்வி வருகிறது.

பரத சத்ருக்களரின் பட்டமகிஷிகளும், மந்திரிப் பிரதானிகளும், குடிமக்களும் கூட விரதமிருந்திருப்பார்கள் அல்லவா. அவர்களும் ஸ்ரீ ராமரை நேசித்தவர்களல்லவா. பதினான்கு வருடங்கள் அவர்களும் கடுந்தவம் மேற்கொண்டிருந்திருப்பார்களல்லவா. ராமர் பட்டாபிஷேகம் வரைவது போல பரதர் பாதுகைக்கு பூஜை செய்வதை ஏன் யாரும் படம் வரையவே இல்லை. விரதம் இருப்பதைப்பற்றி விவரித்துப் பேச, ஒவ்வொரு விஷயமாக விளக்கிச் சொல்ல அவர்கள் முயன்றதே இல்லை என்றும் தோன்றுகிறது. விரதமிருத்தலை பூஜை நியமங்களோடு ஒன்றாக கலந்து விட்டதால் அது சாதாரணமாகி விட்டதோ என்றும் தோன்றுகிறது. விரதம் வேறு, பூஜை வேறு என்று இரண்டாகப் பிரித்துக் கொள்ள வேண்டுமென்றும் எண்ணம் வருகிறது.

விரதம் என்பது உடம்பையும், மனதையும் பக்குவப்படுத்துதல். அப்படிப் பக்குவப்பட்ட மனதோடு பூஜை செய்தல். பூஜை செய்வதற்கு உதவியாக விரதமிருத்தல். விருதமிருப்பதற்கு ஆசீர்வாதமாக பூஜை செய்தல் என்று இரண்டு தளங்களாக பிரித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் வருகிறது. ஏனெனில் விரதமிருத்தலை விட பூஜை முக்கியமாகி விடக்கூடும். பூக்களில் அலங்கரிப்பது. தென்னை மட்டைகளால் மண்டபம் செய்வது, தோரணங்கள் கட்டுவது, குத்து விளக்கு அலங்காரம் செய்வதும், செண்டைகள் முழங்க பதினைந்து கிலோ மீட்டர்கள் ஊர்வலம் போய்வருவதும் பெரும் பசியை ஏற்படுத்தும். பதினைந்து கவளம் பொங்கலும், கத்திரிக்காய் கொத்ஸுும், தேங்காய் சட்னியும், முருங்கைக்காய் குழம்பும் தேவைப்படும். சூடான பசும்பால், லட்டு, ஜிலேபி, மலை வாழைப்பழம், மாம்பழம், வெல்ல அப்பம் என்றும் அவ்வப்போது உண்ண வேண்டியிருக்கும். இது விரதமா அல்லது விரதத்திற்கு எதிர்ப்பதமா.

நாற்பத்தைந்து நாள் விரதத்தில் நாற்பது நாள் இங்கு பூஜை, அங்கு பூஜை, இந்த இடத்தில் கொண்டாட்டம், அந்த இடத்தில் அபிசேகம் என்று நகர்ந்தோமானால், மோட்டர் சைக்கிளில் விபூதி, குங்குமம். காவி அல்லது கருப்பு உடை அலங்காரத்தோடு ஊர் சுற்றினோம் என்றால் விரதம் பலப்படுமா, பலவீனமாகுமா.

விரதம் என்பது என்ன.

அடிவயிற்றிலிருந்து உரக்கக் கத்துதலா, பாட்டுப் பாடுதலா, நடனம் ஆடுதலா. காலையில் வேலைக்குப் போய்விட்டு, மாலையில் பூஜைக்குப் போய்விட்டு காலையில் எழுந்து குளித்து மறுபடியும் அலுவலகத்திற்கு ஓடுதலா. என்ன விதமான விரதத்தை இன்றைய வாழ்க்கையில் நாம் மேற்கொள்கிறோம் என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

மிகப்பெரிய அலட்டல்தான் விரதமென்ற பெயரில் நடந்து கொண்டிருக்கிறதோ என்ற அச்சம் உருவாகிறது. மிகப்பெரிய பொய்மையொன்று சூழ்ந்து கொண்டிருக்கிறது. அலட்டலாகி இருப்பதே விரதமாகப் போய்விட்டது. இடித்துத் தள்ளி பிதுங்கி வழிந்து, நெய் முகத்தோடு இருக்கின்ற ஐயப்பனை கணநேரம் பார்த்து இழுத்து வெளியே தள்ளப்பட்டு ஏண்டா வருஷா வருஷம் வர, ஒரு வருஷம் வந்தா போததா என்று இழிவாகக் கேள்வி கேட்கப்பட்டு விரதம் பூர்த்தியாகிறது. மகரத் துக்குப் போறேன், மகரத்துக்குப் போறேன் என்று இங்கு உள்ளவர்களுடன் வாயாரச் சொல்லிவிட்டு அங்குபோய் அலுமினியச் சட்டியில் கற்பூரக் கட்டி

எரிவதை ஐயப்பன் என்று பார்த்து அங்கேயும் நசுங்கி அடிபட்டு பள்ளத்தாக்கில் விழுந்து கடவுளே... கடவுளே... இது இல்லையே விரதம் என்று கூறத் தோன்றுகிறது.

சர்க்கஸ் கம்பெனியில் கொடிய விலங்குகள் போகின்ற இரும்புக் கூண்டுகள் போன்ற வரிசையில் திபுதிபுவென்று ஓட வேண்டும். வளைந்து வளைந்து இடப்பக்கம் வலப்பக்கம் என்று திரும்பி மேலேறி பாலம் கடந்து இறங்கி தங்களை யாரும் தாண்டிவிடாமல் இருப்பதற்கு பிசாசாக ஓட வேண்டும். பிறகு முண்டியடித்து நிற்க வேண்டும். அப்படிப் போகும்போது தொலைலே பின்னந்தலை களுக்கு நடுவே தெய்வம் தெரியும். அங்கேயும் இரண்டரை விநாடிகள்தான். தள்ள ஒருவரும், பிடித்திழுக்க ஒருவரும் அந்த இருட்டில் இருப்பார்கள். மறுபடியும் பின்னந்தலைகளுக்கு நடுவே தெய்வம் பார்த்து நல்ல தரிசனம்... நல்ல தரிசனம்... என்று சந்தோஷமாக வெளியே வரவேண்டியதுதான். அதற்குப் பிறகும்கூட பல நாட்கள் மாலையோடு விரதமிருக்கிறார்கள்.

முருகா முருகா என்று அந்த மலை வரை நடக்கிறார்கள். ஆறு நாள் பயணம், ஏழு நாள் பயணம் என்று முருகனுக்கு காவடி எடுத்து மலையை நோக்கி ஓடுகிறார்கள்.

இந்த விரதமிருப்பது எல்லா மதத்திலேயும் இருக்கிறது. விதம் விதமான சடங்குகளோடு இருக்கிறது. முழங்காலிட்டு நடந்து போவது, எழுந்து இரண்டு அடி நடந்து விழுந்து வணங்கி நடந்துபோவது என்று பல விரத முறைகள் இருக்கின்றன. கேட்கும்போதே மெய்சிலிர்ப்பை ஏற்படுத்துகின்ற முறைகள் இருக்கின்றன.

விரதம் என்றால் என்ன? ஒருவரியில் சொல்ல முடியுமா?

முடியும். விரதம் என்பது வைராக்கியம் கொள்ளல். தன் வைராக்கியத்தை சோதித்து உறுதிப்படுத்திக் கொள்ளுதல். நான் குடும்ப நலன் பொருட்டு விரதமிருக்கிறேன். வேண்டிக் கொண்டது பலித்துவிட்டது. அதனால் நன்றிக் கடனாக விரதமிருக்கிறேன். நடைப்பயணம் மேற்கொள்கிறேன் என்று சிலர் சொல்லலாம். இது விரதமிருப்பதற்குண்டான காரணம். தூண்டுதல். ஆனால், விரதம் என்பது என்ன என்கிறபோது இந்த சமாதானங்களெல்லாம் சரியாக வராது.



பரதாழ்வார் என்ன சமாதானம் மேற்கொண்டார். என்ன விரதம் மேற்கொண்டார். அண்ணன் திரும்பும் வரையில் பதினான்கு ஆண்டுகள் காலம் நான் நாட்டிற்கு வெளியேயிருந்து நாட்டின் எல்லையிலிருந்து, தரையில் படுத்துறங்கி, குறைந்த அளவு உண்டு 'அண்ணன் அமர்ந்த சிங்காளத்தில் அவர் பாதுகையை வைத்து பூஜை செய்து தேச பரிபாலனம் செய்வேன். பதினான்காவது ஆண்டு முடிந்த மறுநாள் தீக்குளித்து இறந்து போவேன். இது சத்தியம்.

பரதாழ்வார் அந்தப் பதினான்கு வருடமும் அதற்கு அடுத்த நாளும் அந்த சத்தியத்தைப் பின்பற்றியே நின்றார்.

அரசர் இல்லாத அயோத்தி அவர் புகுந்து அரசாளலாம். அரசாள வேண்டாம், மந்திரியாகவாவது இருக்கலாம். காலையில் சாப்பிட்டு மாலையில் நடனம் பார்த்து, இரவில் கதைகள் பேசி அண்ணன் வருவார் என்று காத்திருக்கலாம்.

அப்படியில்லை. தன்னுடைய எண்ணம் நிலைகுலைந்துவிடக் கூடாது, தன் அண்ணன் மேல் பாசம் வைத்து அவரே அரசாள வேண்டும் என்கிற எண்ணத்தை நான் சிதறவிட்டு விடக்ககூடாது. வேறு எதனாலும் நான் ஈர்க்கப்பட்டு விடக் கூடாது. எந்த விஷயமும் எனக்கு முக்கியமான விஷயமாகப் போகக் கூடாது என்று தீர்மானித்து அதை செயலில் செய்ய ஒரு வைராக்கியம் பூண்டார். அந்த வைராக்கியமே புல்லில் படுத்து குறைவாக உண்டு, குறைவாகப் பேசி அரசு பரிபாலனம் செய்தது.

தெய்வ வழிபாடு என்ற விஷயத்தை, பூஜை என்ற விஷயத்தை மிகச் சரியாக செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு இருப்பதே விரதம். குறைவாக சாப்பிடுவது, குறைவாகப் பேசுவது, எந்தவித அகானுபவங்களிலும் நாட்டமில்லாது அமைதியாக இருப்பது, ஆர்ப்பாட்டத்தை அறவே விரட்டுவது என்பதே வைராக்கியம். இதுவே உறுதிசெய்யப்படவேண்டும். அப்படியிருக்கிறோமா என்று அடிக்கடி தன் வைராக்கியத்தை சோதித்துக் கொள்ள வேண்டும். மது, மாமிசம், மனைவி, மெத்தை, தலையணை, வெந்நீர் குளியல், அறுசுவை உணவு, ஆர்ப்பாட்ட உடைகள் என்பவற்றைத் தடுத்து இடுப்பு வேட்டியும், மேலே ஒரு துண்டும் தலையில் இருமுடியுமாக நடப்பதற்கு தன் உடம்பையும், மனதையும் பக்குவப்படுத்திக் கொள்ளுதல். அதுமட்டுமல்ல

குறைவாக உண்டு, குறைவாகத் தூங்கி, குறைவாகப் பேசுகிற போது மனம் தெளிவுற இருக்கிறது. எதுபற்றியும் அமைதியாகச் சிந்திக்கிறது. இதுதான் விரதத்தின் ஆரம்பம். இதுதான் விரதத்தின் முதல் பயன். இது இல்லாத விரதம் அபத்தம். ஏனெனில் எல்லா பூஜையின் போதும் வாதப் பிரதிவாதங்கள் நடப்பதை நான் கண்டிருக்கிறேன்.

"தீபம் கிழக்கு திசை தாங்க பார்த்திருக்கணும், இப்படி திருப்பி வைங்க."

"ஏங்க... எப்படி வேணாலும் இருக்கலாம். இப்படி இருந்தாதானே அழகு."

"இல்லீங்க தீபம் கிழக்கு திசை பார்த்திருக்கணும்."

"அடப்போய்யா... தீபத்துக்கு திசை உண்டா. எல்லா பக்கமும் எரியறது தானே நெருப்பு."

"நான் சொல்றது விளக்கு இப்படி இருக்கணும்."

"இவனுங்களையெல்லாம் ஏம்ப்பா... பூஜைக்கு கூப்பிடற."

"நானே இந்தக் கேள்வியை உன்னையப் பார்த்து கேட்கணும்னு நினைச்சேன்." என்று சொன்னவருக்கு விளக்கைத் திருத்தியவர் பதில் சொல்வார். விவாதம் பெரிதாகும்.

"இந்த குருசாமி ஸ்பீடு. அந்த குருசாமி ஸ்லோ... நூத்திப் பதினேழு முடி கட்டறதுக்கு ஒரு நாளாயிடும்.

இந்த குருசாமி மந்திரம் சொல்லித்தான் நெய் ஊத்துவாரு. உங்க குருசாமிக்கு ஒன்னும் தெரியாது. எப்போவும் எல்லார் கிட்டயும் இங்கிலீஷ்லயே பேசிக்கிட்டிருக்காரு."

அங்கேயும் பற்றிக் கொள்ளும்.

விரதம் இருப்பதில் நீங்கள்தான் குரு. உங்கள் மனம்தான் உங்களை உன்னிப்பாக கவனிக்கின்ற காவற்காரன். இடித்துரைக்கின்ற நண்பன். சரியான கைகாட்டி. ஆசிரியர். உங்கள் உள்மனம் போடும் கூச்சலை உங்களைத்தவிர வேறு எவரும் அறிகிலர். தன்னையறியும் கலையே விஞ்ஞானம், தன்னை அறிவதற்குண்டான முயற்சியே விரதம்.



## 37

விரதத்தின் போது உரத்துப் பேசுவது என்பதே இருக்கக் கூடாது. பாடல்களில், ஆடல்களில் கவனம் செலுத்தக் கூடாது. விரதத்தின் போது கும்பலாக உட்கார்ந்து பேசக் கூடாது. விரதத்தின்போது கோயில் கோயிலாகப் போவதில் லாபமில்லை. வெறும் தலைதெறிக்கிற ஓட்டம்தான் அதில் இருக்கிறது. அமைதி குலைகிறது.

"ஒன்றுக்கு இருந்துட்டு வந்துடறேம்ப்பா..."

"விடு. அதை அப்புறம் பார்த்துக்கலாம். சீக்கிரம் வா" என்று இழுத்துக்கொண்டு போனால் மனம் முழுவதும் ஒன்றுக்குப் போவதில்தான் இருக்குமே தவிர வேறு எந்த சிந்தனையும் ஏற்படாது. இது இது குழுவாக அலைவதில் உண்டான வேதனை.

விரதம் என்பது மனம் அலையாமல் இருக்க, கண்ட கூத்துகள் ஆடாதிருக்க ஆவேசப்படாதிருக்க அசூயையோ ஆத்திரமோ ஏற்படாதிருக்க காபந்து செய்யும் விஷயம். இவைகள் ஏற்படின் விரதம் முடிந்துபோனதாகவே அர்த்தம். ஆவேசப்படுகிற மனதை, அலைகிற மனதை அடக்கி நிறுத்தவே வைராக்கியம். விரதம் என்பது வைராக்கியம் கொள்ளல்.

மனம் பாட்டுப்பாட அலையுது,

வேணாம் பேசாத போ.

மனம் சினிமாவுக்கு போன்னு கேட்குது.

வேண்டாம் முடியாதுன்னு சொல்லிடு.

மனம் கூடுதலா ரெண்டு கை சர்க்கரைப் பொங்கல் ஆசைப்படுது.

சாப்ட்டா... தப்பு வரும். வேணாம் விட்டுடு-

குளித்து உடம்பை குளிர்வாக்கி சுத்தமாக்கி எங்கேனும் தனியாக அமர்ந்து கொள். சரணம் சொல். ஜபம் செய். உரத்த குரலில் கூற வேண்டாம். முணுமுணுப்பாக அமைதியாக

சொல்லலாம். நீங்கள் மட்டுமே தனித்திருந்து சொல்லலாம். இடையறாது சொல்லலாம். சொல்லிக் கொண்டிருக்கும்போது மனம் என்ன செய்கிறது எப்படிச் செய்கிறது. மனம் சரணம் சொல்லிக் கொண்டே வேறு ஏதேனும் நிந்திக்கிறதா. வேறு எதையும் சிந்திக்காமல் சரணம் மட்டுமே சொல்ல முடியுமா என்று மனதை ஒருமுகப்படுத்த மனதை திசை திருப்பி ஒரே கோட்டில் நிற்கச் செய்கின்ற முயற்சியே விரதத்தின் முங்கிய அங்கம். இதை இடையிராது கடைபிடித்தலே வைராக்கியம். விரதம் என்பது வைராக்கியம் கொள்ளல்.

இப்படிச் சீராக, விரதமிருந்தால் அதன் விளைவுகள் என்ன?

நாற்பத்தைந்து நாள் என்பது மிக அற்புதமான விஷயம். உடற் கொதிப்புகள் ஒரு உச்சநிலைக்குப் போய் மெல்ல தாழும். அதேமாதிரி உணர்ச்சிக் கொந்தளிப்புகளை மெல்ல அழுத்தி திசை திருப்பி அடக்கி இழுத்துவர நாற்பத்தைந்து நாட்களில் பழகிவிட்டால் ஒரு வருடம் முழுக்க எப்படி இருப்பது என்பதும் நமக்கு தெள்ளத் தெளிவாகப் புரிந்துவிடும். 'தெரியாம பண்ணிட்டேன்' என்ற அபத்தமான வார்த்தைகள் விரதமிருப்பவரிடமிருந்து வெளியே வராது. விரதம் முறையாக இருப்பவர் மன வலிமை பெற்றுவிடுகிறார், அந்த வலிமை வருகிறபோது நல்லதும், தீயதும் எதிர்ப்படுபவைகளை மிக அழகாக கையாளுகிறார். துக்கத்தை ஏற்றுக் கொள்கிறார். சந்தோஷத்தை மிதமாக அனுபவிக்கிறார். பேச்சில் தெளிவு வருகிறது. தெளிவு நம்பிக்கையாக மாறுகிறது. நம்பிக்கை நாணயத்தை கொடுக்கிறது. நம்பிக்கையும் நாணயஸ்தருமாக ஒரு மனிதர் ஆகும்போது அவருக்கு சுற்றுப்புறத்தில் நல்ல மரியாதை ஏற்படுகிறது. அந்த மரியாதையைத் தக்க வைத்துக்கொள்ள மேலும் பலமாக விரதமிருக்க அந்த விரதத்தின் மகிமையில் பல்வேறு சூட்சுமங்கள் வாழ்க்கையைப்பற்றி அவருக்கு தெரிந்து விடுகின்றன.

அடடே.... கோபம் இங்கேயிருந்துதான் ஆரம்பிக்குதா? தேவையில்லாத இதுக்குத்தான் பொறாமைப்படறே.... கோயில ஆரம்பிச்சு, குத்தல்லே நகர்ந்து கடைசியில சண்டையில முடியுது. எதுக்கு கேலி'' என்று தெளிவாகி விடுகிறார்.

சினிமாவில் வரும் அழகிகளின் அணிவகுப்பில் மனம் லயிக்காது, இந்தப் பெண்மணிகளால் எனக்கு என்ன புண்ணியம்



என்ற கேள்வி வரும். அவர்கள் வேறு. நான் வேறு. வெறுமே சந்திப்பதற்குக் கூட எனக்கு விருப்பமில்லை என்ற நிலை ஏற்படும்.

மார்கழியில் மட்டும் விரதமிருக்காமல் மறுபடியும் பங்குனியில் விரதம் இருக்கலாமா. சித்திரையில் விரதமிருக்கலாமா என்றெல்லாம் கணக்கு போடும். எந்தக் கோயிலுக்கும் போக வேண்டாம். எந்தப் பயணமும் மேற்கொள்ள வேண்டாம். பதினைந்து நாள் விரதமிருப்போம். உணவு குறைப்போம், பேச்சு குறைப்போம் என்று விரதத்தின் மீது ஈடுபாடு வரும். தீவிரமாக முயல்பவருக்கு வருடம் முழுக்க விரத காலத்தில் கடைப்பிடிக்கிற குறைவாகப் பேசுதல், குறைவாக உண்ணுதல், குறைவாகத் தூங்குதல், குளிர்வாக குளித்தல், இடைவிடாது மந்திர ஜபமோ சரணமோ சொல்லுதல் ஏற்பட்டு விடும்.

அதனால் முகத்திலும், உடம்பிலும் ஒரு பொலிவு கூடும். உங்களைச் சுற்றியுள்ளோர் நடுவில் உங்களுக்கு மரியாதை கூடும். அவர்களும் உங்களைப் பார்த்து விரதத்தின் மகிமையை உணர்ந்து தாங்களும் அதை கடைபிடிக்க முயற்சி செய்வார்கள். அவர்களும் உங்களுக்கு வழிகேட்டு நிற்பார்கள். இயல்பாக நீங்கள் குருசாமி ஆகிவிடுகிறீர்கள். பதினெட்டுமுறை மலைக்குப் போனதாலேயே குருசாமி ஆவதல்ல. உள்ளுக்குள்ளே ஒளி கூடியிருப்பதால் ஒப்பிடுகின்ற தன்மையான குருசாமியாக நீங்கள் மாறுவீர்கள்.

குருவாக இருப்பது என்பது அதிகாரமாக இருப்பதல்ல. அன்போடு இருத்தல். அறிவார்ந்த அன்போடு இருத்தல். ஆவேசம் இல்லாமல் அணுகுதல். எந்நேரமும் தன்னை அவதானித்தல். அது ஒரு ஆனந்தமான நிலை. விரதம் நிச்சயம் இந்த நிலையைக் கொடுக்கும்.

ஒழுங்காக விரதமிருப்பதற்கு நல்ல வைராக்கியம் தேவை. விரதம் என்பது வைராக்கியம் கொள்ளல்.

சாமி பாட்டு கூட கேட்கக் கூடாதா

அவசியம் என்றால் கேளுங்கள். பாட்டும் பேச்சும் இல்லாது விரதமிருங்கள். மனம் எல்லா நேரங்களிலும் ஏதோ பாடிய வண்ணம் சிந்தித்துக் கொண்டிருக்கும். அரட்டை அடித்தபடி உள்ளே பாடிக் கொண்டிருக்கும்.

இப்படியிருப்பின் மனதை அவதானித்தல் என்பது ஏற்படாது. ஒருமுகப்படல் நடக்காது, பாட்டு மன ஒருமையைக் கலைக்கும். மாறி மாறி வெவ்வேறு பாட்டுகளுக்கு போகும். பாட்டிலும் முழு ஈடுபாடு ஏற்படாது. அரை நினைவாய் பாடும். ஏதோ யோசித்தபடி பாடும். எப்போதும் உள்ளே ஒரு பாட்டு சப்தம் கேட்டுக் கொண்டிருக்கும்.

இது ஆரோக்யமான மனநிலையல்ல.

விரதம் தியானத்திற்கு அழைத்துப் போவது. அழைத்துப் போக வேண்டும். தியானம் கடவுள் தேடலின், தன்னை அறிதலின் ஆரம்பம். எனவே விரதம் என்பது மிக மிக மும்முரமான விஷயம். எந்த இளிப்புகளும் அங்கே இல்லை. விரதம் கொண்டாட்டமல்ல. பண்டிகைகள் கொண்டாட்டம்.

நீங்கள் மற்றவர் போல் வாழவில்லை. தனித்த வழியிலே இருக்கிறீர்கள் என்று சொல்லத்தான், உங்களுக்கு நினைவு படுத்தத்தான் தவ உடை, கருப்போ, பச்சையோ, காவியோ உடுத்தச் சொல்கிறார்கள். மற்ற வகை குதூகலமான இல்லறம் அல்ல என்று சொல்லாது சொல்கிறார்கள். நான் தனி என்று அறிவுறுத்த உடையில் காட்டுகிறார்கள். பிறகு அந்த உடையே கும்மாளம் போட எப்படிப் பயன்படுத்தலாம்?

விரதமிருப்பது மிக கம்பீரமான விஷயம். வருடத்தில் நாற்பத்தைந்து நாட்கள் விரத வாழ்க்கை வாழ்வது மற்ற நாட்களை நிச்சயம் புனிதப் படுத்தும். தெளிவு கொடுக்கும்.

வருடா வருடம் விரதமிருக்க, உங்கள் தன்மை மேம்படும். ஆனால் நாலு நாட்கள் மாலைபோடுவது எந்தவகையிலும் நியாயமில்லை. அது உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளும் செயல். செய்வன திருந்தச் செய் என்பது நல்லோர் வாக்கு.

உங்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துப் போகாத செயல்களைச் செய்வதில் அர்த்தம் என்ன.

விரதம் பனிமலை ஏறுவது போல. பனிமலை ஏற வைராக்கியம் தேவை. விரதம் என்பது வைராக்கியம் கொள்ளல்.

நேர்மையான விரதம் நிச்சயம் உங்களுக்கு சீர்மையான வாழ்வை கொண்டு வந்து தரும்.



## 38

கலைகளில் தேர்ச்சி கொள்ளுங்கள் என்று கற்றோர்கள் மக்களுக்கு சொல்வது வழக்கம்.

ஏன் எதற்கு கலைகளில் தேர்ச்சி கொள்ள வேண்டும்.

வாழ்க்கையை நன்கு அனுபவிப்பதற்கு வாழ்க்கையை புரிந்து கொள்வதற்கு, நடுநிலையில் நிற்பதற்கு, ஒரு பிரச்னையின் இடதும், வலதும் பார்த்து எது உண்மை என்று கண்டுபிடிப்பதற்கு, அந்தக் கண்டுபிடிக்கும் அளவை மேம்படுத்திக் கொள்வதற்கு, அடுத்தவரை புரிந்து கொள்வதற்கு, அடுத்தவரை புரிந்துகொள்வதின் மூலம் அனுசரணையாய் நடந்து கொள்வதற்கு. அனுசரணையாய் நடந்து கொள்வதின் மூலம் அமைதியாய் வாழ்வதற்கு, அமைதியாய் வாழ்வதற்கு கலைகள் உதவி செய்கின்றன.

கலைகள் இல்லாது போனால் என்ன ஆகும்.

வயிறு நிறைய உண்போம். வாய் பிளந்து தூங்கினோம். எழுந்து மலஜலம் கழித்து இடதும் வலதும் நகர்ந்து பிறகு வயிறுமுட்ட உண்போம். வாய் பிளந்து தூங்கினோம் என்று... மரண பரியந்தம் வரை உண்பதும், உறங்குவதுமாகவே வாழ்க்கை முடியும். தன்னைப்பற்றி எந்தத் தெளிவும் இருக்காது. மற்றவர்பற்றி எந்தப் புரிதலும் இருக்காது. அந்த நேரம் என்ன தோன்றுகிறதோ கூச்சலாய் பேசிவிட்டு,... பார்க்கும்போது மலங்க மலங்க விழித்துக்கொண்டு நிற்க வேண்டியதுதான்.

நீட்டோலை வாசியான் நின்றான் நெடுமரம் என்று பழந்தமிழ் பாடல் ஒன்று சொல்லும். மிக மோசமாக இடித்துரைக்கும். நெடுமரம்போல் வெறுமே நின்றுகொண்டிருத்தல். வாசிக்கத் தெரியாது என்பது மட்டுமல்ல. வாசிப்பது புரியவும் புரியாது. வாழ்க்கைப்பற்றி எதுவும் தெரியாது என்பவர் வெறும் நெடுமரத்திற்கு ஒப்பாவர். ஆனால், உலகில் நூற்றுக்கு தொண்ணூறு மனிதர்கள் அப்படித்தான் வாழ்கிறார்கள்.

கலைகளை ரசித்தால் போதாதா. கற்றுக் கொள்ள வேண்டுமா. கலைகளில் உருவாக்குபவனாக, பங்கு பெறுபவனாக நான் நிற்க வேண்டுமா. தொலைவிலிருந்து கைகட்டி ரசிக்கிறேனே. அரங்கத்தின் கீழிருந்து ஆரவாரித்துப் பார்க்கிறேனே. எதற்கு உள்ளே வருவது என்ற கேள்வி வரும்.

கலைகளை ரசிப்பது நல்ல குணம். நாடகத்தைப் பார்த்துக் கைதட்டுவதும், பாட்டை கிறங்கிக் கேட்பதும், ஓவியத்தை வியந்து பார்ப்பதும், நல்ல புகைப்படத்தை திரும்பத் திரும்ப உற்று நோக்குவதும் மிகப்பெரிய சந்தோஷத்தைத் தரும். அது அடுத்தபடியான இன்னொரு தூண்டுதலை ஏற்படுத்தும்.

நான் புகைப்படம் ஏடுத்தால் என்ன. எனக்கு ஓவியம் வராதா. எனக்கும் நாடகத்தில் நடிக்க வேண்டும்போல் இருக்கிறது. நானும் பாட்டுப்பாட விரும்புகின்றேன். எங்கேனும் தனியாகப் போயாவது பாட்டுப்பாட வேண்டும் என்று தோன்றும். கலைகளை நேசிப்பது, கலைகளில் பங்கெடுப்பது போலத்தான்...

ஆனால், கலைகளை ரசிப்பவர்கள் எல்லோருக்கும் கலைகளை உருவாக்க முடியுமா.

இல்லை. நூறுபேர் கலைகளை ரசிப்பவராக இருப்பின் அதில் பத்துபேர்தான் கலைகளை உருவாக்குபவராக அதை தூக்கி நிறுத்துபவராக இருப்பார்கள். மற்றவருக்கு ஏதேதோ காரணங்களால் அந்த விஷயம் கைவிட்டு நகர்ந்துவிடும். கலைகளை ரசிப்பவரைவிட கலைகளை உருவாக்குபவர் நிச்சயம் சிறப்பானவர்தான். வாழ்வுபற்றிய எல்லா நுணுக்கங்களும் அவர் ஊன்று கவனித்தால்தான் அவர் கலைகளில் சிறப்பாக இருக்க முடியும். மற்றவர்களைப்பற்றிய அறிவும், அறியும் தாகமும் அதிக மிருந்தால் தான் அவருக்கு எழுத்தாளனாகவோ, ஓவியனாகவோ, புகைப்பட கலைஞனாகவோ பாட்டுப்பாடுப வனாகவோ இருக்க முடியும். அதுவும் நடிகருக்கு மனிதர்களைப் பற்றிய அறிவு இன்னும் கூடுதலாகத் தேவை.

எப்படி இது நடக்கிறது. எவ்விதம் ஒரு மனிதருக்குள் இது ஏற்படுகிறது. கலைகளை கைவசம் வைத்திருப்பவர் எல்லாம் தெரிந்தவரா. மிக உன்னதமானவரா.

ஆமாம் என்றுதான் பதில் சொல்லத் தோன்றுகிறது. வெகுநிச்சயம். சாதாரணமாக வாழ்பவரைவிட கலைகளில்



நாட்டமுடையவர், கலைகளில் ஈடுபாடுடையவர், கலைகளை கைவசம் வைத்திருப்பவர் ஒருபடி மேலாகத்தான் இருக்கிறார். அவருக்கு வாழ்வுப்பற்றிய புரிதல் நிச்சயம் மற்றவரைவிட அதிகம் இருக்கிறது. இன்னும் விரிவாகப் பார்க்க முயற்சிப்போம்.

எல்லா கலைகளும் பழையதை நினைவு கூர்வதுதான். நடந்ததை மறுபடியும் யோசித்தல்தான். நாடகமோ, ஓவியமோ, பாட்டோ இதேவிதம்தான். கேட்ட ஒரு ஒலி சப்தத்தை நினைவில் வைத்துக்கொண்டு அந்த குயில் என்ன கூவியது. அந்த குயில் கூவியபோது ஸ...ப... என்று சப்தங்கள் ஏற்பட்டன. அந்த இரண்டு சப்தங்கள்தான் திரும்பத் திரும்ப மனம் நிறைத்துக் கொண்டேயிருந்தது. பிறகு மறுபடியும் குயில் கூவியபோது அது சற்று நீண்டதாக ஸ...ப...த... என்று போதை போல் தோன்றியது. மனதிற்குள் அந்த சப்தம் உருண்டு ஓடுகிறது. அந்த சப்தத்தை விரிவாக்க விரிவாக்க பல ஸ்வரங்கள் உள்ளே நுழைந்து ஒரு ராகம் ஏற்பட்டுவிடுகிறது.

குயில் கூவல் என்ற விஷயத்தை கேட்டதின் விளைவாக ஒரு ராகம் உருவாகிறது. அந்த ராகத்திற்கு ஒரு பாட்டு எழுதப்படுகிறபோது அந்தப் பாட்டும், அந்த ராகமும் ஒன்றாக இணைகிறபோது மிக அற்புதமான ஒரு பாடலாக எல்லோர் மனதையும் கவரும்படி இருப்பதாக அமைகிறது. ஊர் முழுவதும் அந்தப் பாட்டை உள்வாங்கி மறுபடியும் பாடுகிறது. ஊர் முழுவதும் பாடிய அந்தப் பாடலுக்கு ஆரம்பம் ஒரு குயில் கூவல். அந்த குயில் கூவலை மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவந்து அதை விரிவாக்கி தனக்குள்ளே பல அலைகளை ஏற்படுத்திச் செய்த அந்த கலை ஞானியின் திறன்.

எழுதுவது எப்படி.

வெகுநிச்சயமாக எழுதுவதும் இம்மாதிரி பழையன நினைவுகூரல் தான்.

தகப்பனார் இறந்து விட்டார். அவருக்கு இறுதிச் சடங்கு செய்து கொண்டிருக்கிறார் மகன். மகன் யோசிக்கிறார். கோபமான, முரடான இந்தத் தகப்பனார். மிக அன்பான, அறிவான தாயார் இவர்கள் இருவரில் இவரை இழந்துவிட்டு இப்போது ஈமச் சடங்குகள் செய்து கொண்டிருக்கிறேன். சிதையில் அடுக்கிக் கொண்டிருக்கிறேன். ஏதோ மந்திரம் சொல்லப்படுகிறது.

இந்தச் சிதையில் ஈயோ... எறும்போ... பூச்சியோ... புழுவோ... நாயோ... கழுதையோ... விழாது இருக்க வேண்டுமென்று அக்னி பகவானே உன்னை பிரார்த்திக்கிறேன். அப்படி விழுந்தால் அவர்களுக்கு காயம் ஏற்பட்டால், உயிர்ச் சேதம் ஏற்பட்டால் அந்த காயத்திற்கும் உயிர்ச் சேதத்திற்கும் நானோ, இந்த சிதையில் இருக்கின்ற என் தந்தையோ பொறுப்பாக மாட்டார் என்பதையும் உங்களிடம் விண்ணப்பித்துக் கொள்கிறேன். என்னுடைய தகப்பனாரின் பிரேதத்தை நன்கு பஸ்பமாக்கி அவரை வானுலகத்திற்கு அழைத்துப் போகும்படி வேண்டிக் கொள்கிறேன்'' என்று மந்திரம் சொல்ல மகன் உடைந்து அழுகிறார்.

என்னுடைய மதம், இந்தச் சடங்குகள் இத்தனை அன்பாக இருக்கும்பொழுது உமக்கு ஏன் அன்பாக இருக்கத் தெரியவில்லை என்று இறந்தவரைப் பார்த்து கேள்வி கேட்கிறார்.

இது சிந்திக்க சிந்திக்க அழகான சிறுகதையாக உருவெடுத்து விடும். ஆக, ஒரு ஒட்டுமொத்த வாழ்க்கையையும் புரட்டிப் பார்க்கின்ற விதமாக அந்தச் சிறுகதை அமையும். தந்தையினுடைய முரட்டுத்தனமும், தாயாருடைய அவஸ்தையும் தன்னுடைய வேதனையும் ஒரு சேர ஒரு கதையில் கொண்டுவந்துவிட முடியும். அதைப் படித்த பல பேருக்கும் கண்ணில் நீர கசியவைத்து அடேய்... அன்பாக இருத்தல் என்பது எவ்வளவு முக்கியம் நம்முடைய மதத்திலா இப்படி சொல்லப்பட்டிருக்கிறது என்று விஷய ஞானத்தோடு ஒரு அனுபவ ஞானமும் படிப்பவருக்கு ஏற்பட்டுவிடும். இதற்கு அடிப்படையான காரணம் அந்த மனிதர் உணர்ந்த ஒரு மந்திர விஷயம். பழையதை நினைவுகூர அதை விரிவாக்க சிறுகதை வந்துவிட்டது.

மனித மனம் நொடிக்கு நொடி மாறுவது. ஒவ்வொரு வினாடியும் வர்ணஜாலம் காட்டுவது. நகர்ந்து கொண்டே இருப்பது. பல வர்ணங்கள் ஒன்று கூடி மோதி விரிந்து விளையாடி மெல்ல மெல்ல எல்லாம் சுருங்கி இருள் படர்ந்திருக்கின்ற நேரம்... அப்படித்தான் நடக்கிறது.

ஆனால், ஓவியன் தூரிகையை எடுத்தால் இருளையா ஞாபகம் வைத்துக் கொள்வான். அந்த அந்திசாயலில் எந்த நேரத்தில் ஆரஞ்சு வண்ணம் அதிகமாக இருந்ததோ அதுவே மனதில் தங்கியிருக்கும் அல்லது மஞ்சள் வர்ணம் மின்னியதோ அதுவே மனதில் தங்கியிருக்கும். அந்த நேரத்தில் அவனுக்கு எது தங்கியதோ அந்த எண்ணத்தை, அந்த வர்ணத்தை குழைத்துக் குழைத்து ஓவியம் தீட்ட என்றோ எங்கோ எப்பொழுதோ பார்த்த ஏடு அந்திவானம் நிரந்தரமாக இங்கு நிற்கும்.



அந்த ஓவியத்தைப் பார்ப்பதில் என்ன லாபம் ஏற்படும். அந்த ஓவியத்தைப் பார்ப்பதன் மூலம் அந்தி வானத்தை பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஏற்படும். அந்த ஓவியத்திலுள்ள அந்தி வானத்தின் ஜாலத்தைப் பார்த்து நிஜமான அந்தி வானத்தின் ஜாலத்தைப் பார்ப்பதற்கு மனம் தவிக்கும். இல்லையெனில் கடற்கரைக்குப்போய் அல்லது மலை உச்சிக்குப் போய் வேர்க்கடலை கொறித்துக்கொண்டும், வேண்டாத விஷயங்களை பேசிக் கொண்டும், வேறுசில மனிதர்களை வெறித்துப் பார்த்துக் கொண்டும் இருப்பீர்கள். அந்திவானம் பார்க்கின்ற ஆசையை அந்த ஓவியம் தூண்டும். அது எப்போதோ எங்கேயோ நடந்த ஒரு அந்திவானம்.

ஒருவரின் நினைவு கூறல் உங்களை உள்ளே இழுத்து நீங்கள் பார்த்த அந்தி வானத்தை நினைவு கூற வைக்கிறது. அடுத்த முறை இந்த அந்தி வானத்தை இன்னும் ஆவலாய் கூர்மையாய் பார்ப்பீர்கள்.

## 39

நாடகத்தில் ஆர்வமுள்ள அந்த நண்பர் ஷவரில் குளித்துவிட்டு தலை துவட்டி பிறகு லுங்கி உடுத்தி வெளியே வந்து வீட்டுக் கூடத்தில் அமர்ந்தார். நடந்து வரும்போது வீட்டிலுள்ள அத்தனை பேரும் வியந்து பார்த்தார்கள். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன இப்படிப் பார்க்கிறீர்கள் என்று கேட்டார்.

''உனக்கு எப்போ வால் முளைச்சது'' என்று தந்தை கேட்டார்.

''என்ன எனக்கு வாலா,'' எழுந்து நின்றார்.

அவர் தலை துவட்டிக் கொண்டிருந்த டவல் உருண்டு புரண்டு ஒரு வால்போல அவர் லுங்கிக்குள்ளே மாட்டிக் கொண்டு அவர் பின்பக்கம் தொங்கியிருந்தது. அவர் கண்ணாடி முன்பு

பார்க்கும்போது மிகச் சரியாக வால்போலவே இருந்தது. எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள். அவருக்கு சட்டென்று என்று தோன்றியது.

ஒரு வீட்டில் ஒரு பையனுக்கு திடீரென்று வால் முளைத்தால் என்ன ஆகும். வால் பையன் என்று நாடகம் எழுதினார். அந்த நாடகம் முழுவதும் சிரிப்பு வெடிகளால் நிறைந்திருக்கும். வாய்விட்டுச் சிரித்து மனம் லேசாகி சிற்சில விஷயங்களை நல்லபடியாக உள்வாங்கிக் கொள்கின்ற திறனோடு அது நெய்யப்பட்டிருக்கும். ஒரு பொறி, ஒரு செயல், ஒரு சொல், ஒரு சப்தம் பெரிதாக கலையாக மாறுகிறது. மாற்றுபவரின் திறனைப் பொறுத்து அது அற்புதமாக அமைகிறது. மக்களின் பேராதரவைப் பெறுகிறது.

என்னா மியூசிக்பா, சாவடிக்கூறாரு... இவரு எழுதின கதைய படிச்ச பிறகு வேற எவர் கதையும் படிக்கறதில்லை... நாடகம்னா நான் பார்க்கறது அவரு ஒருத்தர் நாடகம்தான் நான் பார்க்கறது அவரு ஒருத்தர் நாடகம்தான். அந்தி வானத்தை வரைந்த ஓவியரின் படம் பார்ப்பதற்கு மட்டுமல்ல விலைக்கும் கிடைக்கிறது. அதை போட்டோ ப்ரிண்ட்டாக எடுத்து குறைந்த விலைக்கு கொடுக்கிறார்கள். அதை வாங்கி சட்டமிட்டு படுக்கை அறைக்கு எதிரே மாட்டுகிறபோது அதைப் பார்த்துக் கொண்டே தூங்கிப் போகலாம். எழுந்தவுடன் கண்விழித்துப் பார்க்கலாம். இதைவிட ஓவியருக்கு மிகச்சிறந்த பரிசு எதுவும் இருக்க முடியாது.

இந்த மாதிரி கலைஞர்களை பார்த்திருக்கிறீர்களா, அவர்கள் கூட்டத்திற்கு நடுவே தனியாகத் தெரிவார்கள். முகம் பிரகாசமாக இருக்கும். கண்களில் ஒளி கூடியிருக்கும். இதழ்களில் புன்னகை பதிந்திருக்கும். அவருடைய உடல் மொழி தனித்தபடி மற்றவரைவிட வித்தியாசமாகத் தெரியும். அவர் சுவரோரம் பதுங்கி நிற்கவோ கூட்டத்தோடு கூட்டமா இருக்கவோ விரும்பாமல் தனியே துண்டாகக் காட்சியளிப்பார். மக்கள் அவரை கொண்டாட கொண்டாட இன்னும் உயரத்திற்குப் போவார். உயரத்திற்குப் போகப்போக மக்கள் கொண்டாடும்படியான படைப்புகளை படைப்பார்.

கொண்டாட்டத்திற்காகத்தான் இத்தனை பரபரப்பா.



இல்லை. ஆரம்பத்தில் கொண்டாட்டங்கள் கலைஞனுக்கு பிடித்தாலும் ஒரு உயரத்திற்கு வந்தபிறகு மக்களுக்கு என்ன சொன்னால் அமைதி ஏற்படும். எது சொன்னால் நல்லது என்று யோசித்து மக்களுக்காக பாடவும், பேசவும், எழுதவும், நடிக்கவும், வரையவும் கற்றுக் கொள்வார்கள். அதற்கு முயற்சி செய்வார்கள். அப்போது அந்த வாழ்க்கை, அவர்கள் மனம் ஒரு நல்ல நிம்மதியில் லயித்து நிற்கும்.

எழுத்தாளனாக இருப்பது கிட்டத்தட்ட கடவுள்போன்ற நிலை. படைப்பதினால் என் பேர் இறைவன் என்று கம்பீரமாக ஒரு கவிஞன் பாடியிருக்கிறான். அது கர்வத்தினால் வந்த சொல் அல்ல. ஒரு நிறைவினால் ஏற்பட்ட வாக்கியம்.

கலைகளில் தேர்ச்சி கொள்ள என்ன செய்ய வேண்டும்.

சித்திரமும் கை பழக்கம். செந்தமிழும் நா பழக்கம் வைத்ததொரு கல்வி மனப் பழக்கம். பழக்கம்தான் கலைகளில் தேர்ச்சியுறச் செய்கிறது. இடைவிடாது கலையோடு தொடர்பு இருந்து என்ன கலையில் ஈடுபடுகிறோமோ, அதை திரும்பத் திரும்ப செய்து பார்க்கிறபோது ஒரு உயர்வு ஏற்படுகிறது. நறுவிசு வருகிறது.

நான் எழுத்தாளன். பள்ளிப்படிப்பில் சாதாரணமாக இருந்த நான் எப்படி சிறந்த எழுத்தாளனாக மாறினேன்.

பழக்கம்தான் காரணம். பள்ளிப் படிப்பிற்கும் கல்லூரிப் படிப்பிற்கும் இதற்கும் சம்மந்தமில்லை. இது வெறும் கெட்டிக்காரத்தனமான விஷயமல்ல. இது உணர்ச்சியோடு பரிதவித்து எழுந்திருந்தல் என்பதோடு சேர்ந்த விஷயம் இப்படி பரிதவித்து எழுந்த உணர்வுகளை சீர்படுத்தி ஒரு சொல்லாக, ஒரு வாக்கியமாக, ஒரு கதையாக சொல்கிறபோது அதைப் படிப்பவருக்கு சொல்பவருடைய உணர்வில் பெரும்பகுதி போய் சேர்ந்து விடுகிறது.

மொழியின் ஆளுமையும், உணர்வுக் கொந்தளிப்பின் உச்சகட்டமும் ஒன்றுடன் ஒன்று பிணைந்துவர மிகச் சரியான ஒரு எழுத்து வெளிவந்து விடுகிறது.

மொழியின் ஆளுமையை எப்படிப் பெறுவது.

எந்த மொழியில் எழுதுகிறோமோ அந்த மொழியினுடைய எல்லா நுணுக்கங்களும் எழுத்தாளனுக்கு தெரிந்திருக்க வேண்டும். தமிழின் தொன்மை மிகப்பெரிது. அந்தத் தொன்மையான தமிழின் முழு முயற்சிகளும் ஒரு எழுத்தாளன் படித்திருக்க வேண்டும். சங்க காலத்திலிருந்து எழுதப்பட்ட பாடல்களிலிருந்து சமீபத்திய கவிதை வரை அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

கதை எழுத வேண்டும் என்கிற காரணத்திற்காகவே கம்பராமாயணமும், நாலாயிர திவ்யப் பிரபந்தமும், தேவார திருவாசகங்களும் படித்தேன். மனனம் செய்தேன். அந்தப் பாசுரங்களை உள்வாங்கி அனுபவித்தேன். தமிழ் மீது பற்று அதிகரித்தது. தமிழ் சொற்கள் உள்ளுக்குள் தம்பூரா ஸ்ருதிபோல இடையறாது இயங்கிக் கொண்டிருந்தன. சந்த நடைகள் உள்ளே துள்ளிக் கொண்டிருந்தன.

எழுதும்போது அந்த வாக்கியங்களில் எதுகை, மோனை இருக்கும்படி பார்த்துக் கொண்டேன். அப்போது படிப்பதற்கு அது சுவையாக இருந்தது. சொல்லும் செய்தி உள்ளே போய் தைத்தது. பரிதவித்து உணர்ச்சியோடு எழுந்திருத்தல் ஒருபுறமும், மொழியின் ஆளுமை மறுபுறமும் நடந்து கொண்டிருந்தது. அதற்குப் பிறகு கவிதை எழு முடிந்ததே தவிர கதை எழுத வரவில்லை. கிட்டத்தட்ட ஒரு வருடம் பல கதைகள் எழுதி கிழித்துப் போட்டிருக்கிறேன். ஆரம்பித்து நிறுத்தியிருக்கிறேன். அடுத்தவர் சிறுகதைகளை எப்படி எழுதியிருக்கிறார் என்று ஆழ உற்றுப் பார்த்திருக்கிறேன். சட்டென்று சிறுகதை வடிவம் கைவந்து விட்டது. என்னுடைய கதைகள் இலக்கியப் பத்திரிகையிலும் பிற்பாடு பிரபலமான வாரப் பத்திரிகையிலும் பிரசுரமாயின. ஜனங்கள் அந்தக் கதையைப் படித்துவிட்டு எதிரொலித்தார்கள். எனக்கு கதை எழுதும் வேகம் அதிகமாயிற்று.

எட்டுமணி நேர அலுவலகம். போய்வர முக்கால் முக்கால் ஒன்றரை மணிநேரம். ஒன்பதரை மணிநேரத்திற்குப் பிறகு வீட்டிற்குள் செய்ய வேண்டிய தினசரிக் கடமைகள் ஒரு மூன்று மணிநேரம். பன்னிரெண்டரை மணிநேரங்கள் தாண்டி தூங்குவதற்கு ஒரு நான்கு மணி நேரம். பதினாறு மணிநேரத்தையும் தாண்டி மீதி நேரங்களில் நான் படித்தேன் அல்லது எழுதினேன். கடும் உழைப்பு என்கிற வார்த்தைகளுக்கு



அப்பால் வெறி பிடித்ததுபோல முயற்சி செய்தேன். நாவல் எழுதப் பழகினேன்.

மெர்க்குரிப் பூக்கள் என்கிற நாவலை மூன்று முறைகள் முழுவதுமாக திருத்தி திருத்தி எழுதினேன். அப்பா திருத்தி எழுதிப்பழக அடித்தல் திருத்தலின்றி எழுதும் வழக்கம் கைவந்தது.

இந்த எழுத்து எனக்கு என்ன கொடுத்தது. புகழ், பணம் அதுமட்டுமா.

இல்லை. என்னை எனக்கு தெளிவாக்கியது என் எழுத்துதான். என்னுடைய பிரச்னைகளையே நான் கதையாக்க யோசிக்கிறபோது அதனுடைய குறை நிறையை சாதக, பாதகங்களை மிக எளிதாக கண்டு கொண்டேன். நான் என்ன செய்திருக்க வேண்டும். என்ன செய்துவிட்டேன். என்ன செய்திருக்கக்கூடாது என்பதெல்லாம் மிகத் தெளிவாக புரிந்தது. அடுத்தமுறை கிட்டத்தட்ட அதேமாதிரி பிரச்னைகள் வரும்போது நான் மிகக் கவனமாகச் செயல்பட்டேன். இதனால் என் குடும்பம் என்னை மரியாதையுடன் நோக்கியது.

'அட புருஷன் சரியாக சிந்திக்கிறானே' என்று மனைவி சந்தோஷப்பட்டாள். அப்பாவும், அம்மாவும் சந்தோஷத்துடன் பார்த்துக் கொள்ள குழந்தைகள் குதூகளித்தார்கள். வீடு சுதந்திரமாக, சொர்க்கமாக இருந்தது.

படித்து கொடுத்த பலம், எடுத்து கொடுத்த வளம் இவையிரண்டும் என்னை சிறந்த மனிதனாக மாற்றின.

என் நண்பர்கள் சிலர் மதுவிலும், சூதாட்டத்திலும் சிக்கிவிட நான் அம்மாதிரியான அபத்தங்களில் ஈடுபடாமல் தனியே வளர்ந்தேன். வெறும் அரட்டையாய் அதிகம் நண்பர்கள் இருந்தால் அவர்களையும் நான் தவிர்த்தேன். என்வீடு நான் எழுதுகிறேன் என்பதில் கர்வப்பட்டது. அது பிரபல பத்திரிகையில் வந்து எனக்கு புகழ்கொடுத்த போது தானும் அருகே நின்று பங்கேற்றது.

'கதை எழுதற பாலகுமாரனா உங்க வீட்டுக்காரர்' என்று விசாரிக்கிறபொழுது ஆமாம் என்று கர்வப்பட்டது. அதிகம் எழுத உற்சாகம் கொடுத்தது.'

''இரும்பு குதிரைகள்னு ஒரு நாவல் ஆரம்பிக்கலாம்னு இருக்கேன். டைட்டிலில் எப்படியிருக்கு. இரும்பு குதிரைகள்'' என்று சொல்ல வீடு அதைப்பற்றி விவாதம் செய்யும். 'ஏக்ளாஸ்... சூப்பர்' என்று குரல் கொடுக்கும். கதை சொல்ல கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கும்.

இப்படி ஒருவருக்கு மூன்று நான்கு பேரிடம் மனதில் தோன்றிய நாவல் விஷயத்தை கிட்டத்தட்ட நாவல் வடிவமாகவே சொல்ல அவர்கள் அதை உள்வாங்கி மிக அற்புதம் என்று சொல்வார்கள். பிறகு நாவலை அத்தியாயம் அத்தியாயமாக நான் எழுதத் துவங்கி விடுவேன். சொன்னதை விட எழுதும்போது அது இன்னும் நன்றாக பாலீஷ் செய்யப்பட்டு மிக அற்புதமாக வெளியே வரும்.

வீடு என்னை உப்பு, புளி சமாசாரத்திற்கு அழைக்காமல் தானே கவனித்துக் கொண்டது. ஆனால், நான் எழுதிய நேரம்போக வீட்டிற்கு மிக உதவி செய்பவனாக இருந்தேன். என் எழுத்து அந்தக் கனிவைக் கொடுத்தது.

எழுதும் போது குழந்தை அழக்கூடாது. குக்கர் சத்தம் கேட்கக் கூடாது. மிக்சி அரைபடக் கூடாது என்றெல்லாம் சொல்வதே யில்லை. எழுதுகிறபோது சுற்றி நடப்பது எதுவுமே எனக்குத் தெரியாது. நான் என் எழுத்து என்று எல்லா சப்தங்களுக்கும் நடுவில் என்னால் எழுதிக் கொண்டிருக்க முடியும். விறுவிறுவென்று மாடிப்படி ஏறிவந்து என் மகள் மடியில் உட்கார்ந்து எனக்கொரு ட்ராயிங் போட்டுக் கொடு' என்று சொல்ல பத்து நிமிடம் அவளுக்கு விதம்விதமாக ஓவியங்கள் வரைந்து கொடுத்து விட்டு பிறகு மறுபடியும் எழுதத் துவங்குவேன் சீ...போ... என்று என் குழந்தையை ஒருநாளும் சொல்லியதில்லை. இந்தப் பொறுமையும் எனக்கு என் எழுத்து கொடுத்தது.

குடும்பத்தை பலி கொடுத்துவிட்டு கலை வடிவத்தில் நான் கவனம் கொள்ளவில்லை. கலை வடிவம் கொடுத்த கனிவு என் குடும்பத்தை மிகச் சுகமாக வைத்திருந்தது. சுகத்தில் கனிவால் எழுத்து கனிந்தது. எழுத்தின் கனிவால் குடும்பத்தின் மீது கனிவாய் இருக்க முடிந்தது. ஒன்றிலிருந்து ஒன்று என்று தொடர்பாக நான் சிறப்பாக வளர என் எழுத்து காரணமாக இருந்தது. இதுதான் கலை என்பதின் அற்புதமான விஷயம்.



எதனாலோ, நான் யார் தெரியுமா. என்னை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் என்று காதோரம் இருக்கின்ற முடியை பிய்த்தபடி நான் பேசியதேயில்லை. அப்படிப் பேசுபவர்களை நான் வியப்பாகப் பார்த்திருக்கிறேன். அட... சறுக்குகிறாரே என்று கவலைப்பட்டிருக்கிறேன். மற்றவரின் தவறுகள் எனக்கு உதவி செய்தன. அவை என்னுள் கிளறும் முன்னே கிள்ளி எறிந்தேன். பிறகு என் குருநாதரால் சத்தியத்தோடு மிக நெருக்கமாக இருக்கின்ற சுகம் ஏற்பட்டது. என் குருநாதரிடம் என் எழுத்துதான் அழைத்துப் போயிற்று. ஒரு குரு வேண்டுமென்ற ஆவலைத் தேடிற்று. அந்த குரு கிடைத்தவுடன் இறுகப் பற்றிக் கொள்கின்ற மனோபாவனையும் ஏற்படுத்தியது. நான் எழுத்தாளனாக இல்லையெனில் முட்டாளாக முரடனாக இருந்திருப்பேனோ என்று தோன்றுகிறது.

ஒரு கலை வடிவம் என் வாழ்வை வலுப்படுத்தியது. எல்லா மனிதர்களுக்குண்டான நல்லவையும், கெட்டவையும் எனக்கும் நேர்ந்தன. அவைகளை எதிர்கொள்ள எழுத்து உதவியது.

## 40

இருதய அறுவை சிகிச்சை என்பது எளிதானதல்ல. மிகுந்த வலியும், மிரட்சியும் தருகின்ற விஷயம். ஓடியாடிக் கொண்டிருந்த மனிதரை முடக்கிப் போடுகின்ற நோய். இதை மிக அமைதியாக எதிர்கொண்டேன். என்ன உத்தரவிடப்பட்டதோ அதற்கு அடிபணிந்தேன். என்ன உணவு கொடுக்கப்பட்டதோ அதை எடுத்துக் கொண்டேன். ஒரு ஸ்வீட் கொடு, அரை வாழைப்பழம் என்று நான் கெஞ்சவே இல்லை. வத்தக் குழம்பு வேண்டுமென்று பிடிவாதம் பிடிவாதம் பிடிக்கவில்லை. எவ்வித உணர்விற்கும் அடிமையில்லாத ஒரு தெளிவான வாழ்க்கை. எழுத எழுத எனக்குள் ஏற்பட்டுவிட்டது. எழுத்து மட்டுமல்ல. நல்ல சங்கீதமும் இப்படிப்பட்ட குணத்தைத் தரும் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படி குணக்குன்றாக வாழ்ந்தவரை கவனித்திருக்கிறேன்.

திரைக் கலைஞர்கள் நிறையபேர் சந்தோஷமாகப் பேசுவார்கள். ஓவியர்கள் நிறையபேர் மௌனமாக இருப்பார்கள். நடிகர்கள் மற்றவர்களைக் கவனிப்பதில் சூரர்கள். கவிஞர்கள் இயற்கையை கவனிப்பதில் வல்லவர்கள். நடனமாடுபவர்கள் தங்கள் இருப்புபற்றி, தங்களுடைய அமைப்புபற்றி மிகுந்த கவனத்தோடு இருப்பார்கள். ஒவ்வொரு நடையையும் முழு நினைவோடு எடுத்து வைப்பார்கள். நடனம் ஒரு தாளகதிக்கு கட்டுப்பட்டே இருக்கும். இவையெல்லாம் சொந்த வாழ்க்கையை சீர்படுத்த உதவும்.

எல்லா கலைஞர்களும் இப்படி உன்னதமான நிலைக்கு வந்துவிடுகிறார்களா. கலைகளில் தேர்ச்சி பெற்றாலும் சீர்குலைந்து போனவர்கள் இல்லையா.

இருக்கிறார்கள். கலைகளை தன் வியக்திக்கு, தன் முன்னேற்றத்திற்கு பிறருடைய வளர்ச்சிக்கு, பிறருடைய அமைதிக்கு என்று தெரியாது அதை வியாபாரமாக மாற்ற முற்படுகிறபோது, கையில் தந்திரம் செய்கிறபோது மற்றவரை ஈர்ப்பதற்கு என்னவெல்லாம் ஆடலாம் என்று கணக்குப் போட்டு புத்திசாலித்தனத்தை முன் வைக்கிற பொழுது வியாபாரம் கொடிகட்டிப் பறக்கும். விற்றலும், வாங்கலும் நிகழும். விற்றலும் வாங்கலும் நிகழ்ந்துவிட்டால், கலைகள் அதில் சிக்கிவிட்டால் கோபமும், குரூரமும்தான் அதில் கடைசியாக எஞ்சும். ஏனெனில் நீங்கள் தந்திரம் செய்தால் உங்களுக்கு எதிரே இருப்பவர் உங்களைவிட பல மடங்கு வேகமாக தந்திரங்கள் செய்வார். அப்போது அந்த தந்திரங்களுக்கு முன்னால் தோற்றுப் போய்விட்டு நீங்கள் குமுறுவீர்கள். கொந்தளிப்பீர்கள். எவர் எளியவரோ அவரை நீங்கள் வறுத்தெடுத்து வாட்டுவீர்கள். உங்கள் நிம்மதியும், உங்களை சுற்றியுள்ளோர் நிம்மதியும் முற்றிலும் கலைந்து போகும். அப்போது கலை கைவசம் இருப்பினும் உங்களை நீங்களே கீறிக் கொள்கின்ற ஆயுதமாகத்தான் இருக்கும்.

கலைகளை சரியாகப் பயன்படுத்தினால் நீங்கள் சாதாரண மனிதர் என்ற எண்ணத்திலிருந்து வெகு நிச்சயம் உயர்ந்து வருவீர்கள். உங்களைப்பற்றிய நல்ல அபிப்ராயம், உங்களைப்பற்றி ஒரு சந்தோஷம் உங்களுக்கு நிச்சயம் தோன்றும். தன்னைப்பற்றி தானே சந்தோஷப்படுவதென்பது எல்லோருக்கும் நிகழக்கூடியதா.



இங்குள்ள மனிதர்கள் எல்லோரும் தங்களைப்பற்றி தெரிந்து கொண்டு, துக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள் எவர் கலையோடு சேர்ந்திருக்கிறாரோ தன்னுடைய வாழ்வுபற்றியும், தன்னுடைய மனோநிலைபற்றியும் மிகப்பெரிய நிம்மதியும், திருப்தியும், சந்தோஷமும் இருக்கும்.

எந்த வகையில் கலை உங்களை பக்குவப்படுத்துகிறது. என்பதையும் இன்னொரு விதமாகச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்குத் தெரிந்து ஒரு பெண்மணி மிக நன்றாக வயலின் வாசிப்பாள். கச்சேரிகளில் பக்கவாத்யமாக சோபிப்பார். வீட்டில் தனியே உட்கார்ந்து ஒரு முழுநேரக் கச்சேரியை வயலினில் நிகழ்த்துவார். அவருக்கென்று அப்போது ஒரு சிறிய சபைகூட ஏற்படும். அந்த அம்மையாரிடம் நான் கேட்டேன்.

"இந்த வயலின் உங்களுக்கு என்னவாக உதவி செய்தது. உங்களை எப்படி வளப்படுத்தியது" என்று விசாரித்தேன்.

அவர் பதில்கள் மிகத் தெளிவாக இருந்தன.

இங்க வீடு வாங்கலாமா, வேண்டாமா. விலை அதிகமா குறைவா. எனக்குத் தாக்குமா தாங்காதா. அந்த இடத்திற்கு குடிபோனால் நல்லதா, நல்லதில்லையா என்று பல்வேறு கேள்விகள் என்னுள் இருந்தன. இதை முடிவு செய்ய வேண்டியது நானாக இருந்தது. என் தலையில் வந்து விழுந்தது. நீ போகலாம் என்றால் போகலாம் என்று என் கணவர் பச்சைக்கொடி காட்டிவிட்டார். இப்போது நான் வாய்திறந்து சரி, இல்லை என்று சொல்ல வேண்டும். எனக்கு உடனே சொல்ல முடியவில்லை. நான் எவரையும் எதிரே வைத்துக் கொள்ளாமல் என் வீட்டு மேல்மாடியில் கூரைபோட்ட இடத்தில் அமர்ந்து கொண்டு காலை ஒரு மணிநேரம், மாலை ஒரு மணிநேரம் வயலின் வாசித்தேன். வயலின் வாசிக்கும்பொழுது இந்த விஷயத்தைப்பற்றி பல்வேறு கோணங்களில் தெளிவாக யோசித்தேன். மூன்றாம் நாள் வாசிக்கும்போது வயலின் எனக்கு அந்த வீட்டை வாங்கலாம் என்று சொல்லியது.

நீங்கள் கேள்வி கேட்டதால் மேலும் பதில் சொல்கிறேன்.

எனக்கு வயிற்று வலி. எதனால் வயிற்றுவலி. ஏன் உள்ளுக்குள்ளே ஒரு தொந்தரவு. இது உணவா. வேறு ஏதாவதா

என்று கேள்வி எழுந்தது. டாக்டரிடம் போவதற்கு முன்பு நான் வயலின் எடுத்துக்கொண்டு அரைமணிநேரம் வாசித்தேன். எதனால் வயிற்றுவலி என்பது எனக்குத் தெரிந்துவிட்டது. நானே கைவைத்தியமாய் ஒன்று செய்ய மறுநாளே குணமாயிற்று.

அவர் சொன்னதின் அர்த்தம் எனக்குப் புரிந்தது. ஒரு கலை ஒரு மனிதரை ஆழ்ந்து அமைதியாய் உள்ளுக்குள்ளே மூழ்கி யோசிக்க வைக்க உதவுகிறது. யோசிக்கிறபோது தெளிவான முடிவுகள் எடுப்பதற்கு எளிதாகிறது. மேம்போக்காக யோசிக்கிறவர்கள்தான் திரும்பத் திரும்ப தவறான முடிவுகளுக்குப்போய் குழம்பித் தவிப்பார்கள். ஆழ்ந்து யோசிக்கும் சுபாவம் கலைகளை மேற்கொண்டவருக்கு எளிதில் கிடைக்கும். இதற்காகவே ஒரு மனிதர் கலைகளில் முழுவதுமாக ஈடுபட வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

வாரப்பத்திரிகையில் படங்கள் எழுதும் ஓவியர். அவர் அறைக்கு நான் அடிக்கடி போவது வழக்கம். அவர் தியானம் செய்வதை பழக்கமாக வைத்துக் கொண்டிருந்தார். எனக்கும் அந்த விஷயத்தோடு தொடர்பு இருந்தது. வாரப் பத்திரிகையில் கேட்டதற்கிணங்க படம் போடுவது தவிர, தன்னுடைய ஓவியத் திறனை வெவ்வேறு விதமாகவும் அவர் வளர்த்துக் கொள்ள முயற்சி செய்தார். எந்தப் பத்திரிகைக்கும் உட்படாத படங்களை அவர் வர்ண ஓவியங்களாகத் தீட்டினார். அவை நல்ல விலைக்குப் போயின.

ஒருநாள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஒரு ஓவியத்திற்கு தலைப்பு சொல் என்று கேட்டார். நான் தியானம் என்று சொன்னேன். நன்றாக இருக்கிறது மிக அற்புதமான தலைப்பு என்று பரவசப்பட்டார். இரண்டு நாள் மறுபடியும் தொடர்பு கொண்டு தியானம் வரைந்திருக்கிறேன் வாருங்கள் என்றார். நான் போய்ப்பார்த்தேன். போகும்போது தியானம் என்பது என்ன யோசித்தபடியே சென்றேன். நான் என்ன யோசித்திருந்தேனோ அதில் எழுபத்தைந்து சதவீதம் அவருடைய ஓவியத்தில் இருந்தது.

நான் தியானம் செய்யும்போது என்னவெல்லாம் காட்சியாக அல்லது மனோ நிலையாக இருக்குமோ, அவையெல்லாம் அவரிடமும் இருந்தது. எனக்குத் தோன்றாத சில விஷயங்களும் அதில் இருந்தன. அதைச் சுட்டிக் காட்டினேன். ஆமாம், இவை



எனக்குத் தோன்றவில்லை. வரைந்த பிறகு பிற்பாடு சேர்த்தால் நன்றாக இருக்குமோ என்று சேர்த்தேன் என்று சொன்னார்.

ஓவியம் ஆழ்ந்து வரையும்போது உண்மையாய் சிந்திக்க வைக்கிறது. உண்மையாக இருத்தல் என்பது மிகப்பெரிய பலம். பொய்மை கலப்பு வந்துவிடும் என்றாலும் பிற்பாடு மெல்ல மெல்ல பொய்யற்ற உண்மையை ஓவியம் நிச்சயம் கொடுக்கும்.

எனக்கு எதுவுமே தெரியலை. இனிமே கத்துக்கற மாதிரியான வசதியும் இல்லை. நான் கலைகளில் இதற்கப்பால் ஈடுபட முடியுமா. நான் என்ன செய்வது என்று எவரேனும் கேட்டால் அதற்கும் பதில் இருக்கிறது.

கலைகளில் முழுவதுமாக ஈடுபட வேண்டாம். கலைஞரோடு நெருங்கிய தொடர்பில் இருங்கள் அல்லது கலைகளை ரசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். ஓவியக் கண்காட்சிக்குப் போங்கள். புகைப்பட கண்காட்சியைப் பாருங்கள். உற்று உற்று கவனியுங்கள்.

நீங்கள் ஓவியம் வரையவோ, புகைப்படம் எடுக்கவோ அவசியமில்லை. அந்த புகைப்படக்காரன் என்ன செய்திருக்கிறான். இந்த ஓவியன் தன்னை எப்படி வெளிப்படுத்தியிருக்கிறான் என்று உங்களை முன்வைத்துப் பாருங்கள். அந்த மனிதனின் மனோநிலை உங்களுக்குள் ஏற்படும். அது உங்களை உற்சாகப்படுத்தும். வேறு ஒரு உலகிற்கு அழைத்துப் போகும்.

நல்ல கதைகளை படிக்கிறபொழுது உங்கள் சிந்தனையை அந்தக் கதை தூண்டுகிறது. உங்களை சரியானபடி யோசிக்க வைக்கிறது. முடிவுகள் எடுக்கின்ற தீர்க்கத்தை, வல்லமையை அந்த நல்ல நாவல்கள் கொடுக்கும். நல்ல நாவல்களால் யோசிக்கக் கற்ற பலபேர்களை நான் நன்கு அறிவேன். நாவல்கள் தொடர்பாலேயே தன் வாழ்க்கையை சீராக்கிக் கொண்ட மனிதர்களையும் எனக்குத் தெரியும்.

பாட்டு சுகம் தருவது. மனதை மென்மையாக்குவது. துன்பத்தை எளிதில் மறக்க வைப்பது. மற்றவரை மகிழ வைப்பது. எனவே, பாட்டு பாடவேண்டாம். பாட்டு கேட்டால் போதும். மனம் மென்மையாகும். லகுவாகும். மற்றவரை காயப்படுத்துகின்ற எண்ணங்கள் விரைவாக அகலும். உங்களை நல்லவர் என்று பலபேர் அழைக்க இசையே காரணமாகும்.

கலைகளற்ற வாழ்க்கை மிருக வாழ்க்கை என்பதுதான் என்னுடைய அபிப்ராயம். எதுவும் தெரியாது வெறுமே உண்டு, தூங்கி, மலம் கழித்து, பிறர் மனம் கடித்து வாழ்வதைவிட மரணிப்பது உத்தமம். வாழ்க்கை தனக்கு உபயோகமாகவும், மற்றவருக்கு சந்துஷ்டியாகவும் மாற்றிக் கொண்டு வாழும் வாழ்க்கையே உன்னதமானது. அவர்களைத்தான் உலகம் கொண்டாடுகிறது.

என் தாத்தா நல்ல இசை ரசிகர். வீட்ல ஏகப்பட்ட இசைத் தட்டுகள் சேர்த்து வச்சுருக்கார். ராகம் ஆரம்பிச்சவுடனேயே அது இன்னதுன்னு சொல்வார். ஆனா, பாடமாட்டார். அந்தப் பாட்டு அவர்கிட்டேயிருந்து எங்கிட்ட வந்துடுத்து நினைக்கறேன். நான் நன்னா பாடறதுக்குக் காரணம் என் தாத்தா என்று உங்கள் பேத்தி உங்களுடைய இசையை தோளில் தூக்கிக்கொண்டு போகலாம். உங்களின் அடுத்த தலைமுறைக்கு நீங்கள் அந்த கலையின் வியக்தியை, அதனுடைய உன்னதத்தை கைமாற்றிக் கொடுக்கலாம். அது உங்களுக்குள் இருந்ததைவிட மிகச் சிறப்பான முறையில் உங்கள் மகனுக்கோ, உங்கள் பேரனுக்கோ, உங்கள் பெயர்த்திக்கோ வந்து உதவி செய்யும். நீங்கள் நட்ட ஆலமரம் பெரிதாய் விழுதுகளோடு உங்கள் பேரன் பக்கத்தில் வளரும். அங்கு பேரனும், அவன் குடும்பமும் இளைப்பாறும். உங்கள் தலைமுறையை நீங்கள் வளர்ப்பதைவிட மிக உன்னதமான உங்களுக்கு உண்டா. அதைவிட மிகப்பெரிய செயல் நீங்கள் செய்ய வேண்டுமா. அதுதான் பூரணமான வாழ்க்கை அல்லவா.

மனிதனின் நாகரீகம் மொழி. மொழியின் நாகரீகம் கலை. கவிதையும், கதையும், இசையும், நாட்டியமும், மொழியின் வளத்தால் வளர்ந்தவை. நாகரீகத்தின் உச்சாணிக் கிளையில் அமர்ந்திருப்பவை. இந்தச் சமூகம் மிகச்சிறந்த கிளையில் அமர்ந்திருப்பவை. இந்தச் சமூகம் மிகச்சிறந்த சமூகம் என்பதை எப்படிச் சொல்வது. அது வெளிப்படுத்தியிருக்கும் படைப்புகளை வைத்துத்தான் சொல்ல முடியும்.

தமிழ்ச் சமூகம் மிக நாகரீகமானது என்பதை அந்தப் படைப்புகள் சொல்லும். அது தொடர்ந்து நடக்க நாம் முயற்சிக்க வேண்டும்.



# 41

படிக்கின்ற வாசகர்களில் எத்தனை பேர் திருமணமானவர்கள். திருமணமாகாத வாசகர்கள் கூட இந்தக் கட்டுரையைப் படிக்கிறார்களே. ஆமெனில், எதற்காக குழந்தை வளர்ப்பு பற்றி அவர்களுக்கு பேசப்பட வேண்டும் என்ற கேள்வி எழலாம்.

திருமணம் ஆனவர்களோ, ஆகாதவர்களோ அது முக்கியமல்ல. திருமணம் ஆவதற்கு முன்பாகவே ஆணோ, பெண்ணோ தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் குழந்தை வளர்ப்பு, அடுத்த தலைமுறை பேணுதல் என்பதுதான் குழந்தை வளர்ப்பு. தான் வளர்ந்த விதம்பற்றி யோசித்து அதிலுள்ள குறைகளைக் களைந்து நிறைகளை அதிகமாக்கி வாழ்வதுதான் குழந்தை வளர்ப்பு. அடுத்த தலைமுறையைப் பற்றி அக்கறைப்படாமல் யாரும் வாழ்ந்துவிட முடியாது. இன்று நீங்கள் சிறப்பாக வாழ்வதே அடுத்த தலை முறையை இன்னும் சிறப்பாக பேண வேண்டும் என்பதற்காகத் தான். இன்று நீங்கள் பல்வேறு மோசமான விஷயங்கள் ஒழிய வேண்டும் என்று போராடுவதே அடுத்த தலைமுறை இந்த மோசமான விஷயங்களில் சிக்கிவிடக் கூடாது என்பதற்குத்தான். அதுவும் தவிர அடுத்த தலைமுறையை செழிப்பாக வளர்ப்பது மனதிற்கு மிக சந்தோஷமான விஷயம். அப்படி வளர்ந்த தலைமுறை தன் முயற்சியாலும் செழித்து நிற்பதைப் பார்க்கும் போது மிகப் பெரிய திருப்தியும், ஆனந்தமும் ஏற்படும். நம்மைவிட அவர்கள் கெட்டிக்காரர்களாக இருப்பதை கண்டுபிடிக்கும்போது, நம்மைவிட அவர்கள் ஆரோக்கியமாக இருப்பதை காணும் போது நாம் திகைப்பில் ஆழ்வோம். அதிலொரு மனநிறைவிருக்கும்.

நான் ஒருவேளை உணவுக்கே என் வாழ்க்கையில் கஷ்டப் பட்டேன். என் பிள்ளைகள் மூன்று வேளை நன்றாக சாப்பிடு கிறார்கள். என் பேரக் குழந்தைகள் எது வேண்டுமோ அதை வேண்டுகிற நேரத்தில் கிடைக்கப்பெற்று உண்கிறார்கள் என்று ஒரு வயதானவர் நினைக்கிறார் என்றால் அந்த சமூகம் வளர்ந்திருக் கிறது என்றுதானே அர்த்தம். உற்று கவனித்தால் வாழ்க்கை வளர்ந்திருப்பதை நிச்சயம் காணலாம்.

ஆற்று மணலாக இருக்கும் பாலாற்றை கோடை வெயிலில் தாண்டுகிற பொழுது கைக்குழந்தையோடு நடந்த பெண்மணி கால்சூடு பொறுக்க முடியாமல் கைக்குழந்தையை ஆற்று மணலில் போட்டுவிட்டு அதன்மீது ஏறி நின்று கொண்டாளாம். இப்படியொரு விஷயம் சொல்லக் கேள்விப்பட்டதுண்டு. பத்து ரூபாய் பெறுமானமுள்ள ரப்பர் செருப்பு அவளுக்கு மறுக்கப்பட்டதின் விளைவு இது. வறுமையோ, சமூக அநீதியோ எது காரணமாக இருந்தாலும் ஒரு பிஞ்சு உயிர் சாவதற்கும், ஒரு தாயின் உள்ளம் துடிப்பதற்கும் இந்தச் சமூகம் காரணமாக இருந்து விட்டது.

இன்றைக்கு இந்த நிலை நடக்குமா. அத்தனை குழந்தைகளும் காலில் செருப்பும், தோளில் பையுமாக போவதைப் பார்க்கும் போது நாம் வெகுவாக முன்னேறியிருக்கிறோம் என்று தோன்றுகிறது. உழைக்கின்ற வர்க்கம் அத்தனை பேரும் பாதுகாப்பான விஷயங்களோடு நடமாடுவதை பார்க்கும்போது சந்தோஷமாக இருக்கிறது.

தலைக்கு தொப்பி, கண்ணுக்கு கறுப்பு கண்ணாடி, கைகளுக்கு தோலுறை, கால்களில் கனத்த காலணி, மார்புக் கவசம் என்பதாய் கடும் வேலை செய்பவர்கள்கூட உத்தரவாதத்துடன் வேலை செய்கிறார்கள். முன்பு தொழிலாளி வர்க்கம் நெருப்பிலும், சேற்றிலும், மழையிலும், வெய்யிலிலும் அவதிப்பட்டுக் கொண்டிருந்த காலம் ஒன்று உண்டு.

இதையும் விட பெரியமாற்றம் உலகத்தில் ஏற்பட்டது ஞாயிறு விடுமுறை என்பது. விடுமுறை என்பது இல்லாது எல்லா நாட்களிலும் வேலை. பண்டிகை நாட்களில் கூடுதல் வேலை என்று ஒரு குறிப்பிட்ட வர்க்கம் வேதனைப்பட்டு துடித்துக் கொண்டிருந்தது. வெளியே சொல்ல முடியாமல் குமுறிக் கொண்டிருந்தது. ஆனால், ஐரோப்பாவில் ஏற்பட்ட இந்த மாற்றம் உலகம் முழுவதும் பரவி கம்யூனிச நாடுகளால் உயரத் தாக்கப்பட்டு இன்று உலகின் ஒவ்வொரு பகுதியிலும் ஞாயிறன்று விடுமுறை அல்லது வாரத்தில் ஒருநாள் விடுமுறை என்ற நியதி வந்து விட்டது. இது உழைப்பவர்களுக்கு மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வாய்ப்பு.

மனிதகுலம் தன்னைத்தானே சரிசெய்து கொண்ட ஒரு உற்சாகமான விஷயம். மக்களில் ஒரு பகுதியினர் அடிமையாய் வாழ்ந்தது ஒழிந்து போயிற்று. இந்த வளர்ச்சி, இந்த சமூக நியதியின் நல்ல மாறுபாடுகள் குழந்தை வளர்ப்பால் ஏற்படுவன. நல்ல குழந்தைகள்தான் நல்ல மனிதர்கள். நல்ல மனிதர்கள்தான் சிறந்த தலைவர்கள். சிறந்த தலைவர்களால்தான் உரிமைகள் கோரப்பட்டு நல்ல விதிமுறைகள் ஏற்படுகின்றன. மக்கள் விடுதலையோடும் ஆரோக்கியத்தோடும் வாழ ஆரம்பிக்கிறார்கள். அதுமட்டுமல்ல. கணவனுக்கு மனைவியை அடிக்க உரிமையுண்டு என்ற காலம் இருந்தது. இப்போது அது இல்லை. ஆணும், பெண்ணும் சமம் என்பது தெள்ளத்தெளிவாக நிரூபணமாகியிருக்கிறது. மீறி கை ஓங்கினால் தலைமயிரைப் பிடித்து காவல் நிலையத்திற்கு ஆண் அழைத்துச் செல்லப்படுவான். கடுமையாக தண்டிக்கப்படுவான். அதற்குண்டான வசதிகள் இப்போது வந்து விட்டன. அந்தத் தாய் தன் குழந்தையை எப்படி வளர்ப்பாள். அந்தப் பாதுகாப்பு இருக்கின்ற பெண்மணி தன் குழந்தையை எப்படி நேசிப்பாள். அவளால் தன் மகனுக்கும், மகளுக்கும் வாழ்க்கையின் சிறப்புகளை இன்னும் பயமின்றி தெளிவாகச் சொல்லித்தர முடியுமல்லவா. அந்தக் குழந்தைகள் தாயைவிட உறுதியோடும் பலத்தோடும், தெளிவாக வாழ்வார்கள் அல்லவா.



நல்ல தலைமுறை வேண்டும் என்று சிந்தித்ததின் விளைவுதான் இந்த மாற்றங்கள். இந்த மாற்றங்களால் நல்ல தலைமுறை வந்து விட்டது.

போன தலைமுறைபோல சுகமாக இல்லையே என்று புலம்புபவர்கள் உண்டு.

நான் இதை ஏற்கமாட்டேன். முப்பது வயதுதான் என்பது இந்தியக் குடிமகள்களின் போன நூற்றாண்டு ஆயுள் வரைபடும். இப்போது அறுபது வயது என்று மாறியிருக்கிறது. அதற்கு எல்லோருக்கும் நல்ல உணவு கிடைப்பதும், மருத்துவ வசதி கிடைப்பதும் இறப்பு எண்ணிக்கை தள்ளிப்போயிருப்பதும் காரணம். ஆனாலும், இன்னும் மாறவேண்டும் வறுமைக் கோட்டிற்கு கீழ் இருப்பவர்கள் ஒருவர்கூட இல்லை என்ற நிலை ஏற்படவேண்டும். அதற்கு பலமான தலைமுறை வேண்டும். இந்த பலமான தலைமுறைக்கு சிறந்த தாய்மார்களும், தந்தையரும் தேவை. எனவே, இன்றைய இளைஞர்கள் திருமணம் ஆனவர்களோ அல்லது இப்பொழுதுதான் ஆனவர்களோ

உடனடியாக குழந்தை வளர்ப்பு என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டும்.

குழந்தை வளர்ப்பின் முதல் விஷயம் என்ன என்று யோசித்தால் உடனடியாக நினைவுக்கு வருவது எந்தக் காரணம் கொண்டும் குழந்தைகளை அடிக்கக் கூடாது. அடியாத மாடு படியாது என்பது மாட்டிற்குத்தான். தவிர மனிதர்களுக்கு அல்ல. மனிதர்களிடம் பேசலாம். பேசிப் புரியவைக்கலாம். இன்னும் புரியாது போனால் அதட்டலாம். அதட்டியும் புரியாது போனால் மெல்ல நைச்சியமாக சில உதவிகள் செய்வதாகச் சொல்லலாம். அப்படியும் முடியாது போனால்தான் மெல்ல பயமுறுத்தும் விதமாக சில அடிகள் தரலாம். சாம, தான, பேத, தண்டம் என்றுதான் சொல்லப் பட்டிருக்கிறது.

நம்முடைய கோபத்தையெல்லாம் குழந்தையிடம் ஒருதாய் காட்டினால் அந்தத் தாய் மனநோய் பட்டிருக்கிறாள் என்று அர்த்தம். ஒரு தாய்க்கு மனநோய் யாரால் ஏற்படும். கணவனால் தான் அதிகம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. கூட ஒரு துணை நின்றுவிட்டால், கணவன் என்பவன் உறுதியான நண்பனாக நின்றுவிட்டால், எதுகுறித்தும் பயப்படத் தேவையில்லாத ஒரு ஆதரவாக இருக்கிறான் என்பது புரிந்துவிட்டால் அந்த மனைவி நல்ல தாயாக இருப்பாள்.

மனைவி என்பவள் அடக்கி வைக்கத் தகுந்தவள். மனைவி என்பவள் அதட்டுவதற்காகவே இருப்பவள். மனைவி என்பவள் அடிமையாகவே வாழவே வந்திருக்கிறாள் என்ற எண்ணம் மெல்ல மெல்ல ஒழிந்து வருகிறது. ஆணாதிக்கம் என்பது ஆட்டம் கண்டு குறைந்து வருகிறது.

பொருளாதாரம் பற்றிய பெரும் குறையில்லாமை கணவனைக் கண்டு அஞ்சி நடுங்காமை, உற்றார் உறவினர்களுக்கு மன அவசத்தோடு பணிந்து போகாமை போன்றவை ஒரு பெண்ணுக்கு இருப்பின் அந்தப் பெண் மிகச்சிறந்த தாயாக விளங்குவாள் என்பதில் ஐயமில்லை.

''தோசையம்மா தோசை நெய்யில் சுட்ட தோசை
அப்பாவுக்கு நான்கு அண்ணனுக்கு மூன்று
அக்காளுக்கு ரெண்டு தம்பிக்கு ஒன்று''



என்று தட்டில் தோசை போடப்படும். எந்தக் குழந்தையேனும் எழுந்து நின்று ''ஏன் அப்பனுக்கு நாலு தோசை'' என்று கேட்காது. அப்படிக் கேட்டால் அந்தத் தாய் மிக நிதானமாக பதில் சொல்வாள்.

உங்கப்பா கடுமையாக உழைக்கிறார் அல்லவா. நமக்கெல்லாம் சட்டைத் துணி வாங்குகிறார் அல்லவா. இந்த வீட்டை பராமரிக்கிறார் அல்லவா. உனது படிப்புகளுக்கு செலவு செய்கிறார் அல்லவா. அதனால் அப்பாவுக்கு கூடுதலான தோசை. அண்ணன் நாளைக்கு நன்கு படித்து பெரிய உத்யோகத்திற்குப் போய் உன் படிப்புக்கு உதவி செய்வான். அக்காளுக்கு திருமணம் செய்ய வேண்டும். அவள் அழகியாக வாழ வேண்டும். அதுதான் நமக்கு பெருமை என்று விதம்விதமாக தாய் சொல்லுவாள்.

அப்பனுக்கு நாலுன்னா கேட்ட. இந்தா ஒரு சூடு வாங்கிக்கோ என்று தொடையில் தோசைக் கரண்டியால் சூடு போட மாட்டாள். போட்டால் அவள் தாய் அல்ல.

குழந்தைகளை அடிக்காது இருந்தால் மட்டும் போதுமா. அடம் பிடிக்கிற குழந்தைகளை என்ன செய்வது.

பேசித் திருத்தலாம்.

பேசினாலும் புரியவில்லையே.

கதை சொல்லலாம்.

என்ன கதை சொல்வது.

ஒரு ஊரில் தசரதர்... தசரதர் என்றொரு ராஜா இருந்தார் என்று கதையை ஆரம்பிக்கலாம் அல்லது பீமன் தனது நான்கு சகோதரர்களுடனும் தன் தாயுடனும் ஒரு கிராமத்திற்குள் வசித்து வந்தார். அந்த கிராமத்தில் ஒரு வீட்டில் உணவு அருந்தினார். அந்த வீட்டில் எல்லோரும் அழுவதுபோல் தெரிந்தது. என்ன என்று விசாரித்தபோது அந்த ஊர் கோடியில் அசுரன் இருக்கிறான். அவனுக்கு தினந்தோறும் சாப்பாடு எடுத்துப் போக வேண்டும் என்று கதையை ஆரம்பிக்கலாம். பஞ்சதந்திர கதை சொல்லலாம்.

இவர்தான் மகாத்மா காந்தி. நம்ம தேசத்துக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார்.

சுதந்திரம் என்றால் என்ன என்று குழந்தை கேட்கும்.

நாம் அன்னியரிடம் அடிமைப்பட்டுக் கிடந்தோம். வெள்ளையர்கள் நம்மை ஆண்டு கொண்டிருந்தார்கள். நம்மை கறுப்பர்கள் என்று இழிவாகப் பேசினார்கள் என்று சொல்லலாம்.

இதுதான் பெரிய கோயில் என்று சொல்லப்படும் பிரகதீஸ்வரர் கோயில். இதைக் கட்டியவன் ராஜராஜ சோழன் என்கிற அரசன். கற்களே இல்லாத சோழதேசத்தில் வெகு தொலைவிலிருந்து கற்கள் கொண்டுவந்து ஆயிரக்கணக்கானோர் வேலை செய்ய பதினோரு வருடங்களில் கட்டி முடித்தார். இதற்கு இணையான ஒரு சிற்ப வேலை உலகத்தில் எங்குமில்லை என்று பூரிக்க வைக்கலாம்.

இன்று ஆடிப்பெருக்கு விதம்விதமாக சாதங்கள் செய்திருக் கிறேன். ஆடிப்பெருக்கன்று காவிரிக் கரைக்குப்போய் உட்கார்ந்து காவிரிக் கரையில் கதைகள் பேசி இந்த உணவுகள் சாப்பிடுவோம் என்று சொல்லலாம்.

எங்கிருக்கிறது காவிரி. எங்கிருந்து வருகிறது காவிரி. காவிரியால் நமக்கு என்ன நன்மை குழந்தைகள் கேட்க தாயும், தந்தையும் போட்டி போட்டுக் கொண்டு விவரிக்கலாம்.

அந்தக் காவிரியை, பெரிய கோயிலை மற்ற இடங்களை நேரே பார்க்கும்போது குழந்தைகள் குதூகலமடைவார்கள்.

திருச்சில இதுக்கு பேரு அகண்ட காவிரி என்று பையன் குதிப்பான். பெரிய கோயிலில், ஓவியங்கள் பார்க்கணும் தயவுசெய்து காட்டறீங்களா என்று பெண்குழந்தை காவலாளியை கெஞ்சுவாள்.

திருமகள்போல பெருநிலச் செவ்வியும்... என்று தந்தை படிக்க அவர்கள் தொடர்ந்து படிப்பார்கள். அந்த குழந்தைகளின் சரித்திர, புவியியல் அறிவு வளம் பெறும். பலம் பெறும். கெட்டிக்காரக் குழந்தைகளாக இருப்பார்கள்.

இப்பொழுது கணினி வந்துவிட்டது. தாய் சொல்லிக் கொடுத்ததை தந்தை சொல்லிக் கொடுத்தலை கணினியில் பார்த்து இன்னும் வியந்து அதன் நுணுக்கங்கள் எல்லாவற்றையும் படித்து நேரில் பார்க்கும்போது இன்னும் அளப்பரிய தெளிவு ஏற்படும். அப்படி தெளிவு பெற்ற குழந்தைகள் மிகச்சிறந்த கல்விமான்களாக, சான்றோர்களாக வளர்வதற்கு வாய்ப்பிருக்கிறது. சான்றோர் களால்தான் உலகை நல்வழிக்கு கொண்டு வரமுடியும்.



இன்னும் குழந்தை வளர்ப்பில் என்னவெல்லாம் முக்கியம்...

சொல்கிறேன்...

## 42

**கு**ழந்தையை அடிக்காமல் இருந்தால் மட்டும் போதாது. குழந்தைகளோடு பேச வேண்டும். ஒரு சித்திரக் கதையை எடுத்துக் கொள்ள வேண்டும். குழந்தையை மடியில் அமர்த்திக் கொண்டு ஒவ்வொரு கட்டமாக நீங்கள் கதை சொல்லிக் கொண்டு போக வேண்டும். குழந்தைக்கு இன்னும் மொழி வரி வடிவங்கள் புரியாதிருக்கலாம். ஆனால், கதை புரியும்.

ஒரு ஊரில் ஒரு ராஜா என்றோ... ஸ்பைடர் மேன்... என்றோ சுட்டி என்றோ நீங்கள் கதை சொல்லலாம். அதற்குப் பிறகு அந்தக் குழந்தை அந்தக் கதையை எடுத்து வைத்துக் கொண்டு நீங்கள் சொன்னது போலவே தனக்குள்ளே தானே சொல்லிக் கொண்டிருக்கும். இதுதான் மிக முக்கியம். மொழி அதற்கு அப்போது பிடிபட்டுவிடும். நீங்கள் சொன்னதைவிட மிக அழகாக இன்னும் பாவனையோடு அந்தக் குழந்தை, அந்தக் கதையை தனக்குள் சொல்லிக் கொள்ளலாம். இது அந்தக் குழந்தையின் கற்பனைத் திறனை வளர்விக்கும். குழந்தையின் கற்பனைத்திறன் வளர குழந்தை புத்திக் கூர்மையுடையதாகிறது.

கதை சொன்னால் மட்டும் போதுமா.

இல்லை. குழந்தையோடு பாட்டுப்பாட வேண்டும். அது தேவார திருவாசகமாகத்தான் இருக்க வேண்டும். நாலாயிர திவ்ய பிரபந்தமாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. முருகா என்று அழைக்கவா என்று பாட வேண்டுமென்ற கட்டாய மில்லை. மாறாய்... அவளுக்கென்ன அழகிய முகம்... அவனுக் கென்ன இளகிய மனம்... என்று சினிமாப் பாட்டு பாடலாம். நீங்கள் பாடுகிற பாட்டுக்கு குழந்தை எழுந்து ஆடத் துவங்கினால் அந்தப் பாட்டு குழந்தையின் மனதில் பதிந்துவிட்டது என்று

அர்த்தம். குழந்தை அந்தப் பாட்டை அனுபவிக்கிறது என்று அர்த்தம்.

சினிமாப் பாட்டா... அல்லது சிந்திக்க வைக்கிற பாட்டா... என்பதெல்லாம் முக்கியமல்ல. பாட்டு அதுதான் முக்கியம். பாட்டினால் வெளிப்படும் சந்தோஷம் முக்கியம். மன நெகிழ்வும் மனதினுடைய மெல்லிய தன்மையும் காரணம்... கோப மில்லாமல், அசூயை இல்லாமல், ஆத்திரம் இல்லாமல் வளர் வதற்கு குழந்தைகளுக்கு இம்மாதிரியான பாட்டுக்கள் உதவும். அது மட்டுமல்ல. குழந்தைகளை ஆடக்கூட உற்சாகப்படுத்தலாம்.

தொலைக்காட்சிப் பெட்டியில் அந்தப் பையன் ஆடுவதை பார்க்கச் சொல்லலாம் அல்லது ஒரு குறிப்பிட்ட பாடல் காட்சியை பதிவு செய்து கொண்டு எப்படி பிரபுதேவா ஆடுகிறார் பார் என்று அதை மனனம் பயிலச் சொல்லலாம். அந்தக் குழந்தை வேறு எங்கேனும் ஒரு இடத்தில் நண்பர்களுக்கு மத்தியில் அல்லது பள்ளிக்கூடத்தில் ஏதாவது விட்டேத்திப் பொழுதில் அவன் அந்தப் பாடலை ஆடிக் காண்பித்தால் கைதட்டல் பீய்த்துக் கொண்டு போகும். பலபேர் கைதட்ட அனுபவித்த குழந்தை மிகக் கம்பீர மாக உற்சாகமாக இன்னும் முன்னேற வேண்டும் என்ற எண்ணத் தோடு வளரும். முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தோடு வளரும்.

ஆடலும் பாடலும் எதற்கு. படி... படி... என்று வெறுமே எகிறிக் கொண்டிருக்கிற தந்தையும், தாயும், "ஆட்டம் பாட்டம் மட்டும்தான் முக்கியமா. டிஸ்கவரி சேனலில் உட்கார்ந்து கொண்டு ஆங்கிலத்தில் வெளியாகின்ற அந்த விஷயத்தை அவனுக்கு தமிழில் மொழிபெயர்த்துச் சொல்லலாம். அறுபத் தைந்து அடி நீளம், எடை பத்து டன்... மற்ற மீன்களை விழுங்கிச் சாப்பிடும். இதன் வாய் திறந்தால் நமது வீட்டு மேற்கூரையைவிட பெரிதாக இருக்கும். அந்த வாய்க்குள் நெருக்கியடித்துக் கொண்டு முப்பது பேர் நிற்கலாம் என்று சொன்னால் குழந்தை அந்த விஷயத்தை புரிந்து கொள்வான். பிற்பாடு அந்தத் திமிங்கலம் பற்றி அதிகம் படிக்க அவனுக்கு ஆர்வம் ஏற்படும். ஏன், கடல்கள் பற்றியும் அவன் அறிந்து கொள்கின்ற விஞ்ஞானியாக அவன் மாறலாம். அதற்கடுத்து நீங்கள் அவனுக்குக் காட்டிக் கொடுக்கும் டிஸ்கவரி சேனலாக இருக்கலாம்.



குழந்தைகளுக்காக குழந்தைகளின் வளர்ச்சிக்கென்று உல்லாசப் பயணம் போவது மிகச் சிறந்தது.

திருவனந்தபுரம் போனால் பத்மநாப சுவாமியின் சந்நதியில் சுவாமி கும்பிடலாம் என்று உங்களைப்பற்றி நினைக்காமல் அங்கு மிகப்பெரிய மிருககாட்சி சாலை இருக்கிறது. குழந்தைகளுக்கு அதைக் காட்டலாம் என்று சொல்லுங்கள். சற்று தள்ளிப்போனால் ஆலப்புழையில் மிகப்பெரிய ஏரி இருக்கிறது. அங்கு படகு வீடுகளில் பயணம் செய்யலாம்.

நதியில் முகத்துவாரத்தின் அருகேபோய் பிறகு கடலில் கடக்கலாம். சூரிய உதயம் காட்டலாம். அஸ்தமனத்தை கவனிக்கச் சொல்லலாம். இரண்டு பக்கமும் தென்னைகள் அடர்ந் திருக்க அதற்கு நடுவே... பண்ண வைக்கலாம். உங்களைவிட வியப்புகளோடு அந்தக் காட்சிகளை குழந்தைகள் உள்வாங்கிக் கொள்வார்கள்.

வெறும் உல்லாசப் பயணம் மட்டும்தானா.

இல்லை. கொஞ்சம் வளர்ந்த குழந்தைகளாக இருந்தால் மலையேற வைக்கலாம். நதியில் நீந்தச் சொல்லலாம். ஆடுகள், மாடுகள் மேய்வதைப் பார்க்கலாம். இதுதான் வயல். இந்த வயலிலிருந்துதான் நெல் விளைகிறது. இதுதான் நெல். இந்த நெல்லில்தான் அரிசி இருக்கிறது. இந்த அரிசியைத் தான் நாம் உணவாகச் சாப்பிடுகிறோம் என்று பயிர்பச்சைகளோடு குழந்தை களுக்கு நெருக்கம் ஏற்படுத்தலாம். பெரிய தோட்டங்களுக்கு அழைத்துப்போய் மூலிகைகள் காட்டலாம்.

இது கோரை. இது அறுகம்புல். இது குப்பை மேனி. இது நாயுருவி என்று சிறிய தாவரங்களை இனம் காட்டலாம். எங்கோ மலைப்பகுதிகளில் ஆற்றங்கரை ஓரங்களில் தோளில் மெல்லிய பிரம்போடு சணல் கயிறுகளோடு வேட்டையாடப் போகலாம்.

என்ன வேட்டையாடுவது?

ஓணான், மரவட்டை, நண்டு என்று பல்வேறு ஜந்துக்களை இனம் காட்டி அவைகளைப் பிடித்து மிக அருகே உட்கார்ந்து பார்த்து பிறகு அவைகளை அப்படியே விட்டுவிடச் சொல்கின்ற கருணைக்குப் பழக்கலாம்.

பத்து வயதுக் குழந்தைகளை தியானத்திற்குப் பழக்கலாம். தியானத்திற்கு எங்கு பழக வேண்டுமோ அந்த மாதிரி அமைதியான சூழ்நிலைக்கு அழைத்துப் போகலாம்.

குழந்தைகள் செய்யும் குறும்புத் தனத்தையும் பெற்றோர்கள் ரசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். சிறிய வீட்டுக்குள்ளிருந்து பெரிய கோவில் வளாகம் போகும் போது குழந்தைகள் கண்கள் வியப்பில் விரியும். முகம் மலரும். வளாகம் முழுவதும் ஓட வேண்டுமென்று மனம் பரபரக்கும். யாரோ இரண்டு குழந்தைகள் ஓடுவதைப் பார்த்து தானும் ஓடத் துவங்கும். இழுத்துப் பிடித்து அறைவது முட்டாள்தனம். குழந்தையின் மனம் நொறுங்கிப் போகும்.

உங்களால் கோவில் வளாகம்போல் ஒரு வீடு கட்ட முடியாது. அந்த இடம் பார்த்தால் ஓடாமல் குழந்தைக்கு இருக்க முடியாது. அங்கே ஒரு அலட்டல் பக்தர் சே... என்ன தொந்தரவு என்று பம்மாத்து காட்டலாம். அந்த பம்மாத்தைப் புறக்கணியுங்கள். கொஞ்சம் ஓடி களைப்புற்றதும் குழந்தையின் மனதை மாற்றுங்கள். வீட்டில் சொன்ன கதைகளை இங்கே நினைவுபடுத்துங்கள். சில சமயம் உங்கள் குழந்தையின் கூச்சலைவிட உங்கள் அதட்டல் குரல்தான் அங்கே ஆபாசமாக ஒலிக்கும். கோவில் கோபுரத்து பொம்மையினை காண்பித்து புராணக் கதையினை நினைவு படுத்தலாம். வீட்டில் கற்றுக் கொடுத்த பக்திப் பாடல்களை இங்கே பாடச் சொல்லலாம்.

மூன்று வயதுக் குழந்தை தேவாரம், திருப்புகழ் பாடுகிறான் என்றால் அருகிலுள்ளோர் கொண்டாடுவர். அது குழந்தைக்கு சந்துஷ்டியை அளிக்கும். உங்களுக்கும் மனம் நிறையும்.

தியானத்தில் ஈடுபட்ட தகப்பனுக்கும், தாய்க்கும் குழந்தையை தியானத்தில் ஈடுபடுத்துவது எளிது. ஆரம்பத்தில் சிரிப்பும், குறும்புமாக உட்காரும் குழந்தைகள் மெல்ல மெல்ல தியானத்தில் ஈடுபாடு காட்டுவார்கள். பத்து வயதில் தொடர்பு கொண்டால் இருபது வயதில் தியானத்தில் லயித்தல் சிறப்பாக வரும்.

குழந்தை வளர்ப்புபற்றி இன்னும் ஆழ்ந்து பேச முடியும்.



# 43

குழந்தைகளுக்கு கதை சொல்வது மட்டுமல்ல. குழந்தைகளோடு பாட்டுப் பாடுவதும் ஆட்டமாடுவதும் மட்டுமல்ல. குழந்தை களோடு பயணப்படுவது மட்டுமல்ல. இரவு நேரம் குழந்தைகள் தூங்கும்போது அவர்களுக்கு அருகே படுத்துக் கொண்டோ அமர்ந்து கொண்டோ மெல்லப் பாட்டுப் பாடுவது மிகச் சிறந்த விஷயம். உறங்கும் நேரம் உங்கள் குரலை கேட்டுக் கொண்டே தான் நிம்மதியாக இருக்கிறோம். பாதுகாப்பாக இருக்கிறோம் என்கிற எண்ணத்தோடே குழந்தைகள் உறங்கப் போவார்கள் எனில் அவர்கள் உறக்கம் நன்றாக இருக்கும். நன்கு கனவுகள் இல்லாமல் ஆழ்ந்து உறங்கிய குழந்தைகள் புத்திசாலியாக இருக்கும். கூர்த்த அறிவுடையதாக இருக்கும்.

கிருஷ்ணம் வந்தே நந்தகுமாரம்

ராதா வல்லப நவநீத சோரம்

தேவகி நந்தன நந்த முகுந்தா

நந்தித முனிகன நித்யானந்தா...

என்று இரவு நேரம் என் காதோரம் என் தாயார் பாடிய பாடல்கள்தான் என்னை தெளிவாக்கி இருக்கின்றன என்று நான் நினைக்கிறேன்.

தூங்கும்போது தாய் அல்லது தந்தையின் தொடலும், குரலும் அந்தக் குழந்தையை மிக அமைதியான இடத்திற்கு அழைத்துப் போகின்றன. உடல் சோர்வு நீங்க ஆழ்ந்து அந்தக் குழந்தை உறங்குகிறது. மறுநாள் விடியும்போது அந்தத் தாயின் குரலை, தந்தையின் குரலை நினைவுப்படுத்திக் கொண்டு அம்மா என்று குரல் கொடுத்து எழுந்திருக்கிறது. அப்படி எழுந்திருக்கின்ற நேரம் மெல்ல எழுப்பி தழுவிக் கொண்டு தலைகோதி முத்தம் கொடுத்து வா... பல் தேய் என்று கைபிடித்துப் போவது அந்தக் குழந்தையின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய உதவி செய்யும்.

எழும்போதும் அரவணைப்பு, உறங்கும்போதும் அரவணைப்பு என்பது அந்தக் குழந்தையின் தூக்கத்தை ஆரோக்கியமாக மாற்றும்.

அல்லாது இரண்டு அறை வைத்து உறங்கச் செய்வதும், அதட்டி எழுப்புவதும் குழந்தையை வளப்படுத்தாது.

"அதட்டினா கூட எழுந்திருக்க மாட்டான் அப்படியொரு ராட்சச தூக்கம்" என்று மகனையோ மகளையோ குறை சொல்வீர்கள் என்றால், அந்தக் குழந்தைக்கு உறக்கம் போதவில்லை என்று அர்த்தம்.

ஆழ்ந்த உறக்கம் ஐந்து மணி நேரம் இருந்தால் போதும். எட்டு மணி நேரம், ஒன்பது மணி நேரம் தூங்குவதற்கு என்ன காரணம்.

உறக்கம் ஆழ்ந்து இல்லை.

ஆழ்ந்த உறக்கம் இல்லாததற்கு என்ன காரணம்.

பகல் நேரத்தில் சலசலப்புகள். மன சஞ்சலங்கள். வேதனைகள், முகச் சுளிப்புகள். கோபதாபங்கள் அதிகமாகி விட்டன. அதனால் தூக்கம் சிதறித் சிதறி ஒன்று கூடுகிறது. மெல்ல பாட்டுப் பாடி பாருங்கள். அரவணைத்து எழுப்பிப் பாருங்கள். அப்போது அந்தக் குழந்தையின் தூக்கம் நன்றாக இருக்கும்.

"பாட்டெல்லாம் பாடறதுக்கு எங்க ஸார் நேரம். உட்கார்ந்தா எனக்கு தூக்கம் வருது" என்று ஒருதாய் அலுத்துக் கொள்வாள் என்றால், நம்முடைய தினசரி வாழ்க்கை மோசமாகிவிட்டது என்றுதான் அர்த்தம். அப்பாவும், அம்மாவும் சம்பாதிக்கப்போய் அலுத்துக் களைத்து வந்து அதட்டி, உருட்டி சண்டையிட்டு குழந்தையை எந்த அக்கறையும் இல்லாமல் ஏனோ தானோ என்று நடத்துகிற பொழுது அந்தக் குழந்தை எப்படி உறங்கும். எப்படி விழிக்கும். அதற்கு அந்த உறக்கம் போதுமா என்ற கேள்விகளெல்லாம் எழுகின்றன. சரியாக உறங்காத குழந்தை, சரியாக உண்ணாது. சரியாக என்பதில் அதிகமாக சாப்பிடுகிற குழந்தையும் தவறு என்ற பொருள் இருக்கிறது.

நாலு பிஸ்கட்டுகளையும் முப்பது வினாடிகளில் குதப்பி உண்கின்ற குழந்தை ஆரோக்யமான குழந்தை அல்ல. அடிமனதில் அந்த பிஸ்கட்டுகள் பறிபோய்விடும் என்ற பயம் அந்தக் குழந்தைக்கு இருக்கலாம். அல்லது வேறு ஏதேனும் காரணமாக வயிற்றில் ஒரு எரிச்சலான ரசாயனக் கலவை மிதக்கலாம். அதை அடக்க அப்படி தின்ன நேரலாம். படபடப்பானவர்கள்தான் அதிகம் உண்பார்கள். அவசரமாக உண்பார்கள். குழந்தையை



இரவு நேரத்தில் அரவணைத்துப் படுக்க வைப்பதும், எழும்போது அரவணைத்துக் கொள்வதும் குழந்தையின் மனப் படபடப்பை குறைக்கும். அம்மா... என்ற சிநேகிதி, அப்பா... என்ற தோழன் எனக்கு இருக்கிற வரையில் எந்தக் கவலையும் இல்லை என்று அந்தக் குழந்தை பலம் பெறும். பலம் பெற்ற குழந்தை படிப்பிலும் மற்ற விஷயத்திலும் சிறந்திருக்கும்.

குழந்தையை ஆழ்ந்து தூங்க வைப்பதும், தழுவி எழுப்ப வைப்பதும் போதுமா.

இல்லை. குழந்தையை எது குறித்தும் அதைரியப்படுத்திவிடக் கூடாது.

வேப்ப மரத்தின் உச்சியில் நின்னு

பேய் ஒன்னு ஆடுதுன்னு

விளையாட்டாய்தான் சொல்லி வைப்பாங்க

உன் வீரத்தையே முளையில்

கிள்ளி வைப்பாங்க...

என்று ஒரு பாட்டு உண்டு. மிக விவேகமான ஒரு பாட்டு அது.

குழந்தை பூனையைத் தூக்கும்போது பூனை கீறி விடாமலும், குழந்தை பூனையை ஊனமாக்கி விடாமலும் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.

குழந்தை படியேற விரும்பினால் அதன் பின்னே நீங்களும் போங்கள். குழந்தை மாடியிலிருந்து எட்டிப் பார்க்க விரும்பினால் அதன் இடுப்பை வளைத்துப் பிடித்துக் கொள்ளுங்கள்.

"அவன் நூறு தடவை படியேறுவான், நானும் நூறு தடவை ஏற முடியுமா" என்று கேட்பீர்களாயின் "ஆமாம்... நூறு முறையும் படியேற வேண்டுமென்று" பதில் சொல்வேன். குழந்தையை பெற்றுக் கொண்டால், குழந்தையை வளர்ப்பது தவிர வேறு வேலைக்கு போகக்கூடாது என்பது சிறப்பான வாழ்க்கை நியதி. மற்றபடி பெற்ற தாயோ வளர்ப்பவரோ போய்த்தான் ஆகவேண்டுமென்றிருந்தால், பாவம் அது குழந்தைக்குத்தான் கஷ்டம். அவன் தலையெழுத்து மோசம்.

க்ரஷ்ஷில் வளரும் குழந்தையை இன்னும் கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள். அப்போது கூடுதலாக நம்பிக்கையுடன், கூடுதலான

அன்புடனும் பேசுங்கள். யாரேனும் வந்து குழந்தையை பார்க்கும் போது குழந்தைக்கு நன்றி சொல்லவும், கை கூப்பவும் கற்றுக் கொடுங்கள்.

ஒருவேளை குழந்தை தவறு செய்தால், மற்ற குழந்தையை ஓங்கி அடித்துவிட்டால், கடித்து விட்டால் என்ன செய்வது.

அப்பொழுதும் நாம் வன்முறையை பிரயோகிக்கக் கூடாது. குழந்தையை கடுமையாக எச்சரிக்கலாம். அதிக நேரம் இல்லாமல் ஒரேயொரு முறை அதட்டலாம். அந்தக் குழந்தை அழுவதை அடித்த குழந்தையை மோசம் என்று பார்ப்பதை சுட்டிக் காட்டலாம்.

எந்தக் குழந்தைக்கும் கெட்டபெயர் வாங்க வேண்டும் என்ற ஆசை இல்லை. எல்லா குழந்தையும் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று, ஹீரோவாக இருக்க வேண்டுமென்றுதான் விரும்புகின்றன. இதை எடுத்துச் சொல்லும்போது குழந்தைக்கு வெகுநிச்சயம் புரியும்.

உயர்ந்த நிலைக்குப் போகும் குழந்தையைவிட உத்தமனாகத் திகழும் குழந்தை மிக முக்கியம் என்பது என் கருத்து. சமூகத்துக்கு தீங்கு செய்யாத மனிதர்கள்தான் மிக முக்கியம். இப்போது அந்த மாதிரி குழந்தைகளை உருவாக்குவதுதான் நமக்கு லட்சியம்.

இவை எல்லாமே கட்டுரைக்கு நன்றாக இருக்கின்றன. நான் அலுவலகத்திற்கு போய்த்தான் ஆக வேண்டும். இது என் வாழ்வு நிர்ப்பந்தம். என் தலையெழுத்து. நான் குழந்தையை எப்படி வளர்ப்பது. உங்களில் சிலர் கேட்கலாம்.

முடிந்தவரை மேற்சொன்ன விஷயங்களை நடைமுறைப் படுத்துங்கள். உங்கள் அரவணைப்பு இல்லாத குழந்தைகளை அதிகம் கவனத்துடன் அணைத்துக் கொள்ளுங்கள். உங்கள் அலுப்பை குழந்தைகளிடம் காட்டாமல் இருக்கப் பழகுங்கள். உங்கள் அலுவலகக் கோபத்தை அலுவலக வாசலிலேயே விட்டு விடுங்கள். அம்மா இல்லாதபோது எப்படியிருக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுங்கள். குழந்தையிடம் நிறையப் பேசுங்கள். குழந்தையை கவனித்துக் கொள்கிறவரிடம் கனிவோடும் கருத் தோடும் இருங்கள். அவர்களின் குறையை பெரிதுபடுத்தாது இன்னும் மிருதுவாகக் குழந்தையை நடத்த வேண்டிக் கொள்ளுங்கள்.



ஏழு வயதுக்குப் பிறகு ஒரு குழந்தைக்கு தன்னைத்தானே பார்த்துக் கொள்ள தெரிந்து விடும்.

குழந்தை வளர்ப்பு போல மிக முக்கியமானது பருவத்தின் வாசலில் நிற்கும் பிள்ளைகளின் வளர்ப்பு. இது குழந்தைகளை வளர்ப்பதைவிட மிகமிகக் கடினமானது.

இதுபற்றி யோசிப்போம்.

## 44

குழந்தைகள் பருவ வயதில் முழு வளர்ச்சி அடைந்து நிற்கிற போது பெற்றவர்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்கிறார்கள்.

"போன வருஷம் வரைக்கும் சின்னப் பையன் மாதிரிதான் இருந்தான். ஆஃப் டிராயர் போட்டுகிட்டு கைய குறுக்கிகிட்டு உட்கார்ந்திருப்பான். இப்போ ஃபுல் பேண்ட்டுல டி.ஷர்ட் போட்டுகிட்டு அகலமா கால்மேல கால்போட்டுகிட்டு கம்பீரமா உட்கார்ந்துகிட்டிருக்கான். உள்ள நுழையறபோது திடுக்குனு இருக்கு. யார் வரான் ஆம்பளை நம்ம வீட்ல அப்படின்னு. அப்புறம் பார்த்தா என் புள்ள" தாய்மார்கள் பேசுவதுண்டு.

என் கண்ணுக்கு சின்னக் குழந்தையாத்தான் தெரியறான். ஆனா, ரோட்ல போனா பசங்க வெறிச்சு வெறிச்சு பார்க்கறாங்க ஸார். அப்போதான் புரிஞ்சுது. நம்ம குழந்தை அழகாயிடுச்சுன்னு. திடீர்னு ஒருநாள் அவ அம்மா புடவைய கட்டிகிட்டு வந்தா. ஆடிப்போயிட்டேன். கடவுளே இவ கல்யாணத்துக்கு நான் என்ன பண்ணுவேன்னு உள்ளுக்குள்ள பதறிடுச்சு."

கவலையும் சந்தோஷமாக தகப்பனார் பேசுவார்.

வளர்ந்துவிட்டாயா. வெளியே போ. என் வாழ்க்கையை தொந்தரவு செய்யாதே என்கிற அமெரிக்க சித்தாந்தம் நமது தேசத்தில் இல்லை. நமது கலாச்சாரம் வேறு. அதுவரை குழந்தை யாக இருந்த பெண் ஸ்நேகிதியாக மாறுகிறாள். அதுவரை வெறும் பையனாக இருந்த பிள்ளை தோழனாக மாறுகிறான்.

"டேய்... இந்த பெட்டிக்கு ஒரு கை கொடு"

"என்னப்பா பண்ணணும்."

"எடுத்து அந்தாண்ட வைக்கணும்டா"

"நீ தள்ளிப் போ."

ஒற்றை ஆளாய் அந்தப் பெட்டியைத் தூக்கி அந்தப் பக்கம் வைக்கிற பொழுது இனி எல்லா சுமையையும் இவனிடம் கொடுத்து விட வேண்டும் என்று தகப்பனுக்குத் தோன்றும்.

"பஸ்ல கூட்டமான கூட்டம். இத்தனைக்கும் நாலு பஸ்ஸை விட்டுட்டு அஞ்சாவது பஸ்ஸைதான் பிடிச்சேன். வரத்துக்கு மூணு மணிநேரம் ஆயிடுச்சி. கொஞ்சம் இருடி. குளிச்சுட்டு சமையல் பண்ணிடறேன்."

"வேணாம்மா"

"ஏன்"

"நான் சமைச்சு வச்சிட்டேன். நல்லாதான் பண்ணியிருக் கேன்னு நினைக்கறேன். நீ வந்து பாரேன்."

ஒரு குழம்பு, ஒரு காய். ஒரு ரசம். அப்பளப்பூவை பொறித்து வைக்கப்பட்டிருக்கிறது. மேடை சுத்தமாக துடைத்து வைக்கப் பட்டிருக்கிறது. டைனிங் டேபிளில் தட்டுகள் கவிழ்த்து வைக்கப் பட்டிருக்கின்றன. பார்த்ததும் உள்ளுக்குள் கருணையோடு கண்ணீர் பொங்குகிறது.

"இனி கவலையில்லை. கொஞ்சம் அந்தப்பக்கமும், இந்தப் பக்கமும் போயிட்டு வரலாம். நாலு கோயில் ஏறி இறங்கலாம். வீட்டை இது பார்த்துப்பா" என்ற நிம்மதி வருகிறது.

குழம்பு அற்புதமாக இருந்தது. கறியில் ஒரு கல் உப்பு தூக்கல். ஒருமுறை பிரட்டி எடுத்தால் சரியாக இருக்கும். வேக வைப்பதிலும் கொஞ்சம் பிரச்னை இருக்கிறது. சாதம் பக்குவமான நேரம் பார்த்து இறக்கியிருக்கிறாள்." என்று கவனித்துவிட்டு கத்திரிக்காய் கறியை வாணலியில் போட்டு எப்படிப் பிரட்ட வேண்டுமென்று கிடுக்கி பிடித்து கரண்டியால் சுழற்றிக் காண் பிக்கும் போது மகள் அதை கவனித்துக் கொள்கிறாள்.

"பெரிய யுனிவர்சிட்டி பாடம் அது. ஒரு ஆசிரியை. ஒரு மாணவி. தினம் தினம் நிறைய நிறைய கற்றுக் கொள்ளலாம்.

"டேய் எம். இ. எஸ். கட்டிக்கு வந்துடறியா."



"எனக்குத் தெரியாதுப்பா."

"இங்க வா சொல்லித் தரேன். இதான் கார்டு. நம்பர் போட்டிருக்கிறான் பார்த்தியா. போன மாசத்தைவிட இந்த மாசம் வந்து அம்பது யூனிட் ஜாஸ்தியா இருக்கு. ஏசி. போட்டுருக்கோ மில்ல. அதான். இதுலேர்ந்து இதை கழிச்சு ஒரு யூனிட்டுக்கு இத்தினின்னு பணம் கட்டச் சொல்லுவான். மூணு கவுண்டர் இருக்கும். எந்தக் கவுண்டர்ல ஆட்கள் கம்மியா இருக்காங்களோ அங்க கொண்டுபோய் கட்டிடு. ரொம்ப கூட்டமா இருந்துதா ஆபீஸுக்கு வெளிய மயிலை தனசேகர்னு ஒருத்தர் இருப்பாரு. அவரை பிடிச்சுக்கோ. இல்லைன்னா இன்ஜினியர் பிரேம்குமார் இருப்பாரு. அவரும் எனக்கு ஃப்ரெண்டுதான். அவர்கிட்ட போய்ச் சொல்லு. துட்டை வாய்கிட்டு போய் அவங்களே கட்டி கொண்டு வந்துடுவாங்க. ஜாக்கிரதையா செய்வியா. எழுநூறு ரூபா கொடுத்திருக்கேன். அறுநூத்தி சொச்சம்தான் ஆகும். போயிட்டு வா."

திரும்பி வரும்வரையில் அவன் வரவைப்பற்றியே மனம் நினைத்துக் கொண்டிருக்கும். முடியுமா அவனால் என்று கேள்வி கேட்கும். சொதப்பி விட்டால் என்ன செய்வது என்று யோசிக்கும். வேண்டுமென்றால் போய் பார்ப்போமா. க்யூவில் தத்தியாக நின்று கொண்டிருப்பானா என்று மெல்லியதாக கோபம் வரும். கிளம்பலாம் என்று யோசிக்கும்போது அவன் சைக்கிளில் வந்து சரட்டென்று நிற்பான்.

"என்னாடா ஆச்சு"

"கூட்டமான கூட்டம். நான் தனசேகர்கிட்ட போய் பேசினேன். தனசேகர் பிரேம்குமார் கிட்ட கூட்டிகிட்டு போனாரு. பிரேம்குமார் உடனே கட்டிட்டாரு."

"அப்புறம் என்ன இவ்ளோ லேட்டு"

"சும்மா தனசேகரோட பேசிகிட்டிருந்தேன். நம்மூருக்கு கரண்ட் எப்படி வருது. டிரான்ஸ் ஃபார்மர் எப்படி வேலை செய்யுது. எப்படி பிரியுது. நெய்வேலிலேர்ந்து வர கரண்ட் தலைக்கு மேல வருது. வீட்டுக்கு வர கரண்ட் பூமிக்கு கீழ வருது ஏன். நெய்வேலிலேர்ந்து வர கரண்ட்டை பூமிக்கு அடியுலேயே போட்டா என்ன. அப்படின்னு கேட்டேன். பிரேம்குமார்கிட்ட கட்டிகிட்டு போய் இந்தக் கேள்வியை கேட்கலாம்னாரு. பிரேம்

குமார் பதில் சொன்னாரு'' என்று அவன் தொடர்ந்து பேச ஆரம்பிப்பான்.

''இனிமே எலக்ட்ரிசிட்டி பில்லை எங்கிட்டயே கொடுத் துருப்பா.''

மகன் மீதி காசை கொடுப்பான். பத்துரூபாய் குறைவாக இருந்தது.

''என்னடா பத்துரூபா குறையுது. எடுத்துகிட்டியா.''

''எடுத்துக்கலைப்பா. நான் தனசேகருக்கு டீ வாங்கிக் கொடுத்தேன். வேணாம் வேணாங்கறாரு. வாங்க ஸார்... எனக்கு பசிக்குது வாங்க அப்படின்னேன். ரெண்டு பேரும் சமோசா டீ சாப்பிட்டோம்...''

பிள்ளைக்கு பிழைக்கத் தெரிந்துவிட்டது. மனிதர்களோடு சிநேகிதம் கொள்ளத் தெரிந்து விட்டது. ஆட்களை கவர்ந்து பேசத் தெரிந்து விட்டது. கூச்சம் போய்விட்டது. இதைத்தவிர அறியும் ஆவல் கிளர்ந்து எழுந்து கொண்டிருக்கிறது. அறியும் ஆவல் உள்ளவர்களை ஊர் ஜனம் வேகமாக அணைத்துக் கொள்ளும். வெறுமே மலங்க மலங்க முழிக்கிறவனைக் கேலி செய்யும்.

இதெல்லாம் ஆரம்ப சந்தோஷங்கள். தொடர்ந்து பையனும், பெண்ணும் நல்லபடியாய் வளரவேண்டுமே என்கிற கவலை தந்தைக்கும், தாய்க்கும் நிச்சயம் இருக்கும். எல்லாரிடம் போய் பேசிவிடக்கூடாது. எல்லாமும் பேசிவிடக் கூடாது. எது பேச வேண்டுமோ, எப்போது பேச வேண்டுமோ எங்கு பேச வேண்டுமா, எவரிடம் பேச வேண்டுமோ அதைத் தெரிந்து கொண்டு பேசவேண்டும்.

இதை எப்படிச் சொல்லிக் கொடுப்பது. இதை கொஞ்சம்தான் சொல்லித்தரலாம். மீதியை அவனே அனுபவித்து புரிந்துகொள்ள வேண்டும். ஆரம்பப் பாடம்தான் நடத்தலாம். மாஸ்டர் டிகிரியை அவனாகத்தான் பயில வேண்டும். அனா... ஆவன்னா... கைபிடித்து எழுதச் சொல்லித் தருவார்கள். அதற்குப்பிறகு மனப்பாடம் பண்ண வேண்டியதை திரும்பத் திரும்ப எழுதச் சொல்லித் தருவார்கள். மேற்கொண்டு இருப்பதை கேள்வி கேட்டு புரிய வைப்பார்கள். அதற்குப்பின் உச்சப்படிப்பு வரும்பொழுது நீயே வாத்தியார்... நீயே மாணவன்... நீயே படித்துக் கொள். மிகப்பெரிய லைப்ரரி திறந்திருக்கிறது. எந்தப் புத்தகம் வேண்டுமானாலும். எப்போது வேண்டுமானாலும் எடுத்துப்படி. சொல்லிக் கொடுக்க என்று இங்கு எவரும் இல்லை என்று அறுத்து விட்டு விடுவார்கள்.



பிள்ளைகள் வளர்ப்பும் அத்தகையதே. கடைசிவரை அனா... ஆவன்னா சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்க முடியாது... பண்ணிக் கொள் என்று வற்புறுத்த முடியாது. தானாகப் படிக்க வேண்டும். அவனாகத் தேறவேண்டும். அங்குதான் பிரச்னை ஆரம்பிக்கும்.

தானாகப் படித்து தெரிந்து கொள்கிறோம் என்கிறபோது ஒரு கர்வம் வரும்.

## 45

''ஆறு ஃப்ளீட் வச்சி கட்டிக்கறேன். அப்போதான் தலப்பு சரியா வருது. வயிறு ஒட்டியிருந்தா ஃப்ளீட் நல்லா உட்காருது. கொஞ்சம் உடம்பு போட்டோம். ஃப்ளீட் பிரிஞ்சு நிக்குது. அதனால நான் சாதம் சாப்பிடறதில்லை. சப்பாத்தி பாலு பழம்தான். தலைய குனிஞ்சு இடுப்பு வழியா பார்த்தா கால் கட்டைவிரல் தெரியணும். பெண் பேசுவாள்.

பேண்ட் மடிப்பு அப்படி கோடு போட்டா மாதிரி இறங்கணும். நடுவயிறு வீங்கி அப்புறம் மடங்கி மடிப்பு போச்சுன்னா அது மரியாதையாவே இருக்காது. குண்டா இருந்தா பொண்ணுங்க டக்குனு கேலி செய்யுதுங்க. நம்மள பார்த்து 'ஹா'ன்னு நிக்கணும். பிள்ளை விவரிப்பான்.

''ஏண்டா இப்படி 'ஹா'ன்னு நிக்கணும்.''

''அதுலொரு மரியாதைப்பா. அதுல ஒரு சந்தோஷம் இருக்கு.''

''படிப்பு முக்கியமில்லையா''

''படிப்பு ரொம்ப முக்கியம். பொண்ணுங்க முதல்ல பார்க்கும். பார்த்த பிறகு இவன் பேரென்னான்னு கேட்கும். பேர் கேட்டபிறகு இவன் என்னா பண்றான்னு கேட்கும். அப்போ

சார்டர்ட் அக்கௌண்டன்சி, பி.இ. பைனல் இயர், எம்.டெக். செகண்ட் இயர்னா மரியாதை. வெறுமனே பி.பி. ஏன்னா சரிதான் போன்னுடும். அதுங்களுக்கு ஒரு கணக்கு இருக்குமில்ல''

''என்ன கணக்குடா இருக்கும்.''

''இவனை லவ் பண்ணலாமா...''

''டேய்... என்னடா பேசற.''

''இல்லையா... நம்மூர்ல லவ்வுன்னா கல்யாணம் கட்றதுதானே. பாதியில விட்டுட்டு போறது கிடையாதே.''

''அப்பப்போ மாத்திகிதுன்னு பேசறாங்க.''

''அதெல்லாம் தப்பான லேடீஸ்ப்பா. அவங்களோட என்னால பேசவே முடியாது. அவங்கள்ளாம் நக்கல் பார்ட்டீங்க. எடுத்த வுடனே கேலி பண்ணுவாங்க. கேலி பண்றது மட்டுமில்ல.''

''வேற என்னடா...''

''ஒன்னுமில்ல வேணாம்.''

''சொல்லுடா நான் தெரிஞ்சுக்கறேன்.''

''இதெல்லாம் நீ தெரிஞ்சுக்க வேணாம்ப்பா.''

''டேய்... ப்ளீஸ் தயவுசெய்து சொல்லுடா.''

''அந்த மாதிரி பொண்ணுங்க அதிரடிக்கும்ப்பா...''

''அதிரடிக்கும்னா''

''மச்சம் பார்க்கலாமான்னு கேட்கும். ஹலோன்னு சொன்ன வுடனே.''

''என்னாது''

''என் உடம்புல மச்சமெல்லாம் நான் காட்றேன். உன் உடம்புல இருக்கற மச்சமெல்லாம் காட்றியான்னு கேட்கும்.''

''ஐயோ...''

''காட்டாதுப்பா... சும்மா பேசும். இதைச் சொன்னவுடனே இவன் மூஞ்சி எப்படி மாறுது. இவன் எப்படி துவண்டு போறான். இவன் எப்படி பயப்படறாள். அப்படின்னு கணக்குப் போடும். மூஞ்சியை கல்லு மாதிரி வச்சுக்கணும்.''



''என்னடா பதில் சொல்லுவே.''

''மச்சம் பார்த்ததோட முடிச்சுக்கலாமா... இல்ல வேற ஏதாவதா அப்படின்னு கேட்கணும்.''

''டேய்... என்னாடா நீ நல்ல பையன்னு நினைச்சேன்.''

''நான் நல்ல பையன்தாம்ப்பா... அது என்னை மிரட்டுது இல்ல. பதிலுக்கு நான் மிரட்டணுமில்ல. மேற்கொண்டு போலாம்ன்னு கேட்டேன். அங்க அது மாட்டிக்கும். அதெல்லாம் வேணாம். நான் வேற இடம் பார்க்கறேன். அப்படின்னு நகர்ந்து போயிடணும்.''

''பிறகு''

''தானா பின்னாடி வரும்பா.''

''இப்படியெல்லாம் நாங்க பேசினதோ பழகினதோ இல்லைடா...''

''உங்க காலம் வேற. எங்க காலம் வேற.''

''முட்டிகிட்டி சாகப் போறீங்கடா. பயமா இருக்குடா.''

மாட்டக் கூடாதுப்பா. மாட்டினா செத்துடுவோம்னு எனக்குத் தெரியும்.''

அப்பா கேட்க பிள்ளை பேச அம்மா சமையலறை பின்பக்கத்திலிருந்து இவர்கள் இரண்டு பேரையும் ஆச்சரியமாக பார்த்து கொண்டிருப்பாள். தங்கை வேறு பக்கமிருந்து நமட்டுச் சிரிப்பு சிரிப்பாள். அவளுக்கு இந்த விஷயங்கள் தெரியும்.

இது ஒரு தலைமுறை இடைவெளி. தலைமுறை இடைவெளிக் கான ஒரு மாதிரி இது. இதுபோல் பலநூறு விஷயங்கள் போன தலைமுறையிலிருந்து இந்தத் தலைமுறை மாறுபாடு அடைகிறது.

''எங்க க்ரூப்ஸ் ப்ராஜக்ட் அடுத்த வருஷம் பண்றோம். நாலு பேர் சேர்ந்து ஒரு புராஜக்ட் பண்றோம். நாலு பேரும் ஜென்ட்ஸ் தான். லேடீஸை சேர்க்க மாட்டோம்.''

''ஏண்டா...?''

லேடீஸ் சேர்த்தா தொந்தரவு ஆகும்ப்பா. நம்ம ராத்திரி பன்னெண்டு ஒரு மணி வரைக்கும் படிக்கலாம். டீ கடைக்கு போயிட்டு வரலாம். இதை கூட்டிகிட்டு போயிட்டு வரணும்னா கஷ்டம்ப்பா. ஹலோ... ஹலோன்னு சொல்லலாமே தவிர தூக்கி

மடியில வச்சுக்க முடியுது. நாலு பேரும் ஒரேமாதிரியான புத்தியில இருந்தாதான் புராஜக்ட்டை சரியா பண்ண முடியும். லேடீஸை நடுவுல விட்டா சொதப்பும்.'' ''இப்போது மகள் தன் இடம்பற்றி சொல்வாள். நாங்க பசங்கள நல்லா பார்ப்போம். பேசுவோம். கலாய்ப்போம். எங்களுக்குள்ள அவங்களுக்கு தனித்தனியா பேர் வைப்போம். ஆடு, மாடு, குதிரை, யானை, மனுஷன்னு பிரிச்சு வைப்போம்.''

''புரியலையேடி...'' அம்மா வியப்பாள்.

''ஆடு தடவி கொடுக்கலாம். தழை கொடுக்கலாம். மாடு தடவி கொடுக்கலாம்.

கொஞ்சம் விலகி நிற்கலாம். குதிரைக்கு தொட்டியில போட்டுட்டு நகர்ந்து நிற்கலாம். யானைக்கு தழை வெட்டி தொலைவா போட்டுட்டு வேடிக்கை பார்க்கலாம். மனுஷாளாண்ட பேசவே கூடாது. பழகவே கூடாது. பாட்டு இருக்குல்ல. குதிரைக்கு ஐந்து முழம்... யானைக்கு பத்து முழம்னு... கெட்ட மனுஷனை பார்க்கவே பார்க்காதன்னு சொல்றாங்களோ அந்தமாதிரி நாங்க பிரிச்சு வச்சிருக்கோம்.''

''உங்க பக்கம் கெட்ட பொண்ணுங்க. இல்லையா.''

''இருக்கு. கண்டமேனிக்கு பேசும். மாட்டாத இருக்கணும்.''

''எப்படிடி மாட்டாத இருப்ப.''

''மறந்துடணும்மா. தலைக்கு குளிச்சா மாதிரி மறந்துடணும். மாட்டினா மரியாதை போயிருமில்ல. நம்மள ஹான்னு பார்க் கறவனே தப்பா பேசுவான் இல்ல. மறந்துபோயும் மாட்டக் கூடாது.''

பெண் பேச அம்மா வியப்பாள்.

''செல்போனை யாருங்க கண்டு பிடிச்சது. எதுக்கு கண்டுபிடிச் சாங்க. எப்படி அவ்ளோ நேரம் மனுஷாளோட மனுஷாள் எதுக்கு பேசணும். ஏன் பேசணும். எங்க சின்ன வயசுல செல்போன் உண்டா. டெலிபோன் உண்டா. நாங்களெல்லாம் சந்தோஷமா வளரலை. இன்ஜினியரிங் வேலைக்குன்னு மாமா மலேசியா போனாரு. ஒரு வருஷம். கவர்ல பத்து வரி எழுதியிருப்பாரு. வேற யாராவது படிச்சுடுவாய்கன்னு ஆசையான வார்த்தை ஒன்றுகூட இருக்காது. அந்தமாதிரி லெட்டர் எழுதமாட்டேன்னே சொல்லிட்டுப் போவாரு. நான் உனக்கு லெட்டர் எழுதறேன். அப்பா வந்து படிக்கணும். கொடுன்னு கேட்கறாரு. உன்னால கொடுக்க முடியுமா. அப்பா படிக்கற லெட்டர்தானே நான் உனக்கு எழுத முடியும். அப்படின்னு சாதாரணமா எழுதுவாரு. அப்பாக்கு தான் லெட்டர் எழுதுவாரு. என் மனைவியை கேட்டதாகக் கூறவும்னு ஒரு வரி இருக்கும். நான் திரும்பத் திரும்ப அந்த வரியை படிச்சுகிட்டிருப்பேன்.



ஒருவருஷம் கழிச்சு மாமா வரும்போது அடிவயித்துலேர்ந்து நெஞ்சுக்குள்ள குப்புனு ஒரு பந்து எழுந்திருக்குமே அந்த சந்தோஷத்தை இந்தக் குழந்தைங்க அனுபவிக்குமா. பிரிவு ரொம்ப சந்தோஷங்க. பிரிவுனால சகிப்புத்தன்மை வருது. பிரிவுனால ஒருத்தருக்கு மேலே ஒருத்தருக்கு அக்கறை வளருது. பிரிவுனால பொறுப்பு ஜாஸ்தி ஆகுது. இதெல்லாம் இந்த காலத்து குழந்தைகளுக்கு உண்டு.''

அந்த அம்மாள் பெரிய குரலில் புலம்பினாள்.

''நான் குடித்தனக்கார பொம்பளை. பச்சையா பேசக்கூடாது. இருந்தாலும் பேசறேன். ஒருவருஷம் கழிச்சு மாமா வந்தபிறகு அன்னிக்கு ராத்திரி நானும் அவரும் வெறுமேனே கட்டிகிட்டு படித்துகிட்டிருந்தோம். கொஞ்ச நேரம் நான் அழுதேன். அதுக்குப் பிறகு அவரு அழுதாரு. எதுக்கு அழுதோம்னே தெரியாது. அப்படியே தூங்கிட்டோம். ஒன்னும் பண்ணலை. ஆனா, மறுநாள் கார்த்தால ரெண்டு பேரும் ஜகஜோதியா எழுந்திருந்தோம். என்னமோ சந்தோஷம். இதெல்லாம் இந்தக் காலத்து குழந்தைங்க அனுபவிச்சுருக்குமா.

எப்படி அனுபவிக்க முடியும். டெல்லியோ, மும்பையோ, லண்டனோ, அமெரிக்காவோ... இருந்த இடத்துலேர்ந்து இருவது நிமிஷம் முப்பது நிமிஷம் பேசிட்டு போன்வச்சாக்க பிரிஞ்சாப் போலயா இருக்கு.

தினம் தினம் பார்த்துக்கறா போலதானே இருக்கும். இன்னிக்கு கத்திரிக்காய் கறி பண்ணி தக்காளி ரசம் வச்சேன். பருப்புத் தொகையல் அரைச்சே அப்படின்னு டெல்லிலேர்ந்து, சென்னைக்கு பொண்ணு சொல்ல அம்மா கேட்க எதிரும், புதிரும் நிக்கறா மாதிரி தானே இருக்கும். எப்படி பிரிவு வரும். வந்து இறங்கின ரெண்டாம்

நாளே எனக்கு போர் அடிக்குது அப்படின்னு பொண்ணு சொல்றா. அம்மாக்கு எப்படியிருக்கும் மூஞ்சி.

எல்லார் குடித்தனமும் கோலத்தை கலைச்சாப்போல ஆயிடுச்சீங்க. வாழ்க்கையே வேறுவிதமா போயிடுச்சி, "என்று பெண்மணி அலுத்துக்கொள்ள அவருடைய மாமா சொல்வார், "நானும் மரகதமும் சாயந்தரமானா பீச்சுக்கு போவோம். நான் பாட்டு பாடிகிட்டே வருவேன். என்ன பெரிய பாட்டு. சினிமாப் பாட்டுதான். சிவாஜி பாட்டா பாடிகிட்டு வருவேன். பொன்னை விரும்பும் பூமியிலேன்னு பாடுவேன்... மூஞ்சி சிவந்துடும் அங்க ஜனமே இருக்காது. இன்னிக்கு பத்தடிக்கு ஒருத்தன் நுங்கு நுங்குனு இடிக்கறான். அவனை டாக்டர் வேகமா வாக் போகச் சொல்லியிருக்காறாம். இறங்கி வேற எந்த பக்கமாவது போறது தானே. கைவீசிசிட்டு நம்ம மேல இடிக்கறா மாதிரியே வரான். இடிக்கறான் இடிச்சு பேசாத போறான். ஏண்டா பீச்சுக்கு போறோம்னு ஆகுது. மனுஷாள் வாழ்க்கை கெட்டுப்போச்சுங் கறதுக்கு இதுவொரு உதாரணம்."

அவசரம், பதட்டம், கோபம், ஆத்திரம், பொறாமை. அவர்கள் தங்களைப்பற்றி பேசவே இல்லை. தங்கள் குழந்தைகளைப்பற்றி கவலைப்படுகிறார்கள். தாங்கள் அனுபவித்த இந்த நிம்மதி. இந்த அற்புத அனுபவங்கள் தங்கள் குழந்தைக்கு கிடைக்காது போய்விடுமோ என்று கவலைப்படுகிறார்கள். இந்த அனுபவங்கள் இல்லையெனில் தேர்ந்த வாழ்க்கை என்பது எப்படியிருக்கும் என்று யோசிக்கிறார்கள்.

## 46

ஆழ்ந்து யோசிக்கையில் குழந்தை வளர்ப்பு என்பது மடியில் போட்டு பால் கொடுக்கிற நாளிலிருந்தே ஆரம்பித்து விடுகிறது. ஒழுக்கம் பற்றியும், உயர்வு பற்றியும், நட்பு பற்றியும், காதல் பற்றியும், கனிவு பற்றியும், கடவுள் பற்றியும் அப்பொழுதே சொல்லித்தர வேண்டியதாக இருக்கிறது. பிஞ்சாக இருக்கிறபோது புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள் பிறகு நஞ்சாகத்தான் மாறு கின்றன. வீட்டில் கடவுள் வழிபாடு மூலமாக ஆன்மிகம் தழைக்கிறபோது, வீட்டிற்கு அமைதி கூடுதலாக இருக்கிறது. நாளை நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறபோது கனிவு அதிகமாகிறது. இதனால் வீட்டில் கூச்சல் குழப்பங்கள் குறைகின்றன. கூச்சல் குழப்பம் அடிதடி சண்டை குறைவாக இருக்கிற வீட்டில் குழந்தைகள் ஆரோக்யமாக வளர்வார்கள்.



குழந்தைகள் வளர்ந்தபின் அந்தக் குழந்தைகளுக்கு நீதிக் கதைகளைச் சொல்ல, கடவுள் கதைகள் மூலம் நீதிகளைச் சொல்ல அவர்கள் வாழ்க்கையின் நல்ல விஷயங்களைப் பற்றி தெளிவுகளைப் பெறுகிறார்கள்.

வாலிப வயதில் புராணங்களும், இதிகாசங்களும் தேவார, திருவாசகங்களும் அல்லது அதற்கு ஈடான போதனை புத்தகங்களும் படிக்கும் பொழுது வெற்றியைப் பற்றிய நம்பிக்கை அதிகரிக்கிறது. வெற்றி வேண்டுமானால் அமைதியாக இருக்க வேண்டும் என்று தெளிவாகிறது. குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பதோ, கொக்கரித்து ஆடுவதோ வெற்றியைத் தராது என்று தெளிவாகிற்று.

"எப்படியாவது ஜெயிக்கணும்... எப்படியோ ஜெயிக்கணும்..." என்ற ஆசையுள்ளவர்கள் மிக வேகமாக இடறி விழுகிறார்கள்.

புராணக் கதைகள் வெறும் நாவல்கள் அல்ல. ஒரு சுவாரசியத் திற்காக செய்யப்பட்டவை அல்ல. வெறும் நீதிநெறிக் கதைகள் என்பது மட்டுமல்ல. கெட்டவர்கள் அழிவார்கள். நல்லவர்கள் ஜெயிப்பார்கள் என்று சொல்வது மட்டுமல்ல. யார் கெட்டவர்கள் என்பதையும் நுணுக்கமான ஆன்மீக விஷயங்கள் மூலம் சொல்லித் தருகின்றன.

மது அருந்துதலும் சூதாடுதலும் பிறர் பொருளை கவர்தலும் தவறு என்று சிறுவயதிலேயே ஆழ்ந்து மனதில் பதிய வைக்க வாய்ப்பிருக்கிறது. பகாசூரனோடு பீமன் சண்டை போட்ட கதை சிறுவயதில் மிகப்பெரிய வியப்பாய், விசித்திரமாய் தெரிய வரும். ஆனால், வாலிப வயதில் அது என்ன என்ற கேள்வி எழும். மத்திமவயதில் பகாசூரன் பீமன் யார் என்று புரியும்.

பகாசூரனும் பசியுள்ளவன். பீமனும் பசியுள்ளவன். ஆனால், பகாசூரன் பிறர் பொருளை அடித்து உண்பவன். பீமனோ உழைத்து உண்பவன். நன்றாக சாப்பிடு. உலக வாழ்க்கையை அனுபவி. ஆனால், அடுத்தவரை அடித்துப் பிடுங்கி அதனால் சுகம்பெற வேண்டுமென்று ஒரு பொழுதும் நினைக்காதே.

நினைப்பாய் என்றால் உனக்கு முடிவு மரணம்தான். அடிபட்டு வீழ்வாய் என்று பகாசூரன், பீமன் கதை தெள்ளத் தெளிவாக மகாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நாற்பது வயதில் இது புரியும்போது வாழ்க்கை செம்மையாக இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது.

வேத சாத்திரங்கள் நீதியை சொல்கின்றன. புராணக் கதைகள் இந்த நீதியை இன்னும் தெளிவாகச் சொல்கின்றன.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை

நாலும் கலந்துணக்கு நான் தருவேன்...

என்பது பத்து வயதில் தின்பண்டபமாக இருக்கும். இருபது வயதில் என்னவென்று கேள்வி வரும். முப்பது, முப்பத்தைந்து வயதில் இது ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான அறிவு உணர்ச்சிகள் என்பது தெரிய வரும். விதம்விதமான சக்திகள் என்பது புரியவரும்.

மதம், ஜாதி இவைகளெல்லாம் வேண்டாம். இவைகளில் குழந்தைகளை ஈடுபடுத்த வேண்டாம் என்ற எண்ணமிருப்பின், அது முற்போக்கு என்ற சிந்தனையிருப்பின் உங்கள் குழந்தைகளை ஆழ்ந்த மௌனத்திற்கு பழக்கப்படுத்தலாம். மூச்சுப் பயிற்சியையும், தலையில் குட்டிக் கொள்ளுதலும், யோகா போன்ற உடற்பயிற்சிகளும் அதைத் தொடர்ந்து சிந்தனையற்று உள்ளுக்குள்ளே கிடத்தலும் அவர்களுக்கு கற்றுத் தரலாம். இவை எல்லாமும் மதம் சொல்லிக் கொடுப்பவைதான். மதநாட்டமுள்ளவர்களே இதை புரிந்து கொள்ளவில்லை. பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. சாறை உதறிவிட்டு சக்கையை உண்பதுபோல ஜீவநாடியான இந்த விஷயங்களை மத விஷயங்களில் ஈடுபடுவோர் மறந்துவிட்டார்கள். எனவே, நீங்களும் மறந்து விடாமல் இதை உங்கள் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க பதினாறு வயதில் அவன் மூச்சை சரியாக இழுத்து வெளியேவிட மார்புப்படம் பெரிதாக விரியும். வயிறும் இறுகும். தொடைகள் உறுதியாகும். பாதம் திண்ணமாகும். முதுகில் வலிவு கூடும். பிடரியில் செழுமை இருக்கும். கண்களில் ஒளி கூடும். கன்னங்களில் சிகப்பு ஏறும். ஒரு குழந்தை ஆணோ... பெண்ணோ... அவர்கள் மிக அழகாக இருப்பார்கள். மூச்சுப் பயிற்சியில் தொடர்ந்து ஈடுபட புத்தி கூச்சலிடுவது நிற்கும்



கண்டபடி அலைவது தடுக்கப்படும். அலையும்போதே எதற்கு அலைகிறாய் என்ற கேள்வி அந்த இளைஞனுக்கோ யுவதிக்கோ வந்துவிடும்.

உணவின் மீது கட்டுப்பாடும், உறவுகளின் மீது மரியாதையும் ஏற்படும். பெண் என்பவள் வெறும் போகம் என்கிற அபத்தத்திலிருந்து விடுபட்டு வெறும் காமம் இல்லை பெண் என்பது புரியத் துவங்கி மிக மரியாதையாகவும், கண்ணியமாகவும் பெண்ணை நடத்துகின்ற திறன் வந்துவிடும். இப்போதைக்கு என் வேலை வெற்றி பெறுவது. பெண் தேடுவது அல்ல என்று புரிந்துபோனால் நல்ல பெண்களின் சகவாசம் தானாக ஏற்படும். அந்த நட்பிலிருந்து ஒருவரை தேர்ந்தெடுத்துக் கொள்ளக்கூடிய திறனும் ஏற்பட்டு விடும். அந்த மன அமைதி உழைப்பதில் மிகப்பெரிய ஆர்வத்தைக் கொடுக்கும். எதிர்பார்ப்பில்லாத உழைப்பு என்பது மிகத் தெளிவாக புரிந்துவிடும். எதிர்பார்ப்பு இருக்கும்போது உழைப்பினுடைய வேகம் குறையும். உழைப்பின் வேகம் குறைந்தால் எதிர்பார்ப்பது கிட்டாது போகும். எனவே, எதிர்பார்ப்பில்லாது உழைக்கத்தான் பிறந்திருக்கிறோம். உழைப்பதுதான் வேலை என்று முழுமூச்சாக இறங்குகிறபோது நீங்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமான பலன்களை பெறுவீர்கள் என்பது அந்தக் குழந்தைக்கு மூச்சுப் பயிற்சியின்போது யோகாவின் மூலம் சொல்லிக் கொடுக்காமலேயே புரிந்துவிடும். எனவே, பதினாறு வயதில் வெகு நிச்சயமாக இவைகளில் ஈடுபடுத்துவது முக்கியம்.

இப்படி ஒரு குழந்தையை வளர்க்க ஒரு பொறுமை தேவையல்லவா. ஒரு அமைதி தேவையல்லவா. வீட்டிற்குள் சச்சரவில்லாமல் இருக்க வேண்டுமல்லவா. இதை மதம் அல்லது ஆன்மிகம் அல்லது கடவுள் வழிபாடு வெகுநிச்சயம் உங்களுக்குத் தரும்.

தந்தையார் தினசரி யோகா செய்கிறார் என்றால் பிள்ளை செய்யாதிருப்பானா. பெண் பின்பற்றாதிருக்குமா. அம்மாவும் ஈடுபடுகிறாள் என்றால் அந்தக் குழந்தைகளுக்கு எவ்வளவு ஆர்வம் வந்துவிடும்.

"நாங்க ரெண்டுபேரும் சரியாகத் தாங்க இருக்கோம். என் புள்ள தறுதலையா இருக்கே" என்று ஏங்குகின்ற பெற்றோர்கள் உண்டு. அவர்களுக்கு கொஞ்சம் கூடுதலாக கண்டித்து சொல்லித்

தரலாம். வாழ்வில் தோல்வியுறுவாய் என்று பயமுறுத்தலாம். தோல்வி அடைந்தவர்களை உதாரணம் காட்டலாம். வறுமைக் கோட்டுக்கு கீழே பிறந்த நான் இன்று வசதியாக வாழ்கிறேன் என்றால் அதற்கு காரணம் மூச்சுப் பயிற்சியும், யோகாவும் என்று சொன்னால் குழந்தை காது கேட்காமல் போகாது. மனதில் அது தைக்காமல் நகராது. அதையும் மீறி அவன் கட்டுப்படவில்லையெனில் தலையெழுத்து என்று விட்டுவிட வேண்டியதுதான்.

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் இப்படிச் செய்யமாட்டேன் என்று பிள்ளை தடுமாறுகிறபோது இழுத்து உட்கார வைத்து செய்திருந்தால் இந்தத் தடுமாற்றம் வந்திருக்காது. செய்யவிட்டதால்தான் இந்த தோல்வி ஏற்பட்டது என்று இடித்துரைக்க வெகுநிச்சயம் அந்தப் பிள்ளை மூச்சுப் பயிற்சியை யோகாவை இறுக்கப் பிடித்துக் கொள்ளும்.

தோல்விக்கு சோம்பல்தான் காரணம். அதிகநேரத் தூக்கம்தான் காரணம். அதிகநேரத் தூக்கத்திற்கு அதிகமான உணவுதான் காரணம். அதிகமான அலையல்தான் காரணம். வயிறு முட்டத் தின்பதென்பதை ஒருநாளும் குழந்தைகளுக்கு பழக்கப்படுத்தாதீர்கள். பெற்ற தாய் மனசு கேட்கவில்லை. அதனால் மொத்தமும் சரித்துவிட்டேன் என்று கறவை மாட்டிற்கு தீனி வைப்பதுபோல் செய்து விடாதீர்கள். வயிறு அடங்கிற்றல்லவா. போதும் எழுந்திரு என்று சொல்லுங்கள். மறுபடி பசித்தால் சிறிது நேரம் கழித்து உணவை எடுத்துக்கொள். இப்பொழுதே வேண்டாம் என்று தெளிவுபடுத்துங்கள். அள்ளி அள்ளி சோறு போட்டுவிட்டு விடியலில் எழுந்திரு என்றால் எந்தப் பிள்ளை எழுந்திருக்கும்.

## 47

உங்கள் பிள்ளைகளுக்கு ஆன்மிகம் சொல்லித் தரும்முன் நீங்கள் அதை எவ்வளவு தூரம் உணருகிறீர்கள் என்பதை தயவு செய்து தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். எல்லாம் தெரிந்ததுபோல கும்பலோடு கும்பலாக சகலரும் செய்கின்ற பூஜை புனஸ்காரங்களைச் செய்கிறீர்களா, கோயிலுக்குள் கோயிலுக்காக செய்வது என்று குழப்பமாக எதிலாவது ஈடுபடுகிறீர்களா என்பதை புரிந்து



கொள்ளுங்கள். ஆன்மிகம் என்பது எதையும் செய்வது அல்ல. உணர்வது. நீங்கள் எது செய்தாலும் அதை முழுமையாக உணர்ந்து செய்வது.

நீங்கள் நீத்தார் கடன் செய்வதாகவே வைத்துக் கொள்ளுங்கள். நீத்தார் கடன் செய்தால் மகளுக்கும், மகனுக்கும் நல்லது. பேரப் பிள்ளைகளுக்கு உயர்வு என்று செய்கிறீர்களா. அப்படிச் செய்யாது போனால் குற்றம் வந்துவிடுமோ என்று பயந்து அந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகிறீர்களா... அல்லது உங்கள் சொந்த நலனுக்காக ''நமக்கு நாளைக்கு எவனாவது செய்ய வேணாமா'' என்கிற எண்ணத்தோடு செய்கிறீர்களா. இதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு ஒரு நன்றி அறிவித்தல் என்று ஆரம்பியுங்கள்.

இந்த அருமையான தகப்பன் இல்லையெனில் அவன் கடினமாக உழைத்து சிக்கனமாக வாழ்ந்து என்னைப் படிக்க வைத்து நல்ல வேலையில் கொண்டுபோய் சேர்த்து நான் உயர்வதைப் பார்த்து எனக்குத் திருமணம் செய்து வைத்து அந்தத் திருமணத்தில் கம்பீரமாக இருந்து பேரப்பிள்ளைகளை கொஞ்சி வாழ்க்கையை முழுவதுமாக அனுபவித்துவிட்டு, என்னையும் என் குடும்பத்தையும் ஆசீர்வதித்துவிட்டு போனாரே அதற்காக என்று நன்றி தெரிவிப்பது நல்லதல்லவா. அந்தத் தாய் இல்லையெனில் நான் இல்லை. தன்னுடைய உதரத்தினில் சுமந்தவள் என்பதால் மட்டுமல்ல, ஒவ்வொரு கணமும் என் நினைவாகவே வாழ்ந்து எனக்காகவே தன் வாழ்க்கை வசதிகளை சுருக்கிக் கொண்டு என்னுடைய வளர்ச்சியையும், கம்பீரத்தையும் பார்த்து பூரித்து 'அது என் பிள்ளை' என்று பலபேர் முன்னால் கர்வமாகச் சொல்லி அந்தக் கர்வத்தின் காரணமாக உங்களுக்கு இன்னும் அதிக உதவிகள் செய்து உங்கள் மனைவிக்கு வாழ்வின் மேன்மைகளை உணர்த்தி உங்கள் பேரப் பிள்ளைகளுக்கு நல்ல விஷயங்கள் சொல்லி, சட்டென்று ஒருநாள் போய் வருகிறேன் என்று சொன்னது போல மறைந்து போனாளே. அவளுக்கு மனமார்ந்த நன்றியாக நீத்தார் கடன் செய்வது எத்தனை சுகம். நெஞ்சார்ந்த நன்றி என்று தாய் தந்தையரை நினைத்துக் கொண்டுவிட்டால் அந்த நீத்தார் கடனில் எவ்வளவு ஆழமான, உணர்வுப் பூர்வமாக ஈடுபடமுடியும்.

''ஐயரு... என்னா சொல்றாருன்னு புரியலையே''

"வேண்டாம். புரிய வேண்டாம்."

"எதுக்கு தர்ப்பைப் புல்னு. சோத்துருண்டை, எள்ளு ஒன்னும் தெரியலையே."

"நீங்களாக ஏதாவது நினைத்துக் கொள்ளுங்கள்."

"எள்ளையும் தண்ணியையும் கையில எடுத்து அப்படியே இறைக்க சொல்றாரு. இதுக்கு எதுனா அர்த்தம் இருக்குமா"

"இருக்கும். இருக்க வேண்டும். இருப்பதால்தான் சொல்லு கிறார்கள். எல்லாமும் குழப்பமாக இருந்தாலும் உங்கள் உணர்வுப் பூர்வமான அன்பு இருந்துவிட்டால் போதும். நன்றியறிதல் வெளிப்பட்டு விட்டால் போதும். நீங்கள் செய்வது அத்தனையும் மிக ஆனந்தமாகவே இருக்கும்.

தாயே தந்தையே... உங்கள் பசி தீர்க்க இந்த சோற்றுருண் டையை சமர்ப்பிக்கிறேன். உங்கள் பசிதீர்க்க நீர் வார்க்கிறேன். உங்களை கைகூப்பி இந்த இடத்தில் இந்த ஆடி அமாவாசையில் என் அருகே வந்து நான் கொடுக்கின்ற இந்த சிறிய பொருட்களை காணிக்கையாக ஏற்று சந்தோஷமடைய வேண்டும். இங்கே உட்கார்ந்து இத்தனை கம்பீரமாக இதைச் செய்ய முடிகிற தென்றால் அது நீங்கள் என்னை நன்கு வளர்த்ததுதான் காரணம்.

சோற்றுருண்டையை காக்கை தின்று விட்டது. ஐயர் தட்சணையை வாங்கிக்கொண்டு போய்விட்டார். நீரில் இறைத்த ஜலம் நீரோடு கலந்துவிட்டது. நீங்கள் மட்டும் குளக்கரையில் அமர்ந்து நீரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். எந்த இலக்கும் இல்லாமல் நீரைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது மனம் அந்த ஆடி அமாவாசையில் அம்மாவையும், அப்பாவையும் மற்ற முன்னோர்களையும் நினைத்துக் கொள்ளும். உள்ளுக்குள் கைகூப்பும். கண்களின் ஓரம் நீர் திரளும்.

"என்னப்பா ஏன் அழுவற"

மகன் குனிந்து வியப்பாகக் கேட்டாள். திருமணத்திற்கு தயாராக இருக்கிற மகள் அவள். அவளிடம் தோழியைப் போல நன்கு பேச முடியும்.

"உங்க பாட்டி ஞாபகம் கண்ணு. உங்க தாத்தா ஞாபகம்."

"அவங்க ரொம்ப நல்லவங்களாப்பா."



"உனக்கு தெரியாதாடா கண்ணு."

"எனக்குத் தெரியும். இருந்தாலும் உன் வாயால கேட்கணும்."

"அப்பா நல்லபடியா சம்பாதிக்க ஆரம்பிச்சப்பதான் தமிழ்நாட்ல கள்ளுக்கடை திறந்தாங்க. எங்க குடும்பமே பாழாச்சு. எங்கப்பா கால்ல விழுந்து எங்கம்மா அழுதாங்க. நீங்க சிகெரட் குடிங்க வெத்தலை பாக்கு போடுங்க. ஆனா, தயவுசெய்து கள்ளு மட்டும் குடிக்காதீங்க. சாராயம் வேண்டாம். நாலுபேர் முன்னாடி அவமானப்படுத்தற மாதிரி நீங்க நடந்துக்கறதை என்னால பார்த்துகிட்டு சகிச்சுகிட்டு இருக்க முடியாது. பசங்க முன்னாடி துணியில்லாம அணத்தரதும், புரளறதும் வாந்தி எடுக்கறதும் இந்த வீட்டுக்குள்ள நடக்கக்கூடாது. ஒரு நாளைக்கு நாலஞ்சு சிகரெட் குடிக்கறீங்களா பரவாயில்லை. ஒழிஞ்சு போகட்டும். தொடர்ந்து வெத்தலை போடுவீங்களா. பரவாயில்லை. பல்லை ரிப்பேர் பண்ணிக்கலாம். ஆனா, என்ன பேசறோம், என்ன செய்றோம்னு தெரியாம அலையற ஒரு ஆம்பளை வீட்ல இருந்தா அதைவிட அசிங்கம் ஒரு பொம்பளைக்கு இல்லை. நீங்க ஒரேயொரு தடவை தண்ணி போட்டு ஆடினா போதும். நீங்க பெரிய குடிகாரர்னு ஊர்ல உங்களுக்கு பட்டம் வந்துடும். அதுக்கப்புறம் நீங்க குடிக்கவே இல்லைன்னு சொன்னாகூட யாரும் நம்பமாட்டாங்க.

வெளிநாட்ல எல்லாரும் குடிக்கறாங்க. ஆனா, குடிக்கறத அவமரியாதையா நினைக்கறாங்க. அசிங்கமா நினைக்கறாங்க. குடிக்கறவனையே இன்னொரு குடிக்கறவனை பார்த்து குடிகாரன்றான். வேற எங்கேயாவு நடக்குமா இது."

"இன்னிய தேதிக்கு ஆம்பளை குடிக்காட்டி அவன் ஆம்பளையே இல்லைங்கற மாதிரி சிலபேர் பேசறாங்க. அதேமாதிரி குடிச்சா நீ பக்கா குடிகாரன் அப்படின்னு பேசறாங்க. பக்கா குடிகாரன்னு பேசறதுக்கு இவன் ஆம்பளையே இல்லைன்னு பேசறது எத்தனையோ உத்தமம். ஆம்பளையா இல்லையான்னு உனக்குத் தெரிஞ்சா போதும். கண்டவனுக்கும் தெரியவேண்டிய அவசியமில்லை.

ஒரு அவுஸை சாப்பிடுங்க. அப்படின்னு ரொம்ப அன்பா, நட்பா பொங்கி வழியற பாசமா உபசாரம் பண்ணுவாங்க. போடா அப்படின்னு நகர்த்தி வச்சுடணும். நான் வச்சிட்டேன். பொண்ணு ஞாபகம், புள்ள ஞாபகம், உன் ஞாபகமும் வந்தது. வேணவே

வேணாம்னு வந்துட்டேன். முதல் தடவை கொஞ்சம் ஏக்கமா இருந்தது. இப்போ அழுத பிறகு மொத்தமா துடைச்சு விட்டா மாதிரி ஆகிப்போச்சு. நான் குடிக்க மாட்டேன் தாயி என்று மனைவியிடம் சத்தியம் செய்தார்.

இதுதான் என் வாழ்க்கையை பெரிதாக உறுதியாக மலர்வித்தது. அதற்காக அப்பாவுக்கு நன்றி சொல்ல வேண்டும். அதை நினைத்தபோது அப்பாவின் அன்பை நினைத்து அழுகை வந்தது. முகத்தைப் பொத்திக் கொள்ள மகள் மிக அழகாக தகப்பனை அணைத்துக் கொண்டு தலையைத் தடவி ஆறுதல் சொல்வாள்.

## 48

"அப்பா... பாட்டியைப் பத்தி சொல் அப்பா,"

காலடியில் அமர்ந்த பிள்ளை தகப்பனைப் பார்த்து கேட்கும்,

"அது தெய்வம்டா." எமனோடு போராடி உயிரை மீட்டுகிட்டு வந்த சாவித்ரின்னு படிச்சுருக்கோம். நான் கண்ணெதிரே பார்த்தேன். அப்பாவுக்கு ஆக்ஸிடெண்ட். சைக்கிள்ள போனவருக்கு பின்னாடி மோட்டார் சைக்கிள்காரன் வந்து இடிச்சு கெந்தி ஓடியேப் போயிட்டான். அஞ்சடி உயரம் பறந்து பொத்துனு விழுந்தாரு. நிறைய இடத்துல ஃப்ராக்சர்... ஆறு மாசம் வேலையில்லை. அப்பா இருப்பானாங்க, செத்துடுவாருன்னாங்க. ரெண்டு ஆபரேஷன்னாங்க... மூணு ஆபரேஷன்னாங்க. எதுவுமே இல்லாம படிப்படியா மாவு கட்டு போட்டு மருந்து கொடுத்து குணமாயிடுச்சு. திருமாங்கல்யம் தவிர அத்தனை நகையும் அம்மா வித்துடுச்சு. அண்ணன்கிட்டயோ தங்கச்சி கிட்டயோ போய் நிக்கலை. இதெல்லாம் இல்லாத மேற்கொண்டு துட்டு வேணும்னா அப்போ வரேன். இருக்கற வரைக்கும் செலவு பண்றேன் அப்படின்னு அவுங்க போட்ட வெள்ளி அதணா கொடி முதற்கொண்டு கடையிலே போய் வச்சுது.

ஏண்டி குழந்தைங்க நகையெல்லாம் வைக்கிற யார்கிட்டயும் கேட்டா கொடுப்பாங்கலோன்னு சொன்னாங்க. யாராண்டயும் கேட்க வேணாம், நம்ம காசுதான் நமக்கு நல்ல வைத்தியம் தரும். அப்படின்னு கொண்டுபோய் அப்பாவை சரிபண்ணி கொண்டு வந்தாங்க. அப்பா மறுபடியும் ஆபீஸ் போனாரு. மத்தியானம் சாப்பாட்டை எடுத்துகிட்டு வேகாத வெயில்ல ஓடுவாங்க. ஆபீஸ்ல எல்லாருக்கும் அம்மா மேல மரியாதை. கொண்டாந்துட்டீங்கம்மா உங்க புருஷனை அப்படின்னு பெரிய பாராட்டு. இளைச்சு துரும்பா போயிடுச்சு அம்மா. அப்பா மெல்ல மெல்ல தேறினாரு. அப்பா தேறிட்டாரு நல்லா ஆயிட்டாருன்ன வுடனே... அம்மாவும் தபதபன்னு நல்லா ஆயிட்டாங்க. கிட்டத்தட்ட ஒரு வருஷம். நான் எட்டாவது முடிச்சுட்டு ஒன்பதாவது போறேன். தங்கச்சி அஞ்சாவதுலேர்ந்து ஆறாவது. அதுக்கப்புறம் சொந்த வீடு வாங்கி என்னை காலேஜ்ல படிக்க வச்சு, தங்கச்சிக்குக் கல்யாணம் பண்ணி பிரமாதமா நிமிர்ந்தாரு. கஷ்டப்பட்டதெல்லாம் மறந்தே போச்சு. அதெல்லாம் இப்போ ஞாபகம் வந்தது. எவ்ளோ கஷ்டப் பட்டோம் அப்படின்னு. அந்த அம்மாங்கற பொம்பளை இல்லைன்னா நாங்களெல்லாம் அழிஞ்சு போயிட்டிருப்போம். உறவுக்காரங்க முன்னாடி தலைகுனிவா போயிருக்கும். யார் கிட்டயும் பத்துரூபா கடன் வாங்காத நிமிர்ந்தோம் பாருங்க. அதுதான் பெரிய சந்தோஷம்."

"எனக்குக் கூட ரொம்ப நல்ல அப்பாதான்."

மகள் தகப்பனின் காலைத்தடவி கண்ணில் ஏற்றிக் கொண்டாள். தகப்பனுக்கு மனம் நெகிழ்ந்து போயிற்று.

"அது அவங்க சொல்லிக் கொடுத்ததும்மா. எனக்கு என்னா தெரியும். இதே குளக்கரையில நான் சின்னவனா இருக்கும்போது எங்கப்பா உட்கார்ந்து... எங்க தாத்தாவுக்கு ஆடி அமாவாசை அன்னிக்கு தர்ப்பணம் பண்ணுவாரு. பெரியவங்களை நினைச் சுக்கடா நாம நல்லாயிருப்போம் அப்படின்னு என்னையும் சொல்வாரு. நாங்க எல்லாரும் கைகூப்பிகிட்டு நிப்போம்.

எங்கப்பாவை கேட்டேன். நிஜமாவே இந்த சோறை தாத்தாவும், பாட்டியும் வந்து வாங்கிப்பாங்களா. சாப்பிடுவாங்களான்னு கேட்டேன். ஐயரு காதுபட கேட்டேன். ஐயரு ஏதாவது சொல்வாருன்னு. ஐயரு எதுவும் சொல்லலை. எங்கப்பாவையே பார்த்தாரு."

"சாப்பிடுவாங்கன்னு நினைச்சுக்கறதுதான் சந்தோஷம். சாப்பிடுவாங்களா இல்லையா அப்படிங்கறது வந்து குறைபாடு.

சாப்பிடவே மாட்டாங்கன்னு நினைச்சுக்கறது ஒரு அவநம்பிக்கை. நிச்சயம் சாப்பிடுவாங்க. இந்நேரம் சாப்டுட்டாங்க. தண்ணி குடிச்சிட்டாங்க. நல்லாயிருன்னு ஆசீர்வாதம் பண்ணிட்டுப் போயிட்டாங்க அப்படின்னு நினைச்சிக்க உள்ள எவ்வளவு நிம்மதி. நாம நினைச்சுக்கறதுதான் வாழ்க்கை. பத்து வருஷமா இந்த ஐயருகிட்டதான் உட்கார்ந்து தர்ப்பணம் பண்றேன். இந்த ஐயரு ரொம்ப நல்லவர்னு நான் நினைச்சுகிட்டிருக்கேன். அதுல என்ன தப்பு. நினைப்புல இந்த ஐயரு நல்லவரு. அது நிம்மதியா இருக்கு. உலகத்துல எல்லோரையும் அயோக்கியன். திருடன். மொள்ளமாரி. முடிச்சு அவிக்கின்னா என் வாழ்க்கை இல்ல பாழாகப் போகும். என் மனசு இல்ல அல்லோலகலப்படும்.

நிஜம் என்னா. எது வேணாலும் இருந்துட்டுப் போகட்டும். ஆனால், உலகத்துல எல்லோரும் நல்லவங்க. எல்லோரும் நல்லா இருக்கணும்னு நினைச்சுக்கறது பரம சுகம். அதேமாதிரிதான் இந்த சாப்பாட்டை தாத்தாவும், பாட்டியும் சாப்டாச்சு. தண்ணி குடிச்சாச்சு. நீ கேட்கற கேள்வியை நின்னு வேடிக்கை பார்த்து கிட்டிருக்காங்க. அப்படின்னு நினைச்சுக்கோ. கண்ணை மூடிக்க. பாட்டி ஆசீர்வாதம் பண்ணு தாத்தா ஆசீர்வாதம் பண்ணுன்னு நினைச்சுக்கோ. என்னமோ ஒரு சந்தோஷம். ஒரு அமைதி உள்ள வரும். வெறும் நம்பிக்கை. வெற்று நம்பிக்கை இதுதான் எல்லார் வாழ்க்கையும். வெற்று நம்பிக்கைக்குப் பெயர்தான் கடவுள்.''

''கடவுள் இருக்காரா.''

''இருக்காரு.''

''எப்படி சொல்ற.''

''இத்தினி விஷயம் இருக்கே. அவரும் இருந்துதானே ஆகணும். அப்படின்னு நினைச்சிட்டா. காடு, மரம், செடி, கொடி, மிருகம், ஊர்வன, பறப்பன, நீந்துவன, மனிதர்கள் அப்படின்னு எல்லா விஷயமும் இருக்கே. அப்போ கடவுளும் இருந்துதானே ஆகணும். படைக்கப்பட்டது இருக்கு என்றால் படைத்தவன் உண்டல்லவா. இது வெற்று நம்பிக்கை. வெறும் நம்பிக்கை. இது நிம்மதி. இந்த விஷயம் முடிந்து போய்விட்டது.''

அப்பாவுடைய பதிலுக்கு அந்த ஐயர் வாய்விட்டுச் சிரித்தார்.



''எனக்கே கூட உங்க விளக்கம் புதுசா இருக்கு. நல்லாயிருக்கு. அப்படின்னு பாராட்டிட்டு போனாரு. எங்களுக்கெல்லாம் எங்க அப்பா மேல ரொம்ப பெருமையா இருந்தது. வாழ்க்கை முழுக்க வெற்று நம்பிக்கை தான். ஒரு கடல் பொங்கி ஊருக்குள்ள வந்து தமிழ்நாட்டு முழுக்கவும் லட்சம் பேர் செத்துப் போனாங்க. மறுபடியும் கடற்கரைக்குப் போய் உட்கார்ந்து காத்தாடி விட்டு கிட்டிருக்கோம். சுண்டல் சாப்பிடறோம். கடல் அலையில விளையாடிட்டு வரோம். என்ன நம்பிக்கை. கடல் மறுபடியும் பொங்காதுங்கற நம்பிக்கை. இல்ல, கடல் உள்ள வந்துடும். எப்போ வேணா அடிச்சு நாசம் பண்ணும் அப்படின்னு கடற்கரைக்கு வராத இருக்கறவனுக்கு நிம்மதியில்லை. கடற்கரை சந்தோஷம் செத்துப்போய்விட்டது. சுனாமி வர்து வழக்கம்தான் வந்ததுதான். ஆனால், நான் விளையாடிக்கிட்டிருக்கும்போது சுனாமி வராது. நான் சுண்டல் சாப்பிடற போது சுனாமி வராது என்று நினைத்துக் கொள்வது நம்பிக்கை. வெற்று நம்பிக்கை. அதுதான் வாழ்க்கை.

இப்போ நினைச்சுக்க. தாத்தா வந்து சாப்பாடு சாப்டுட்டு தண்ணி குடிச்சுட்டு. நம்பளையே சந்தோஷமா பார்த்துகிட்டிருக் காருன்னு நினைச்சுக்கோ அப்படின்னு அப்பா சொல்ல நானும் தங்கச்சியும் கண்ணை மூடிகிட்டு தாத்தா, பாட்டியை நினைச்சு கிட்டோம். நல்லாதான் இருந்தது. இப்போ அதேமாதிரி, உங்க தாத்தா பாட்டியை நீங்க நினைச்சுக்கோங்க பார்க்கலாம். இரண்டு குழந்தைகளும் கைகூப்பி தாய் தந்தையரும் கைகூப்பி இருவரும் கண்மூடி இரண்டு நிமிடம் நிற்கும்போது என்னமோ ஒருவித சுகம் பரவியது. ஒரு நிம்மதி பரவியது. ஆசீர்வதிக்கப்பட்டோம் என்று தோன்றியது.

''யாரோ தலையைத் தொட்டாபோல இருந்ததுப்பா'' பெண் குழந்தை கூவலாய் பேசிற்று.

காற்றா... தாத்தாவா.... இரண்டும்தான். தொட்டது காற்று. நினைவெல்லாம் தாத்தா. ஆகவே, தொட்டது தாத்தாவாக மாறிவிட்டது. தந்தைக்கு உள்ள நம்பிக்கை மகனுக்கு விதைக்கப் பட்டு விட்டது. மகளுக்கு பரிமாறப்பட்டுவிட்டது. இந்தப் பரிமாற்றம் நல்ல நம்பிக்கையைக் கொடுக்கும். அந்த நம்பிக்கை வாழ்க்கை விஷயங்களை எதிர்த்துப் போராடும் வலுவைக் கொடுக்கும். நல்லவராக இருக்கும் தெம்பைத் தரும்.

நாசமாப் போயிட்டேன். அடுத்த ஆளையும் நாசமாத்தான் பண்ணுவேன் என்று வக்கிற வைராக்கியம் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லாமல் போயிற்று.

ஆன்மிகம் என்பது இவ்வளவு தானா. இதைக் காட்டிலும் விரிவாகவும் ஆன்மிகம் பேசமுடியும்.

## 49

"**மா**லதிக்கும் அனுஷாவுக்கும் சண்டைடம்மா. ரெண்டு பேரும் ஒரே பையனை லவ் பண்றாங்க. அந்த பையனை போய் கேட்டாக்க நான் ரெண்டு பேரையும் லவ் பண்றேன்னு சொல்றான். இவங்களுக்கு என்ன பண்றதுன்னே புரியலை" என்று பித்துக்குளித்தனமாக பெண் பேச தாயார் தலையில் அடித்துக் கொள்கிறாள்.

"எனக்கு கோவம் வந்துடிச்சி. என்னாடா ரெண்டு பேரையுமா கல்யாணம் பண்ணுக்குவன்னு கேட்டேன். அவன் பதிலுக்கு உன்னையும் கல்யாணம் பண்ணிக்கறேன்னு என்னைப் பார்த்து சொல்றாம்மா."

பேசிக் கொண்டே பிள்ளைகள் மடமடவென்று கெட்ட வார்த்தைகள் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட கெட்ட வார்த்தைகளை அவள் அம்மா சொன்னதேயில்லை. பாதி வார்த்தைகள் கேள்விப்பட்டதும் இல்லை.

"நீ போய் அவன்கிட்ட நியாயம் கேட்டது தப்பு."

பையன் ஆரம்பிப்பான். அப்பாவும் அம்மாவும் திகைப்பார்கள்.

"உனக்கேன் தலையெழுத்து நீ ஏன் போற. ரெண்டு பெண்ணுங்களும் லவ் பண்ணுச்சு அவனை. அவன் என்ன பண்ணான். ரெண்டு பேரையும் லவ் பண்ணான். மாலதிய லவ் பண்ற பையனை நான் லவ் பண்ணமாட்டேன்னு அனுஷா தள்ளியிருக்கணும். அனுஷா லவ் பண்ற பையனை நான் லவ் பண்ணமாட்டேன்னு மாலதி தள்ளியிருக்கணும். அவங்க ரெண்டு பேரும் சேர்ந்து லவ் பண்ணா அவனுக்கு லட்டு. தம்பி



ரெண்டாவது லட்டு வேணுமா. விளம்பரம் போல் பேசுவான். தப்பு பொண்ணுங்க மேல, வழியறாளுங்க."

"அந்தப் பையன் என்ன பண்றாம்மா."

"பி.காம். ஃபைனல் இயர்."

"பி.காம். பையனுக்கு என்ன வேலை கிடைக்கும். எ.காம். படிக்கணும். இல்ல, சி.ஏ. முடிக்கணும். அதுக்குப்பிறகு அஞ்சாயிரம் ரூபா. ஆறாயிரம் ரூபா கிடைக்கும். அவன் வாழ்க்கையில அம்பதாயிரம் ரூபா பார்க்கறதுக்கு இன்னுமொரு அஞ்சு வருஷம் ஆகும். ஆக, அடுத்த ஒன்பது பத்து வருஷத்துக்கு அவனுக்கு எந்த ஃபியூச்சரும் இல்லை. அதுக்குள்ள என்ன லவ்வு. அப்பா நிதானமாகக் கேட்டார்.

"அது லவ்வே இல்லைப்பா. அது வெறும் டைம்பாஸ்." கையெறி குண்டு மாதிரி பையனிடமிருந்து ஒரு வார்த்தை வந்து தாய், தந்தையருக்கு நடுவே விழுந்தது.

"அதென்ன டைம் பாஸ்"

"பத்துப் பசங்களுக்கு முன்னாடி ரெண்டு பொண்ணுங்க என்னை லவ் பண்றாங்க பார். அப்படின்னு அலட்டிக்கறதுக்கு, அவளோடயும் சினிமாவுக்கு போவான். இவளோடயும் சினிமா வுக்கு போவான். அப்புறம் இவங்க ரெண்டு பேரையும் விட்டுடு வான்."

தோலுறிக்காத வேர்க்கடலையா வாழ்க்கை. தோல் உரிப்பது தானா டைம் பாஸ். வேர்க் கடலைக்கு தோல் உறிப்பார்கள். இங்கே என்ன உறிப்பார்கள்.

கற்பு என்பது புனிதமானது மட்டுமல்ல. அது கம்பீரமானது. அதுவொரு சுயமரியாதை. உன் அனுமதியின்றி உன்னைத் தொடமாட்டேன். அப்படித் தொட்டுவிட்டால் விடமாட்டேன் என்கிற சத்தியத்தின்பாற் பட்டது. பீச்சுக்கு அழைப்பதும், சினிமாவுக்குப் போவதும், இருளில் உரச உட்கார்ந்து கொண்டிருப்பதும் பிறகு கட்டிக் கொண்டு கொஞ்சுவதும், பிறகு கட்டவிழ்த்து போவதும் சுயமரியாதையா. கம்பீரமா என்பது யோசிக்கப்பட வேண்டும்.

இப்போதைய கேள்வி இந்தக் குழந்தைகளை எப்படி சமாளிப்பது.

இப்படித் தறிகெட்டுப் போவதைத்தான் சுதந்திரம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற பெண்களையும், இளைஞர் களையும் எப்படிப் பேசி புரிந்து கொள்வது. எப்படித் தெளிய வைப்பது. காது கொடுத்து யார் என்ன பேசினாலும் கேட்க மாட்டேன் என்பதுதான் தற்போதைய கலாச்சாரமாக இருக்கிறது. எனக்கு எல்லாம் தெரியுமென்று இருபது வயசுப் பையனும், பெண்ணும் தெள்ளத் தெளிவாக நினைத்துக் கொள்கிறார்கள்.

உலகம் மிக பிரமாண்டமானது. வாழ்க்கை மிகப் பெரியது என்பது அவர்களுக்குப் புரியவேயில்லை. புரிவதற்கு முன்பு பிரிந்துபோய் விடுகிறார்கள். ஆனால், நிறையபேருக்கு மறதி உதவி செய்கிறது. இப்படி நெருக்கமானவர்கள் சிலர் பிரிந்து போனால் அதைப் பார்த்து மிரண்டு போகிறார்கள்.

''அந்தப் பொண்ணு தூக்குப்போட்டுகிட்டு செத்துப் போயிட்டா. காதல் தோல்வி. ஆஸ்பத்திரிக்குள்ள போகும் போதுதான் தெரிஞ்சுது. அவ பிரக்னண்டா இருக்கான்னு. ரெண்டு மூணு பேரோட பழகியிருந்தாளா யார் காரணம்னே தெரியலை. யாரும் ஏத்துக்க மாட்டேன்றாங்க. ஃப்ரெண்டுங்கறான். சிஸ்டருங்கறான். என்னென்னமோ பேத்தறானுங்க. ஐயோ... இவனுங்களையா நாம நல்லவனுங்கன்னு நினைச்சோம் அப்படின்னு பயந்து போயிட்டேன். அனுபவம் சொல்லிக் கொடுத்துவிடும். இது நூறு தகப்பன்களுக்குச் சமம். ஆனால், யாரோ கற்றுக்கொள்ள யாரோ சாக வேண்டுமா என்பதுதான் கவலைக்குரிய விஷயம்.

''உனக்கு துணியைத் தேர்ந்தெடுக்கத் தெரியலாம். ஆனால், துணையைத் தேர்ந்தெடுக்கத் தெரியுமா. அது மிகப்பெரிய வேலையல்லவா. உனக்கு நல்ல துணையைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற அக்கறையும், பொறுப்பும் என்னிடம் இல்லை யென்று நினைத்தாய் என்றால் நீ உன் துணையை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். நான் குடிகாரனாகவோ, சூதாடியாகவோ, பெண் பித்தனாகவோ இருந்தால் உன் துணைக்கு நீ அலைமோதலாம். என் தகப்பனைப் போல் அல்லாது ஒரு நல்ல ஆண்மகன் வேண்டுமென்று நீ பரபரக்கலாம். ஆனால், இன்றளவும் உன் தாய்மீது எனக்கு மரியாதைக் குறைவில்லையே அவளுக்கு என்மீது அன்பு நெல்முனையளவும் இளைக்க வில்லையே.



திருணத்திற்குண்டான சேமிப்பைச் செய்திருக்கிறோமே. உற்றார் உறவினர் என்ற பட்டாளத்தோடு நல்லபடியாக வாழ்ந்திருக்கிறோமோ. கௌரவம் குறையாத வாழ்க்கையை இந்த சமூகத்தில் நான் வாழ்ந்திருக்கிறேனே. இவை அனைத்தையும் நீ ஒதுக்கிவிட்டு ஏன் உன் துணையை நீயே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அது இப்போதைய வாழ்க்கை முறையா. அப்படிப் பட்ட திருமணம்தான் சாலச் சிறந்தது என்கிறாயா. கிரகங்கள், கட்டங்கள், ஜாதகங்கள் எல்லாம் குப்பை என்று தெளிவாகப் புரிந்து கொண்டாயா. இறையருள்தான் இந்தக் குடும்பத்தை நடத்திக் கொண்டு வந்திருக்கிறது என்பது உனக்குத் தெரியுமா. அந்த இறையருள் பற்றி ஏதும் அறிவு உண்டா.

ஒருவனை நம்பி நான் அவனை காதலிக்கிறேன் என்று எவ்வளவு பெரிய வார்த்தை சொல்கிறாய். நீ யார் என்று உனக்குத் தெரியுமா. இது தகுதிக்கு மீறிய பேச்சல்லவா. யோசிக்காது பேசுகின்ற வசனமல்லவா. இந்தக் கம்பீரம் போலியல்லவா.

வாழ்க்கை எளிதல்ல தாயே... எப்போது எங்கே எவ்விதமாய் நிலைகுலையும் என்று சொல்லவே முடியாது. எந்த மனிதருடைய புத்திசாலித்தனத்திலும் வாழ்க்கை நடத்தப்படவில்லை. நடத்தப்படவும் முடியாது என்று பெண்ணிடம் பேசி புரியவைக்க வேண்டும்.

''நான் லவ்வே பண்ண மாட்டேன்ப்பா''

''ஏண்டா...'' அம்மா கேட்பாள்.

''எனக்கு பொண்ணுங்களயே பிடிக்கலைம்மா.''

''ஏன் பிடிக்கலை''

''எல்லாம் அலட்டறலாளுங்க. வெறும் மேக்கப்மா. உச்சி முடியிலிருந்து உள்ளங்கால் வரைக்கும் எல்லாம் பொய். ஒப்பனை. அதுலதான் பசங்க கவுந்தடறாங்க. வெகுளி மாதிரி நடிப்பாங்க. வெகுளியான பொண்ணுக்கும் வெகுளி மாதிரி நடிக்கிற பொண்ணுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. வெகுளியா ஒரு பொண்ணு இருக்கறது தப்பு. ஆனா, அதைவிட ரொம்ப தப்பு வெகுளியா நடிக்கறது.''

''இன்னொரு கேள்விடா... நீ பாராட்டற மாதிரி பொண்ணுங்க இல்லையா.''

"இருக்கே... சூப்பரான பொண்ணுங்க இருக்கு. கம்பெனியை எடுத்து நடத்தி நல்லபடியா முன்னேத்துற திறமையிருக்கிற பெண்களை எல்லாம் எனக்குத் தெரியும். அவங்ககிட்ட நல்ல ஸ்நேகமா இருப்பேன். நிறைய கத்துக்குவேன். நான் அவங்களை லவ் பண்ண முடியாது. அவங்க தனிமரம். அவங்களை லவ் பண்ணா அவங்களை விட ரொம்ப திறமைசாலியா இருக்கணும். மிக வேகமா அவங்க அவங்களைவிட பத்துவயசு பெரிய ஒரு முதலாளியைத்தான் கல்யாணம் பண்ணிப்பாங்க. அதான் சரியா வரும்."

"அப்போ நீ யாரைத்தான் கல்யாணம் பண்ணிப்பே."

"எந்தப் பொண்ணு தன் குடும்பத்தை நேசிக்குதோ அந்தப் பொண்ணு என் குடும்பத்தையும் நேசிக்கும். அந்தப் பொண்ண தான் நான் கல்யாணம் பண்ணிக்குவேன்."

"எங்கப்பா அம்மாதான் உசத்தின்னு என்னைத் தூக்கி அடிச்சுதுன்னா."

"அவங்க அப்பா அம்மாவை நேசிக்கலை அர்த்தம். நேசிக்கற மாதிரி ஏமாத்து வேலை பண்ணுதுன்னு அர்த்தம். மாப்பிள்ளையை வீட்டோட கூப்பிட்டு வச்சுக்கணும்னு நினைக்கறவன் நல்ல அப்பனா." அவன் மகள் நல்ல பெண்ணா. அந்தத் தகப்பன் தன்னை மட்டும் நேசிக்கிறவன். அந்தத் தாய் தன்னைத் தவிர வேறு யாரையும் நேசிக்காதவர். நல்ல தாயும், தகப்பனும் பெண்ணை மாமனார் மாமியாரோடு ஒட்டியிரு என்றுதான் சொல்வார்கள்.

நல்ல மாமனார், மாமியார் எப்படி இருப்பார்கள்.

வீட்டிற்கு வந்த பெண்ணை தன் பெண்ணைப் போல் நினைப் பார்கள். தன்னுடைய பெண் வேறொரு இடத்தில் குடித்தனம் செய்கிறாள் அல்லவா. அவள் குறையில்லாமல் இருக்கிறாள் அல்லவா. அதேபோல இந்தப் பெண்ணும் குறையில்லாமல் இருக்க வேண்டுமென்று நினைப்பார்கள்.

அனுபவக் குறைவுதான் அகங்காரம் கொடுக்கிறது. அகங்காரம் தான் ஆணவமாகப் பேச வைக்கிறது. ஆணவமான பேச்சுதான் அன்பை கொன்றுபோடுகிறது. அன்பு செத்துப் போன இடத்தில் எந்தவித சௌபாக்கியமும் இல்லை. அன்பில்லாத இடம் மிகப் பெரிய தரித்திரம்."



பிள்ளையின் தெளிவு கண்டு அம்மா வியப்பாள். தங்கைக்கும் அண்ணனுடைய பேச்சு புரியும். இந்தக் காலத்துக் குழந்தைகளுக்கு கொஞ்சம் சொல்லிக் கொடுத்தால்போதும். மிச்சம் தானே புரிந்து கொள்ளும். கொஞ்சம் சொல்லிக் கொடுக்கின்ற பொறுமையும், அதைக் கேட்கின்ற சக்தியும் பரஸ்பரம் இருக்க வேண்டும்.

## 50

பக்தியாய் இருப்பது மட்டும் ஆன்மிகமாகிவிடாது. பக்தியைத் தாண்டித்தான் ஆன்மிகமாக இருப்பது. பக்தி என்பது ஒரு பரிதவிப்போடு இருப்பது. நான் உன்னை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். என்னைக் காப்பாற்று. எனக்கு இன்னது வேண்டும். இன்னது வேண்டாம் என்று வேண்டுதலும் வேண்டாமையுடனும் இறைவனோடு கெஞ்சிக் கொண்டிருப்பது. பக்தி என்பது பூஜை புனஸ்காரங்கள், கோயில்கள், கோயில் களிலுள்ள விக்ரகங்கள், விக்ரகங்களுக்கு செய்கின்ற அபிஷே கங்கள், பிறகு ஏற்படுகின்ற ஆடை அலங்காரங்கள், தூப தீப சமாசாரங்கள் இவையெல்லாம் கடந்தது. இவை ஒன்வொன்றிலும் முழுவதும் ஈடுபட்டு பரவசப்பட்டு ஆஹா... ஆத்தா என்னமா ஜொலிக்கறா என்று வியந்து ஒரு மிருதுவான மனநிலையை அடைவது.

கோயிலுக்குள்ள போனவுடனேயே மணி அடிச்சுதுப்பா. நல்ல சகுனம் என்று சின்னஞ்சிறு விஷயங்களுக்கு. புளகாங்கிதப்பட்டுக் கொள்வது, "ஒரு புறா பறந்து டப்புனு வந்து தோள்மேல உட்கார்ந்தது. இது நல்லதுதானே. இல்ல, கெடுதலா" என்று அலை மோதுவது.

"அபிஷேகம் பண்றது காய்ச்சின பால்ல பண்ணலாமா. பச்சைப் பால்ல பண்ணணுமா, எங்க மாமியார் காய்ச்சின பால்லதான் பண்ணணும்கறாங்க. நான் கோயில்ல பச்சைப் பால்லதான் பண்றாங்கன்னு சொன்னேன். கேட்கலை. நீங்க வந்து சொல்லுங்களேன்," என்று சம்பிரதாயங்களில் மாட்டிக் கொண்டு சங்கடப்படுவது.

மனைவி வலதுபக்கம் நின்னு நமஸ்காரம் பண்ணா இல்லிங்களே. நாங்க இடது பக்கம்தான் உட்கார வைக்கறது... என்று இரண்டு கருத்துகளை ஒரே விஷயத்திற்குச் சொல்வது.

இரவெல்லாம் பாட்டுப்பாடி தன்னை மறந்த நிலையில் இருப்பது. விடிந்த பிறகு எரியும் தொண்டைக்கு சுண்ணாம்பு தடவிக்கொண்டு சோர்ந்து படுத்திருப்பது. பிறகு பகலில் பொங்கல் சாப்பிட்டு விட்டுத் தூங்கினால்தான் மறுநாள் இரவு பாடமுடியும். சாப்பிட்டு பாடினால்தானே பக்தி என்ற எண்ணம் உள்ளே கிளறிக் கொண்டே இருக்கும். ஆடிப்பாடினால்தான் பக்தி. அட்டகாசமான ஊர்வலம்தான் பக்தி. அடுத்தவரை அமைதியுறச் செய்யாது உரக்க மேளம் அடித்தும், ஒலிபெருக்கி போட்டும் பாடுவதுதான் பக்தி'' என்று பல்வேறு நிலைகள் இருக்கின்றன.

இந்த சிலை எனக்கு ஆத்துல கிடைச்சுது. இந்த சிலை மேல நான் நூறு பாட்டு எழுதியிருக்கேன் என்பதும் பக்திதான். நூறு பாட்டில் முப்பது பாட்டை பிரபலங்களை வைத்து பாட்டாக்கி இசைத் தட்டுக்களாக்கி விற்பதும் பக்திதான்.

"லங்கைலேர்ந்து விபீஷணன் சீதாப்பிராட்டியை கொண்டுவந்து ராமருக்கு முன்னாடி நிறுத்தறான். ராமர் ஏகவசனத்துல சீதாப் பிராட்டியைப் பார்த்து கண்ணாபின்னான்னு கேள்வி கேட்கறார். சீதாப்பிராட்டி எல்லாத்தையும் கேட்டுட்டு தலைகுனிஞ்சி நிக்கறா. லட்சுமணருக்கு கண்ல ஜலமா பெருகறது. வானரங்களெல்லாம் விம்மி விம்மி அழறது. மனமொடிஞ்சிடக் கூடாதுன்னு அனுமார் இறுக்க நெஞ்சை கட்டிண்டு நிக்கறார். சுக்ரீவன் கண்கலங்க சோர்ந்துபோய் அங்கதன் உட்கார்ந்துட்டார். ராமர் கோச்சுண்டு முடிச்சதும் மெல்ல சீதை தலையைத் தூக்கி உத்தமனேன்னு கூப்பிடறா. எத்தனை கோச்சுண்டாலும் புருஷனை அவள் சிறிதளவும் மரியாதைக் குறைவாக நடத்தாமல் உத்தமனே அப்படின்னு அழைக்கறா'' என்று குழைந்த குரலில் பேச்சாளர் சொல்ல கண்ணில் ஜலம் விட்டுக் கொண்டு சீதையின் சோகக் கதையை கேட்பதும் பக்திதான்.

ராகம், தாளம், பல்லவி என்று பிரித்துக் கொண்டு ராமருடைய பெருமையையோ விஷ்ணுவினுடைய பெருமையையோ சிவனது பராக்கிரமத்தையோ பாடிக்கொண்டு தம்பூரா ஸ்ருதியோடு ஊரை வலம் வருவதும் பக்திதான். சிவ...சிவ... சிவ சிவ....... என்று அந்த பாட்டு சொல்லும். வெறுமனே சிவன் பேரை சொல்லிக் கொண்டு



இருக்கக் கூடாதா என்றுதான் இருக்கும். ஆனால், அந்தப் பாட்டும் அட்டகாசத்தின் வெளிப்பாடாகத்தான் வெளியே வந்து விழும்.

மீண்டும் சொல்கிறேன். பக்தி என்பது ஒரு பரபரப்பு. ஒரு பரிதவிப்பு. இடதும் வலதும் அலைவது. மேலும் கீழும் துழாவுவது. இதையெல்லாம் செய்தால் நல்லது என்று கணக்குப்போட்டு அந்தக் கணக்கின் பிரகாரம் நடப்பது. இது சரி அது சரியில்லை என்று விதி முறைகளில் பிரித்து கொண்டு சண்டையிடுவது. நேர்க்கோடா... குறுக்குக் கோடா... என்று சின்னங்களை மையமாக வைத்து பெரும் சண்டைகளை கிளப்புவது. சைவ சமயமே சமயம் சேர வாரீர் ஜகத்தீரே... என்று அழைப்பது. ஒருவன் வைஷ்ணவனாகப் பிறந்திருக்க பெரும் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று உரத்த குரலில் முழங்குவது. ஆனால், இவையெல்லாம் தாண்டியது.

பக்தி என்பது ஆன்மிகத்திற்கு மெல்ல மெல்ல அழைத்துப் போகும். போக வேண்டும். ஆனால், ஆன்மிகம் என்ற நிலைக்கு வந்துவிட்ட பிறகு பக்தி என்பது அம்மாதிரியான பிரிவுகளி லெல்லாம் மாட்டிக் கொள்ளாது. நீ நான் என்றெல்லாம் கூறு போடாது. ஆன்மிகம் என்பது ஆழ்ந்து சிந்தித்தல். தன்னை உணர்தல். உள்ளே என்ன நடக்கிறது என்று உற்றுப் பார்த்தல். அப்படி உற்றுப்பார்ப்பதின் பொருட்டுதான்... எல்லா அபிஷே கமும் ஆராதனையும் கதை சொல்லலும், நாடகம் நடத்துதலும் பூச்சொறிதலும், பூவாணம் விடுதலும் நடைபெறுகின்றன. ஆனால், இவைகளில் சிக்கிக் கொண்டு இவைகளில் சண்டை யிட்டு எங்கு போக வேண்டுமோ. அங்கு போகாது மக்கள் தேங்கி விடுகிறார்கள். இதை உதறி இன்னும் மேலே நடக்க வேறொரு உலகம் தெரியும். வேறொரு வாழ்க்கை அமையும்.

அது என்ன வேறு உலகம். அது என்ன வேறு வாழ்க்கை.

நீங்கள் மட்டுமே இருக்கின்ற தனி உலகம். வேறு எவரையும் சார்ந்திராத தனி வாழ்க்கை. எதையும் சார்ந்திராத என்பதற்கு, உணவு, உடை, உறைவிடம் என்பதுபற்றி சொல்லவில்லை. யார் கருத்தையும் ஏற்காது, எந்தவித ஏக்கத்திலும் இல்லாது எந்தவித மதத்திலும் சிக்கிக் கொள்ளாது எந்தவித மார்க்கத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாது தான் மட்டும் தனியாக நின்று கடவுளைத் தேடுதல்தான் ஆன்மிகம். அங்கு குரு என்பவர் கூட ஆரம்பகால லட்சணம்தான். இப்படியொரு வழி இருக்கிறது என்று காண்பிப்பதோடு குருவின் வேலை முடிகிறது. பிறகு தனித்த

பயணம்தான் மேற்கொள்ள வேண்டும். உள்ளுக்குள்ளே உட்கார்ந்து பார்ப்பதற்கு ஒருமுறை சொல்லிக் கொடுத்துவிட்டால் அந்த முறையை பிடித்துக் கொண்டு முன்னேற வேண்டும். அதிலேயே மிதந்து கொண்டிருக்க வேண்டும்.

''ஏன் எல்லாம் நல்லாதானே போயிகிட்டிருக்கு'' என்று பக்தியைப் பற்றி உங்களில் சிலர் கேட்கலாம்.

''பொங்கல் சாப்ட்டு ஒன்பது மணிக்கு ஆரம்பிச்சோம் விடிய விடிய நாலு மணி வரைக்கும் நல்லாயிருந்தது. பாட்டும் பஜனையும் தூள் கிளப்புச்சு. நாலரை மணிக்கு நிறுத்தி காபியை குடிச்சுட்டு மறுபடியும் உட்கார்ந்து சில பாடல்கள் பாடிட்டு ஆறு மணிக்கு இட்லி சட்னி சாப்டுட்டு தூங்கப் போயிட்டோம். நல்லாதானே இருக்கு.''

நன்றாகத்தான் இருக்கும். இது என்ன முன்னேற்றத்தை உள்ளே கொடுத்தது என்று யோசித்துப் பார்த்தால் பதில் எதுவும் கிடைக்காது போய்விடும். ஆடிய நேரம், பாடிய நேரம் நன்றாக இருக்கும். அதற்குப் பிறகு அசந்து தூங்கிய நேரமும் சரியாக இருக்கும். அடுத்த நாள் அந்த ஆட்டமும், பாட்டமும் உங்களை என்ன செய்தது. என்ன நிலையில் வைத்திருக்கிறது என்று யோசித்துப் பார்த்தால் மிகப்பெரிய மாறுதல் எதுவும் இருக்காது.

என்னுடைய நண்பரான வருமான வரித்துறை அதிகாரி ஒருவர் என்னிடம் இம்மாதிரியான பதில்களை சொன்னார். ''ரெய்டு போயிட்டு வர சந்தோஷம் இருக்கும்'' என்றார். தபதபன்னு ஒரு அம்பது பேர் ஒரு பணக்காரன் வீட்டுக்குள்ள புகுந்து பேச்சும் சிரிப்புமா. ஆட்டமும் பாட்டமுமா இதென்ன... அதென்ன... அது கொடு... இதை கொடு... இதைத் திற அப்படின்னு கலவரப் படுத்தறா மாதிரி அந்த பஜனை இருக்கும் என்று சொன்னார்.

ஒரு இன்கம்டாக்ஸ் போல பஜனை மார்க்கம். ஒரு பஜனை போல இன்கம்டாக்ஸ் ரெய்டு... அவருடைய சந்தோஷம் புரிகிறது. ஆனால், அதனால் விளையும் பயனென்ன என்பது அவருக்குத் தெரியவில்லை. திரும்பத் திரும்ப யார் வீட்டிலேயோ ரெய்டு போக வேண்டும் என்பது தவிர வேறு எதுவும் இல்லை. ஆனால், ஆன்மிகம் என்பது வேறு யார் வீட்டிற்கோ போகிற ரெய்டு அல்ல. உங்களுக்குள் திரும்பி உங்கள் வீட்டிற்குள் நீங்களே செய்கின்ற ரெய்டு. என்ன அது என்பது பற்றி விரிவாக விளக்குகிறேன்.



## 51

ஆன்மிகம் என்பது என்ன?

கோயிலுக்குப் போவதா.

இல்லை.

விக்ரக வழிபாடா.

இல்லை.

ஜபங்கள் தபங்கள் இறைவணக்கங்களா.

இல்லை.

கூட்டுப் பிரார்த்தனையா.

இல்லை.

ஹோமாதி விஷயங்களா.

இல்லை.

உபவாச விரதங்களா.

இல்லை.

யந்திர மந்திர தந்திரங்களா.

இல்லை.

இவையெல்லாம் தாண்டியதுதான் ஆன்மிகம். இந்த விஷயங்களிலெல்லாம் ஆன்மிகத்திற்கு அழைத்துப் போகின்ற பாதைகள். கடவுள் தேடல் அல்லது தன்னையறிதலுக்குண்டான உத்திகள். இந்த வழிகளை மட்டும் கெட்டியாகப் பற்றிக் கொண்டால் ஆன்மிகம் என்கிற இடத்திற்கு போக முடியாது. இவைகளை ஒவ்வொன்றாகவோ, ஒட்டுமொத்தமாகவோ உதறி விட்டுவிட வேண்டும்.

மரணம் வரையிலும் கோயிலுக்குப் போய்க் கொண்டிருந்தார். அந்தக் கோயிலை பராமரித்துக் கொண்டிருந்தார் என்பதில் எந்த விசேஷமும் இல்லை. அவர் ஆன்மிகத்தில் முன்னேறவில்லை. என்பதே அர்த்தம். உயிர் பிரியும்போது அவரிடம் மந்திரஜபம்

இருந்தது என்றால் சரிதான் என்று சொல்ல வேண்டும். அவர் சரியான இடத்தை தொட்டுவிட்டார் என்று சொல்ல முடியாது. இந்த ஜபங்களில் கோயிலுக்குப் போதலில், யந்திர தந்திர விஷயங்களில், கூட்டுப் பிரார்த்தனையில் ஒரு பயம் இருக்கிறது. அடிப்படையில் என்ன என்று தெரியாத கலவரம் இருக்கிறது. தனக்கு நல்லது நடக்க வேண்டுமே என்கிற எதிர்பார்ப்பு இருக்கிறது.

எந்த எதிர்பார்ப்புமின்றி, எந்தக் கலவரமும் இன்றி எல்லாவற்றையும் தூக்கியெறிந்துவிட்டு நிர்வாணமாக மனம் நிற்பதுதான் ஆன்மிகம். உடனடியாக இந்த இடத்திற்கு வந்துவிட முடியாது என்பதால் தான் கோயிலுக்குப் போதலும் ஜபதபங்கள் செய்தலும் மற்ற விஷயங்களும் நமக்குப் போதிக்கப்பட்டிருக் கின்றன. கோயிலுக்குப் போதலை, ஜபதங்களை, யந்திர தந்திரங் களை கூட்டுப் பிரார்த்தனையை மிக உண்மையாக செய்தோ மானால் அட.... இது இவ்வளவுதானா என்று புரிந்து விடும். புரிந்த கணத்திலேயே அதிலிருந்து மனம் விலகிவிடும். 'தொழுகைக்கு நீ போ. என்னை விட்டுவிடு' என்று சொல்லத் தோன்றும். ஹோமங் களா... யாகங்களா... சரி சரி நல்லபடி நடக்கட்டும். நான் வர வில்லை என்று அதற்கப்பால் நிற்கத் தோன்றும். கோயிலுக்குப் போய்வா இதற்கு இந்த சாமியைக் கும்பிடு என்று உபதேசிப் பார்கள். ஆனால், அவர்கள் கோயிலுக்குப் போவதைப்பற்றி எந்த அக்கறையும் இல்லாமல் இருப்பார்கள் அல்லது வேறு எவருக் கேனும் வழிநடத்தி உதவி செய்ய கோயிலுக்குப் போவார்கள்.

எதிர்பார்ப்பில்லாது எப்படி வாழ்வது?

இளம்வயதில் படிப்பு பற்றிய எதிர்பார்ப்பு. பிறகு வேலை கிடைப்பது பற்றிய எதிர்பார்ப்பு, பிறகு சம்பாதிப்பது பற்றிய எதிர்பார்ப்பு, பிறகு திருமணம் பற்றிய எதிர்பார்ப்பு, பின் குழந்தைகள் வளர்வது பற்றிய எதிர்பார்ப்பு. பிறகு குழந்தைகள் திருமணம் பற்றிய எதிர்பார்ப்பு, பேரப் பிள்ளைகளின் எதிர் பார்ப்பு, பிறந்தபிறகு அவர்களின் வளர்ச்சி பற்றிய எதிர்பார்ப்பு என்று தொடர்ச்சியாக எதிர்பார்ப்பு இருக்கிறதே எப்படி எதிர்பார்ப்பு இல்லாமல் இருப்பது!

இதைத்தான் சம்சாரம் சாகரம் என்று சொன்னார்கள் முடிவில்லாத கடல். நீந்திக் கொண்டேதான் இருக்க வேண்டும். நீந்தி நீந்தி களைப்புற்று கடைசி நிமிஷம் வரையிலும் தத்தளித்துக்



கொண்டுதான் இருக்க வேண்டும். இது மிக ஆபத்தான விஷயம் என்பதை சூட்சுமமாகச் சொன்னார்கள்.

உற்று கவனித்தால் ஒன்று புலப்படும். உங்கள் எதிர்பார்ப்பாலா வாழ்க்கை நடக்கிறது. உங்கள் எதிர்ப்பார்பாலா எல்லாம் நிறை வேறின. உங்கள் திருமணம் மிக நன்றாக அமைந்ததற்கு நீங்கள் காரணமா அல்லது மோசமாக அமைந்ததற்கு நீங்கள் காரணமா. நீங்கள் இத்தனை நாள் உயிரோடு இருப்பதற்கு நீங்கள் காரணமா. நோய் வந்ததற்கும் வராததற்கும் நீங்கள் காரணமா. வேறு ஏதோ ஒன்று உங்களை இழுத்துச் செல்லவில்லையா. எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது என்று உயர் வாக்கியம் ஒன்று உண்டு. இதற்கு என்ன அர்த்தம். நடந்ததெல்லாம் நல்லது என்று அர்த்தம்.

இது நல்லதா. கெட்டதா என்று பகுத்துப் பார்க்கின்ற பலம் கூட மனிதரிடத்தில் இல்லை என்று அர்த்தம். அப்படிப் பகுத்துப் பார்க்கின்ற ஒரு இடத்தை அந்த மனிதர் அடையவில்லை என்று அர்த்தம். என்னால் பகுத்துப் பார்க்க முடியாது. அதனால் எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது என்று ஏற்றுக்கொள்.

எப்படி ஏற்றுக்கொள்வது?

என் தாயின் மரணத்தை, என் தம்பியின் பிரிவை, என் மகளின் வாழ்க்கை முன் பின்னாக அலைவதை நல்லதாக நடந்தது என்று எப்படி ஏற்பது.

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியிடம் இரண்டாவது உலகப்போர் பற்றி ஒரு ஐரோப்பியர் மிகக் கவலையாகப் பேசியிருக்கிறார். அப்போது உலகப்போர் மிக உச்சகட்டத்தில் நடந்து கொண்டிருந்த நேரம் அதனால் உலகம் எங்கும் யுத்தம் நடக்காத இடங்களும் பாதிக்கப்பட்ட நேரம். உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடிய நேரம் குவியலாய் மக்கள் செத்துக் கொண்டிருந்த நேரம். ஹிட்லர் என்பவரால்தான் இது அத்தனையும் நடைபெறுகிறது என்று கொந்தளிப்போடு அந்த ஐரோப்பியர் சொல்ல, "ஏதோ ஒரு நல்ல காரணத்திற்காகத்தான் ஹிட்லர் இதை நடத்திக் கொண்டிருக் கிறார் என்றும் நினைக்கலாம் அல்லவா, என்ன காரணமாக இருக்கும். யோசித்துப் பாருங்கள்" என்று பகவான் ரமணர் பதில் சொல்லியிருக்கிறார்.

இரண்டாம் உலகப்போர் பூபாரம் குறைந்திருக்கிறது. இரண்டாம் உலகப்போர் விஞ்ஞானத்தை வளர்ந்திருக்கிறது.

இரண்டாம் உலகப்போர் ஐரோப்பாவின் கெடு பிடிகளை குறைத்திருக்கிறது. இரண்டாம் உலகப்போர் அமெரிக்காவை வளர்த்து ஆங்கிலேயர்களை அடக்கி வைத்திருக்கிறது. இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்ததற்குக் கூட இரண்டாம் உலகப்போர் தான் காரணம் என்று சொல்பவர்கள் உண்டு.

யுத்தத்தில் அடிப்பட்டுச் சிதறிய ஆங்கிலேயர்கள் இந்த இந்தியப் பிரச்னை கைவிட்டுப் போனால் சரி என்று இந்தியாவை உதறி விட்டார்கள் என்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் சொல்வதுண்டு. எந்தவொரு விளைவுக்கும் நல்லதும் உண்டு, கெட்டதும் உண்டு. இந்த இரண்டையும் ஒன்றாக ஏற்றுக்கொள்கிற பக்குவமே ஆன்மிகம். எது நடந்தாலும் நன்றாக நடந்தது என்று சொல்லுகின்ற தெளிவே ஆன்மிகம். எனக்கு இப்படித்தான் நடக்க வேண்டும். என்னுடைய தாயார் இன்னும் இருபது வருடங்கள் இருந்திருக்க வேண்டும் என்று நான் பிடிவாதம் பிடித்தால் நான் வளரவில்லை என்று அர்த்தம்.

''வயசான தாயார் செத்துப்போனதுக்கு ஆறுதல் பண்ணிக்கலாம். இருவது வயசு பொண்டாட்டி கண்ணு முன்னாடி கார் இடிச்சு செத்துப் போயிட்டாயா'' என்று பாதிக்கப்பட்ட எவரோ கதறலாம். அதையும்கூட எது நடந்தாலும் நல்லதாகவே நடந்தது என்று ஏற்றுக்கொள்கிற பக்குவம், யோசிப்பு. அலசிப் பார்க்கின்ற திறன் வர வேண்டும்.

யாரோ ஒருவரின் மனைவி இருபது வயதில் இறந்துபோன துக்கத்தை நீங்களோ, நானோ அலசிப் பார்க்க முடியாது. அது நமக்குச் சம்பந்தமில்லாத விஷயம். அவர்... அந்த பாதிப்புடையவர் அதை அலசிப் பார்த்தால் அதில் ஏதோ நல்லது இருப்பது நிச்சயம் தெரியும். அலசிப் பார்க்கின்ற மனப்பக்குவத்திற்கு வரவேண்டும். அப்படி வருவதே ஆன்மிகம்.

இந்த மாதிரி பாதிப்பு உங்களுக்கு ஏற்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்று உட்கார்ந்து யோசிக்கலாம். அந்த யோசிப்பு ஆன்மிகத்திற்கு அழைத்துப்போகும். மற்றபடி ஐயோ... பாவம்... தலையெழுத்து என்று அவரைவிட நாம் அதிகமாகக் கதறினால் நமக்கு பக்குவம் போறவில்லை என்று அர்த்தம்.

''நான் சொல்லுகின்ற இந்த விஷயங்களெல்லாம் கசப்பாக, முள்ளாக, பைத்தியக்காரத்தனமாகத் தோன்றும்.''



''இல்லை. நிச்சயம் அப்படி இல்லை.'' ஊர் முழுவதும் ஹிட்லரை தூற்றிக் கொண்டிருக்க பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி அந்த பிறப்புக்கும், அந்த செயலுக்கும், அவர் நடவடிக்கைக்கும் ஏதோ ஒரு காரணம் இருக்கிறது என்று அமைதியாக ஏற்றுக் கொண்டதுதான் மிகப்பெரிய விசேஷம்.

என்னுடைய வாதம் அபத்தமாகவும், அநியாயமாகவும் இருக்கும். சமீபத்தில் நடக்கின்ற போராட்டங்களை எடுத்துக் காண்பித்து இதற்காக போராடுகிறார்களே. இது தவறா என்று கேள்வி எழும். இதற்கு பதில் சொல்ல முடியாது. ஏனெனில் ஆன்மிகம் விவாதங்கள் அற்ற இடம். முடிவான முடிவு. தெளிவான அமைதி. பூரணமான சரணாகதி. பெரிதினும் பெரிது கேட்டுவிட்ட நிம்மதி.

## 52

''எங்க வச்சிருக்க காசு. தங்கம் வெள்ளியெல்லாம் கொண்டு வந்து கொடுக்கறாங்க. எங்க அது'' என்று பகவான் ஸ்ரீ ரமணர் வசித்த ஆசிரமத்திற்கு வந்து அவரையும், அவரது அன்பர்களையும் பிரம்பால் தொடையில் அடித்து அதட்டினார்கள்.

''எந்தக் காசும் இல்லை'' என்று அடியை வாங்கிக் கொண்டு சொன்னாரே தவிர பதிலுக்கு தடியெடுக்கவில்லை. மிரட்டவில்லை. 'முடிந்தால் தேடி எடுத்துக் கொள்' என்று மறுப்பு சொல்லாமல் இருந்தார். ஏனெனில் அவர் பற்றிக் கொள்ள, தன்னுடையது என்று வைத்துக் கொள்ள தனக்கு வேண்டும் என்று ஆர்வத்தோடு எடுத்துக் கொள்ள எதுவுமில்லை. கிழிந்த கோவணத் துண்டு தவிர வேறு எந்த சொத்தும் இல்லை.

ஆன்மிகம் என்ற பெயரில் மிகப்பெரிய சொத்துக்கள் சேர்ப்பவரெல்லாம் யார் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். குடும்பத்தை விட்டு விட்டு நிலமும், பணமும், புகழும், அரச போகத்தையும் பற்றிக் கொண்டிருக்கிறபோது அந்த இடத்தில் என்ன ஆன்மிகம் வரும். அவருக்கு என்ன ஆன்மிகம் சொல்லித் தரத் தெரியும். நாம் கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும்.

"சாதத்துக்கு தொட்டுக்கறதுக்கு அப்பளாம் இருந்தா நன்னாயிருக்குமே"

"அப்படியா, அப்பளாம் அம்மா சொன்னாள் இடு." பகவான் ஸ்ரீ ரமணர் உதவி செய்தார்.

"பிஞ்சுக் கத்திரிக்கா இருந்தா கத்தாரிக்காயை முழுசா நறுக்கி உள்ள காரம் திணிச்சு கறி பண்ணலாமே". அம்மா கேட்டாள்.

"அப்படியா. செய்யலாம்" என்று சொல்ல யார் கேட்காமலும் பிஞ்சுக் கத்திரிக்காய் அன்று மாலை வந்தது.

ஸ்ரீ ரமணர் இது வேண்டுமென்று கேட்கவில்லை. வந்ததை அனுபவிக்காமலும் இல்லை. இந்த இடத்தில் ஒரு மகா வாக்கியம் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆசை என்பது அறுக்கப்படாமலும் அனுபவிக்கப்படாமலும் இருக்க வேண்டும். இந்த வாக்கியத்தை மனசுக்குள் போட்டு வாழ்க்கை முழுவதும் யோசித்துக் கொண்டிருக்கலாம்.

இப்படி இருக்க முடியுமா. என்ன சொல்கிறது இந்த வாக்கியம் என்று திரும்பத் திரும்ப அசைபோட்டுக் கொண்டிருக்கலாம். ஆசை அறுமின் ஆசை அறுமின் என்பதும் ஆசையல்லவா. எனவே, ஆசை அறுக்கப்படக் கூடாது. ஆசையாய் அனுபவிப்பது ஆழக்குழியில் தள்ளிவிடுமல்லவா. ஒன்று கிடைத்தபோது அதை அனுபவிப்பதும் கூடாது.

அப்பளத்தையும், கத்திரிக்காய் கறியையும் ரமணர் எடுத்துக் கொண்டார். அனுபவிக்கவில்லை. அதனோடு எந்த ஒட்டுதலும் இல்லை.

"நிஜமாவா அப்படியா இருந்தார் பகவான் ரமணர்" என்று கேட்கக் கூடாது. உங்களால் அப்படி இருக்க முடியுமா என்று யோசியுங்கள். பகவான் ஸ்ரீ ரமணரை பரீட்சித்துப் பார்ப்பது நமது வேலையல்ல. என்னை நான் பரீட்சித்துப் பார்ப்பது, உங்களை நீங்கள் பரீட்சித்துப் பார்ப்பதுதான் முக்கியமான வேலை.

ஆசை அறுக்கப்படாமலும் அனுபவிக்கப்படாமலும் இருக்க முடியுமா என்று நம்மை நாமே கேட்டுக்கொள்வதுதான் வேலை. இது ஆன்மிகத்திற்கு அழைத்துப்போகும்.

நூற்றுக் கணக்கில் ஆயிரக் கணக்கில் புடவை வாங்கி எப்பொழுது போதும் என்று அலுக்கிறதோ அப்போது ஒரு தெளிவு



வந்து வந்துவிடுகிறது. அது ஐந்தாவது புடவையிலும் வரலாம். ஆயிரத்தோராவது புடவையிலும் வரலாம். வந்தால் உயர்வு. வராது போனால் வேதனை.

சிங்காரித்துக் கொள்ளுதலில் ஒரு பொய்மை இருக்கிறது. உங்கள் தோற்றத்தின் உண்மையை மறைத்து வேறொரு தோற்றத்தை நீங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதாவது உங்களைப்பற்றி மற்றவர்கள் கண்ணில் மாறுதலாகத் தெரிய வேண்டுமென்று மெனக் கெடுகிறீர்கள். நீங்கள் எத்தனை மேக்கப் போட்டுக் கொண்டாலும் மலமூத்திரதாரிதான். 'ஆஹா என்ன அழகு' என்று நடிகையை வியப்பவர் சறுக்குகிறார். உடல் வலிவும், அதிகாரமும் நிரந்தரமல்ல. நேற்று கொடிகட்டிப் பறந்தவர் இன்று கைகட்டி நிற்கிறார். நேற்று கர்ணமடித்து நின்றவர் இன்று தள்ளாடி நடக்கிறார். இதனால்தான் சித்த புருஷர்களுக்கு அதாவது ஆன்மிகத்தில் லயித்தவர்களுக்கு கலைகளில் பெரிய ஈடுபாடு இல்லை.

அவர்களுடைய சங்கீதம் வேறு மாதிரியானது.

சிற்பங்களை, கோபுர பொம்மைகளை கட்டிடங்களை அவர்கள் ஆதரிப்பதில்லை. 'நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில் சுட்ட கறி சட்டுவம் சுவையறிந்து கொள்ளுமோ' என்று சொல்கிறார்கள்.

அழகான விக்ரகம் அவர்களுக்கு நட்ட கல். வெறும் கல். கறியை பிரட்டிப் பிரட்டி அந்த சட்டுவம், அந்தக் கரண்டி வதக்குகிறது. ஆனால், அந்தக் கரண்டிக்கும், அந்தக் கறிக்கும் என்ன சம்பந்தம். அவர்களுடைய இசையெல்லாம் செய்திகள் சொல்லுகின்ற ஒரேவிதமான சுழற்சியில் இருக்கும். ஆடு பாம்பே விளையாடு பாம்பே என்று வெறுமே சுற்றிச் சுற்றி ஒரே விதத்தில் வரும். ராகம் தாளம் பல்லவி என்றோ, ஆலாபனை என்றோ, மிருதங்கம் என்றோ வீணை என்றோ, தம்பூரா சுருதி என்றோ பார்க்காது. கலை நுணுக்கங்களில் மனம் போனால் இறை விஷயங்கள் பின்னுக்குத் தள்ளப்படும்.

"அப்படியா. இது நியாயமான பேச்சா. இல்லையே கலையில் தானே இறைவன் இருக்கிறான். நுணுக்கமான நாட்டியத்தில், அழகான பாடல்களில், ஆலாபனைகளில், ஓவியங்களில் அற்புதமாக வெளிப்பட்ட சிற்பத்தில் கடவுள் காணப்படுகிறாரே."

நீங்கள் வாதாடினால் அதற்கு மௌனம்தான் பதில். ஆடி முடித்து விட்டு, பாடி முடித்து விட்டு, கல்லை சுற்றிச் சுற்றி வந்து கும்பிட்டு விட்டு, கதையை, கவிதையை, ஓவியத்தை தலையில் வைத்துக் கொண்டு அலைந்து விட்டு வாருங்கள் என்றுதான் சொல்ல வேண்டும். உள்ளுக்குள்ளே ஏற்படுகின்ற ரீங்காரத்தில் மனம் லயித்துவிட்டால் இவையெல்லாவற்றையும் மனம் அன்னியமாக்கிவிடும். நான் சொல்வது மிகமிக கடினமான விஷயம். இந்த இடத்தை எப்படி அடைவது.

இந்த இடத்தை அடைவதற்கு முதல் விஷயம் தனித்திருத்தல். எவருமே முக்கியமில்லை என்று விலகியிருத்தல். நான் சொல்வது வீட்டை உதறிவிட்டு போவதல்ல. வீட்டுக்குள் இருந்தபடியே எவரின் அவசியத்தையும் பெரிதாகக் கருதாது பாசப் பிணைப்பில் தவிக்காது இருத்தல். கடமையைச் செய்துவிட்டு மௌனமாக இருத்தல். விட்டேத்தியாக இருத்தல். இதற்குமேல் இதை வார்த்தையாக்க முடியவில்லை. அவசியம் ஏற்பட்டாலொழிய பேசாதிருக்க முடியுமா என்று பார்த்தல். பேச்சு குறைந்தால் மனம் உள்நோக்கித் திரும்பும்.

இது எளிதல்ல. பேசிப் பேசி பழக்கப்பட்ட மனம் தனியாகப் பிதற்றத் துவங்கும். உரக்க சுவர் பார்த்து 'நான் யார் தெரியுமா' என்று அலட்டத் துவங்கும். இந்த ஆபத்தைத் தாண்டி மனம் உள்ளே போகத் துவங்கும். என்ன சிந்திக்கிறோம் என்று கவனிக்கத் துவங்கும். சில சமயம் சிந்திப்பது நின்றுபோய் டக்கென்று ஒரு வெறுமை படரும். ஐயோ... இது வேண்டாமே என்ற அலறல் வரும். எதற்கு மௌனமாக இருக்கிறது. இது பெரிய கொடுமை பேசிச் சிரிக்கலாமே என்று மனம் மாற்றுத் தீர்மானம் போடும். முன்னைவிட அதிகமாக இளித்து உரசி அதிகம் பேசி கெக்கலித்து சீரழிவீர்கள்.

என் இனிய ஸ்நேகிதமே... மௌனம் நோக்கிப் போவது எளிதே அல்ல. அது முள் காடு. நீரற்ற பாலைவனம். சிறு வயதிலிருந்தே பயிற்சி இருந்தால் தாண்டுவது எளிது. சிறிது நேரம் மௌனம் பழகியவர்கள் மௌனமான இடத்தில் சில நாட்கள் இருந்துவிட்டு வந்தவர்கள் வேறொரு சகதியில் சிக்குவார்கள். அவர்கள் உபநியாசிகள் என்று பெயர். தனக்குத் தெரிந்துவிட்டது என்ற மமதையுடன் போதிக்கத் துவங்குவார்கள்.



சிறிது நேரம் மௌனமாக இருந்த பலத்தால் கோர்வையாக சிந்தித்து, கோர்வையாகப் பேசுவார்கள். பேசிப்பேசி உள்ளுக்குள் ஆட்கள் இல்லாதபோதும் தனக்குள் பேசிப்பேசி காணாமல் போவார்கள். மேற்கோள் காட்டுவார்கள்.

மௌனத்தை மௌனம் தாண்டிய அமைதியை எந்த வார்த்தையாலும் விளக்க முடியாது. மௌனத்தால் வலிவு பெற்றவர்கள் தன் மௌனத்தை இன்னொருவருக்குள் அமைதியாய் புகுத்தி விட முடியும். இது வேறு விஷயம்.

மௌனம் தாண்டிய விஷயத்தை சொல்ல முயல்வது வீண் எனினும் பல பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

என்னுள் விளைந்ததை நானும் விளக்க முயற்சிப்பேன்.

## 53

மதங்களின் நோக்கம் தன்னை அறிதல் அல்லது கடவுளை தெரிதல் என்பதாக இருப்பினும், அது உடனடியாக கரையேற்றும் விஷயமில்லை. மதங்களால் மனிதர்களை பக்குவப்படுத்தி கரைசேர்க்க பல ஜென்மங்களாகும். கடவுளை நோக்கி அழைத்துப் போவதற்கு பதிலாக மதங்கள் மனிதர்களின் வன்முறையை தூண்டிவிட்டு குழு மனப்பான்மையை அதிகரித்து மிருகங்களாக மாற்றவும் வாய்ப்பிருக்கிறது. அப்படி நடந்ததாக சரித்திரம் சொல்கிறது.

கொள்ளையும், கொலையும், களவும், காமமும் மதத்தின் பெயரால் நடந்திருக்கின்றன. எதற்காக எந்தச் சடங்கு ஏற்பட்டது என்று கூடத் தெரியாமல் வெறும் சடங்கையே பிடித்துக்கொண்டு அந்தச் சடங்கு முற்றிலும் கோணல் சடங்காக மாறுகின்ற நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றது.

என் கோயில். உன் கோயில். உன் சின்னம். என் சின்னம். என் கடவுள். உன் கடவுள். உன் மதம். என் மதம் என்று பிளவுபட்டு, பிரிந்து நின்று கடவுள் ஏக விஷயம் என்று தெரிந்தும் கூட சிவன் பெயரைச் சொன்னால் வெட்டு. விஷ்ணுவின் பெயரைச் சொன்னால் குத்து. இவர் நம்மவர். அவர் அன்னியர். எனது

இறைதூதர் அன்புதான் போதித்தார். அதனால் என்ன, அவரை உனக்குப் புரியவைக்க நான் ஈட்டியும், வாளும், வில்லும், பீரங்கியும் கொண்டு வந்து சகட்டு மேனிக்கு தாக்குவேன். குழந்தைகளையும் கிழவர்களையும் பெண்களையும் அடித்து துவம்சம் செய்வேன். வீட்டை எரிப்பேன். நாட்டைச் சுடுகாடாக மாற்றுவேன் என்று அன்பு கொட்டிப் பறந்தது. ரத்தச் சாயம் பூசிக் கொண்டது.

மதங்கள் கடவுளை நோக்கி வழிநடத்துவது அல்லாமல் முற்றிலும் எதிர்ப்பதமாய் பேய்த்தனத்திற்கு அழைத்துப் போகிறது. சாத்தான் கைகொட்டிச் சிரிப்பான்.

துறவும், யோகமும் கடவுளிடம் கொண்டுபோகும். நீ தனி என்று உணர்ந்து கொண்டு எந்தக் குழுவிலும் சேராமல் தனித்திருப்பின் தெரியும் என்று உபதேசிக்கப்பட்டது. கடைசிவரை மூச்சு முன்னும், பின்னும் அலைந்ததே தவிர முழுமையடைய வில்லை. தெளிவு பிறக்கவில்லை. அறுபது வருடத்திற்குப் பிறகு தவறான வழியில் வந்து விட்டோமோ என்று சந்தேகம் ஏற்பட்டது. யோக வாழ்க்கையில் ஈடுபட்ட பலர் வெறுமையை அடைந்தார்கள். அவர்களில் பலரே கடவுள் இல்லை என்ற முழக்கத்திற்கு வந்தார்கள். பிறகு அறிவுதான் பிரதானம் என்றார்கள். மந்திர தந்திர வைத்திய சாத்திரம் என்று பல்வேறு விஷயங்களை கையில் எடுத்துக் கொண்டார்கள். வெறுமே வாழ்ந்துவிட்டுப் போவோம் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

கடவுள் இருப்பதாகத் தெரியவில்லை. வெறுமே வாழ்ந்து விட்டுப் போவோம் என்று வந்த பின்னரும் உள்ளே நிறைவு இல்லை. வாழ்ந்துவிட்டுப் போக முடியவில்லை. வாழ்வதுபற்றி எதுவும் விளங்கவில்லை. வன்முறையோடு வாழ்வதா, வன்முறையற்று வாழ்வதா. வன்முறையற்று வாழ்வது என்றால் எதற்கு என்ற கேள்வி வருகிறதே. கடவுள் தண்டிப்பார் என்று சொல்ல முடியாதே. வன்முறையோடு வாழ வேண்டுமென்றால் அதில் நானும் சிக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறதே. வேண்டாம் அடிக்காதே என்றால் யார் கேட்கிறார்கள். அடிக்கு அடி, உதைக்கு உதை, அழிவுக்கு அழிவு என்று போட்டி வந்துவிட்டால் ஒருநாள் வெற்றி, மறுநாள் தோல்வி என்று மாறிமாறி ஏற்படுகிறது.

சுதந்திரமான அமைதி, பூரணமான அமைதி என்று ஏற்பட வில்லை. உண்மையில் பூரணமான அமைதி உண்டா என்ற பெருங்கேள்வி எதிரே வந்து நின்றது. ஆனால், மிகத் தெளிவாகவும், பூரண அமைதியோடும் சிலர் பூமியில் தோன்றுவதைக் கண்டு இதுபற்றித் தெரியாதவர்கள் திகைத்தார்கள். இந்தத் தேடல் உள்ளவர்கள் வியந்தார்கள். என்ன மாயம் இது. எப்படி இவனுக்குக் கிடைத்தது என்று வெதும்பினார்கள்.



அப்போது ஒன்று புரிந்தது. யோகமோ, அறிவோ, வன்முறையோ, படையெடுப்போ, புத்திசாலித்தனமோ எதுவும் எங்கேயும் அழைத்துப் போகாது. ஒரு எதிர்பார்ப்போடு துவங்கிய எதுவும் சரியாக நிறைவேறாது. குறி இருப்பின் குறி பிசகுவதும் உண்டு. உண்மையை போதிக்க வேண்டிய மதம் முற்றிலும் படையெடுப்பை போதித்தலல்லவா. நட்பை போதிக்க வேண்டிய மதம் மிகப்பெரிதாய் மனிதர்களை பிரித்துப்போட்டு அடித்துக் கொல்லச் சொன்னதல்லவா. இவன் தவறு, அவன் தவறு, இது தவறு என்று வம்பும், வழக்கும், அடிதடியும் வந்தன அல்லவா.

அப்படியானால் எதிர்பார்ப்பு இல்லாது எப்படி வாழ்வது. அப்படி விசாரித்துப் பார்க்கையில் பார்வை தவறு என்பதை புரிந்து கொண்டார்கள்.

அது என்ன பார்வை தவறு.

நமது பார்வை வெளிப்புறமாக இருக்கிறது. உள்புறமாக அகம் நோக்கித் திரும்பவில்லை. உள்ளேயிருந்து பார்வை வராது. புத்தியிலிருந்து கண்களிலிருந்து பார்வை வருகிறது. கண்டதே காட்சி. கொண்டதே கோலம் என்ற முடிவு ஏற்பட்டது.

அவனிடம் பத்துப் பசுக்கள் இருக்கின்றன. அவன் சுகமாக இருக்கிறான் என்று எதிர்வீட்டுக்காரனை நோக்கி பொறாமைப் பட்டான். அவன் சுகமாக இருக்கிறானா அல்லது நாம் சுகமாக இருக்கிறோமா என்று புரியவில்லை. அவன் சுகமாக இருக்கிறான் என்று நாம் கற்பனை செய்து கொண்டோம். பத்து பசுக்கள் இருப்பது மிகப்பெரிய சுமையாக அந்த எதிர்வீட்டுக்காரன் உணர்ந்துபட்ட அவஸ்தையை உணராது எந்த சுமையுமில்லாமல் வாழ்கிறோமே என்ற சுகம் தெரியாது, பத்து பசுக்களில் ஐந்து பசுக்களையாவது நான் கவர்ந்து விட வேண்டும் என்று திட்டமிடுகிற பொழுது பிரச்னை ஏற்படுகிறது. பார்வை அடுத்தவன் சுகமாக இருக்கிறான் என்ற எண்ணத்தால் ஏற்பட்டு விடுகிறது.

நதியின் மறுபக்கம் மிகப் பசுமையாக இருக்கிறது என்று எல்லோரும் நினைத்தார்கள். ஓடத்தில் ஏறி ஈட்டிகளுடன், வாட்களுடன், குதிரைகளுடன் மறுபக்கம் போய் இறங்கினார்கள். அங்கிருந்து திரும்பிப் பார்த்தால் தன்பக்கம் அதைவிட பச்சையாக இருப்பதாக தோன்றியது. இந்தப் பக்கம் பாழ்வெளிகள் அதிகம் தெரிந்தன. எனவே, பார்வை தவறு. எல்லாப் பக்கமும் துக்கமும், எல்லாப் பக்கமும் சுகமும் இருக்கின்றன என்கிற அமைதி ஏற்படவில்லை. இது பார்வைக் கோளாறு, மனதினுடைய அனுமானம்.

புலிக்கு நகமும் கூரிய பல்லும் இருக்கின்றனவே. எனக்கு இல்லையே என்று ஆடு ஏங்கியது. ஆடு எங்கேயும் இருக்கின்ற தாவரங்களை உண்டு மகிழ்ந்து சுகமாக இருக்கிறதே. என்னைப் போல் மூச்சிறைக்க பேயோட்டம் ஓட வேண்டியதில்லையே என்று புலி வெதும்பியது. யானையின் உருவம் கண்டு முயல் பயந்தது. முயல் பாய்ந்து குதித்து பதுங்குவது பார்த்து யானை மிரண்டது. எந்த குழிக்குள் நான் ஒடுங்கிக் கொள்ள என்று ஏங்கியது.

எனக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கை இப்படித்தான் என்ற அமைதி எந்த மிருகத்திற்கும், எந்த உயிரினத்திற்கும் ஏற்படவில்லை. உலகம் துவந்த மயமாகியது. துவந்தம் என்றால் இரண்டானது. நான், நீ என்று இரண்டாகப் பிரிந்தது. அவன் உயர்வு, நான் தாழ்வு. அது சிறப்பு, இது அபத்தம். மின்னல் வெட்டி இடி இடித்து மழை பெய்கிறபோது யானை வெறுமே நனைந்து நிற்கும். பூனை பாறையிடுக்கில் குளிர் தாக்காது கண்களை மூடிக்கொண்டு நிற்கும்... மழையா... நான் பார்க்கவில்லையே என்று சொல்லும். யானை கோபம் கொள்ளும். அடித்து மிதித்துவிடுகிறேன் பார் என்று கிளம்பும். பூனை உச்சாணி கிளையில் இருக்கும். இவை இரண்டில் எது உயர்வு. எது தாழ்வு. ஒப்பீடு என்று வந்தால் இரண்டு பக்கமும் பேசலாம். ஒப்பிடாமல் இருந்தால், என்னை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தால், எனக்குள்ளேயே பார்வையை திருப்பியபடி இருந்தால் அப்பொழுது நிறைவு ஏற்பட்டுவிடும்.

என்னவாக வாழ்கிறேன். அரசனாகவா அடிமையாகவா.

அரசனைக் கழுவினில் ஏற்றினார்கள். அடிமைகளை விடுவித்து விட்டார்கள். அடிமைகளை பிடித்துக் கொண்டார்கள். அரசனுக்கு முடி சூடினார்கள். இவை மாறி மாறி ஏற்படும். கோடைக்குப் பிறகு மழை. மழைக்குப் பிறகு குளிர். குளிருக்குப் பிறகு இலையுதிர் காலம். இலையுதிர் காலத்திற்குப் பிறகு இலைகள் துளிர்க்கும். இலைகள் துளிர்த்த பிறகு வசந்தம். வசந்தத்திற்குப் பிறகு கோடை. பருவம் எப்படி மாறிமாறி இருக்கிறதோ வாழ்க்கையும் அவ்விதம்தான்.



அப்படியானால், என்ன செய்ய வேண்டும்.

## 54

பருவ காலங்கள் எப்படி மாறிமாறி வருமோ அவ்விதம்தான் வாழ்க்கையும்.

அப்படியானால் என்ன செய்ய வேண்டும்.

வருகின்ற எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதாவது செயலற்று இருப்பதா.

இல்லையே. செயலற்று இருக்கும்படி எவரும் சொல்லவில்லை. காரியம் செய்யாமல் உங்களால் இருக்க முடியாது.

கோடை காலத்தில் குளிர் சுனையைத் தேடு. குளிர்காலத்தில் குகையைத் தேடு. இலையுதிர் காலத்தில் பயிர் செய்யத் துவங்கு. வசந்த காலத்தில் பூக்களையும், கனிகளையும் சேகரித்துக் கொள். மழைநீர் தேக்கு. பருவத்தே பயிர் செய்.

கோடையிலிருந்து தப்பித்துக் கொள்வது போல், குளிரிலிருந்து தப்பித்து கொள்வது போல், மழைநீரை உபயோகப்படுத்திக் கொள்வதுபோல் கனிகளை பறித்து சேமித்து வைத்துக் கொள்வது போல் இயங்கித்தான் ஆகவேண்டும்... அதற்குப் பழக வேண்டும்.

கடல் சீற்றம் தவிர்க்க வேண்டுமா.

படகு கண்டுபிடி.

வெகுதூரம் போக வேண்டுமா.

குதிரையேற்றம் கற்றுக்கொள்.

மழையிலிருந்து காப்பாற்றிக் கொள்ள ஓலை குடிசை. ஓட்டு வீடு, தளம் போட்ட மாளிகை, தப்பித்துக் கொள். ஆனால், புத்தி அதையும் தாண்டி வேலை செய்கிறது.

ஆயிரக்கணக்கான குதிரைகள் ஒன்று சேர்ந்து அடுத்த ஊருக்குள் புகுந்து தீயிட்டு எரித்தன. கடல்கடந்து வேறு தேசத்திற்குப் போய் அங்குள்ள பெண்டிரை சிறைபிடித்து அழைத்து வந்தன. மாற்றரசன் நம்மீது படையெடுத்தால் என்ன செய்வது. நமது மாளிகை இடிந்து போகுமே. எனவே, மாளிகையைச் சுற்றி கோட்டையைக் கட்டு, கொத்தளங்கள் உருவாயின.

இயற்கைக்கும் தனக்கும் நடக்கின்ற போர் என்பதை மனிதன் புரிந்து கொள்ளாது, அதிலிருந்து தப்பித்துக் கொள்வதே வாழ்க்கை என்பதை மறந்துவிட்டு அதற்குக் கண்டுபிடித்த விஷயங்களை அவன் அடுத்த மனிதர் மீது பிரயோகிக்கத் துவங்கினான். இதனாலேயே மண் பிளவுபட்டது. மண் பிளவுபட்டதால் மரபுகள் பிரிவுபடுத்தப்பட்டன. மரபுகள் பிளவுபட்டதால் மதங்கள் தோன்றின. மதங்கள் தோன்றியதால் மேலும் பிளவு பெரிதாயிற்று.

மீசையில்லாது தாடியாம், தாடியில்லாது மீசையாம் என்று சின்னச் சின்ன விஷயங்களுக்காக அடித்துக் கொண்டார்கள்.

விக்ரக ஆராதனை உண்டா. தவறு என்றார்கள். விக்ரக ஆராதனைதான் கடைத்தேற்றும் என்றார்கள். மறுபடியும் அடித்துக் கொண்டார்கள். விக்ரகம் வைத்துக் கொண்டவருக்கு கடவுள் தெரிந்துவிட்டதா அல்லது விக்ரகம் இல்லையென்றவர் கடவுளைப் புரிந்து கொண்டாரா.

இரண்டுமில்லை. கடவுளை புரிந்து கொள்ளுதல் வேறு ஒரு இடத்தில் இருக்கிறது. விக்ரகம் இருப்பதிலும் இல்லாததிலும் இல்லை. இதைச் சரியாகப் புரிந்து கொண்டவர்களுக்கு ஞானிகள், சூஃபிகள் என்று பெயர்.

இந்த ஞானிகள் தங்களுடைய உணர்தலை வேதவாக்கியங்களாக வெளிப்படுத்தினார்கள். அவர்களால் மதம் தோற்றுவிக்கப்படவில்லை. அவர்களுடைய தொண்டர் குழாமால் மதம் தோற்றுவிக்கப்பட்டது. அவரைப் புரிந்து கொண்டேன் என்று சொல்பவர்களால் மதம் வலுப்பெற்றது. அவர்களுடைய போதனையை மட்டுமே கேள் என்று வாள் நுனியில் அச்சுறுத்தப்பட்டது. அன்பு சவுக்கால் விளாசி உணர்த்தப்பட்டது.

சரி, இப்போது என்னதான் வழி.

நான் இன்ன மதம் என்ற கர்வத்தை, நான் இன்ன தேசத்தவன் என்ற கர்வத்தை, நான் இன்ன மொழிக்காரன் என்ற கர்வத்தை,



நான் இன்ன ஜாதி என்கிற திமிரை தூக்கி எறிய வேண்டும். நீங்கள் ஏதேனும் ஒரு இசத்தை, ஏதேனும் ஒரு கொள்கையை, ஏதேனும் ஒரு மதத்தை இறுக்கப் பிடித்துக் கொண்டிருக்கும் வரையில் அதுதான் உன்னதம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் வரையில் உங்களை உணர முடியாது. இந்தப் பார்வை உள்ளே திரும்பாது. வெளியே மற்றவர் எப்படி நடந்து கொள்கிறாரோ அதைப் போலவே வாழ்க... ஒழிக... வெட்டுவேன் குத்துவேன் என்று வீணே குமுறிக் கொண்டிருக்கும். இது கெட்டுப்போன பார்வை. பார்வை உள்ளே திரும்பி எல்லாமும் என்ன. என்னைப்போல் உயிரினம் தானே என்ற எண்ணம் ஏற்படும் வரையிலும் மனம் சமாதானம் ஆகாது.

நான் இன்ன ஜாதி என்று இருப்பது தானே நல்லது. அதுதானே பாதுகாப்பு. நான் இந்த தேசத்தவன் என்று இருப்பதுதானே அன்னியர் என்மீது படை யெடுக்காமல் இருக்க முடியும். நான் இன்ன மொழிக்காரன் என்று நினைத்தால்தானே வேற்று மொழிக்காரன் என்னை வேதனைப்படுத்தாமல் இருக்க முடியும் என்று நீங்கள் நினைத்துக் கொள்கிறீர்கள். அப்படி நினைத்துக் கொள்கிறபோது, நீங்கள் எது பரந்ததேசமென்று நினைக்கிறீர்களோ அது பல பகுதிகளாகப் பிரிகிறது. அந்தப் பகுதிகள் மேலும் சில பகுதிகளாகப் பிரிகின்றன. உங்கள் மொழி, வடக்கு மொழி தெற்குமொழி, மேற்கு மொழி, கிழக்கு மொழி நடுவில் இருக்கின்ற மொழி என்று நாலைந்து வகையாக சில சமயம் பத்துப் பன்னிரெண்டாக பிரிகிறது. ஒரேமொழி பல்வேறு பகுதிகளில் பல்வேறு விதமாக ஒலிக்கிறது. அந்தந்த ஒலிப்புக்கு ஏற்றவர்கள் ஒற்றுமையாகி மற்றவரை வேற்றுமைபடுத்தினால் இங்கு வாழ்வதென்பது கடினமாகப் போகிறது.

பட்டணத்தில் இருப்பவன் கெட்டவன் என்று கிராமத்தவன் நினைக்கிறான். கிராமத்தவன் மக்கு என்று பட்டணத்தவன் இளிக்கிறான். உண்மையில் எல்லா பக்கமும் எல்லோரும் உண்டு. உன் மொழி வட்டெழுத்தா, சதுரமா, வெறும் கோடா, வளைவா, வலதிலிருந்து இடதுபக்கமா, இடதிலிருந்து வலது பக்கமா, மேலிருந்து கீழா, கீழிருந்து மேலா. எழுத்துக்கள் எதுவாயினும் என்ன. பசி என்கிற மொழியும் இறப்பு என்கிற துக்கமும், பிறப்பு என்கிற சந்தோஷமும் ஒன்றுதானே. இது என் ஊர் என்று நிமிருவானேன். இது என் மொழி என்று திமிருவானேன். யாதும்

ஊரே யாவரும் கேளிர். எனக்கு எல்லோரும் தோழர்கள் எல்லா ஊரும் என்னுடைய ஊர். இதைச் சொன்னவர் மகாஞானி.

இதைப் பழக்கப்படுத்திக் கொள்ள முடியாதா. இன்று கைக்கொள்வது கடினமா.

''நான் சொல்லிடுவேன் அவன் கழுத்தைப் பிடிச்சு தள்ளுவான்'' என்று சொல்வீராயின். அதுவும் பேதைமை. நீ கழுத்தைப் பிடித்துத் தள்ளினாலும் நான் திரும்பச் சொல்வேன். யாதும் ஊரே யாவரும் கேளிர். சகலரும் என் தோழர்கள் என்று திரும்பத் திரும்ப சொல்வேன் என்ற உணர்வு வலுப்பட்டால் அந்தப் பக்கமும் அப்படிப்பட்ட எண்ணமும் தோன்றும்.

யாதும் ஊரே என்கிற புத்தி எப்படி வருகிறது.

பார்வை உள்ளுக்குள் குவிந்திருக்கிறது.

பார்வை உள்ளுக்குள் போவது என்பது பற்றி எப்படித் தெரிந்து கொள்ள முடியும்.

...கூட்டாக ...இருப்பதிலிருந்து விலகி, குழுவாக இருப்பதிலிருந்து நகர்ந்து தனியாக தான் மட்டுமே என்கிற ஒரு இடத்தை அடைய வேண்டும். தனியாக இருப்பது என்றால் சுற்றுப் பக்கம் ஒரு மைல் அளவுக்கு எவருமே இல்லாமல் இருப்பதல்ல. அதுமட்டுமல்ல. தான் யார் என்று தன்னை நோக்கும் பார்வையை கேட்டுக் கொள்கிறபோது ஏற்படுகிற தனிமை மிகப்பெரியது. அது கூட்டத்திற்கு நடுவிலும் தனிமையாக இருப்பது.

## 55

மதங்கள் குழுவாக இருப்பதைப்பற்றி திரும்பத் திரும்ப பேசினாலும், நாம் சைவத் திருக்கூட்டம். வைஷ்ணவ சம்பிரதாயம், கிறிஸ்தவ மதம், இஸ்லாம் மார்க்கம் என்று மனிதர்களை பல குழுக்களாகப் பிரித்தாலும் எல்லா மதங்களும் தனியாக கடவுளை தேடுதல். தன்னை நோக்கி பார்வையை திருப்புதல் என்பதை சூட்சுமமாக வலியுறுத்தி வருகின்றன.

கும்பலாக இருக்க வேண்டியது அவசியம்தான். கும்பலாக இருந்துதான் தீர வேண்டும். அடுத்தவரோடு இயைந்து போகின்ற வாழ்க்கைதான் நன்றாக இருக்கும். எல்லோரோடும் இணக்க



மாகப் போகின்ற போதுதான் அமைதி நிலவும். அமைதி நிலவினால்தான் வாழ்க்கை செம்மையாக இருக்கும். வாழ்க்கையின் செம்மைதான் கடவுளைத் தேடுதலை தீவிரப்படுத்தும் என்று மதத்தின் மீது அதிகமான ஆர்வம் உள்ளவர்களும் அதை வழிநடத்துபவர்களும் சொன்னாலும் இந்த கும்பலுக்கு நடுவே தனியே நீ வேலையை செய்து கொண்டிரு. உன்னை இடையறாது பார்த்துக் கொண்டிரு என்றும் அவர்கள் சொல்வதுண்டு. ஏசு எங்கள் மேய்ப்பர் என்று சொல்வதில்லை. ஏன் என் மேய்ப்பர் என்றுதான் சொல்கிறார்கள். நானும் ஏசுவும் தனி என்று மற்றவர்களை விட்டு விலகி ஏசுவோடு தான் மட்டுமே பேசுவதாகவே தங்களுடைய பிரார்த்தனைகளை வைத்துக் கொள்கிறார்கள். இது தன்னை நோக்கிப் பயணப்படுவதில் ஆரம்பக் கட்டம்.

பிரார்த்தனைகள் கூட்டாக இருக்கும். ஆனால், பிரார்த்தனையுடைய வடிவம் இருக்கிறதே சொற்கள் இருக்கிறதே அது தனித்த குரலில் ஒலிக்கும். ஒட்டுமொத்தமாகக் கேட்டால் ஏசு திரும்புவார். கடவுள் நம் பக்கம் இருப்பார். நம்மை நோக்கி நடந்து வருவார் என்று சொல்வதும் உண்டு. ஆனாலும், தனியேப்போய் ஜபம் செய்வதை அவர்கள் ஒரு நல்ல வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். ஏசு நாதரும் அப்படியே மலை உச்சிக்குப்போய் தனியே ஜபம் செய்திருக்கிறார். கடவுளை நோக்கி மன்றாடியிருக்கிறார்.

இந்து மதத்தின் பல்வேறு கதைகள் காட்டிற்குப்போய் தவம் செய்வதை மிக முக்கியமான விஷயமாக கருதுகின்றன. வயதானவராக இருந்தாலும், இளைஞராக இருந்தாலும் மிகச் சிறுவனாக இருந்தாலும் அவர் வீட்டைவிட்டு வெளியேறி எல்லோரும் சேர்ந்து வாழ்கின்ற சூழலிலிருந்து விலகி அடர்ந்த வனப்பகுதியில் மனித நடமாட்டமே இல்லாத வனத்தில் தான் மட்டுமே தனியே அமர்ந்து அங்கு கிடைத்த இலை, தழைகளை உண்டு கடவுளை நோக்கியே எந்நேரமும் தனித்திருப்பதைப்பற்றி சொல்கின்றன.

குழுவுக்கு நடுவே தனியே என்பது மிக புத்த மதம் சங்கம் முக்கியம் தர்மம் முக்கியம் மதம் வளர்க்க குழுவாக இருப்பதே மிக மிக முக்கியம் என்று சொன்னாலும் அவர்கள் உலகத்தினுடைய பல்வேறு விஷயங்களை முற்றிலும் துறந்து தனித்து மலைக் குன்றுகளுக்குப்போய் பாறைகளில் படுத்து உயிர்வாழ்ந்திருக்கிறார்கள். தனித்து வாழ்ந்த சமணமத குகைகள் பிரபலமானவை

இவைகள் குழுப் பிரார்த்தனையை சொல்லவில்லை. மாறாக, தன்னை நோக்கிப் பயணப்படுவதையே, தான் யார் என்று விசாரிப்பதையே மிக முக்கியமாகக் கருதுகின்றன. இவர்களே மதச் சம்பிரதாயங்களை தெள்ளத் தெளிவாக விவரமாக எழுதியும் வைத்திருக்கிறார்கள்.

வைணவத்தில் சில விஷயங்கள் கோயிலொழுகு எந்று தனித்த நூலாக இருக்கிறது. சைவ மதம் கூட வாழ்வு எப்படி இருக்க வேண்டுமென்று தெள்ளத் தெளிவாக வரையறுக்கப்பட்ட விதிமுறைகள் இருக்கின்றன. இஸ்லாத்திலும், கிறிஸ்தவத்திலும் இம்மாதிரியான நியதிகளுக்கு எந்தக் குறையும் இல்லை. ஆனால், இப்படி மத ஒழுக்கங்களைப்பற்றி தெள்ளத் தெளிவாகச் சொல்கின்ற மதங்கள் தனிமையில் தனக்குள் இருப்பதைப்பற்றி எதுவும் பேசுவதில்லையே... நூலாக எழுதி வைத்ததாகத் தெரியவில்லையே என்று தோன்றுகிறது.

இதை நூலாக எழுத முடியாது என்பதுதான் உண்மை. இந்தத் தணித்த பயணத்தை தனக்குள் பார்ப்பதை எப்படிச் சொன்னாலும் விளக்கிக் கொள்ள முடியாது. உள்ளுக்குள் போவதை ஒவ்வொரு படியாக, ஒவ்வொரு இடமாக ஜெயிப்பதை இவர்களில் சிலர் சூட்சுமமாக எழுதி வைத்திருக்கிறார்கள். ஆனாலும், இதைப்புரிந்து கொண்டு இதைக் கடைபிடித்து மத ஒழுக்கத்தை பின்பற்றுவதுபோல அத்தனை எளிதாக பின்பற்ற முடியவில்லை. இது உன் தலையெழுத்து. உன் காரியம். நீ மட்டுமே மூழ்கி வெளியே வரவேண்டிய நீச்சல் இன்னொருவர் உன் நீச்சலுக்கு துணையாக முடியாது. என்பதாகத்தான் சொல்லப்படுகிறது.

ஆனால், யாரும் சொன்னதேயில்லையா.

அப்படிச் சொல்வதற்கில்லை. சொல்லியிருக்கிறார்கள். ஔவையார் இதை பாடலாகவே பாடியிருக்கிறார். மிக கட்டுக் கோப்பான செய்யுளாக எழுதியிருக்கிறார். மூலக் கனலை எழுப்பி... என்கிறார் ஆனால், கனல் எது. எங்கிருக்கிறது. எப்படி எழுப்புவது என்று உரைநடையாக விளக்கம் இல்லை.

இதைச் சொல்லவே முடியாதா இதை இன்னொருவர் சொல்ல புரிந்துகொள்ளவே முடியாதா. இதைப் படித்து அறிந்து கொள்ளவே முடியாதா இதை தானாகத் தெரிந்து தவித்துத்தான் புரிந்து கொள்ள வேண்டுமா என்ற கேள்விகள் எழலாம். இது குரு



உபதேசமாக சொல்லித் தரப்பட்டிருக்கிறது. ஒருவரிடமிருந்து மற்றவருக்கு வாய்மொழி மூலமாக தனித்த பாடமாக ஒரு குரு, ஒரு சிஷ்யன் என்கிற விதமாக சொல்லித் தரப்பட்டிருக்கிறது. அப்படி சொல்லித் தரப்பட்டாலும் அதை தனியே பயிற்சி செய்தும் அவருடைய திறமையால் மட்டும் முன்னேற முடிந்திருக்கிறது. ஆக, உபதேசத்திற்குப் பிறகும் தனியாக நீச்சல் பழகத்தான் வேண்டும். குருவிடமிருந்து பிரிந்துபோய் தான் மட்டுமே தனித்திருந்து தவித்துத் தவித்து தனக்குள் பார்ப்பதை அடைய வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட தவிப்பில் முயற்சிக்கப்பால் தலையெழுத்து என்பதும் இருக்கிறது. தவிப்புக்குப்பிறகு அடைந்து விடுபவர்களும் இருக்கிறார்கள். அடையாமல் கடைசிவரை தவித்தபடியே மரணமடைந்தவர்களும் இருக்கிறார்கள். கடைசி கடைசியாக இதை யோசித்துப் பார்க்கும் போது நம்முடைய தலையெழுத்துதான் நம்முடைய பூர்வ ஜென்ம வினைதான் இந்த நல்ல இடத்திற்கு நம்மை அழைத்துப்போகும் என்று சொல்லப்படுகிறது.

பகவான் ரமணருக்கு பதினாறு வயதில் தன் பார்வையை உள்நோக்கித் திருப்பி ஆழ்ந்து கிடப்பதில் ஒரு ஈடுபாடு ஏற்பட்டு விட்டது. அந்த ஈடுபாட்டை தொடர்ந்து நடத்தி அவர் வெற்றி பெற்று விட்டார். இது எப்படி சாத்தியமாயிற்று என்று அப்பாவியாய் அவரிடம் கேட்க, அவரும் மிக உண்மையாக, "எனக்குத் தெரியவில்லையே இது எப்படியோ நடந்துவிட்டது" என்றுதான் பதில் சொல்கிறார்.

மரணமடைந்து விட்டால் எப்படி இருப்பேன் என்று நான் நினைத்தது உண்மை. கைகால்களை அடக்கி மனதை உள்நோக்கி திருப்பவேண்டும் என்பதெல்லாம் எனக்குத் தெரியவில்லை. இறந்து போனால் எப்படி இருப்பேன் என்றுதான் நினைத்துப் பார்த்தேன். அது எங்கோ ஒரு இடத்திற்கு அழைத்துப்போய் விட்டது. அந்த இடத்திற்குப் போனபிறகு என்னால் வீட்டில் இருக்க முடியவில்லை. தொடர்ந்து தொடர்ந்து அதே இடத்தில் இருக்க வேண்டும் என்கிற நினைப்பு வந்தது. அதற்கு வீடு சௌகரியமில்லை என்பதாக வீட்டைவிட்டு கிளம்பி திருவண்ணாமலைக்கு வந்துவிட்டேன். அங்கேயும் ஏதோ நடந்து விட்டது. நான் இந்த நிலைக்கு வர என்ன காரணம். அருணாசலேஸ்வரர்தான் காரணம் என்று தோன்றுகிறது என்று

மிக எளிதாக கடவுள் பெயரைச் சொல்லி விடுகிறார். நானல்ல என்று கைவிரித்து விடுகிறார் தன்னுடைய முயற்சியல்ல என்று சொல்லாமல் சொல்கிறார்.

உன் அப்பா செய்த தான தருமங்கள்தான் உன்னுடைய இந்த உயர்நிலைக்குக் காரணம் என்று அம்மா சொல்ல, ஆமாம்... ஆமாம்... என்று அதையும் ஆமோதிக்கிறார்.

இப்படி தன்னையே பார்த்துக் கொள்வது என்பது சுவாசத்தின் மூலம் ஏற்படுகிறது. சரியான சுவாசம் மனதை அமைதியாக்குகிறது. சுவாசப் பயிற்சியை மேற்கொண்டால் இது ஒரு நல்ல நிலைக்கு மனதை கொண்டு வந்து விடுகிறது. நான் மூச்சுப்பயிற்சி செய்யலாமா எனது பகவான் ரமணரை கேட்டபொழுது, ''ஆஹா... தாராளமாகச் செய்யலாம். ஆனால், மனதை இடையறாது உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தால் நான் யார் என்று விசாரித்துக் கொண்டிருந்தால் மூச்சு தானாகவே ஒரு சமநிலைக்கு வரும். மூச்சை சரிசெய்து கொண்டு மனதைப் பார்ப்பதைவிட மனம் என்னது என்று பார்த்தால் எது நான் என்று விசாரித்தால் எங்கிருக்கிறது அது என்று கேள்வி கேட்டுக் கொண்டால் அந்தக் கேள்வியினுடைய கூர்மையின் மூலம் மூச்சும் நாடிகளும் ஒரு நிதானத்திற்கு வரும். அதைப்போலியாகச் செய்யாது உண்மையாக, மிகுந்த உண்மையாக செய்ய வேண்டும். மற்றவரிடம் பேசும்போது பல்வேறு விதமான பொய்களோடுதான் பேசுகிறோம். ஆனால், நமக்கு நாமே பேசிக்கொள்கிறபோது அந்தத் தன்மை வராமல் எவ்வளவு உண்மையாக இருக்க முடியுமோ, அவ்வளவு உண்மையாக இருந்தால் மனம் மெல்ல மெல்ல கட்டுப்படத் துவங்கும்.

மனம் கட்டுப்பட ஏதோ ஐந்து நிமிடம், பத்து நிமிடம், இருபது நிமிடம், அரைமணிநேரம் என்றெல்லாம் காலநேர அவகாசங்கள் வைத்துக் கொண்டால் முடியாது. அரைமணி நேரம் அமைதியாக இருந்த மனம். பிறகு உலக விவகாரங்களில் ஈடுபட்டு மறுபடியும் துள்ளி குதித்து பேயாட்டம் ஆடத் துவங்கும்.

அப்படியானால் முழுநேரமும் மனதை அடக்க என்ன செய்வது.

உலகத்தினுடைய விவகாரங்களிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்று பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி சொல்கிறார். எது உலக விவகாரம் பேசுவோம்.



# 56

முழுநேரமும் மனம் அடங்குவதற்கு என்ன செய்வது.

உலகத்தினுடைய விவகாரங்களிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்று பகவான் ஸ்ரீ ரமணமகரிஷி சொல்கிறார்.

''கடவுள் தேடல்தான் மிக முக்கியம். நான்யார் என்று கவனிப்பதுதான் மிக உன்னதமான வழி என்று ஏற்றுக் கொண்டு விட்டீர்களென்றால் மற்ற விஷயங்களெல்லாம் பின்னுக்குப் போய்விடும். உங்களைவிட்டு தானாக அகன்று விடும். கடவுள் தேடலை நாடகமாக உங்கள் உள்ளுக்குள் உங்களை அறிவதை ஒரு சடங்காக நீங்கள் செய்யத் துவங்கினால் துறவியாக இருக்க முடியாது. அங்கேயும் போலிவேஷம் போட்டுக் கொண்டு நான் தியானம் செய்கிறேன். நான் மூச்சுப் பயிற்சி செய்கிறேன் என்று உலகத்தாருக்காக நடிப்பதாகத்தான் முடியும். உங்களுக்கு நீங்களே நடித்துக் கொண்டால் எந்த முன்னேற்றமும் ஏற்படாது. மாறாக... பாழ் குழிக்குத்தான் செல்வீர்கள் என்று தெளிவாகப் பெரியோர்கள் சொல்கிறார்கள்.

எது உலக விவகாரம்.

அரசியல் குறித்தோ, மொழியின் மீது அக்கறையோ, மதத்தின் மீது பற்றோ, ஊர்மீது விசுவாசமோ அல்லது தங்கள் இனத்தின்மீது மிகப்பெரிய ஈடுபாடு வைத்துக் கொண்டால் இவைகளிலிருந்து தப்பிப்பது மிகவும் கடினம்.

மதம் ஒரு அமைப்பு. மொழி ஒரு கருவி. இனம் ஒரு சிறு கூட்டம். இந்த பூமி உயிரினங்கள் எல்லாவற்றிற்கும் சொந்தம். எனக்கு மட்டும் சொந்தமல்ல என்பது தெளிவு. இப்படியெல்லாம் யோசித்து இவைகளிலிருந்து விலகிவிட வேண்டும்.

அரசியல் என்பது கோபங்களும், தாபங்களும், காழ்ப்புகளும், சுயநலங்களும், பேராசைகளும் கொண்ட இடம். எனக்கு அது உதவாது என்று தெள்ளத் தெளிவாக புரிந்து கொண்டு அதிலிருந்து தள்ளியிருப்பது போன்றவைகள் ஏற்படவேண்டும்.

குடும்பம் இன்னொரு குறியீட்டுடன், சம்சாரம் சாகரம் என்றெல்லாம் பேசப்படுகிறது. குடும்பத்திலிருந்து கொண்டே தனித்திருப்பது பற்றி யோசிக்க வேண்டும். மிகக் குறைந்த அளவு பொறுப்புகளை சுமப்பதாக சங்கல்பம் செய்து கொள்ள வேண்டும். உடலுறவு என்பது பொறுப்பை அதிகப்படுத்துகின்ற வழி. இதனால் சுமைகள் அதிகமாகும். எனவே, இதிலிருந்து தள்ளி நிற்க வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது.

இதையெல்லாம் இன்னொருவரிடம் கேட்டுக் கொண்டிருக்காமல் நீங்களாகவே எது சுமை, எது கட்டு, எது பிணைத்திருக்கிறது என்று பார்த்து மெல்ல மெல்ல இந்த உலக விவகாரங்களிலிருந்து விடுபட்டு தனியே அமர்ந்து கொண்டால் உள்ளுக்குள் பயணப்படுவது சரியாக வரும் என்று சொல்லப்படுகிறது. தீவிரமாக இதில் இருந்து விடுபட முடியும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

செல்வந்தர்களால் ஞானமடைய முடியுமா என்ற கேள்வி பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியிடம் வைக்கப்பட்டது.

இல்லை. செல்வந்தர்கள் செல்வத்தை சேகரிப்பதிலும் அதை பாதுகாப்பதிலுமே நாட்டமுடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் மனம் விடுதலையுடன் இருக்காது. எனவே, அவர்களுக்கு ஞானமடைவது எளிதல்ல. மனம் ஏதேனும் ஒன்றை பற்றிக் கொண்டுதான் இருக்கும். செல்வம் இருப்பின் செல்வத்தைத்தான் பற்றிக் கொண்டிருக்கும். கடவுளை பற்ற முடியாது தவிக்கும்.

செல்வமில்லையென்றால் எப்படி வாழ்வது. காசு சேகரித்து குடும்பத்தோடு சௌகரியமாகவும், கௌரவமாகவும் வாழ்வது தானே வாழ்க்கை என்று உங்களுக்குள் கேள்வி எழுமாயின் அந்தக் கேள்வி சரியானது.

செல்வம் சேகரிப்பதில் முழுமனதாக ஈடுபடுங்கள். உங்களை அறிவதில் கடவுளைத் தேடுவதில் நீங்கள் நாட்டம் கொள்வதில் அர்த்தமில்லை. முழு மூச்சாய் வீட்டு வசதிகளை மனைவி குழந்தைகளை நன்றாக பார்த்துக் கொள்ளுங்கள். அதேசமயம் கடவுள் என்ற விஷயம் இருக்கிறது. நான் என்பது அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை புரிந்து கொண்டு ஏதேனும் ஒரு கணத்தில் ஏதேனும் ஒரு ஜென்மத்தில் இது எனக்கு லபிக்கட்டும் என்ற ஆசையோடு இருங்கள். அதேசமயம் மனம் பற்றி கவனிப்பதை பழகிக் கொண்டிருங்கள். அது குரங்காட்டம் போடுவதை கவனித்துக் கொண்டிருங்கள்.



குடும்பச் சுமையை தூக்குவதென்றால் வெகு நிச்சயம் பொருளாதாரம் மேம்பட்டிருக்க வேண்டும். பொருளாதாரத்தில் மனம் லயித்துவிட்டால் கடவுள் தேடல் தன்னையறிதல் என்பது எளிதில் வராது. எதற்கு கடவுள் தேட வேண்டும். காசு சம்பாதித்து குழந்தைகளை வளர்த்தால் அது போதாதா என்று கேள்வி கேட்பீர்கள் என்றால் அதற்கு பதில் ஏதுமில்லை. உங்களுக்குப் பிடித்தமானதை தாராளமாகச் செய்து கொண்டிருங்கள். அலுத்துப் போகும் வரை செய்யுங்கள்.

ஆனால், ஏதோவொரு கணம் வாழ்வின் கடைசி பகுதியில் தவற விட்டு விட்டோமோ தன்னையறியாது வெறுமே உழன்று விட்டோமோ. எங்கெங்கோ மாட்டிக் கொண்டு அலைந்து, திரிந்து அழிந்து விட்டோமோ என்ற துக்கம் ஏற்படின் தன்னைத் தேடுதல் எவ்வளவு பெரிய விஷயம் என்று அப்போது புரியும். அந்த நேரத்தில் உங்களால் எதுவும் செய்ய முடியாது. அதற்குண்டான பயிற்சி இருக்காது. மரணம்பற்றிய பயமே மேலோங்கியிருக்கும். தள்ளாமை ஏற்பட்டு மரணம் பற்றிய பீதிகள் உள்ளுக்குள்ளே பொங்கத் துவங்கி இன்றைக்கு சாவா, நாளைக்கு சாவா இந்த மாதம் மரணமா அடுத்த மாதம் மரணமா, மரணம் புதன் கிழமையா வெள்ளிக் கிழமையா என்று தவித்துக் கொண்டிருப்பின் அதைவிடக் கொடுமை உலகத்தில் எதுவுமில்லை. நீங்கள் வாழ்ந்ததற்கு அர்த்தமும் இல்லை.

தன்னை அறிந்தவர் மட்டுமே மரணத்தைக் கண்டு அஞ்சாமல் வரவேற்கிறார். அவரால் மரணத்தை தள்ளி வைக்கக் கூடும். மற்றபடிக்கு எல்லோரும் சாக பயந்துதான் சாகிறார்கள்.

குடும்பம் துறக்க வேண்டாம். செல்வம் உதற வேண்டாம். ஆனால், கடவுள் தேடுதல் என்பதை சிறு சிறு விஷயங்களாக செய்து கொண்டிருங்கள். மூச்சுப் பயிற்சி, யோகாசனம், ஹோமங்கள், யாகங்கள், அபிஷேக ஆராதனைகள் க்ஷேத்ராடனங்கள் என்று பலதும் செய்து கொண்டிருங்கள். கடவுளை தேடுவதற்கு நீங்கள் நாத்திகராகக் கூட இருக்கலாம்.

கடவுள் இல்லை என்று மறுத்தால் என்ன ஆகும் என்று பரீட்சார்த்தமாக உங்கள் வாழ்வில் செய்து பார்க்கலாம். அதுமட்டு மல்லாது மற்ற மதங்களில் உள்ள கடவுள் வாசகங்கள் என்ன வழி முறைகள் என்ன பிரார்த்தனை எவ்விதம் செலுத்தப்பட வேண்டும். என்ன வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். என்ன ஒழுக்க

நெறிகள் என்பதை புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் என்ன செய்தாலும் கடவுள் தேடலை கடமையாக வைத்துக் கொள்ளுங்கள்.

வாழ்க்கையில் மிக சுவாரசியமானது பொருள் தேடலோ, பெண் சுகமோ, குழந்தைகள் பெறுதலோ, கலைகளின் வியக்தியோ அல்ல. இவைகளுக்கெல்லாம் மூலகாரணமாக இருக்கின்ற நான் யார் என்ற கேள்வியே. எது நான் என்கிற வினாவே மிக முக்கியமாக இருக்கிறது. நான் யார் என்ற கேள்வியும், கடவுள் தேடலும் ஒரேமாதிரியான விஷயம். நான் யார் என்று தெரிபவர்களுக்கு கடவுள் என்ற விஷயம் மிக எளிதாக, மிக முழுமையாக புரிபட்டுப் போகிறது என்று சொல்லப்படுகிறது.

மனித குலத்தில் மற்ற எல்லா விஷயத்தைவிட கடவுள் தேடல் என்கிற விஷயம்தான் எப்பொழுதுமே கிளர்ந்து கிளர்ந்து முதன்மையாய் நின்றிருக்கிறது. அதனாலேயே இத்தனை மதங்கள். அதனாலேயே இத்தனை மொழிகள். இந்த மொழிகளெல்லாம் கடவுளைத் தேடித்தான் அதிகம் பேசியிருக்கின்றன. இந்த மதங்களெல்லாம் கடவுளைத் தேடித்தான் ஒன்றாகக் கூடியிருக்கின்றன. இந்தக் கலைகளையெல்லாம் கடவுள் தேடலை ஆதரவாக வைத்துக் கொண்டுதான் மிகப் பெரிதாக வளர்ந்திருக்கின்றன.

கடவுள் இல்லை என்று சொல்கின்ற விஷயத்திற்கு மேலாக கலையோ, மொழியோ அல்லது வேறு ஏதேனும் ஒரு விஷயமோ வளர்ந்ததாக சரித்திரம் இல்லை. கடவுள் இல்லை என்பவர் எல்லா இடத்திலும் மிகச் சிறிய குழுவாகவே இருக்கிறார்கள். அவர்கள் வெறுமேதான் இருக்க முடிகிறது. எனவே, கடவுள் தேடல் என்பதுதான் சுவாரசியமான கலைச் செறிவு மிகுந்த பண்புகள் வளர்க்கின்ற ஒரு விஷயமாக மனித குலத்தை வளர்த்திருக்கிறது.

## 57

ஒருவேளை கடவுள் தேடல் பற்றி இந்த மனித குலம் கவலைப்படவில்லையெனில் இந்த வாழ்க்கை வெறுமையாகப் போயிருக்கும். மனிதகுலம் நூற்றுக் கணக்கில் தற்கொலைகளில் ஈடுபட்டு தன்னை அழித்துக் கொள்ள துவங்கியிருக்கும். ஒரு மாய



விஷயத்தில் கடவுள் தேடலில் இந்த உலகம் மாட்டிக் கொண்டு விடாது என்று வருத்தப்படுவோரும் உண்டு. ஆனால், இந்த உலகத்திலிருந்து மனித குலத்திலிருந்து கடவுள் தேடலை இனி ஒருகாலும் எதனாலும் பிரிக்க முடியாது. விஞ்ஞானம் எத்தனை வளர்ந்தாலும் கடவுள் தேடல் என்பது அதற்கு இணையாகவே ஒருபடி உயரமாகவே வளர்ந்துதான் நிற்கிறது. விஞ்ஞானத்தின் தலைமீது ஏறி கடவுள் சம்மணமிட்டு உட்கார்ந்து கொள்கிறார்.

மதம் ஒரு அபின் என்று கடவுள் தேடலை வர்ணித்த தலைவர்கள் உண்டு. கடவுள் தேடல் எப்போது அபினாகும். எப்போது போதை மருந்தாகும்.

கடவுள் தேடல் மனித குலத்திற்கு எதிராக, மனித குலத்தை அழிக்கும் வண்ணம் அறியாமையில் அழுத்தும் வண்ணம் இருப்பின் அது அபினாகும். அறியாமையில் அமிழ்த்தியது மதங்கள் மட்டுமல்ல. பல இசங்களும் அறியாமையில் மனிதனை அழுத்தியிருக்கின்றன. மனித குலம் அதை உடைத்தெறிந்து எங்கு அந்த இசம் பிறந்ததோ அதே இடத்திலேயே அதை புதைத்தும் மூடினார்கள்.

கடவுள் தேடல் ஒரு தனிமனித விஷயம். அதைக் கற்றுக் கொடுக்க முடியாது. விளக்குவதற்கு எந்தப் பாடமும் இல்லை. அது ஒரு தனிமனிதன் தானாகவே யோசித்து யோசித்து விசாரித்து அறிய வேண்டிய விஷயம். ஆனால், இந்த விசாரிப்புக்கு சோம்பல்பட்டு மற்றவர்களுடைய போதனையைக் கேட்டு, போதனையைக் கேட்டவர்களெல்லாம் ஒரு குழுவாக மாறி, ஒரு குழுவாக மாறியதாலேயே எதிர்க்குழுவைப் பற்றி ஏளனங்களும் கண்டனங்களும் வெளிவிடத் துவங்கி விடுகிறார்கள். சண்டை சச்சரவுகள் இயல்பாகவே மூண்டு விடுகின்றன.

ஆனால், ஞானிகள் எனப்படுவோர் மதங்களையும் மொழிகளையும் கலைகளையும் ஆசார அனுஷ்டானங்களையும் தாண்டி, தனக்குள் என்ன நடக்கிறதென்று உற்றுப் பார்த்து அதனுடைய இருப்பை உணர்ந்து, அது என்ன என்பதைத் தேடி கண்டுகொள்ள வேண்டும் என்பதும், இது உடனடியாக நடக்காது என்பதையும், இது மெல்ல மெல்ல தன்னுள் வரவேண்டும் என்பதையும், இது சிலசமயம் பல வருடங்களாக, ஏன், பல ஜென்மங்களும் ஆகலாம் என்றும் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். ஆனால், அவர்கள்

குரல் ஓங்கி ஒலிப்பதற்குரிய பதிலாக நான் காட்டுகிறேன் கடவுளை, இப்படித்தான் இருக்கும் கடவுள் என்று வரையறுத்து ஒரு சிறிய வட்டத்திற்குள் மக்களை இழுத்துச் சென்று நான் இன்ன மதம்... நான் இன்ன ஜாதி... என்று வகைப்படுத்துகிறபோது அந்தக் கடவுள் தேடல் தேடலுக்கு எதிர்ப்பதமாக முட்டாள்தன மாக மாறிவிடுகிறது.

தன்னுடைய மதமே சிறந்த மதம் என்று எவர் சொன்னாலும் அவர் கடவுளுக்கு எதிரானவர்தான். தேடல் இல்லாதவர்தான். தேடல் முடிந்து போய் தான் இன்னது என்று தன்னை உருவகப்படுத்திக் கொண்டு பொய்யாக அலைபவர்தான்.

கடவுள் தேடலில் இருப்பவருக்கு விவாதம் வருவதேயில்லை. எது குறித்தும் அவர்கள் கேள்வி கேட்டுப் பேசுவதில்லை. கேள்வியும் பதிலும் அவர்களுக்குள்ளேயே புரண்டு புரண்டு ஒரு நல்ல திசைக்கு அவர்களை அழைத்துப் போகின்றன. அவர்கள் மதங்களை புறக்கணிப்பதும்கூட உரக்கச் சொல்வதில்லை. ஆசார அனுஷ்டானங்கள் வேண்டாம் என்பதையும் அவர்கள் பெரிதாக பறையறிவிப்பதில்லை. மாறாக மெல்ல மெல்ல இந்த விஷயங் களிலிருந்து கழன்று தனியே போய் அமைதியாய் உட்கார்ந்து கொள்கிறார்கள். மற்ற கூட்டங்களை ஆர்ப்பாட்டங்களை அவலங்களை தள்ளி நின்று வேடிக்கை பார்த்து 'நல்லவேளை இந்தக் கூட்டத்தில் இல்லை' என்று சந்தோஷப்பட்டுக் கொண்டு தனக்குள் இன்னும் ஆழ்ந்து மூழ்குகிறார்கள். தன்னுடைய வழி தெளிவான வழி என்பதை உறுதியாகப் பின்பற்றுகிறார்கள். மற்ற மதத்தைப்பற்றி கவலைப்படாமல், மற்ற வழிமுஉளைப் பற்றி கவலைப்படாமல் தன்னுடைய வழிமுறையைப் பின்பற்றிக் கொண்டு ஆழ்ந்து அமைதியாக இங்கே கடவுள் உண்டு. அவர், இன்ன ரூபம், இன்ன விதமான வடிவம், எங்களுடைய பிரார்த்தனைகள் இன்னது என்று தெளிவாக பிடித்துக் கொண்டு ஆயுள் முழுவதும் அதைப் பின்பற்றி உள்ளுக்குள் வணங்குகிற போது அவர்களுக்கு பளிச்சென்று ஒரு விஷயம் நிச்சயமாகத் தெரியவரும்.

கிறிஸ்தவரோ, இஸ்லாமியரோ, இந்துவோ புத்த மதத்தினரோ அதை இறுகப்பற்றிக் கொண்டால், அந்த வழியை செம்மையாகப் பின்பற்றினால் மற்றவர்களைப்பற்றி கவலைப்படாமல் தான் தன் பிரார்த்தனை, தன் கடவுள், தன் வழி என்று உறுதியாக இருப்பின்



அவர்களுக்கும் கடவுள் அறிதல் சாத்தியம். கடவுள் தரிசனம் மரணத்தின்போது இல்லாவிட்டாலும், மறு பிறப்பில் அவர்களுக்கு நிச்சயம் ஏற்படும். மறுபிறப்பு உண்டா என்ற கேள்வி எழும். இப்படி மதங்கள் மிகத் தெளிவாக கண்டுபிடித்துச் சொல்லியிருக் கின்றன.

பிரபஞ்சத்தினுடைய அடிப்படைவிதி வினைக்கு சரியான எதிர்வினை உண்டு என்பதுதான். இது பிரபஞ்ச விதியாக கொள்ளப்படுமாயின் இந்த பிறவிக்கு எதிர்வினையாக இன்னொரு பிறவி இருந்துதான் ஆக வேண்டும். எப்பொழுது இந்தப் பிறவி முடியுமென்றால், எப்பொழுது உன் வினை பற்றி உனக்கு பற்று இல்லையோ, எப்பொழுது வினையை நீ செய்யவில்லை என்று நினைக்கிறாயோ அப்பொழுது அந்த வினையை ஏற்காத உன் ஆன்மா நல்ல நிலைக்குப் போய்விடுகிறது. மறுபிறப்பற்று சுதந்திரமாகிறது என்றும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

ஏன் கடவுள் தேடல்பற்றியே மனித குலம் சிந்திக்க வேண்டும். வேறுவகையில் தன்னை வளர்த்துக் கொள்ளலாமே என்ற உங்களுக்குள் கேள்வி எழுந்தால் இதைத்தவிர வேறு எந்த வேலையும் மனிதனுக்கு இல்லை என்பதை பல கேள்விகள் கேட்டு நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

இந்த விஞ்ஞான வளர்ச்சிகள் அத்தனையும் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிற அத்தனை ஆட்டமும் மரணத்திற்கு எதிரானவை. பிறப்பு என்பதுபற்றி...... அலைபவை. அங்கிருந்து இது பிறந்தது என்று ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து வியப் போடு கேட்பவை. ஏன் மரணமடைந்தது என்று திகைத்து நிற்பவை. இந்த பிறப்பின் வியப்பும், மரணத்தின் திகைப்பும் மனிதனுக்கு இன்றுவரை அடங்கவில்லை. மரணத்திற்கு பிறகு ஒன்றுமில்லை. வெறும் வெற்றிடம் என்று சொல்கிற விஞ்ஞானிகள் உண்டு. இதுவொன்றும் பரத கண்டத்திற்கு புதியதல்ல. இதற்கு சூன்யவாதம் என்று பெயர். என்ன என்று தெரியாததாலேயே எதுவுமில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். கடவுள் இருக்கிறது என்று சொல்வதாலேயே, இல்லை என்று நாத்திக வாதம் எழுந்ததுபோல கடவுளைத் தேடாமல் கடவுள் இல்லை என்ற முடிவுக்கு வந்ததுபோல

இறப்புக்குப்பிறகு என்ன என்ற கேள்விக்கு பதில் கிடைக்காததால் ஒன்றுமில்லை வெற்றிடம், வெறுமை என்று சூன்யவாதத்தில் சில விஞ்ஞானிகள் முடித்திருக்கிறார்கள்.

இவைகளிலும் பிசகு இருக்கிறது. கடவுள் இருக்கிறது என்று உறுதியாக உலகிற்கு சொல்ல முடியவில்லையோ, அதுபோல இல்லை என்பதையும் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. இன்னும் அது மறைபொருளாக இருக்கிறது. கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டலர் என்கிற விஷயமாக இருக்கிறது.

கடவுளைத் தேடி தவிப்பவர்களுக்கு ஞானிகள் மிக அற்புதமாக சொல்லி வைத்திருக்கிறார்கள். என்னுடைய பார்வை தீட்சண்யத் தால் உனக்குள் எதுவும் நிகழ்ந்து விடாது என்று புத்தர் சொல்கிறார். அதுமட்டுமல்ல, நீ ஆழ்ந்து கடுமையாக உழைத்தாலன்றி உன்னை யார் என்று கண்டுகொள்ள முடியாது என்று எச்சரிக்கையும் விடுகிறார். ஒவ்வொரு தனிமனிதனும் தானாகத் தானாக கடவுள் தேடுதலில் தேர்ந்து ............... என்று சொல்கிறார்.

''நீங்கள் அருள் செய்யக் கூடாதா. ஞானம் வழங்கக் கூடாதா'' என்று பகவான் ஸ்ரீ ரமணமகரிஷியை சிலர் கேட்டபோது என்னுடைய அருள் எப்பொழுதும் பரவிக் கொண்டுதான் இருக்கிறது. சிலபேர் அதை தெளிவாக உணர்ந்து தங்களுக்கு வேண்டியவற்றை எடுத்துக் கொண்டு போகிறார்கள். என்ன செய்வது என்று புரிந்துகொண்டு போகிறார்கள். சிலர் வெறுமே கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

........... கேட்பவருக்கு மௌனம்தான் என் பதில் என்று முடித்து விடுகிறார்.

கடவுள் தேடல் சலசலப்பான விஷயமல்ல. பேசிப்பேசி ஒருநாளும் கண்டுகொள்ள முடியாது. இந்தக் கட்டுரையெல்லாம் கூட உங்கள் கடவுள் தேடலுக்கு அருகே கொண்டுபோய் விடாது. மாறாக குழப்பத்தில் சேர்க்கலாம். என்ன சொல்ல வருகிறாய் நீ என்று தலையில் அடித்துக் கொள்ளலாம். 'இந்த ஆள் சொல்வது ஒன்றுமே புரியவில்லை' என்று கோபப்படலாம். கலக்கமடை யலாம். எது கலங்கியதோ அதுவே தெளியும்.

அர்ஜுனன் கலங்கினான். குருமார்களை, சகோதரர்களை, உறவினர்களைக் கொல்ல வேண்டுமே என்று கலங்கினான். இந்தக் கலக்கத்திற்கு விஷாத யோகம் என்று பெயர். இப்படி கலங்கிய



தால்தான் அவனுக்கு தெளிவு வந்தது. உள்ளுக்குள் துக்கப்பட்டு என்ன இது... என்ன இது... நான் என்ன செய்து கொண்டிருக் கிறேன் என்று பரிதவித்து எழுந்ததால்தான் அவனுக்கு கிருஷ்ணர் சொன்னது புரிந்தது. அப்பொழுது முடிவெடுக்க முடியாமல் தடுமாறிய போது கடவுள் விஸ்வரூபத்தைக் காட்டினார். தரிசனம் நேரடியாகத் தந்தார் என்று சொல்லப்படுகிறது.

பரிதவித்து எழும்போதுதான் இதெல்லாம் நடைபெறுகிறது. கீதையை எல்லோரும் தான் படிக்கிறார்கள். சகலருக்குமா புரிகிறது. உள்ளே பரிதவித்து என்ன இது... என்ன இது... என்று அலைமோத வேண்டும். என்ன செய்து கொண்டிருக்கிறேன் நான். எனக்கு என்ன பெயர். இந்த மனிதர்களோடு எனக்கு என்ன உறவு. இந்த பூமியில் நான் எத்தனை நாள்... என்று பெரிய கேள்விகள் உங்களை கடுமையாக தாக்குமாயின் அப்பொழுது அலமலர்ந்து சாய்வீர்களே அந்த நேரம் உங்களுக்குள் கடவுள் தேடலின் விதை நடப்படலாம்.

மதம் ஒரு சிறிய வழிகாட்டி. குருமார்கள் மெல்ல கைப்பிடித்து ஒரு அளவுவரை கூட்டிக் கொண்டு போவார்கள். சில சந்தேகங் களை தீர்ப்பார்கள். இந்த கட்டுரைத் தொடரும் அவ்வளவுதான் செய்யும். ஒரு அளவு வரை கைப்பிடித்து அழைத்துப் போகும். என்ன என்று உங்களை கேட்க வைக்கும். யாரோ சிலருக்கு மட்டுமே இந்தக் கேள்விகள் பலமாகவும், உள்ளத்தை உலுக்குகிற விதமாகவும் எழும்பும். அப்படி எழும்பியவர்கள் புண்ணிய சாலிகள் இன்றில்லாவிடில் என்றேனும் ஒருநாள் அவர்கள் தெளிவாவார்கள்.

உண்மையாகப் பேசுவதும், இதமாக வாழ்வதும், சுகமாகப் பொருளீட்டுவதும் அதை நன்கு செலவு செய்வதும்மட்டுமே வாழ்க்கையல்ல அதோடு சந்தோஷங்கள் முடிவுக்கு வருவதில்லை. இதெல்லாம் எந்த நேரத்திலும் கவிழ்ந்து விடும் என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்படின், அம்மாதிரி விஷயங்களை கண்முன்னே பார்க்க நேரிடின் உங்களுக்கு இதம், இனிமை, வளமை என்பதுபற்றியெல்லாம் கேள்வி வரும். வாழ்க்கையைப் பற்றிய பிரமிப்பை யாரும் கேள்வி கேட்காது வாழ்ந்துவிட முடியாது. கேள்வி கேட்பவர் எத்தனை ஆழமாக, எத்தனை உண்மையாக கேட்கிறார் என்பதைப் பொறுத்து அவர் வாழ்க்கை அமைகிறது.

இந்தக் கட்டுரைத் தொடரில் சில விஷங்களை தெளிவுபடுத்த முயற்சிக்கிறேன். எத்தனை பேசினாலும், எவ்வளவு எழுதினாலும் இந்தப் பேச்சுக்கு முடிவில்லை. ஆனால், இந்தப் பேச்சை நிறுத்தி, படிப்பை நிறுத்தி உங்களுக்குள் கேள்வி கேட்க துவங்கும் நேரமே உன்னதமான நேரம். உண்மையான நேரம். உயிர்வாழ்தலின் அர்த்தமுள்ள நேரம். இந்த உணர்ச்சியை என்னை உலுக்கி எனக்கு ஊட்டிய என் சத்குருநாதன் யோகிராம் சுரத்குமார் அவர்களை வணங்கி எனக்குள் இடையறாது பொங்கி அலைகழித்துக் கொண்டிருக்கிற கேள்வியை உங்கள் முன்னே வைப்பதோடு இந்தக் கட்டுரைத் தொடரை முடித்துக் கொள்கிறேன்.

அஸதோமா சத்யகமய
தமசோமா ஜோதிர்கமய
மருத்யோமா அம்ருதம் கமய

அசத்யமான சத்தேயில்லாத விஷயங்களிலிருந்து சத்துள்ள விஷயத்திற்கு, தாமசமான சோம்பலில் இருந்து விடுபட்டு ஒளிமயமான இடத்திற்கு, எது மரணமோ அதிலிருந்து நகர்ந்து நிரந்தரமானதிற்கு முயற்சிப்போமாக.

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...

முற்றும்.

